V2:11,3.2'N74
N74·123;1
6813

Issued 31—10—74]

100

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

TUESDAY 13th AUGUST 1974

Volume CXXIII—No. 1

© GOVERNMENT OF TAMIL NADU 1974

*Legislative Council Department*
*Fort St. George, Madras-9.*

PRICE 35 *Paise*]

# Tamil Nadu Legislative Council Debates

FORTY-EIGHTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

13TH, 14TH, 16TH, 17TH AND 19TH AUGUST 1974.

VOLUME CXXIII (Nos. 1 to 5).

TABLE OF CONTENTS.

*Tuesday*, 13*th August* 1974.


| | PAGES. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i-v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... ... | ix-xi |
| 1. Obituary References *re*— | |
| Demise of Thiru N. Ranga Reddy, former Minister of Composite Madras State and Thiru M. Mohanlal Fehta, former Member of the Council ... ... ... ... | 1-2 |
| 2. Questions and Answers ... ... ... | 2-25 |
| 3. Adjournment Motion *re*— | |
| Food Situation in the State ... ... ... | 26 |
| 4. Announcements— | |
| (1) Message from the Governor ... ... | 26-27 |
| (Bill returned by the President) | |
| (2) Decision of the Business Advisory Committee ... ... ... ... ... | 27-28 |
| 5. Penal of Vice-Chairmen ... ... ... | 28 |

63137
VR11, 32. N74. N74-P.31




| | PAGES. |
|---|---|

*Tuesday, 13th August 1974—cont.*

| | |
|---|---|
| 6. Government Resolution *re*— Empowering Parliament to enact law for imposition of ban on setting up of private medical colleges and regulation of such colleges already set up ... ... ... ... | 29–62 |
| 7. Papers laid on the table of the House ... | 63–80 |

*Wednesday, 14th August 1974.*

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 83–99 |
| 2. Presentation of the First Statement of Supplementary Expenditure for 1974-75 ... ... | 99–105 |
| 3. Discussion on the Food Situation in the State ... | 105–161 |
| 4. Announcement *re* change in the order of business. | 161 |
| 5. Papers laid on the table of the House ... ... | 162 |

*Friday, 16th August 1974.*

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 165–194 |
| 2. Announcement *re* change in the order of business ... ... ... ... ... | 194–195 |
| 3. Government Resolutions— | |
| (1) Postponement of Resolution on Katchathiva. | 196 |
| (2) Change in the order of business ... ... | 196 |
| (3) Increase of seats for Tamil Nadu in the House of the People and in the Legislative Assembly ... ... ... ... | 197–218 |
| 4. Discussion on the Food Situation in the State ... | 218–242 |
| 5. The Tamil Nadu Electricity Board Budget for 1974–75 ... ... ... ... ... | 242 |
| 6. Papers laid on the table of the House ... | 243–244 |





*Saturday, 17th August 1974.*

| | PAGES. |
|---|---|
| 1. Questions and Answers ... ... | 265–275 |
| 2. Discussion on the First Statement of Supplementary Expenditure for 1974-75 ... ... | 275–335 |
| 3. Papers laid on the table of the House ... | 335–338 |

*Monday, 19th August 1974.*

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 338–355 |
| 2. Announcement *re* postponed question No. 28 ... | 355 |
| 3. Discussion on the Annual Financial Statement for 1974-75 and the Supplementary Financial Statement for 1973-74 of the Tamil Nadu Electricity Board ... ... ... ... | 356–396 |
| **Index** ... ... ... ... ... ... | 397–448 |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Services and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

8. THE HON. THIRU SI. PA. ADITHANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Animal Husbandry, Agro-Engineering wing Agro-Engineering and Service Co-opertive Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

10. THE. HON. THIRU MANNAI P. NARAYANASWAMY, Minister in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

11. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI, Minister in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggers' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money-lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

16. THE HON. THIRU N. RAJANGAM, Minister in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர் :

மேதகு திரு. கோதார்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (கல்வி அமைச்சர், கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்ட மன்றம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், நகரமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பிற்பட்டோர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி; பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (பொதுப்பணிதுறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசனம் உள்ளிட்ட சிறுபாசனத் திட்ட வேலைகள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (தொழில் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிற் சாலைகள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை வருவாய், முகம்மதியர் அறக்கட்டளைகள்.

8. **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, கூட்டமைப்புக்கள் உள்ளிட்ட, மாநில, மாவட்ட அளவிலான வளர்ச்சிவட்டார வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்.

10. **மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி:** (உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட பொறுப்பு வகிப்பார் உணவு, கூட்டுறவு மற்றும் வேளாண்மை மறுநிதி உதவி.

11. **மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர் நலன், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, எடைகள்-அளவுகள் குறித்த சட்டம், புள்ளி விவரம் மற்றும் குடிசை மாற்று வாரியம்.

12. **மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மகளிர்-சிறுவர் நலன் உள்ளட்ட சமூக நலத்துறை, மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

13. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள் மற்றும் சின்கோனா.

14. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுது பொருள் அச்சுத்துறை மற்றும் அரசினர் அச்சகம்.

15. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

16. **மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலன், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள் மற்றும் திரைப்படச் சட்டம்.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

**மேலவைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு

**மேலவைத் துணைத் தலைவர்.**

திரு. ம. பொ. சிவஞானம்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. எம். சங்காலிங்கம்
2. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷதர்
3. திரு. எம். ஆறுமுகசாமி
4. திரு. எஸ். முத்துசாமி

**மேலவைச் செயலாளர்.**

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ.,பி.எல்.

உதவிச் செயலாளர்

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி.

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல், பி.எல்

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 1 அப்துல் வகாப், கே. எஸ். | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம் | .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 3 அறிவழகன், க., எம். ஏ. | .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஒ. | .. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி.,பி.ஏ.,பி.எல். | | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இளம்பரிதி | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசகோபால், சி.வி. | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராசமாணிக்கம், எஸ்.ஏ. | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 11 இராசாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராஜு, ஜி. என். | .. | மாநிலச் சட்டப் பேரவை |
| 13 இராமகிருஷ்ண தேவர், எஸ். | .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 14 இராமநாதன், எம். | .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராமசுப்பையா, காரைக்குடி | .. | நியமனம் |
| 16 இராமசாமி படையாச்சி, எஸ்.எஸ். | | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 17 எல்லமந்தா | .. | மாநில சட்டப் பேரவை. |
| 18 கணபதி, கே.எஸ். | .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர் தொகுதி. |
| 19 குன்றக்குடி அடிகளார், தவத்திரு | | நியமனம். |
| 20 கோலப்பா, சி.ஆர். | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 21 சக்தி மோகன், ஆர். | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 22 சங்கரலிங்கம், எம். | .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர் தொகுதி. |
| 23 சந்தோஷம், டி, எம்.ஏ.பி.எல். | | சென்னை தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |

| | தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|---|
| | (1) | [2] |
| 24 | சாம்பசிவம், இரா. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 25 | செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ்.சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 26 | சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 2'/ | சிற்றரசு, சி. பி. (மாண்புமிகு தலைவர்) | மாநிலச் சட்டப் பேரவை |
| 28 | சுந்தரேசத் தேவர், என். .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 | சுவாமிநாதன், ஜி, பி. பார்மஸி | தமிழ் நாடு கிழக்கு மத்திய பட்ட தாரிகள் தொகுதி. |
| 30 | தங்கப்பாண்டியன், வி. பி.ஏ.பி.டி. | மாநிலச் சட்டப பேரவை. |
| 31 | தங்கவேலு, ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 22 | தமிழரசி, சி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 33 | தாமஸ், பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 34 | தாமோதரன், ஏ.ஆர் பி.எஸ்.ஸி. (ஆனர்ஸ்). | சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 35 | தாமோதரன், ஜி.ஆர். .. | சென்னை மேற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 36 | திராவிடமணி, அ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 37 | டிமாண்டி டென்சில் வின்சென்ட் | மாநிலச் சட்டப் பேரவை. |
| 38 | தென்னரசு, எஸ்.எஸ். .. | நியமனம். |
| 39 | தேவராஜ், வி.எம். .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 | நடராசன், எம்.கே.டி. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 41 | நடராசன், என்.வி. (பின் தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 | நாராயணசாமி, மன்னை, பி. (உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 43 | நாராயணசாமி எஸ். .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 44 | பக்கர், எம்,எம், .. | நியமனம். |



| | தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 45 | பலராமன் எஸ். .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 | பாலசுப்பிரமணியம், அ. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 | பாலசுப்பிரமணியம், கு.மா. .. | நியமனம். |
| 48 | பெரியண்ணன், .வி.ஆர். .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 | மணி, கோ.சு. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 | மாசிலாமணி, மு. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 51 | முத்து, எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 | முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 53 | முத்துசாமி, செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 54 | முருகேசன், எச். எல். .. | நியமனம். |
| 55 | ரஸ்ஸல் ராஜ் .. | நியமனம். |
| 56 | வசந்தபை, ஜி. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 57 | வில்வம், ஏ. கே. .. | நியமனம். |
| 58 | வில்சன் அப்போலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 | வெங்கா, வி. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 | வெள்ளபாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 | வெங்கடேஸ்வர தீட்சிதர், ஒய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 | ஜார்ஜ் கோமகன் .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 63 | வெற்றிடம் .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

### தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்டமன்ற மேலவையின் நாற்பத்தி எட்டாவது கூட்டத் தொடர்.

---

**செவ்வாய்க்கிழமை, 1974 ஆகஸ்ட் 13.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (**திரு. சி. பி. சிற்றரசு**) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

#### 1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

திரு. என். ரெங்கா ரெட்டி, முன்னாள் அமைச்சர், திரு. மோகனலால் **மேத்தா, முன்னாள் மேலவை உறுப்பினர், ஆகியோர் மறைவு குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்னாள் ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் அமைச்சராக இருந்த திரு. என். ரெங்கா ரெட்டி, 14—6—1974 ஆம் நாளன்று கடப்பையில் காலமானார் என்பதை, ஆழ்ந்த வருத்தத்துடன், இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. என். ரெங்கா ரெட்டி 1946 ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டுவரை தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார். 1952-53 ஆம் ஆண்டுகளில் முன்னாள் ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தார்.

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் திரு. என். மோகனலால் மேத்தா காலமானார் என்பதை, ஆழ்ந்த வருத்தத்துடன், இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. மோகனலால் மேத்தா தமிழ் நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக 1964 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டுவரை பணியாற்றினார். இவர் விடுதலைப் போராட்ட காலத்தின்போது சைமன் கமிஷன் மறுப்பு இயக்கம், உப்பு சத்தியாக்கிரகம், தனி நபர் சத்தியாக்கிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகிய இயக்கங்களில் தீவிரப் பங்கு கொண்டு, 1930—1941 வரையில் மும்முறை சிறையிலிடப் பட்டார். இவர் சென்னை மாநகரிலுள்ள பல்வேறு சமூக கல்வி நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

அவர்களை இழந்து துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1974 ஆகஸ்ட் 13

மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் மவுனமாக இரண்டு நிமிடங்கள் எழுந்து நின்றனர்.)

## வினுக்கள்—விடைகள்

### விடுக்குறியிட்ட வினுக்கள்

### *Tamil Teachers appointed under "Jobs Scheme"*

* Q.—THIRU K. S. MANI (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon the Minister for Education be pleased to state the number of Tamil Teachers appointed under "Jobs Scheme" of the Central Government during 1972–73 and 1973–74?

**நடுவண் அரசின் வேலை வாய்ப்புத் திட்டத்தில் தமிழாசிரியர்கள்.**

**திரு. கோ. சு. மணி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நடுவண் அரசின் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், எத்தனை தமிழாசிரியர்கள் 1972-73, 1973-74-ம் ஆண்டுகளில் நியமிக்கப் பெற்றுள்ளனர்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 1972-73-ம் ஆண்டில் "தொடக்கக் கல்வியை விரிவாக்குவதற்கும் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும்" ஆன நடுவண் அரசுத் திட்டத்தின் கீழ் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க இடமில்லையாகையால் தமிழாசிரியர் எவரும் அத்திட்டத்தின் கீழ் 1972-73-ல் நியமிக்கப்படவில்லை.

1973-74-ல் "ஐந்து லட்சம் பேருக்கு வேலை" திட்டத்தின் கீழ் 276 முதல் நிலைத் தமிழாசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பெற்றனர்.

**திரு. சே. எஸ். கணபதி:** மாண்புமிகு தலைவரவர்களே, 1973-74-வது ஆண்டிலே நியமிக்கப்பட்ட 276 முதல் நிலைத் தமிழாசிரியர்கள் 1974-75-வது ஆண்டில் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்களாவென்று அறிய விரும்புகிறேன்.



1973 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டில், 5 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. தொடர்ந்து 1974-75-ல் அவர்கள் வேலை பார்க்க வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

THIRU D. SANTOSHAM: Sir, if the figures are readily available, I would like to know how many B.T. Assistants got appointment under this Scheme during 1973–74. Secondly, I would like to know what is the percentage of those who would have secured appointment among the number of unemployed teachers.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவரவர்களே, அதனுடைய சதவிகிதம் பற்றி என்னிடத்தில் விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி கேட்டால், விவரக் குறிப்புகள் தரலாம். ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் திட்டத்தின்கீழ் 1973–74-ல் எடுத்த முடிவுப்படி, ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு 500; செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 6,928; இரண்டாம் நிலை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு 498; கைத் தொழில் ஆசிரியர்களுக்கு 797; பி.டி. தரப் பதவிகளுக்கு 917; முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்கு 276 என்ற வகையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, ஐந்து லட்சம் பேர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு 1—4—1974 முதல் அவர்களுடைய வேலை 'ரெகுலரைஸ்' செய்யப்படுவதற்கு அரசு உத்தரவு போட்டிருக்கிறது. 1—6—1973-லே உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டபோது, தமிழாசிரியர்களை நியமனம் செய்ய முடியாமல், இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கழித்து நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுடைய ஊழியக் காலம் எவ்வாறு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதுபற்றி விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரக் குறிப்புகள் தரலாம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவரவர்களே, இந்த ஐந்து லட்சம் பேர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கிய அத்தனை பதவிகளும் கல்வித் துறையால் நிரப்பப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன். அப்படி நிரப்பப்படாத இடங்களை இந்த ஆண்டு நிரப்ப அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட பதவிகள் அத்தனையும் நிரப்பப்பட்டதாகத்தான் நான் அறிகிறேன். நிரப்பப்படாமல் விட்டுவிட்டதாகத் தெரியவில்லை. அப்படி இருந்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, நடுவண் அரசு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1972-73-ல் தமிழாசிரியர்களை நியமிக்க வேண்டிய இடம் இல்லை; ஆதலால் நியமிக்கவில்லை என்றும், 1973-74-ல் 276 பேர்கள் நியமிக்கப்பட்டார்களென்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். நடுநிலைப் பள்ளிகளில் எல்லாம் முதல் நிலைத் தமிழாசிரியர்களை நியமிக்க வேண்டுமென்ற கல்விக் கொள்கையைக் கொண்டிருக்கும்போது, இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி அந்த ஆசிரியர்களுள் ஒரு சதவிகிதம் இந்தப் பள்ளிகளில் தமிழாசிரியர்களாக நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தொடக்கக் கல்வியை விரிவாக்குகின்ற திட்டம் என்ற முறையில் வைக்கப்பட்டிருக்கிறது. ஹையர் செகண்டரி பள்ளிகளில் முதல் நிலைத் தமிழாசிரியர்களைப் போடும் நிலை ஏற்படாது. அப்படி இருந்தாலும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களைப் போடும் நிலைதான் ஏற்படும். மேலும் 1974-75-ம் ஆண்டுக்குப் புதிய திட்டம் வந்தால்தான் இதைக் கவனிக்க முடியும்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, 5 லட்சம் பேர்களுக்கு வேலை இல்லாத வாய்ப்பு திட்டத்தின் கீழ் . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வேலை இல்லாதது ஒரு வாய்ப்பா?

**திரு. சி. வி. ராஜகோபால் :** வேலை தருவதற்கான திட்டத்தின்கீழ், 10(ஏ)(1) என்ற ஒரு விதியை வைத்துக்கொண்டு, 3 மாதம், 4 மாதம் என்று வேலை தந்து, பின்னர் அவர்களை நீக்கிவிடுகிறார்கள். எனவே அந்த 10(ஏ)(1) விதி அகற்றப்பட்டு, அவர்கள் அனைவரும் நிரந்தரம் ஆக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே நிலையாக ஆக்கப்படும் பதவிகளில் ஏற்கெனவே தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். புதிதாக வருகிறவர்கள், சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள்தான் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். மற்ற வகையில் சர்வீஸ் கமிஷன் மூலமாக நியமிக்கப்படும்போது, நிரந்தரமாக நியமிக்கப்படுகிறார்கள்.





(பிற்பகல் 4-10)

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, இந்த 5 லட்சம் ஆசிரியர்கள் வேலை வாய்ப்புத் திட்டத்திலே கைத்தொழில் ஆசிரியர்களுக்காக என்று 2 ஆயிரம் போஸ்ட்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதிலே 790 போஸ்டுகள்தான் போடப்பட்டிருக்கின்றன என்று கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே தகவல் தந்தார்கள். ஏற்கெனவே ஃபுல்லி குவாலிஃபைட், டிரெயின்ட் டீச்சர்ஸ், ஹைஸ்கூல் கைத்தொழில் ஆசிரியர்களாக, பஞ்சாயத்து யூனியன்களிலும் மற்ற நிர்வாகத்திலும் பணியாற்றி இருந்தும்கூட, அவர்களுக்கு அந்த வேலை கொடுக்கப்படாமல், இந்த வேலைகள் வேறு போஸ்டுகளாக 'சரண்டர்' செய்யப்பட்டிருப்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன். அப்படியானால், வேலை செய்துகொண்டிருப்பவர்களுக்கு, ஃபுல்லி குவாலிஃபைட் ஆசிரியர்களுக்கு அந்த போஸ்டுகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்புகள் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் தருகிறேன்.

## *Communication of Government Order*

* 2 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that G.O. Ms. No. 519, Education, dated 31st March 1973 has not yet been communicated to some of the Municipalities by the Education Department;

(b) if so, the names of Municipalities to which the Government Order is yet to be communicated; and

(c) the reasons for the delay?

## நகராட்சிகளுக்கு அரசாணை அனுப்புதல்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 31—3—1973 ஆம் நாளிட்ட 519-ஆம் எண் அரசாணை, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையால் சில நகராட்சிகளுக்கு இன்னும் அனுப்பப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இந்த அரசாணை இன்னும் எந்தெந்த நகராட்சிகளுக்கு அனுப்பப்படவில்லை?

(உ) கால தாமதத்திற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை. இவ்வுத்திரவின் படிகள் எல்லா நகர மன்றங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

(இ) & (உ) : இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்த உத்தரவின் படிகள் கரூர் நகராட்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் கூறிய விடையில் எல்லா நகராட்சிகளுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக இருக்கின்றது. கரூருக்கும் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். அங்கே கிடைக்காததற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. கரூர் நகராட்சி அதைப்பற்றித் தெரிவிக்குமே யானால், அறிவிக்குமானால், காரணம் யாது என்று கண்டறியலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, நான்கு நாட்களுக்கு முன்னர் கூட கரூர் பட்டதாரி ஆசிரியர்களும், தமிழாசிரியர்களும், 'கரூர் நகராட்சிக்கு இந்த ஆணையின் நகல் அனுப்பப்படவில்லை' என்று எனக்குத் தெரிவித்தார்கள். நானும் டிசம்பர் மாதம் 1973-ல் உள்ளாட்சித் துறை டைரக்டருக்கு கடிதம் எழுதியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவுமில்லை என்பது மட்டுமல்லாமல், இன்றளவு வரையிலே எனக்கு பதிலும் அனுப்பப்பட வில்லை. அங்குள்ள இரு நகராட்சிப் பள்ளிகளிலேயும் பணியாற்றுகின்றவர் களுக்கு, 10 ஆண்டுகளுக்குப் பிறகும், செலக்ஷன் கிரேட் ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்த பதிலிலேயே தவறு இருக்கலாமோ என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எனக்குத் தரப்பட்டிருக்கிற தகவல்படி இவ்வாணைகள் எல்லா நகராட்சிகளுக்கும் அனுப்பப்பட்டிருக் கின்றன. இவ்வாணையின்படி எல்லா நகராட்சிகளிலும் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, கரூர் நகராட்சிக்கு அந்த அறிக்கை செல்லாம லிருக்குமானால், அதைப்பற்றி அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, கரூர் நகராட்சியில் பணி புரியும் ஆசிரியர்களுக்கான பணிப் பதிவு ஏடுகள் சென்னையிலுள்ள உள்ளாட்சித் துறை யில் ஒரு ஆண்டுக்கு மேலாக தேங்கியிருப்பதால்தான் இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதுபற்றிய விவரத்தைக் கண்டறியலாம். இப்போதுதான் கரூர் பற்றிச் சொல்லியிருக் கின்றார்கள். நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாமலிருக்குமானால், அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. கே. ராஜாராம் :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத் தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கல்வித் துறை இயக்குநர் அவர்களுக்கு எழுதிய தபாலுக்கு நாளது வரை பதில் வரவில்லை என்று கூறினார்கள். இது மாதிரி நிலை இன்னும் நீடிக்காமலிருக்க, அந்தந்தத் துறைகளின் இயக்குநர் களுக்கு, 'உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களுக்கு ஒரு மரியாதைக்காகவாவது, அக்னாலெட்ஜ்மெண்டோ அல்லது பதிலோ எழுதவேண்டும்' என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பொது வாகவே அப்படிப்பட்ட ஒரு உத்தரவு இடப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, சட்டப் பேரவை உறுப்பினர்கள் அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஏதாவது விளக்கங்கள் கேட்டு கடிதம் எழுதியிருந்தால், அவர்களுக்கு 'கவனிக்கப்படும்', அல்லது 'பரிசீலனையில் இருக்கின்றது' அல்லது என்ன நிலையில் இருக்கின்றது என்று பதில் சொல்ல வேண்டும் என்று இருக்கின்றது. இது பற்றி கவனிக்கப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** 'டைரக்டர் ஆஃப் ஸ்கூல் எஜுகேஷன்' அவர் களுக்கு அனுப்பக்கூடிய எந்தக் கடிதத்திற்கும் எந்தவிதமான பதிலும் வருவ தில்லை என்பதை மனவருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற எந்தத் துறைகளிலிருந்தும் அநேகமாகப் பதில் வந்து விடுகின்றது. ஆனால், இந்தத் துறையிலிருந்து மட்டும் உறுப்பினர்கள் எழுதும் எந்தக் கடிதத்திற்கும் பதில் வருவதேயில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கைகள் முறைப்படி எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த முனிசிபல் பள்ளிகளிலே 1—1—1973 முதல் பத்து பர்செண்ட் செலக்ஷன் கிரேடு வழங்க வேண்டுமென்று நம்முடைய அரசு உத்தரவிட்டது. இன்னும் அந்த முனிசி பாலிட்டிகள் நம் அரசின் உத்தரவின்படி அந்த பத்து பர்செண்ட் செலக்ஷன் கிரேடு தராமல் இருக்கின்றன. ஆனால், நம்முடைய அரசு 10 ஆண்டுக் காலம் சர்வீஸ் ஆனவர்களுக்கும் செலக்ஷன் கிரேடு கொடுத்திருக் கின்றது. அதை முனிசிபாலிட்டிகளும் நடைமுறைபடுத்தாமலிருப்பது குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காண அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எந்தெந்த நகராட்சிகளில் அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்றது என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அதுபற்றி ஆராயும். தக்க நடவடிக்கையும் எடுக்கப்படும்.

THIRU K. S. ABDUL WAHAB: What is G.O. No. 519 intended for?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பல்வேறு நிறுவனங்களின்கீழ் பணிபுரியும் பி.டி. சிறப்பாசிரியர்கள், ஸ்பெஷல் டீச்சர்ஸ் ஆகியவர்களுக்கு 10 ஆண்டு பணிக்கால அடிப்படையில் தேர்வு நிலை வழங்குவதற்காக இடப்பட்ட ஆணையாகும்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, கல்வி மிகப் பெருந்தன்மை வாய்ந்ததாக இருக்கும் என்றும், ஆனால் எப்போதும் மந்தமாகக்கூட இருக்கும் என்றும் நாட்டிலே கூறப்படுகிறதே, அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது போன்ற நேரங்களில் கொஞ்சம் பொறுமையாகவும் கூட இருக்கும்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 519 என்பது செலக்ஷன் கிரேடு வழங்குவது பற்றியது. முக்கியமான நன்மைகளைத் தருகின்ற இத்தகைய ஜி.ஓ.-க்களை கெஜட்டில் வெளியிடுவதுதான் முறை. அது எல்லா நகராட்சி மன்றங்களுக்கும் செல்லும். அப்படி எல்லா ஆணைகளும் இந்த கெஜட் வெளியீடுகள் மூலம் நகராட்சி மன்றங்களுக்கு அனுப்பப்பட்டனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, இந்த உத்தரவில் சிறப்பாசிரியர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கு 10 ஆண்டு பணிக்கால முடிவில் தேர்வு நிலை வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு கல்வி இயக்குநர் அவர்கள் தங்களுடைய நடவடிக்கைக் குறிப்பில் ரூ. 300-15-420-20-500 என்ற ஊதிய நிலையில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இது பொருந்தும் என்று உத்தரவிட்டிருந்தும், யார் சிறப்பாசிரியர்கள் என்ற பட்டியல் இல்லாத காரணத்தினாலேயே, அவர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்படவில்லை என்ற நிலையிருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைப்பற்றி நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல்கள் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதனுடைய உண்மை நிலை அறிந்து சொல்லப்படும். ஆகவே, அதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற விளக்கங்களில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால், அதைப் பற்றி ஆராய்ந்து அறிந்து அதைச் சீர்திருத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாம்.

### *Operations under the Family Planning Scheme*

*3 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) the number of persons who underwent operations under the Family Planning Scheme in Tamil Nadu during 1971;

(b) the number of Hindus, Muslims and Christians among them; and

(c) the percentage in each category, who underwent operations, to the total population, religionwise?

### குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் 1971 ஆம் ஆண்டு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் எவ்வளவு பேர்?

(இ) இவர்களுள் இந்து, முஸ்லிம், கிருத்துவர் எவ்வளவு பேர்?

(உ) இவர்கள் ஒவ்வொரு மதத்தினரும், மொத்த மக்கள் தொகையில் மதவாரியாக எத்தனை சதவிதம் செய்துகொண்டனர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) தமிழ் நாட்டில் 1971-ஆம் ஆண்டு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் 2,23,846 பேர்.

(இ) இவர்களுள் மதவாரியான விவரங்கள் முறையே—

| | |
|---|---|
| இந்துக்கள் | 2,11 617 |
| முஸ்லீம்கள் | 5.170 |
| கிறித்துவர்கள் | 6 688 |
| மற்றவர்கள் | 371 |
| மொத்தம் | 2,23,846 |

[1974 ஆகஸ்ட் 13

(உ) இவர்களுடைய மத அடிப்படையில் மொத்த மக்களில் அவர்களுடைய எண்ணிக்கை விகிதம் :—

| | | |
|---|---|---|
| இந்துக்கள் | 0.57 | சதவிகிதம் |
| முஸ்லீம்கள் | 0.25 | சதவிகிதம் |
| கிறித்தவர்கள் | 0.28 | சதவிகிதம் |
| மற்றவர்கள் | 0.69 | சதவிகிதம் |

THIRU D. SANTOSHAM : Sir, we have a communal G.O. for appointments, admissions to Colleges and so on. Will the Government bring forward a communal G.O. regulating the family planning operations also communitywar?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, வகுப்பு வாரியாக அவர்கள் இவ்வளவு செய்துகொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டிய ஒரு நிலை எதிர்காலத்திலே வந்தாலும் வரலாம். ஏனென்றால், மொத்தமாக மக்கள் தொகை வளர்ச்சியினால் பாதகம் ஏற்படுவது எல்லோருக்கும் பொதுவாக இருக்கின்ற காரணத்தினால், யாரும் ஒரு பொது நோக்கத்திலேயிருந்து தங்களைத் தப்ப வைத்துக் கொள்வதை இந்த அரசோ அல்லது மத்திய அரசோ ஏற்றுக்கொள்ளாது.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அரசியலில் சம்பந்தப்பட்டவர்கள் பொது மேடைகளிலே ஒரு சாதியினர் செய்யக் கூடாது என்று சமீப காலத்தில் பிரச்சாரம் செய்வது அரசுக்குத் தெரியுமா? அது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அப்படி எந்தவிதமான பிரச்சாரமும் நடைபெறுவதாக தெளிவாக நாம் அறியவில்லை. ஆனால், அகில இந்திய அடிப்படையிலே, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு விரோதமான ஒரு கருத்தைப் பரப்புவதற்கு ஒரு பத்திரிகையே நடத்துகிறார்கள். அப்படி நடத்தப்படுகிற பத்திரிகை, எந்த சமுதாயத்தினரைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலோர் செய்து கொள்ளுகின்றார்களோ, அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாலேயே நடத்தப்படுகின்றது.



1974 ஆகஸ்ட் 13]

THIRU G. SWAMINATHAN : Sir, do the Government know that the number of sterilisation operations has come down during this year, especially because we do not have an intensive scheme as we had been having before and what is the reaction of the Government after the aid has been stopped by the Government of India?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தீவிர திட்டம், முனைப்புத் திட்டம் ஆகியவை அண்மையிலே மிக விரைவாக நடத்தப்படுவதற்கு மிக முக்கியமான காரணம் மத்திய அரசு ஏற்கெனவே ஒவ்வொரு அறுவை சிகிச்சை செய்துகொள்கின்றவருக்கும் தனியாக ரூ. 100 சன்மானம் வழங்குவதற்கு, இன்செண்டிவ் என்ற முறையிலே வழங்குவதற்கு இசைந்திருந்தார்கள். அப்போது நடுத்தர மக்கள், ஏழை மக்கள் ஆகியோர், உதவித் தொகை கொடுக்கிற காரணத்தால் ஆர்வத்தோடு, முன் வந்தார்கள். அந்த ரூ. 100 வழங்குவதை மத்திய அரசு பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்திவிட்டார்கள். இப்போது நடைமுறைக்குச் செலவாகிற தொகையில் ரூ. 20 அல்லது ரூ. 25 மட்டும் அவர்கள் கொடுக்கிறார்கள். நம்முடைய அரசு ரூ. 25 லிருந்து ரூ. 40 வரையில் அறுவை சிகிச்சை நடைபெறுகிற முறைகளுக்கு ஏற்ப வழங்குகின்றது. அந்தத் தொகை பலபேருக்கு ஆர்வத்தை உண்டாக்கவில்லை என்பது உண்மைதான். மத்திய அரசு பொருளாதார நெருக்கடி நிலை பார்க்காது விட்டுக்கொடுத்தால், நிச்சயமாக இந்தத் திட்டத்தால் நல்ல பயன் விளையும் என்ற கருத்தை நான் தெரிவித்திருக்கின்றேன். அங்கேயும் நலத் துறை அமைச்சருடைய செல்வாக்கில் நிதித் துறை அமைச்சர் அவர்கள் பெருநிதி ஒதுக்கக்கூடிய நிலை இருப்பதாக இல்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, during the intensive week that is celebrated for family planning operations, most of the persons selected are men. Will the Government consider the desirability of awarding a suitable cash-award to women patients who may be admitted in hospitals for delivery of babies, because that is possibly the best time when the family planning operation could take place?

[பிற்பகல் 4.20]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, டியூபக்டமி அல்லது சால்பின்ஜக்டமி என்ற பெயரிலே வழங்கப்படுகிற பெண்களுக்கான அறுவை சிகிச்சை மகப்பேறு நிறைவேறியவுடனே பத்துப் பதினைந்து நாட்களுக்குள்ளாகச் செய்யப்படவேண்டியது என்பது மருத்துவ மனையிலே உள்ளவர்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது. அப்படிச் செய்துகொள்பவர்களுக்கு இந்த

[1974 ஆகஸ்ட் 13

அறுவை சிகிச்சைக்காக உள்ள சலுகைகள்—ஒரு குறிப்பிட்ட தொகை செலவழிக்க, தங்கி இருக்க, உணவு வழங்க கொடுக்கப்படுகிற தொகை—இந்த முறையிலே வழங்கப்படுகின்றன. இன்றைக்கு அது சாத்தியமாக இருக்கிறது. ஆனால் பெருந்தொகையைக் கொடுத்து, அவர்களை ஏராளமாக வரவழைத்து ஆயிரக்கணக்கிலே நிறைவேற்றுவது என்பது இப்போது அவ்வளவு தீவிரமாக நடைபெறவில்லை.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே மக்கள் தொகையில் சதவிகித அடிப்படையில் குடும்பக் கட்டுப்பாட்டை நோக்குமிடத்து, பெருவாரியாக இந்துக்கள் 0.57 சதவிகிதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்தாற்போல் கிறிஸ்தவர்கள், அதற்குப் பிறகு முஸ்லிம் மதத்தினர் செய்துகொண்டிருக்கிறார்கள். இனவாரியாக, இந்துக்கள் 0.57 சதவிகிதம் செய்து கொண்டிருக்கும்போது,மற்ற மதத்தினர் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் சதவிகிதம் குறைந்துபோவதற்குக் காரணம் என்ன? அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்வதில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இவர்களையெல்லாம் பற்றி அங்கத்தினர் அவர்களுக்கு சில அழுத்தமான கருத்துக்கள் உண்டு என்பதை நான் அறிந்திருக்கிறேன். பிற மதத்தினர் மீது குறை சொல்வதை விட இந்த நாட்டிலுள்ள பெரும்பாலோர் இதைக் கொஞ்சம் தீவிரமாக நிறைவேற்றிக் கொடுப்பார்களானால், சிறுபான்மையோருக்கு நம்மைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழி கிடையாது.

THIRU S. NARAYANASWAMY : Sir, may I know whether it is a fact that in respect of tubectomy operations following delivery cases, it is necessary for the wife to obtain the husband 's permission, before having such tubectomy in law?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அப்படி ஒரு விதி முறை இருந்தது. இப்பொழுது கணவருடைய அனுமதி தேவையில்லை. இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருக்குமானால், அவர்கள் கணவருடைய அனுமதி இல்லாமலேயே செய்து கொள்ளலாம் என்று அண்மையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ராமகிருஷ்ண தேவர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு அவசியம் என்று எல்லோரும் கருதக் கூடிய ஒரு நிலையிலே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் செய்யப்போகிறவர்கள் அதைப் பற்றிப் பிரசாரம் செய்யும்போது அவர்களுடைய நிலை என்ன? இவர்கள் அந்தக் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்கிறார்களா, அதற்குரிய தகுதியுடையவர்கள் எல்லாம் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1975 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அப்படிச் செய்து கொள்ளாததால் ஏற்பட்ட விபரீதத்தாலேதான் அவர்கள் பிரசாரம் செய்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு என்பதில் பல்வேறு முறைகள் இருக்கின்றன. குழந்தைகளைப் பெருக்காமல் இருப்பதை ஒரு கடமையாகக் கருதுவார்களேயானால், அதுவும் குடும்பக் கட்டுப்பாட்டிலே வெற்றியாகும். ஏற்கெனவே ஐம்பது அறுபது வயது ஆனவர்கள், பத்துப் பிள்ளைகளைப் பெற்றுவிட்டவர்கள், பெற்றுவிட்ட பரிதாபத்தைச் சொல்வதன் மூலம் குடும்பக் கட்டுப்பாடு வெற்றி பெற இயலும். அப்படி குழந்தைகளைப் பெற்ற வயதானவர்கள் தாங்கள் படுகிற கஷ்ட நிலையைச் சொல்கிறபோது, மற்றவர்களுக்குத் தெளிவு ஏற்படுகிறது.

திரு. எஸ். ராமகிருஷ்ண தேவர் : தலைவர் அவர்களே, இப்படி ஆறு ஏழு குழந்தைகளைப் பெற்றவர்கள் பிரசாரம் செய்ய வருகிறபோது, மக்கள் இத்தனை குழந்தைகள் பெற்ற பிறகு நீங்கள் வந்திருக்கிறீர்களே என்று கேட்கிறார்கள். அதற்கு என்ன சொல்வது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் என்பது இருக்கிற குழந்தைகளைக் கொன்றுவிடுவது அல்ல. இனிமேல் குழந்தைகள் பிறக்காமல் பார்த்துக் கொள்வதுதான்

திரு. ஏ. பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, பிளாக் வாரியாக, இத்தனை பேர் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவிட்டதால், ஏற்கெனவே செய்துகொண்டவர்களுக்கே மீண்டும் செய்வதும் நடக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அதற்கான தகவல்கள் அரசுக்கு வந்திருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு வட்டாரத்தில் அல்லது ஒன்றியத்தினுடைய பகுதியில் இவ்வளவு பேர் செய்துகொள்ள வேண்டும் என்று, அகில இந்திய அடிப்படையில், மாநிலத்தின் மக்கள் தொகை அடிப்படையில், இந்த மக்கள் தொகைக்கு இவ்வளவு பேர் செய்துகொள்ள வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்த காரணத்தால், அந்த முறைப்படி மாவட்டத்துக்கு இவ்வளவு, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் இவ்வளவு என்று தீர்மானிக்கப்பட்டது. அப்படித் தீர்மானிக்கப்படாத இடத்திலேயும், உதவித் தொகை கொடுக்கிறபோது, சில தவறுகள் நடைபெற்று விட்டன. நடை

பெற்ற தவறுகளுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அப்படிப்பட்ட தவறுக் காக ஒரு டாக்டரைக் கூட சஸ்பெண்ட் செய்திருக்கிறோம். அப்படி ஏதேனும் புகார் உள்ள செய்தி அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியுமானால், அவர்களும் அந்தக் குறிப்பிட்ட காலத்திலே தெரிவித்தால்தான், பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. எல். பலராமன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர் கள் பதில் கூறும்போது, பெண்கள் கணவர்களுடைய அனுமதியில்லாமல் அவர் களாகவே கருச்சிதைவு போன்றவைகளைச் செய்துகொள்ளலாம் என்று விதி யைச் செய்திருக்கிறோம் என்று கூறினார்கள். அந்த முறையில் இளம் பெண் களும் மருத்துவ மனைகளில் செய்து கொள்கிறார்கள் என்ற வதந்திகள் உலவி வருகின்றன. அதுபற்றி அரசுக்கு ஏதாவது தகவல் உள்ளதா.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கருச்சிதைவு குற்ற மானதல்ல என்ற கருத்தை இன்றைய தினம் இந்திய மக்கள் ஏற்றுக்கொண்டு வருகிறார்கள். அதில் இளம் பெண்கள் கருச்சிதைவு செய்துகொள்கிறார் களென்றால், மிக வயதானதற்குப் பிறகு கருச்சிதைவு செய்துகொள்கிற நிலை ஏற்படாது. ஆகவே அங்கே வருகிற பெண்கள் பெரும்பாலும் இளம் பெண் களாகத்தான் இருப்பார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** குடும்பக் கட்டுப்பாடு விவாதம் வேக மாக இருக்கிறது. அது செயலிலே வரவேண்டும்.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether the Hon. Minister is aware that the incentive programmes have more or less been stopped, the number of operations that have been done at Block-level is not even one-tenth of what was accomplished last year? From a statement given at a District Development Council meeting it is found that, in a place where 200 operations had been performed previously, not even 3 operations have been done now. It is because the targets have been fixed at a yearly level and only in one month, 90 per cent of the target has been fixed. What is the proposal with the Government to see that at least we accomplish 50 or 70 per cent of what we accomplished during the previous years?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் கருத்து மூன்று ஆண்டுகளாகத் திரும்பத் திரும்ப விவாதிக்கப்பட்ட ஒரு கருத்து. ஆண்டிலே பல திங்கள் குடும்ப நலத் திட்டத்திற்காக பணியாற்றுகிற டாக்ட ருடைய செல்வாக்கி



னாலே, பல பேரை அழைத்து வந்து சீக்கிரமாக நடத்துவதற்கு வாய்ப்பில்லா மல இருக்கிறது. கிராம மக்கள் கூட நான்கு பேர் போகிறபோது, இன்னும் நான்கு பேர் சேர்ந்து வருகிற ஆர்வம் இருக்கிறதே தவிர, தனித் தனியாக வருவதற்கு ஆர்வம் இல்லை. திருவிழாவைப்போல கூட்ட உணர்ச்சி ஏற்படு கிறபோது வருகிறார்களே தவிர, மற்ற நேரத்திலே வருவதில்லை. இந்தத் தீவிரத் திட்டம் என்றால், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். டி. ஓ., அவர்களுக்கு உட்பட்ட ஒவ்வொரு பிளாக்கிலேயும் உள்ள கமிஷனர்கள், கிராம அதிகாரிகள், பஞ்சாயத்துத் தலைவர்கள், ஒன்றியத்தினுடைய தலைவர்கள், முடியுமானால் எம்.எல்.ஏக்கள், எம்.எல்.சிக்கள் இவ்வளவு பேரும் ஒத்துழைத்து நடத்துகிற போது, ஒரு இயக்கத்திற்குக் கிடைக்கிற ஆதரவு மற்ற நேரத்திலே கிடைப்ப தில்லை. இதைக்கூட மத்திய அரசின் ஆலோசனைக்குத் தெரிவித்திருக்கிறோம். பல நேரத்திலே இதற்காகப் பணியாற்றுபவர்கள் அதற்குப் பணியாற்றக்கூடிய வாய்ப்பு இல்லாமல இருக்கிறது. ஆண்டு முழுவதும் பணியாற்ற முடிவதில்லை. ஆகவே அவர்கள் வேறு விதமான பணிகளிலே அந்தக் காலத்திலே ஈடுபடுகிறார் கள். ஆனால் திட்டம் நிறைவேறுவதற்கு, தீவிரத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒத்துழைக்க வேண்டும். அதற்கான இன்செண்டிவ் தர வேண்டும் என்று திரும்பத் திரும்ப கேட்டிருக்கிறோம்.

## *Certificates issued by Siddha Doctors*

* 4 Q.—THIRU M. K. D. NATARAJAN : Will the Hon. the Minister for Health be pleased to state whether the Government will come forward to honour Certificates issued by the Siddha Doctors as they do in the case of the Certificates issued by the allopathic doctors?

## சித்த வைத்தியர்கள் அளிக்கும் சான்றுகள்

**திரு. மு. க. து. நடராசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஆங்கில முறை மருத்துவர்கள் அளிக்கும் எந்தச் சான்றையும் அரசு ஏற்பது போல், சித்த வைத்தியர்கள் அளிக்கும் சான்றுகளையும் ஏற்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** விடுப்பு வழங்குவதற்காகவும், விடுப்பு கழிந்து மீண்டும் பணியில் சேரும் தகுதி பற்றியும் சித்த மருத்துவர்களால் கொடுக்கப்படும் மருத்துவச் சான்றுகளை அங்கீகரிக்கும்படி முன்பே அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[1974 ஆகஸ்ட் 13

### Assignment of wet lands to Fishermen

* 5 Q.—THIRU K. S. MANI (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the fishermen of Manamelpatti Village, Thiruppathur, taluk, Ramanathapuram district, have applied for assignment of wet land for cultivation; and

(b) if so, the action taken thereon by the Government?

### வலேஞர்களுக்கு நஞ்சை நில ஒப்படைப்பு

திரு. கோ. சு. மணி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மணமேல்பட்டி கிராமத்தில் வலேஞர்கள் நஞ்சை நிலம் விவசாயம் செய்வதற்காக நில ஒப்படைப்பு கோரி விண்ணப்பம் செய்துள்ளார்களா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### Merchants with a total turnover exceeding Rs. 5 lakhs

* 6 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the district-wise number of merchants in Tamil Nadu with a total turnover of Rs. 5 lakhs and above, who voluntarily came forward and submitted their returns during the years 1970-71, 1971-72 and 1972-73 ; and

(b) the number of assessees with a total turnover of Rs. 5 lakhs and above, who were assessed to tax by departmental officers ?



1974 ஆகஸ்ட் 13]

### ரூபாய் 5 இலட்சத்திற்கு மேல் விற்பனை செய்த வணிகர்கள்

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில், 1970-71, 1971-72, 1972-73 ஆம் ஆண்டுகளில் ரூபாய் 5 இலட்சமும் அதற்கு மேலும் விற்பனை நடந்ததாக தானே முன்வந்து கணக்கு கொடுத்தவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர் ?

(இ) அதிகாரிகளால், ஐந்து இலட்சத்திற்கு மேல் விற்பனை நடந்ததாக வரி விதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) சட்டமன்ற மேலவையில் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

### Alcohol Distilleries

* 7 Q.—THIRU A. R. DAMODARAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of alcohol distilleries producing industrial alcohol/potable alcohol in the State and their installed capacities; and

(b) the actual production of the above distilleries in the calendar year 1973 ?

### சாராவி வடிசாலைகள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் சாராவி, அருந்தும் சாராவி உற்பத்தி செய்கிற சாராவி வடிசாலைகள் எத்தனை உள்ளன ? அவற்றின் நிறுவிய உற்பத்தித் திறன் யாது ?

(இ) 1973 காலண்டர் ஆண்டில் மேற்சொன்ன சாராவி வடிசாலைகளின் உற்பத்தியளவு என்ன ?

@ 81 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : (a) There are six distilleries producing alcohol/potable alcohol in Tamil Nadu and their annual installed capacities are—

| | |
|---|---|
| E.I.D. Parry, Limited | 41 lakh litres |
| Trichy Distilleries and Chemicals, Limited. | 136 lakhs litres |
| Arvind Distilleries (Private), Limited. | 54 lakh litres |
| Sakthi Sugars, Limited | 136 lakh litres |
| Vorion Chemicals | 27 lakh litres |
| Southern Agrifurane Industries, Limited | 13.50 lakh litres. |

(b) The actual production of the above distilleries for the period from 1st January 1973 to 31st December 1973 are—

| | |
|---|---|
| E.I.D. Parry, Limited | 36.31 lakh litres |
| Trichy Distilleries and Chemicals, Limited. | 130.68 lakh litres |
| Arvind Distilleries (Private), Limited | 43.51 lakh litres |
| Sakthi Sugars, Limited | 129.99 lakh litres |
| Vorion Chemicals | 11.53 lakh litres |
| Southern Agrifurane Industries, Limited | 1.03 lakh litres |

(பிற்பகல் 4-30)

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether any decision has been taken regarding the production of potable alcohol with effect from 1st September 1974?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே செப்டம்பர் 1-ம் தேதியிலிருந்து நிறுத்தி விடுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

THIRU G. SWAMINATHAN : Sir, consequent on scrapping of prohibition, they have increased their production. May I know what is the proposal of the Government to utilise the capacity that has been increased during these years?



THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, the matter is being discussed with the Industries Department. We propose to use it for industrial alcohol.

THIRU D. SANTOSHAM : Sir, have the Government considered the possibility of exporting the alcohol that is now being produced?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நம்மிடத்தில் மீதப் படும் ஆல்கஹாலை வேறு எந்தெந்த இரசாயன தொழிற்சாலைகள் உபயோகிக்க லாம் என்று இப்போதே டிஸ்டில்லரீஸ் வைத்திருப்பவர்களிடம் அறிந்து கொள்ளுவதற்காக பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கிறோம். புதிதாகவும் சிலர் ஆரம்பிக்க முன்வந்திருக்கிறார்கள். அவர்களிடத்திலும் பேச்சுவார்த்தைகள் நடத்த இருக்கிறோம். அதற்கு இடையிலே இந்த ஆல்கஹாலை வேறு பல மாநிலங்களும் தங்களுக்கு வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆக, இவர்களில் யார் யாருக்கு வழங்குவது என்னென்ன டேர்ம்ஸில் வழங்குவது என்பது பேச்சு வார்த்தையில் இருக்கின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எந்த மாதிரித் தொழிற் சாலைகளை இப்படிப்பட்ட சாராயத்தைக்கொண்டு உருவாக்கலாம் என்ற அபிப் பிராயம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Alcohol-based chemical industries.

THIRU S. NARAYANASWAMY : Sir, before we consider export, can there be an assurance that at least the existing alcohol-based industries will get their full complement of power alcohol after 1st September 1974?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, the hon. Member, I think, refers to "Chemplast". We are considering it.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, இப்போது செப்டம்பருக்குப் பிறகு எடுக்கப்போகின்றார்கள் என்ற நிலையில், அதற்குப் பிறகு அதற்கு ஈக்வெலான palatable

மாண்புமிகு மேலவைத் தலைவர் : செப்டம்பருக்குப் பிறகு இல்லை. செப்டம்பர் முதலிலிருந்தே.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, செப்டம்பர் 1-ம் தேதியிலிருந்து பூரண மதுவிலக்கை தமிழ் நாட்டிலே இன்ட்ரடூஸ் செய்ததற்கு அதற்குப் ஈக்விலெண்ட்டாக இப்போது 4, 5 வருஷம் அதிலே பழகியிருப்பதால் Will the Government be pleased to arrange for supply of an equivalent, whatever it may be?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான்கைந்து ஆண்டுகாலம் பழகியதையும் நிச்சயமாக அனுமதிக்க மாட்டோம். அதற்கு முன்பு பழகியதை யாராவது அனுஷ்டித்தாலும், அவர்களும் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவர்.

MR. CHAIRMAN : I suppose the hon. Member Thiru Rajagopal will not want to be in a state of high intoxication.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே 1—9—1974 லிலிருந்து பூரண மதுவிலக்கு மீண்டும் அமுலுக்கு வருகின்றது. அதே சமயத்தில் தமிழ் நாட்டிலே இன்னொரு கொடிய பழக்கமும் இருந்து வருகின்றது. அதாவது மதுக்கஷாயம் என்பதை அதிகமாகப் பருகுகிறது. எனவே இதைப் பற்றி அரசு பரிசிலனை செய்து ஏதாவது முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, ஏற்கெனவே இதுபற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதன்மீது முடிவெடுப்பதற்கான நடவடிக்கைக் குறிப்புகள் இருக்கின்றன.

*Naming of roads and bridges in Madras City*

* 8 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon the Minister for Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to name the roads and bridges in Madras City after important men; and

(b) if so, the details thereof?



*சாலைகளுக்கும், பாலங்களுக்கும் முக்கியமானவர்களின் பெயர் வைத்தல்*

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள சாலைகளுக்கும், பாலங்களுக்கும் முக்கியமானவர்களின் பெயரை வைப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) பெயர் மாற்றத்திற்கான அரசு பரிசீலனையில் உள்ள சாலைகள், வால் டாக்ஸ் ரோடு என்று இருப்பதை வி. ஓ. சிதம்பரம் சாலை என்றும், போபன்ஸ் பிராட்வே என்று இருப்பதை டி. பிரகாசம் ரோடு என்றும் மாற்றுவதற்குப் பரிசிலனையில் உள்ளது.

அதைப் போலவே பெயர் மாற்றத்திற்கான அரசு பரிசீலனையில் உள்ள பாலங்கள் :

சைதாப்பேட்டையில் உள்ள மர்மலாங் பாலம் மறைமலையடிகள் பாலம் என்றும், அண்ணா சாலையில் உள்ள வெல்லிங்டன் பாலம் பெரியார் பாலம் என்றும், வாலாஜா சாலையில் உள்ள பாலம், காயிதே மில்லத் பாலம் என்றும், கிருஷ்ணாம்பேட்டையில் உள்ள ஹாமில்டன் பாலம் அம்பேத்கார் பாலம் என்றும், நுங்கம்பாக்கத்திலுள்ள மன்ரோ பாலம், ராஜாஜி பாலம் என்றும், கண்ணம்மாபேட்டையில் புதிதாக கட்டப்பட்டுள்ள சுரங்கப் பாதைக்கு தியாகராயநாதன் சுரங்கப்பாதை என்றும், ஜெமினிக்கு அருகில கட்டப்பட்ட பாலத்திற்கு அண்ணா மேம்பாலம் என்றும், அடையாற்றிலுள்ள அடையார் பாலத்திற்கு திரு. வி. க. பாலம் என்றும் மாற்றுவதற்கு பரிசிலனையில் இருந்து வருகிறது.

*Health staff of the Melagaram Panchayat*

* 9 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Health staff of Melagaram Panchayat, in Tenkasi Panchayat Union of Tirunelveli district have not received their salaries since November last;

(b) if so, the reason therefor;

(c) whether any representations have been received in respect thereof: and

(d) if so, the action taken thereon?

மேலகரம் ஊராட்சி மன்ற சுகாதார ஊழியர்கள்

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மேலகரம் ஊராட்சி மன்றத்தில் பணிபுரியும் சுகாதார ஊழியர்கள் கடந்த நவம்பர் மாதம் முதல், சம்பளம் வாங்காமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம்யாது ?

(உ) அது பற்றி முறையீடுகள் வந்தது உண்டா ?

(எ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) மேலகரம் ஊராட்சியின் 29—7—1972-ம் தேதிய தீர்மானத்தின்படி சுகாதார ஊழியர்களுக்கு மாதம் ரூ. 60 சம்பளம் 1—7—1972 முதல் வழங்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அதன்மேல் மேல்கர ஊராட்சி மன்றத் தலைவர் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆதலால் சுகாதார சிப்பந்திகள் அப்பொழுது வாங்கின சம்பளம் ரூ. 45-ஐ மாற்றி ஊராட்சி தீர்மானத்தின்படி கூடுதல் சம்பளம் வழங்கும் வரை சம்பளம் வாங்காமல் வேலை செய்வதென முடிவு செய்து நவம்பர் 1972-லிருந்து சம்பளம் வாங்காமல் வேலை செய்து வந்தார்கள்.

(உ) அதுபற்றி திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முறையீடு வந்தது.

(எ) மேலகரம் ஊராட்சி மன்றம் தீர்மானத்தின்படி சுகாதார ஊழியர்களுக்கு மாதம் ரூ. 60 விதம் 1—7—1972 முதல் கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் உத்திரவு பிறப்பித்தார். அந்த உத்திரவின்படி சுகாதார ஊழியர்களுக்கு 1—7—1972 முதல் மாதம் ரூ. 60 விதம் கொடுக்கப்பட்டுவிட்டது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, மேலகரம் ஊராட்சி மன்றத்தின் தீர்மானத்தை அமுல் நடத்த தலைவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அதைப் பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, அவர்களுக்குத் தாக்கீது தான் அனுப்பப்பட்டது. வேறு நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.



*Cancelling of Licence fees for the Hair-cutting saloons*

*10 Q.—THIRU M. MASILAMANI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal with the Government to cancel the licence fees levied for the Hair-cutting saloons by the Panchayats, Town Panchayats, Municipalities and Corporations in Tamil Nadu; and

(b) if so, when it come into force?

முடி திருத்தும் கடைகளுக்கு உரிமக் கட்டணத்தை ரத்து செய்தல்

**திரு. மு. மாசிலாமணி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகியவைகள் மூலம் ஆங்காங்குள்ள முடி திருத்தும் கடைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள உரிமக் கட்டணத்தை ரத்து செய்ய அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது முதல் அமுலுக்குக் கொண்டு வரப்படும் ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

உடுக்குறியிடாத வினாக்கள்

*Cases of rabies treated in Government Hospitals*

**வினா 1.—திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை நகரில், பைத்தியம் பிடித்த நாய்கள் கடித்து மருத்துவ மனைக்குச் சிகிச்சைக்கு வந்தவர்கள் கழிந்த மூன்று வருடங்களில் வருடவாரியாக எத்தனை பேர் ?

(இ) அப்படி வந்தவர்களில் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

**விடை.—**

| | | |
|---|---|---|
| (அ) | 1971 | 8,175 பேர் |
| | 1972 | 10,174 பேர் |
| | 1973 | 11,998 பேர் |
| (இ) | 1971 | 99 பேர் |
| | 1972 | 65 பேர் |
| | 1973 | 79 பேர் |

### Promotion of Mulberry Cultivation in Hosur

2 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon the Minister for Industries be pleased to state—

The steps taken to promote Mulberry cultivation in Hosur in Dharmapuri district?

A.—The Government have been leasing out poromboke lands unauthorisedly occupied by the sericulturists for cultivation of mulberry, so that they could take up to sericulture. A crash programme for development of sericulture industry in an area of about 13,000 acres has been sent to the Central Silk Board for approval.

Recently mulberry nurseries have been started in Hosur, Krishnagiri and Dharmapuri in order to supply suitable variety of mulberry.

### திருமானூர்-பாளையப்பாடி சாலை வேலை

*வினா 3.—திரு. மு. க. து. நடராசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) திருச்சி மாவட்டம், திருமானூர்-பாளையப்பாடி சாலை வேலை எப்போது முடிவடைந்தது ?*

*(இ) இப்போது இச்சாலை, எந்தத் துறையின் பராமரிப்பில் உள்ளது ?*

A.—(a) The Thirumanur–Palayapadi road was completed in 1970.

(b) At present, this road is maintained by the Tiruchirappalli Division of the Highways and Rural Works Department.

### முந்திரி சாகுபடி

*வினா 4.—தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) காரைக்குடி தாலுக்காவில், முந்திரி சாகுபடி செய்யப்படும் நிலப் பரப்பு எவ்வளவு ?*

*(இ) அதில் காய்ப்புக்கு வரும் நிலப்பரப்பு எவ்வளவு ?*



### Unauthorised Constructions on the compound walls of the Stri Sadana in Mylapore

5 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether the Superintendent of Government Vigilance Home and Stri Sadana in Mylapore, Madras, detected unauthorised constructions on the compound walls of the Sadana put up by third parties in 1973;

(b) if so, the details thereof;

(c) whether complaints were filed with the Police; and

(d) if so, the action taken thereon?

A.—One Thiru Balan (Lessee to Thiru Venkataraman, owner of building No. 1, Kutcherry Road, Mylapore, Madras-4,) unauthorisedly raised the height of the compound wall on the northern side of the Government Vigilance Home and Stri Sadana, Madras, by about three feet. The compound wall thus raised was overlapping the asbestos roofing of the Visitors' waiting room and flush-out latrines which are within the premises of Vigilance Home and Stri Sadana. The building No. 1, Kutcherry Road, adjoins the premises of the Vigilance Home and Stri sadana on kutchery Road, Madras-4. This was an unauthorised encroachment since the compound wall on the northern side belongs to the Government Vigilance Home and Stri Sadana, Madras. On 30th August 1973, the Superintendent of the institution reported the fact to the Executive Engineer, Public Works Department, Madras-5, and the unauthorised construction was dismantled by the Public Works Department authorities on 27th December 1973, after giving due notice to the owner of the premises. There is no such encroachment in the premises of Government Vigilance Home and Stri Sadana, Madras, now.

Hence no police complaint was given by the Superintendent, Government Vigilance Home and Stri Sadana, Madras.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

### 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

#### உணவு நிலை குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. வே. ராஜாராம் அவர்களிடமிருந்தும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகசாமி அவர்களிடமிருந்தும் உணவு நிலைபற்றி இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. நாளை தமிழ் நாட்டிலுள்ள உணவு நிலைமை குறித்து விவாதம் நடக்க இருப்பதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கிறேன்.

### 4. அறிவிப்புகள்

#### (1) ஆளுநரிடமிருந்து செய்தி

(ஜனாதிபதியால் சட்ட முன்வடிவு திருப்பி அனுப்பப்பட்டது குறித்து)

MR. CHAIRMAN : I have received the following message, dated 7th August 1974 from the Governor of Tamil Nadu.—

"The Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973, was passed by both the Houses of the State Legislature and was reserved by me under Article 200 of the Constitution for the consideration of the President. The President has, in pursuance of the proviso to Article 201 of the Constitution, directed that the Bill be returned to the Houses of the State Legislature with a message requesting that the Houses will reconsider, in the light of the numerous representations received from the religious and charitable institutions in the State as well as from the members of the public, the Bill as a whole, and in particular, the second proviso to clause 15, and clause 26 of the Bill, and make such amendments in the Bill as may be considered necessary to enable the said institutions to carry on their legitimate functions without any financial difficulty.

In accordance with the above direction, I, Kodardas Kalidas Shah, Governor of Tamil Nadu, hereby return the Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973 to the Houses of the Legislature for reconsidering the Bill as a whole and in particular the second proviso to clause 15 and clause 26 of the Bill, and to make such amendments in the Bill as may be considered necessary on the lines indicated in the direction of the President."



THIRU G. SWAMINATHAN : Sir, may I know from the Hon. Minister what the Government are proposing to do regarding the Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill?

The Hon. THIRU S. MADHAVAN : Sir, the procedure is that we have to resubmit it to the Legislative Assembly and to the Legislative Council. We are proposing to give a notice to refer it to a Joint Select Committee for consideration, on the suggestion made by the Government of India.

THIRU K. S. ABDUL WAHAB : Is the Joint Select Committee not in operation?

THIRU G. SWAMINATHAN : Sir, even when the Bill was introduced, we from this Bench, requested that it might be referred to a Joint Select Committee. We are now very happy that the Government have agreed to refer it to a Joint Select Committee.

#### (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. today, the following programme of business has been decided upon :—

*14th August* 1974.

1. Presentation of First Statement of Suplementary Expenditure for 1974–75.

Discussion on Food Situation.

*15th August* 1974.

Independence Day—No meeting.

*16th August* 1974.

Initiation and discussion on the Annual Financial Statement for 1974–75 and Supplementary Fnancial Statement for 1973–74 of the Tamil Nadu Electricity Board.

*17th August* 1974.

1. Government Resolutions.
2. Discussion on the Annual Financial Statement for 1974–75 and Suplemenatry Financial Statement for 1973–74

*18th August* 1974.

Holday—No meeting.

*19th August* 1974.

Discussion on the First Statement of Supplementary Expenditure for 1974–75

*20th and 21st August* 1974.

Discussion on the Annual Financial Statement for 1974–75 and Supplementary Financial Statement for 1973–74 of the Tamil Nadu Electricity Board.

*22nd August* 1974.

Reply to the dscussion on the Annual Financial Statement for 1974–75 and Supplementary Financial Statement for 1973–74 of the Tamil Nadu Electricity Board.

*23rd August* 1974.

No meeting.

*24th August* 1974.

Consideration of Appropriation Bill and other Official Bills.

*25th August* 1974.

Holiday—No meeting.

*26th and 27th August* 1974.

Consideration of Official Bills.
The Council will meet daily from 4 p.m. to 7 p.m.

*(பிற்பகல் 4.40)*

### 5. மாற்றுத் தலைவர் பட்டியல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்ட மன்ற மேலவையின் 48-வது கூட்டத் தொடருக்கு, கீழ்க்காணும் சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் நான் நியமித்துள்ளேன் என்று தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின்கீழ் நான் அவைக்கு அறிவிக்கிறேன் :—

1. திரு. எம். சங்கரலிங்கம்
2. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்
3. திரு. எம். ஆறுமுகசாமி
4. திரு. எஸ். முத்துசாமி



### 6. அரசின் தீர்மானம்

**தனியார் மருத்துவக் கல்லூரி நிறுவுவதைத் தடை செய்யவும், நிறுவப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரிகளை முறைப்படுத்தவும் பாராளுமன்றம் சட்டமியற்ற அதிகாரம்.**

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Chairman, Sir, I beg to move the following Resolution :—

"Whereas, this Council considers that there should be a uniform legislation in the country to ban the setting up of sub-standard medical colleges by private organisations, where the criterion for admission is not merit but the ability to pay huge sums of advance tuition fees and capitation donations and that there is need to regulate the existing private medical colleges in such manner as is feasible and desirable;

And whereas, the imposition of such a ban on medical colleges for under-graduate education is a matter with respect to which Parliament has no power to make Laws for States except as provided for in Articles 249 and 250 of the Constitution of India;

And whereas, it appears to this Council to be desirable that the aforesaid matters should be regulated in the State of Tamil Nadu by Parliament by law;

Now, therefore, in pursuance of clause (1) of Article 252 of the Constitution of India this Council hereby resolves that the imposition of a ban on the setting up of private medical colleges and regulation of such colleges already set up and matters connected therewith and ancillary and incidental thereto should be regulated in the State of Tamil Nadu by Parliament by law."

Sir, in order to ban the establishment of private medical colleges taking high advance tuition fees and capitation donations, the Health Minister, Government of India had requested the State to pass a suitable resolution in the State Legislature. In the last meeting of the Central Council of Health, the representatives of all the State Governments present were unanimous in their view that the Central Government should, on the request of two or more State Governments take necessary steps to curb the tendency to start such private medical colleges by enacting suitable legislation in Parliament. The Health Minister has requested that necessary resolution empowering the Parliament to make a law in the matter

be passed in the State Legislature and forwarded to the Government of India. Under-graduate medical education is a subject in the State List. Parliament has no power to make law for the State except as provided for in Articles 249 and 250 of the Constitution of India. Under clause (1) of Article 252 of the Constitution of India, if the Legislatures of two or more States consider it to be desirable that the matters with respect to which Parliament has no power to make law for the States except as provided in Articles 249 and 250 of the Constitution of India, should be regulated in such States, it shall be lawful for the Parliament to pass an Act for regulating that matter accordingly and any Act so passed shall apply to such States and to any other State by which it is adopted afterwards by resolution passed in that behalf by the House or where there are two Houses by each of the Houses of the Legislature of that State. According to clause (2) of Article 252 of the Constitution of India, any Act so passed by Parliament may be amended or repealed by an Act of Parliament passed or adopted in like manner but shall not as respects any State to which it applies be amended or repealed by an Act of the Legislature of that State. It is, therefore, proposed to pass a resolution to enable the Parliament to make law to ban the establishment of private colleges taking high tuition and capitation donations.

Mr. CHAIRMAN: Motion moved—

"Whereas, this Council considers that there should be a uniform legislation in the country to ban the setting up of sub-standard medical colleges by private organisations, where the criterion for admission is not merit but the ability to pay huge sums of advance tuition fees and capitation donations and that there is need to regulate the existing private medical collges in such manner as is feasible and desirable;

And whereas, the imposition of such a ban on medical colleges for under-graduate education is a matter with respect to which Parliament has no power to make Laws for States except as provided for in Articles 249 and 250 of the Constitution of India;



AND WHEREAS, it appears to this Council to be desirable that the aforesaid matters should be regulated in the State of Tamil Nadu by Parliament by law;

NOW THEREFORE, in pursuance of clause (1) of Article 252 of the Constitution of India this Council hereby resolves that the imposition of a ban on the setting up of private medical colleges and regu'ation of such colleges already set up and matters connected therewith and ancillary and incidental thereto should be regulated in the State of Tamil Nadu by Parliament by law."

THIRU D. SANTOSHAM: On a point of order, Sir. I think we in this Council and also the Government are committed to a principle of State Autonomy. I think that necessarily involves that the existing power of the State Legislatures should be preserved and expanded if possible and we should do nothing that would have the effect of expanding the powers of Parliament. I have a feeling that this Resolution that is moved has the effect of expanding the powers of Parliament to make law on a subject on which we have the right to pass legislation. Why not we do that ourselves and get the concurrence of the Central Advisory Council and also consult other State Governments? By passing this Resolution, we will be expanding the power of Parliament and I think it will go against the princples of State autonomy.

MR CHAIRMAN: Under the present Constitution, I may permit it. I cannot reject it.

The Hon. THIRU K. ANBAZHAGAN. Shall I explain the point. . . . . . . . .

THIRU G. SWAMINATHAN: Sir, when once we pass such a Resolution and Parliament makes a law, then we have no powers to repeal or amend it. Why should the State take up this thing and go to Parliament? The Centre has advised Mysore or some other State. We do not have any private college where any capitation fee or any such thing is being taken. Why should we take this up and pass it in the Council against the principle which we have adopted?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினையைப்பற்றி இந்த அரசினுடைய துறைகள் ஏறத்தாழ 6 மாத காலம் பல்வேறு ஆலோசனைகள் நடத்தியிருக்கிறது. அமைச்சர்களும் கூடிப் பேசியிருக்கிறோம். நம்முடைய மாநிலத்தில் இந்தப் பிரச்சினை எழுந்து, அதை மாநில அரசால் தடுக்க முடியாத காரணத்தினால், இந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்படவில்லை. நம்முடைய மாநிலத்தில் கேபிடேஷன் பீஸ் வாங்கும் காலேஜுகள் எதுவும் இல்லை. யாரும் தனியார் காலேஜ் என்ற முறையில் Under graduate or any other College ஏற்படுத்துவதற்கு நாம் அனுமதிக்கவும் இல்லை. ஆனால் மருத்துவக் கல்விப் பட்டம் பெற்றவர்கள், பிற மாநிலத்திற்குச் சென்று இப்படிப்பட்ட தரக்குறைவான கல்வியைப் பெற்றவர்கள், வேறு மாநிலத்தில் இந்த அடிப்படையில் வியாபார நிலையத்தைப் போல ஏற்படுத்தப்பட்ட கல்லூரிகளில் படித்தவர்கள், திரும்ப தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் நாட்டின் இயல்பான உரிமைகளோடு அவர்களும் போராடி தாங்கள் பெற வேண்டிய பதவிகளைப் பெற முயற்சிக்கிறார்கள். இப்படிப் பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் தகுதியும், திறமையும் சற்றுக் குறைவாகவே இருக்கிறது. அந்தக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்பு இது வரை பாராளுமன்றத்திற்கு இல்லை. மெடிகல் கவுன்சில், அகில இந்திய மருத்துவ ஆலோசனைக் குழு ஓரளவிற்கு அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டாலும் கூட, பாராளுமன்றத்தில் சட்டம் இல்லாமல் அந்தந்த மாநிலங்களிலே இவைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளாமல் இருக்கிறபோது, ஒரு ஒருமித்த கருத்து உருவாவதற்கு வழியில்லை. பாராளுமன்றத்திற்கு இந்த உரிமையை நாம் தருவதன் மூலமாக அவர்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவார்களானால், ஏற்றுக்கொள்ளாத மாநிலங்களிலே பல இன்றையதினம் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டு அதே கட்சியைச் சேர்ந்தவர்களுடைய ஆட்சியிலே இருக்கின்ற காரணத்தினால், ஒரு முறையை ஏற்படுத்த அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. தமிழ் நாடு ஒத்துக்கொண்டிருக்கிறபோது, இன்னும் இரண்டு மாநிலங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறபோது, ஏன் இந்த முறையை மற்ற மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று கேட்டு, இந்த மருத்துவக் கல்வியில் தரக் குறைவு ஏற்படுவதற்கும், அளவு கடந்த நிதி வசூலிப்பதற்கும், வியாபாரம் போல நடத்தி பட்டம் கொடுத்து அனுப்பி, அவர்களாலே அதற்குப் பின்னர் மருத்துவக் தொழில் கெட்டுப் போவதற்கும் இருக்கிற இடத்தைப் பெருமளவிற்குக் குறைக்க ஒரு வாயிலாக இருக்கும் என்ற காரணத்தினால், பிற மாநிலங்களில் பிற பகுதிகளிலே ஏற்படுகிற இப்படிப்பட்ட கல்வித் துறை நமக்கு இடையூறாக இருக்கின்றது என்ற காரணத்தினால் மத்திய அரசுக்கு



இந்த அதிகாரத்தைக் கொடுத்தாவது அவர்கள் ஓரளவிற்குச் செயல்படுத்த முடிகிறதா என்று பரிட்சிக்க வேண்டுமென்ற முறையில் தமிழக அரசு ஒத்துழைக்கலாம் என்று கருதி, இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

(பிற்பகல் 4-50)

**திரு. டி. சந்தோஷம்:** நம்முடைய மாநிலத்தில் இப்படிப்பட்ட 'சப்ஸ்டாண்டர்டு' மெடிக்கல் கலேஜ் கிடையாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மற்ற மாநிலங்களில் இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியாகக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். It will bed precedent. இதனுடைய விளைவு என்னவென்றால், மற்ற மாநிலங்களில் தவறு நடக்கிறது, அதற்கு மத்திய அரசுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறினால், நாளைக்கு மத்திய அரசு ஒரு சட்டம் கொண்டு வந்தால், அது நம்முடைய அடிப்படை உரிமையான மாநில சுயாட்சி என்ற கொள்கையைக் கெடுத்துவிடும். ஆகவே நன்றாக ஆராய்ந்து இந்தப் பிரச்சினையை அரசு புனராலோசனை செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THIRU G. SWAMINATHAN: Sir, I may also say that there are only two such States. The Centre has got many States in the country which are run by the Ruling Party at the Centre. If at least those two States pass a resolution, we can keep quiet. Even the Rajamannar Committee has vehemently stated in its report that such a power should not be given to Parliament. When such is the case, our passing such a resolution will make it appear to others that we are going back on the very principle of autonomy.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மாநில சுயாட்சி என்ற கொள்கை அரசியல் அடிப்படையில் மாநில நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு, வசதி வாய்ப்புகள் பெறுவதற்குக் கோரப்படுகிற ஒன்றாகும். அந்த மாநில சுயாட்சிக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமானால், அப்போது இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காது. இன்றைக்கு மாநில சுயாட்சிக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்படாத காரணத்தால், பிற மாநிலத்தில் கல்வியில் திறமைக் குறைவு ஏற்படுவதானது நம்முடைய மாநிலத்தில் இருக்கிறவர்களைப் பாதிக்கிறது. இங்கே மாணவர்களைப் பொறுத்தவரையில், எந்தக் கல்லூரியில் பட்டம் பெற்றாலும், அவர்கள் பயிற்சி நடத்துவதற்கு, வேலை பெறுவதற்கு, தங்களுடைய மாநிலத்திலோ அல்லது அண்டை மாநிலத்திலோ முயற்சி செய்கிற பழக்கம் இருக்கிறது. தரக்குறை

வான மருத்துவக் கல்லூரி பிற மாநிலத்தில் இருப்பதால், நம்முடைய மாநிலம் பாதிக்கப்படுகிறது. 'காம்படிஷன்' வருகிறது. அது தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு மத்திய அரசுக்கு ஒரு 'வாயில்' வேண்டும். தற்போது அத்தகைய வாயில் இல்லை. இந்த வாயிலை மத்திய அரசுக்குத் தருவதன் மூலமாக, அத்தகைய கல்வித் துறையைச் சீர்திருத்துவதன் மூலமாக, நம்முடைய தமிழ் நாட்டுக்குப் பாதுகாப்பு பெறுகிறோம். தவறு செய்கிற ஒரு மாநிலத்தின் கல்வித் துறையில் தலையிடுவதற்கு மத்திய அரசுக்கு இப்போது நாம் இடம் கொடுத்து விட்டால் நாளைக்கு நம்முடைய மாநிலத்தில் தவறு நடக்கிறது என்று மத்திய அரசு தலையிடுவதற்கு வாய்ப்புக் கொடுப்பதாகாதா என்று கேட்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை, மாநில சுயாட்சிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, அந்தக் கொள்கை அடிப்படையில் மிகப் பெரிய தவறு ஒன்று நடக்குமானால், மத்திய அரசு தலையிடுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதல்ல; மாநில சுயாட்சிக் கொள்கையின் நோக்கம் அதுவல்ல. தவறு நடக்காது என்ற அடிப்படையில் மாநில சுயாட்சி கேட்கிறோமே தவிர, தவறான முறையாக கையாண்டுவிட்டு, அந்தத் தவறான உற்பத்திக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று வாதிடுவது சரியல்ல. மற்றொன்று மாநில சுயாட்சி நமக்குக் கிடைத்திருக்குமானால், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியமே இல்லாமல், நம்முடைய மாநிலத்திலே யார் வேலை பெறலாம் என்று கட்டுப்படுத்த முடியும். இன்றைய தினம் யார் வேலை பெறலாம் என்று கட்டுப்படுத்த முடியவில்லை . .

Any Graduate has got equal right to apply and register himself for any post in any State if he has got a register.

ஆகவே மணிப்பாலில் படித்தவர்கள், வேறு இடத்தில் படித்தவர்கள் இங்கே வந்து பதிவு செய்துகொள்ளலாம். நான் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன். அந்த நடவடிக்கை அரசியல் சட்டப்படி சரியானதல்ல என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஆகவே தடுக்க வேண்டாம் என்று அனுமதித்து விட்டோம். நம்மிடம் தகுதியுள்ள டாக்டர்கள் பயிற்சி பெற்றும், அவர்களுக்கு வேலை கிடைக்காத அளவுக்கு வேறு எங்கோ எப்படியோ பயிற்சி பெற்றவர்கள் போட்டிக்கு வருகிறபோது, இந்தக் கல்வித் துறையைக் கட்டுப்படுத்த மாநில அரசு விரும்பினால், முறைப்படுத்த மத்திய அரசுக்கு உதவி செய்து பார்க்கலாம் என்று தான் கொண்டுவந்திருக்கிறோம். நாம் கேட்கிற மாநில சுயாட்சிக்கு தீர்மானம் போட்டு விட்டோம், தொடர்ந்து கேட்டுக் கொண்டு தான் இருப்போம்.





MR. CHAIRMAN : The hon. Member Thiru Santosham is requested not to repeat the same point. There are so many speakers today and there may not be enough time.

**திரு. டி. சந்தோஷம் :** நம்முடைய மாநிலத்தில் தவறு செய்கிறார்கள் என்பதல்ல. அவர்கள் கண்ணுக்குத் தவறாகப் படலாம். நம்முடைய மொழிக் கொள்கையைத் தவறாக நினைத்துக்கொண்டு, அதை மாற்றுவதற்கு இதர மாநிலத்தில் உள்ளவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்து இப்படி ஒரு சட்டம் கொண்டுவந்தாலும் கொண்டு வரலாம். தவறைத் திருத்துவது வேறு. ஆனால் தவறு என்று நினைத்துக்கொண்டு அதைத் திருத்துவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கக்கூடாது என்பது தான் என் கருத்து.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாநில சுயாட்சி கிடைக்கிற வரை தான் நடைபெறும். மாநில சுயாட்சி கிடைத்த பிறகு, இப்படிப்பட்ட தீர்மானங்களுக்குத் தேவையே இல்லாமல் போய்விடும். ஆகவே மாநில சுயாட்சி கிடைப்பதற்கு இந்தத் தீர்மானம் கூட குந்தகமாக இருக்குமோ என்று அச்சப்படுகின்ற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டிருக்கின்ற உணர்வை நான் மதிக்கிறேன், நான் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 'காபிட்டேஷன் ஃபீஸ்' வாங்குவது தவறு என்று நாம் கருதுகிறோம், எல்லோரும் கருதுகிறோம். அதைத் தடுப்பதற்கு மாநில அரசிடம் தற்போது சட்டமில்லை, மத்திய அரசிடமும் சட்டம் இல்லை. மத்திய அரசு சட்டம் கொண்டு வந்தும், அந்த அதிகாரத்தை மாநில அரசுக்குத் தந்தால், மாநில அரசே அதைச் செய்ய முடியும். தற்போது மத்திய அரசிடமும் மாநில அரசிடமும் அத்தகைய சட்டம் இல்லை. தடுத்தால், சுப்ரீம் கோர்ட் வரை போய் மீண்டும் கொண்டு வருவதற்கு இடம் இருக்கிறது. ஆகவே தான் பாராளுமன்றத்தில் சட்டம் இருக்கப்பட வேண்டும். இன்டியன் மெடிகல் கவுன்சில் முடிவு செய்தும், அதை நிறைவேற்ற இயலாத நிலைமை இருப்பதன் காரணமாக, மத்திய அரசு சட்டம் செய்ய வேண்டியிருக்கிறது. இரண்டு அரசுகளுக்கும் பொதுவாக இருக்கிற பொருட்களைப் பொறுத்து, மாநில அரசின் சம்மதம் பெற்றுத்தான் மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டியிருக்கிறது. அந்தச் சம்மதத்தை எல்லா மாநிலங்களிலிருந்தும் பெறவேண்டும் என்பதல்ல. பாதி மாநிலங்கள் சம்மதம் தந்து விட்டால் மத்திய அரசு சட்டத்தை நிறைவேற்றிவிடலாம். நாமும் செய்ய முடியாமல் அவர்களும் செய்ய முடியாமல் இருக்கிற நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று தான் நாம் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு

வந்திருக்கிறோம். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தது போன்று, நாம் செய்ய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் திரு. சந்தோஷம் அவர்கள் கூறியது போல், மாநில சுயாட்சி என்று வந்தால், சட்டம் கொண்டு வருவதும் கொண்டு வராமலிருப்பதும் நம் கையில் இருக்கும். மத்திய அரசை எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இப்போது கூட மத்திய சர்க்கார் மாநிலங்களைக் கலந்து கொள்ளாமல் சட்டமியற்ற அதிகாரம் இருக்கிறது. தற்போது எல்லா சர்க்கார்களையும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகவே பாதிக்கு மேற்பட்ட மாநிலங்கள் இத்தகைய தீர்மானத்தைப் போடத் தான் போகின்றன. சட்டம் வரத்தான் போகிறது என்ற நிலைமை இருக்கும் போது, அந்தச் சட்டத்திற்கு நம் அரசும் துணை புரிந்து தீர்மானம் போடத் தான் வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாம் இந்தத் தீர்மானம் போடாமலிருந்தால், 'காபிட்டேஷன் பீஸ்' வாங்கும் கல்லூரிகள் நடைபெறலாம் என்பதற்கு நாம் ஒத்துழைப்பாக இருக்கிறோம் என்றாகிவிடும். Silence is a symbol of acceptance என்று வந்துவிடும்.

* THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, Sir, at the outset, I have to point out that this Resolution envisages an attack on persons or institutions getting advance tuition fees or capitation donations.

Sir, the Hon. the Minister for Health mentioned here in the preface, that this did not relate to any institution in the State of Tamil Nadu. But the question is one of classification. Are there any institutions getting advance tuition fees or capitation donations among the private sector institutions? Sir, it has come to our knowledge that several institutions, though not concerned with medicine, do take capitation fees and donations in the State of Tamil Nadu itself. Therefore, they cannot be put under a separate classification and the State cannot, under article 14, make any law which discriminates and which has no rational nexus with the objects sought to be achieved or the objects sought to be prevented. If taking of donations is illegal and wrong, the same rule should apply to all colleges whether it is a medical college or



an arts college, because what is sought to be prevented is taking of capitation donations. In these circumstances, this is an invidious distinction.

Sir, secondly, I want to point out that in my recent trip round the world, I had occasion to see many medical colleges and institutions abroad. I am certain that the Hon. the Chief Minister as well as the Hon. the Minister for Education and also the Hon. Minister Thiru Rajaram who have all gone round the world, would have come into contact with such institutions. Sir, I refer to some institutions like the Simon Fraser University in British Columbia and also the British Columbia University in British Columbia. I found, on an examination and on a detailed interview with some of the persons in those Universities, that the deficits were always met in those colleges as well as the Universities by Christmas Appeal subscriptions which in the year 1971 totalled 6,37,053 dollars and in the year 1972, 6,26,665 dollars. This is besides the donations and grants which may be obtained from the students themselves who are responsible for building blocks and portions of the University from their own contributions. It is not something new that we find in this country. Private institutions go and ask for money especially when the cost of medical apparatuses is very high. Unless you have the necessary money, you cannot build the laboratories and if you ask for money from the students, you think it is putting a permission on inefficiency. This is like the time-honoured proverb, "Chick or the egg—which came first?", which one cannot answer. So, I think the Government must now concentrate, not on finding fault with private instituions, but on trying to develop the facilities that are available for medical graduates and personnel in this country itself. This cannot be done unless there is a national legislation at an all-India level. When I was in the British Columbia University as well as the Simon Fraser University, I was very much concerned to find out whether any development had been made in the realm of cancer. I found one Dr. K. K. Nair, who was formerly in Trombay, manning the Department concerned in the Simon Fraser University. This gentleman is in charge of a machine to separate malignant cancer-cells from ordinary cells in the human body and that one machine costs him 7 million dollars and there are only three such machines in the whole

of the United States and Canada and probably in the whole world. Sir, how can we afford, if we dissipate our resources. if we do not have a national scheme at the national level, to have such machinery? One of our greatest patriots, Arignar Anna passed away because of that terrific disease. Are we doing anything in this country to see that such machinery and equipment are installed in our hospitals? We are just finding fault with people who are making some advance by getting a pittance of a donation from some student or other. Why not a rich student be made to pay? My own feeling is that this must be done at the national level and there is no use of doing it by piecemeal legislation. Our engineering, medical and professional qualifications should all be prescribed at the national level. Otherwise, we will face the tragedy of 16,000 doctors—as was recently given out in the Lok Sabha—emigrating from the country for want of facilities.

*(மாற்றுத் தலைவர் திரு. எம். ஆறுமுகசாமி தலைமை)*

*(பிற்பகல் 5-00)*

Sr, I made an honest attempt wherever I went to request the Indians to come back to our country and said that patriotism demands that they must place their services at the disposal of our country; all of them with one voice told me that they would come back even on Rs. 1,500 or Rs. 2,000, although they were getting 36,000 dollers per year. They said they would come back provided they had facilities, provided they had oportunities to develop. We do not have opportunities to develop in our country because the whole thing is in one long red tape from top to bottom. Therefore, instead of passing this Resolution, all our Ministers should put their heads together and evolve methods for starting or running national institutions and having indpendent Universities like the Provincial University of Simon Fraser.

Sir, another institution which I saw and which amazed me beyond all imagination was the hospital for sick children from 5 to 18 and also the Sunnybrook Hospital in Toronto. Sir, for the sick



children, the Hospital has a heli-pad on top of the theatre and the children are brought by helicopter to the top of the hospital and brought down by elevator and heart operations are done in one or two hours. This means a lot of money and we should have national effort and we should not allow parochial or other considerations to weigh. I do not agree with my hon. Friend Thiru Santosham when he said that with State autonomy, welfare measures could be carried out individually by each and every State. When we have national resources, we must exploit them. If we do not do it, our country will be the poorer, when other countries are forging ahead and the institutions are having modern equipments. It is necessary that we should go and see such equipments and feel sorry that we are not having such equipments in our country. In Sunnybrook Hospital, there are a thousand beds and not a single person is found squatting on the corridors. Every man was allowed inside from 11 to 6 but nobody was allowed to squat on the corridors. If we go to our General Hospital, it looks like a choultry or the Central Railway Station. It is necessary that we should do something to improve the hospitals. This can be done only with top level consultation, top level planning, top level understanding of the situation. If we do not do it, we will be all the more sorry afterwards. I would, therefore, wish that this resolution should not be accepted by this House at all.

*திரு. எம். சங்கரலிங்கம்:* மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிற வகையில் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது நம்முடைய மாநிலத்தில் இத்தகைய மருத்துவக் கல்லூரிகள் இல்லையென்லுைம், பிற மாநிலங்களில் இருக்கின்றன என்பதை நாளிதழ்களிலிருந்து காணலாம். குறிப்பாக, இந்து, எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகளில், '25,000 ரூபாய் கொடுத்தால் மதுரா' யூனிவர்சிடியில், மருத்துவப் படிப்புக்கு இடம் கிடைக்கும்" என்ற வகையில் விளம்பரம், அறிவிப்புகள் வருவதைப் பார்த்துவிட்டு, மாணவர்கள் 25,000 ரூபாய் கொடுத்து சேர்ந்துவிடுகிருர்கள். பிறகு ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் கழித்து, மருத்துவக் கல்வி பெறுவதற்கு உரிய வாய்ப்பு இல்லை என்று கிளர்ச்சி செய்வதும், படுக்கைகள் இல்லையென்று சொல்வதும் நாடு அறிந்த உண்மையாக இருக்கின்ற நிலைமையில் அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். இந்த நிலை மருத்துவக் கல்லூரிகளில் மட்டுமில்லாமல், மற்ற கல்வித் துறைகளிலும் அமைந்திருப்பதைப் பார்க்கி

றோம். எம்.ஏ. பட்டம் பெறுவதற்கு, நமது மாநிலத்திலுள்ள 3 பல்கலைக் கழகங்களும் நல்ல முறையில் கற்பித்து, பட்டங்களைக் கொடுக்கிறார்கள். அந்த முறையில் வெளி மாநிலங்களில் அளிப்பதில்லை. மாணவர்கள் அங்கே போய் பணத்தைக் கட்டி காலத்தைக் கழித்துவிட்டு—இங்கே மூன்றாவது வகுப்பில் சேரத் தகுதி இல்லாதவர்கள்—முதல் வகுப்பில் தேறிவிட்டு வந்து, இங்கே கல்வியின் தரத்தைக் குறைப்பதை நாம் கவனித்துக்கொண்டு வருகிறோம். இதை மதினல் வைத்துக்கொண்டுதான் 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால்—நமது மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களையும் கலந்திருப்பார்களென்று நினைக்கிறேன்—உயர் கல்வி இயக்குநர் அவர்கள், நமது மாநிலத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு கல்லூரிகளிலே வேலை கொடுக்க முன்னுரிமை அளிக்கப்படுமென்று சுற்றறிக்கை அனுப்பினார்கள். இரண்டு, மூன்று நாட்களுக்குள், பத்திரிகைகளில் 'Letter to the Editor' பகுதியில் அவர்களுக்குள்ள பண்டமென்டல் ரைட்ஸ் பற்றியும், இதிலுள்ள டிஸ்கிரிமினேஷன் பற்றியும் விளக்கங்களைத் தந்து எழுதிய பிறகு, அந்தச் சுற்றறிக்கையின் விளக்கம் மாறாகத் தரப்பட்டு, எல்லோருக்கும் வேலை உண்டென்று சொன்னார்கள். பல யுனிவர்சிடிகளில் எளிதாகப் பட்டம் பெற்றுவிடுகிறார்கள். எனக்கு பெயர்களைச் சொல்ல உரிமை இருக்கிறதோ இல்லையோ, உண்மையைச் சொல்லித்தான் ஆக வேண்டும். சாகர் யூனிவர்சிட்டி, பகல்பூர் யூனிவர்சிட்டி ஆகியவற்றில் எளிதாகப் பட்டம் பெற்றுவிடுகிறார்கள். அவர்களுக்குத் தகுதி இருக்கிறதா என்பது, அவர்களை ஆசிரியர்களாக நியமிக்கும்போது அவர்களுடைய நிலையையும், அவர்களால் பயிற்றுவிக்கப்படுகிற மாணவர்களுடைய நிலையையும் ஊன்றிப் பார்க்கிறபோது, தெரியவரும். எனவே அதைத் தடை செய்வதற்கோ அல்லது அவர்களின் தரத்தை உயர்த்துவதற்கோ வழி வகை செய்ய வேண்டும். பல்கலைக் கழக மானியக் குழு அனுமதி அளித்து, இன்டர்-யுனிவர்சிட்டி போர்டில் அவர்களும் மெம்பர்களாக இருந்துவிட்டால், அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய தரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நியதி அகில இந்திய ரீதியில் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். பல்கலைக் கழகத்திலே, 'எவால்யுவேஷன் கமிட்டி', 'கோர்ஸ் ரெகக்னிஷன் கமிட்டி' என்று அமைத்து, அவர்கள் ஒரு பட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டால்—சென்னை எம்.ஏ. பட்டத்திற்குத் தகுதியான பட்டம் பகல்பூரிலுள்ள இந்தப் பட்டம் என்று அவர்கள் சொன்னால், அதை நாம் பரிசீலனை செய்கிறோம். அவர்கள் சிலபசை வாங்கி வைத்துக்கொண்டு பரிசீலனை செய்கிறோம். பரிசீலனை செய்து தகுதி என்று சொன்னாலும்கூட, தரத்திலே தாழ்வு இருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. சில உண்மைகளை



மறைத்துப் பயன் இல்லை. வெளிப்படையாக, இந்தியா பூராவும் உள்ள பல்கலைக்கழகங்கள் ஒரேமாதிரிச் செயல்பட வேண்டுமென்று சொன்னாலும், பிற மாநிலங்களில் எப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகிறதோ அப்படித்தான் பல்கலைக்கழகங்களின் கல்வியின் தரமும் இருந்து வருகிறதென்பதை மறைத்துப் பயனில்லை. நம்மைக் காத்துக்கொள்ள இப்படிப்பட்ட தீர்மானம் தேவை. இந்தத் தீர்மானம் மருத்துவக் கல்லூரிகளை மட்டும் பொறுத்திருக்கிறது. அந்த வாய்ப்பு மற்ற துறைகளிலும், மற்ற முதுகலைக் கல்வியிலும் வர சட்டமியற்றுவதற்கு வேண்டிய நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது கல்வி மாநில அரசுகளிடமும், மத்திய அரசிடமும் இருக்கும் உரிமையை உடையதாக இருக்கிறது. முழுக்க முழுக்க மாநில அதிகாரத்தினுள் இல்லை; முழுக்க முழுக்க மத்திய அரசின் அதிகாரத்தினுள் இல்லை. இரண்டு அரசுக்கும் பொதுவானதாக 'கல்வி' இருக்கிறது. எனவே நாம் ஒரு தீர்மானத்தைப் போட்டு இப்படிப்பட்ட சட்டத்தை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசை வேண்டி, அவர்கள் ஒரு சட்டம் இயற்றி, அந்தச் சட்டத்திலே நமக்கு சில அதிகாரங்களை வழங்கிய பிறகுதான், இந்திய அரசியலமைப்புப்படி நாம் இந்தக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிமையைப் பெறுவோம். இந்த நிலையை மாற்றி, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கே சில அடிப்படையான திருத்தங்களைக் கொண்டுவந்து, கல்வியைப் பொறுத்தவரையில் அந்தந்த மாநிலங்களே முழு அளவுக்குச் சட்டம் இயற்றுவதற்கான உரிமையை அளிக்க அரசியல் சட்டம் வகை செய்து கொடுக்க வேண்டும். அதோடு அந்தந்த மாநிலங்களிலே இருக்கக்கூடிய பட்டதாரிகளுக்கு—முதுகலைப் பட்டதாரிகள், மருத்துவப் பட்டதாரிகள் போன்றவர்களுக்கு—முதல் இடம் கொடுக்க வாய்ப்புகளும், வசதிகளும் இருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வற்புறுத்த விரும்புகிறேன்.

மேலும் இத்தகைய மருத்துவக் கல்வி நிறுவனங்கள் நம்முடைய மாநிலத்தில் இல்லாதது நம்முடைய பெருமையைக் காட்டுகிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தவிர, வேலூரில்தான் தனியார் மருத்துவக் கல்லூரி இருக்கிறது. இப்படியே நினைத்த நேரம் எல்லாம் மருத்துவக் கல்லூரிகளைத் தோற்றுவிக்கின்ற நிலையை நாம் உருவாக்கவில்லை, நமது அரசு உருவாக்கவில்லை, இந்த மாநிலம் உருவாக்கவில்லை.

(பிற்பகல் 5.10)

ஆனால் மற்ற மாநிலங்களிலே நினைத்தால் ஒரு சிறு ஆஸ்பத்திரி இருந்தால்கூட, அவர்களுக்கு அரசினரோடு தொடர்பும் செல்வாக்கும் இருந்தால், அல்லது மத்திய அரசில் செல்வாக்கு இருந்தால், அது ஒரு மருத்துவக் கல்லூரியாக

மாறிவிடுகின்றது. அதேபோல் பல பல்கலைக்கழகங்கள் தோன்றிக்கொண்டே இருப்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. தமிழகத்திலே மூன்று பல்கலைக் கழகங்கள்தான் வைத்திருக்கின்றோம். ஆனால் இதைவிட சிறிய மாநிலங்களிலே 10, 15 பல்கலைக்கழகங்களை அரசியல் செல்வாக்குப் பெற்றவர்கள், மத்திய அரசோடு தொடர்புடையவர்கள், பாராளுமன்றத்தோடு தொடர்பு கொண்டவர்கள், பல்கலைக்கழக மான்யக் குழுவினரோடு தொடர்புடையவர்கள், பல்கலைக்கழகங்களைத் தோற்றுவித்துவிட்டு தரம் குறைந்த பட்டதாரிகளை உற்பத்தி செய்து நாடு முழுவதும் பரப்பிக்கொண்டிருக்கின்றார்கள். அதனுடைய விளைவாக கல்வியினுடைய தரமும் மற்றத் தரங்களும் குறைந்துவிடும் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியவனாக இருக்கின்றேன். இந்தத் தீர்மானம் மிகத் தேவையானது என்றும், மருத்துவப் பட்டங்களின் தரம் உயர்வதற்கும், தரம் உயர்ந்தவர்களை நியமிப்பதற்கும் உரிய விதிமுறைகளைச் செய்வதற்கு வழி வகைகள் காண வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* THIRU A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, I would first like to state that in bringing forward this Resolution, the Hon. Minister has done so with the best motivations and with the very sincere desire that institutions which charge capitation fees and recive tuition fees in advance and which are also sub-standard should not be allowed encouragement in any part of India and, therefore, he has accepted the suggestion of the Union Minister for Health that State Governments might send a resolution regarding this matter under Article 252 (1) of the Constitution so that All-India legislation could be brought forward. We are sending this Resolution with the sincere hope that the Government of India would prepare a model Bill in this regard. I have no doubt that the Government of India or Parliament is quite capable of producing a Bill for the entire country. But there are certain aspects of this Resolution to which I would like to refer.

First, while all of us accept in public, in the Houses of Legislature and when we address meetings of parents that the receipt of capitation fees or donation is a vicious practice, nonetheless, in private, we are realistic enough to confess that this has become a necessary accepted feature of life because with the current cost of living and the enormous expenditure incurred in running educational institutions, almost every college in our State, with a few notable exceptions, has been demanding and obtaining



capitation fees for admission of students to Graduate courses. In this regard, Sir I would like to place my viewpoint before this House. We must be honest enough to confess that these institutions have grown because of the incapacity of our Governments to provide adequate resources to start institutions of this kind. An hon. Member referred to the fact that such institutions are generally sub-standard and that the institutions that are maintained by the Government are well above the usual standard and that, therefore, we should discourage such institutions. I think the Hon. Member should disabuse this thought from his mind because the Manipal Medical College, in spite of the fact that it receives heavy capitation fees of almost Rs. 10,000 from students, is one of the finest Medical institutions in our country. (Hear, hear) The equipment that is available in the Medical College and Hospital is not available even in the Post-Graduate Institute of Medicine and Research, New Delhi. Therefore, Sir, such colleges which are honest enough to give you a receipt when you give a donation of Rs. 10,000 do not deserve to be discouraged, because a Medical College and a Hospital will today cost anywhere between 5 crores and 6 crores of rupees. I remember that only during the Budget debate, when I requested the Hon. the Minister for Health to inform us of the fate of the Post-Graduate Institute of Medicine and Research which was contemplated at Adyar, he mentioned that the Government of India had flatly refused to give the Government of Tamil Nadu An *ad hoc* grant of Rs. 2 crore which was required to start this Institute. May I ask what the Government expect the students who want to enter these Medical Institutions to do where the Government find it impossible to start a Medical College and where it is most essentially required? Do they expect the students to wait for a generation until more resources could be given by the Government of India so that the students might contemplate entering the Medical institutions at the age of 40 or 45? Although I am convinced that persons who receive donations from all and sundry without giving valid receipts are aiding a very dishonest practice, we must also accept the fact that not all private Medical Colleges in our country are dishonest and that many of them give valid receipts for the capitation fees. I, for my part, while I do not want this practice

to continue, when I can see no other alternative and when our Governments are incapable of starting Medical Colleges—when I say ' incapable ' I refer only to the lack of resources and not to the lack of any other ability on their part—feel that we should not fall foul on those persons who are running institutions like the Manipal Medical College or Rangaraya Medical College, Andhra Pradesh. Professor J.B.S. Haldane who died very recently in Bombay after becoming an Indian citizen died of cancer of the rectum. Six months before he died, he knew that he was going to die of cancer of the rectum. He was gracious enough to donate his body to the Rangaraya Medical College, Andhra Pradesh, which is a private Medical College and which is also functioning on the principles of Manipal Medical College. I shall not raise the Constitutional point and although I realise that the Government have come forward with the very genuine intention of seeing that a Bill is prepared for the whole country, may I, at the same time, point out that my hon. Friend Thiru Swaminathan raised a very valid point when he said that if we legislated in our State Legislature, we could always come forth with an amendment to that Bill, but that if we gave the rights to the Centre, not a single dot or a comma of that legislation could be altered by any of the State Legislatures? Therefore, while I do not oppose the introduction of this Resolution, I would, at the same time, like to point out that there are viewpoints which exist and we need not assume that all those institutions which are receiving donations are succumbing to corrupt practice or resorting to dishonest methods. In fact, I can inform the Hon. the Minister for Education that in five or six years' time, private educational institutions which are operating or running colleges will find it absolutely impossible to run them because they are living on grants received in the past and the amount of interest such amounts fetch is so low that these institutions cannot pay their teachers according to the continuous revision in scales of pay that the University Grants Commission has recommended from time to time. The private educational institutions require liberal help from the Governments and as my hon. Friend Thiru Vasantha Pai mentioned even in the Harvard Medical School which is one of the finest medical institutions in the United States, a Medical Graduate will have to spend somewhere between 40 to 50 thousand dollars, before



he can call himself a doctor. These institutions were not built out of the hundred rupees fees that we charge from the students and they are not built out of the eighty rupees grant that the Hon. the Minister for Education is pleased to announce for the Pre-University Class. In these matters, great and liberal help has been given by corporate concerns, by industries; and our Government—I refer more to the Central Government because this is a field where taxation and exemption from tax pay an important part—do not encourage the springs of charity in our country. We have limited private donations either to an autocratic limit of Rs. 2 lakhs for corporate concerns or 10 per cent of the total income in the case of individuals. Income-tax relief is not given if your donation to any charitable institution exceeds this amount. I would have been much happier if this Government had been able to influence the Central Government to give more liberal relief in the field of Corporate taxation for such of those concerns as give donations to such

(பிற்பகல் 5.20)

@ 33. Notifications issued with G.O. Ms. No. 331, Rural Development and Local Administration, dated the 14th February 1974 relating to the reservation of seats and re-division of wards for Scheduled Castes and women in the Dindigul Municipal Council of Madurai district with effect on and from the date of the next ordinary elections to the Dindigul Municipality. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

@ 34. Notifications issued with G.O. Ms. No. 333, Rural Development and Local Administration, dated the 14th February 1974 relating to the reservation of seats and division of wards for Scheduled Castes and women in the Melapalayam Municipal Council of Tirunelveli district with effect on and from the date of the next ordinary elections to the Melapalayam Municipality. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

@ 35. Notification issued with G.O. Ms. No. 335, Co-operation, dated the 18th September 1973 in regard to an amendment to rules 85-D, 85-I, 85-U and 85-EE of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

@ 36. Notification issued with G.O. Ms. No. 55, Agriculture, dated the 21st January 1974 relating to establishment of regulated markets at five places in Dharmapuri district for the purchase and sale of groundnut, tamarind, gingelly, sugarcane jaggery and cotton. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 37. Notification issued with G.O. Ms. No. 7232, Revenue, dated the 4th December 1973 in regard to setting up of check-post at Palladam, in Coimbatore district. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 38. Notification issued with G.O. Ms. No. 482, Rural Development and Local Administration, dated the 1st March 1974 in regard to amendments to the Tamil Nadu Municipal Councils

(Election of Chairman and Vice-Chairman) Rules, 1969. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

@ 39. Notification issued with G.O. Ms. No. 110, Agriculture, dated the 2nd February 1974 relating to establishment of regulated markets at Ambur, Solinger, Thandarampattu and Pernamallur in North Arcot district in respect of paddy, groundnut, gingelly and sugarcane jaggery. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 40. Notification issued with G.O. Ms. No. 81, Agriculture, dated the 25th January 1974 relating to establishment of regulated markets at Kaveripakkam and Takkolam to provide facilities for the purchase and sale of gingelly and sugarcane jaggery in all forms in North Arcot district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 41. Notification issued with G.O. Ms. No. 61, Agriculture, dated the 21st January 1974 relating to regulation of trade in cholam, cumbu, coconut, ragi and coriander in Tiruchirappalli district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 42. Notification issued with G.O. Ms. No. 399, Rural Development and Local Administration, dated the 22nd February 1974 relating to declaration of Coimbatore as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

@ 43. Notification issued with G.O. Ms. No. 406, Public (Services-A), dated the 14th February 1974 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Stores Assistant (Technical) in the College of Engineering, Guindy within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]



44. Notification issued with G.O. Ms. No. 936, Rural Development and Local Administration, dated the 5th April 1974 relating to declaration of Tiruchirappalli as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

45. Order issued with G.O. Rt. No. 575, Revenue, dated the 9th April 1974 exempting from liability to entertainments tax, show tax and additional surcharge, one cinematograph film show proposed to be held by the Director, Indian Institute of Technology, Madras, on 13th April 1974 at Open Air Theatre, Indian Institute of Technology Campus to raise funds for the general uplift and for provision of other amenities to the students of the Indian Institute of Technology. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

46. Notifications issued with G.O. Ms. No. 2719, Rural Development and Local Administration, dated the 5th December 1973 in regard to amendments to the Tamil Nadu Panchayat Union Councils Establishment Rules, 1964, in regard to an amendment to the Tamil Nadu Panchayat Union Services (Payment of Gratuity) Rules, 1965, in regard to an amendment to the Tamil Nadu Panchayat Union Establishment (Appointment and Punishment) Rules, 1965, in regard to an amendment to the Tamil Nadu Panchayat Establishment (Appointment and Punishment) Rules, 1965. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

47. Notification issued with G.O. Ms. No. 659, Rural Development and Local Administration, dated the 16th March 1974 relating to declaration of Mannargudi as Local Planning Area under section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

48. Notification issued with G.O. Ms. No. 656, Rural Development and Local Administration, dated the 16th March 1974 relating to declaration of Ranipet as Local Planning Area under section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

49. Notification issued with G.O. Ms. No. 1281, Revenue, dated the 23rd March 1974 in regard to an amendment to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1962. [Laid on the table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).]

50. Notification issued with G.O. Ms. No. 18, Co-operation, dated the 19th January 1974 making the Tamil Nadu Co-operative Apex Societies (Management and Conduct of Elections) Rules, 1974. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

51. Notifications issued with G.O. Ms. No. 97, Rural Development and Local Administration, dated the 18th January 1974 relating to the reservation of seats and division of wards for Scheduled Castes and women in the Tambaram Municipal Council of Chingleput district with effect on and from the date of the next ordinary elections to the Tambaram Municipality. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920.]

52. Notifications issued with G.O. Ms. No. 33, Rural Development and Local Administration, dated the 3rd January 1974 relating to the reservation of seats and division of wards for Scheduled Castes and women in the Kancheepuram Municipal Council of Chingleput district with effect on and from the date of the next ordinary elections to the Kancheepuram Municipality. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]



53. Notifications issued with G.O. Ms. No. 136, Rural Development and Local Administration, dated the 23rd January 1974 relating to the reservation of seats and division of wards for Scheduled Castes and women in the Kovilpatti Municipal Council of Tirunelveli district with effect on and from the date of the next ordinary elections to the Kovilpatti Municipality. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

54. Notifications issued with G.O. Ms. No. 2894, Agriculture, dated the 2nd November 1971 relating to the soil conservation of certain villages in the Madurai district under section 3 of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959. [Laid on the table of the House under section 44 (3) of the Tamil Nadu Land Improvements Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959).]

55. Notifications issued with G.O. Ms. No. 2559, Agriculture, dated the 18th September 1971 relating to the soil conservation of certain villages in the Madurai district under section 3 of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959. [Laid on the table of the House under section 44 (3) of the Tamil Nadu Land Improvements Schemes Act, 1959 (Tamil Nadu Act 37 of 1959).]

56. Notification issued with G.O. Ms. No. 629, Rural Development and Local Administration, dated the 16th March 1974 relating to declaration of Sirkali as Local Planning Area under section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

57. Notification issued with G.O. Ms. No. 625, Rural Development and Local Administration, dated the 16th March 1974 relating to declaration of Theni–Allinagaram as Local Planning Area under section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

58. Notification issued with G.O. Ms. No. 649, Rural Development and Local Administration, dated the 16th March 1974 relating to declaration of Karur as Local Planning Area under

section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972.]

59. Notification issued with G.O. Ms. No. 648, Rural Development and Local Administration, dated the 16th March 1974 relating to declaration of Pattukottai as Local Planning Area under section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

60. Notification issued with G.O. Ms. No. 60, Agriculture, dated the 21st January 1974 relating to declaration of notified market area for Ammapet market in respect of paddy. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

61. Notifications issued with G.O. Ms. No. 29, Agriculture, dated the 9th January 1974 in regard to an amendment to the late Food and Agriculture Department Notification II-1 No. 2305 of 1964, dated the 30th March 1964, published at pages 927-929 of Part II—Section 1 of the Tamil Nadu Government Gazette, dated the 27th May 1964 and amendment to the Agriculture Department Notification II-1 No. 3468 of 1968, dated the 14th June 1968, published at pages 1333 and 1334 of Part II—Section 1 of the Tamil Nadu Government Gazette, dated the 14th August 1968. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

62. Notification issued with G.O. Ms. No. 2273, Home, dated the 24th August 197? in regard to an amendment to rule 209 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]



63. Notification issued with G.O. Ms. No. 2405, Home, dated the 7th September 1973 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Act, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

64. Notification issued with G.O. Ms. No. 62, Excise and Prohibition, dated the 23rd March 1974 in regard to amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

65. Order issued with G.O. R. No. 444, Revenue, dated the 21st March 1974 exemption from liability to entertainments tax, show-tax and additional surcharge, the two cinematograph film shows proposed to be held by the Shastrinagar Welfare Association one each on 10th February and 10th March 1974 at Jayanthi Theatre, Tiruvanmiyur, Madras to raise funds for charitable purposes and social welfare activities of the Association. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

66. Notification issued with G.O. Ms. No. 630, Rural Development and Local Administration, dated the 16th March 1974 relating to declaration of Thiruvarur as Local Planning Area under section 10(4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

*B. Reports, Notifications and other Papers.*

*1. Errata to the notification issued with Memorandum No. 22298/ME/74-1, Rural Development and Local Administration, dated the 19th March 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/748 (n)/74, dated the 30th January 1974, published at pages 4 to 6 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 5th February 1974.

* 2. Errata to the notification issued with Memorandum No. 20007/ME/74-1, Rural Development and Local Administration, dated the 19th March 1974 in regard to the Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/283 (*aaf*)/74, dated the 18th January 1974, published at page 8 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974.

* 3. Errata to the notification issued with Memorandum No. 15512/ME/74-1, Rural Development and Local Administration, dated 19th March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration Department No. II (2)/RUL/748 (h)/74, dated the 30th January 1974 published at pages 7–8 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 2nd February 1974.

* 4. The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Third Amendment Ordinance, 1974 (Tamil Nadu Ordinance No. 2 of 1974).

* 5. The Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Second Amendment Ordinance, 1974 (Tamil Nadu Ordinance No. 3 of 1974).

& 6. "Tamil Nadu—An Economic Appraisal 1974" (Parts I and II) (English).

@ 7. Notification issued with G.O. Ms. No. 350, Revenue, dated the 25th January 1974, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the mortgage deed to be executed by the Tamil Nadu Housing Board in favour of the Housing and Urban Development Finance Corporation (Private), Limited, New Delhi.

@ 8. Notification issued with G.O. Ms. No. 7356, Revenue, dated the 13th December 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed executed by Dr. N. Sitaraman and his brothers in favour of the Roman Catholic Diocese of Kottar represented by Rt. Rev. T. R. Agniswami, Bishop of Kottar.



@ 9. Notification issued with G.O. Ms. No. 1867, Revenue, dated the 11th April 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed executed by Mrs. Rangammal Krishnamachari, widow of late Thiru V. T. Krishnamachari, in favour of Khadi Gramodyog Sangh, Madras.

@ 10. Errata to the Notifications issued with Memorandum No. 16056/ME/74-1, Rural Development and Local Administration, dated the 9th March 1974 to the schedule to the Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/283 (aaw)/74, dated the 19th January 1974, published at pages 6 to 8 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 21st January 1974.

@ 11. Errata to the Notification issued with Memorandum No. 17667/ME/74-1, Rural Development and Local Administration, dated the 16th March 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/100/74, dated the 3rd January 1974, published at pages 14–23 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

@ 12. Errata to the Notification issued with Memorandum No. 16540/ME/74-1, Rural Development and Local Administration, dated the 16th March 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II (2)/HO/523 (i)/74, dated 23rd January 1974, published at pages 10–12 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd January 1974.

@ 13. Errata to the Notification issued with Memorandum No. 26571/ME/74-1, Rural Development and Local Administration, dated the 9th March 1974 to the schedule to the Rural Development Department Notification No. II(2)/RUL/283(ar)/74, dated the 11th January 1974, published at pages 1–4 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 17th January 1974.

14. Booklet containing the recommendations made in the Tamil Nadu Livestock Development Committee Report, 1970 and the action taken by the Government thereon (English).

@ 15. Errata to the Notifications issued with Memorandum No. 15496/ME/74-1, Rural Development and Local Administration, dated the 5th March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/283(aan)/74, dated the 18th January 1974, published at pages 23–26 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974.

@ 16. Errata to the Notifications issued with Memorandum No. 12326/ME/74-1, Rural Development and Local Administration, dated the 4th March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration Department Notification I-1 No. 5773 (h) of 1973, dated the 30th November 1973, published in Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 3rd December, 1973.

@ 17. Errata to the Notifications issued with Memorandum No. 9080/ME/74-1, Rural Development and Local Administration, dated the 1st March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/100(z)/74, dated the 3rd January 1974, published at pages 45 to 48 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

@ 18. Errata to the Notification issued with Memorandum No. 26556/ME/74-1, Rural Development and Local Aministration, dated the 1st March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/283 (aac)/74, dated the 18th January 1974, published at pages 5 and 6 in Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974.

@ 19. Notification issued with G.O. Ms. No. 738, Revenue, dated the 20th February 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the reconveyance deeds to be executed conveying an extent of 2.30 acres of lands in R.S. Nos. 82-B and 82-2 of Annakudi Thirunageswaram village, Kumbakonam taluk, Thanjavur district.



20. Errata to the Notification issued with Memorandum No. 21370 ME/74-1, Rural Development and Local Administration, dated the 16th March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/100(f)/74, dated the 2nd January 1974, published at pages 9–11 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

21. Errata to the Notification issued with Memorandum No. 19126/ME/74-1, Rural Development and Local Administration, dated the 12th March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/283(aaa)/74, dated the 18th January 1974, published at pages 1 to 5 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974.

22. Errata to the Notification issued with Memorandum No. 34136/ME/74-1, Rural Development and Local Administration, dated the 13th March 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/1003(s)/74, dated the 14th February 1974, published at pages 31 to 33 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 16th February 1974.

23. Errata to the Notification issued with Memorandum No. 8398/ME/74-1, Rural Development and Local Administration, dated the 1st March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/100(d)/74, dated the 2nd January 1974 published at pages 5 to 9 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

24. Notification issued with G.O. Ms. No. 536, Industries, dated the 10th April 1974 in regard to amendments to the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) Order, 1973.

25. Errata to the Notifications issued with Memorandum No. 34137/ME/74-1, Rural Development and Local Administration, dated the 3rd April 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department No. II (2)/

RUL/1003/(m)/74, dated the 14th February 1974 published at pages 21 to 24 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 16th February 1974.

26. Errata to the Notification issued with Memorandum No. 40145/ME/74-1, Rural Development and Local Administration, dated the 9th April 1974 to the Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/877(m)/74, dated the 8th February 1974 and the schedule appended to the said notification published at pages 1 to 7 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 9th February 1974.

27. Notification issued with G.O. Ms. No. 2756, **Rural Development** and Local Administration, dated the 12th December 1973 in regard to an amendment to the Tamil Nadu Cottage Industries Construction and Establishment (Restrictions, Limitations and Conditions) **Rules, 1960.**

28. Notification issued with G.O. Ms. No. 2770, **Rural Development** and Local Administration, dated the 14th December 1973, in regard to an amendment to the Tamil Nadu Cottage **Industries** Construction and Establishment (Restrictions, **Limitations** and Conditions) Rules, **1960.**

29. Answers to Unstarred Question Nos. 1 to 5.

* Sent by post to all M.L.Cs. on 13th June 1974.

& Sent by post to all M.L.Cs. on 12th July 1974.

@ Sent by post to all M.L.Cs. on 18th July 1974.



இணைப்பு

[17 ஆம் பக்கத்தில் 6 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

| | | | சென்னை கோட்டம். | திருச்சிராப் பள்ளி கோட்டம் | மதுரை கோட்டம் | கோயம் புத்தூர் கோட்டம் | மொத் தம். |
|---|---|---|---|---|---|---|---|
| | (1) | | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | ரூ. 5 லட்சத்திற்கும் அதிகமாக மொத்த விற்பனை செய்ததாக தானே முன்வந்து கணக்குக் கொடுத்த வணிகர்களின் எண்ணிக்கை. | 1970–71 | 2,837 | 1,649 | 2,116 | 2,111 | 8,713 |
| | | 1971–72 | 2,961 | 1,826 | 2,274 | 2,286 | 9,374 |
| | | 1972–73 | 2,757 | 1,732 | 2,218 | 2,078 | 8,785 |
| 2 | ரூ. 5 லட்சத்திற்கும் அதிகமாக மொத்த விற்பனை செய்ததாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்ட வணிகர்களின் எண்ணிக்கை. | 1970–71 | 2,817 | 1,688 | 2,115 | 2,057 | 8,677 |
| | | 1971–72 | 2,914 | 1,842 | 2,251 | 2,235 | 9,242 |
| | | 1972–73 | 2,564 | 1,688 | 2,141 | 1,918 | 8,311 |

1972–73-ஆம் ஆண்டுக்கான வரி விதிப்பு முடிவாகாததால் பைசலாகாத வரி விதிப்பு இதில் சேர்க்கப்படவில்லை.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

---

**புதன்கிழமை, 1974 ஆகஸ்டு 14.**

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பக 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Proceedings of the Director of School Education*

* Q. 11. THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the proceedings of the Director of School Education, R.C. No. 133877/J4/67, dated 23rd November 1970 have caused considerable confusion on the question of seniority even among B.T. Assistants in Aided Schools, some of whom are migrants from a different school ;

(b) whether it is a fact also, that at the time of retrenchment and promotion, this has affected adversely the B.T. Assistants who have remained loyal to the same school throughout their service; and

(c) whether the Government will issue an order fixing seniority of teachers in Aided Secondary Schools similar to the one issued in the case of non-teaching staff (G.O. Ms. No. 2125, Education, dated 13th December 1971) to clear the confusion and to safeguard the interests of teachers who have given continued loyalty to the same school throughout their service?

**பள்ளிக் கல்வி இயக்குநரின் நடவடிக்கைக் குறிப்பு**

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிக் கல்வி இயக்குநரின் 23—11—1970 நாளிட்ட R.C. எண். 133877/J 4/67 நடவடிக்கைக் குறிப்பின் விளைவாக, வேறு பள்ளியிலிருந்து பணி மாற்றம் மூலம் வந்து சேர்ந்த சில ஆசிரியர்கள் உட்பட மானியம் பெறும் பள்ளிகளில் பணி புரியும் பட்டதாரி ஆசிரியர்களிடையேயுங் கூட பணி மூது நிலை குறித்து பெருமளவில் குழப்பம் ஏற்பட்டுள்ளது உண்மையா ?

(இ) மேற்சொன்ன நடவடிக்கைக் குறிப்பின் விளைவாக ஆட்குறைப்பு, பதவி உயர்வு காலத்தில் பணிக்காலம் முழுவதும் ஒரே பள்ளியில் தொடர்ந்து பணி புரிந்த ஆசிரியர் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளது உண்மையா ?

(உ) இக்குழப்பத்தைப் போக்குவதற்கும், பணிக்காலம் முழுவதும் ஒரே பள்ளியில் தொடர்ந்து பணி புரிந்த ஆசிரியர்களின் உரிமையைப் பாதுகாப்ப தற்கும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்காகப் பிறப்பிக்கப்பட்ட ஆணையைப் போல (கல்வித் துறையின் 13—12—1971 நாளிட்ட 2125 ஆம் எண் அரசு ஆணை) மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பணி முதுநிலையை நிர்ணயித்து அரசு ஆணை ஒன்றைப் பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 23—11—1970 நாளிட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் வெளியிடப்பட்ட அறிவுரைகள் வருகைப்பதிவேட்டில் ஆசிரியர்களின் பெயர்களை எழுதுவது குறித்ததாகும். அவை ஆசிரியர்களின் பணியினை முதுநிலைப் படுத்துவது பற்றியதல்ல.

(இ) தம் பணிக்காலம் முழுவதும் ஒரே பள்ளியில் பணிபுரிந்த பி.டி. ஆசிரியர்கள் மேற்குறித்த அறிவுரைகளினால் பாதிக்கப்படவில்லை.

(உ) மேற்குறித்த அறிவுரைகள் எவ்வித குழப்பத்தையும் உண்டாக்கிய தாகத் தகவலில்லை. எனவே குழப்பத்தைப் போக்க ஆணை வெளியிடும் பிரச் சினைக்கு இடமில்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, இது முது நிலையைப் பாதிக்காது என்று தனியாக ஒரு உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஒரு உதவி பெறும் பள்ளியிலிருந்து மற்றொரு உதவி பெறும் பள்ளிக்கு மாற்றப் படுவார்களேயானால், சம்பளத்திற்குத்தான் நாம் பாதுகாப்புத் தரலாமே தவிர, அவர்கள் முதுநிலைக்குப் பாதுகாப்புத் தரலாம் என்றால், அதனால் வேறு பல குழப்பங்கள் ஏற்படலாம். ஆகவே சம்பளத்தைப் பொறுத்துத்தான் ஆசிரியர்களானாலும் சரி, ஆசிரியர்கள் அல்லாத அலுவலர்களானாலும் சரி, முதுநிலைச் சம்பளப் பாதுகாப்பு தருவதற்குத்தான் இந்த உத்தரவு. ஆனால் இந்த முதுநிலையைப் பொறுத்த அளவிலே, அவர்களே விரும்பி கடைசியிலே இருக்கின்றோம் என்று ஏற்றுக்கொண்டுதான் போகிறார்கள். ஆகவே முதுநிலைக்குப் பாதுகாப்புத் தர இயலாது.





**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, ஒரு எய்டட் பள்ளியிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டு, கொஞ்ச காலம் கழித்து இன்னொரு எய்டட் பள்ளிக்குச் செல்லும்போது, அவர்களுக்கு பழைய சம்பள விகிதத்திலேயே பாதுகாப்பு அளிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. இதுபோல் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து அரசுத் துறைக்கோ அல்லது மற்றொரு ஒன்றியத்திற்கோ குடும்பக் காரணங்களால் ராஜிநாமா செய்துவிட்டு, மீண்டும் வந்து சேர்ந்தால் அவர்களுக்கு இந்த ஊதியப்பாதுகாப்பு தரப்படுவதில்லை. எய்டட் பள்ளிகளில் இருக்கக்கூடிய பாதுகாப்பைப் போலவே இவர்களுக்கும் பாதுகாப்பு தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. அதற்கு இடம் வகுத்தால், அதிலே என்னென்ன கோளாறுகள் வரும் என்பதை ஆராயவேண்டியவர்களாக இருக்கின்றோம். இல்லையென்றால், அவர்கள் அதை விட்டுவிட்டு அரசாங்கப் பள்ளிக்கே வந்து சேர்ந்துவிடுவார்கள். அப்படிப்பட்ட சங்கடங்கள் ஏதும் வராத சூழ்நிலை இருக்குமானால், அதைப்பற்றி ஆராயலாம். இப்போது என்ன நிலையிருக்கின்றது என்ற தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அது எந்த அளவிலே இருக்கின்றது என்பதைக் கண்டறிந்து சொல்லலாம்.

## *Scale of Pay of Middle School Headmasters*

* 12. Q. Thiru K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that a separate scale of pay is prescribed for the Headmasters of Middle Schools ; and

(*b*) if so, whether the total service of the teacher both as a Secondary Grade Teacher and as Headmaster will be taken into account for granting weightage and fixing the basic pay?

## நடுத்தரப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் சம்பள வீதம்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நடுத்தரப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்குத் தனியானதொரு சம்பள வீதம் வரையறுக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், கடந்த காலப் பணி அடிப்படையில் கூடுதல் ஊதிய உயர்வு அளிப்பதற்காகவும், அடிப்படைச் சம்பளத்தை வரையறுப்பதற்காகவும், இடைநிலைத்தர ஆசிரியராகவும் Secondary Grade Teacher தலைமை ஆசிரியராகவும் பணி புரிந்த ஆசிரியரின் பணிக்காலம் முழுவதும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசிலனையிலுள்ளது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, இதுபற்றி ஒரு உத்தரவு 1972 ஆம் ஆண்டிலேயே இடப்பட்டது. இரண்டு ஆண்டுகள் முடிந்தும் இன்னும் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. இப்போது மறு உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அது பற்றி விரைவிலே பரிசிலனை செய்து முடிவு எடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. அதிலே இன்னும் இரண்டு மூன்று விஷயங்களில் குழப்ப நிலைமை இருப்பதாகத் திரும்பவும் சொல்லியிருக்கின்றார்கள். அதைப்பற்றி விரைவிலே முடிவெடுக்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுடைய சம்பள விகிதம் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுடைய சம்பள விகிதமாகவே கடந்த காலத்தில் இருந்தது. அதுபோல ஸ்டேஷனரி அண்ட் பிரிண்டிங் டிபார்ட்மெண்டிலே ஒரே சம்பள விகிதத்தில் பணியாற்றியவர்கள் மீண்டும் இந்த இரண்டாவது ஊதியக் கமிஷன் சிபாரிசுப்படி வேறு பதவிகள் கொடுக்கப்பட்டு அமர்த்தப்பட்டார்கள். அங்கு ஒரே சம்பள விகிதத்தில், ஐடெண்டிகல் ஸ்கேல்ஸ் என்பார்களே, சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு பழைய ஊழியக்காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு வெயிட்டேஜ் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய கல்வித் துறையிலே, இந்த நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மட்டும் ஏற்கெனவே செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக ஒரே சம்பளத்தில் பணியாற்றிய காலம் எடுத்துக்கொள்ளப்படாமல் விடப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி ஒரு டிபார்ட்மெண்டில் சலுகை வழங்கிவிட்டு கல்வித் துறையில் மட்டும் வழங்காமல் இருப்பதற்கான காரணம் என்ன ? விரைவில் அவர்களுடைய ஊழியக் காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு வெயிட்டேஜ் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, புதிய தலைமையாசிரியர் சம்பள விகிதத்திலே மேலும் சில ஊதிய இடைகளைக் கொடுக்கத் தக்கவாறு ஊதிய நிர்ணயம் செய்ய, தக்கதொரு வழிமுறையை ஏற்படுத்தலாமா என்பதைப்பற்றித்தான் அரசு பரிசிலனை செய்துவருகின்றது. அப்பரிசிலனை விரைவிலே முடியும் என்று நான் கருதுகிறேன்.

*Representation from Government Nurses Association*

*13. Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (for behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government have received any representation from the Government Nurses' Association at Chingleput in January, 1973; and

(b) if so, the action proposed to be taken thereon?

**அரசுச் செவிலியர் சங்கத்திடமிருந்து முறையீடு.**

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கற்பட்டு, அரசுச் செவிலியர் சங்கத்திடமிருந்து, 1973 ஆம் ஆண்டு, ஜனவரி திங்களில், முறையீடு ஏதும் அரசுக்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** 1973 ஜனவரியில் ஒரு முறையிடும் வரவில்லை. ஆனால் 1972 அக்டோபரில் தமிழ்நாடு செவிலியர்கள் சங்கச் செயலாளரிடமிருந்து செங்கல்பட்டு (1) சமையல் மேற்பார்வை, சாப்பாடு பங்கிடுதல் முதலிய கூடுதல் பொறுப்புகளிலிருந்து செவிலியர்களை விடுவிக்க வேண்டுமென்றும், (2) வார்டுகளில் வேலையாய் உள்ள செவிலியர்கள் மூலம் விலையுயர்ந்த மருந்துகளைப் பங்கிடு செய்வதற்குப் பதிலாக மாற்று ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் ஒரு முறையிடு வந்தது.

தற்பொழுது செங்கற்பட்டு மருத்துவமனைக் கண்காணிப்பாளர், சமையலறை பொருள்காப்பகத்திற்கு ஒருவரும், உணவு பங்கீடு செய்ய ஒருவருமாக இரு செவிலியர்களை நியமித்துள்ளார். விலையுயர்ந்த மருந்துகளை விநியோகிக்க கண்காணிப்பாளர் ஒரு கூடுதல் மருந்தாளுனரும், லஸ்கரும் கேட்டுள்ளார். அதை மருத்துவக் கல்வி இயக்குனர் பரிசிலித்து வருகிறார்.

## Gastro-Enteritis

* 14. *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether a number of fatal cases due to Gastro-Enteritis have been reported around January 1974 from Thanjavur and Tiruchirappalli Districts ; and

(*b*) if so, the action taken thereon?

## வயிறு-குடல் சார்ந்த நோய்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் வயிறு-குடல் சார்ந்த நோயினால் பலர் இறந்துள்ளனர் என்று 1974 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் அளவில் தெரிவிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1974 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் வாக்கில் கடும் வயிற்றுப் போக்கால் பாதிக் கப்பட்ட இருபது பேர் இறந்தனர் என்பது பற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதே கால அளவில், தஞ்சாவூர் மாவட்டத்தில் வயிற்றுப்போக்கு கண் டிருந்தவர்கள் இறந்தது பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

(இ) கீழ்க்கண்ட நோய்த்தடுப்பு, கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன :—

(1) நோய் கண்டவர்கள் தனிப்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர்.

(2) குடிநீர்வாயில்கள் அனைத்திலும் குளோரின் மருந்து கலக்கப் பட்டது.

(3) நோயால் பாதிக்கப்படுவதற்கு உள்ளாகும் மக்களுக்குப் பெருமள வில் காலரா தடுப்பு ஊசி போடுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

(4) பொது துப்புரவு நிலை பாதுகாத்துப் பேணிவரப் பட்டது.

(5) ஈக்களைக் கொல்லும் மருந்து தெளித்து, அவற்றின் தொல்லை கட்டுப்படுத்தப்பட்டது.



THIRU D. SANTOSHAM : Sir, were the causes for this fatal attack of gastro-enteritis in Tiruchirappalli ascertained at any time?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தனியான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இப்படி அவ்வப்போது சிலருக்கு ஏற்பட்டு விடுகிறது என்றும், அது சில நேரத்தில் காலராவா என்ற சந்தேகத்தை ஏற் படுத்துகிறதாக இருக்கிறது என்றும் அறிவிக்கப்படுகிறது. அப்படி இரண்டு ஆண்டுகளாக அறிவிக்கப்படுவதில், அது காலரா அல்ல, வெறும் வயிற்றுப் போக்கு என்று தெரிவித்தார்கள். அதுதான் காரணம் என்று தெரிவித்தார்கள். தனிக் காரணம் எதுவும் இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், இது போன்ற நிலைமையில் இந்த நோய் அதிகப்பட்டிருக்கின்றதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வரையிலே எல்லாமே காலரா என்பது போல பொது வாகக் கணக்கிடப்பட்டது. அன்மைக் காலத்திலேதான் அது 'காஸ்ட்ரோ எண்டரிடிஸ்' என்ற ஒரு தனி வகையான நோய் என்று பிரிக்கப்படுகிறது. அது காலரா அல்ல என்று இந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் கணக்குக்கு வருகிறது. வருங்காலத்தில்தான் மாநில அளவிலே எந்த அளவு ஏறுகிறது, இறங்குகிறது என்பதுபற்றி கணிக்கப்படும்.

## Rise in the price of Caustic Soda

* 15 *Q.*—THIRU C. R. KOLAPPA : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government will do the needful to check the rise in the price of Caustic Soda which is very essential for washer-men; and

(*b*) whether the Government will take steps to make Caustic Soda available directly to the Associations of Washermen at cheap prices?

சலவை சோடா விலை உயர்வு.

**திரு. சி. ஆர். கோலப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சலவைத் தொழிலுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் சலவை சோடா அதிக விலைக்கு விற்கப்படுவதைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(இ) சலவைத் தொழிலாளர் நடத்தும் சங்கங்களுக்கு நேரடையாகக் குறைந்த விலைக்குக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சலவை சோடா விலையைக் கட்டுப்படுத்துவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. இதைத் தயாரிப்பதற்கு இம் மாநிலத்தில் தொழிற்சாலை எதுவும் இல்லை. ஆயினும் நியாயமான விலையில் சலவை சோடாவை வழங்க ஏற்பாடு செய்யுமாறு இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. சி. ஆர். கோலப்பா :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்குத் தேவையான சலவை சோடாவை வடநாட்டுத் தொழிற்சாலையிலிருந்து வரவழைத்து இங்குள்ள சலவையாளர்களுக்கு நியாய விலையில் கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை மூலம் எந்த அளவுக்கு நம்முடைய மாநில அரசுக்குக் கிடைக்க வேண்டுமோ அந்த அளவுக்குப் பெறும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. சட்டப்படி எடுத்து விநியோகிப்பதிலே முடியாத நிலை இருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : May I know whether this is caustic soda or washing soda, since the question is about caustic soda?

AN HON. MEMBER : It is only washing soda.

*Cement Factories in the Private, Joint and Public Sectors*

* 16 Q.—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of Cement Factories in the Private, Joint and Public Sectors in the State;

(b) the installed capacity of these factories as on 1st January 1973; and

(c) the actual production achieved in each factory during the calendar year 1973?



தனியார், கூட்டு, அரசுத் துறைகளின் கீழ் சிமிட்டித் தொழிற்சாலைகள்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இம்மாநிலத்தில் தனியார், கூட்டு, அரசுத் துறைகளின் கீழ் உள்ள சிமிட்டித் தொழிற்சாலைகள் எத்தனை ?

(இ) 1973 ஜனவரி 1 ஆம் நாளன்றுள்ளபடி இந்தத் தொழிற்சாலைகளின் நிறுவப்பட்ட திறன் எவ்வளவு ?

(உ) 1973 ஆம் ஆண்டில் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் செய்யப்பட்ட உற்பத்தி எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விவர அறிக்கை @ சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(பிற்பகல் 4-10)

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையையும், துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலையையும் விரிவுபடுத்துகிற உத்தேசம் அரசுக்கு உண்டா ? அப்படி விரிவுபடுத்துகிற எண்ணம் அரசுக்கு இருந்தால், அதனுடைய திட்ட மதிப்பீடு என்னவென்று தெரிந்துகொள்ளலாமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலை தனியார் துறையிலே இருக்கிறது. ஆலங்குளத்தில் இருப்பது அரசுத் தொழிற்சாலை. அதற்கு நாம் லைசென்ஸ் வாங்கி வைத்திருக்கிறோம். விரிவுபடுத்துகிற முயற்சி நடைபெற்று வருகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the fact that in most cases the production during 1973 has been less than 50 or 60 per cent of the installed capacity, may I know whether these cement factories have sought the help of the Government of Tamil Nadu in getting coal for these factories which, I think, is a severe deterrent to increasing production?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நிலக்கரி கிடைக்காத காரணத்தாலே, அடிக்கடி நமது சிமெண்ட் ஆலைகள் பாதிக்கப்படுவது உண்மை. அதைப்பற்றி அவர்கள் சொல்லும்போது, நாம் மத்திய அரசோடு தொடர்பு

---

@ 163–164 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

குடியிருப்பில் நிலம் கையகப்படுத்துவதற்கான செயற்குறிப்பை உயர்நீதி மன்றம் அனுப்பியுள்ளது. இச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எல். பலராமன் :** தலைவர் அவர்களே, வேலூர் கோட்டையில் உள்ள நீதிமன்றங்கள் மட்டும்தான் அப்புறப்படுத்தப்படுகின்றனவா அல்லது மற்ற அலுவலகங்களும் வேறு இடத்திற்கு மாற்றப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். அங்கேயுள்ள புதிதாகக் கட்டிய நீதிமன்றக் கட்டிடங்களை வேறு எந்தக் காரியத்திற்குப் பயன்படுத்துவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் அங்கேயுள்ள நீதிமன்றக் கட்டிடங்கள் பழுதடைந்துள்ளதால், நீதி மன்றங்களை வேறு இடத்திற்கு மாற்ற இருக்கிறது என்றார்கள். இப்போது பல நீதிமன்றங்கள் புதிய கட்டிடங்களில் நடந்துவருகின்றன. அவற்றை வேறு எதற்குப் பயன்படுத்தப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வேலூரில் வேறு நீதிமன்றங்கள் எங்கே கட்டப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, வேலூர் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டிடம் என்பதைப் பற்றித்தான் பரிசீலனை என்று சொன்னேன். கட்டியதற்குப் பின்னாலேதான் பழையதைப்பற்றி யோசிக்க வேண்டும்.

*Licensing of Canvassers for sale of Bus Tickets*

* 18. *Q.* THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether there is any system for licensing of canvassers for sale of tickets for travel by buses; and

(*b*) if so, the details thereof?

*பேருந்துப் பயண அனுமதிச் சீட்டுகளை விற்பனை செய்வோருக்கு அனுமதி.*

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பேருந்துகளில் பயணம் செய்வதற்கான பேருந்துப் பயண அனுமதிச் சீட்டுகளை விற்பனை செய்வோருக்கு அனுமதி வழங்கும் முறை ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) ஆம். தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளின்படி 49-ZZZ ஆவது விதியின் படி., வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றத்திடமிருந்து அல்லது அதன் செயலாளரிடமிருந்து உரிமம் ஒன்றைப் பெற்றிருந்தாலன்றி மற்றப்படி, பேருந்துப் பயணச் சீட்டுக்களை விற்பனை செய்யும் முகவராக அல்லது பயணம் செய்வதற்கு ஆள் சேர்ப்பவராக எவரும் செயல்படக்கூடாது ; அத்தகைய நபர் ஒருவரைப் பொதுப்பணி வண்டி உரிமையாளர் எவரும் முகவராக அல்லது பயணத்திற்கு ஆள் சேர்ப்பவராகச் செயல்பட நியமிக்கக் கூடாது. மூன்றாண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைப் பெறாமலும், தனிப்பட்டவரின் நேர்வில் 18-வயது முடிவடையாமலும் 8-வது வகுப்பு வரை படிக்காமலும் உள்ள எவருக்கும் அத்தகைய உரிமம் வழங்கப்படக்கூடாது. இந்த உரிமம் ஓராண்டுக்காலம் செல்திறனுடையதாகும். இது அவ்வப்போது புதுப்பிக்கப் படும்.

THIRU A. R. DAMODARAN : Sir, at present, the problem does not seem to be to have canvassers for sale of tickets in Madras City. I would like to know whether steps would be taken to collect fare from the numerous passengers who travel in foot-boards and hang on to the straps and whether there is any proposal to stop this terrible overcrowding in Madras City transport.

THE HON. THIRU S. RAMACHANDRAN : The hon. Member may put a separate question.

THIRU A. R. DAMODARAN : Sir, I am sorry. The supplementary is directly related to the question that has been put and the Hon. Chairman has also been pleased to allow the supplementary. May I know, Sir, whether the information is not available or whether my question was not relevant to the original question ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, this question relats to ticket-canvassing. The hon. Member Thiru Damodaran wants to know about overcrowding in the City buses. So, in order to give him more information to satisfy him, I requested the Chair for notice.

கொண்டு போதுமான அளவு வழங்க முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். நிலக்கரிக் கொள்கையைப்பற்றி இரண்டுவிதமாகச் சொல்லப்படுகிறது. நிலக்கரிச் சுரங்க இலாகாவைக் கேட்டால், சுரங்கத்திலே நிலக்கரி இருக்கிறது, ரெயில்வே வேகன் இல்லை என்கிறார்கள். ரெயில்வே வேகன்களைப்பற்றி ரெயில்வே இலாகாவிலே கேட்டால், எங்களிடத்திலே வேகன்கள் இருக்கின்றன, நிலக்கரி இருக்கிறதா என்று தெரியாது என்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு இலாகாக்களும் ஒரு 'கோவார்டினேடட் ஆக்ஷன்' எடுத்து நிலக்கரிப் பற்றுக் குறையைப் போக்க வேண்டும் என்று இந்திய அரசைக் கேட்டுக்கொண்டு வருகிறோம்.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know from the Government whether, in view of the fact that the supply of coal may take some time because arious Central Ministries are involved, until such time, those cement factories will be supplied either with furnace oil or with suitable petroleum oil so that the production of the very essential commodity of cement will not suffer?

THE HON. THIRU S. MADHAVAN: Unfortunately, Sir, that commodity also should be supplied by the Government of India. It costs more foreign exchange and so, the Central Government will not permit that.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிமெண்ட் முழுதும் தமிழ் நாட்டினுடைய தேவைக்குப் பயன் படுத்தப்படுகிறதா அல்லது எந்த அளவுக்கு இந்த மாநிலம் தவிர, மற்ற மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று மத்திய அரசின் கொள்கை ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, சிமெண்ட் தொழிற் சாலைகள் நமக்குச் சொந்தம். அதிலே போடப்படுகிற சுண்ணாம்புக் கற்கள்—ரா மெட்டீரியல்ஸ்—நமக்குச் சொந்தம். உற்பத்தி செய்கிற வரைக்கும் நமக்கு உரிமை இருக்கிறது. உற்பத்தியை எடுத்து அரசுத் தேவைக்கே பயன்படுத்துகிற உரிமை நமக்கு இல்லை. எப்படி உபயோகிக்க வேண்டும் என்று ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அவர்கள் உத்தரவு போடுகிறார்கள். மொத்தமாகக்கூட அல்ல. ஒரு டிபார்ட்மெண்டுக்கு வேண்டுமென்றால், மூன்று மாதத்திற்கு ஒரு முறை அவர்கள் 'அல்லாட்' செய்கிறார்கள். நமது உற்பத்தி ஆண்டுதோறும் 28 லட்சம் டன். நமது மாநிலத் தேவை 12½ லட்சம் டன். நமது தேவையைப் போல் இரண்டு மடங்கிற்கு மேல் உற்பத்தி செய்கிறோம்.



THIRU D. SANTOSHAM: Sir, last year we supplied cement to the neighbouring States to get electric power in exchange. Is the same system continuing this year also?

THE HON. THIRU S. MADHAVAN: Whenever power shortage occurs, we always negotiate with the adjacent State Governments and exchange some other material for power.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டில் சிமெண்ட் உற்பத்தி எவ்வளவு டன்? நம் மாநிலத்திற்கு அளிக்கப்பட்டது எத்தனை டன்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டு, 22,82,639 டன் உற்பத்தி. எவ்வளவு நமக்குத் தந்தார்கள் என்ற விவரம் இல்லை.

THIRU S. NARAYANASWAMI: Is the Hon. Minister aware that during the last three weeks, there is very considerable improvement in the supply of coal to cement factories as a result of quicker and more rational wagon movement and that the Government of India object to the use of furnace oil in cement factories, firstly because the subsidy is very heavy and secondly because there is short supply of furnace oil?

THE HON. THIRU S. MADHAVAN: I am glad the industrialist appreciates the steps taken by the Government of India; but the result is cement is not coming.

*Court at Vellore Fort*

* 17. Q. THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government propose to shift the Court in the Fort, Vellore, North Arcot District to some other place?

**வேலூர் கோட்டையில் இருக்கும் நீதி மன்றம்.**

**திரு. எல். பலராமன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

வட ஆற்காடு மாவட்டம், வேலூர் கோட்டையில் இருக்கும் நீதி மன்றத்தை வேறு இடத்திற்கு மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆம். வேலூர் கோட்டைப் பகுதியிலுள்ள நீதிமன்றக் கட்டிடங்கள் எவ்வித வசதியுமற்றவை, தரங் குறைந்தவை. அவை இடித்துத் தள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளன. நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கு வேலூரில் சத்துவாச்சேரி வீட்டுவசதிக்

### *Dearth of Tyres*

* 19. *Q.* THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) the number of buses that have not been operated in the routes of State Transport Department in 1973 due to dearth of tyres;

(*b*) the action taken by the Government to purchase tyres; and

(*c*) whether there is any proposal to start a tyre industry in Public Sector to remove scarcity of tyres?

**டயர்கள் போதாமை.**

*திரு. எம். சங்கரலிங்கம்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1973-ஆம் ஆண்டில் டயர் ( Tyre ) இல்லாததன் காரணமாக, அரசுப் போக்குவரத்துத் துறையைச் சார்ந்த வழித் தடங்களில் ஓடாமலிருந்த பேருந்துகள் எத்தனை?

(இ) அவற்றைப் பெறுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) மேற்படி நெருக்கடியை நீக்கும் பொருட்டு, அரசுத் துறையில் டயர் செய்யும் தொழிற்சாலையை உருவாக்கும் செயற்குறிப்பு ஏதும் உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) 518 பேருந்துகள்.

(இ) அரசு அளவில் கலந்து பேசிய பின்னர், டயர் தயாரிப்பாளர்கள் அரசுப் போக்குவரத்துத் துறைக்கு போதுமான அளவு டயர்களை வழங்கினர். அதற்கென அவர்களுக்கு கூடுதலாக மின்சக்தி ஒதுக்கப்பட்டது.

(உ) இல்லை.

*திரு. எம். சங்கரலிங்கம்:* மாண்புமிகு தலைவர் அவர்களே, 500-க்கு மேற்பட்ட பேருந்துகள் டயர் இல்லாமல் நிறுத்தப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறபோது, டயர் தொழிற்சாலை ஒன்றை அரசே 'பப்ளிக் செக்டாரில்' ஏற்படுத்துவதற்கு திட்டம் வகுத்திருக்கின்றதா? அதனுடைய தேவையை உணர்ந்து ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் உற்பத்தி ஆகிறதே, அங்கே ஒரு தொழிற்சாலை வைக்க செயற்குறிப்பு உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இதில் எழவில்லை.





### *Cancelling of certain trips in Bus Routes*

* 20. *Q.* THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether it is a fact that certain trips in the State Transport and the various Transport Corporation-owned routes are being cancelled without any prior notice; and

(*b*) if so, the reason therefor and the steps taken by the Government to prevent this?

**வழித்தடங்களில் சில முறை, பேருந்துகள் ரத்து செய்தல்.**

*திரு. கே. எஸ் கணபதி:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அரசுப் போக்குவரத்துத் துறைக்கும், பல்வேறு போக்குவரத்துக் கழகங்களுக்கும் சொந்தமாகவுள்ள வழித் தடங்களில் சில முறை, பேருந்துகள் செல்வது முன்னறிவிப்பு ஏதுமின்றி ரத்து செய்யப்பட்டு வருகின்றது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை? இதனைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ... வரத்துத் துறை, போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றின் வழித்தடங்களில் பேருந்துகளின் பயணத் தடவைகள் சாதாரணமாக முன்னறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படுவதில்லை. சில சமயங்களில், பேருந்து பழுதடைதல், விபத்துக்கள், வேலை நிறுத்தங்கள், இடையூறுகள் போன்றவகையில் பேருந்து ஓடுவதற்கு இடைஞ்சல் ஏற்படுதல், தவிர்க்க முடியாத பிற காரணங்கள் ஆகியவற்றால் பயணத் தடவைகள் ரத்து செய்யப்படுகின்றன அல்லது வழித்தடம் மாற்றி விடப்படுகின்றன. அவ்வாறு ரத்து செய்யப்படுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னலைக் குறைக்க பேருந்துகளை விரைவில் பழுது பார்ப்பதன் மூலமும், கலவரப் பகுதிகளுக்கு அப்பால் பேருந்துகளை வழித்தடம் மாற்றி விடுவதன் மூலமும் அரசுப் போக்குவரத்துத் துறையும் போக்குவரத்துக் கழகங்களும் இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகின்றன.

(பிற்பகல் 4-20)

*திரு. கே. எஸ். கணபதி:* தனியார் பஸ் ஆபரேடர்கள் விண்ணப்பிக்கும் போது அவர்களிடம் ஸ்பேர் பஸ்கள் இருக்கின்றனவா என்று கேட்டுத் தெரிந்து கொண்ட பின்னரே அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. அப்படிப்பட்ட நிலைமைகள் போக்குவரத்துக் கழகத்திற்கு உண்டா, அரசு பஸ்களுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :* தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே ஸ்பேர் பஸ்கள் கூடுதலாக இருக்கின்றன என்பதுதான் இருக்கும் குறை.

*திரு. கே. எஸ். கணபதி :* தலைவரவர்களே, அப்படிப் போக்குவரத்துக் கழகங்களிலே ஸ்பேர் பஸ்கள் கூடுதலாக இருந்தால், ஸ்பேர் பஸ்கள் இல்லை என்று வழித்தடங்கள் ரத்து செய்யப்படும் நிலையில், அப்படி ரத்து செய்யாமலிருக்க உடனுக்குடன் அவற்றை அனுப்புவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :* தலைவரவர்களே, இந்தக் கேள்வி பொதுவானதொரு கேள்வி. எங்கெங்கே அப்படித் தடங்கள் ரத்து செய்யப்பட்டன என்று சொல்லப்பட்டிருந்தால், அதற்கான காரணங்களைக் கூற முடியும்.

THIRU G. VASANTHA PAI : Sir, the Hon. Minister, after the question I had put earlier, had restored route No. 31-A. I would only like to bring to the notice of the Hon. Minister that the frequency of this bus route has not been similarly restored. May I request an answer whether it will be restored to its original frequency?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the bus route has already been restored. In respect of the trips, based on the passenger statistics, necessary steps will be taken.

*திரு. செ. முத்துசாமி :* தலைவரவர்களே, பயணம் செய்து கொண்டிருக்கும் போதே சில நேரங்களிலே அரசுப் பேருந்துகள் வழியில் நின்று விடுகின்றன. என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்தே இதைச் சொல்லுகின்றேன். ஏதோ பழுதேற்பட்டு விடுகின்றது. சிறு பழுதுதான் என்று அதை நிவர்த்திக்கலாம் என்றால், வண்டியில் ஒரு ஸ்பேனர்கூட இல்லை. அதற்காக பக்கத்து ஊருக்குச் சென்று அதை நிவர்த்திக்க வேண்டியிருக்கிறது. ஒரு பஸ்ஸில் ஒரு லட்சம் ரூபாயை ‘இன்வெஸ்டு’ செய்கிறோம். ஆனால் ஒரு ஸ்பேனர் ஸெட் கிடையாது. எனவே ஒவ்வொரு வண்டிக்கும் ஒரு ஸ்பேனர் ஸெட்டைக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :* தலைவரவர்களே, பொதுவாக நீண்ட தூரப் பேருந்துகளிலே ‘டூல்ஸ் கிட்’ என்று சொல்லப்படும் அந்த உபகரணங்கள் கட்டாயமாக வைக்கப்பட வேண்டும் என்று அரசு உத்திரவிட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்றபடி குறை ஏற்பட்டால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. 1974-75 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையை வெளியிடுதல்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* மேலவைத் தலைவர் அவர்களே, 1974-75-ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்கின்றேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 6.06 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 3.47 கோடி ரூபாய், வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகை, மூலதன கடன் கணக்குகளிலும் சேரும்.

2. இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப்பணிகள், வேலைத் திட்டங்கள் குறித்துச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

3. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக மாவட்ட நல அதிகாரிகள் இரு துறைகளுக்கும் ஒருவராக இருந்ததை மாற்றி, ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி மாவட்ட நல அதிகாரிகளை நியமித்தமைக்கு இத்துணை மதிப்பீட்டில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

4. படிப்பு உதவித் தொகை வழங்க வரையறுக்கப்பட்டுள்ள பெற்றோர் வருமான மேல்வரம்பு, தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்த வரையில், 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பிற்படுத்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்த வரையில், 2,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வீட்டு வசதிக்கெனப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக 100 தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகள் கட்டுவதற்கு முடிவெடுக்கப்

பட்டுள்ளது. அஃதன்னியில் 50 பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளும் கட்டப்படும். இதற்கென 25 லட்ச ரூபாய் கடன் வழங்கத் துணை மதிப்பீட்டில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

5. கிராமப்புற குடிநீர் வழங்கு திட்டங்களுக்குத் தற்போது வகை செய்யப்பட்டுள்ள 1.77 கோடி ரூபாயுடன் மேலும் ஒரு கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்படுகிறது. செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருச்சி, சேலம், தர்மபுரி, கோவை மாவட்டங்களில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த மொத்தம் 27 லட்சம் ரூபாய் அளவுக்கு செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகருக்கான குடி தண்ணீர் நிலையைச் சமாளிக்கும் வகையில் மாநகராட்சிக்கு மானியமாகவும், கடனாகவும் 32.25 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

6. ஆயிரத்து ஐநூறுக்குக் குறையாத மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைப்பது என்ற அடிப்படையில் நடந்து வருகிற சிறப்புத் திட்டத்தை உறுப்பினர்கள் அறிவார்கள். இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கென 6.6 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 1,500-க்கு குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் அமைப்பது என்று 12 கோடி ரூபாய்ச் செலவில் சிறப்புத் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

7. போக்குவரத்து வளர்ச்சி நிதி உதவிக் கழகம் ஒன்றை நிறுவிடவும், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு கூடுதல் மூலதனம் அளிக்கவும் சென்னை மாநகரில் விரைவுப் பேருந்து நிலையமொன்றை அமைக்கவும் இத் துணை மதிப்பீட்டில் 71.50 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. மொத்தம் 1.52 கோடி ரூபாய் செலவில், மேலும் 12 புதிய சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இப் புதிய திட்டங்களுக்கான செலவு, அவை ஏற்கனவே அனுமதித்துள்ள மானியத்தில் அடங்கும். அவையின் ஒப்புதலைப் பெற இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

9. புதிதாக நிறுவ இருக்கும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்காக 30 லட்ச ரூபாய் பங்கு மூலதனம் வழங்குவதற்கான நிதி ஒதுக்கமும் இதில் அடங்குகிறது.

10. ஏற்கனவே ஒப்பளிப்பு வழங்கியது உட்பட, இருபத்தாறு நியாயவிலைக்கும் படை நிலையங்களை நடப்பு ஆண்டில் அமைப்பதென முடிவு எடுத்துள்ளோம். அதில் ஒரு கட்டத்திற்காகும் செலவுக்காக துணை மதிப்பீட்டில் 7.22 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



63137
சென்னை-600 008

11. 1937-ஆம் ஆண்டிலிருந்து இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்களுக்கும், கன்னியாகுமரி, திருத்தணி பகுதிகளைத் தமிழ் மாநிலத்துடன் இணைப்பதற்கான போராட்டங்களில் கலந்து கொண்டவர்களுக்கும் குடும்ப நிதி உதவி, மாதாந்திர மானியத் தொகை அளிப்பதென அரசு அறிவித்ததற்கு ஏற்ப, 3.57 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. மேற்கூறிய பல்வேறு நிதி ஒதுக்கங்கள் மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளிலும், நல் வாழ்வுத் திட்டங்களிலும் அரசு கொண்டுள்ள ஆர்வத்தைத் தெளிவு படுத்துவனவாகும். 1973--74-ல் 129 கோடி ரூபாய் அளவுள்ள திட்டமொன்றை நிறைவேற்றினோம். அஃதன்னியில் திட்டத்தில் சேராத வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டிருக்கிறோம். 1974-75-ஆம் ஆண்டுக்கு, மத்திய திட்டக் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்ட அளவு 112 கோடி ரூபாயாக இருப்பினும், 151 கோடி ரூபாய்க்கான திட்டத்தை நிறைவேற்ற உறுதி கொண்டுள்ளோம். திட்டத்தில் சேராத வளர்ச்சிப் பணிகள் பலவற்றையும், சிறப்புப் பணிகளையும் தீவிரமாகச் செய்து முடிக்க முனைந்துள்ளோம். இவ்வாறு திட்டப் பணிகளையும், மற்ற பணிகளையும் செய்து முடிப்பதற்கு உதவும் வகையில், இந்தத் துணை மதிப்பீடுகளை இந்த அவை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

V211,32 N74
N74-12551

13. இந்தத் துணை மதிப்பீடுகளையன்னியில் வேறு சில விவரங்களையும் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக எடுக்கப்பட்டுள்ள முடிவுகளையும் அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மதுவிலக்கை நடை முறைப்படுத்தி வந்த நமது மாநிலத்திற்கு அதனால் ஏற்பட்ட இழப்பை ஓரளவுக்காவது ஈடுகட்ட மத்திய அரசு முன்வராததாலும், மது விலக்குக் கொள்கையை அகில இந்திய அளவில் நடை முறைப்படுத்தாததால் ஏற்பட்ட இன்னல்களுக்கு நமது மாநிலம் ஆளாக வேண்டியிருந்ததாலும், இடைக்கால நிதி நிலையைச் சமாளிக்க மிகுந்த மனவேதனையுடன் மது விலக்கை 1971-ஆம் ஆண்டு ஒத்திவைக்க நேர்ந்தது. அண்ணல் காந்தி நெறி நின்று, அண்ணா வழியில் அரசோச்சும் நமக்கு மது விலக்கு ஒத்திவைப்பின் நியாயவாதங்களுக்கு இடையே ஏதோ ஒரு முள் நெஞ்சில் உறுத்திக் கொண்டே இருந்தது. இதனை மதுவிலக்கை ஒத்தி வைத்த போதே சட்டப் பேரவையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஒத்திவைப்பது என்பதே, மீண்டும் நடைமுறைக்கு வரும் என்பதற்கான அறிகுறிதான் என்று அப்போதே நான் கூறியதற்கு இணங்க, அறிஞர் அண்ணா பிறந்த திங்களான செப்டம்பர் திங்கள் முதல் நாளில் இருந்து, மீண்டும் தமிழகத்தில் முழுமையான மது விலக்கு நடைமுறைப் படுத்தப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதற் கட்டமாக கள்ளுக்கடைகளை

மூடியும், இரண்டாவதும் இறுதியுமான கட்டமாக முழு மதுவிலக்கைக் கொண்டு வந்தும், நாம் எடுத்துள்ள இந்த முடிவின் காரணமாக ஆண்டுக்கு 56 கோடி ரூபாய் இழப்பை அரசு ஏற்க வேண்டியுள்ளது.

14. மதுவிலக்கை அமுல்படுத்தும் முடிவுடன், மற்றொரு மகிழ்ச்சிகரமான செய்தியையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் செய்தி பல ஏழை நடுத்தர குடும்பங்களுக்கு செந்தேனுக இனிக்கும் என்பதை நானறிவேன். நீண்ட நெடு நாட்களாக நல்லோர் பலரின் முறையீடாக இருந்து வருவதும், ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டதுமான குதிரைப் பந்தயத்தை அறவே ஒழிப்பதென்று இந்த அரசு முடிவு செய்கிறது. இந்த முடிவு 1974 நவம்பர் முதல் நாளில் இருந்து நடைமுறைக்கு வரும். இதனுல் ஆண்டுக்கு இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படும்.

15. இது போன்ற சமூக நலக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் இழப்புகளைச் சரிக்கட்டவும், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், தொய்வு விழாமல் தொடர்ந்து நடைபெறவும், நிதி ஆதாரத்தைச் செம்மையாக வைத்திருக்க வரிகளை விதிக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பணவீக்கம் மிகுந்துள்ள இந்நாளில், விதிக்கின்ற வரிகள், அடிப்படை அத்யாவசியப் பொருள்களின் விலையை மேலும் உயர்த்தாமல் பார்த்துக் கொள்வது முக்கியமானதாகும். அந்த அடிப்படையில் நாம் செயல் படுத்த இருக்கும் நிதி திரட்டும் முறைகள் அமையும். இதன் வாயிலாக முழு ஆண்டில் ஏறத்தாழ 14 கோடி ரூபாய் வருவாய் கிட்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

16. இப்போதுள்ள பலமுனை விற்பனை வரி விகிதத்தை 3.5 சத வீதத் திலிருந்து 4.0 சத வீதமாக உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களான, ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்கள் இந்த விகிதத்தில்தான் இப்போது வரி விதிக்கின்றன. இதற்கேற்ப ஒரு முனை வரியின் கீழ் ஏழு சதவீதமாக விதிக்கப்படும் வரிகளுக்குரிய பொருள்களுக்கு மட்டும் இனிமேல் 8 சத வீத வரியாக விதிக்கப்படும். இத்துடன், கரும்பின் மீதான கொள்முதல் வரி தற்போது 7 சதவீதம் என்று இருப்பது 12 சதவீதமாக உயர்த்தப்படும்.

17. சென்ற நிதிநிலை அறிக்கையில் பல முனை வரிகள் பலவற்றை ஒருமுனை வரியாக மாற்றியமைத்தபோதும், ஏற்கனவே இருந்த ஒரு முனை வரிகளை சற்று அதிகப்படுத்தியபோதும் ஏழை மக்கள் பயன்படுத்தும் பொருள்களுக்கு



வரிகளைக் கூடுதலாக்கவில்லை. அதே கொளகை இப்பொழுதும் கடைபிடிக்கப் பட்டுள்ளது. பொதுவாக குறைந்தபட்ச ஒரு முனை வரி வீதம், பல முனை விற்பனை வரிவீதத்தைவிடக் குறைவாக இருக்கக் கூடாது. எனினும், விவசாயிகள், நடுத்தர மக்கள் ஆகியவர்களைப் பாதிக்காத வண்ணம் உரம், பூச்சி மருந்துகள், எண்ணை வகைகள், பருப்பு போன்றவைகளுக்கு 3½ சத வீதம் அல்லது அதற்குக் குறைவாகவேதான் ஒரு முனை விற்பனை வரி விகிதம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை மாற்றியமைக்காமல் தொடர்ந்து சலுகை வீதங்களிலேயே வரி விதிப்பை வைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

18. மோட்டார் வாகன எண்ணெய் மீது தமிழக அரசு விதித்து வரும் விற்பனை வரி, அண்டை மாநிலங்கள் விதிக்கும் விகிதத்தைவிடக் கணிசமான அளவுக்குக் குறைவானதாகும். இதர மாநிலங்களான கேரளத்தில் ஒரு கிலோ லிட்டருக்கு 420 ரூபாயாகவும், ஆந்திரத்தில் 365 ரூபாயாகவும், கர்நாடகத்தில் 352 ரூபாயாகவும், மகாராஷ்டிரத்தில் 308 ரூபாயாகவும் இருக்கும்போது நமது மாநிலத்தில் ஒரு கிலோ லிட்டர் பெட்ரோலுக்கு 150 ரூபாய் என விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே வசதியான நிலையில் உள்ளவர்கள் பயன்படுத்தும் பெட்ரோல் மீதான விற்பனை வரியை கிலோ லிட்டருக்கு 150 ரூபாயிலிருந்து 210 ரூபாயாக உயர்த்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பிறகும் நமது மாநிலத்தில் விதிக்கப்படும் வரி மற்ற மாநிலங்களைவிடக் குறைவானதாகவே இருக்கும். இத்துடன் டீசல் எண்ணெய் மீதான விற்பனை வரியும் லிட்டருக்கு 2 காசுகள் உயர்த்தப்படும். இதன் மூலம் பெட்ரோல், டீசல் இவற்றின் விலைகளில் உள்ள வேறுபாடு அதிகரிப்பது கட்டுக்குள் இருக்கும்.

19. திரைப்படக் காட்சி வரியை கீழ்க்கண்டவாறு உயர்த்துவது என முடிவு செய்துள்ளோம் :—

| நிரந்தர, ஓரளவு நிரந்தரத் திரையரங்குகள். (Permanent, Semi Permanent Theatress) | காட்சி ஒன்றிற்கான வரி. |
|---|---|
| சென்னை— | ரூபாய் |
| குளுமைப்படுத்தப்பட்ட திரையரங்குகள். .. .. | 150 |
| மற்றவை .. .. .. .. .. | 100 |

| | காட்சி ஒன்றிற்கான வரி. ரூபாய் |
|---|---|
| நிரந்தர, ஓரளவு நிரந்தரத் திரையரங்குகள் (Permanent, Semi Permanent Theatres) | |
| பெரிய நகரங்களான— | |
| மதுரை, கோவை, திருச்சி, சேலம். | |
| குளுமைப்படுத்தப்பட்ட திரையரங்குகள். | 100 |
| மற்றவை .. .. .. .. .. | 75 |
| மற்ற நகராட்சிகள்— | |
| குளுமைப்படுத்தப்பட்ட திரையரங்குகள். | 75 |
| மற்றவை .. .. .. .. .. | 50 |
| மற்ற இடங்கள்— | |
| குளுமைப்படுத்தப்பட்ட திரையரங்குகள். | 50 |
| மற்றவை .. .. .. .. .. | 40 |
| தற்காலிக திரையரங்குகள் (Touring Theatres) | |
| நகராட்சிகளில் .. .. .. .. .. | 40 |
| மற்ற இடங்களில் .. .. .. .. .. | 25 |

உள்ளாட்சி அமைப்புகள், காட்சி வரி மீது விதித்து வந்த மேல் வரி நீக்கப் படுகின்றது. 1973—74-ல் இந்த மேல் வரி மூலம் பெற்ற தொகைக்கு தகுந்த இழப்பீடு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும். மேற் கூறிய வரி விதிப்பு செயற்குறிப்புகள் நாளை முதல் அமுலுக்கு வரும்.

20. மோட்டார் வாகன வரி விகிதங்களையும் அவற்றின் மீதான மேல் வரி விகிதங்களையும் சேர்த்துச் சீரமைப்பதெனத் தீர்மானித்துள்ளோம். இதன்படி மேல் வரி உள்ளிட்ட காலாண்டு வரி விகிதம் ஒவ்வொன்றும் அதற்கு மேலாக அடுத்துள்ள பத்து ரூபாய்க்கு முழுமையாக்கப்படும். இது வரி வசூலுக்கும் கணக்கு முறைக்கும் எளிதாக அமையும். மேல் வரி என்று தனியாகக் கணக்கு வைப்பது விட்டுவிடப்பட்டாலும், கிராமப்புறச் சாலை நிதிக்கு (Rural Road Development Fund) மொத்த வரி வசூலிலிருந்து தகுந்த ஒதுக்கீடு செய்யப் படும். இது அடுத்து வருகின்ற காலாண்டிலிருந்து (1974-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ஆம் நாள் முதல்) செயல்படுத்தப்படும்.



21. குடியின் தீமையையும் குதிரைப் பந்தய தீமையையும் ஒழிக்கும் அதே நேரத்தில் இதனால் ஏற்படும் இழப்பையும் ஈடுகட்டி, மக்கள் நல் வாழ்வுக்கான வளர்ச்சித் திட்டங்களையும் சமுதாய நலப் பணிகளையும் விரைவு குன்றாது செயல்படுத்த, ஒரு சில வரி விகித மாற்றங்களுக்கு தனது முழு ஆதரவையும் நல்கி, அரசு பாங்காக நிதி நிர்வாகம் நடத்துவதற்கு இம்மாமன்றம் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4.30)

**3. மாநிலத்திலுள்ள உணவு நிலைமை குறித்து விவாதம்.**

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே,—

"இம்மாநிலத்திலுள்ள உணவு நிலைமை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"இம்மாநிலத்திலுள்ள உணவு நிலைமை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்".

பேசுவதற்கு 12 பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே 10 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு பேர்கள் பேச வேண்டும், உணவு அமைச்சரவர்கள் பதில் கொடுக்க வேண்டும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் 10 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** மாண்புமிகு தலைவரவர்களே, உணவுக் கொள்கையின் மீது இந்த மன்றத்தில் நடக்கக் கூடிய விவாதத்தில் கலந்து கொண்டு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். பொதுவாக தமிழகத்தில் போதுமான உணவு உற்பத்தி இருந்தும், அரசாங்கத்தினுடைய தவறான கொள்கையின் காரணமாகவும், நிர்வாகத் திறமையின்மை காரணமாகவும் தமிழகத்திலுள்ள மக்களுக்கு இன்று உணவு கிடைக்காத ஒரு நிலையை அரசாங்கம் ஏற்படுத்தி விட்டதென்று சொன்னால், அது மிகையாகாது. பொதுவாக நம்முடைய மாநிலத்தில் தேவையான அளவிற்கு நெல், அரிசி அதிகமாக உற்பத்தி செய்திருந்த போதிலும் கூட, ஏறத்தாழ 57 லட்சம் டன்னுக்கு மேல் உற்பத்தி செய்திருந்தும் கூட, நம் மாநில மக்களுக்கு 46 லட்சம் டன் இருந்தால் போதுமானது என்ற நிலைமையில், உபரியாக பல ஆயிரக்கணக்கான டன்கள் இந்த நாட்டு மக்கள் உற்பத்தி செய்து கொடுத் திருந்தும், தமிழகத்திலே சரியானபடி வினியோகம் செய்யத் தவறியதன் காரணமாக, விலைவாசி ஏற்றத்தின் காரணமாக, ஏழை எளிய மக்கள் அரிசி

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1974 ஆகஸ்டு 14

நெல் உபயோகிப்பதில் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த உணவுத் துறையினுடைய கொள்கை நாளுக்கு நாள் ஒரு விதமாக மாறியதன் காரணமாக, அரசாங்கம் எண்ணியதுபோல, பேசினாற்போல இந்த நாட்டில் உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகள் அதிகமாக லாபம் அடைவதற்காக இந்த அரசாங்கம் 40 ரூபாய் இருந்த மூட்டையை 80 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது என்று கூறினாலும், விவசாயிகள் அப்படி லாபம் அடையாமல் இந்த நாட்டிலுள்ள கொள்ளை லாபக்காரர்களும் வியாபாரச் சூதாடிகளும் அதிக லாபம் அடைவதற்கு வசதி செய்து கொடுத்தது. விவசாயிகள் தங்களுடைய நெல்லை, தங்கள் உழைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட விளை பொருள்களை விற்கும் காலங்களில் லெவி என்றும் கட்டுப்பாடு என்றும் போட்டு குறைவான விலைக்கு விற்க வேண்டுமென்று கட்டாயமான ஒரு நிலை உருவாக்கப்பட்டு இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட விவசாயிகளுடைய நெல்லை எல்லாம் கொள்முதல் செய்து, வியாபாரிகள் கை வசத்திற்கு அதிகமாகப் போய்ச் சேர்ந்த பின் லெவியை எடுத்தது. இதன் காரணமாக விவசாயிகள் விற்கவேண்டிய காலங்களில் 40 ரூபாய் என்று இருந்தது, வியாபாரிகள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்து அவர்களிடம் இருப்பு அதிகமாகிய பிறகு கட்டுப்பாடு, லெவியை எடுத்ததன் காரணமாக இன்றைய தினம் 100 ரூபாய்க்கு மூட்டை விற்கிறது என்றால், இந்த லாபம் விவசாயிகளுக்கா அல்லது கொள்ளை லாபம் அடிக்கக்கூடிய வியாபாரிகளுக்காவென்று அறிய விரும்புகிறேன். இந்தப் பெரிய வாய்ப்பினை அரசு விவசாயிகளுக்குக் கொடுக்காமல் வியாபாரிகளுக்கே கொடுத்திருக்கிறது. வியாபாரச் சூதாடிகளுக்கும், கள்ளக் கடத்தல்காரர்களுக்கும் நாட்டிலுள்ள அரசாங்கம் லாபம் செய்து கொடுத்து விட்டது. அந்த வியாபாரிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து விட்டது. ஒரு ஆண்டுக்கு லட்ச ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிற சாதாரண நெல் அரிசி வியாபாரிகள் இன்றைக்கு 20 லட்ச ரூபாய், அளவிற்கு அதிகமான கொள்ளை லாபம் அடிப்பதற்கு இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை இடம் கொடுத்துவிட்ட காரணத்தினால், நெல், அரிசி வியாபாரிகள் எல்லாம் பெரிய பணக்காரர்களாக, கொள்ளை லாபம் அடித்தவர்களாக, சுக போகிகளாக ஆக்கப்பட்டுவிட்டார்கள் என்று இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அரசாங்கம் லெவி முறையை எடுத்தார்களே, விவசாயிகள் வேளாண்மை செய்த பொருள்களை விற்கக்கூடிய காலங்களில் இப்படி ஒரு நிலையை, கொள்கையை கடைப்பிடித்திருந்தால் விவசாயிகளுக்குப் பயன்படும். அப்படி அவர்களுக்குப் பயன்படாமல் விவசாயிகளைத் தொந்தரவு பண்ணி, லெவி கொடுக்க வேண்டுமென்று சோதனையிட்டு எடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களிடம் கொள்முதல் செய்திருக்கிறது, புட் கார்ப்பரேஷன் செய்திருக்கிறது. அப்போது 40 ரூபாய்க்குக் கொடுக்க வேண்டுமென்று கண்டிப்பும், கட்டாயமும் அரசாங்கம்



1974 ஆகஸ்டு 14] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

செய்தது. அதன் காரணமாக வேளாண்மை செய்த விவசாயிகள் கொள்ளை லாபக்காரர்கள், வியாபாரிகள், பதுக்கல்காரர்கள் என்று குறை கூறப்பட்டது. உற்பத்தி செய்த தானியங்களை அவர்கள் தேவைக்கு மீறி வைத்துக் கொண்டிருந்தால் தவறு என்று அவர்களை கடத்தல்காரர்கள், கொள்ளை லாபக்காரர்கள், பதுக்கல்காரர்கள் என்று அரசாங்கம் பேசி விட்டு, அந்த நெல்லையெல்லாம் எடுத்துக்கொண்ட பிறகு, அவர்களிடம் லட்சக்கணக்கான டன் அரிசியை வியாபாரிகள் வாங்கிய பிறகு அரசாங்கம் லெவி, கண்ட்ரோலை எடுத்ததன் காரணமாக, அரிசி விலையை உயர்த்தியதன் காரணமாக, 40 ரூபாய் என்ற விலையை 80 ரூபாய் என்று ஏற்றியதன் காரணமாக, இந்தத் தொகை அந்த விவசாயிகளுக்குக் கிடைக்குமா, அந்த விவசாயிகளிடம் கொள்முதல் செய்தார்களே, வியாபாரிகள் அதை இந்த விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் அவர்களிடம் கூறுமா என்று அறிய விரும்புகிறேன். பல மாதங்கள் சென்ற பிறகு, எல்லா நெல்லும், உணவு தானியங்களும் விவசாயிகளிடமிருந்து அறவே வியாபாரிகள் கைக்கு வந்து விட்டன. அரசாங்கத்திற்கு வந்து விட்ட பிறகு, அரசாங்கம் கட்டுப்பாட்டை நீக்கியதன் காரணமாக வியாபாரிகளுக்குப் பெரும் உதவியை இந்த அரசு செய்திருக்கிறது என்று குற்றஞ்சாட்டுகிறேன்.

மேலும் இந்தக் கட்சிக்கு அரசாட்சி கிடைப்பதற்கான வாய்ப்பு உணவுக் கொள்கை காரணமாக 1967-ல் கிடைத்தது. அப்போது பானையைக் காட்டினார்கள். 6 அவுன்ஸ்காரர்கள் என்று காங்கிரஸ்காரர்களை ஏசினார்கள். நாங்கள் வந்தால் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம் என்று சொன்னார்கள். அந்தக் கொள்கையை வைத்தே ஆட்சிக்கு வந்த அரசு, 56 லட்சம் டன் உணவு உற்பத்தி பெற்றிருந்தும், போதுமான அளவு இந்த மாநிலம் தன்னிறைவு பெற்றிருந்தும் கூட, கிடைத்ததை வைத்துக்கொண்டு நாட்டு மக்களை காபந்து செய்ய மறந்து விட்டது. ஏழைகளுக்கு படி அரிசி போடுவதாகக் கூறிய வாக்கைக் காப்பாற்றாமல், ஆட்சிக்கு வரவேண்டுமென்று அன்றையதினம் இருந்த கஷ்ட நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கூறினார்கள் என்பதை இது எடுத்துக் காட்டியிருக்கிறது

(பிற்பகல் 4-40)

அன்றைய தினம் படி அரிசி ஒரு ரூபாய்க்குப் போடுவதாகச் சொல்லிவிட்டு, அதற்கான உணவுக் கொள்கையில் அவர்கள் நாட்டம் செலுத்தவில்லை. அன்றைய தினம் உணவுப் பற்றாக்குறை இருந்தது. 37 லட்சம் டன் அரிசி தான் உற்பத்தி இருந்தது. இந்த நாட்டு மக்களின் தேவைக்குக் குறைவாகத் தான் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் சீரான முறையில் உணவு வழங்கப்பட்டிருந்தது. அதைத் தெரிந்தும் குறை கூறினார்கள். அன்றைய தினம்

தமிழ் நாட்டில் போதுமான உற்பத்தியில்லை, இருந்ததை வைத்துக் கொண்டு சீரான முறையில் உணவு கொடுத்தார்கள். உணவு இல்லை என்று யாரும் சாகவில்லை. அப்போது பிரமாதமாகப் பிரச்சாரம் செய்தார்கள். இன்றைய தினம் 57 லட்சம் டன் உற்பத்தியாகியிருந்தும், இந்த அவல நிலை வந்ததற்கான காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன். தவறான உணவுக் கொள்கையின் காரணமாகவும், பிற்போக்கான பொருளாதாரச் சூழ்நிலை காரணமாகவும், உணவுப் பொருட்கள் இன்றைய தினம் விவசாயிகளுக்கும் கிடைக்காமல் நாட்டிலேயுள்ள ஏழை எளியவர்களுக்கும் கிடைக்காமல் இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பாட்டாளி குடும்பத்தைச் சேர்ந்த 80 சதவிகிதத்தினர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதுவும் தவிர, உர விநியோகத்திலும் மிகுந்த இடர்ப்பாடு இருக்கிறது. இன்றைய தினம் ஒவ்வொரு பொருளின் விலையும் அதிகமாகிக்கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதிகமாக விலை கொடுத்து உரம் வாங்கி விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக நெல் விலையைக் கூட்டியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இது சரியான காரணம் அல்ல. தற்போது உரத்தை வாங்கி அதனால் உண்டான விளைச்சல் அல்ல. முன்பு வாங்கிய உரத்தை வைத்துத்தான் விவசாயம் செய்யப்பட்டது. தற்போது திடீரென்று விலை கூடியதற்கான மர்மம் என்னவென்று அறிய ஆசைப்படுகிறேன். அதுவும் தவிர, விவசாயிகளைப் பார்த்து பதுக்கல்காரர்கள் என்று கூறுகிறார்கள். அது தவறான வாதம் ஆகும். நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் ஒரு சில நபர்கள் அதிகமான நிலம் வைத்திருக்கலாம். அவ்வாறு வைத்திருக்கிற காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு அவர்கள் பதுக்கல் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைமையை அறிந்து கொண்டு பதுக்கல்காரர்கள், பெரும் பணம் படைத்தவர்கள் தங்களுடைய வசதியைப் பயன்படுத்திக்கொண்டு, ஏற்கெனவே விவசாயப் பொருட்களை வாங்கி வைத்துக்கொண்டு அதிக லாபம் சம்பாதித்திருக்கிறார்கள். அரசாங்கம் தன்னுடைய கொள்கையை மாற்றுவதன் காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைய தினம் நிலத்தில் உழைத்து உற்பத்தியைப் பெருக்கியவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு கூலி கொடுக்க வேண்டுமென்றால், நெல் விலைக்கு வாங்கித்தான் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். சிலர் விவசாயச் செலவுக்காக கொஞ்சம் நெல் வைத்திருக்கிறார்கள். அவர்களும் கஷ்டப்படுகிறார்கள். இந்த அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாகத்தான் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.





திரு. கோ. சி. மணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மாமன்றத்தில் தமிழகத்தில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற உணவு நிலைமையைப்பற்றிப் பேசி முடிவு எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தை ஒட்டி பழைய காங்கிரஸ் கட்சியிலிருந்து மூதன் முதலாக உரையாற்றியதைக் கேட்டோம். 1974-ல் மட்டும்தான் அரிசி விலை ஏறியிருக்கிறது என்பதை எல்லோரும் சேர்ந்து ஒப்புக்கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆனால் 1965-66-ல் ஏற்பட்ட நெருக்கடியைவிட இன்றைய தினம் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது; உற்பத்தி குறைவாக இருந்த நேரத்தில் சீர்செய்திருக்கிறோம், உற்பத்தி அதிகரித்த நேரத்தில் இப்படி ஒரு தட்டுப்பாடு வந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு தமிழ்நாடு பூராவும் பொதுமக்கள் பேசுகின்ற பேச்சும், பெரிய பெரிய போஸ்ட்டர்களில் காணப்படுகின்ற வாசகமும் என்ன? அரிசி இல்லை என்ற வாசகம் அதில் இல்லை. அதில் காணப்படுவது, அரிசி விலையைக் குறைத்துக் கொடுங்கள், அரிசி விலை ஏறிவிட்டது, அநியாய விலையில் அரிசி விற்கப்படுகிறது என்பதுதான். இதுதான் தமிழ் நாட்டில் ஏகோபித்த குரலாக இருக்கிறது. அதை நாங்கள் மறுக்கவும் இல்லை, மறைக்கவும் இல்லை. அன்றைய தினம் நாங்கள் கேட்டது ஆளுக்கு அரை லிட்டர் அரிசி தான். அன்றைக்கு நாங்கள் கேட்டது இதர உணவுப் பண்டங்களைக் கொடுங்கள் என்பதுதான். அது அன்றைக்குக் கிடைக்கவில்லை. 1966-ல் அரிசி விளையாத நேரத்தில் நெருக்கடி ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைவுபடுத்தினார்கள். 1966-ஆம் ஆண்டில் நான் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தேன். அப்போது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மூன்று ஆண்டு காலமாக நாங்கள் செய்த சாதனைகளின் காரணமாக உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்றார்கள். ஆறு ஆயிரம் டன் உரம் கொடுத்திருக்கிறோம் என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். அப்போதே நான் நினைவு படுத்தினேன். உரம் விளைவிப்பவர்களுக்கு போய்ச் சேர்ந்திருக்கிறதா என்று பார்த்தீர்களா, அல்லது அரசு அதிகாரிகள் அனுப்பிய பட்டியலை மட்டும் வைத்துக்கொண்டு சொல்லுகிறீர்களா என்று கேட்டேன். உற்பத்தி அப்போது அதிகரித்திருந்தும் ஏன் பஞ்சம் ஏற்பட்டது? அப்போது ஆளுக்கு அரை லிட்டர் அரிசி தானே கேட்டோம், விலை ஏறிவிட்டது என்று சொல்லவில்லையே. அப்போது எதிர்க் கட்சிக்காரர்களாகிய எங்களைப் பார்த்துச் சொன்னார்கள், அரிசி மட்டும் தானா விலை ஏறியிருக்கிறது, விவசாயிகள் நெல்லை விற்று விட்டார்கள், வியாபாரிகள் கைக்கு அது போனவுடனே விலை ஏறிவிட்டது என்று சொன்னார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் நிலச்சுவான்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் குறுவை அறுவடைக்கு முன்பே விலை நிர்ணயிக்கப்படுகிறது. அவர்களுக்கு உற்சாகம் எல்லாம் போய்விடக்கூடாது என்பதற்காக முன்னாலேயே நெல்

விலையை உயர்த்துவதற்கான அறிகுறிகளைக் காட்ட வேண்டும். அதேபோல் குறுவைச் சாகுபடிக்கு முன்னாலே விலையை உயர்த்தித்தர வேண்டுமென்று ஏகோபித்த குரலில் கேட்டுக்கொள்ளப்பட்டது. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே அதுமாதிரி கேட்கப்பட்டது. அது போலவே உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆண்டும் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். விலையை உயர்த்துங்கள் என்று கிராமப் பகுதியில் சென்று பேசுகிறார்கள். நகரப் பகுதிக்கு வந்தால், அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். கடலை உற்பத்தியாளர்கள் சேர்ந்துகொண்டு எங்களுக்கு கடலை விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதனால் சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் கடலை எண்ணெய் விலை ஏறியது. உடனே கடலை எண்ணெய் விலை ஏறிவிட்டது என்று சொன்னார்கள். கடலை விலை ஏறினால் கடலை எண்ணெய் விலை ஏறத்தானே செய்யும். அதே போல் நெல் விலையை உயர்த்தினால், அரிசி விலை ஏறும்; நெல்லிலிருந்துதான் அரிசி வருகிறது. என்ன காரணத்தாலோ இப்படிப் பேசுகிறார்கள்.

இன்னொன்று, திடீரென்று கொள்கை மாற்றப்படுகிறது என்று சொல்லு கிறார்கள். அதோடு பல குற்றச்சாட்டுக்களையும் சொல்லுகிறார்கள். நான் அன்று எதிர்க் கட்சியில் இருக்கும்போது சொன்ன ஒரு குற்றச்சாட்டை நினைவு படுத்த ஆசைப்படுகிறேன். தஞ்சை மாவட்டத்தில், தஞ்சாவூர், மாயூரம் ஆகிய ரயில்வே ஸ்டேஷன்களிலிருந்து நாள்தோறும், அரிசியை மாவாக அரைத்து, கிழங்கு மாவு என்ற பெயரால் அனுப்புகிறார்களே, அதற்குக் காரணம் என்ன? கிழங்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் உற்பத்தி கிடையாதே என்று சுட்டிக்காட்டிக் கேட்டேன். அதைப் பரிசீலிக்கிறோம், அதுபற்றி விசாரிக் கிறோம் என்று கூட அன்றைக்குச் சொல்லவில்லை. இல்லை, அது கிழங்கு மாவு மூட்டைதான், அரிசி மாவு மூட்டை அல்ல என்று அன்றைக்கு இருந்த அரசியல் சூழ்நிலையில் சொன்னார்கள். கிழங்கு விளையாத இடத்திலிருந்து கிழங்கு மாவு போகிறது என்று கூறினார்கள். 'அப்பாவும் இல்லை, அம்மாவும் இல்லை, ஆம்பிளைப்பிள்ளை பிறந்திருக்கிறது' என்று சொல்லுகிறீர்களே என்று நான் கேட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அப்படி ஆம்பிளைப்பிள்ளை பாதுகாப்பாகப் பிறந்து 18 மாதமாக லண்டனில் வளர்கிறது.

**திரு. கோ. சி. மணி:** கடைசியில் அது கிழங்கு மாவு அல்ல, அரிசி மாவு தான் என்று ஒப்புக்கொண்டார்கள். விசாரணைக்குப் பிறகு, ஆயிரக் கணக்கான அரிசி மாவு மூட்டைகள் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷனிலிருந்தும் ஏற்றி அனுப்பப்பட்டன என்பது தெரிய வந்தது. ஏற்றியவர்கள் யார் யார் என்பது தெரியாத காரணத்தால்



வழக்குத் தொடர முடியவில்லை என்று கூறிவிட்டார்கள். அன்று எதிர்க் கட்சிக்காரர்கள் கூறியதை நாங்கள் கேட்கமாட்டோம் என்று இருந்தார்களே அதுமாதிரி நாங்கள் நடந்து கொள்ளவில்லை.

மூன்று மாதத் தேவைக்கு மேல் யாராவது விவசாயிகள் நெல் வைத்திருந்தால், அதைக் கொடுத்துவிட வேண்டுமென்று உத்தரவு வந்தது. உடனடியாக விவசாயிகள் முதல்வர் அவர்களைச் சந்தித்து ஆறு மாதத் தேவைக்கானதை வைத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவை மாற்ற வேண்டும், விவசாயிகளில் சம்பா போடுகிறவர்கள் குறுவை போடுகிறவர்கள் என்று இருக்கிறார்கள் என்று முறையிட்டார்கள். உடனே உத்தரவு போடப் பட்டது, ஆறு மாதத்திற்குத் தேவையானதை வைத்துக்கொள்ளலாம் என்று. அது தவறு என்று சொல்லுகிறீர்களா? போட்டது போட்டதுதான் என்று சொல்லவேண்டுமென்று சொல்கிறீர்களா? போட்ட உத்தரவை மாற்றவே கூடாது என்கிறீர்களா? ஒரு திட்டம் போடுகிறோம். பிறகு அது சரியில்லை என்றால் மாற்றுகிறோம். விவசாயிகள் பதுக்கி வைத்திருக்கிறார்கள், வியாபாரிகள் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். உடனே உத்தரவு போடுகிறோம். அதிலே தவறு இருக்கிறது என்கிறீர்கள். அதை மாற்றுகிறோம். அதையும் சொல்லுகிறீர்கள், இதையும் சொல்லுகிறீர்கள். தொட்டிலையும் ஆட்டுகிறீர்கள், பிள்ளையையும் கிள்ளி விடுகிறீர்கள்.

(பிற்பகல் 4-50)

நெல் விலை ஏற வேண்டும்; அரிசி விலை இறங்க வேண்டும். இது எப்படி முடியும்? ஆறு ரூபாய் கூலி என்று சொல்லுகிறீர்களே; எப்படி இந்த விலையை வைத்துக்கொண்டு வாழ முடியும் என்று கேட்ட நிலச்சுவான்தார்கள் எத்தனை பேர்? தஞ்சையில் கலெக்டர் ஆபீஸ் முன்னாலும், பனகல் பில்டிங்ஸ் முன்னாலும் எத்தனை பேர் கேட்டார்கள்? நீங்கள் கூலியை உயர்த்திக் கொண்டு போகிறீர்கள் ஆண்டுக்காண்டு; நெல் விலையை உயர்த்த வேண்டாமா? அகவிலை இப்போது எப்படி உயர்ந்திருக்கிறது; உர விலை எப்படி உயர்ந்திருக் கிறது என்றெல்லாம் சொல்லாதவர்கள் யார்? அதையும் சொல்லிவிட்டு, விலையையும் உயர்த்திவிட்டார்களென்று சொல்கிறார்கள்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** நெல்லுக்குக் கட்டுப்படியாகின்ற விலையை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்றுதான் சொல்லுகிறோம். விவசாயி களிடம் 40 ரூபாய் என்று சொல்லி, கொள்முதல் செய்த பிறகு, வியாபாரி களுக்கு 80 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை.

**திரு. கோ. சி. மணி:** குறுவை அறுவடைக்கு முன்னால், குறுவை நடுவ தற்கு முன்னால், விவசாயக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னால், நெல் விலையை உயர்த்த வேண்டுமென்று தஞ்சை மிராசுதாரர்கள் 2, 3 ஆண்டுகளாகச் சொல்லி

வருவது உண்மையா? இல்லையா? அதைத்தான் இப்போது சொல்லுகிறேன். சென்ற ஆண்டு 40 ரூபாயாக உயர்த்தியது இந்தக் காலத்தில்தான். அதற்கு முதலாண்டு உயர்த்தியதும் இந்தக் காலத்தில்தான். இந்த ஆண்டும் உயர்த்தியிருப்பது இந்தக் காலத்தில்தான். இதில் என்ன தவறு இருக்க முடியும்? வாங்கி விற்பவர்கள் லாபம் பெற்றிருக்கிறார்கள்; நஷ்டமும் பெற்றிருக்கிறார்கள். பொது மக்களைப் போல், வியாபாரிகளை ஆளுங் கட்சிக்காரர்கள், சர்க்கார் சொல்லுவது நியாயமா என்று சொல்லுகிறார்கள். தவறு இருந்தால், அதைச் சுட்டிக்காட்டாமல் எப்படி இருக்க முடியும்? அவர்கள் போட்ட விதி முறைகளை மீறித் தவறு செய்கிறார்கள். பிறகு, அந்த விதியைத் திருத்தி, தவறு செய்தவர்களை கண்டுபிடிக்க இந்த அரசு முயற்சி எடுக்கிறது. தவறு செய்தவர்களைக் கண்டித்துப் பேசுவதை எங்களுடைய கொள்கையாக நாங்கள் வைத்திருக்கிறோம். நாங்கள் ஆள்கிறோம் என்பதற்காக தவற்றை மறைத்தோம் என்பது இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதிலிருந்து எந்தக் காலத்திலாவது உண்டா? ஒரு சட்டத்தைப் போட்டு, அதில் தவறு இருந்தால், அதைத் திருத்திக்கொண்ட காரணத்தாலே இந்தச் சட்டங்கள் திருத்தப்படக் கூடாது; விதி முறைகளை மாற்றக் கூடாது என்று சொல்ல முடியுமா? சொல்லலாமா? அதைத்தான் திரும்பத் திரும்ப நான் உங்கள் மூலமாக, அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நெல் விலை உயரும்போது, அரிசியின் விலை உயரும். இப்போது அரிசிப் பஞ்சம் இல்லை. அரிசி விலை உயர்வு—இந்தக் குரல்தான் எங்கு பார்த்தாலும் இருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அரிசிப் பஞ்சம் இல்லாத நிலையில் விலை ஏன் உயர்ந்திருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கோ. சி. மணி:** நெல் விலையை உயர்த்தியிருக்கிறோம். அரிசி விலையும் உயர்ந்திருக்கிறது. அரிசி விலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது? கார்டு விலை உயர்ந்திருக்கிறது; கவர் விலை உயர்ந்திருக்கிறது; பிளாஸ்டிக் சாமான்கள் விலை உயர்ந்திருக்கிறது. அன்றாடம் நாம் உபயோகிக்கிற எந்தப் பொருளின் விலை உயராமல் இருக்கிறது? எத்தனை சதம் அரிசியின் விலை ஏறிவிட்டது?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அரிசியின் விலை 6 பங்கு ஏறியிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி:** 6 பங்கு விலை ஏறிய பொருள்களை எல்லாம் வாங்கியிருக்கிறோமே; வாங்கி வருகிறோமே! 8 பங்கு விலை ஏறிய பொருள்களை எல்லாம் வாங்கியிருக்கிறோமே!

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அவர் சொல்லுகின்ற கவர், கார்டு, பிளாஸ்டிக் சாமான்கள் இல்லாமல் வாழ முடியும். ஆனால் உணவு **இல்லாமல் வாழ முடியாது.**



**திரு. கோ. சி. மணி:** எனக்கும் தெரியும் அது. இப்போது காசு கொடுத்து வாங்க முடியாமல் செத்துப் போய்விட்டார்களா? இல்லையே! (குறுக்கீடு) இன்றைக்கு அப்படிச் செத்து இருக்கிறார்களா? அன்றைக்குச் செத்து இருக்கிறார்கள், அரிசி கிடைக்கவில்லையென்று. (குறுக்கீடு) அதைத்தான் எதிர்பார்த்தார்கள். அது நடக்கவில்லை. இந்த ஆட்சியில் நடக்காது. நிச்சயமாக நடக்காது. இப்போது அரிசி இல்லை; வாங்கிச் சாப்பிட முடியவில்லை என்பதால் சாகிறார்கள் என்பதற்குப் பட்டியலை நீங்கள் காட்ட முடியாது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அன்றும் காட்ட முடியவில்லை.

**திரு. கோ. சி. மணி:** அப்போது நடந்தது. நிறைய எடுத்துக்காட்டினோம். அதைச் சட்ட மன்றத்திலே ஒத்துக்கொண்டார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அரிசிப் பஞ்சம் காரணமாக இறந்தால்தான் பஞ்சம் வந்ததென்பது உறுப்பினரவர்களுடைய அபிப்பிராயமாவென்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கோ. சி. மணி:** விலை ஏறியதால் பஞ்சம் வந்ததென்று சொல்லவும் முடியாது. உற்பத்தி அதிகரிக்கிற மற்ற பொருள்களுக்கும் விலை ஏறிக்கொண்டு வருகிறது. தாராளமாகக் கிடைக்கிற பொருள்களுக்கும் விலை ஏறுகிறது. விலை ஏறுகிற காரணத்தால் பஞ்சம் வந்து விட்டதென்று சொல்ல முடியாது. இதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்க ஆசைப்படுகிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த உணவுப் பிரச்சினையைப்பற்றி நான் பேசத் துவங்குமுன், நான் எந்த அரசியல் கட்சியையும் சேர்ந்தவனல்ல என்ற அடிப்படையிலேயும், நான் ஒரு விவசாயி என்ற அடிப்படையிலேயும் பேச முற்படுகிறேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) நான் ஆசிரியராக இருக்கிறேன். எனினும், முதலில் நான் ஒரு விவசாயி. அந்த அடிப்படையிலேதான் நான் பேச விரும்புகிறேன். அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது; அரிசி விலை உயர்ந்து விட்டதென்பதை நம்மால் உணர முடிகிறது. எல்லோரும் அதைப்பற்றிப் பேசுகிறோம். இந்த நிலையிலே மக்களுக்குத் தேவையான அரிசி கிடைப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பார்க்க வேண்டும். இந்த நோக்கில் ஆளுங்கட்சி என்ன செய்ய வேண்டும், ஆளுங்கட்சி செய்ய வேண்டியதை எதிர்க் கட்சிகள் எப்படி ஆதரிக்க வேண்டும், எப்படி அவர்களுக்கு அறிவுரை கூற வேண்டுமென்பதுதான் இன்றைய பிரச்சினை. இப்போது அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானதொரு காரணம் ....

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அரிசித் தட்டுப்பாடு இல்லை. விலைதான் ஏறிப்போய் இருக்கிறது. அதுதான் பிரச்சினை.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, அரிசி விலை ஏற்றத்திற்கு தட்டுப்பாடுதான் காரணம் என்பது எல்லோருடைய வாதம். அந்த அடிப்படையில் தான் நானும் பேசுகிறேன். சென்னை நகரிலே 3 நாட்களுக்கு அரிசி கிடைக்காமல் தவித்த மக்கள் எண்ணிக்கை எத்தனைபேர்! அதை உணர்ந்தவன் என்ற அடிப்படையில்தான் நான் பேசுகிறேன். தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும்....

**திரு. கே. எஸ். மணி :** தலைவரவர்களே, மூன்றுவது நாள் அரிசி மூட்டை மூட்டையாக அடுக்கி வைக்கப்பட்டு, சென்னை நகரில் விற்கப்பட்டதே; தட்டுப்பாடு இருந்தால் அப்படி அரிசியை விற்க முடியுமா?

**திரு. கே. எஸ். கணபதி :** நான் சொன்னது மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதுதான். அரிசி மக்களுக்குக் கிடைக்கவில்லை. 3 நாட்கள் கழித்து அவர்கள் கொண்டுவந்து கொடுத்தது உண்மைதான். 3 நாட்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை நீங்கள் மறுக்க முடியுமா?

**மாண்புமிகு மேல்வைத் தலைவர் :** மறுக்கவில்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** அரிசித் தட்டுப்பாடு இல்லையென்று ஆளுங்கட்சியினர் கூறுவார்களானால், அது பெருத்த தவறு என்று குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் சென்ற ஆண்டு திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலே நெல் பயிரிட்டவர்களுக்குத் தெரியும். பொன்னி என்ற புதிய ரக நெல் உற்பத்தி செய்யப்பட்டது. அது சென்ற ஆண்டு மிகப் பெருத்த ஏமாற்றத்தை விவசாயிகளுக்குக் கொடுத்தது. இதை எல்லா விவசாயிகளும் உணருவார்கள். ஏனென்றால், அந்த ரக நெல் 1972-73-ம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கு 57 கிலோ கொண்ட 40 மூட்டை நெல் கொடுத்தது. ஆனால் 1973-74-வது ஆண்டிலே 20 மூட்டைகள்கூடக் கொடுக்காமல், மிகப் பெருத்த அளவிலே விவசாயிகளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. அதுவும் இந்த அரிசிப் பஞ்சத்திற்கு ஒரு காரணமாகும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தலைவரவர்களே, இந்த அரிசித் தட்டுப்பாட்டுக்குக் குறைந்த விளைச்சல் காரணமா, அல்லது மக்கள் எண்ணிக்கை ஆண்டுதோறும் கூடிக்கொண்டு போவதா என்பதை அறிய விரும்புகிறேன்.



**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு விவசாய அமைச்சரவர்கள் பொன்னி நெல் விவசாயிகளுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கவில்லையென்று கூறுவார்களானல், அவர்கள் விவசாய அமைச்சர் என்ற அடிப்படையில் அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதை அவர் மறுக்க மாட்டார்களென்று நினைக்கிறேன். மக்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை வெகுவாக நாம் தடுத்து வருகிறோம் என்பதை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் ஒத்துக்கொள்வார்கள். நான் பல காரணங்களாலேதான் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகிறதென்பதை விளக்குகிறேனேயொழிய, யார் குற்றம் செய்தவர்கள், யார் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதைப்பற்றிக் குறிப்பிட வரவில்லை.

(பிற்பகல் 5-00)

இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் பேசும்போது, 3 மாதத் தேவைக்கான நெல்லை வைத்துக்கொள்ளலாமென்ற ஒரு உத்தரவு பிறப்பித்தோம்; நிலைமை மோசமாகுமென்று தெரிந்தவுடன் அதை 6 மாதங்களாக உயர்த்தினேம் என்று குறிப்பிட்டார்கள். அதற்காக அரசைப் பாராட்டும் அதே நேரத்தில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாம் எல்லோரும் அரிசி சாப்பிடுகிறவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மாதாந்திர சம்பளக்காரர்கள்கூட, ஒரு செண்ட் நிலம் இல்லாதவர்கள்கூட, தை மாதத்தில் கடன் வாங்கியாவது, அந்த ஆண்டுக்கு வேண்டிய நெல்லை வாங்கி வைத்துக்கொள்ளுவது வழக்கம். தமிழகத்திலிருந்து. வட இந்தியாவுக்குச் சென்று கோதுமையை உணவாகக் கொண்ட தமிழர்கள்கூட, கோதுமையை வாங்கி வைத்துக்கொள்ளுவது நாம் அறிந்ததே. அந்த அடிப்படையில் சற்றே சிந்தித்திருந்தால், 6 மாதம் வைத்துக்கொள்ளலாம் என்று முதலிலேயே உத்தரவைப் பிறப்பித்திருக்கலாம். ஏனென்றால் சற்றும் சிந்திக்காமல் நாம் ஒரு உத்தரவைப் பிறப்பித்துவிட்டு, சிலர் வேண்டும் என்று கேட்பதற்காக நாம் இதைத் தாழ்த்துவது பெருந்தன்மை என்று சொல்லும் அதே நேரத்திலே, சிந்திக்காமல் செய்தது தவறு என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அது மட்டுமல்லாமல், சென்ற 6 மாத காலத்திலே, சிந்தித்துப் பார்ப்போமேயானல், பலவிதமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. 'புரோக்யூர்மெண்ட்' என்று எடுத்துக்கொள்வோமானல், முதலிலே தஞ்சை மாவட்டத்திற்கு 40 சதவிகிதம் என்றும் மற்ற மாவட்டங்களுக்கு 25 சதவிகிதம் என்றும் இருந்தது. பிறகு அதுவே 25 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று தளர்த்தப்பட்டது. இல்லை என்று சொன்னர்கள். ஜூன் மாதம் 11-ந் தேதி மட்டும் தஞ்சை மாவட்டத்திலிருந்து பல மூட்டைகள் அரிசி, நெல் முதலியவைகள் மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்று கூறப்பட்டது. நான் அதைப்பற்றிக் குறிப்பிடும்போது, மற்ற மாவட்டங்களுக்குத்தான் அந்த அரிசி, நெல் வந்ததா அல்லது கள்ளக் கடத்தலில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச்

செல்லப்பட்டதா என்று கேட்கவேண்டியிருக்கிறது. பலர் மற்ற மாவட்டங்களுக்கு கடத்திச் செல்லப்பட்டது என்று சொன்னாலும், அதை ஆதாரபூர்வமாக நிரூபிப்பதற்கு ஒன்றும் இல்லை. மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பது உண்மையானால், அதைத் தவறு என்று கூற முடியாது. தமிழக மக்களுக்குத்தானே எடுத்துச் செல்லப்பட்டது என்ற அளவிலே நாம் பொறுத்துக்கொள்ளலாம் என்று கூறுவேன். இந்த அவையிலே பல கூட்டங்களுக்கு முன்னரும் தட்டுப்பாடு தளர்த்தப்பட வேண்டும் என்று அவையின் உறுப்பினர்களே பேசியிருக்கிறார்கள். கட்டுப்பாட்டைத் தளர்த்தியது ஒன்றையே காரணமாகக் கொண்டு அந்த உணவுப் பிரச்சினையைப் பெரிதாக்குவது சரியான முறை அல்ல. ஏனென்றால் விவசாயிகள், அதிகரித்து வரும் இந்த விலைவாசியிலே கூலி அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. உரமும் இரண்டு, மூன்று மடங்குக்கு அதிகமாகி விட்டதால், அந்த அடிப்படையிலே நெல்லும் அதிகமான விலைக்கு விற்கவேண்டியிருக்கிறது. அப்படி நெல் அதிகமான விலையிலே விற்கப்படாமல் போனால் விவசாயமே தடைப்பட்டுப் போகும் என்பது எல்லோருமே அறிந்த உண்மையாகும். ஆனால் 5 ரூபாய்க்கு மேலே விலை உயர வேண்டுமா? ஒரு மூட்டை 80 ரூபாய்க்கு அரசே எடுத்துக்கொண்டால், அப்போது பொதுச் சந்தையிலே இன்னும் அதிகமாக விற்பனை ஆகாதா என்று சொல்லலாம். ஆனால் நான் சொல்வது மற்றப் பொருள்களுக்கு உயர்ந்த அளவுக்கு அரிசி விலை ஜுலை மாதம் வரையிலும் உயரவில்லை. ஜுலை மாதத்தில் உரத்தின் விலை அதிகரித்த பின்னரே, அதிக விலை கொடுத்து வாங்கி உரத்தைப் பயன்படுத்தாதவர்கள்கூட, அதிக விலைக்கு நெல்லை விற்பனை செய்ய முயன்றார்கள் என்ற உண்மையை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இருந்தாலும் அரிசி கிடைக்கவில்லை என்ற நேரத்திலே, நாம் அரசுக்குத் தக்க யோசனையைக் கூற வேண்டுமே தவிர, அதிலே குறைபாடுகள் கண்டு அவர்களைப் பழிப்பதிலே எந்தவிதமான பயனும் நலனும் ஏற்படாது என்பது என்னுடைய கருத்து. அது மட்டுமல்ல. இந்த ஆண்டு மேட்டூரிலிருந்து வாய்க்காலில் நீர் விடப்படுவதற்குச் சற்று காலதாமதம் ஏற்பட்டது. விவசாயிகள் அனைவரும் விளைச்சலில் சிறந்த 'கருணை', 'கண்ணகி' போன்ற உயர்ந்த ரக நெல், அதிக விளைச்சல் தரக்கூடியவைகள் ஜுலை மாதம் 27 ஆம் தேதிக்குப் பிறகுதான் நாற்று விட்டிருப்பதால், அது நல்ல விளைச்சலைக் கொடுக்காது என்பதை எல்லோரும் அறிவார்கள். இருப்பினும் இந்த ஆண்டு பெரும்பான்மையான பகுதிகளிலெல்லாம் இந்த உயர் வகை நாற்றுகள் ஜுலை மாதம் 27-ந் தேதிக்குப் பிறகுதான் நாற்று விடப்பட்டன. எனவே இந்தக் காரணத்தினால் அடுத்த ஆண்டு வெகுவாக இந்த உணவுப் பிரச்சினையில் பாதகம் ஏற்படலாம் என்பதை இப்போதே அரசுக்கு நினைவுப் படுத்த விரும்புகிறேன். அந்த அடிப்படையிலே எதிர்காலத்திலே பாதிக்கப்படுவோம் என்பதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டுமே தவிர, மோசமான நிலையை இன்னும் மோசமாக்கும் வகையிலே நாம் அரசைக்



குற்ற கூறுவது மாத்திரம் கூடாது. நான் இப்போது அரசை வேண்டிக் கொள்வதெல்லாம் ஒன்றுதான். உணவு அமைச்சர் மட்டும் அல்லது இயக்குநர் மட்டும் ஒரு உத்தரவை பிறப்பித்தலைக் காட்டிலும் சட்ட மன்றத்திலே உள்ள சில உறுப்பினர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள் கொண்டு மேல் மட்டத்தில் ஒரு ஆலோசனைக் குழு அமைத்து அவர்களின் விருப்பப்படி செய்யலாம். இதிலே எதிர்க் கட்சி உறுப்பினர்களையும் சேர்த்துக்கொள்ளலாம். அந்த அடிப்படையிலே ஒரு குழு அமைத்து அந்தக் குழு ஒரு சிறந்த ஆலோசனையை அரசுக்குக் கொடுத்து, உணவுத் திட்டத்திலே, உணவுப் பங்கீட்டு முறையிலே நல்ல பல கருத்துக்களைக் கொடுத்து, இந்த நேரத்தில் இந்த உணவுப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். எனக்குப் பேசுவதற்கு இந்த வாய்ப்பினை அளித்தமைக்காகத் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

* THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, I thank you for the opportunity given to me to speak on this very important topic. Sir, I would like, at the very outset, to mention that in my short experience for the last two months, I find this country is the cheapest place in the world. Sir, I found in Japan that a cup of coffee cost $1\frac{1}{2}$ U.S. Dollars and a plate of rice cost about 100 yens which would be equal to Rs. 4/-. Compared to that, I find that almost everything in this country is cheaper. So, I do not for a moment think that this rise in prices is anything abnormal, considering the.........

THIRU G. SWAMINATHAN : Sir, what is the per capita income there?

THIRU G. VASANTHA PAI : My hon. Friend is trying to overreach me by putting question to me.

MR. CHAIRMAN : The hon. Member may not let him overreach.

THIRU G. VASANTHA PAI : Sir, I was about to mention that the cost of living index should be related to the income of a person. Even while speaking about the pensioners, I said that the minimum pension they should get should be Rs. 150, because that would be the amount necessary in terms of the present day prices and to see that the pensioner lived comfortably today. I have alwadys been agitating on the floor of this House that the cost of living index should be related to the salary and if we do not relate one to the

other, we will not be able to do justice to any person under the employ of the Government. Whether it is the public sector or the private sector, the people should be given enough income to meet the rising prices which are almost everywhere soaring up and are three times more than the prices previously, a couple of years ago even in foreign countries. I was only referring to this when my hon. Friend Thiru G. Swaminathan interrupted me. I want to mention that when the price rises in Japan, they raise the salaries and the extra rise in prices is met by them in that way. That is how Japan is flourishing. I would wish the same system is adopted here also. I do not belong to any political party and I do not want political bickerings to come in this discussion. Unfortunately, the D.M.K. on the one side and the Congress on the other are exchanging swords but they are not meeting the situation squarely. This should be solved as a national problem as it is common to the whole country.

When I was in the Trucian Settlements, Abu Dhabi and Dubai, I found that Basumathi rice was selling at a cheaper price then than in our country and it was also available in plenty. I was surprised and I asked them: " How do you get it so cheap?" They said, "We live on smuggled rice." Rice is being got in exchange for gold biscuits. One biscuit of gold is worth only Rs. 50 to Rs. 75 in Abu Dhabi and Dubai whereas it is worth Rs. 500 in India. They give these biscuits of gold and take our rice. Rice is selling at 2 Durhams and 62 Durhams is equal to Rs. 100. You can just imagine Basumati rice available at Rs. 4 a litre in that place, while we are not able to get the same even for Rs. 7 here. This is largely due to the large scale smuggling which has to be tackled at the national level right through our West Coast. I can tell you that most of the rice that has gone out of Thanjavur district must have gone through Cochin and other neighbouring ports to Abu Dhabi, Kuwait and Dubai. If I am sent, I will go and find out where the rice is and say how much rice has gone. It should be much easier for our Customs to do so. This smuggling should be stopped. We must have fast-moving patrol boats and they should be equipped with machine guns to shoot the smugglers down. Unless this is done, we are not going to solve this problem facing this country. This must be tackled at the national level. This smuggling of rice should be stopped along with the smuggling of other articles among which I want to refer to our bronze idols.



I found the bronze idols of South India flooding the antiques shops in West Germany in Frankfurt. The smuggling of idols is done through Pakistan and Pakistan officially encourages the smuggling of the idols for getting foreign exchange. I would, therefore, ask this Government to see that this smuggling at all levels is stopped. Persons like the Government Pleader or the Public Prosecutor should have nothing to do with such smugglers. I have already said on the floor of the House that these law officers should not have anything to do with these persons and they should not appear for private parties who are indulging in activities of smuggling and help them to be let out on bail. With my own eyes I saw in the antique shops in Frankfurt the South Indian bronze idols. I would ask any representative of the Government to go to this place. It is only 100 yards from the Frankfurt Railway Station. It is a few miles away from Hudson Bay Bridge at San Fransisco, antique shops dealing in Indian bronze idols which they cannot get except through smuggling. There is an international gang operating in this business. We have seen 50 lakhs of rupees worth of such idols, kept in the Office of the Commissioner of Police, at Madras on display a few months ago which were sought to be smuggled out of this country. This problem should not be viewed lightly and it should be taken serious note of. People who are parties of this international gang should be severely dealt with, and our legal advisers have to choose between them and the country.

(பிற்பகல் 5-10)

There are the three points that I wish to make. The first is the prevention of smuggling. The second is the protection of the existing stock of foodgrains. Sir, as early as 1966 one of the employees in Trombay Atomic Energy Commission suggested to the Government of India about dis-infestation of foodgrains through radiation. A sum of Rs. 25 lakhs was set apart for this purpose for research and experimentation. The man in charge of this was one Mr. Karun K. Nair and he was in the Atomic Energy Commission at Trombay. Sir, red-tapism and some other manoeuvres were there and out of this sum, Rs. 24 lakhs was spirited away for some other adventure, with the result that Mr. Nair resigned and is now the Chief Adviser in Simon Fraser University with regard to this aspect of pest control and saving of crops from pest by radiation: and I had occasion to refer to him even yesterday also

[Thiru G. Vasantha Pai] [1974 ஆகஸ்ட் 14

in this House. When I met him, I learnt that he was going to Scandinavia on deputation to advise the Scandinavian Government on this problem. Mr. Nair told me that by the discovery of his, 25 per cent of the foodgrains which were destroyed by rats could be saved. If the Government of India had accepted his advice to dis-infest the foodgrains by radiation, the above saving of foodgrains from destruction could have been achieved.

Sir, lastly, I wish to refer to adulteration which prevails in a large measure in this country. In many countries around the world including Bangkok, Kualalampur, Singapore, Hongkong, Tokyo and several other places in Japan I never did feel the presence of a stone in the rice. I have been finding a lot of them after I came to India. Something drastic must be done to do away with the adulteration of foodgrains and drugs. I asked persons in those places how they did away with adulteration. If the consumer makes a complaint against the retailer, the complaint is recorded and on getting a second complaint, the licence of the retailer is suspended. The wholesaler is tackled by the retailer. In this way they have solved the problem in Singapore and Singapore is worthy of emulation by us in this matter. Our Government might get elucidation from the officers of Singapore Government by inviting them here or sending a deputy there as to how the adulteration of foodstuffs could be stopped. If this is achieved, our food situation would improve.

With these few words, I request the Government to approach the problem at a national level and to see that food in this country is made available in plenty by checking smuggling and distributed in a manner consumable by the consuming public. Thank you

MR. CHAIRMAN: There are also adulterations in human lives.

*திரு. எம். ஆறுமுகசாமி: தலைவர் அவர்களே, இந்த மேலவையில் தமிழ் நாட்டின் உணவு நிலைமை பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் நிதிநிலை அறிக்கையின் மீது நான் பேசுகின்றபோது, இனி வரப்போகின்ற மாதங்களில் தமிழ் நாட்டின் உணவு நிலைமை மோசமாக இருக்கலாம்; அண்டை மாநிலமான கேரளாவில் இருக்கின்ற உணவு நெருக்கடியும், நமக்கு வெகு அண்மையில் இருக்கின்ற நாடான



1974 ஆகஸ்ட் 14] [திரு. எம். ஆறுமுகசாமி]

ஸ்ரீலங்காவில் ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடியும், நம்முடைய நெருக்கடியைத் தீவிரப்படுத்தும்; அதோடு பருவ மழைக் கோளாறு இருப்பதனால் அணைத் தேக்கத்தில் இந்தக் காலத்தில், மார்ச், ஏப்ரல் மாதங்களில் என்ன தண்ணீர் இருக்க வேண்டுமோ அந்த அளவுக்குத் தண்ணீர் இல்லை என்பதாலும், அரசு உணவு நிலைமையை உன்னிப்பாக கவனித்து தீர்க்க தரிசனத்தோடு செயலாற்ற முன்வரவேண்டும் என்று நான் குறிப்பிட்டிருந்தேன்.

அதோடுகூட, எப்பொழுதும் வழக்கமாக இந்த அவையில் மூன்று ஆண்டுகள் நிதிநிலை அறிக்கையில் பேசும்போது நான் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டு வந்திருக்கிறேன், அரசு உணவு தானிய வாணிபத்தை மேற்கொள்ள வேண்டும் என்று. மற்றைய மாநிலங்களில் ஒருவேளை இது தோற்றிருந்தாலுங்கூட, மற்றைய மாநிலங்களில் இந்தக் கொள்கை தோற்றதன் காரணமாக பின் வாங்கப்பட்டிருந்தாலுங்கூட, இந்த மாநிலத்தில் அந்த முயற்சியைத் துணிந்து செய்ய வேண்டும் என்றும் நான் சொல்லி வந்தேன். எனக்குப் பதிலாக இல்லாவிட்டாலும் அப்பொழுது நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அது சம்பந்தமான ஒரு விவர அறிக்கையில், "உணவு நிலைமை ரொம்பவும் நன்றாக இருக்கிறது. தமிழ் நாட்டிலே ஒன்றும் உணவுப் பற்றாக்குறை, அரிசிப் பற்றாக்குறை மற்ற மாநிலங்கள் அளவுக்கு ஏற்படாது. இங்கே உணவு விலை, மற்ற மாநிலங்களை ஒப்பிடுமிடத்து குறைவாக இருக்கிறது. நாம் கொள்முதல் இலக்கை நிச்சயமாக அடைந்துவிடுவோம். நல்ல மகசூல் ஏற்பட்டிருக்கிறது" என்றெல்லாம் குறிப்பிட்டிருந்தார்கள். இன்றைய தினம் என்ன பார்க்கிறோம்? மூன்று திங்களுக்குப் பிறகு இங்கே கூடி உணவு நிலைமையைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எனது நண்பர்கள் சிலர் இங்கே உணவு நிலைமை அப்படி ஒன்றும் மோசமாக இல்லை என்று சொன்னார்கள். அப்படியானால் இந்த அவை ஒரு நாளைக்கு அதைப் பற்றிப் பேசவேண்டிய அவசியம் என்ன? உணவு நிலைமை மோசமாக ஆகியிருக்கிறது. உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதா என்ற விவாதத்திற்கு நான் வரவில்லை. உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது, விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? நாம் சொல்லிக்கொண்டு வந்தபடி, அரிசியைப் பொறுத்தவரை, நம் தேவைக்குப் போதுமான அளவு உற்பத்தி செய்கிறோம். நாம் கொள்முதல் செய்ய வேண்டிய ஒரு லட்சத்து இருபத்தி ஐயாயிரம் டன்னுக்கும் அதிகமாக கொள்முதல் செய்திருக்கிறோம். அப்படியிருந்தும் கிடுகிடு என்று விலை உயர்வதற்குக் காரணம் என்ன? சிலர் சொன்னார்கள், எல்லாப் பண்டங்களின் விலையும் ஏறியிருக்கிறது, அதனால் இதன் விலையும் ஏறியிருக்கிறது என்று. எல்லாப் பண்டங்களின் விலையும் ஏறினாலும் இதன் விலை ஏறாமல் பாதுகாக்க வேண்டும். அரிசி விலையும் ஏறிக்கொண்டு போகலாம் என்றால், அரசு எதற்கு? பொறுப்பு எதற்கு? எல்லாப்

பண்டங்களைக் காட்டிலும் இது அத்தியாவசியமான பொருள். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்றார்கள். அதுபோல உண்டி ரொம்ப அத்தியாவசியமானது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, உண்டி கொடுக்கிற வர்களுக்குக் கொஞ்சம் விலை கொடுத்தால் என்ன ?

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, விலை கொடுக்க சக்தி உள்ள வர்கள் கொடுப்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சக்தியற்ற மக்களுக்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சக்தியில்லாதவர்கள் உயிரைக் கொடுங்கள் என்று சொல்கிறீர்களா ?

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, சில நேரங்களில் இரக்கப்பட்டு நாம் அந்தக் காரியத்தையும் செய்துதான் ஆக வேண்டும். மனிதாபிமானம் மட்டுமல்ல, தார்மீக கடமையும் இருக்கிறது. இங்கே தமிழ் நாட்டில் என்ன நிலைமை ? தஞ்சாவூர் மாவட்டத்திலேயே படி அரிசி ஐந்து ரூபாய்க்கு விற்கிறது. இந்த நிலைமை அங்கே. சரி, இந்த நிலைமை ஏன் வந்தது என்று கேட்டால், நம்முடைய நண்பர்கள், "புஞ்சைத் தானியங்கள் மீதான கட்டுப் பாட்டை ரத்து செய்துவிட்டதனால், இந்த விலை ஏறிவிட்டது" என்று சொல் கிறார்கள். மத்திய அரசு புஞ்சைத் தானிய கட்டுப்பாட்டை ரத்து செய்து விட்டதால், புஞ்சைத் தானியங்கள் எல்லாம் வேறு மாநிலங்களுக்குப் போய் விட்டன என்கிறார்கள். அவை இங்கே கிடைக்கின்றன. அந்த விலையாவது பெரும் அளவுக்கு ஏறியிருக்கிறதா என்றால், அரிசி விலை ஏறியிருக்கும் அளவுக்கு விழுக்காடு விகிதாசாரம் இல்லை என்று நான் சொல்வேன். புஞ்சை தானி யத்தின் விலையும் கூடியிருக்கின்றது. ஆனால் அரிசி விலை ஏறிய அளவிற்கு புஞ்சை தானியத்தின் விலை கூடவில்லை.

(பிற்பகல் 5-20)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** புஞ்சை தானியத்தின் விலை அதிகமாக ஏறவில்லை என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் சொல்லுகின்றார்கள். புஞ்சை தானியத்தின் விலை என்ன, அரிசி விலை என்ன என்று அங்கத்தினர் அவர்கள் சொல்ல வேண்டும்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, அவற்றின் விலைகளை அமைச்சர் அவர்கள் எனக்குத் தெளிவாகச் சொல்லலாம். நான் பார்க்கின்ற வரையில், நான் கேட்கின்றவரையில் நான் சொல்லுகின்றேன். என்னிடம் புள்ளிவிவர இலாகா இல்லை. ஆனால் நிச்சயமாகச் சொல்லுகின்றேன், அரிசி விற்கும் விலையைப் பார்க்கும்போது, புஞ்சை தானியங்களின் விலை அந்த விகிதாச்



சாரத்தில் ஏறவில்லை என்று. புள்ளிவிவரம் என்று கேட்டால், நானே விசாரித்து ஒருவாறு காலம் கழித்துச் சொல்ல முடியும். அமைச்சர் அவர் களுக்கே அவற்றின் விலைகள் என்ன என்று தெரியும். தெரிந்தும் அவர்கள் கேட்கின்றார்கள். நான் கரெக்டாகச் சொல்லுகின்றேனா என்று என்னைச் சோதிக்கின்றார். ஆனால் அமைச்சர் அவர்களுக்கு நான் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புவது, அரிசி விலை ஏறிய விகிதாச்சாரத்தில் புஞ்சை தானியங் களின் விலை ஏறவில்லை.

திரு. கணபதி அவர்கள் உரவிலை ஏறிவிட்டதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆனால் நான் கேட்க விரும்புவது, இப்போது இந்த விலையில் விற்கும் நெல்லை யெல்லாம் உரத்தின் விலை ஏறிய பிறகா பயிர் செய்து அறுவடை செய்தார்கள் ? ஏற்கெனவே கொடுத்த உரத்தில் பயிர் செய்த நெல்லைத்தான் இன்று இந்த அளவிற்கு விற்கின்றார்கள். ரூபாய் 40, 45 என்று விற்றுக்கொண்டிருந்த நெல்லை இன்றைக்கு திடீரென்று இந்த அளவிற்கு விற்கின்றார்கள். ஆனால் இதற்கு உபயோகித்த உரத்தை எந்த விலைக்கு வாங்கினார்கள் என்று பார்க்க வேண்டும். நீர்த் தேக்கங்களிலே தண்ணீர் குறைந்துவிட்டதன் காரணமாக அடுத்த மகசூல் எப்படி இருக்குமோ என்ற ஐயப்பாடு காரணமாக ஒரு சிலர் சேமித்து வைத்திருக்கக்கூடும். அப்படிப்பட்ட எண்ணம் ஒரு சிலருக்கு ஏற்படக்கூடும். ஏனென்றால் எப்படி ஆகுமோ என்று தெரியாத நிலையில் . . .

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் இப்போது அதிக விலைக்கு விற்கும் இந்த நெல்லை அதிக விலைக்கு உரம் வாங்கியா விளைவித்தார்கள் என்று கேட்டார்கள். ஆனால் சென்ற தரம் இருந்த நிலையில், அடுத்த தரம் உரம் வாங்குவதற்கு எவ்வளவு அதிகப் பணம் தேவையோ என்று எண்ணக் கூடிய நிலையையும் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்த்தார்களானால், இப்போதுள்ள நெல் விலையினை அவர்கள் ஒப்புக்கொள்ளு வார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, உரங்களைப் பொறுத்த வரையில், திருச்சி மாவட்டத்தில் வியாபாரிகள் என்னென்ன செய்தார்கள் என்பது எனக்குத் தெரியும். என்ன விலைக்கு, எவ்வளவு கூடுதலாக விலை கொடுத்து விவசாயிகள் வாங்குகின்றார்கள் என்பதும் தெரியும். நாம் இங்கே சட்ட பூர்வமான விலையைத்தான் பேசுகிறோம். அதற்கு அப்பாலுள்ள விலைபற்றிப் பேசவில்லை. சட்ட பூர்வமாக கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் தேவையின் காரணமாக ஐந்து ரூபாய் என்ற அளவில்கூட கூலியைக் கொடுக்க வேண்டியிருக்கின்றது, நான்கு ரூபாய்க்குப் பதிலாக.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, நெல்லைப் பொறுத்த வரையில் நெல்லை எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம். நேற்று நான் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் சொன்னேன், 100 ரூபாய் என்ற அளவில் கூட விற்கின்றது என்று. ரூ. 100க்கு பில்லே போட்டுக் கொடுக்கின்றார்கள். அதிலே எந்தவிதமான தடையும் இல்லை.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, யார் வேண்டுமானாலும் அந்த விலைக்கு விற்கலாம். சரிதான். ஆனால் நெல் எங்கே இருக்கின்றது என்று பார்க்க வேண்டும். சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்காக பெரும் நிலச்சுவான்தார்கள்—அவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள்—உச்ச வரம்புச் சட்டப்படி நான் சாதாரண ஆள்தான் என்று அவர்கள் சொல்லக் கூடும். சட்டப்படி அப்படித்தான் இருக்கின்றது. அங்கே நான் போக விரும்பவில்லை. நான் கேட்க விரும்புவதெல்லாம் இன்றைக்கு எதிர்பார்த்ததற்கு மாறாக இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ? இது வரையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள், கிடைத்த தெம்பு, திடம் இவற்றுக்கு மாறாக இந்த அவல நிலை எப்படி வந்தது என்றுதான் யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். உத்தரவுகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். உத்தரவுகளைப் பற்றி ஒரு ஆல்பமே போடலாம். ஒரு நாளைக்கு ஒரு உத்தரவு. ஒரு மாதத்திற்குள் பத்துப் பன்னிரண்டு உத்தரவுகள் பத்திரிகைகளில் பிரசுரமானதைப் பார்த்தோம். இந்த இரண்டு மூன்று மாதங்களிலே இப்படிப்பட்ட வேடிக்கையான நிலைமையைப் பார்த்தோம்.

இந்த நேரத்திலே கூட்டுறவுத்துறை பற்றியும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இத்துறையும் மதிப்பிற்குரிய உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் இருப்பதால், இதைக் குறிப்பிட விழைகிறேன். இன்றைய தினம் உலக வங்கியின் மூலம் நமக்கு அனுமதிக்கப்பட்ட 17 கோடி ரூபாய்—அந்தத் தொகையில் ஒரு கோடி ரூபாய் என்ற அளவில்தான் விவசாய மேம்பாட்டிற்காகப் பெற்றிருக்கிறோம்—அதற்கு மேலே அத்தொகையைப் பயன்படுத்தவில்லை என்ற நிலைமையை நான் கேள்விப்பட்டேன். என்ன பெரிய விவசாய முன்னேற்றம் செய்கிறீர்கள் ? அணைக்கட்டுகளிலே தண்ணீர் கிடையாது. உணவு நிலைமை என்னவாகும் என்று தெரியவில்லை. இருந்தும் அனுமதிக்கப்பட்ட பணத்தில் நாம் இதுவரையில் ஒரு கோடிக்கு மேலே உபயோகிக்கவில்லை. நான் கேட்க விரும்புவது ஏன் கடந்த இரண்டு மூன்று மாத காலத்திலே அதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தியிருக்கக்கூடாது ? அத்தொகையை உபயோகித்தாவது ஷார்ட் டெர்ம் க்ராப்பை உற்பத்தி செய்வதற்கு ஏன் முயற்சி எடுத்திருக்கக் கூடாது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை ஒதுக்கப்பட்ட ரூ. 17 கோடியை பயன்படுத்தவில்லை என்று சொல்லுகின்றார்கள், ஒரு கோடி ரூபாயை மட்டுமே பயன்படுத்தினர்கள் என்றும்



சொல்லுகின்றார்கள். அதைச் செலவழிக்கத் திட்டம் போட்டோம். சென்ற ஆண்டு கிட்டத்தட்ட 30 ஆயிரம் பம்புசெட்டுகளுக்காக ஏற்பாடுகளைச் செய்தோம். அவற்றுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று அதற்கான முயற்சிகளையும் செய்தோம். இந்த ஜூன் மாதத்திற்குள் ஐயாயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு தர மின்சார இலாகா ஏற்றுக்கொண்டாலும், கொடுக்க முடியவில்லை. இரண்டாயிரம் பம்புசெட்டுகளுக்குத்தான் கொடுத்திருக்கின்றார்கள். மொத்தம் 30 ஆயிரம் செட்டுகளில் ஒன்பதாயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று தயாராக வைத்திருந்தும் மின் இணைப்பு கிடைக்கவில்லை. பிறகு டீஸல் என்ணெயைப் பயன்படுத்தலாம் என்று அதற்கு என்று ஒரு ஆயிரம் ரூபாய் சப்சிடி கொடுத்து டீஸலுக்காக ஏற்பாடுகளைச் செய்தோம். அந்த முறையில் கிட்டத்தட்ட ரூ. 52 லட்சம் வரையில் சப்சிடி கொடுத்து உற்சாகப்படுத்தினோம். அதைக்கூட இனிச் செய்யக் கூடாது என்று மத்திய அரசிடமிருந்து உத்தரவு வந்துவிட்டது. அவர்களும் வேண்டுமென்றே இதைப் போடவில்லை. அவர்களுக்கு டீஸல் கிடைக்காத காரணத்தினால், டீசல் பற்றாக்குறை இருக்கின்றது என்று, அப்படி சொல்லியிருக்கின்றார்கள். அப்படி அவர்கள் சொன்ன பிறகு, நமது மாநில அரசின் மற்ற மற்ற துறைகளும் சேர்ந்து முயற்சித்துப் பார்த்தும் முடியவில்லை ; டீசல் கிடைக்காத காரணத்தினால், அதையும் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

பிறகு பம்பாயில் ரிசர்வ் பாங்கியில் நடந்த உலக பாங்கி, மற்றும் உணவு, கூட்டுறவுத் துறைச் செயலாளர்கள் இவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளிலும் அவர்கள் இறுதியாக, இனி டீஸலை நம்பமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு நமது நாட்டிலுள்ள பரம்பரை கவலை ஏற்றத்தைப் பயன்படுத்தலாம் என்றால், அதற்கு உலக பாங்கி அவர்களுடைய சட்டப்படிக்கு ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள். டீஸல் அல்லது மின்சாரத்தில்தான் அதற்கு அனுமதி கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று ரிசர்வ் பாங்கியிடம் கேட்டிருக்கிறோம். அவர்களும் அதற்கான உத்தரவினைப் பெற்றுத் தர முடியுமா என்று பார்க்கிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த நிலையில் திறந்த கிணற்றில் கவலை மூலம்தான் பாசனம் செய்ய முடியுமா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. அதில்கூட 30 அடிக்குக் கீழே போய்விட்டால், மாடுகள் இழுக்காது. அதற்கும் தயாராக ஐயாயிரம் கிணறுகளைத் தயார் செய்து ஏற்பாடாக வைத்திருக்கிறோம். ஆனால் இதுவரையில் உத்தரவு வரவில்லை. மேலும் விவசாயத்திற்கு என கூடுதலாக டீஸல் அனுமதிக்க வேண்டும் என்று சென்ற மாதத்தில் மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறோம். நான்கு

நாட்களுக்கு முன்பு 'யோசித்துக்கொண்டு இருக்கிறோம்' என்று பதில் வந்திருக்கின்றது. அது முடியுமா முடியாதா என்று பின்னால்தான் சொல்ல முடியும். இந்தச் சங்கடங்கள் இருக்கும் காரணங்களினால்தான் அதைச் செயல்படுத்த முடியவில்லை. எனவே கவனிக்காமல் அதை விட்டுவிடவில்லை என்று மட்டும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவரவர்களே, நான் சொன்னதில் ஏறத்தாழ முக்கால் பங்கை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். நான் சொன்னதே அதுதான். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமலிருக்கின்றது என்றுதான் குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் அதிலுள்ள சங்கடங்கள் பற்றிச் சொல்லுகின்றார்கள். சென்ற கால நிலைமைகளைப் புரிந்துகொண்டு, தவறுகளைத் திருத்திக்கொண்டு செயலாற்றவில்லை என்றுதான் நான் சொன்னேன். சங்கடங்கள் இருந்து கொண்டுதான் இருக்கும். அவற்றைத் தீர்த்து வைப்பதற்குத்தான் அரசு இருக்கின்றது. அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அதற்குத்தான் மேலவையில் இந்த விவாதமே வந்திருக்கின்றது. நீண்டகால அனுபவம் உள்ள மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் டீஸல் கிடைக்காத சிக்கல், மின்சாரம் கிடைக்காத சிக்கல் இவற்றைப் பற்றிய பிரச்சினைகள் வரும்போது, அதைச் சமாளிப்பதற்கான தக்க ஆலோசனைகளைச் சொன்னால், அவற்றை மத்திய அரசுக்கும் எழுதியனுப்ப உதவிகரமாக இருக்கும்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவரவர்களே, இன்றைக்காவது குறைந்த பட்சம் 'ஆலோசனைகளைக் கொடுக்கலாம்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல முன்வந்ததற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்ளுகிறேன். ஏனென்றால் இதுபோன்ற விஷயங்களிலே எதிர் வரிசையிலுள்ள நாங்கள் கொடுக்கும் ஆலோசனைகளைக் கேட்கவில்லை என்பதுதான் எங்கள் வருத்தமெல்லாம். கடந்த காலங்களிலே என்னென்ன யோசனைகளையெல்லாம் சொல்லி வந்திருக்கிறோம் என்பதெல்லாம் அச்சில் இருக்கின்றன. அவற்றை கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லையே என்பதுதான் எங்கள் வருத்தமெல்லாம். அன்றைக்கு அவற்றுக்குப் பதில் சொல்லும் நேரத்திலே எனக்காகக் கூட பதில் சொல்லவில்லை. உணவு அமைச்சர் அவர்கள் பொதுப்படையாகவே பதில் சொன்னார்கள். எல்லாம் சரியாகவே இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் இன்றுள்ள நிலைமை விவசாயம் செய்கின்றவர்களுக்கும் லாபமில்லை, வாங்குகின்றவர்களுக்கும் லாபமில்லை. கிராமப்புறங்களிலே உள்ள சிறு விவசாயிகள், இரண்டு மூட்டை, மூன்று மூட்டை வைத்துக் கொண்டிருப்பவர்களும் மூட்டை ரூ. 70, ரூ. 80 என்று விற்பதைப் பார்த்து ஒரு ஆசையால், டெம்டேஷனால், எந்தக் காலத்தில் இந்த விலைக்கு விற்கப்போகிறது என்று அதையும் விற்று விட்டார்கள். ஆகவே சாதாரண விவசாயிகளிடத்திலே இன்றைக்கு நெல் கிடையாது. பெரும் நிலச்சுவான்தார்கள் ரொம்பக் குறைவானவர்கள்தான். குறைவான அளவுதான் அவர்களிடம் இருக்கும். அப்படியானால் அரிசி எங்கே போயிற்று? ஏன் இப்படி ஒரு சர்ப்ளசாக இருந்த உணவு நிலை, பற்றாக்குறை இல்லாத ஒரு நிலை, மாறி, இந்த நெருக்கடி உண்டாயிற்று என்றால், வணிகர்கள் ஹோர்டிங் செய்கிறார்கள், ஸ்பெகுலேஷன் காரணமாக சேமித்து வைத்திருக்கிறார்கள் என்கிறார்கள். வணிகர்கள், அரசாங்கம் பொறுப்பு என்று சொல்லி விட்டார்கள். இப்படி வணிகர்கள் மாநாட்டில் பேசியதாகச் செய்திப் பத்திரிகைகளில் படித்தேன். அவர்கள் அரசாங்கம் தான் பொறுப்பு என்று சொல்கிறார்கள். என்ன தைரியத்தில் சொல்கிறார்களோ தெரியவில்லை. வணிகர்கள் அரசாங்கம் பொறுப்பு என்கிறார்கள். விவசாயிகளைக் கேட்டால் எங்களிடத்தில் நெல் இல்லை என்கிறார்கள். ஏழை எளிய நடுத்தர மக்களைக் கேட்டால், இனி கூடுதலான சம்பளத்திற்குச் சண்டை போடவேண்டியதுதான் என்கிறார்கள். தங்களுக்குக் கட்டாத விலைக்கு வாங்க முடியாது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட தர்ம சங்கடமான நிலைக்குக் காரணம் அமைச்சரவை என்று குற்றஞ் சாட்டுகிறேன். பொறுப்பை அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டியது உணவு அமைச்சகம்தான், அதிகாரிகள்தான். இதில் எந்தவிதமான மாற்று அபிப்பிராயத்திற்கும் இடம் இருக்க முடியாது. இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற உணவு அமைச்சகம், அமைச்சர் இதற்கு நியாயமான முகாந்திரத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.





(பிற்பகல் 5-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு உணவுப் பிரச்சினை நெருக்கடியாக நாட்டில் வளர்ந்திருக்கிறது என்பதை இந்த அவையில் உணவுப் பிரச்சினை விவாதம் எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு நாம் பொருளாகக் கொள்ளலாம். இங்கே நடந்த விவாதத்தில் பொருள்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கின்றன என்ற வாதமும், பொருள்கள் கிடைக்காத காரணத்தினால் தட்டுப்பாடு ஏற்பட்டது என்ற வாதமும் சொல்லப்பட்டன. மத்திய அரசு, மாநில அரசு எந்தெந்த அளவிற்கு என்னென்ன காரியங்கள் செய்திருக்கின்றன என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆசிரியர்கள் சார்பாக, இன்றைக்கு இந்த உணவுப் பிரச்சினை காரணமாக ஆசிரியர்களுக்கு

ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமைகளை எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையாகும். விலைவாசி உயர்ந்திருக்கிறது. இங்கே அரிசி விலை உயர்வை ஒத்துக் கொண்டார்கள். இங்கே ஒத்துக்கொண்டு சொல்லப்பட்டதிலிருந்து இன்றைக்கு ஊழியர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு, மாண்புமிகு நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்னதுபோல அரிசி கிடைக்கவில்லை, அரிசி கிடைக்கும் போது உயர்ந்த விலை கொடுத்தால்தான் அரிசி கிடைக்கிறது. அப்படி உயர்ந்த விலை கொடுப்பதென்றால், நாங்கள் ஏற்கெனவே வாங்கிக்கொண்டிருந்த சம்பளத்தில் குடும்பம் நடத்த வழியில்லாமல் இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்வேன். அரசு ஊழியர்கள், மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள் அத்தனை பேர்களுமே இந்தப் பிரச்சினையில் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு எனக்குத் தெரிந்தவரை ஒரு காரணம் இருக்கிறது, அதற்கு உணவு அமைச்சரவர்கள் விளக்கம் சொல்வார்கள் என்று நம்புகிறேன். நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்ன நேரத்தில் 40 ரூபாய்க்கு 62 கிலோ நெல்லை நிறைய வியாபாரிகள் வாங்கினார்கள், விவசாயிகள் போட்டார்கள். அந்த நேரத்தில் அரிசித் தட்டுப்பாட்டைத் தவிர்க்க எவ்வளவு இந்த நாட்டு மக்களுக்காக ப்ரொக்யூர்மெண்டு செய்திருந்தால், ஏற்கெனவே அரசாங்கமே வாங்கி ஸ்டாக் வைத்திருந்தால் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தலாம் என்று அரசுக்குத் தெரிந்திருக்கும். அப்படித் தெரிந்திருந்த நேரத்தில் எத்தனை லட்சம் டன் நாம் 'ப்ரொக்யூர்' செய்திருக்கிறோம் என்பதை இங்கே தெளிவாக உணவு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும், விலையைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதையும் தெளிவாக்க வேண்டும். இந்த நேரத்தில் விலைவாசி உயர்ந்ததன் காரணமாக, விலைவாசி உயர்வுப் புள்ளி ஏறியதன் காரணமாக, 5 ஊதிய உயர்வுகள், டி. ஏ. மத்திய அரசு தந்திருக்கிறது. மாநில அரசு இன்றைக்கு வரை கூட தராமல் இருக்கிறது. ஆனால் விலைகளோ இரண்டு மடங்காக உயர்ந்திருக்கின்றன. ஆகவே மாநில அரசு ஊழியர்கள் வாழ்க்கை நிலையைச் சரிக்கட்டுவதற்காக உடனடியாக இந்த அகவிலைப்படியை உயர்த்த வேண்டும். மத்திய அரசு தந்திருக்கக்கூடிய 5 படிகளையும் கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசு வேடிக்கையான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அது விநோதமானதாகும். இங்கே பஞ்சம் வந்திருக்கும் நேரத்தில் விலை உயரும்போது, விலை உயர்வுப் படி தருகிறார்கள். அந்தப் படியில் பாதியை முடக்கி விட்டோம் என்று சொல்கிறார்கள். இது ஊதிய முடக்கச் சட்டமாக இல்லை, ஊழியர்களை முடக்கும் சட்டமாக வந்திருக்கிறது என்று வன்மையாகக் கண்டிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் என்று மாநில அரசும் குரல் எழுப்ப வேண்டுமென்று இந்த அவையில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். **ஊழியர்களுக்கு** விலைவாசி உயர்வைச் சரிக் கட்டிக் கொள்வதற்காகக் கொடுக்கக்**கூடிய**





படியில் பாதியை அரசாங்கமும் நிறுத்தி வைத்துக்கொள்வது வேடிக்கையானதாக, விநோதமாக இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஊழியர்கள் சார்பாக உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்ற கருத்தை ஆதரித்து இந்த அவையில் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று இந்த அமைச்சரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். டி.ஏ. பற்றிக் கேட்பதற்கு உரிமை . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவரவர்களே, உணவுப் பிரச்சினை சிக்கலைப்பற்றிப் பேசினால், பொருத்தமாக இருக்கும். இப்படி டி.ஏ. பற்றி பேசுவார்களானால், இப்படி பஞ்சப்படி கொடுத்துத்தான் விலை உயர்ந்துவிட்டது என்று மத்திய அரசு கருதுகிறது. இதை பலர் ஒத்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். பஞ்சப்படி கொடுப்பதால் விலையேற்றம், அதற்குப் பிறகு பஞ்சப்படியை ஏற்ற வேண்டிய நிலைமை என்ற கருத்து இருக்கிறது. உணவுப் பிரச்சினை, சிக்கலைத் தீர்ப்பதற்கு பஞ்சப்படி கொடுக்க வேண்டுமென்று கேட்கின்ற வாதம் பொருத்தமாக இருக்காது, உதவியாக இருக்காது.

திரு. செ. முத்துசாமி : இப்படி மத்திய அரசு சொல்லக்கூடிய வாதத்தை ஏற்றுக்கொண்டு அமைச்சரவர்கள் பேசுவார்களானால், என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. விலை உயர்ந்து விட்டதனால் பஞ்சப் படி தரப்படுகிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நான் அதை ஏற்றுக்கொண்டு சொல்வதாக அங்கத்தினர் கருதத் தேவையில்லை. இப்படிக் கருத்து நிலவுவதாக பல மக்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள். பஞ்சப் படி கொடுப்பதுதான் விலைவாசி ஏறுவதற்குச் சாதகமாக இருக்கிறது என்று ஒரு சாரார் சொல்கிறார்கள். பஞ்சப் படி தருகிற காரணத்தினால், விலை ஏறுகிறது என்று நினைக்கின்ற மக்கள் பலர் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கருத்து பொருளாதாரத் துறையில் நிலவிக் கொண்டிருக்கிறது. இது 'விஷஸ் சர்க்கிள்' போல இருக்கிறது என்று கருதுகிறார்கள். நான் இதை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், இங்கே உணவுப் பிரச்சினை விவாதிக்கப்படுகிறது. இது முக்கியமான பிரச்சினை. இந்தப் பிரச்சினையை விட்டு வேறு பிரச்சினைபற்றிப் பேசினால், பொருத்தமாக இருக்காது.

திரு. செ. முத்துசாமி : இதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைபற்றித் தான் சொன்னேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் விலைவாசி உயர்வு என்பது விஷ வட்டம். அந்த வட்டத்தில் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விஷயத்திற்கு வந்து விடுங்கள். இது சரியா, தப்பா என்ற விவகாரத்திற்குள் போனால் என்ன ஆவது?

**திரு. செ. முத்துசாமி :** துணைத் தலைவரவர்களே, நான் முழுக்கச் சொல்வதைப் பார்த்தால், நான் பதில் அளிக்கிறேனா அல்லது பிரச்சினையைப்பற்றிப் பேசுகிறேனா என்பது தெரியும். ஆகவே என்னை அனுமதிக்க வேண்டும். உணவுப் பிரச்சினையால், எழுந்திருக்கக் கூடிய பிரச்சினையைப்பற்றிப் பேச வேண்டியது என் கடமையாகும். நான் குறிப்பிடுவது உணவுப் பிரச்சினை காரணமாக இன்றைக்கு விலைவாசி ஏறிவிட்டதன் காரணமாக எழுந்துள்ள பிரச்சினையாகும். என்னைப் பொறுத்த அளவில், ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையில், உணவுப் பிரச்சினை சம்பந்தமான பிரச்சினையைப்பற்றிப் பேசுகிறேன் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரிசி விலை உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு ஆசிரியப் பெரு மக்கள் தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவு வழங்கும் பொறுப்பை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அரிசி விலை மிக உயர்ந்து விட்ட நிலையில் மதிய உணவு மையங்களை நடத்த முடியவில்லை. ஏற்கெனவே கல்வி அமைச்சரவர்களும், மற்ற அமைச்சர்களும இங்கே அவையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியப் பெரு மக்கள் தாங்களாகவே முன்வந்து இந்தத் திட்டத்தில் பணி புரிகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையினுடைய நடவடிக்கைக் குறிப்பில இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதற்கும் இந்தப் பிரச்சினைக்கும் எப்படி சம்பந்தம் என்று கூற வேண்டும். ஒட்ட முடியும் என்று ஒட்ட வேண்டாம். இருக்கிறது கொஞ்ச நேரம். 10 பேர்கள் பேசவேண்டியிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** கொடுக்கப்பட்ட நேரத்தில் முடித்து விடுகிறேன். இந்த நெருக்கடியான பிரச்சினையால் மதிய உணவு வழங்க முடியாமல் அதைக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மதிய உணவிற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கோவையிலிருந்து, இப்படி ஆசிரியர்களுக்குக் கொடுத்தும் மாணவர்களுக்குச் சமைத்துப் போட மாட்டோம் என்று உங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் அடம் பிடிப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. உண்மையா என்று பார்த்து முடிவெடுக்க வேண்டும். கலெக்டர் கொடுக்கிற நியாய விலைக்குக் கொடுக்கிற அரிசியை சமைத்துப் போட மறுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் திரு. முத்துசாமி அவர்களிடம் எதிர்பார்ப்பது, இப்படி ஏறிய விலையில் மதிய உணவு வழங்க முடியவில்லையா, அல்லது வழங்க மாட்டேன் என்று சொல்கிறார்களா என்பதற்கு பதில் வேண்டும்.



**திரு. செ. முத்துசாமி :** அமைச்சரவர்கள் அக்கறையோடு கேட்டுக் கொண்டதற்கு இணங்க தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்கள் மதிய உணவுப் பொறுப்பிலிருந்து தாங்களாக விலகிக்கொள்ள முடிவு செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** உணவுப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் நாம் விவாதம் செய்துகொண்டிருக்கிறோம். இப்படி பகிரங்கமாக திரு. முத்துசாமி அவர்கள் ஒத்துக்கொண்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் அவர் தலைமை வகித்து வரும் ஆசிரியர் கூட்டணி மாணவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற இந்த அரிசியை சமைத்துப் போடுவதற்கு மறுக்கிறது. இந்த உண்மையை ஒத்துக்கொண்டதற்கு நன்றி.

**திரு. செ. முத்துசாமி :** இதிலே மறைப்பதற்கோ, ஒத்துக்கொள்ளாமல் இருப்பதற்கோ எதுவுமில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன். இப்போதும் சொல்வேன், என்றைக்கும் சொல்வேன். ஆசிரியப் பெரு மக்கள் இன்றைக்கு மதிய உணவுத் திட்டத்தை நடத்த முடியாது என்ற நிலையில் இரண்டு மாத நோட்டீஸ் தந்துள்ளார்கள். மாற்று ஏற்பாடு செய்யுங்கள், மாற்று ஏற்பாடு செய்து மற்றவர்கள் மூலமாக உணவை வழங்குங்கள். இப்படி உணவு வழங்கக் கூடியதை 17 ஆண்டு காலமாகச் செய்தோம். இன்றைக்கு எங்களால் முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** விலைவாசி உயர்ந்ததால் நாங்களே நியாய விலைக்குக் கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் சமைக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 5-40)

**திரு. செ. முத்துசாமி :** இந்த நியாய விலை என்பது அன்றைக்கு அரசு சொல்லுகிற நியாய விலை, ஆறு பைசா என்பது 1957-ல் கொடுக்கப்பட்டதாகும். இன்றைக்கு உள்ள விலை என்ன ? . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மாதிரிப் பேசக்கூடாது. உணவுப் பிரச்சினைக்கு வாருங்கள், கொஞ்ச நேரம் தான் இருக்கிறது, அதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**திரு. செ. முத்துசாமி :** அமைச்சர் அவர்கள் கேட்டதற்கு விளக்கம் கொடுத்தேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறோம். எப்படியோ எதிர்பாராமல் விலை உயர்ந்திருக்கிறது. இந்த

துர்ப்பாக்கியமான நேரத்தில், மாணவர்களுக்கு இளம் பிஞ்சுகளுக்கு, அரசாங்கம் லாபமில்லாமல் கட்டுபடியாகக்கூடிய விலையில் அரிசி கொடுக்கிறது. இந்த வறுமையான நேரத்தை உத்தேசித்து சண்டித்தனம் செய்யாமல் ஆசிரியர்கள் உணவை வழங்குகின்ற வேலையைச் செய்ய வேண்டுமென்று தங்கள் மூலம் ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** இயலாத ஒன்றுக்காக ஆசிரியர்கள் சண்டித்தனம் செய்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அன்றைக்கு ஆசிரியர்கள் செய்ய முன்வந்தார்கள். இன்றைக்கு அவர்களால் முடியவில்லை. அன்று இரண்டு ரூபாய்க்கு அரிசி கொடுத்தார்கள். அதை வைத்து மதிய உணவு போட்டோம். இன்றைக்கு செய்வதற்கு இயலவில்லை என்று சொல்லுகிறோம். அந்தப் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்கிறோம். கட்டாயமாகச் செய்ய வேண்டும் என்பதல்ல. இதை ஏன் வேறு ஒரு அமைப்பின் மூலமாகச் செய்யக்கூடாது; பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள்—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அவர்களை வைத்து வேறு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்களால் இயலாது என்ற காரணத்தால், இயலாது என்று சொல்லுகிறார்கள். இயலும் என்று சொல்லுகிறவர்கள் இருந்தால் செய்யுங்கள் . . .

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** பஞ்சாயத்து போர்டில் உள்ளவர்கள் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஏன் அப்படிச் சொல்லுகிறார்கள் ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விஷயத்திற்கு வாருங்கள். நேரமில்லை.

**திரு. செ. முத்துசாமி :** அமைச்சர் அவர்கள் கேட்டதற்கு இங்கே ஆசிரியர்களின் பிரதிநிதி என்ற முறையில் பதில் அளிக்கக் கடமைப்பட்டுள்ளேன். புதிய கணக்கு முறை, நியூ மாத்ஸ், சயன்ஸ் பாடங்கள் எல்லாம் நாங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உணவுப் பிரச்சினையைப்பற்றிப் பேசாமல் ஆசிரியர்கள் பிரச்சினையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தால், அது கடைசியில் பாடத்திட்டம் வரையிலும் போகிறது ; பின்னாலே பேசுகிறவர்களுக்கு நேரம் இல்லாமல் போய்விடும்.

**திரு. செ. முத்துசாமி :** இந்த உணவுப் பிரச்சினையில் தீர்வு காண, தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் நியாய விலையில் அரிசி கிடைக்க நியாய விலைக்கடைகளைத் திறக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்



வொரு ஊரிலும் இந்த நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டும். ஏறிவிட்ட விலைவாசியை ஈடுகட்டுவதற்கு, டி.ஏ. கமிட்டி அறிக்கை வருவதற்கு முன்னால்; ஏதாவது தருவதற்கு தமிழ் நாடு அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய மன்றத்தில் மாநிலத்திலுள்ள உணவுப் பிரச்சினைபற்றி அங்கத்தினர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் அரசின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல நண்பர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு மாநிலத்தில் உணவு நிலைமையில் பற்றாக்குறையா அல்லது விலையேற்றமா என்ற இரண்டு வாதங்கள் இருக்கின்றன. பொதுவாக விலையேற்றம் தான், பற்றாக்குறை இல்லை என்ற ஒரு எண்ணம் இருக்கிறது. நெல் அதிக விலைக்குக் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு, உற்பத்திச் செலவு அதிகமாகிறது என்ற காரணத்தை வைத்து அரசாங்கம் அவர்களுக்கு உற்பத்தி விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான சாதனங்களின் விலை உயர்ந்திருக்கிறது. குறிப்பாக, பாசன வசதிக்காக உபயோகப்படும் மோட்டார் பம்ப்செட்டுகள் இருக்கின்றன. அவற்றை உபயோகித்து அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அதனுடைய விலை ஏறிவிட்டது. சமீபத்தில் கூட மத்திய அரசு மோட்டார் பம்ப்செட்டின் விலையை ஒன்றுக்கு நான்கு மடங்காக உயர்த்தியிருக்கிறது. மத்திய அரசின் ஆளுங் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. ஆறுமுகசாமி இதுபற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காப்பர் கம்பி விலை ஒன்றுக்கு நான்கு மடங்காக விலை உயர்ந்திருக்கிற காரணத்தால், மோட்டார் பம்ப் செட்டில் உள்ள காயில் தேய்ந்து விட்டால், அதை வாங்கும் விலை மோட்டார் பம்ப்செட் விலை அளவுக்கு வந்துவிட்டது. இதை எல்லாம் அவர்கள் சிந்திக்க வேண்டும். மோட்டார் பம்ப்செட்டுகளை வைத்து நாம் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். முன்பு 1966-ல் 2 லட்சம் மோட்டார் பம்ப்செட்கள்தான் இருந்தன. இன்றைக்கு 6 லட்சம் செட்கள் இருக்கின்றன. இந்த அளவிற்கு முன்னேற்றம், உற்பத்திப்பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. உரத்தின் விலை ஒன்றுக்கு மூன்று மடங்கு உயர்ந்திருக்கிறது. மத்திய அரசாலே உரத்தின் விலை ஏற்றப்பட்டிருக்கிறது. அப்படியே இன்னும் பல விவசாயிகள் உபயோகிக்கும் பொருட்களின் விலையும் ஏறியிருக்கிறது.

இன்றைக்கு படி அரிசி 5 ரூபாய். சாதாரண மக்கள், வாங்கிச் சாப்பிடுகின்ற மக்களின் நிலை பயங்கரமாகத்தான் இருக்கிறது. அதைத் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம், கஷ்டம் அரசுக்கும் மக்களுக்கும் இருக்கிறது. அதற்காக நிலைமை இப்படியே நீடிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இந்த விலை

யேற்றத்திற்குப் பொறுப்பு மாநில அரசுமட்டுமல்ல, மத்திய அரசும் இதற்குப் பொறுப்பாகும். இரண்டு அரசுகளும் சேர்ந்து முயற்சித்தாலொழிய, இந்த விலையேற்றத்தைத் தடுக்க முடியாது. நம்முடைய தமிழக அரசிடம் போதுமான உணவு ஸ்டாக் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இரண்டு நாளைக்கு முன்பு மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் டெல்லி அமைச்சர் திரு. சுப்பிரமணியத்தைச் சந்தித்து நெல் கடனைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு முடியாது என்று மறுத்துவிட்டார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தேன். பற்றாக்குறை இருக்கிறதா? சர்க்காரின் அறிக்கை நம்மிடம் போதுமான ஸ்டாக் இருக்கிறது என்பதாகும். விநியோகம் செய்வதில் ஏதாவது இடைஞ்சல்கள் இருக்கிற காரணத்தால், இந்த மாதிரி நடந்து விட்டதா என்று தெரியவில்லை. ஒரு பெருத்த பயங்கரம், ஆபத்தான நிலைமையை தமிழகத்தில் உண்டு பண்ணப் பார்த்தார்கள். அரசு எப்படியோ சாமர்த்தியமாக அதைச் சமாளித்துவிட்டது. சமீபத்தில் கட்டுப்பாட்டை எடுத்ததனால் தஞ்சையிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் வெளி மாநிலங்களுக்கு அரிசி எல்லாம் போய் விட்டது என்ற வதந்தி பெருவாரியாக இருக்கிறது கள்ளக் கடத்தலாகப் பெருவாரியான நெல் போய்விட்டது என்று சொல்லுகிறார்கள். அரசு விழிப்பாக இருந்து எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த முடியுமோ அதையெல்லாம் செய்து இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டும். உணவுப் பிரச்சினை என்பது மக்கள் பிரச்சினை. ஒரு தனிப்பட்ட கட்சியின் பிரச்சினை அல்ல. ஆகவே எல்லோரும் ஒன்று சேர்ந்து, தகுந்த ஆலோசனை கூறி, ஒத்துழைப்பைத் தந்து இந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டும்.

யூரியா, நெல் விவசாயத்திற்கு மட்டும்தான் கொடுக்கிறார்கள். கேழ்வரகு மற்ற தானியங்களுக்குக் கொடுப்பதில்லை. கார்டு சிஸ்டம் வைத்து ஏதாவது கொஞ்சம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

திரு. ஆறுமுகசாமி அவர்கள், புஞ்சைத் தானியம் அதிக விலை என்று சொன்னார்கள். நெல்லை விட புஞ்சை தானியங்கள் 10 ரூபாய் அதிகமாக விற்கின்றன. அது எனக்குக்கூடத் தெரியும். காலையில்கூட ஒரு நண்பர் சொன்னார். கேழ்வரகு நெல்லைவிட 10 அல்லது 20 ரூபாய் அதிகமாக விற்கிறதென்று சொன்னார். என்ன காரணத்தைக் கொண்டோ, பத்திரிக்கைகளில் தப்பான விளம்பரங்களைக் கொடுத்து, மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள். ஆனால் அச்சப்பட எந்தக் காரணமும் இல்லை. அனைவரும் ஒத்துழைத்தால், அந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும்.





அதே சமயத்தில் உணவைப் பதுக்குகிறீர்களென்று விவசாயிகளிடம் போய் சோதனை போடுவது, பறிமுதல் செய்வது ஆகியவற்றைச் செய்கிறார்கள். விவசாயிகள் கொஞ்சம் வைத்துத்தான் இருப்பார்கள். விவசாயக் கூலிகளாக இருக்கிறவர்கள், ‘எங்களுக்குப் பணம் வேண்டாம், நெல்லாகக் கொடுங்கள்’ என்று சொல்லுகிறார்கள். அந்த நிலைமையைச் சமாளிப்பதற்குக் கொஞ்சம் நெல்லை வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எங்கள் பகுதியில் கூலிக்கு நெல் கொடுப்பதில்லை; பணம்தான் கொடுப்போம். ஆனால் இன்றைக்கு நெல் கொடுங்கள்; பணம் வேண்டியதில்லை என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டு, என்னென்ன வகையில் விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமோ, பாதுகாப்பு கொடுக்க வேண்டுமோ அவைகளையெல்லாம் கொடுத்து மேலும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி வகை செய்ய வேண்டும். மேலும் மற்ற பொருள்களின் விலைகளுக்கேற்ப, விவசாயிகளுக்கும் சரியான விலையைக் கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, விடைபெறுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இன்று சிறிது நேரத்திற்கு முன்னால் மாண்புமிகு அங்கத்தினர் திரு. கே. எஸ். மணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே அரிசி அதிக விலை விற்றுக் கொண்டிருக்கிறதென்பதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டாலும், மற்ற பொருள்களைப் பார்க்கிறபோது, அரிசியினுடைய விலையேற்றம் அதிகமாக இல்லை என்ற கருத்தைச் சொல்லி, இதை எதிர்க் கட்சிக்காரர்கள் மிகவும் அதிகப்படுத்துகிறார்கள் என்ற தொனியில் பேசினார்கள். நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் நல்ல சந்தர்ப்பத்தில் வந்திருக்கிறார்களென்று நினைக்கிறேன். அவர்கள் அண்மையில்தான் டெல்லிக்குப் போய்விட்டு வந்திருக்கிறார்கள். வெறும் கையோடு வந்தீர்களா என்று கேட்டேன். அவர், அதைப் புரிந்து கொண்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை. அவர்கள் டெல்லிக்குச் சென்றது பற்றியும், விவசாய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைப் பார்த்தது பற்றியும், அங்கே 40,000 டன் அரிசி கடனைக் கேட்டது பற்றியும், அவர் தர இயலாதென்று மாத்திரம் சொல்லாமல் அத்துடன் சில அறிவுரைகளைச் சொன்னதாகவும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். வங்காள மாநிலம் கேட்டபோது கொடுக்க மாட்டோம் என்று சொன்னோம். இப்போது உங்களுக்கு எப்படிக் கடனை வழங்க முடியும் என்று கேட்டதாகவும், உங்களைப் போல உபரி மாநிலம் கடன் கேட்பது நல்லதில்லை என்று சொன்னதாகவும் பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள். செய்தி அநேகமாகச் சரியாகத்தான் இருக்குமென்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நான் மவுனமாக இருப்பதால், செய்தி சரியாக இருப்பதாக ஊர்ஜிதம் செய்துகொண்டு போக வேண்டாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மவுனமாக இருப்பதால், அதை சரியென்று எடுத்துக்கொள்ள வேண்டாமென்று சொன்னார்கள். நமது மாநிலத்தில் 57 லட்சம் டன் அரிசி விளைந்திருக்கின்றது. 4 லட்சம் டன் அரிசி அதிகப் படியாக விளைந்திருக்கிறது, ஓராண்டுக்கு ஓராண்டு.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிக விளைச்சல் இல்லை. தயவுசெய்து தங்களுடைய புள்ளி விவரத்தை திருத்திக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** வேளாண்மைக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1972-73-லே அரிசி உற்பத்தி 55 லட்சம் டன் ; 1973-74-ம் ஆண்டு அரிசி உற்பத்தி 57 லட்சம் டன் என்று சொல்லியிருக்கிறார் கள். இப்போது 1974-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இருக்கிறோம். அவர்கள் 1974-75க்குச் சொன்னார்கள். 4 மாதம் ஆகியிருக்கிறது. அவர்களே, குறுவை சரியாக விளையாதென்று முடிவுக்கு வந்திருக்கிறார்களோ என்னவோ தெரிய வில்லை. அப்படி விவசாய அமைச்சரவர்கள் கருதுகிறார்களென்றால், துர்பாக் கியமான நிலைமையில் தமிழ்நாடு இருக்கிறதென்று அர்த்தம்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** வேளாண்மைக்குத் தனியாக ஆண்டு உண்டு. காலண்டருக்கு ஜனவரி முதல் டிசம்பர் வரை இருக்கிறது. கூட்டுறவு ஆண்டு ஜூலை முதல் ஜூன் வரை. வேளாண்மை ஆண்டு என்பது ஒரு சாபி, ஒரு காரிப் சேர்ந்தது. எனவே வேளாண்மை ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் அடுத்த ஆகஸ்டு வரை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ஜூலை முதல் ஜூன் வரை என்று சொன்னார்கள். 1973-74 என்பது 1973 ஜூலை முதல் 1974 ஜூன் வரை. இப்போது நாம் அதில் தான் இருக்கிறோம். எதிர்பார்ப்பது 57 லட்சம் டன் என்று இருக்கலாம். 1973-74-ம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் வேளாண்மை உற்பத்தியின் அளவு 57 லட்சம் டன் என்று இருக்கலாம். இந்த மாதம் வரை எதிர்பார்ப்பது 57 லட்சம் டன் என்று அவர்கள் குறிப்பிட்டதாகக் கருதுகிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, வேளாண்மை ஆண்டைப் பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். எனினும், எப்போது பார்த்தா லும் அறுத்துக்கொண்டே இருக்கிறார்கள். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை, 50 நாட்களுக்கு ஒரு முறை என்று நெல் எப்போதும் வந்து கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு துணைத் தலைவர் மணி அடித்தார்).





**திரு. ஜி. சுவாமிநாதன் :** 57 லட்சம் டன் விளையவில்லை அல்லது 55 லட்சம் டன்தான் விளைந்தது அல்லது அதற்குக் குறைவாக இருக்கிறதென்று கணக்கு சொல்லுகிறாரா என்பது தெரியவில்லை. அவர்கள் கொடுத்த கணக்கைப் பார்க்கிறபோது, சென்ற ஆண்டைவிட, இந்த ஆண்டு அதிகப்படியாக விளைச்சல் இருக்கிறது என்பதுதான் தெரிய வருகிறது. இப்படிப்பட்ட நிலைமை யில் தமிழகம் இருக்கிறது. நம்முடைய உணவு கூட்டுறவுத் துறை அமைச்ச ரவர்கள் உணவுக் கொள்கை விளக்கக் குறிப்பிலும் அப்படித்தான் சொல்லி யிருக்கிறார்கள். நல்ல முறையில் அரிசி விளைந்திருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல முறையில் விளைந்திருக்கிறது என்பதைச் சொல்லிவிட்டு, 40 ஆயிரம் டன் அரிசி மத்திய அரசிடம் போய் கடன் கேட்கக் கூடிய ஒரு துர்பாக்கியமான நிலைமையில் தமிழகம் இருக்கிறதென்பதை . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இதுபற்றி விளக்கி விடுவது என்னுடைய கடமையென்று நினைக்கிறேன். நான் காவிரி நீர்ப் பிரச்சினைபற்றி மாண்புமிகு திரு. பந்த் அவர்களைச் சந்திப்பதற்காக டெல்லிக் குச் சென்றேன். " நமக்கு உரிய தண்ணீரை மைசூர் அரசாங்கம் விடவில்லை; அதைத் திறந்துவிட வேண்டும்; அதற்கு நீங்கள் சொல்ல வேண்டும் " என்று சொல்வதற்காகச் சென்றேன். அப்போது மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களையும் நான் சந்தித்தது உண்மை. அவரைச் சந்தித்து நீங்கள் காவிரி நீர்ப் பிரச்சினையில் தலையிட வேண்டும் என்று சொன்னது உண்மை. நான் உணவுப் பிரச்சினைபற்றி அவரிடத்தில் பேசியது உண்மை. அவரிடம் உணவைக் கடனாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதும் உண்மை. அவர் சொன்ன பதில் பத்திரிகையில் இருப்பதாக இப்போது படித்தார்கள். நான் அதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். 40,000 டன் அரிசி அவர்களைக் கேட்டோமென்று சொன்னால், நம்மிடத்தில் அரிசி இல்லை ; தமிழ்நாடு ஏதோ பயங்கரமான சூழ்நிலையில் இருக்கிறது என்ற நிலை ஏற்படும். கடனாக அரிசி கொடுக்க வேண்டுமென்று நான் போய்க் கேட்டது பல பத்திரிகைகளில் வந்தால், உடனடியாக அது பதுக்கி வைப்பவர்களுக்கு ஊக்கம் கொடுப்பது போல் ஆகிவிடக்கூடாதென்பதற்காகத்தான் இந்தச் செய்தியை மறுத்துச் சொல்கிறேனே தவிர, வேறு காரணங்களுக்காக இல்லை. சென்ற ஆண்டு மத்திய அரசு நம்மைக் கேட்டபோது, 1 லட்சத்து, 50 ஆயிரம் டன் சென்ட்ரல் பூலுக்குக் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு 50,000 டன் நாம் கொடுத் திருக்கிறோம். சென்ட்ரல் பூலுக்கு மொத்தம் 2 லட்சம் டன் கொடுத்திருக்கிறோம். இதை நாம் மறந்துவிடக்கூடாது. வேறு மாநிலங்களுக்கு ஆபத்து ஏற்பட்ட நேரத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டபோது, இந்தியா ஒரே நாடு என்று ஒத்துக்கொண்டு, அவர்களுக்கெல்லாம் உதவ வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடுதான், குஜராத் போன்ற மாநிலங்கள் கேட்டபோதெல்லாம்

நமக்குச் சிரமம் இருந்தபோதுகூட கொடுத்து உதவினோம். இந்த நல்லெண்ணத்தோடுதான் நான் போய்க் கேட்டேன். இந்த நேரத்தில் கொஞ்சம் கடனாகக் கொடுங்கள். குறுவையில் திருப்பிக் கொடுத்து விடுகிறோம் என்று கேட்டேன். அவர்கள், "இப்போது அரிசி இல்லை; கோதுமை வேண்டுமென்றால் கொடுக்கிறேன்; அதைப்பற்றி யோசிக்கிறேன்" என்று சொன்னார்கள். மேற்கொண்டு சில தகவல்களை உணவு அமைச்சரவர்களுக்கும், முதலமைச்சரவர்களுக்கும் தெரிவிக்கச் சொன்னார்கள். நான் அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன். **இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களைக்** கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழ்நாட்டில் பீதியை ஏற்படுத்த வேண்டாமென்பதுதான். **போதுமான அரிசி கையிருப்பில் இருக்கிறது. நிச்சயமாக எந்த** சந்தர்ப்பத்தையும் சமாளிக்க அரசால் முடியுமென்ற முழு நம்பிக்கையோடுதான் உணவு அமைச்சரவர்கள் தைரியமாக இருக்கிறார்கள்: அரிசி இல்லாமல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை மிகைப்படுத்திப் பேசி தமிழ்நாட்டில் பீதியை ஏற்படுத்த வேண்டாம்.

(பிற்பகல் 6-00)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, பீதியை உருவாக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து அல்ல. நல்ல எண்ணத்துடன்தான் நமது அமைச்சர் அவர்களும் மத்திய அமைச்சர் அவர்களை சென்று பார்த்ததாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு அரிசி வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் சென்றார், கெட்ட எண்ணத்தோடு சென்று பார்த்திருப்பார் என்று யாரும் கருதமாட்டார்கள். நமது மதிப்பிற்குரிய திரு. கணபதி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இதுபோன்ற முக்கியமான பிரச்சினை வருகின்ற போது, எதிர்க்கட்சித் தலைவர்களையும் அரசாங்கம் கலந்தாலோசித்துச் செய்வது நல்லது அல்லவா என்று கேட்டார்கள். அரசாங்கத்தில் எவ்வளவோ நடந்திருக்கின்றது, எவ்வளவோ விஷயங்களுக்காக சர்வ கட்சிக் கூட்டங்களைக் கூட்டியிருக்கின்றார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களையும் அழைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றிய அபிப்பிராயங்களைக் கேட்க எதிர்க்கட்சித் தலைவர்களை யாரும் அழைக்கவில்லை. அபிப்பிராயமும் கேட்கவில்லை. ஆகவே எங்களுக்கு வெளியில் கிடைக்கக்கூடிய விவரங்களை வைத்துக் கொண்டு அரசுக்கு அறிவுறுத்த வேண்டிய சந்தர்ப்பம் இங்கே பேரவையிலோ அல்லது மேலவையிலோதான் கிடைக்கிறது, அதைப்பற்றிப் பேச முடிகிறது. இங்கேயும் எங்கள் கருத்துக்களை நான் எடுத்துச் சொல்வதே பீதியை உருவாக்குவதாக இருக்கிறது என்று சொன்னால், எங்களுடைய கருத்துக்களைக்கூட சொல்லுவதற்கும் முடியாத நிலைமையை இந்த அமைச்சரவை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது என்றுதான் நானும் கருதுகிறேன்.





இன்னொரு விஷயம், நான் சொல்லவேண்டியதை அமைச்சரே எடுத்துச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களுக்கெல்லாம் நாம் கொடுத்தோம் என்று சொன்னார்கள். அதிலே தவறு நிகழ்ந்திருக்கும் என்ற கருத்தை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இந்தமாதிரியான ஒரு நிலைமை வரும் என்பதை முன்னாலேயே உணவுத் துறை ஆராயவில்லை. நாம் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் 34 ஆயிரம் டன் அரிசியை எடுத்துக் கொடுத்துவிட்டோம். நாற்பது ஆயிரம் டன் அரிசி கேட்கவேண்டிய நிலைமையில் இருக்கும் நாம், நம்மிடமிருந்த அந்த 34 ஆயிரம் டன் அரிசியைக் கொடுத்துவிட்டோம். இந்த நிலைமையில், வெளி மாநிலத்தவர்கள் கேட்கிறபோது அவர்களுக்கு தாராளமாக நன்கொடைபோல கொடுத்துக்கொண்டிருப்பதன் காரணம் என்ன? அந்த 34 ஆயிரம் டன் அரிசியைக் கொடுக்காமல் இருந்திருந்தால், இப்போது நாம் 40 ஆயிரம் டன் அரிசி கேட்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. நீங்கள் ஒரு உபரி மாநிலமாக இருந்துகொண்டு, இங்கே எதற்காக வரவேண்டும் என்ற பேச்சைக் கேட்டுக் கொண்டு வரக்கூடிய நிலைமையும் நமக்கு இப்போது ஏற்பட்டிருக்காது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு கிட்டத்தட்ட 2 இலட்சம் டன் அரிசியை எப்.சி.ஐ. மூலமாகக் கொடுத்திருக்கின்றோம் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, 1,10,000 டன் அரிசியை சென்ற ஆண்டு சென்ட்ரல் பூல்-க்கும், 40,000 டன் அரிசியை மற்ற மாநிலங்களுக்கும், இந்த ஆண்டு 50,000 டன் அரிசியை சென்ட்ரல் பூல்-க்கும் நாம் கொடுத்திருக்கின்றோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, கடந்த ஆண்டு 1,10,000 டன் மத்திய அரசுக்கும், 40,000 டன் மற்ற மாநிலங்களுக்கும், இந்த ஆண்டு 50,000 டன் மத்திய அரசுக்கும் கொடுத்ததாகச் சொல்கின்றார்கள். இவ்வளவு அதிகமாக மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியம் நமது அரசுக்கு ஏன் வந்தது? சென்ற ஆண்டு எவ்வளவு கொடுத்து வந்தோம்? சென்ற ஆண்டும் மற்ற ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு அதிகமாக விளைந்தது எவ்வளவு அளவு கொடுத்துக்கொண்டு வந்தோம் என்று கணக்குப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசுக்கு, மற்ற மாநிலங்களின் சார்பாக உணவுக் கார்ப்பரேஷனுக்கு இவ்வளவு அதிகமாகக் கொடுத்த காரணத்தினாலேயே நாம் இவ்வளவு மோசமான நிலைக்கு வருவோம் என்பதை நமது அரசு கவனிக்கத் தவறியது. அதனாலேதான் தமிழகத்திற்கு ஒரு துர்பாக்கியமான நிலைமை வந்திருக்கின்றது என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று, நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கைபற்றியெல்லாம் மதிப்பிற்குரிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகசாமி அவர்களும், திரு. சுந்தரேசத் தேவர் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்களும் கேட்டார்கள். 3 மாதம் வரையிலே சம்பா அரிசியை வைத்துக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டார்கள். அப்புறம் அதையே 6 மாதம் என்று மாற்றித் திருத்தினோம். மற்றவர்கள் எல்லாம் சேர்ந்து 6 மாதம் நெல்லை வைத்திருக்க வேண்டுமென்று சொன்னபோது, 'மற்ற மாநிலங்களைப் போல கேளாக் காதினராக இல்லாமல், இப்படி 3 மாதம் என்று இருந்ததை 6 மாதம் என்று ஆக்கியதே எங்களுடைய பெருந்தன்மை அல்லவா' என்ற கேள்வியைக் கேட்டார்கள். ஆனால் நான் கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் என்பது எதையும் தீர்க்கமாக ஆலோசித்துத்தான் முடிவு செய்யும் என்ற அபிப்பிராயம் நாட்டு மக்களுக்கு உண்டு என்பது இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அரசாங்கம் என்பது ஒரு இயந்திரம். அரசாங்கம் என்பது நம்மைப் போன்ற மனிதர்களால், மற்றவர்களால், அதிகாரிகளால், அமைச்சர்களால்தான் நிருவகிக்கப்படுகிறது என்றாலும்கூட வெளியிலே இருப்பவர்கள் எதையும் தீர ஆலோசித்துத்தான் அரசு முடிவு எடுக்கும் என்ற அபிப்பிராயத்தைத்தான் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். நாளைக்கு ஒரு சட்டம், வேளைக்கு ஒரு மாற்றம் என்ற நிலைமையிலே அரசு போய்க்கொண்டிருக்குமானால், அரசாங்கத்தினுடைய கொள்கையைப்பற்றி, அரசாங்கத்தினுடைய நிலைமையைப் பற்றி மக்கள் புரிந்துகொள்ளக்கூடியது தவறாகத்தான் இருக்கும் என்று நிச்சயமாக நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். யாரோ சிலர் சம்பா அறுவடைக்குப் பிறகு 6 மாதத்திற்கும் அந்த நெல்லைத்தானே சாப்பாட்டிற்கு தஞ்சை மாவட்டத்தினர் வைத்துக்கொள்வார்கள் என்றும், குறுவை நெல்லை சாப்பிடுவது அவர்களுக்குப் பழக்கம் இல்லையே என்றும் சொன்ன பிறகுதான் அரசு புரிந்துகொள்ள முடியும் என்றால், இந்த உணவுத் துறை இந்த சிறிய விஷயத்தைக் கூடப் புரிந்துகொள்ள முடியாது என்றால், இந்த இலாகா அதிகாரிகளும் அமைச்சர் அவர்களும் எந்த அளவிலே இந்த உணவுத் துறையை நிர்வகிப்பார்கள் என்று மக்கள் யோசனை செய்தால்கூட அது தவறு என்று சொல்ல முடியாது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்று. இந்த அரசின் கொள்கையைப் பொறுத்த அளவிலே 1974 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 24-ல் சென்ற முறை மேலவை கூடியிருந்தபோது, முதலமைச்சர் அவர்கள் 'பார்சியல் மூவ்மெண்ட்' என்ற அளவிலே அந்த கண்ட்ரோலை எடுத்தார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, 40 சத வீதம் லெவி கொடுக்க வேண்டுமென்றும், மற்ற சில மாவட்டங்களில் 25 சத வீதம், 20 சதவீதம் லெவி கொடுக்க வேண்டும் என்று





சொன்னார்கள். அப்போது இந்த அவையிலேயே நான் கேட்டேன். தஞ்சை மாவட்டத்திலே இருப்பவர்களுக்கு எல்லாம் 40 சத வீதம் என்று சொன்னால், அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு விற்க முடியாத நிலைமை ஏற்படுமே என்று சொன்னேன். மற்ற மாவட்டங்களிலே நல்ல விலைக்கு அவர்கள் விற்கும்போது, தஞ்சை மாவட்டத்திலே குறைந்த விலைக்கு விற்கும்படியான ஒரு நிலைமையை ஏன் கட்டாயமாக உருவாக்குகின்றீர்கள் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டேன். அப்போது அவர், "தஞ்சை மாவட்டத்தில் நிலச்சுவான்தார்கள் அனைவரும் அநேகமாக நெல்லை விற்றுவிட்டார்கள். இனி இருக்கக்கூடிய நெல் வியாபாரிகளிடத்தில்தான் இருக்கின்றது. மிகப் பெரிய நிலச்சுவான்தாரர்களிடம் தான் இருக்கக்கூடும். ஆகவே பாதகம் ஏற்படாது," என்று சொன்னார்கள். அதன் பிறகு 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-லே லெவியை மறுபடியும் பூராவாக எடுத்துவிட்டோம். அதற்குப் பின்னர் 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் தேதியிலே அரிசி நெல் மூட்டைகள் ஏற்றிக்கொண்டு போகப்பட்டன. இடைவெளியிலே கிட்டத்தட்ட 3 மாத காலத்திற்கு தஞ்சை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் 'நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட்' கொடுக்க மறுத்துவிட்டார். ஆக தஞ்சையினுடைய நிலைமை என்ன? தஞ்சையிலே அவ்வளவு நெல்லும் தேங்கி, ஒரு பெரிய தேக்கமாக ஆகி, ஒரு 'டேம்' போல இருந்தது. மற்ற மாவட்டங்களிலே நெல் இல்லாத நிலைமையையும் பற்றாக்குறை நிலைமையில் நெல்லின் விலை ஏறிக்கொண்டே இருப்பதையும் நாம் பார்த்தோம். ஒரே நாளிலே, முன் பின் ஆலோசனை செய்யாமல் என்றுகூட சொல்வேன், அவர்கள் இந்த லெவியை எடுத்துவிட்டார்கள். ஒரே சமயத்தில் அவ்வளவு நெல்லையும் கொண்டுபோங்கள் என்று சொல்லிவிட்டால், என்ன நடக்கும்? தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய அவ்வளவு நெல்லும், மேட்டூர் அணையைத் திறந்து நீரை விட்டால், எப்படி தண்ணீர் பாயுமோ அதைப் போலத்தான் ஆயிரக்கணக்கான லாரிகளில் அங்கேயிருந்து போகும் என்பதை நம்முடைய உணவு அமைச்சகம் புரிந்து கொண்டுதான் செயலாற்றியிருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன். அங்கு இருந்தவர்கள் 3, 4 மாத காலமாக அந்த நெல்லை வாங்கி முடக்கி வைத்து அந்த நெல்லுக்கு லெவி கொடுக்க அவர்கள் தயாராக இருந்தும், லெவியை வாங்காமலும் அவர்களை எடுத்துப் போகவும் விடாமல் இருந்ததால், அவர்கள் வட்டி நஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததால், லெவியை எடுத்தவுடன் அவ்வளவு பேரும், இனி அரசு மறுபடியும் மாறி விடுமோ என்று எல்லோருக்கும் நினைப்பிருந்த காரணத்தினால், லாரிகளில் எடுத்துச்செல்ல ஆரம்பித்தார்கள். ஓரிரு நாளிலேகூட அரசு கருத்து மாறிவிடலாம் என்று என்னிடத்திலே சொன்னார்கள். இதைத் தீவிரமாக ஆலோசனை செய்த பிறகு, அரசு முடிவெடுத்திருக்கிறது, "நம்முடைய பார்டரை மூடுகின்ற நிலைமை ஏற்படாது. ஆகவே நீங்கள் அவசரப்படக் கூடாது, தேவையில்லை" என்று சொன்னேன். அரசு மாறலாம் என்று மீண்டும்

மீண்டும் என்னிடத்திலே அவர்கள் சொன்னார்கள். அதைப் போலவே என்ன நடந்தது? 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19 ஆம் நாளிலே கொண்டு செல்லப்பட்ட லாரிகள் அத்தனையையும் அங்கே சுங்கச்சாவடியில் "நிறுத்துங்கள், லாரிகள் போகக்கூடாது" என்று சொன்னார்கள். இரண்டு நாளிலே ஒரு உத்தரவு போட்டு, அந்த உத்தரவுப்படி லாரிகளிலே ஏற்றிச் செல்லும்படி ஏற்பாடு செய்த பிறகு லாரிகளை மறித்தார்கள். இவ்வளவு லாரிகளில் ஏற்றி விட்டோமே என்று கேட்ட பிறகு, மறுபடியும் முதலமைச்சர் அவர்கள் அத்தனையையும் அனுமதிக்கலாம் என்று சொன்னார்கள். அதே நாளிலே காலையிலே நமது முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கின்றார்கள். இப்படி அவ்வளவு நெல்லையும் அனுமதித்ததன் காரணமாக மற்ற மாவட்டங்களிலே அரிசி விலை கணிசமாக இறங்கியிருக்கின்றது. நான் எடுத்த முடிவு சரிதான் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நாள் மாலையிலே நமது உணவு அமைச்சகம் ஒரு உத்தரவு பிறப்பித்தது. அங்கே லாரிகளை நிறுத்தியது. காலையிலே முதலமைச்சர் அவர்கள் சொல்வது ஒன்று. மாலையிலே இங்கேயிருந்து, உணவுத் துறையிலேயிருந்து வருகின்ற உத்தரவு மற்றொன்று. அடுத்த நாள் அங்கே இருக்கும் வியாபாரிகள் இங்கே வந்து அதிகாரிகளிடத்திலே தங்களுடைய கஷ்டங்களைச் சொல்லிய பிறகு, மறுபடியும் லாரிகளை எடுத்துப் போகலாம் என்று அனுமதித்திருக்கிறார்கள். நான் கேட்கின்ற கேள்வி இதுதான். எங்கே சென்றது அந்த அரிசி, எங்கே சென்றது அந்த நெல் என்று நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் கேட்டார்கள். இவ்வளவு தூரம் இந்த நெல்லைப் போக விட்டார்களே, போகிற நெல் போகிறது என்று கணக்காவது எடுத்தார்களா? "யாரிடமிருந்து யார் நெல்லை எடுத்துப் போகிறார்கள், யாரிடம் கொண்டுபோய் விற்கப்போகிறார்கள்? வாங்கியவர்கள் அந்த நெல்லை என்ன செய்கின்றார்கள்? அந்த நெல் தமிழகத்திலே இருக்கிறதா அல்லது கேரளத்திற்குப் போய்விட்டதா?" என்று பார்த்திருந்தால், ஒரு பிரச்சினை எழுந்திருக்கும். திருச்சி மாவட்டத்திலே வியாபாரிகள் மகாநாட்டிலே நான் சொன்ன முடிவு எல்லா நெல்லும் கடத்தப்பட்டிருக்கலாம் என்பதுதான். அதுதான் என்னுடைய கருத்து. உணவு அமைச்சர் அவர்கள் வெளி மாநிலத்திற்குப் போய்விட்டது என்று சொன்னார்கள். அது எப்படிப் போயிருக்க முடியும் என்ற கருத்தையும் சொன்னதாக பத்திரிகையிலே நான் படித்தேன். ஆனால் அண்மையிலே நம்முடைய ஆளுநர் அவர்கள் பேசுகிறபோது வெளி மாநிலங்களுக்கு நம்முடைய அரிசி கடத்தப்படுவதுபற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், பார்டர் ஏரியாஸ் என்று சொல்லக்கூடிய கூடலூர், கோயம்பத்தூர், கன்னியாகுமரி, சேலம் மற்றும் எங்கெங்கே மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல முடியுமோ அந்த இடங்களில் எல்லாம் அரிசி அதிக விலை விற்கிறது என்றால் மற்ற மாநிலங்களுக்கு அங்கிருந்து அரிசி போகிறது என்பதற்கு அது அத்தாட்சி, கன்னியாகுமரியிலிருந்து சென்ற ஒரு





(பிற்பகல் 6-10)

போலீஸ் லாரி, ஒரு மரத்தில் மோதி ஆக்சிடென்ட் ஆனபிறகு, அந்த போலீஸ் லாரியிலேயிருந்து, இருபது, ஐம்பது அரிசி மூட்டைகள் கடத்தப்பட்டது தெரிந்து அங்கே இருக்கிறவர்கள் பிடித்து அதிகாரிகளிடத்தில் கொடுப்பது என்பதைப் பார்க்கிறபோது, அவ்வளவு தூரம் வெளியிலே ஸ்மக்லிங் ஆகிறது என்பது தெரியவரும். அந்த பார்டரை சரியாக வைக்காமல் இவ்வளவு நாள் அந்த அரிசியை போக விட்டவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? ஆகவே அரசு அவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச் சாட்டையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முக்கியமாக நான் சொல்வது எல்லாம், அரிசி நம்முடைய மாநிலத்தை விட்டு அதிகமாக வெளியே போகிறது என்பதுதான். திரு. ஆறுமுகசாமி அவர்கள் வியாபாரிகள் எல்லோரும் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கேயுள்ள விவசாயிகளுக்கு நல்லதுதானே என்று சொன்னார்கள். எந்த விவசாயிக்கு நல்லது? விவசாயிகளிடத்திலே நெல்லே இடையாது. எனக்குத் தெரியும். தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்திற்குப் பக்கத்திலே இருக்கிற மில்காரர்—மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்—ஒரு ஆள் மட்டும், 25 லட்ச ரூபாய்க்கு நெல் வாங்கி வைத்துக் கொண்டிருந்தார். எனக்குக் கடிதம்கூட எழுதினார். "25 லட்ச ரூபாய்க்கு மூன்று மாதங்களுக்கு மேலாக நெல்லை வாங்கி வைத்திருக்கிறேன். வெளி மாவட்டத்திற்கும் அனுப்ப முடியவில்லை. என்ன செய்வது? மாவட்ட ஆட்சித் தலைவரைக் கலந்து ஏதாவது ஏறபாடு செய்ய முடியுமா?" என்று எழுதினார். நான் அதற்கு பதில் எழுதவில்லை. இந்த நெல்லுக்கு அப்புறம் என்ன ஏற்பட்டது? அவர் மட்டும் ஒன்பது லட்ச ரூபாய் லாபம் அடைந்தார். அதில் ஒரு லட்ச ரூபாயை அரசாங்கத்திற்கு முதலமைச்சரிடம் ஊனமுற்றோர் நிதிக்காக நன்கொடையாகக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையோ, பொய்யோ, எனக்குத் தெரியாது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, அதைத் தெரிந்துகொண்டு சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, நேற்று இங்கே சொன்னார்கள், முதலமைச்சருடைய ஊனமுற்றோர் நிதிக்காக ஒரு லட்ச ரூபாய் கொடுத்ததாக. அது சரியா, தவறா என்று தெரியாது. அப்படி ஒரு லட்ச ரூபாய் கொடுத்திருந்தால், நான் உண்மையாகவே மகிழ்ச்சி அடைவேன். ஒன்பது லட்ச ரூபாய் லாபம் அடைந்தவர், ஒரு லட்ச ரூபாய் கொடுத்தால் என்ன? தஞ்சை மாவட்டத்திலே உள்ள மில்காரர்கள் இப்போது லட்சக் கணக்கிலே லாபம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே அங்கே இருக்கக்கூடிய விவசாயி பார்த்

கிறான். உழைத்ததெல்லாம் விவசாயி. உழைத்த அவனுக்குக் கிடைத்தது 40 ரூபாய், அல்லது 45 ரூபாய். நடுவிலே இருக்கக்கூடிய மில்காரர்களுக்குக் கிடைத்தது 90 ரூபாய். அந்த விலையிலே விற்று லட்சக் கணக்கிலே லாபம் அடைந்தார்கள். தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள் அதைப் பார்த்து வயிறு எரிகிறார்கள்.

அதோடு விட்டீர்களா? அங்கே இருக்கக்கூடிய நிலச்சுவான்தார்கள், தங்களுடைய உணவுக்காக வைத்திருந்ததை, ஆட்களுக்குக் கொடுப்பதற்காக தசுக்கூலிக்காக வைத்திருந்ததை, குடும்பத்தினருக்காக வைத்திருந்ததை, வீடு வீடாகச் சென்று உங்களுடைய டி.எஸ்.ஓ. (டிஸ்டிரிக்ட் சப்ளை ஆபிசர்)—ஒரு சுறுசுறுப்பானவரைப் போட்டிருக்கிறீர்கள்—அதுவும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரைப் பார்த்து ஒவ்வொருவரிடமிருந்தும் எடுக்கிறார் என்கிறார்கள்.

**திரு. கோ. சு. மணி:** தலைவர் அவர்களே, எந்த சமூகம் என்று சொல்ல முடியுமா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, தனியாகச் சொல்கிறேன். குறிப்பிட்ட சமூகத்தினரைப் பார்த்து, அவர்களிடம் போய் எடுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, தயவு செய்து அதை இப்பொழுதே சொல்லிவிடலாம். முதலமைச்சர் நிதிக்காக ஒரு லட்ச ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார்கள். பொறுப்புள்ள உறுப்பினர் சொல்கிறார். அதை நிரூபிக்க முடியுமா என்பதையும் சொல்ல வேண்டும். அதே போல, ஒரு ஜாதிக்காரர்கள் வீட்டிலே பிடிக்கிறார்கள் என்கிறார்கள். எந்த ஜாதிக்காரர்கள் என்று பகிரங்கமாகச் சொல்வதிலே தவறு இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, சொல்லத் தயாராக இருக்கிறேன். ஒரு லட்ச ரூபாயை பொது நிதிக்குக் கொடுத்திருக்கிறார் என்று தான் சொன்னேன். தனிப்பட்ட அமைச்சருக்கு லஞ்சமாகக் கொடுத்தார் என்று சொல்லவில்லை. பொது நிதிக்காகக் கொடுத்தார் என்று சொல்கிறார்கள், அதுவும் பொய்யோ, தவறோ, சரியோ தெரியாது என்றேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** துணைத் தலைவர் அவர்களே, பொது நிதி என்றால் நிச்சயம் கணக்கிலே இருக்க வேண்டும் அல்லவா? குறிப்புகளை எடுத்தால் அதன் கணக்கிலே இருக்கும். வாங்கித் தெரிந்து கொள்ளலாமே.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு புகாரை சபையில் சொல்வதானால், அதை நிரூபிப்பதற்கு பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சொன்னதைத் திருப்பிப் பெற வேண்டும்.





**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது, புகார் இல்லை. ஒரு லட்ச ரூபாய் பொது நிதிக்குக் கொடுத்திருக்கிறார் என்று சொல்கிறார்கள், அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது என்று தான் சொன்னேனே தவிர, ஏதாவது தனிப்பட்ட முறையிலே பேரம் நடந்திருக்கிறது என்றோ, தவறு செய்தார்கள் என்றோ சொல்லவில்லை. அப்படிக் கொடுத்திருந்தாலும் நல்லது தானே தவிர, நாட்டிற்கும் நல்லது தானே தவிர, வேறு அல்ல. ஒன்பது லட்ச ரூபாய் லாபம் சம்பாதிக்கிற ஆள், ஒரு லட்ச ரூபாய் கொடுத்திருப்பாரானால் நல்லதுதானே தவிர, அதனாலே எந்தத் தவறும் இல்லை என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் இருபத்தி ஐந்து நிமிடம் பேசியிருக்கிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, முடிவாக ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடிக்கின்றேன்! இங்கே பேசிய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். மாநில அரசு செய்தது தவறு என்றெல்லாம் சொன்னார்கள். இந்த உணவுக் கொள்கையில் கோளாறுக்கு முக்கிய காரணமே மத்திய அரசாகும். மத்திய அரசின் சரியற்ற உணவுக் கொள்கையின் காரணமாகத்தான் எல்லா மாநிலங்களிலும் உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. பீகார், குஜராத், மற்றும் வட இந்திய மாநிலங்கள் அனைத்திலும், ஆறு ஏழு மாதங்களாக, மக்கள் புரட்சி செய்யக் கூடிய அளவுக்கு மத்திய அரசு உணவுக் கொள்கையைத் தவறாக வகுத்தது என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவர் அவர்களே, இந்தியா போன்ற நாட்டில் நீண்ட நெடுங்காலம் தொடர்ந்து உணவுப் பற்றாக்குறை இருந்து வரும் என்று பல பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றார்கள். மக்கள் பெருக்கமும், உற்பத்திப் பெருக்கமின்மையும் உள்ள நாடு. எல்லா மாநிலங்களிலும் நெருக்கடி இருக்கிறது என்பதை இங்கே உள்ள நெருக்கடிக்குச் சமாதானமாக உறுப்பினர் அவர்கள் கூறுவது சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களுக்கு அந்தச் சலுகையை அளித்துவிட்டு தமிழ் நாட்டுக்கு மட்டும் சலுகை அளிக்க மறுத்ததிலே என்ன நியாயம் என்று சொல்லலாமா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, உணவுக் கொள்கையை மத்திய அரசு சரியாக நிர்வகிக்காததுதான் கோளாறுக்குக் காரணம். அதனால்தான் தமிழகம் உட்பட இந்தக் தொந்தரவு ஏற்படுகிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*1972 ஆம் ஆண்டு வரையில் நம்முடைய நாட்டில் உணவுப் பற்றுக்குறை ஒவ்வொரு ஆண்டும் 39 லட்சம் டன். வெளி நாட்டிலிருந்து மத்திய அரசு அதற்கு வேண்டிய உணவு தானியத்தை வரவழைத்துக் கொண்டிருந்தது பி.எல். 480 அடிப்படையிலே அமெரிக்க நாட்டிலிருந்து வரவழைத்து பற்றுக் குறையை சரிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். 1972-லே பி.எல். 480 உதவி நமக்குத் தேவையில்லை என்று நிறுத்தியதன் காரணமாக இன்றையதினம் நாடு முழுதும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதை நாம் எப்படி தவிர்க்கப் போகிறோம்?*

*திரு. எம். ஆறுமுகசாமி : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் அமெரிக்க கோதுமையை மீண்டும் வாங்க வேண்டும் என்கிறாரா?*

*திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ரஷ்யாவிலிருந்து வாங்கும் போது . . .*

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்னும் ஏழு பேர் பேச வேண்டும். குறுக்கீட்டை நிறுத்திக்கொள்ள வேண்டும்.*

*திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ரஷ்யாவில் இருந்து 20 லட்சம் டன், ருபி பேமெண்ட்டிலே வாங்கும்போது, அமெரிக்காவிலேயிருந்து வாங்குவதில் தவறு இல்லை. நமக்கு வேண்டிய உணவைக் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். இருபது ஆண்டுகள் அவர்களிடம் நாம் வாங்கியிருக்கிறோம். அதைக்கூட திருப்பிக் கொடுக்க முடியாமல் இருந்திருக்கிறோம். பி. எல். 480 லே அரிசி வருகிறது. அதை ஏன் சொல்கிறேன் என்றால், வெளிநாடுகளி லிருந்து உணவுப்பொருள் வாராததன் காரணமாக நாட்டிலே பற்றுக்குறை ஏற் படுகிறது. திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இனி வெளிநாட்டிலேயிருந்து நாம் உணவு வரவழைக்காமல், 'இம்போர்ட்' செய்யாமல் இந்த உணவுக் கொள்கையை நாம் நடத்த முடியாது என்று சொன்னார்கள். அவர்களுடைய "பிளானிங் கமிஷன்" என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்,*

"The Planning Commission feels that the Union Government has no choice but to make substantial imports of foodgrains to sustain adequacy to public distribution system".

*என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய "பிளானிங் கமிஷன்" அவர்களுடைய அமைச்சர், அத்தனை பேரும் வெளிநாட்டிலிருந்து வரவழைக்க வேண்டும் என்று சொன்னார்கள். நன்றி.*

*(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)*

*(பிற்பகல் 6-20)*



* THIRU A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, in view of the very limited time at our disposal, I am afraid I cannot make my speech with my usual show-moving arguments and, therefore, the Hon. the Food Minister will forgive me if I am somewhat abrupt in my remarks because I have to finish within the ten minutes that have been allotted to me.

Hon. Members have referred to the fact that over the past four months, a remarkable change has occurred in Tamil Nadu. When we met in March, the Hon. the Food Minister mentioned that our position was extremely happy, that the Government were in full control of the situation, that our Civil Supplies shops had enough paddy or rice to distribute to the needy sections of our population and I am still somewhat mystified, after all the arguments that have taken place both in the Lower House and in this House as to how and why the food situation has altered in such a remarkable manner over the past four months.

Sir, reference has been made by hon. Members to the fact that the Food Department has been frequently issuing orders regarding the movement of foodgrains in the districts of Tamil Nadu and I must confess that from November 1973 to July 1974 more than 8 or 9 different orders have been issued by the Department of Food creating new zones today, taking away the zones tomorrow, re-creating fresh zones, ordering the millers to give 40 per cent in a particular month and 25 per cent in another month and all this has led to the psychology both among traders and farmers that since a change in policy was imminent, they should hold on to the stocks to sell at an appropriate period so much so that the entire distribution channels have been completely disrupted and much of the difficulty today is, in my opinion, due to the frequency and change of the orders that have been given by the Department. I am mentioning this with a great deal of caution because I do not want it to be understood that I want an inflexible Food Department which is incapable of changing an order. Far from it, Sir, I appreciate flexibility in administratve matters. But, I must say from my limited contract with both farmers and traders that over the past seven months these things have happened—the Food Minister goes on a tour, comes back and issues an order: some five or six days later, he receives a complaint from somebody: he goes on a tour and he revises that order. Sir, I appreciate his flexible approach. I agree that it was done with very good intentions, with the obvious intention

of removing some local difficulties that might have arisen in some places. But, I should like to point out that this has created a very definite impression amongst the traders and farmers that the policy of Government is going to change and, therefore, persons have waited for an opportunity for the Food Minister to remove the district-control with the result that thousands of bags of paddy have disappeared—God knows where they have disappeared. As a member of a responsible trading community, I would like to state, because the Tiruchi Conference has been quoted—and I believe the Hon. the Food Minister as well as the Hon. the Chief Minister were hurt by some of the remarks that were made by the traders—that I do not assume responsibility for the remarks that were made there. But, I must say that traders and farmers were completely confused by the conflicting policies of the Government of Tamil Nadu in regard to food procurement and distribution and as a result of this, when this order was issued by the Government of Tamil Nadu—I do not know for what reason, Sir, we found flooding . . .

*மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :* தலைவரவர்களே, அடிக்கடி மாற்றுவதென்பது இந்த ஆண்டு மட்டும் புதிதல்ல. கடந்த 3, 4 ஆண்டுகளாகப் பார்த்தீர்களேயானால், எவ்வெப்பொழுது உற்பத்தி உண்டாகிறதோ அப்போது கொள்முதல் செய்வதற்காக லெவி போடுகிறோம். தேவையில்லாத சமயத்தில் மாற்றவும் மறுபடியும் டிஸ்டிரிக்ட் கண்டிரோல் கொண்டுவரவும் செய்கிறோம். அப்படித் தான் ஒவ்வொரு ஆண்டும் செய்திருக்கிறோம். இந்த ஆண்டு புதியது அல்ல.

THIRU A. R. DAMODARAN : Sir, as I was saying, if we are to claim precedent, well, I suppose the situation this year required greater caution and perhaps greater delicacy in handling because we are dealing with an explosive inflationary situation. In the month of March, I have mentioned in this House that the removal of State zones for the movement of millets would definitely cause a certain amount of shortage in Tamil Nadu with the result that more paddy would be required and that this might create situations of scarcity. After all, the Food Department, the Civil Supplies Department, is dealing only with 5 per cent or 10 per cent of the grains that are being produced in Tamil Nadu and they cannot know the entire ramifications of the trade or the way in which paddy is bought and sold in our villages. I know in certain villages, traders have advanced large sums of money to



farmers not to sell the produce between January and April. The farmers have been asked to hold on to their stocks and when this miraculous order came through, the traders have made the biggest kill in the memory of paddy market. I do not approve of such wholesale profiteering. I believe there should be some discipline. But I do not want to continue to blame the Government because I am interested in finding how we can reduce the price of rice and to what extent. I will not agree with my hon. Friend Thiru Sundaresa Thevar or with my hon. Friend Thiru Arumugaswami who seem to think that rice can be given at Rs. 2 a measure in the future. But those days are long since dead and gone. My mother used to tell me, Sir, that in 1936 she used to buy 15 measures of rice for one rupee. Let us not think that we will ever be able to sell rice at anything less than Rs. 3 per measure in a fair price shop. I would like the Government to aim at selling rice at Rs. 3 a measure through their fair price shops and to see that the free market price of price does not go beyond Rs. 4 per measure. These are the limits which I would like the Government to aim at. As my hon. Friend Thiru Mani pointed out, people do not seem to understand the psychology of inflation that exists in our country.

*(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)*

It does not mean that I should buy fertiliser, use it on a crop and then wait to calculate the cost of a crop. No farmer will do that. Those who understand farming, those who have moved with our ryots will realise that. The price of urea has gone up from Rs. 1,100 to Rs. 2,000 per tonne—it was not a Rs. 100 increase but it was a Rs. 1,000 increase per tonne. The ryot realises that the price of fertiliser has gone up; the prices of agricultural implements have gone up because the cost of excise duty on steel has been increased; the prices of insecticides and pesticides have increased and today, most dangerous of all, because of the rise in price of rice, labour wages have a tendency to increase to an alarming proportion. When such are the circumstances, it is wrong to think that the ryot will wait till he finishes his 'kuruvai' harvest to sell paddy at the new price. This is not practical trade and this is not practical agriculture. I may, therefore, like to state that I am fully in agreement with the policy and I think even political parties will not deny this. If they have the courage to deny, let them do so on the floor of this House. Do they want the farmer to get Rs. 78 per quintal

for paddy or are they in agreement with my statement that the ryot should get anywhere between Rs. 100 and Rs. 110 per quintal for paddy? The political parties are dishonest enough to say that rice can be distributed at Rs. 2 a measure. I will be equally emphatic in saying that if that is done, either a subsidy of Rs. 40 to 50 crores will have to be incurred by the Government of Tamil Nadu, which they cannot think of today, or alternatively they want to reduce the price to the farmer which they may choose as their election plank for 1976.

MR. CHAIRMAN: The hon. Member is having a paper-weight in his hand.

THIRU A. R. DAMODARAN: Sir, I have no intention of throwing it. It is only to maintain my physical balance. Now, Sir, I am in full support that the price of rice has to be reduced but I am also equally emphatic, in my opinion, that the farmer has to be paid a fair price. I do not know but I still think that there is sufficient paddy in our State. I am sorry to say that now I have to ask the Hon. the Minister for Food to be again flexible in his approach and to revise his orders even if it means to the extent of bringing back district-control and district-zones and the responsibility of movement from a surplus district to a deficit district is taken on by the Civil Supplies Department in the interests of the people, in the interests of controlling the price of this most sensitive and delicate commodity. It will be dangerous if you allow the price of rice to stablise at Rs. 5 a measure. The Dearness Allowance that you will have to pay will run to Rs. 70 crores for the State Government employees alone and the people in the private sector will have to pay another Rs. 60 or Rs. 70 crores. Then you will find the price of rice again coming to Rs. 6 or Rs. 7 a measure as it is already in Karnataka and in the other States of Bihar and Maharashtra. While I have criticised the Hon. the Food Minister for being over-flexible in some of his orders, they were done with good intentions and I am not accusing him of any mal-intentions. Let him have the courage to confess that he has made a mistake. What is wrong in that? We are human and we make mistakes. It is much more honest to confess that we have committed a mistake by removing the district-controls and making Tamil Nadu into one zone. Let us bring back district-controls. We are not here to permit hoarders and profiteers and traders to make 9 lakhs of rupees in a single transaction.



(பிற்பகல் 6-30)

Sir, I have been trading for 25 years and I do not think I have made Rs. 9 lakhs in 25 years after payment of income-tax, and therefore, no person who is sensible, who is interested not only in the farmer but also in the trading community and the consumers will ever encourage the practice that will help the people to make quick profits without any sort of work. I have realised that I have completed my ten minutes. I have only one thing to stress. I want a fair price for the farmer which cannot be Rs. 78 per quintal of paddy. I want the Government to buy paddy, to move urgently, if necessary into all villages where they suspect that paddy is hoarded for buying the hoarded stocks. They must state their intention clearly in their order because the present order is very, very vague. What does it mean by stating that a person can have six months' stock—6 months' stock for what purpose, for consumption of his family or for the purpose of paying wages? What is meant by 6 months' requirement? I would perfer the quantity to be mentioned in specific terms, may be 10 bags or 20 bags per acre of land owned by him. I have no expertise with me to decide this and I leave it to the Food Minister. I would request him to relate the quantity to the extent of land-owning and say that so much of paddy could be kept for consumption, personal consumption, payment of wages, etc. This may require some working out in greater detail. I would certainly request him to consider this, because the month of Adi, i.e., July-August is always the period when—we know by tradition—the price of rice will register the maximum increase. Unfortunately, the orders of the Food Minister have coincided with the month of Adi and we are in this very difficult situation. My sympathies are with the Government in trying to tackle the situation because if we try to exploit the situation, we will find ourselves in a mess from which it will be impossible to rescue the economy. I will not refer to the various facts which my hon. Friend Thiru Swaminathan mentioned, because that will constitute a topic by itself to show how terrible the effect of the inflationery taxation policies of the Central Government is. This, in my opinion, is not the time or the place for that. I would, therefore, request the Hon. the Food Minister not to stand on prestige but to have discussion with all the legislators, experienced persons from the districts and to take every step to control the price of rice within the limits I mentioned.

[1974 ஆகஸ்டு 14

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மாநிலத்திலுள்ள உணவு நிலைமை குறித்து விவாதிக்க இந்த விவாதத்தை இங்கே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அன்றைக்கு 1967-க்கு முன்னால், தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், விலைவாசிப் போராட்டம் என்ற ஒன்றை ஏற்படுத்தி, அன்றைக்கு ஏறிய விலைகளுக்கெல்லாம் ஒரு போராட்டம் என்று நடத்தி காங்கிரஸ் ஆட்சியை 1967 க்குப் பின்னால் வீழ்த்தினார்கள். ஒரு மனிதன் எதனால் உயர்த்தப்பட்டானோ அதாலேயே தாழ்த்தப்படுவான் என்பது வாசகமாக, ஏசுபிரான் வாக்கியமாக இருக்கிறது. எதனால் உயர்த்தப்பட்டீர்களோ அதனாலேயே தாழ்த்தப்படுவீர்கள் என்ற ஒரு நிலை, இன்றைக்கு ஒரு பரிதாபமான நிலை உங்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. 1967 க்கு முன்னால் ஏற்பட்ட உணவு நெருக்கடி இயற்கையின் கோளாறால் என்பதை நாடு அறியும். அன்றைக்கு மழை இல்லை. கால நிலை சூழ்நிலை கெட்டதன் காரணமாக பற்றாக்குறை ஏற்பட்டது. இன்றைக்குப் பசுமைப் புரட்சியால் உணவு உற்பத்தி அதிகம் செய்து விட்டோம் என்று மார் தட்டியவர்கள் நீங்கள். இன்றைக்கு எங்கே அரிசி என்று அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் திரும்பி அலைகிற ஒரு பரிதாபமான நிலைமை நாட்டில் நிலவிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையை நீங்கள் உணரவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலையில் நாட்டில் அன்றைக்குச் செத்தார்களே, இப்போது இங்கே இறப்பு இல்லையே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். மணி அவர்கள் பேசும்போது கேட்டார்கள். ஆனால் இறப்பு இல்லையா, பசியா, பட்டினியா என்று கிராமப்புறங்களில் கேட்டால் நன்கு புலனாகும். இன்றைக்கு சோளம், கம்பு போன்ற சாதாரண உணவுப் பொருள்களை உண்ணக் கூடிய ஏழை மக்கள் வாங்கி உண்ண முடியாத நிலைமையில் அவைகள் 3 ரூபாய்க்கு மேல் விற்பதை கிராமப் புறங்களில் பார்க்கிறோம். அரிசி விலை இந்த அளவிற்கு ஏறியிருப்பதன் காரணம் உங்கள் உணவுக் கொள்கை தான் என்பதை எனக்கு முன்னாலே அத்தனை உறுப்பினர்களும் கூறினார்கள். அதே கொள்கையை நானும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். உங்களுடைய கொள்கையின் காரணமாக முன்னுக்குப் பின் முரணாக, ஒரு துக்ளக் ஆட்சி என்று கூறுவார்களே அப்படி இன்றைக்கு ஒரு சட்டம், நாளைக்கு ஒரு சட்டம், காலையில் ஒரு சட்டம், மாலையில் ஒரு சட்டம் என்று இந்தச் சட்டங்களின் காரணமாக இந்தப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, ஏதோ இயற்கையின் கோளாறாலோ அல்லது மழை இல்லாததாலோ நெருக்கடி ஏற்படவில்லை என்பதை வருத்தத்துடன் அவைக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நெருக்கடிக்கெல்லாம் இந்த அமைச்சரவை தான் பொறுப்பு என்பதைக் கூறிக்கொண்டு இது இயற்கையின் வரப்பிரசாதம், நீங்கள் எதனால் உயர்த்தப்பட்டீர்களோ அதால் தாழ்த்தப்பட வேண்டுமென்ற சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணர்ந்தால் போதும் என்று சொல்லிக்கொள்கிறேன்.





பசுமைப்புரட்சி காரணமாக 56 லட்சம் ஏக்கர் பயிர் செய்திருக்கிறோம் என்ற நிலை இருந்தாலும், இந்த அரிசி எங்கே சென்றது என்று பார்த்தால், வெளி மாநிலங்களுக்குச் சென்றது என்று யூகிக்க முடிகிறது. அப்படிச் செல்வதற்கு வழித்துணையாக, உறுதுணையாக இருந்தது இந்த அமைச்சரவை, இந்த அரசாங்கம் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். முன்னுக்குப் பின் முரணான கொள்கை காரணம். ஒரு அழகான உத்தரவு. 200 க்விண்டாலுக்கு மேல் ஒரு வியாபாரி வைத்திருக்கக் கூடாது என்று ஒரு நாள் உத்திரவு வருகிறது. இப்படி 200 க்விண்டாலுக்கு மேல் வைத்திருந்த வியாபாரிகள் என்ன செய்வார்கள் ? வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யவோ அல்லது வெளி ஆட்களுக்கு அனுப்பவோ செய்வார்கள். அப்படித் தான் வெளி மாநிலங்களுக்குச் சென்று விட்டது என்பது இன்றைக்கு நன்றாகப் புரிகிறது. இன்றைக்கு விவசாயிகள் ஆட்சியில் உள்ளவர்களால் திருடர்கள், கள்ள மார்க்கெட்டுக்காரர்கள் என்ற முறையில் அசிங்கமான நிலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 40 க்விண்டாலுக்கு மேல் வைத்திருந்தால், கணக்குக் காண்பிக்க வேண்டுமென்று உத்தரவு; மூன்று மாதத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களை வைத்துக்கொள்ளலாம் என்று ஒரு நாள் உத்தரவு, மறு நாள் ஆறு மாதத்திற்கு வேண்டியதை வைத்துக்கொள்ளலாம் என்று உத்திரவு, அதற்கு மறு நாள் ஆறு மாதத்திற்கு மேல் விதை இவைகளுக்காக வைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு. ஆக அவர்கள் எவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பாக அளவு சொல்லப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். ஆறு மாதம் என்பது அதிகாரிகள் நிர்ணயிக்கக்கூடிய அளவா அல்லது விவசாயிக்குத் தேவையான அளவா என்பது தெரியவில்லை. அதிகாரிகளால் இந்த விவசாயிகள் மிகவும் கேவலமாக ஆக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதிகாரி என்ன நிர்ணயிக்கிறாரோ அதுதான் விவசாயிகளுக்குத் தேவையான அளவு என்று இருக்க முடியும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த உணவு உற்பத்தி அதிகமாக ஆகியும் ஏன் கொள்முதல் செய்யவில்லை என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஐம்பத்தாறு லட்சம் ஏக்கரில் விளைந்தது என்றால், ஐம்பத்தாறு லட்சம் மூட்டையாகிலும் கொள்முதல் செய்திருக்கலாம். இந்தப் பண்டமாற்று முறைப்படி பழைய பண்புகளைப் போற்றுபவர்கள் ஒரு மூட்டை யூரியாவோ இராசயன உரங்களோ கொடுத்து விட்டு ஒரு மூட்டை நெல், அரிசி விவசாயிடம் வாங்கலாம். அப்படி ஆர்வம் காட்டினால், 56 லட்சம் மூட்டை அழகாக நம்மிடம் வந்து சேரும். இந்தக் கொள்கையை இனி மேற்கொண்டு கடைப்பிடிக்க வேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த முறையைக் கையாண்டால், விவசாயிகள் நல்ல நிலையில் ஆர்வமாக இருப்பார்கள். விவசாயிகளை

லைக்குவிக்கவில்லையென்றால், இந்த உணவுப் பஞ்சம் தீராது. ஏறிய விலையில் எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, கட்டிக் காக்க முடியாது என்று சொல்லிக்கொண்டு இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டதற்கு இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை தான் காரணம் என்பதையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி இவைகளெல்லாம் தவிர்க்கப்படவேண்டும், ஒரு தெளிவான நிலை அளிக்கப்படவேண்டும், தெளிவான முடிவு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு இந்த நல்ல வாய்ப்பைத் தந்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-40)

* THIRU S. NARAYANASWAMY : Sir, I fully recognise the constraints on the time of the House and I would like, therefore, to confine my observations to four or five suggestions which I would like to make in order that we might avoid the errors of policy which have afflicted the State's food policy. There are two things: The first is to make up our mind to guarantee the agriculturists a proper and fair price. I hope and trust the Hon. the Food Minister will listen to this old man who spends a lot of energy in standing up and talking; otherwise, there is no use of my talking and I will rather sit down. I do think that it is essential that the farmer should get a proper price in full relation to the inputs like fertilisers, pesticides and such like things. If he is to get it, we must make sure that the levy price or such price as he is ultimately made to be paid is fixed at a level which will take into account the rise in prices. Otherwise, we will have a largely discontented agricultural community. This is very important. The second factor with which we must reckon is this : We should not pat ourselves on the back and say that we are a surplus State in foodgrains. You may be a surplus State in foodgrains. Many other States in India which were surplus have become deficit in foodgrains, not because they produce less but because population has increased and this finished off the surplus condition, a fact about which the Hon. the Minister for Agriculture made a passing mention some time ago. They are multiplying at the rate of 1.2 million a month and it makes it somewhere about 15 million a year all over the country; and Tamil Nadu is making a fairly distinctive contribution to the population problem. Therefore, what is surplus to-day, despite all the efforts we might make to improve the agricultural output, you might convert into a deficit; and this is something against which we must provide.





THE HON. THIRU S. PA. ADITANAR : For the hon. Member's information, the figure for our State is that we incease in population by one million, that is, 10 lakhs per year; we hope to reach 5 crores by 1980.

THIRU S. NARAYANASWAMY : The Hon. Minister speaks of the scale on which the problem will aggravate in the coming years. I was only giving the All-India figures to let you know that it is a very vital problem for the whole country and the pressure of population in other States will attract foodgrains of our State, even assuming we have a total family planning programme to contain our over-population. We should remember this. The problem of leakage through economic pressures is a very, very serious problem. Therefore, this is something with which we will have to reckon. The third point I want to make is this, namely, that this problem of changing and chopping, about which so many Members complained, is going to be an almost continuous feature, according to what the Hon. the Food Minister just now said. The only thing to do is to get, and to insist on getting, correct data from the village officials. I know this is not a new thing as it is there from the British times; but it has almost become the solemn duty of the village officials to give only wrong figures to District officials who in turn mislead the Civil Supplies Department, on the basis of which we have necessarily to act. Two or three things are essential. The continuity of administration and the continuity of methods by which we get data which will be reasonably accurate—we cannot get data which are cent per cent accurate—are important, and we must get reasonably accurate data. Secondly, the Civil Supplies Department must be manned by a man who should be allowed to continue for a period of years and who understands the problem. We cannot have a Civil Supplies Commissioner changed every year and expect him to understand the problem overnight and to bring his experience to bear on the corrective measures. This will never happen. The changing and chopping at top levels has produced more grievous trouble for this and other States than perhaps any other reason. I have insisted that in certain departments like the Electricity Board and the Food Department, it is essential to have continuity of top executives. This, in my opinion, is very important. Sir, the basic need to increase production involves one more factor. I know there is corruption at all levels and we talk about it—endlessly talk about it. What is important is : Corruption at

the grass-root rural level saps the economic vitality of the village agriculturists. I had nothing but complaints from the village agriculturists who came and met me at conferences. Please do not think that I am only in industry. I meet the agriculturists far too often when I go to Board meetings in the neighbouring villages. They come to me and complain. One of the bitterest complaints is about the way in which fertiliser is distributed for a consideration by the local officials. The tyranny of corruption and the tyranny of the petty bureaucracy make life a misery and a drag to the villager. This has to go. If it has to go, it has to go only by abolition of corruption at rural levels and it will make it possible for the village man to carry on viable agriculture and this is very important. Therefore, if we understand that there is need for higher input in terms of fertiliser, in terms of pesticides etc., we will be able to motivate the villager into producing more. Unless we motivate the villager to produce more in future, there will be recurrent high prices. I could not agree with my hon. Friend Thiru Damodaran more than when he said that this is ensured by seeing to it that the farmer gets the economic price for his produce which will be inevitably reflected in fixing a minimum price for selling paddy or rice which will be higher than it was before but, I hope, much lower than it is in the last few weeks. I have done, Sir.

* *திரு. கே. ராஜாராம்:* மாண்புமிகு தலைவரவர்களே, சரியான நேரத்தில் இந்த விவாதம் நடைபெறுகின்றது. பொதுவாக மாநிலத்தில் உணவுப் பிரச்சினை பற்றிய பேச்சே எங்கும் இருந்து வருகிறது. அரசின் புள்ளி விவரத்தின்படி நமது மாநிலம் ஒரு உபரி மாநிலம். அண்மையில் திடீரென விலை உயர்ந்ததற்குக் காரணம் ஒன்று உற்பத்திக் குறைவு என்று கூற வேண்டும், அல்லது செயற்கையாக இந்த விலை உயர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இந்த இரண்டில் எது காரணம் என்று கேட்டால், பொறுப்பில் உள்ளவர்களிடமிருந்து எந்த பதிலும் வர மறுக்கிறது. உற்பத்தி குறைந்து விட்டது என்று சொல்லவும் மறுக்கிறார்கள். யாராவது வேண்டுமென்று விலையை உயர்த்திவிட்டார்களா என்று அரசு உத்தியோகத் தோரணையில் இரண்டில் ஒன்றை ஒப்புக்கொள்ள மறுக்கிறது. இம்மாதிரி குழப்பமான நிலைமை ஏற்பட்டிருப்பதற்கு பதில் சொல்லியாக வேண்டிய நிலைமை அரசுக்குத் தான் உள்ளது. ஏனெனில் இந்த அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதற்கு முன்வந்து கோவையிலும், சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் போட ஆரம்பித்தது. **மாநிலம்**





முழுமைக்கும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவது என்று சொல்லி, இன்றைக்கு ஒரு படி அரிசி 5 ரூபாய்க்கு வெளி மார்க்கெட்டில் விற்கும்படியான நிலைமை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. ரூபாய்க்கு ஒரு படி விற்பது என்று சொன்ன அரசுக்கு இது ஒரு பெரிய சவாலாக அமைந்திருக்கிறது. இதை எப்படிச் சமாளிப்பது என்பது பெரும் பிரச்சினை. இதை இலேசில் தள்ளிவிட முடியாது. ஒருபடி அரிசி 3¾, 4 ரூபாய் வரையில் வெளி மார்க்கெட்டில் கிடைப்பதற்கு அரசு வழி செய்து விட்டாலே அதைப் பெரிய சாதனை என்று சொல்லுகிற அளவுக்கு நிலைமை இருக்கிறது.

இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொள்ளுவதற்கு முன்புள்ள ஆண்டில்—1966-67-ல் வீரிய வித்துக்களை, ஒட்டு விதைகளைப் புழக்கத்துக்குக் கொண்டுவந்து அந்த வருஷம் மட்டும் 5 லட்சம் ஏக்கரில் அன்றைக்கு இருந்த காங்கிரஸ் ஆட்சியில் சாகுபடி செய்யப்பட்டது. அது, நாளாவட்டத்தில் வளர்ச்சியடைந்து 1973-74-ல், 55 லட்சம் ஏக்கரில் பயிரிடப்படுகிறது என்று இந்த அரசின் புள்ளிவிவரம் கூறுகிறது. 1966-67-ல் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பு, மொத்தம் இந்த மாநிலத்தின் உற்பத்தி 37.91 லட்சம் டன்; கிட்டத்தட்ட 38 லட்சம் டன் அரிசி உற்பத்தியானது. ஆனால், 1972-73-ல் 55 லட்சம் டன் உற்பத்தி கிடைத்திருக்கிறது.. 55 லட்சம் ஏக்கரில் புதிதாக ஒட்டு விதைகளையும் வீரிய வித்துக்களையும் பயிரிட்டும் கூட உற்பத்தி போதுமான அளவுக்குப் பெருகவில்லை என்று இதன் மூலம் தெரிகிறது. 1973-74-ல் 59 லட்சம் டன் அரிசியும் 17½ லட்சம் டன் புஞ்சைத் தான்யங்களும் உற்பத்தி செய்வது இந்த அரசின் குறிக்கோள் என்று இந்த சபைக்கு அறிவிக்கப்பட்டது . . .

(பிற்பகல் 6-50)

உணவு விஷயத்தில், 4-வது திட்டக் குறிக்கோள் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 18 அவுன்ஸ் கொடுக்க முடியுமென்றும், கணிசமான அளவுக்கு உணவுப் பொருள்கள் வெளி மாநிலங்களுக்குக்கூட அனுப்ப இயலும் என்றும் கூறப் பட்டது. 18 அவுன்ஸ் என்றால், வருஷத்திற்கு 187 கிலோ தேவைப்படும். எனவே மாநிலத்தின் மொத்தத் தொகைக்குத் தோராயமாக 61½ லட்சம் டன் தேவைப்படும். அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டால், அதற்கு 10 லட்சம் டன் அதிகமாகத் தேவைப்படும். மொத்தம் 76 லட்சம் டன் 4-வது திட்ட இறுதியில் கிடைக்குமென்று அரசின் புள்ளி விவரம் தரப்பட்டது. 1973-74-ல் அந்தக் குறிக்கோளை அடைந்து விட்டதாகவும், உபரி அரிசியை கேரளா, குஜராத், அரியானா போன்ற மாநிலங்களுக்கு அனுப்பி வைத்தோம் என்றும் நமக்கு எடுத்துக் கூறினார்கள். 1969-ல், தற்போதைய முதல்வரவர்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து லெவி செய்யும் முறையை அடியோடு ரத்து செய்தார்கள். வியாபாரிகளிடமும், மில்லர்களிடமும் அந்த லெவியை வாங்க ஆரம்பித்தார்கள். அதுவும் அண்மையில் ரத்து செய்யப்பட்டது.

அதற்குக் காரணம், போதுமான கொள்முதல் செய்து விட்டோம்; கஷ்டமான காலத்தைத் தாண்டப் போதுமான நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது; இனிமேல் தேவையில்லை என்று சொல்லப்பட்டது. மேலும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டையும் சென்ற ஜூன் மாதம் முதல் ரத்து செய்துவிட்டார்கள். இவ்வளவு நம்பிக்கையுடன் இருந்திருக்கிறார்கள். எந்த ஒரு கஷ்டத்தையும் சமாளிக்க முடியுமென்ற நம்பிக்கை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? அவ்வளவு நம்பிக்கையுடனிருந்த அரசு இப்போது ஏற்பட்ட கஷ்டத்தை எப்படி அனுமதித்தது; ஏன் இவ்வளவு கஷ்டம் வர வேண்டும்? திடீரென்று ஒரு படி இரண்டு ரூபாய், இரண்டரை விற்றுக்கொண்டிருந்த அரிசி 6 ரூபாய், 7 ரூபாய்க்கு விற்க வேண்டிய நிலைமை எவ்வாறு ஏற்பட்டது? புள்ளி விவரம் சாதாரணமானதுதான். கிடைக்கவில்லை; அதனால் விலை ஏறுகிறது. கிடைக்கிறது; விலை மட்டும் ஏறிவிட்டதென்ற வாதம் பொருந்தாத வாதம். போதுமான அரிசி இருந்தால், ஏன் விலை ஏறுகிறது? போதுமான அரிசி கிடைக்கவில்லை. அதனால்தான் விலை ஏறிவிட்டது. இந்த விலையைக் குறைக்கவேண்டுமென்றால் அரசு சொல்லிக்கொண்டிருந்தபடி, அவர்களிடமிருந்த ஸ்டாக்கிலிருந்து போதுமான அளவுக்கு அவிழ்த்து விட்டிருக்க வேண்டும். எல்லா இடங்களிலும் நியாய விலைக் கடைகளைத் திறந்து வைத்து, அரிசி விலையைக் குறைப்பதுதான் அதற்கு வழி. திடீரென்று போக்குவரத்துக் கட்டுப்பாட்டை விலக்கியதுதான் அவர்கள் செய்திருக்கிற பெரிய தவறாக அமைந்திருக்கிறது. ஏனெனில் ஜில்லா கட்டுப்பாடு, போக்குவரத்துக் கட்டுப்பாடு இருந்ததை அவிழ்த்து விடும்போது, இவ்வளவு தாராளமாக அவிழ்த்து விட்டிருக்க வேண்டியதில்லை. ஆயிரக்கணக்கான லாரிகள் தஞ்சையிலிருந்து 4 தினங்களில் வெளியேறி இருக்கின்றன. ஆனால் அந்த ஆயிரக்கணக்கான லாரிகள் நெல்லோ அல்லது அரிசியோ எங்கே போனது என்பதற்கு அரசாங்கத்திடம் கணக்கு இருக்கிறதா? இது ஒரு பெரிய தவறு. கட்டுப்பாட்டை வைத்து செக் போஸ்ட் வைத்து, நெல்லும், அரிசியும் எடுத்துச் செல்வதற்குப் பெர்மிட் கொடுத்து அனுப்பிக் கொண்டிருந்த அரசாங்கம், திடீரென்று கட்டுப்பாட்டை அவிழ்த்துவிடும்போது, அந்த லாரிகளின் மூலம் போகும் நெல், அரிசி எல்லாம் எங்கே போகிறது என்பதற்கு ஒரு சாதாரண கணக்குகூட இல்லாமல் எப்படி அனுப்பினார்கள்? இதற்கு அரசாங்கம் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. தெரிந்துதான் விட்டார்களா? அல்லது தெரியாமல் விட்டார்களா? வேறு மாவட்டங்களுக்குப் போயிருந்தாலும் பரவாயில்லை. வேறு மாவட்டங்களுக்கு போயிருந்தால், மக்கள் கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லை. தாராளமாக அந்த ஜில்லாக்களில், தாலுக்காக்களில் அரிசி கிடைத்திருக்கும். அடுத்த மாநிலத்தில் அந்த நேரத்தில் ஒரு படி 8 ரூபாய் விற்றுக்கொண்டிருந்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. படி 8 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த அந்த மாநிலத்தில் திடீரென்று படி 5 ரூபாய்க்குக் குறைந்துவிட்டது.





மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கட்டுப்பாட்டை எடுத்தவுடன் தினமணியில் ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். கட்டுப்பாட்டை எடுத்ததால், 10 நாட்கள் கழித்து, தமிழ் நாடு பூராவும் படிக்கு 20 காசுகள், 30 காசுகள் விலை குறைந்துவிட்டதாக தினமணிப் பத்திரிகை தலையங்கத்தில் எழுதியிருக்கிறது. அப்படிப்பட்ட விவரங்களும் ஒவ்வொரு மாவட்ட வாரியாக வந்திருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: நமது முதலமைச்சரவர்களே நம்பி ஏமாந்தார்கள். எல்லா இடங்களிலும் விலை குறைந்து விட்டதென்று அவர்களே சொன்னார்கள். அவரைக் காட்டிலும், தினமணிப் பத்திரிகையின் தலையங்கம் அவ்வளவு பொறுப்பானதென்று எப்படிச் சொல்ல முடியும்? முதலமைச்சரவர்களே, எல்லாப் புள்ளி விவரங்களையும் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறவர்களே, விலை இறங்கி வருகிறதென்று அறிக்கை விட்டார்கள். தினமணிப் பத்திரிகையிலும் விலை இறங்கி இருக்கிறதென்று எழுதினார்கள். எல்லாம் 4 நாட்கள்தான் இறங்கியது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் கூட இதை எழுதியிருக்கிறார்கள். நான்கு நாட்கள்தான் விலை இறங்கியது. பின்னர் திடீரென்று ஏறிவிட்டது. நமது ஜில்லாக்கள் வழியாகத்தான் எல்லாம் வெளியே போயிற்று. ஆனால் அந்த நெல்லும், அரிசியும் ஜில்லாக்களில் இறக்கப்படவில்லை. அது நமது மாநிலத்தின் எல்லையைத் தாண்டி வெளியே போய்விட்டது. அரசாங்கம், நமது மாநிலத்திலுள்ள போக்குவரத்துக் கட்டுப்பாட்டை எடுத்துவிட்டதாக உத்தரவு போட்டார்கள். ஆனால் மாநிலத்தின் எல்லையைத் தாண்டி அவை போயிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. அந்தக் கட்டுப்பாட்டை மீறி அரிசியும், நெல்லும் வெளியே போயிருக்கிறது. போனதற்கு ருசு வேறு ஒன்றும் வேண்டியதில்லை. அங்கு ஒரு படி 8 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த அரிசி, 5 ரூபாய்க்கு குறைந்து விற்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எப்படி ஏற்பட்டது? அந்த மாநிலத்தோடு இருந்தாலும்கூட பரவாயில்லை. அதையும் தாண்டி அரபு நாடுகளுக்கும் போயிருக்கிறதென்று மற்றொரு உறுப்பினர் சொன்னார். அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒன்று மட்டும் நன்றாகத் தெரிகிறது, அடுத்த மாநிலங்களுக்குத் தாராளமாகப் போயிருக்கிறதென்று. அரசு, கட்டுப்பாட்டை அவிழ்த்து விடும்போது உஷாராக இருந்திருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அரசு உஷாராக இருந்ததா, இல்லையா என்பதைப்பற்றி, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் விசாரித்துப் பார்த்து, அறிந்துகொண்டால் நன்றாக இருக்கும். அதிகாரிகள் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். எல்லை ஓரங்களில் இரவு பகலாக நின்றுகொண்டு, ஆயுதப் படைகளை வைத்துக்கொண்டு, கஷ்டப்பட்டு கள்ளக் கடத்தலைத் தடுத்திருக்கிறார்கள். எனக்காகப் பேச வேண்டாம். அங்கிருக்கிற

அதிகாரிகள் மிகவும் கஷ்டப்பட்டு சரியான முறையில் கள்ளக் கடத்தலைத் தடுத்திருப்பதுபற்றி விசாரித்து அறிந்து சொன்னார்களானால், நன்றாக இருக்கும்.

**திரு. கே. ராஜாராம்:** அதெல்லாம் கட்டுப்பாட்டை விலக்குவதற்கு முன்பு. போக்குவரத்துக் கட்டுப்பாட்டை எடுத்ததற்குப் பிறகு தஞ்சையிலிருந்து வெளியேறிய ஒவ்வொரு லாரியும் எந்த மாவட்டத்திற்குப் போயிற்று என்பதற்கு அரசாங்கத்திடம் கணக்கு இருக்கிறதா? அதுபற்றி அமைச்சரவர்கள் பதிலில் சொன்னால் போதும். எந்தெந்த ஜில்லாக்களுக்கு எவ்வளவு லாரிகள் போயிற்று என்ற ஒரு விவரம் மட்டும் கொடுக்கும்படியான நிலைமையில் அரசாங்க அதிகாரிகள், காவற் படையினர் நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இத்தனை சி.ஐ.டி.க்கள், இத்தனை போலீஸ்காரர்கள் இருந்தும், இதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. காரணம் அவை நம் மாநிலத்தில் இல்லை. வெளியே போய்விட்டது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** கணக்கு இருக்கிறது. கணக்கு கொடுக்க முடியும். அப்படியே அவிழ்த்து விட்டுவிட்டோம் என்று சொல்லுவது சரியல்ல. உங்களுக்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். காலையிலேகூட உங்கள் கட்சிக்காரர் திரு. கோபால் அவர்கள் பேசினார்கள். மதுரை மாவட்ட எல்லைப் பகுதிகளில் இப்போது கடத்தல் நடைபெறுவது நின்றுவிட்டது. கோவை மாவட்டத்தில் நடைபெற்றிருக்குமோ என்றுகூடச் சொன்னார்கள். அந்தப் பகுதியில் நம்முடைய அதிகாரிகள், ஆயுதப் போலீஸ் படையினர் மிகவும் சிரமப்பட்டு உழைத்திருக்கிறார்கள். அதையும் நீங்கள் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அந்தக் குற்றச்சாட்டையும் கொஞ்சம் தீர விசாரித்துச் சொல்லுவது நல்லது.

**திரு. கே. ராஜாராம்:** இப்போது மதுரை அல்லது கோவை மாவட்டம் மூலமாகப் போவதற்கு அரிசி இல்லை. இன்றைக்கு இருப்பதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அந்தப் படைகள் எல்லாம் தொடர்ந்து இருக்கின்றன. கட்டுப்பாட்டை அவிழ்த்து விட்டவுடன் என்னென்ன பாதுகாப்பு செய்ய வேண்டுமோ, அவ்வளவையும் செய்திருக்கிறோம்.

MR. CHAIRMAN: Time is extended.

**திரு. கே. ராஜாராம்:** மாநிலத்தின் தேவைக்கு மேல் கொள்முதல் செய்யப்பட்டதாக நமக்கு அறிவிக்கப்பட்டது. அதை உறுதியாக அரசாங்கமும் நம்பியது. அதை நம்பி வெளி மாநிலங்கள் கேட்டதற்கெல்லாம் தாராளமாக உதவி செய்தார்கள். அதை நான் குறையாகச் சொல்லவில்லை. நமது மக்கள்





(பிற்பகல் 7-00)

பட்டினி கிடக்கும்படியான நிலைமை இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்துக்கொண்டு, அதற்கு மேல் இருப்பதை வெளியில் அனுப்புவதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. அப்படி நம்மிடம் போதுமான அரிசி இருக்கும் பட்சத்தில், அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று இப்போதைக்கு 40 ஆயிரம் டன் அரிசியை உதவியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. ஆகையால் அரசு கூறி வந்துள்ளதற்கும் உண்மையில் நடந்ததற்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. ஒரு குழப்பத்தை உண்டாக்கி, இந்த உணவுத் துறை அரசுக்கு ஒரு இக்கட்டான நிலைமையை உண்டுபண்ணியிருக்கின்றது. மக்களையும் கஷ்டத்திற்கு உள்ளாக்கி விட்டது. இம்மாதிரியான கஷ்டத்தையும் உண்டு பண்ணியிருக்க வேண்டியதில்லை. இனியாவது உஷாராக நம் மாநிலத்திலிருந்து அரிசி வெளியே போகாமல் பாதுகாத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போதைக்கும் நம்மிடம் ஸ்டாக் நிறைய இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றார்கள். அதை நான் ஒத்துக்கொள்கின்றேன். இருக்கின்ற ஸ்டாக்குகள் எல்லோருக்கும் தாராளமாகக் கிடைக்கும்படியாகச் செய்து, விலையும் ரூ. 3 அல்லது 3½-க்கு மேல் போகாமலிருக்கவாவது ஏற்பாடு செய்ய வேண்டும். இனியேனும் மக்களுக்கு அரிசி தாராளமாகக் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அவ்வளவும் கள்ளக் கடத்தலுக்குச் செல்லவில்லை என்று சொன்னேன்.

MR. CHAIRMAN: The Hon. the Minister for Food will reply only on the 16th August 1974.

## 4. அறிவிப்பு.

### அலுவல் திட்டத்தில் மாறுதல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:**

கச்சத் தீவைப் பற்றியும், பாராளுமன்ற-சட்டப் பேரவை தொகுதி வரையறை பற்றியுமான அரசினர் தீர்மானங்கள், அலுவல் ஆய்வுக் குழுவினால் முடிவு செய்யப்பட்டதற்குச் சிறிது மாற்றம் செய்வதன் மூலம் ஆகஸ்டு 17-ம் தேதிக்குப் பதிலாக ஆகஸ்டு 16-ம் தேதி வெள்ளிக்கிழமை அன்றே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 16—8—1974 அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-02)

[1974 ஆகஸ்ட் 14

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

@ 67. Annual Financial Statement for 1974-75 and Supplementary Financial Statement for 1973-74 of the Tamil Nadu Electricity Board. [Laid on the table of the House under section 61 of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).]

£ 68. Annual Accounts of the Tamil Nadu Housing Board for the year 1966-67 and the Audit Report for 1966-67. [Laid on the table of the House under section 125 (1) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

B. Reports, Notifications and Other Papers.

@ 30. Statement of action taken on the suggestions made by the members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1973-74.

@ Circulated to all M.L.Cs. on 12th August 1974.
£ Laid on the table of the House on 13th August 1974.



1974 ஆகஸ்ட் 14]

இணைப்பு

(9 ஆம் பக்கத்தில் 16 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

**விடை**—தமிழகத்தில் ஏழு சிமெண்ட் ஆலைகள் உள்ளன. ஆறு தனியார் துறையிலும், அரசு நிறுவனமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் நடத்தப்படும் ஒன்று பொதுத் துறையிலும் உள்ளன. இவ்வாலைகளின் உரிமைத் திறன், நிறுவப்பட்ட திறன், 1973-ம் ஆண்டில் உற்பத்தி ஆகிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆலையின் பெயர். | உற்பத்தியாகும் பொருள். | உரிமைத் திறன் (மெட்ரிக் டன் கணக்கில்). | நிறுவப்பட்ட திறன் (மெட்ரிக் டன் கணக்கில்). | உற்பத்தி 1973. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 தி இந்தியா சிமெண்ட்ஸ், லிமிடெட், தாளையூத்து. | போர்ட்லாண்ட் சிமெண்ட். | 913,000 | 913,000 | 536,000 |
| 2 தி இந்தியா சிமெண்ட்ஸ், லிமிடெட், சங்கரிதுர்க்கம். | ,, | 600,000 | 600,000 | 507,000 |
| 3 டால்மியா சிமெண்ட் (பாரத்), லிமிடெட், டால்மியாபுரம். | போர்ட்லாண்ட், போசலோனு சிமெண்ட். | 525,000 | 467,050 | 436,648.02 |
| 4 செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன், லிமிடெட், கரூர். | போர்ட்லாண்ட், சிமெண்ட். | 400,000 | 360,000 | 163,683.10 |
| 5 தி ஏ. சி. சி., லிமிடெட், மதுக்கரை. | ,, | 401,910 | 382,000 | 246,000 |

| ஆலையின் பெயர். (1) | உற்பத்தியாகும் பொருள். (2) | உரிமத்திறன் (மெட்ரிக் டன் கணக்கில்). (3) | நிறுவப்பட்ட திறன் (மெட்ரிக் டன் கணக்கில்). (4) | உற்பத்தி 1973. (5) |
|---|---|---|---|---|
| 6 தி மெட்ராஸ் சிமெண்ட்ஸ், லிமிடெட், துலுக்கப்பட்டி. | போர்ட் லாண்ட் சிமெண்ட் | 400,000 (ஆலை விஸ்தரிப்பையும் சேர்த்து). | 190,000 | 135,900 |
| 7 அரசு சிமெண்ட், லிமிடெட், ஆலங்குளம். | ,, | 700,000 (ஆலை விஸ்தரிப்பையும் சேர்த்து). | 400,000 | 258,308 |

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1974 ஆகஸ்ட் 16.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Part-time M.Ed. Courses*

* 21 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal with the Government to start part-time M.Ed. Courses in all the Training Colleges in Tamil Nadu?

### பகுதி நேர எம். எட். பட்ட மேற்படிப்பு.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

தமிழ்நாட்டிலுள்ள பயிற்சிக் கல்லூரிகள் அனைத்திலும் பகுதி நேர எம். எட். (M.Ed.) பட்ட மேற்படிப்பு வகுப்புக்களைத் தொடங்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழகத்தில் 7 அரசு பயிற்சிக் கல்லூரிகள் இருக்கின்றன. இவைகளில், நான்கு கல்லூரிகளில் முதுநிலை பயிற்சிப் பிரிவு (எம்.எட்.) (பகுதி நேரம் 3, முழு நேரம் 1) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இரண்டு கல்லூரிகளில் முதுநிலை பயிற்சிப் பிரிவு (பகுதி நேரம்) 1974–75 ஆம் ஆண்டு தொடங்குவதற்கு சென்னைப் பல்கலைக் கழகத்திடம் இணைப்பு கோரப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஒரத்தநாடு அரசு பயிற்சிக் கல்லூரியில் முதுநிலை பயிற்சிப் பிரிவு தொடங்க செயற்குறிப்பு இல்லை.

[1974 ஆகஸ்ட் 16

## 'One Unit' System for Education Department Personnel

*22 Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Government are considering the introduction of 'One Unit' system for the personnel borne on the Tamil Nadu Ministerial Service in the Education Department; and

(b) if so, the stage at which the matter now stands?

**கல்வித் துறை பணியாளர்களுக்கு 'ஒரு யூனிட்' முறை.**

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு நிர்வாகப் பணியில் கல்வித் துறையில் பணி புரியும் பணியாளர்களுக்காக "ஒரு யூனிட்" (One Unit) முறையைக் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், இப்பொருள் இப்போது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஒரு யூனிட் முறையை கல்வித்துறையில் நடைமுறைப்படுத்த 6—5—1974-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## Diploma for Compounders

*23 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that persons with less than S.S.L.C. qualification, who have received Diploma for qualified compounders, are not being allowed to be qualified persons on a par with Chemists and Druggists by the Drugs Control Department;

(b) if so, the reasons therefor; and

(c) the action proposed to be taken by the Government in this regard?



1974 ஆகஸ்ட் 16]

**மருந்து கலக்குப்வர்களுக்கான பட்டயத் தகுதி.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) எஸ்.எஸ்.எல்.சி.க்கும் குறைந்த கல்வித் தகுதியுடையவர்களாய், தகுதி பெற்ற மருந்து கலக்குபவர்களுக்கான பட்டயத் தகுதி பெற்றுள்ளவர்கள் மருந்து கலக்குபவர்—மருந்து விற்பவர்களுக்கு (Chemists and Druggists) இணையாகத் தகுதி பெற்றவர்களாய் பணி புரிய மருந்துகள் கட்டுப்பாட்டுத் துறையால், அனுமதிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) இது தொடர்பாக அரசால் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) மருந்துகள், ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின் கீழும் அதன் கீழும் இயற்றப்பட்ட விதிகளின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

(உ) அத்தகைய குறைந்த தகுதி பெற்ற மருந்தாக்குநர்களும் மாநில மருந்தாக்குநர்க் குழுவில் பதிவு பெறுவதற்கு இயலும் வகையில் 1948 ஆம் ஆண்டு மருந்துச் சட்டத்தைத் (மத்தியச் - சட்டம் 8/1948) திருத்துவதற்கான செயற்குறிப்பு மத்திய அரசால் செய்யப்பட வேண்டும். இது குறித்து அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, தற்போதுள்ள பார்மசி சட்டத்தின்படி எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்து, அதற்கும் மேலாக மருந்து கலக்குபவராக டிப்ளமா பெற்றவர்கள்தான் அதில் பதிவு செய்துகொள்ள முடியும். அவர்கள்தான் மருத்துவ மனைகள், அரசு அலுவலகங்கள் போன்றவைகளைப் பார்க்க முடியும். ஆனால் மருந்துக் கடைகளிலே வேலை பார்க்கக் கூடிய தகுதி, எஸ்.எஸ்.எல்.சி பாஸ் செய்யாதவர்களாக இருந்தாலும், முன் அனுபவத்தின் பேரிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. 1950-ல் நடந்த கம்பவுண்டிங் பயிற்சியிலே பலர் அரசாங்கத்தாலே தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசாங்கம் நடத்திய தேர்விலே தேர்ச்சி அடைந்து, கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக எந்தவித வேலையும் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே பார்மசி ஆக்டிலே சேர்க்க முடியாவிட்டாலும்,

நமக்கு இருக்கிற அதிகாரத்தைக்கொண்டு மருந்துக் கடைகளிலே அவர்கள் வேலை பார்க்கக்கூடிய தகுதியை நமது அரசு அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்..

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது அப்படிப்பட்டவர்கள் மருந்துக் கடைகளில் சேர்ந்து பணியாற்றுவதற்குரிய சான்றுகள் வழங்குவதற்காகப் பதிவு செய்ய பார்மசி ஆக்டைத் திருத்த வேண்டியிருக்கிறது. இது அவசியமான திருத்தம். எஸ்.எஸ்.எல்.சி. எஜுகேஷனல் குவாலிபிகேஷனுக்கு தகுதி உடையவர்கள் என்று செய்வதற்கு இடையிலே சென்னைப் பல்கலைக் கழகத்தின் விதிமுறைகள் காரணமாக ஏதோ தடை ஏற்பட்டுவிட்டது. ஆகவே அந்த மினிமம் குவாலிபிகேஷன் இல்லை என்பதற்காக பதிவு செய்யப்பட முடியாது இருப்பவர்களுக்கு, அதிலேயும் பல பேர் கம்பவுண்டர் என்ற பெயரிலே பணியாற்றியவர்களுக்கு, மத்திய அரசு இந்தச் சட்டத்தை திருத்துவதன் மூலம் அந்த விதிவிலக்கை அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மேலும் தொடர்ந்து முயற்சிப்போம். அதன் மூலம்தான் இந்த விதிவிலக்கு கிடைக்கும் என்று அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் அறிவிக்கிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளிலே எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்யாத பலர் இன்னும் பார்மசிஸ்ட்டுகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். மருந்துக் கடைகளிலே அந்த உரிமையைப் பெறுவதற்கு மருந்துச் சட்டத்திலே விலக்கு அளிக்கக்கூடிய அதிகாரம் நமது அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதைப் பிரயோகித்து, அவர்களை மருந்துக் கடைகளிலே வேலை பார்க்க அனுமதியை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அதைப்பற்றி ஒரு சட்டம் இன்னொரு சட்டத்தாலே பாதிக்கப்பட்டுவிட்டது என்று கருத்து தெரிவிக்கிறார்கள். 'கோரிலேடிங்' என்று பொருள்பட தெரிவிக்கிறார்கள். அதற்கு மேல் விளக்கமாகப் பேச வேண்டுமென்றால், தனியாக உட்கார்ந்துதான் பேச வேண்டும். ஒரு சட்டத்தை மற்றொரு சட்டம் பாதிக்குமானால், அதற்குரிய முறையில் சட்டத்தைத் திருத்த வேண்டும். இது நம்முடைய மாநிலத்திலே இப்படி என்றால், பிற மாநிலங்களிலே அதிகம் பாதிக்கச் செய்யும். மத்திய அரசுக்குக் கடிதம் நீண்ட நாட்களாக எழுதப்பட்டு வருகிறது. என்ன காரணமோ அவர்கள் விழிப்படையவில்லை,



THIRU G. SWAMINATHAN : Sir, I am standing on a point of order. I gave notice of this question on 6th September 1971. It has taken nearly three years for the Department to give this answer. Had I not been re-elected, I would not have been here even to put this question. The Council Rules stipulate forty-two days' time. I would only request that it may be implemented. At least, within six months the answers may be given. Otherwise, the Members will not have any interest in asking questions.

MR. CHAIRMAN : The stipulation of a time-limit was made only recently and it was not there before.

THIRU G. SWAMINATHAN : Sir, our recent amendment was passed in 1972. Even after 1972, it has taken two years. On matters covered by the questions, people make representations to us. If the questions are not replied to in time, we may not be in a position to convey information to people who represent to us, and we may not be effectively representing the people.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the reply reached the Minister at the end of the session and, therefore, we were not able to furnish the reply at that time. Secondly, correspondence was going on between the Centre and the State in the matter. Moreover, as this was a demand put forth to me personally by so many compounders, I wanted to get a positive reply from the Centre, in which I have failed. Therefore, under the circumstances, the delay is permissible.

*Demands of the Pharmacists*

* 24 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government are aware that the Pharmacists working in Government Hospitals in this State have decided to resort to direct action from September 1972, in order to press their demands;

(b) if so, their demands; and

(c) the action decided to be taken thereon by the Government?

[1974 ஆகஸ்ட் 16

## மருந்தாளுநர்களின் கோரிக்கைகள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நமது மாநில அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருந்தாளுநர்கள் அவர்களது கோரிக்கைகளை வலியுறுத்தும் வண்ணம் இந்த ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து சில நேரடி நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்திருப்பதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அவர்கள் கோரிக்கைகள் யாவை ?

(உ) அக் கோரிக்கைகள் மேல் அரசு என்ன நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ), (இ) & (உ) மருந்தாளுநர்களின் தலையாய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டமையால் அவர்கள் நேரடி நடவடிக்கைகள் எதிலும் இந்தக் குறிப்பிட்ட காலத்தில் ஈடுபடவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியும் 26—9—1972-லே போடப்பட்டதாகும். அதற்குப் பிறகு மருந்தாளுநர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தும் வண்ணம் நேரடி நடவடிக்கையிலே இறங்க இருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு இரண்டாண்டுகள் ஆகிவிட்ட காரணத்தாலே அந்தக் கேள்விக்குரிய எந்தவிதமான பதிலையும் அமைச்சரிடம் பெறக்கூடிய அளவுக்கு தற்போது நிலைமை இல்லை என்பதையும் காண்கிறேன். இது சாதாரணமான கேள்வி. இதற்குக்கூட பதில்வர இவ்வளவு காலம் ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே கூட நேரடியாக அவர்களுடைய பிரதிநிதிகள் சந்தித்துப் பேசி, சிக்கல்கள் தீர்க்கப்பட்டுவிட்டன. அது அங்கத்தினர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அவர்கள் இடையிலே இருந்து சமாதானம் செய்து வைத்தவர்களிலே ஒருவர். ஆகவே இந்தக் கேள்வியில் அக்கறை காட்டாததற்குக் காரணம் அந்த நல்ல முடிவு ஏற்பட்டதுதான்.

**திரு. ஏ. தங்கவேல் :** தலைவர் அவர்களே, இன்ஜினியர்களும், டாக்டர்களும், நர்சுகளும் வேலையில்லாமல் நூற்றுக்கணக்காக இருக்கும்போது, பி. பார்மசி படித்தவர்கள் பற்றாக்குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா ?



1974 ஆகஸ்ட் 16]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பி. பார்மசி என்ற பட்டப்படிப்பு படித்தவர்கள் பற்றாக்குறை என்ற நிலைமை ஏற்பட்டு, அதை அதிகப்படுத்த வேண்டும் என்று எந்த வேண்டுகோளும் வரவில்லை. டிப்ளமா இன் பார்மசி சில இடங்களிலே கிடைக்கவில்லை என்ற கருத்து வந்திருக்கிறது. ஒரு ஆண்டுக்கு 100 பேர் என்ற அளவுக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட காரணத்தால், இதற்கு முன்னால் அது இன்னும் அதிகம் தேவை என்று அரசு உணர வாய்ப்பு இல்லை. அண்மையிலே இந்தக் கருத்தை அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

## *Fertilizers supplied on loan*

*25 Q.—THIRU N. WILSON APPOLLOS (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the total value of fertilizers supplied as loan to the farmers of West Arani Panchayat Union, North Arcot District, during 1970-71;

(b) whether the Government issued orders to supply fertilizers to private agencies;

(c) if so, the number of such agencies; and

(d) whether the Government have sanctioned any advance to them?

## அரசாங்கக் கடனாக இரசாயன உரங்கள்

**திரு. என். வில்சன் அப்போலோஸ் (திரு. எல். பலராமன் சார்பில்) :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-71 ஆம் ஆண்டில், வட ஆற்காடு மாவட்டம், மேற்கு ஆரணி பஞ்சாயத்து யூனியனில், விவசாயிகளுக்கு அரசாங்கக் கடனாக இரசாயன உரங்கள் எவ்வளவு தொகைக்கு வழங்கப்பட்டது ?

(இ) இரசாயன உரங்கள் தனியார் இடம் வழங்க உத்திரவிடப்பட்டதா?

(உ) ஆமெனில், எத்தனை நபர்கள் ?

(எ) இவர்களுக்கும் பணம் ஏதும் வழங்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ரூ. 2,94,504

(இ) & (உ) 6 நபர்கள்.

(எ) இல்லை.

[1974 ஆகஸ்ட் 16

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக இரசாயன உரம் கடன் கொடுப்பது எந்த அடிப்படையிலே விநியோகிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையில், ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக இரசாயன உரங்கள் விநியோகிக்கப்படுவதில்லை.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டிலே நடந்த மாதிரி விவசாய இலாகா மூலமும் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமும் இரசாயன உரங்களை விநியோகிக்க அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, சாதாரணமாக கூட்டுறவு சங்கங்கள் மூலமும் தனியார் துறை மூலமும் இரசாயன உரங்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றையும் இப்போது விவசாய இலாகாவிலுள்ள டெப்போக்களின் மூலமாக விநியோகிக்கலாமா என்பது ஆய்வில் இருக்கின்றது.

(பிற்பகல் 4-10)

### *Substitute for Diesel Oil*

* 26 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the spirit extracted from Molasses can be used as a substitute for diesel oil;

(*b*) if so, whether this has been tested; and

(*c*) if so, the findings of the test?

டீசல் எண்ணெய்க்குப் பதிலானது.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கரும்பிலிருந்து சர்க்கரைச் சத்து அகற்றப்பட்ட பின் கிடைக்கும் திரவத்தில் (Molasses) இருந்து எடுக்கப்படும் எரி சாராயம், டீசல் எண்ணெய்க்குப் பதில் பயன் படுத்தப்படலாமென்பது உண்மையா ?

(இ) இது பரிசீலனை செய்யப்பட்டதா ?

(உ) ஆமெனில், பரிசீலனையின் முடிவென்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) ஆம்.

(உ) எரி சாராயத்தைப் பயன்படுத்த சாத்தியக் கூறுகள் உள்ளன.



1974 ஆகஸ்ட் 16]

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அதைப் பயன்படுத்துவதைப் பற்றிப் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர், அது எந்த அளவில் பயன்படுத்தப் படுகிறது ? எந்த இடத்தில் அதைப்பற்றிப் பரிசீலனை செய்தார்கள்? அதனுடைய விலையை டீசல் எண்ணெயின் விலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எந்த அளவிற்கு வேறுபாடு உடையதாக இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த டீசல் எண்ணெயினால் ஏற்படும் கம்ப்ரெஷன் ரேஷியோவை 90-லிருந்து 60 ஆகக் குறைத்துக்கொண்டால், அதாவது சிலிண்டெரின் முகத்தைச் சற்றுத் தேய்த்துக்கொண்டால் எரி சாராயத்தினால் ஓட்ட முடிகின்றது. ஆனால் அதைப் பயன்படுத்தலாமா என்று பார்த்தால், சில தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழில் அதிபர்கள் அது எங்களுடைய தொழிற்சாலைகளுக்கு வேண்டும் என்று கூறுகின்றார்கள். எனவே அது இப்போது நடைமுறையில் பயன் படுத்தப்படுவதில்லை.

செலவைப்பற்றிக் கேட்கின்றார்கள். டீசல் எண்ணெய் ஒரு ரூபாய்க்கு மேலே ஆகின்றது. ஆனால் எரி சாராயம் ஒரு லிட்டர் கிட்டத்தட்ட 40 காசு என்ற அளவிற்குத்தான் ஆகின்றது.

THIRU A. R. DAMODARAN : Sir, I have heard of the utilisation of Ethyl Alcohol instead of petrol. May I know whether this spirit is intended for use as admixture in petrol or diesel oil?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, what I mentioned was that rectified spirit, which is 95 per cent pure alcohol, could be used without mixing it either in diesel or in petrol. As such, it can be used in the diesel engines if the compression ratio is reduced from 90 per cent to 60 per cent. But the Ethyl Alcohol which the hon. Member is mentioning is absolute alcohol with 99.9 per cent purity which can be mixed with petrol even to the extent of 1/3. It helps in the running of the automobile engines and prevents knocking. It is helpful and, at the same time, it reduces the cost of petrol.

திரு. ஜார்ஜ் கோமகன் : தலைவரவர்களே, இந்த மொலாசெஸ் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றதா? அப்படியானால் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்ட் 16

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, டிஸ்டில்லெரிஸ் என்ற அந்தத் தொழிற்சாலைகளிலே உற்பத்தியாகும் எரி சாராயமெல்லாம் அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள்தான் வைக்கப்பட்டிருக்கின்றது. தனியார் யாருக்கும் அது கொடுக்கப்படுவதில்லை. வியாபாரிகளுக்கு என்று கொடுக்கும்போது, அது நாட்டுச் சாராயம் தயார் செய்வதற்காக என்று பயன்படுத்தப்படுகின்றது. எனவே அது தனியாருக்கு என்று கொடுக்கப்படுவதில்லை. அதுவும் வரும் செப்டம்பர் 1-ம் தேதிக்குப் பிறகு பிளாஸ்டிக் தயார் செய்யும் சில தொழிற்சாலைகளுக்கு, பி.வி.சி. என்று சொல்லும் கெமிக்கல்லுக்காக சில தொழில் அதிபர்களுக்குத்தான் அதைக் கொடுக்க வேண்டி வரும். காரணம் பிளாஸ்டிக் தயாரிப்புக்கு அது மூலப் பொருளாக இருக்கின்றது என்று அது தங்களுக்கு வேண்டும் என்று கேட்கும் காரணத்தினால், அது அவர்களுக்குத்தான் தரப்பட வேண்டுமா என்று யோசிக்க வேண்டியிருக்கின்றது. அரசு எந்தவிதமான முடிவும் செய்யவில்லை. நான் சொல்லிக்கொண்டு வருகிறேன், விவசாயத்தில் பம்புசெட்டுகளை ஓட்டுவதற்காக அந்த எரி சாராயத்தைக் கொடுக்க வேண்டும் என்று. ஆனால் தொழில் அதிபர்கள் அது தங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகின்றார்கள். என்ன முடிவாகும் என்று இந்த நிலையில் சொல்லுவதற்கு இல்லை.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, இப்போது மனிதன்தான் சாராயம் சாப்பிடுகிறான் என்று அறிந்துகொண்டிருக்கிறோம் ஆனால் எலியும் சாராயம் குடிக்கிறது என்று தெரிகின்றது. எலிச் சாராயம் என்று சொல்லுகின்றார்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கொஞ்சம் காதை ரிப்பேர் பண்ணிக் கொண்டு வர வேண்டும். எரி சாராயம் என்று சொன்னால், எலிச் சாராயம் என்று கேட்கின்றீர்கள்.

**திரு. சி. வி ராஜகோபால் :** தலைவரவர்களே, இப்போது தனிப்பட்டவர்களுக்கு மொலாஸெஸ் வேண்டும் என்று கேட்கின்றார்களே, அதை உபயோகித்து தனியாக சாராயம் காய்ச்சுவதற்காக வேண்டும் என்று கேட்கின்றார்களா? அல்லது வேறு வகைக்காக வேண்டும் என்று கேட்கின்றார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, 1977-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, செக்கு ஆட்டுபவர்கள் இந்த மொலாஸெஸ் தங்களுக்கே வேண்டும் என்று கேட்டார்கள். அண்ணா அவர்களும் ஓரளவிற்கு அதை ஏற்றுக்கொண்டு 100 டன் வரையில் அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த 100



1974 ஆகஸ்ட் 16]

டன்னையும் செக்கு ஆடுவதற்குப் பதிலாக லாரிகளிலே ஏற்றி ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பப்பட்டது அங்கே சாராயம் காய்ச்சுவதற்காக. அதைக் கண்டறிந்த பிறகு அந்த 100 டன்னையும் மெள்ளக் மெள்ளக் குறைத்துக் கொண்டு வந்தாகிவிட்டது. இதற்கெல்லாம் மொலாஸெஸ் கண்ட்ரோல் ஆர்டர் என்று போட்டு அதன்மூலம் முறையாக ரெகுலேட் செய்யப்படுகிறது. இப்போது தனியார் யாருக்கும் கொடுக்கப்படுவதில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் எரி சாராயத்தை டீஸல் எஞ்சினுக்குப் பயன்படுத்தலாம் என்று கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். இப்போதுள்ள டீஸல் பற்றாக் குறையில் இந்த எரி சாராயத்தை பெரிய தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கின்றதை விட்டு விட்டு தமிழகத்தில் விவசாய மேம்பாட்டிற்காக டீஸல் பம்புஸெட்டுகளுக்கு உபயோகிக்கத்தக்க விதத்தில் அரசிடம் ஏதாவது செயல் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கின்றேன். தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படுகின்றது என்றாலும்கூட, ஓரளவிற்கு அவர்களுடைய தேவைகளுக்குக் கொடுத்துவிட்டு மிச்சமிருப்பதை மற்ற மற்ற மாநிலங்களுக்கு அனுப்புவதற்குப் பதிலாக நமது மாநிலத்திலுள்ள டீஸல் பம்புசெட்டுகளை ஓட்டுவதற்கு அதைப் பயன்படுத்தினால் விவசாயத்தில் நாம் நல்ல பயனை அடைய முடியும் என்றுதான் நான் கருதிக்கொண்டு வருகின்றேன்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம் :** தலைவரவர்களே, மொலாஸெஸ் பற்றிய வரையில் தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனாலும் தற்போது மாவட்டக் கலெக்டரிடம் அனுமதி பெற்று ஓரளவிற்கு அதைப் பெறுகின்றார்கள். அதை அவ்வப்பொழுது ரென்யூயெல் செய்துகொண்டு வருகின்றார்கள். அதை எதற்காகப் பயன்படுத்துகின்றார்கள் என்று தெரியவில்லை. ஆனாலும் அது இன்னும் கலெக்டருடைய அனுமதியின்பேரிலே கொடுக்கப்பட்டு வருகின்றது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கட்டுப்பாடு இருக்கின்றது என்று சொன்னேன். தனியார் சிலர் அதை வாங்குகின்றார்கள் என்றால், அந்தக் கட்டுப்பாட்டின் கீழ்தான் வாங்குகின்றார்கள். அதைக்கூட கலெக்டர் மூலமாக இல்லை. டைரெக்டர் ஆஃப் இண்டஸ்ட்ரீஸ் மூலமாகத்தான் 'அலாட்மெண்ட்' செய்யப்படுகிறது, இன்னாருக்கு இவ்வளவு என்று.

[1974 ஆகஸ்ட் 16

## *Representation from Plantation Labourers*

* 27 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether those engaged in plantation in Bodinayakkanur, Kottakkudi, Adamalai villages have sent representations in July 1972 and again in March 1973, regarding the burden of loan imposed on them under the Tamil Nadu Soil Conservation Scheme;

(b) if so, the details of their demands; and

(c) the action taken thereon?

## மலைத் தோட்ட விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) போடிநாயக்கனூர், கொட்டக்குடி, அதமலை கிராமங்களிலுள்ள மலைத்தோட்ட விவசாயிகள், தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், தங்கள் மேல் சுமத்தப்பட்டுள்ள கடன் சுமை குறித்து 1972 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலும், 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளனரா?

(இ) ஆமெனில், அவர்களது கோரிக்கை என்ன?

(உ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) ஆம்.

(இ) அவர்கள் சொல்லுவதெல்லாம் சுவர் இடிந்து விழுந்துவிட்ட காரணத்தினால் தங்கள் நிலங்களிலே மேற்கொள்ளப்பட்ட மண்வளப் பாதுகாப்புப் பணிகளுக்கான செலவைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரினார்கள்.

(உ) அந்தப் புகாரில் உண்மையில்லை என்று அறிக்கை கிடைத்துள்ளபடியால் கடன்களைத் தள்ளுபடி செய்யத் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, மண்வளப் பாதுகாப்பு என்ற முறையில் மண் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டிருக்கின்றது. அந்தச் சுவர் இருக்கின்றதா அல்லது இடிந்து விழுந்துவிட்டதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 16]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, சுவர்களிலிருந்து விழுந்த கற்கள் மூன்று சதவிகிதம் என்ற அளவிற்கு அந்தச் சுவற்றிலிருந்து விழுந்திருக்கின்றன. அதையே வைத்துக்கொண்டு சுவர் விழுந்ததற்கு அடையாளமாகச் சொல்ல முடியாது. மூன்று சதவிகிதம் கற்கள் என்று சொல்லும்போது, அது ரிப்பேர் செலவுக்கு மேலே இல்லை. எனவே அதை ரிப்பேர் செய்வது என்று சொல்லும்போது, அதை விவசாயிகளே செய்து கொள்ள வேண்டியதுதான்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, அந்தச் சுவர் மேலேயிருந்து கீழே விழுந்ததா அல்லது கீழிருந்தே விழுந்திருக்கின்றதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மேலேயிருந்துதான் விழுந்திருக்க வேண்டும். In a few cases, some stones in the walls have fallen down due to felling of trees. பக்கத்திலுள்ள மரம் விழுந்து அந்தச் சுவர் இடிந்த காரணத்தினால், மேலேயிருந்துதான் இடிந்திருக்க வேண்டும். கீழிருந்து இடியாது என்று நினைக்கிறேன்.

THIRU G. SWAMINATHAN: Sir, originally Government stated that nearly 66 per cent of the cost would be borne by the Government and that only about 33-1/3 per cent would have to be borne by the ryots. Now, they want the ryots to pay 60 per cent of the cost and state that the Government would bear only 40 per cent. The walls collapsed within a very few months. May I know whether the Government will take action against the contractors and other people who are responsible for this? May I also know why Government have reversed their stand and are asking now for 60 per cent of the cost from the ryots, instead of getting only about 33 per cent from them?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, this is a matter which relates to the year 1972.

THIRU G. SWAMINATHAN: Sir, it relates to July 1973.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the walls were constructed only in 1972. There was a petition in 1972 and another petition in 1973. About the proportion I do not know exactly the proportion; but it is partly subsidy and partly loan. I have suggested that the question of subsidy may be stopped because if the work is really remunerative, it can be done by borrowing money from the Land Development Banks. Reclamation of land and soil conservation is part of development of land

[1974 ஆகஸ்ட் 16

and it has been provided for in the rules of the Land Development Bank. Therefore, the money can be borrowed from the Land Development Bank and the Bank can attend to the recovery.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, இந்த இடங்களெல்லாம் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இடங்களாக இருக்கின்றன. இந்த மண்வளப் பாதுகாப்பு கமிட்டியில் நான் அங்கத்தினர் என்ற முறையில் சொல்கிறேன். இது நல்ல லாபகரமாக இல்லை, இதனால் விவசாயிகளுக்கு அதிகமான லாபம் இல்லை, இது நல்ல திட்டமாகவும் இல்லை, இது சரியாகச் செயல்படவில்லை என்பதால் அவர்கள் கடன்பட்டு நஷ்டப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் விவசாயிகளுக்கு ஆதரவாக அவர்களுடைய பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்த இந்தக் கடன்களை ரத்து செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4.20)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, ரத்து செய்வது என்பது ஒருபுறம் இருக்கிறது. இப்போது நடைமுறையில் இருக்கிற பழக்கத்தை நான் சொல்ல வேண்டும். அரசாங்கம் கடன் என்று கொடுத்தால்கூட, வாங்குகிறவர்கள் கடன் என்று நினைத்து வாங்காத காரணத்தினால், திரும்பி வருவதில்லை. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவிற்குக் கடனைக் கொடுத்த போதும், 9 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்குத்தான் வந்திருக்கிறது. எவ்வளவு தூரம் விவசாயிகள் மீது இதைக் கட்டாயப்படுத்தி வாங்க வேண்டுமென்று நாம் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். இது பழைய கதையாக இருக்கிறதென்று சொன்னாலும், விவசாயிகள் எவ்வளவு தேவை என்று நினைக்கிறார்களோ அதை பாங்கு மூலமாகக் குறைந்த வட்டியில் வாங்கிக்கொண்டு 10 ஆண்டு தவணைகளில் அவர்கள் இஷ்டப்படி கொடுக்க முடியும். இந்தக் கடன் சம்பந்தப்பட்ட வரையிலும் கூட அவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் கையெழுத்து இருக்கிறது. அவர்கள் நாங்கள் மனப்பூர்வமாக கையெழுத்துப் போடவில்லை என்று சொல்ல இடம் இருக்கிறது. பாங்கில் அவர்கள் பெற்றால், திரும்பக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் மனதில் வெகுவாகப் பதிந்திருக்கும். அரசாங்கம் கொடுக்கும்போது, இனாம் என்று, சும்மா கொடுக்கப்படுகிறது என்ற எண்ணம் இருந்து வருகிறது. வெகு சீக்கிரத்தில் அது சரியாகிவிடும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மனப்பூர்வமாக கையெழுத்துப் போடவில்லையென்றால், அதைக் கண்டுபிடிக்க முடியுமா ?



1974 ஆகஸ்ட் 16]

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மனப்பூர்வமாகப் போடவில்லை என்று சொல்கிறார்கள். உண்மையாகவே அங்கே நடந்தது என்னவென்றால், அதிகாரிகள் போய் விவசாயிகளிடம் அதிகமாக ஆசை காட்டி, நன்மை கிடைப்பதாக இருக்குமென்று சொல்லி, இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. விவசாயிகள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு அதிகமான ஆசையைக் காட்டி லாபம் வருமென்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். இதனால் அவர்கள் லாபம் அடையாததால், இந்தக் கடன்களை ரத்து செய்வதற்கு அரசு முன் வருமா ? இனிமேல் பாங்கியில் விவசாயிகள் வாங்க வேண்டுமென்கிறார்கள். அவர்கள் வாங்கிக்கொள்வார்கள். இதை ரத்து பண்ண வேண்டும். அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அவர்கள் மனப்பூர்வமாக கையெழுத்துப் போடவில்லை என்று நான் சொல்லவில்லை. கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. கையெழுத்துப் போடும்போது நன்மை உண்டாகும் என்று நம்பி கையெழுத்துப் போட்டார்கள். அரசாங்கத்தில் கடன் வாங்கும்போது, இரண்டொரு ஆண்டு ஆகும்போது, அவர்களுக்கு பணத்தைத் திரும்ப கொடுக்கவேண்டுமே என்ற எண்ணம் உள்ளத்தில் குறைந்துவிடுகிறது. இந்த ஆண்டிலிருந்து பாங்கியிலிருந்து கொடுத்து வாங்க வேண்டும். ஒரு கோடி ரூபாய் பட்ஜெட்டில் போட்டதை நிறுத்தி வைத்து பாங்கில் வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, 1970-ல் மண்வளத் திட்டம் வந்தபோது, 40 சதவீதம் மானியம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. இந்தத் திட்டம் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டபோது, 40 சதவீதம் மானியம் என்பது 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் மத்தியில் சொல்கிறார்கள். கடனை ரத்து பண்ணாவிட்டாலும் 40 சதவீத மானியம் கொடுப்பதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இப்படி ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அளவில் கொடுத்து வந்த கடன், பல ஆண்டுகளாகக் கொடுத்த பணம் எல்லாம் அப்படியே வராமல் நின்று கொண்டிருக்கின்றது. என்னைக் கேட்டால், 40 சதவீதம் தள்ளிக் கொடுத்து, மற்றவைகளையெல்லாம் இந்த ஆண்டு முடிவிற்குள் கொடுத்தால் பெற்றுக்கொள்ளலாம் என்று என் தனிப்பட்ட கருத்தைச் சொல்கிறேன். இப்படிக்கூட 6 கோடி ரூபாய் வர முடியும். இப்போது எதுவும் வசூல் பண்ண முடியவில்லை. ரெவின்யூ ரெகவரி ஆக்ட் படி வசூல் பண்ணப் போனால் அவர்கள் கஷ்டப்படுத்

தப்படுகிறார்கள், கட்டாயப் படுத்தப்படுகிறார்கள் என்ற புகார்கள் வருகின்றன. அரசாங்கம் எப்போதுமே மக்களுடைய கருத்துக்கு இணங்கவேண்டிய காரணத்தினால், இதை விட்டு வைக்க வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் கொடுத்துவிட்டு 9,600 ரூபாய் சொச்சம்தான் வசூலாகியிருக்கிறது. இந்த மாதிரி இருப்பதை விட என்னைக் கேட்டால், 60 சதவீதம் வாங்கிக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். இப்படிச் செய்ய முடியுமாவென்று கேட்கிறேன். இந்த ஆண்டு முடிவிற்குள் கொடுத்துவிட வேண்டும். இதற்குச் சம்மதமானால் கவனிக்கலாம்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறிய பதிலிலிருந்து இந்த ஆண்டு மண் வளப் பாதுகாப்புக்குப் பெற்ற கடன் ஒரு கோடி ரூபாயில் 40 சதவீதம் போக மீதியை வசூல் செய்வதற்கு உத்தரவிடுவார் என்று கருத்து கொள்ளலாமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, அப்படிச் சொல்லவில்லை. அப்படி விவசாயிகள் வருவார்களானால், இந்த ஆண்டு முடிவிற்குள்ளாகக் கொடுக்க வேண்டும். இப்போது பாக்கி நிற்பது ஏறத்தாழ 10 கோடி ரூபாய். 6 கோடி ரூபாய் அளவிற்கு இந்த ஆண்டு முடிவிற்குள்ளாக அவர்கள் கொடுத்து விடுவார்களானால், பண நெருக்கடி இருக்கிற இந்த நேரத்தில், மதுவிலக்கு கொண்டு வந்த காரணத்தினால், குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்ட இந்த நேரத்தில் அது வரவேற்கக் கூடிய ஒன்றாக இருக்கும் என்ற என் கருத்தைச் சொல்கிறேன். பரிசீலனை செய்கிறேன் என்று ஒத்துக்கொண்டிருக்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது, விவசாயிகள் சம்மதம் பெறாமல் நிறைவேற்றப்பட்டதாக பலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ராமநாதபுரம் மாவட்டம் பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்கப்பட்ட காரணத்தினால், பிற மாவட்டங்களுக்கு இல்லாவிடினும், ராமநாதபுரம் மாவட்டத்திற்காவது கொடுக்கப்பட்ட கடனை ரத்து செய்வதற்கு அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும் இந்த மண் வளப் பாதுகாப்பு என்பது நடந்திருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் நடந்திருக்கிறது. ஆனால் இதை அப்படியே தள்ளி விட வேண்டும் என்பது, கடன் வாங்கியவர்கள் எப்போதும் சொல்லவேண்டியது தான், கொடுத்தவர்கள் எல்லாக் கடனையும் கொடுத்து விடவேண்டுமென்று சொல்ல வேண்டியது தான். பொதுவாக இந்தப் பணம் பூராவுமே அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம். இதைத் தள்ளிவிடுவதற்குப் பதிலாக 60





சதவீதம் இந்த ஆண்டுக்குள் கொடுத்து விடுவார்களானால் இது வரை பாக்கியுள்ள பணத்தைப் பொறுத்துச் சொல்கிறேன், என்னைப் பொறுத்த வரை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். இதை முடிவாகச் சொல்லவில்லை. அரசு, தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு நடக்க வேண்டும்.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து விவசாயிகள் மத்தியில் அவர் வெகுவாக அக்கறையாக இருக்கிறார் என்பது தெரிகிறது. ஆகவே, இந்த ஆண்டு இந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு ஒரு திட்டவட்டமான முடிவெடுத்து எல்லா விவசாயிகளையும் நேரடியாகப் பார்த்து முடிவெடுப்பார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, எல்லா விவசாயிகளையும் கூட்டுவது என்பது முடியாத காரியம். விவசாயிகளின் பிரதிநிதிகள் பேரவையிலும், மேலவையிலும் இருக்கிறவர்கள் ஆலோசித்துப் பார்க்கலாம். தள்ளுபடி செய்வதற்காக அல்ல. 100-க்கு 60 சதவீதம் உடனடியாகக் கொடுக்கிறோம் என்று சொல்வதைப்பற்றி ஆலோசிக்க இன்னும் 10 ஆண்டுகள் தள்ளிக்கொண்டே போவதை விட இன்றைக்குக் கொடுக்கக் கூடிய 60 சதவீதத்தைப் பெற்றுக்கொள்ளலாமா என்பதைப் பரிசீலித்துப் பார்க்கிறேன் என்று சொன்னேன்.

## *Fertilizer Distribution*

* 28 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the former Minister for Co-operation, Hon'ble Thiru Si. Pa. Adithanar, has stated in the month of July 1973 that embezzlement to the tune of crores of rupees has taken place in the distribution of fertilizers through Panchayat Unions and Taluk Co-operative Societies;

(b) if so, the names of the Panchayat Unions and Taluk Co-operative Societies which indulged in black-marketing of fertilizers; and

(c) the action taken thereon?

(பிற்பகல் 4.20)

உர விநியோகம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள், தாலுகா கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர விநியோகம், செய்ததில் சென்ற ஆண்டு கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு ஊழல் நடந்துள்ளதாக முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் 1973 ஜூலை மாதத்தில் கூறியுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், கள்ளச் சந்தை நடத்திய ஊராட்சி ஒன்றியங்கள், தாலுகா கூட்டுறவுச் சங்கங்கள் எவை ?

(உ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON THIRU Si. Pa. ADITANAR : (a), (b) and (c): This is not a correct statement. What the Minister said was that many fertilizer dealers had indulged in large-scale black-marketing.

THIRU G. SWAMINATHAN : Sir, unfortunately, I could not see any other newspaper which contained the Hon. Minister's statement, except 'Navasakthi' wherein it had been fully reported.

ஊராட்சி ஒன்றியங்கள் பல கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர விநியோகம் செய்ததில் கள்ளச் சந்தை 20 கோடி ரூபாய் வரையில் ஊழல் நடந்தது என்று மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டது அந்தச் சமயத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. 20 கோடி வரை ஊழல் நடந்தது என்றும் தற்சமயத்தில் சில பேர்கள் அது மாதிரிச் செய்தார்கள் என்றும் சொல்கிறார்கள். தாலுகா கூட்டுறவுச் சங்கங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் என்று அந்தச் சமயத்தில் சொன்னார்கள். 20 கோடி அளவுக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலிருந்து கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. விவரங்கள் என்ன வென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பல கோடி ரூபாய்க்கு நடந்த ஊழலாக இருப்பதால், விவரங்கள் வேண்டுமென்று விரும்புகிறேன்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I do not know what the word 'Oozhal' means. It means, to some, black-marketing.



THIRU G. SWAMINATHAN : Sir, that was the statement of the Hon. Minister. I do not know what he meant by that at that time.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I could not have used the word 'Oozhal' because I spoke to them in English.

THIRU G. SWAMINATHAN : Sir, whatever is not done in a straightforward way is 'Oozhal'.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, what I stated was that there was black-marketing by dealers. By the word 'dealer' I meant every man who had a licence to deal in fertiliser, including a co-operative society, a private dealer, and also a Panchayat Union if it had a licence—I do not know whether it had a licence. The total quantity of fertilisers which are now dealt in, is in the region of Rs. 60 crores. Taking into account the fair-market dealings—I did not measure the black-market and I cannot do it—the value of fertilizers which are being distributed in the State is about Rs. 60 crores, including Ammonium Sulphate, Urea, Calcium Ammonium Nitrate and Di-Ammonium Phosphate, everything put together. Even if it is assumed that black-marketing has been done to the extent of 5 per cent, it should come to many crores of rupees.

THIRU G. SWAMINATHAN : Sir, the Hon. Minister stated that the licensees included Taluk Co-operative Societies who had been catering to the needs of the public and that they also were involved. My only question is, what are the co-operative societies who, with the licences, were doing this black-marketing. As this comes to many crores of rupees, according to the admission of the Hon. Minister, this House is entitled to know the names at least of the Co-operative Societies who have been doing it on a large scale.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, What I mentioned was that the total dealings were in the region of Rs. 60 crores and even assuming that there was 5 per cent black-marketing, it ought to be in the region of several crores of rupees. If a separate question is put, I can give the names of all the persons who have been prosecuted. Probably, we are now again dealing

with things which are of the past. We have now appointed extra Fertiliser Inspectors. We have also restricted the distribution channel to co-operative societies. I hope there are only a few dealers and the number of dealers is also restricted. Therefore, we are dealing with something which happened previously and which is not likely to happen now. Now, there are about 38 Fertiliser Inspectors, each dealing with two or three taluks. If a separate question is put, I can give the names; but the average, as far as I can say, is about 30 per Inspector and that comes to nearly 900 cases of black-marketing. The House can have the names and they can be published. I would very much like the names to be published. The 'Navasakthi' paper which has now published my statement can as well publish the names of the dealers who have been prosecuted for black-marketing. I am saying that it is in the region of 900 now, this year, due to the stringent action which has been taken. Now, black-marketing has been reduced a great deal for several reasons which I mentioned. We are getting as much as we can and we follow every kilo of fertilizer right from the port down to the farmer. We insist that the signatures of the farmers should also be obtained and where the signatures are false, we take action against them. My hon Friend will also be glad to know that some part of the fertiliser is being manufactured by the Government now. A little part of this, being Ammonium Sulphate and Ammonium Chloride, is being manufactured and mixed with the compost to enrich compost from 1 per cent to 11 per cent nitrogen. Therefore, altogether, black-marketing has come down a great deal.

THIRU G. SWAMINATHAN : Sir, the Hon. Minister said that these happened in the past. Now, I have specifically asked which are all the Panchayat Unions and which are all the Taluk Co-operative Societies that indulged in this black-marketing. My question is specific but the Hon. Minister has not given those details. These are serious complaints against the co-operatives and also against the Panchayat Unions. The Panchayat Unions were being managed by some other Hon. Minister at that time. When 900 co-operative societies were involved in this large-scale black-marketing involving crores of rupees, I think the Government have to say what action has been taken and who are all the people against whom action was taken. The House has to know that. My question is very specific and I do not know why the details have not been given.



THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the question to specific. The hon. Member had asked about Panchayat Unions and about Co-operative Societies. But my answer is also specific and categorical saying that a large number of dealers were engaged in this. Dealers are persons who have got licences.

THIRU G.SWAMINATHAN : Sir, the question is being side-tracked. The Hon. Minister mentioned that there might be 900 dealers. Out of them, there may be about 100 Panchayat Unions. I am not worried about the other 800 dealers. I am worried more about the Co-operative Societies and the Panchayat Unions which have been doing black-marketing. They have been controlled by the Government and I do not know how they have been allowed to do this black-marketing.

The Hon. THIRU Si. Pa. ADITANAR : Sir, my answer was that a large number of dealers had indulged in large-scale black-marketing. Then, the hon. Member probed further to find out how many they were. I said that it was in the region of 900. I will give the names if a separate question is put. I am prepared to divulge the names and they can be published in the newspapers of the Opposition parties.

*திரு. என். சுந்தரேசத் தேவர் : 1971–72 ஆம் ஆண்டில் பஞ்சாயத்து யூனியன் உர வினியோகம் செய்யவில்லை. டெப்போவிலும் உரம் இல்லை.*

*மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தஞ்சையில் இல்லை. மற்ற இடங்களில் இருந்தது.*

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, If the hon. Member and the hon. the Leader of the Opposition oblige by putting a Question for the names of the dealers who have been prosecuted or the names of the dealers against whom action had been taken—I said it was about 900; it would be more—I shall be very glad to furnish the particulars in this House. The hon. the Leader of the Opposition may also be kind enough to publish the names in his newspaper.

THIRU K. RAJARAM : Certainly, Sir. If the Government give it as an advertisement, we will surely publish it.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, இப்படி 15 கோடி அல்லது 20 கோடி ரூபாய் அளவிற்கு திருட்டுப்போய் விட்டது என்று கடைசியில் சொல்லுவதை விட, 2 கோடி ரூபாய் போய்விட்டது என்ற உடனேயே என் நடவடிக்கை எடுக்கவில்லை? ' அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால் how many have been prosecuted and sent to jail and what was the conviction? How many people have been dragged to the Court? Will the Hon. Minister be pleased to place all the informations before the House?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, the hon. Member is asking for "informations", in the plural. Whatever information he is asking for, I am prepared to furnish, provided he puts it in the shape of a question asking for the details—who are the persons who have been prosecuted, what is the nature of the offence, under what section of the Fertiliser Control Order have they been prosecuted, what is the quantity involved; amount involved, etc. I am prepared to furnish the names. But, I do not come forward to publish it as an advertisement because Government cannot pay for this. I will furnish the details if a question is put. The hon. Member was keen on quoting a press cutting from 'Navasakthi'. The names of the persons prosecuted during the last three months may be published.

THIRU G. SWAMINATHAN: Sir, my question is specific. It reads 'if so, the names of the Panchayat Unions and Taluk Co-operative Societies which indulged in black-marketing'. I have specifically asked for the names. The question has been admitted by the Hon. Chairman and the Hon. Minister is not giving the names. He now asks for a specific question.

MR. CHAIRMAN: The hon. Member has specifically asked a question and his grievance is that a specific answer is not given. The question put by the hon. Member is specific.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, the question was about a statement which I made. I stated that the statement as referred to in the question was not a correct statement. I cannot carry in my head the details as to who are the dealers and what are their names. If the hon. Member puts a question about the names of the dealers who have been prosecuted, I am prepared to furnish them. But, if he wants to restrict it to certain licensees, then I will have to make a selection.



THIRU K. RAJARAM: Sir, the hon. Member has specifically put his question like this: 'if so, the names of the Panchayat Unions and Taluk Co-operative Societies which indulged in black-marketing of fertilisers'. I do not know what else the Hon. Minister wants. The hon. Member has specifically asked for the names of the Panchayat Unions and the Co-operative Societies which have indulged in black-marketing and he has put his question specifically.

THIRU S. T. ADITYAN: Sir, the second part of the question starts with 'if so'. If the first part of the question, namely, that Panchayat Unions, etc., were involved in this, is to be admitted, then only the names have to be given. That has not been admitted.

THIRU K. RAJARAM: Sir, the Hon. Minister stated that 900 persons had been prosecuted for black-marketing. The question is, out of them, how many are co-operative institutions and how many are Panchayat Unions.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, in my answer, I have not admitted. I have simply said "No, the statement is incorrect". I could have stopped with that and avoided all supplementary questions. I did not do it. I wanted to give all the information for the good of the public so that the public would know that large-scale black-marketing had taken place. That was why I gave the details. But I have not admitted that Panchayat Unions and particular co-operative societies have indulged in this. I said "various licensed dealers"; but the nature of the licensed dealers may be asked for by putting another question.

THIRU A. R. DAMODARAN: Sir, I move that this question be re-put tomorrow so that it can be fully answered by the Hon. Minister.

MR. CHAIRMAN: Is the Hon. Minister prepared to give a full answer tomorrow?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, in order to collect the names of all the black-marketeers ...

THIRU G. SWAMINATHAN: Sir, I do not want all the names. I only want the names of the Panchayat Unions and Taluk Co-operative Societies.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I do agree that there are some co-operative societies which were involved. But if the information is to be collected, it cannot be done tomorrow, because, I will have to collect it. How can I collect it from all the Districts from Kanyakumari up to Chingleput? I request that another question be put.

THIRU K. RAJARAM : Sir, the Government machinery is there to collect the information. We have no objection to the Hon. Minister asking for some time. After all, he has admitted that some co-operative societies and some Panchayat Unions have committed the mistake. The House wants to know the names of those societies and Panchayat Unions. That information the Hon. Minister can give tomorrow or day after tomorrow. Let the Hon. Minister ask for some time and the Hon. Chairman may give him some time. The Government machinery is with the Hon. Minister for collecting the information.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, if the hon. the Leader of the Opposition realises the difficulty in collecting the statistics from the various places, then he will probably agree with me. In my answer I have not agreed about any Panchayat Union. I did not say that any Panchayat Union was involved. I said that co-operative societies were there, dealers were there and licensed dealers were there. The question relates to 1972–73, not 1973–74 or 1974–75. Certainly, it will take a longer time to collect the information. Therefore, it is better if a separate Question, probably a Short Notice Question, is put.

MR. CHAIRMAN : There has been ample time from the time the question was given notice of till the time the answer was ready. The Hon. Minister could have prepared the answer within that time. The hon. Members are eager to get the information from the Hon. Minister. The Hon. Minister must press the Department concerned to get the proper answer from the various officers. That is what is going on in both the Houses and the hon. Members do not put a separate question for getting connected information. Does the hon. Member Thiru Swaminathan want to put a separate question ?

THIRU K. RAJARAM : Sir, if there are no Panchayat Unions, let the Hon. Minister give the names of the Societies. It may not be to the liking of the Hon. Minister, but I would like to have the information.





THIRU K. A. ABDUL WAHAB : Sir, there are some Societies that have been penalised. Why should not the Hon. Minister give the names of those Societies?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, there seems to be a little confusion about this. The Hon. Minister has stated that he did not refer to Panchayat Unions. The newspaper report was denied by him. Usually, when such questions are put, the answer is always in the negative. Somehow, this answer has been slightly positive in order to throw light on the other material that is available with the Hon. Minister. Therefore, there is no involvement of Panchayat Unions and it is only about some of the co-operative societies and also individuals who had licences. Actually whatever material is available is put forth, when further questions are put. Moreover, this starts on a negative answer and it is not actually on a positive answer. The whole proposition put in the question is not accepted by the Minister or by the Department. Because he wanted to clarify the issue he went on a positive line. Therefore, if further questions are put on the details given by the Hon. Minister, he will be glad to collect the information and reply.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. the Minister for Agriculture, while challenging the hon. the Leader of the Opposition mentioned that there were 900 dealers who had been prosecuted and said that he would volunteer to have this information published in 'Navasakthi' without expense. May I know, if he has that list, why he should not select the co-operative societies in that list and place the information before the House ?

THIRU G. VASANTHA PAI : Sir, why not the Hon. Minister place the 900 names on the table of the House ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the question relates to 1972-73. The 900 prosecutions which I mentioned relate to a subsequent period. I could have stopped with saying, "This is not a correct statement".

THIRU K. RAJARAM : Sir, that answer was for the first part of the question and the Hon. Minister could not have stopped with that.

THIRU G. VASANTHA PAI : Sir, I think that is unfair to the House. The Hon. Minister will have to place the information before the House.

The Hon. Thiru Si. Pa. ADITANAR : Sir, the 900 prosecutions mentioned by me relate to a subsequent period and not to 1972-73. The system now obtaining is different. There are more than 38 Fertiliser Inspectors with powers given to them under the Fertiliser Control Order. After they were appointed, there had been 900 cases easily. But this question is about a prior period. The statement about the prior period is wrong. I have, therefore, mentioned my correct statement to the effect that dealers have done this. If the hon Members want to know the names of the dealers who have been prosecuted for black-marketing even for the period 1972-73, or for 1973-74 or 1974-75, I am prepared to place it before the House, provided time is given.

*திரு. கே. ராஜாராம்:* தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், 900 பேர்கள் 1972–73-ல் அல்ல; 1973-க்குப் பின்னல் ஏற்பட்ட குற்றவாளிகள் என்று சொல்லுகிறார்கள். கேள்வி 1972-73-ஐப் பொறுத்தது. 1972-73லே எந்தக் கூட்டுறவு சொசைட்டியும், கள்ள மார்க்கெட்டில் ஈடுபடவில்லையென்று அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள்?

The Hon. Thiru Si. Pa. ADITANAR : Sir, for the year 1972-73, I have made my statement already. The position relating to 1973-74 came by way of a supplementary. The present position is different from the position which was in 1972-73. If the hon. Members want to know the number of prosecutions in 1972-73, I must get them. The details for 1973-74 I more or less know. Therefore, I can even give the number approximately. The position for 1973-74 came in only in the supplementary. Even if the hon. Members want to know about the prosecutions in 1972-73, the number may not be as much, but certainly there will be some number. The Fertilizer Inspectors had not been appointed at that time. After their appointment, there has been more vigilance about the fertilizer dealings. Therefore, more cases of black-marketing have been brought to light. The 900 prosecutions do not relate to 1972-73. But if the hon. Members want the full particulars for 1972-73 or 1973-74, I will place it before the House as soon as I get the particulars. I am myself anxious to expose the black-marketeers.

*திரு. கே. ராஜாராம்:* தலைவரவர்களே, இதில் கேட்டிருக்கும் அந்த நாள் அல்லது வருடம் இப்போது பதில் சொல்லிக் கொண்டிருக்கும் விவசாய அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறைக்கும் அமைச்சராக இருந்த காலம்.



அந்தக் காலத்தில் கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவு சொசைட்டிகள் தவறு செய்திருக்கின்றனவா என்பது கேள்வி. அவர் அந்தக் கேள்விக்கு பதில் சொல்லும்போது 900 பேர் செய்ததாகக் குற்றம் சொல்லியிருக்கிறார்கள். பேசப்படுகிற காலம் 1972-73-ல் கள்ளச் சந்தையில் ஈடுபட்டவை எந்தெந்த சொசைட்டிகள் என்று கேள்வி இருக்கிறது. இன்றில்லாவிட்டாலும் எத்தனை நாட்களில் பதில் சொல்ல முடியும் என்று அறிவித்தால் நல்லது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** இப்போதே சொல்ல முடியும் என்றல். லால்குடி மார்க்கெட்டிங் சொசைட்டி பிளாக் மார்க்கெட் செய்ய . . :

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இப்போது சொல்ல முடியும் என்றால், சொல்லிவிடலாமே . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** பூராவும் சொல்ல முடியாது அல்லவா?

*திரு. கே. ராஜாராம்:* தலைவரவர்களே, நாங்கள் அமைச்சரிடம் பொறுப்பான பதில்களை எதிர்பார்க்கிறோம். அமைச்சர்கள் யாரும் மன வருத்தம் அடைய வேண்டாம். எந்தெந்த சொசைட்டிகள் என்று, இன்று வேண்டாம், 2, 3 நாட்கள் கழித்தாவது எங்களுக்குத் தகவல் கிடைத்தால் போதும். ஏதோ மேலெழுந்தவாரியாக பதில் கொடுப்பதை மறுக்கிறோம். இந்தச் சபையினுடைய உரிமையைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Thiru G. VASANTHA PAI : Sir, I request that the Hon. Minister may be given time till the end of the Session.

The Hon. Thiru Si. Pa. ADITANAR : Sir, the question is about Taluk Marketing Societies. I will get the names as soon as I can.

Mr. CHAIRMAN : I will postpone the question for some days. The hon. Members will be informed again tomorrow or day after tomorrow.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதைவிட எதிர்க் கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், ஒரு குறுகிய கால கேள்வி போடுவார்களானல், இந்தத் தொடர் கூட்டம் முடிவதற்குள்ளே அமைச்சரவர்கள் முடிவான விவரங்களை அளிக்க முடியும்.

Thiru G. VASANTHA PAI : Sir, the Hon. Chairman has already postponed this question. So, the question does not arise.

[1974 ஆகஸ்ட் 16

### Kerosene.

* 29 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether the Kerosene Control Order of 1968 has been amended recently;

(*b*) whethher security deposits for wholsalers and retailers of kerosene and the fees payable for renewing both the licences have been increased under the new Order; and

(*c*) if so, the extent of increase in both categories ?

### மண்ணெண்ணெய்

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஆம் ஆண்டு, மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டு ஆணை அண்மையில் திருத்தப்பட்டுள்ளதா.?

(இ) திருத்தப்பட்ட புதிய ஆணையின் கீழ் மொத்த, சில்லறை விற்பனையாளர்களுக்கான பிணைய வைப்பீட்டுத் தொகையும், இவ்விருவரின் உரிமங்களைப் புதுப்பிப்பதற்குச் செலுத்தப்படத்தக்க கட்டணங்களும், உயர்த்தப்பட்டுள்ளனவா ?

(உ) ஆமெனில், இந்த இரண்டு வகைகளிலும் உயர்த்தப்பட்ட தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) 1966 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டு ஆணை திருத்தப்பட்டு தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (வாணிகத்தை முறைப்படுத்துதல்) ஆணையாக மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) & (உ) மண்ணெண்ணெய் மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் செலுத்தத்தக்க பிணையவைப்புத் தொகைகள் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளன :—

மொத்த விற்பனையாளர்கள் ரூ. 1,000 லிருந்து ரூ. 2,000 ஆக.

சில்லறை விற்பனையாளர்கள் (கைவண்டிக்காரர்கள் தவிர்த்து) ரூ. 25 லிருந்து ரூ. 100 ஆக.

மொத்த விற்பனையாளர்கள் தங்களுடைய உரிமங்களைப் புதுப்பிப்பதற்காகச் செலுத்தத்தக்க கட்டணம் உயர்த்தப்படவில்லை. சில்லறை



1974 ஆகஸ்ட் 16]

விற்பனையாளர்கள் தங்கள் பதிவுச் சான்றிதழைப் புதுப்பிக்க வேண்டிய அவசியமில்லையாதலால், அவற்றைப் புதுப்பிக்க வேண்டும், அதற்காக கட்டணங்கள் செலுத்த வேண்டுமென்கிற பிரச்சினைக்கு இடமில்லை.

(பிற்பகல் 4.50)

* 30 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether any instructions have been issued to the Collector of Thanjavur or the Civil Supply Authorities in Thanjavur District directing them not to issue retail licences for the sale of kerosene to applicants who have applied for the same; and

(*b*) if so, the agencies that have been chosen by Government to retail this product in the District ?

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மண்ணெண்ணெயைச் சில்லறையாக விற்பனை செய்வதற்கு உரிமம் கோரி விண்ணப்பம் செய்தோருக்கு, சில்லறை விற்பனை உரிமங்கள் வழங்க வேண்டாமெனக் கூறி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள உணவுப் பொருள் வழங்கு அதிகாரிகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அம்மாவட்டத்தில் இந்தப் பொருளைச் சில்லறையாக விற்பனை செய்வதற்கு அரசால் தெரிந்தெடுக்கப்பட்ட முகவரமைப்புக்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) & (இ) மண்ணெண்ணெயைச் சில்லறையில் விற்பனை செய்வதற்காக சில்லறை விற்பனை உரிமம் வேண்டி விண்ணப்பித்தோருக்கு அந்த உரிமங்களை வழங்க வேண்டாமெனத் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது தஞ்சை மாவட்டத்திலுள்ள உணவுப் பொருள் வழங்கு அதிகாரிகளுக்கோ அரசு கட்டளைகள் எதும் பிறப்பிக்கவில்லை. ஆயினும் சாதாரணமாக வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவு குறைக்கப்பட்டதாலும் மண்ணெண்ணெய் வழங்கலை சீரமைப்பதற்காகவும் வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளின் பேரில், உரிய முறையிலும் சமமாகவும் பொது மக்களுக்கு மண்ணெண்ணெயை வழங்குவதற்கு உறுதி செய்வதற்காக, மண்ணெண்ணெயைச் சில்லறையில் விற்பனை செய்யும் உரிமை முழுவதும் தஞ்சை மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிடம் 1974 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஒப்படைக்கப்பட்டது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether the Kumbakonam Marketing Society who have been chosen to sell kerosene by the Government have represented that the distribution of kerosene under these conditions to co-operatives is not working well and whether they have requested that private retail dealers also be appointed in this regard ?

*மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :* தலைவரவர்களே, அப்படி ஒன்றும் செய்யவில்லை. கொஞ்சம் கூட்டம் அதிகமாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்போது அதையும் சரி செய்துவிட்டோம். அந்த சொசைட்டி இப்போது நடந்துகொண்டிருக்கிறது.

MR. CHAIRMAN : Questions are over.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

### 2. அறிவிப்பு.

### அலுவல் திட்டத்தில் மாறுதல்.

Mr. CHAIRMAN : I have to announce to the House the following revised programme of business of the Council:

| | |
|---|---|
| 17th August 1974, Saturday. | Discussion on the First Statement of Supplementary Expenditure for 1974–75. |
| 18th August 1974, Sunday. | Holiday. |
| 19th August 1974, Monday. | Discussion on the Electricity Board Budget. |
| 20th August 1974, Tuesday. | 1. Consideration of Appropriation Bill, 1974.<br>2. Discussion on the 'Katcha Thivu' Resolution.<br>3. Discussion on the Electricity Board Budget. |
| 21st August 1974, Wednesday and 22nd August 1974, Thursday. | Discussion on the Electricity Board Budget. |



| | |
|---|---|
| 23rd August 1974, Friday and 24th August 1974, Saturday | Consideration of Official Bills. |
| 25th August 1974, Sunday | Holiday. |
| 26th August 1974, Monday and 27th August 1974, Tuesday | Consideration of Official Bills, if any. |

THIRU A. R. DAMODARAN : May I make a submisicn, Sir? The discussion on the First Statement of Supplementary Expenditure for 1974-75 has been restricted to only one day, viz., Saturday. Since we have been presented almost with a mini-budget, I think there may be a number of Members to participate in the discussion. Therefore, I would like the Hon. Chairman to bear in mind that in case one more day's discussion is required, we may kindly be permitted to have more time.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் பேரவையிலே 19 ஆம் தேதி நடக்கவிருக்கிற காரணத்தாலேயே, இந்த அவையிலே அதை 17 ஆம் தேதி எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்யவேண்டியிருக்கிறது. 17 ஆம் தேதி இந்த அவையில் நிறைவேற்றினால் தான், 19 ஆம் தேதி பேரவையில் துணை மானியக் கோரிக்கையை எடுத்துக் கொள்ளுவதற்கு வசதியாக இருக்கும்.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவரவர்களே, கச்சத் தீவு பற்றிய தீர்மானம் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இருக்கிறது.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* அதுவும் மாற்றப்பட இருக்கிறது.

### 3. அரசின் தீர்மானங்கள்.

### (1) கச்சத் தீவு குறித்த அரசின் தீர்மானம் ஒத்திவைக்கப்படுதல்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய அலுவல் பட்டியலில் இடம் பெற்றுள்ள கச்சத் தீவு பற்றிய அரசின் தீர்மானம் வேறு ஒரு நாளுக்கு ஒத்தி வைக்கப்பட வேண்டும்".
என்று முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின் முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய அலுவல் பட்டியலில் இடம் பெற்றுள்ள கச்சத் தீவு பற்றிய அரசின் தீர்மானம் வேறு ஒரு நாளுக்கு ஒத்தி வைக்கப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (2) அலுவல் வரிசையில் மாறுதல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்ற இனம் 3-வுள்ள அரசின் இரண்டாவது தீர்மானம், அதாவது நாடாளுமன்ற மக்களவையிலும், தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையிலும் இடங்கள் ஒதுக்குவது குறித்த தீர்மானம், இனம் 2-க்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின் முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்ற இனம் 3-வுள்ள அரசின் இரண்டாவது தீர்மானம், அதாவது நாடாளுமன்ற மக்களவையிலும், தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையிலும் இடங்கள் ஒதுக்குவது குறித்த தீர்மானம், இனம் 2-க்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



### (3) நாடாளுமன்ற மக்களவையில் தமிழ் நாட்டிற்கான இடங்கள், தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் இடங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையை உயர்த்துதல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே,

"தமிழ் நாட்டிற்கு, நாடாளுமன்ற மக்களவையில் தற்போது 39 இடங்களும், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் 234 இடங்களும் உள்ளன.

1972 ஆம் ஆண்டு தேர்தல் தொகுதி வரையறைச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 76/72) அமைக்கப்பட்ட தொகுதி வரையறை ஆணைக்குழு 30—7—1974 ஆம் நாளிட்ட இந்திய அரசிதழில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்கள் நாடாளுமன்ற மக்களவையில் 39 எனவும், தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் இடங்கள் 234 எனவும் நிர்ணயித்துள்ளது.

எனவே, தற்போது, தமிழ் நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்படஎன்று இடங்களின் எண்ணிக்கையிலும், தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையிலும் மாறுதல் ஏதுமில்லை.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ் நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடம் ஒவ்வொன்றுக்கும், தமிழ்நாடு சட்டப் பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாக உயர்த்த வேண்டும் என்றும் தொகுதி வரையறை ஆணைக் குழுவில் உள்ள தமிழ் நாட்டு இணை உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதே கருத்தினைத் தெரிவித்து தொகுதி வரையறை ஆணைக் குழுவிற்கு, தமிழ் நாடு அரசும் கடிதம் எழுதியுள்ளது.

மேற்சொன்ன கருத்துரையை தொகுதி வரையறை ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளாமல், மேலே இரண்டாவது பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு, மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ் நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவையில் தற்போது உள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாக உயர்த்த வேண்டும் என்ற உறுதியான கருத்து பொது மக்களிடையே நிலவுகிறது.

எனவே, மேற்சொன்ன காரணங்களை முன்னிட்டு, இவற்றை மறு பரிசீலனை செய்து, நாடாளுமன்ற மக்களவையில் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கையை 40 ஆகவும், மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாகவும் உயர்த்த வேண்டும் என்று இந்திய அரசையும், தொகுதி வரையறை ஆணைக் குழுவையும் கேட்டுக் கொள்வதென இம்மேலவை தீர்மானிக்கிறது" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"தமிழ் நாட்டிற்கு, நாடாளுமன்ற மக்களவையில் தற்போது 39 இடங்களும், தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் 234 இடங்களும் உள்ளன.

1972-ம் ஆண்டு தேர்தல் தொகுதி வரையறைச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 76/72) அமைக்கப்பட்ட தொகுதி வரையறை ஆணைக்குழு 30—7—1974 ஆம் நாளிட்ட இந்திய அரசிதழில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்கள் நாடாளுமன்ற மக்களவையில் 39 எனவும், தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் இடங்கள் 234 எனவும் நிர்ணயித்துள்ளது.

எனவே, தற்போது, தமிழ்நாட்டிற்கு நாடாளுமன்ற மக்களவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையிலும், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையிலும் மாறுதல் ஏதுமில்லை.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடம் ஒவ்வொன்றுக்கும், தமிழ்நாடு சட்டப் பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாக உயர்த்த வேண்டும் என்றும் தொகுதி வரையறை ஆணைக் குழுவில் உள்ள தமிழ்நாட்டு இணை நிலை உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதே கருத்தினைத் தெரிவித்து தொகுதி வரையறை ஆணைக் குழுவிற்கு, தமிழ்நாடு அரசும் கடிதம் எழுதியுள்ளது.



(பிற்பகல் 5-00)

மேற்சொன்ன கருத்துரையை தொகுதி வரையறை ஆணைக் குழு ஏற்றுக் கொள்ளாமல், மேலே இரண்டாவது பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு, மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ் நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவையில் தற்போது உள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாக உயர்த்த வேண்டும் என்ற உறுதியான கருத்து பொது மக்களிடையே நிலவுகிறது.

எனவே, மேற்சொன்ன காரணங்களை முன்னிட்டு, இவற்றை மறுபரிசீலனை செய்து, நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கையை 40 ஆகவும், மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் சட்டப்பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாகவும் உயர்த்த வேண்டும் என்று இந்திய அரசையும், தொகுதி வரையறை ஆணைக் குழுவையும் கேட்டுக் கொள்வதென இம்மேலவை தீர்மானிக்கிறது".

THIRU G. VASANTHA PAI: Sir, on a point of order. The delimitation is based on population as per specific provision in the Constitution. We in our State are implementing family planning to restrict the population and, therefore, such a provision should not continue to exist in the Constitution. Is it not necesasry that it should be amended so that population may not be taken as a criterian for delimitation?

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்பதுடன் என்னுடைய கீழ்க்கண்ட திருத்தத்தையும் இந்தத் தீர்மானத்தில் சேர்த்துக்கொள்ளும்படியாக முன்மொழிகின்றேன்:—

"கடைசி பத்தி 5 ஆவது வரியில்

'உயர்த்த வேண்டும் என்று' என்ற சொற்களுக்குப் பதிலாக,

'உயர்த்த வேண்டும் என்றும் 10 ஆண்டுகளுக்கு இரண்டு பொதுத் தேர்தலுக்கு மேல் தனித் தொகுதியிலிருந்து வரும் தொகுதிகளைப் பொதுத் தொகுதிகளாகவும், அடுத்த விகிதாச்சாரத்தில் வரும் தொகுதிகளை தனித் தொகுதிகளாகவும் அறிவிக்க வேண்டும் என்றும்' என்னும் சொற்றொடர்களை போட்டுக் கொள்ளவேண்டும்".

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழகத்தைப் பொறுத்தவரையில், 39 இடங்கள் மக்கள் அவைக்கும், ஒவ்வொரு மக்கள் அவை இடத்திற்கும் 6 சட்டமன்ற பேரவை இடங்கள் என்ற வகையில் 234 இடங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பத்து ஆண்டுக் காலத்திற்கு ஒரு தடவை தொகுதி வரையறைப்படுத்துகின்ற முறையிலே எடுத்துக்கொள்ளப்படுகிறது. பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு மீண்டும் இப்பொழுது அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது அரசியல் சட்டத்தின்படி 545 இடங்கள் மக்களவையில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே 500 ஆக இருந்தது, அண்மையிலே அரசியல் அமைப்புச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, 545 ஆக உயர்த்தப்பட்டது. அந்த 545 இடங்களில் 20 இடங்கள் யூனியன் பிரதேசங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றோடு 17 இடங்கள் ஜம்மு-காஷ்மீர், ஹிமாச்சல்பிரதேஷ், மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து ஆகிய பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ஆகவே மீதியுள்ள இடங்கள் 508. அவற்றில் இந்திய அரசு ஒரு இடத்தை ஃப்யூச்சர் கன்டின்ஜன்சி என்பதற்கு ரிசர்வாக வைத்துக்கொண்டு, 507 இடங்களை எல்லா மாநிலங்களுக்கும் பிரித்துத் தருகிறார்கள். அப்படி இந்த 507 இடங்களைப் பிரித்துத் தருகின்றபோது, 1971 ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கைக் கணக்குப்படி மொத்த மக்கள் தொகையை 507-ஆல் வகுத்து ஒதுக்கித் தருகிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது, ஒவ்வொரு தொகுதிக்கும் 10,43,475 மக்கள் வருகிறார்கள். 1971 மக்கள் தொகை கணக்குப்படி தமிழகத்தின் மக்கள் எண்ணிக்கை 4,11,99,168 பேர் ஆகும். அந்தக் கணக்கின்படி 39.48 இடங்கள் தமிழகத்திற்கு வருகின்றன. ஆகவே 39½ முழுக்க நிரம்பாததன் காரணமாக 39 இடங்கள் என்று குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். ஒரு இடம் பாக்கி, ரிசர்வில் வைத்திருக்கிறார்கள். தமிழகத்தின் தேர்தல் அதிகாரி மூலமாக தேர்தல் குழுவினருக்கு நாம் சொல்லி அனுப்பினோம். அவர்களும் சென்று வாதாடினார்கள். அது மட்டுமல்லாமல், தேர்தல் ஆணைக் குழுவிலே இடம் பெற்றிருக்கின்ற தமிழகத்தினுடைய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அதுகுறித்து வற்புறுத்தியிருக்கின்றார்கள். 508 இடங்கள் என்று கணக்குப் போடுவார்களேயானால், அப்பொழுது ஒவ்வொரு தொகுதிக்கும் 10,41,427 மக்கள் வருகிறார்கள். அப்படிப் பார்த்தால், 39.56 இடங்கள் தமிழகத்திற்கு வர வேண்டும். அது 40 என்று முழு எண்ணிக்கை ஆகும். அப்பொழுது 40 இடங்களாகும். அந்த வகையிலேதான் இதிலே நியாயம் உண்டு என்றும், 40 இடங்கள் ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதே நிலையிலே கணக்குப் பார்த்தால், மேற்கு வங்கத்திற்கு 42.47 இடங்கள் 507 மக்களவை இடங்கள்



இருக்கும்போது வருகின்றன. 508 ஆல் வகுத்தால் 42.54 ஆக வருகின்றது. ஆனால் இரண்டு மாநிலங்களுக்கும் இருக்கும் இடங்கள் ஒன்று. அதை எப்படிக் கொடுப்பது என்று வாதாடுகிறார்கள். அப்பொழுது தமிழக அரசின் சார்பிலே வாதிட்டது, 39.56 என்றும், 42.54 என்றும் வரும்போது, 0.02 கணக்கு நமக்குக் கூடுதலாக வருகிறது, ஆகவே தமிழகத்திற்குத்தான் அந்த ஒரு இடம் வர வேண்டும், எனவே 40 இடங்கள் ஒதுக்குவது நியாயம் என்று நாம் கூறினோம். இதை நமது தேர்தல் அதிகாரி அவர்களும் வற்புறுத்தினார்கள். அந்தக் குழுவிலே இடம் பெற்றிருக்கிற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், இதிலே கட்சி வேறுபாடு இல்லாமல், ஒருமித்த கருத்தை வலியுறுத்துகிறார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்தக் கருத்தை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், தேர்தல் ஆணைக் குழுவினருக்கும் எழுதினார்கள்.

அதைத் தவிர, 29-ம் தேதி தந்தியின் மூலமாக இதைத் தெரிவித்தார்கள். ஆனால் 30-ம் தேதி தேர்தல் குழுவினர் நமக்குக் கடிதம் எழுதி, அதிலே 39 இடங்கள்தாம் நாடாளுமன்றத்திற்கு என்றும், ஒவ்வொரு தொகுதிக்கும் 6 இடங்கள் என்று இருப்பது அப்படியே உறுதிப்படுத்தப்படும் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

நாம் இரண்டு வகையிலே கேட்கிறோம். நாடாளுமன்ற இடங்கள் 40-க்கு உயர்த்தப்பட வேண்டும், மேலும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும், இப்பொழுது 6 ஆக இருப்பதை, 7 ஆக ஆக்கவேண்டும் என்றும் கேட்டு அதற்கான காரணங்களை வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையிலும், அகில இந்திய அடிப்படையில் ஒரேவிதமான மக்கள் தொகை அடிப்படையில் சட்டமன்ற இடங்கள் இல்லை. ஏற்கெனவே 10 ஆண்டுக் காலத்தில், ஒரிசாவில், ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்கும், 7 சட்ட மன்ற இடங்கள் இருக்கின்றன. குஜராத்தில் ஒரு நாடாளுமன்ற இடத்திற்கு 7 சட்ட மன்ற இடங்கள் இருக்கின்றன. கேரளத்தில் ஒரு நாடாளுமன்ற இடத்திற்கு 7 சட்ட மன்ற இடங்கள் இருக்கின்றன. கர்நாடக மாநிலத்தில் ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு 8 சட்ட மன்றத் தொகுதிகள் இருக்கின்றன. மத்தியப் பிரதேசத்தில் ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு 8 சட்ட மன்றத் தொகுதிகள் இருக்கின்றன. அதன்படி வகுத்துப் பார்த்தால். ஒரிசாவில் ஒரு சட்ட மன்றத் தொகுதிக்கு 1,49,233 பேர் வருகிறார்கள். அதே மாதிரி கர்நாடகத்தில் 1,30,799 பேர் வருகிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஆகஸ்ட் 16

இப்பொழுது நமக்கு இருக்கிற கணக்குப்படி, 234 இடங்கள் 1971-வது ஆண்டு மக்கள் எண்ணிக்கைக் கணக்குப்படி 1,76,065 பேர் ஆகிறது. ஆனால், ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு 7 சட்ட மன்றத் தொகுதிகள் என்று, 7 ஆகப் பிரித்தால் 1,47,199 மக்கள் வருவார்கள். ஆகவே 7 ஆகப் பிரிப்பதுதான் நியாயம் என்று, 40 நாடாளுமன்ற இடங்களும், ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் 7 சட்ட மன்றத் தொகுதிகளும் பிரிக்க வேண்டும் என்றும் நாம் வற்புறுத்தி வந்தோம். ஆணைக் குழுவிலே இருக்கின்ற நம்முடைய உறுப்பினர்கள் வற்புறுத்தியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு தமிழக அரசின் சார்பிலே கடிதம் எழுதியும் தந்தி அனுப்பியும், அவர்கள் 30-ம் தேதி எழுதியிருப்பதில் ஏற்கெனவே இருக்கிற 39 இடங்கள் தான் நாடாளுமன்றத்திற்கு இருக்கும், 234 இடங்கள்தான் சட்டமன்றத்திற்கு இருக்கும் என்று வற்புறுத்துகிறார்கள். வேறு எல்லா மாநிலங்களுக்கும் மாற்றவில்லை, இப்பொழுது தமிழகத்திற்கு மட்டும் மாற்றினால், எல்லா மாநிலங்களுக்கும் மறுபடியும் மாற்றவேண்டிய அவசியம் ஏற்படும், எனவே இருக்கிறது, ‘ஸ்டேடஸ் கோ’ அப்படியே இருக்கட்டும் என்று வாதிக்கிறார்கள்.

(பிற்பகல் 5-10)

ஆகவே சட்டமன்றத்தின் பேரவை, மேலவை ஆகிய இரு அவைகளின் சார்பிலே ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேறச் செய்ய வேண்டும், நாளைய மறுநாள், 19-ம் தேதி தொகுதி வரையறை ஆணைக்குழு கூட்டம் நடைபெற இருக்கிறது. மாண்புமிகு திரு, வசந்த பாய் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போலவே, ஆரம்பத்திலிருந்தே இதை நாம் எடுத்துச்சொல்லி வருகிறோம். எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், 1951 ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கைப்படி எப்படிச் சொல்லுகின்றார்களோ அதே எண்ணிக்கை தான் தொடர்ந்து வரவேண்டும் என்று இருந்து வருகிறது. ஆகவே குடும்ப நலத் திட்டங்களைத் தீவிரமாக மேற்கொள்ளும் மாநிலங்கள் இந்த விதத்தில் தண்டனைக்குள்ளாகின்றன. ஆனால் எந்தெந்த மாநிலங்கள் குடும்ப நலத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றவில்லையோ அவர்களுக்கு அதிக இடமாகவும் நிறைவேற்றியவர்களுக்கு குறைந்த இடமாகவும் உள்ள சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் மக்கள் தொகை குறைந்த காரணத்தினால், அந்த மாநிலங்களிலே இடங்களும் குறைகின்றன; இந்த நிலையை அந்த மாநிலங்களுக்குக் கொடுக்கும் தண்டனையாகவே நினைக்க வேண்டியிருக்கின்றது; எனவே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று எவ்வளவுதான் எடுத்துச் சொல்லியும் மத்திய அரசு ஏற்றுக்



1974 ஆகஸ்ட் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கொள்ளவில்லை. பார்லிமெண்டில்கூட அதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. சட்ட மன்றத்திலும் அதை எடுத்துச் சொன்னோம். அகில இந்திய ரீதியில் நடைபெற்ற அமைச்சர்கள் மகாநாட்டிலும்கூட இதை எடுத்துச் சொன்னோம். ஆனால் இந்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. 1971 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கட் தொகையின் கணக்குப்படி இப்போது கொண்டு வருகின்றார்கள். இந்த நிலையில் இரண்டு அவைகளும் ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம், இதை மறுபடியும் மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என்ற முறையில், மத்திய அரசுக்கும் தொகுதி வரையறை ஆணைக் குழுவிற்கும் இந்தத் தீர்மானத்தை எடுத்து அனுப்ப இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் ஒரு திருத்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் அந்தத் திருத்தத்தில், இப்போது தனித் தொகுதியாக ஒதுக்கப்பட்டுள்ள தொகுதியை வேறு ஒரு பொதுத் தொகுதியாகவும், வேறு ஒரு பொதுத் தொகுதியைத் தனித் தொகுதியாகவும் மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் தேர்தல் குழுவின் ‘டி-லிமிடேஷன்’ சட்டம் 9 (1) (ஸி)-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்—

“ Constituencies in which seats are reserved for the Scheduled Castes shall be distributed in different parts of the State and located as far as practicable in those areas where the proportion of their population to the total is comparatively large”

என்று இருக்கின்றது. அந்த எண்ணிக்கையின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகப்படியான அளவிற்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த வாக்காளர்கள் அதிகமான பெர்ஸெண்ட்டேஜில் எங்கே இருக்கின்றார்களோ அந்தத் தொகுதியைத் தனித் தொகுதியாக மாற்ற வேண்டும் என்று மாற்றுகின்றார்கள். அப்படிப்பட்ட தொகுதிகளை டிஸ்ட்ரிப்யூட் பண்ணி பரவலாக ஆக்கிய முறையில் தாழ்த்தப்பட்டோரின் தனித் தொகுதிகள் என்று 42 வருகின்றன. இதைத் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலே பரவலாக வைத்திருக்கின்றார்கள். அதைச் செய்யும்போது, எந்தத் தொகுதியில் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லும் அந்த வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றதோ அந்த அடிப்படையில் பிரிக்கின்றார்கள். எனவே சட்டத்தில் இதைத் தெளிவாகச் சொல்லியிருப்பதன் காரணமாக நாம் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்துள்ள திருத்தத்தை ஏற்க இயலாது, அது கொண்டுவர இயலாததாகும் என்று அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், ஏற்கெனவே உள்ள ஒரு தொகுதியினை மாற்றுவதற்கு வழி இருக்கின்றதா என்று கேட்டால், இப்போது தொகுதி அமைப்பு என்பதில் 8-வது விதியின்படி இவ்வளவு பேர்தான் என்று சொல்லுகின்றார்கள். இதிலே சிலபல மாற்றங்களைக் கொண்டு வர அல்லது உள்ள தொகுதியின் பெயரை மாற்ற, அல்லது ஒரு பகுதியினை அதிலிருந்து பிரித்து இன்னொரு தொகுதியில் இணைக்க அல்லது தனித் தொகுதியாக மாற்றுவதற்கு வழி இருக்கின்றது. அதை இப்போது அந்த இணைப்புக் குழுவிலுள்ள பத்து உறுப்பினர்களும் பரிசீலிக்கலாம். அது மட்டுமில்லாமல், தொகுதி வரையறை ஆணைக்குழுவினர் தமிழகத்தில் நான்கைந்து நாட்கள் சுற்றுப்பயணம் செய்ய இருக்கின்றார்கள். அப்போதும் முறையாக ரெப்ரஸெண்ட் செய்துகொள்ளலாம்.

இப்போதுகூட தொகுதிகளைப் பிரிக்கும்போது, கிராமப்படிப் பிரித்து ஒரு தொகுதி தனித் தொகுதியாக இருக்க வேண்டும் என்று சொல்லும்போது, நாம் திட்டமிட்டு இந்திந்த கிராமங்கள் இந்த இந்தத் தொகுதியோடு சேர்ந்திருந்தால்தான், சிலபல தனித் தொகுதிகளை மாற்றுவதற்கு இடமிருக்கின்றது. இதிலே சட்டமும் தெளிவாகச் சொல்லுகின்றது. அந்த அடிப்படையில் நாம் ஏற்கெனவே உள்ளதை மாற்ற வேண்டும் என்றாலோ அல்லது ஏற்கெனவே தனித் தொகுதியாக இருப்பதைப் பொதுத் தொகுதியாக மாற்ற வேண்டும் என்றாலோ அல்லது பொதுத் தொகுதியினைத் தனித் தொகுதியாக மாற்ற வேண்டுமென்றாலோ, அதை நாம் வற்புறுத்துவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அதைப்பற்றி தொகுதி வரையறை ஆணைக் குழுவிடம் எடுத்துச் சொல்லலாம் என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. அ. அய்யணன் அம்பலம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் கொடுத்துள்ள அந்தத் திருத்தத் தீர்மானத்திலுள்ள நியாயத்தை ஓரளவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். சில சட்ட விதிகளை எடுத்துக் காண்பித்தார்கள். ஒரு தொகுதி நீண்ட காலம், ஒரு பத்தாண்டு காலம் தனித் தொகுதியாகவே ஒதுக்கப்பட்டிருப்பது ஆளும் கட்சியினைப் பொறுத்தமட்டிலும் சரி அல்லது அந்தத் தொகுதியினைச் சேர்ந்த மற்ற மற்ற இனத்தவர்களைப் பொறுத்தவரையிலும் தேர்தலில் எந்த அளவிற்கு பாதகமாக அமைகிறது என்பதைச் சென்ற தேர்தல் தெளிவாக நமக்கு எடுத்துக் காண்பித்தது. குறிப்பாக நான் பதவி வகிக்கும் ஊராட்சி ஒன்றியமானது தொடர்ந்து 20 ஆண்டுகளாகத் தனித் தொகுதியாகவே





இருந்து வருகின்றது. ஆனால் ஒவ்வொரு முறையும் தொகுதிகள் மாற்றி அமைக்கப்படும்போது, எங்களுடைய முயற்சியின் காரணமாகவோ அல்லது அரசாங்கத்தின் உதவியாலோ அந்தத் தொகுதிகளை மாற்றி அமைக்கிறோம் என்று தேர்தல் காலங்களிலே வாக்குறுதி கொடுத்து வந்திருக்கிறோம். அப்போது, அமைச்சர் அவர்கள் சொல்லுவது போல, 20 சதவிகிதம் 22 சதவிகிதம் ஜனத் தொகையைக் கொண்டேதான் அத்தகைய தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அன்று 18, 19 விகிதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இப்போதாவது இதை முறையாகச் செய்ய வேண்டும். இதை அரசாங்கத்தின் யோசனையாகவே தேர்தல் கமிஷனுக்குத் தெரியப்படுத்தி தொகுதிகளை முறையாக மாற்றி அமைக்க வேண்டும். அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு, ஒரே ஒரு குறிப்பிட்ட தொகுதி மக்களுக்கு மட்டும் நாம் வாக்கு அளித்து வரும் நிலையிலிருக்கிறோம் என்ற எண்ணம் மாறிவிடும் முறையில் இதை அரசாங்கம் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**திரு. ஆர். சக்திமோகன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இந்தத் திருத்தத்தினை வற்புறுத்த வில்லை, திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன் என்று திருத்தம் கொண்டு வந்த உறுப்பினர் அவர்களே அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டார். சுதந்திரம் அடைந்த பிறகு, தேர்தல் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வருகின் றது. பத்து வருடங்களுக்கு ஒரு முறை அவசியமான முறையில் பொது-தனி தொகுதிகள் மாற்றப்பட்டு வருகின்றன. சாதாரணமாக அரிசனங்களுடைய தொகுதி, பொதுத் தொகுதி என்று இருந்து வந்தாலும், இன்றுள்ள நிலைமை களைப் பார்க்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லியதைப் போல, ஒரு குறிப்பிட்ட ஒரே பகுதி மக்களுக்காக ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களுக்காக இதர எல்லா இன மக்களும், தொடர்ந்து ஓட்டுப் போடும் நிலைமை இருந்து வருகின்றதே என்று பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. இந்த நிலைமைகளை மாற்றித் தீர வேண்டும் என்று கோரப்பட்டு, அதற்கு சட்டரீதியாக விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தொகுதி வரை யறை ஆணைக் குழு ஒரு பகுதிக்கு வரும்போது அந்தத் தொகுதியினைச் சார்ந்த சட்டமன்ற பேரவை-மேலவை உறுப்பினர்கள் அவ்வளவு பேருக்கும் அழைப்பு அனுப்பி அந்தத் தொகுதிகளை மாற்றியமைத்துத் தரவேண்டும் என்று கோர வேண்டும். அப்படி மாற்றியமைக்கும்போது, அதனால் பலருக்குச் சாதாரண சிரமங்கள் ஏற்படக்கூடும். அதன் காரணமாக சிலருக்குச் சௌகரி யமாக உள்ள தொகுதியை மாற்றியமைக்கும் நிலைகூட வரலாம். எப்படியும்,

ஒரு இன வேட்பாளருக்கே பல இன மக்கள் மாற்றமின்றி முகவை மாவட்டத்தில் கமுதியையும் கடலாடியையும் சேர்த்து ஒரு தொகுதி, முதுகுளத்தூர், திருப்புல்லாணி யூனியன்கள் இரண்டும் சேர்ந்து ஒரு தொகுதி என்று ஏற்பாடு செய்தால், அந்த ஏரியாவிற்குச் சில சாதகங்கள் ஏற்படக்கூடும். எனவே அந்த ஆணைக் குழு வரும்போது, அந்தந்தப் பகுதி உறுப்பினர்களை அழைத்து அவர்களின் கருத்திற்கேற்ப தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டும் என்று கேட்டு அமைச்சரவர்களின் தீர்மானத்தை ஆதரித்து அமருகிறேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** துணைத் தலைவரவர்களே, கல்வியமைச்சர் அவர்கள் தொகுதி நிர்ணயம் சம்பந்தமாக இந்த அவையில் முன்மொழிந்த தீர்மானத்தை நான் முழு மனதோடு ஏற்று வரவேற்கிறேன். நம்முடைய தேசத்திலே இந்தத் தேர்தல்களிலே பொதுவாக ஏற்படும் செலவினங்களைப் பார்க்கும்போது, அது ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றது என்பதை அறியாமல் இருக்க முடியாது. சென்ற பொதுத் தேர்தலிலே நாம் என்ன செலவிட்டிருக்கிறோமோ அதே செலவிலே அடுத்து வர இருக்கும் பொதுத் தேர்தலை நாம் நடத்த இயலாது என்ற நிலைமையைப் பார்க்கிறோம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், தேர்தல் செலவுகள் வெகுவேகமாக அதிகரித்து வருகின்றதைப் பார்க்கிறோம். இதற்கு ஒரு முக்கிய காரணம் நமது தொகுதிகள் பூராவும் அநேகமாக மிகப் பெரிதாக இருப்பதுதான். சாதாரணமாக இன்றைக்கு கிராமப் பகுதியிலே ஒரு பொதுக் கூட்டத்தை நடத்துவது என்றாலும்கூட 500 ரூபாய் இருந்தாலொழிய பொதுக்கூட்டத்தை விளம்பரத்தோடு நடத்த முடியவில்லை. அப்படியிருக்கும்போது, நமது தொகுதிகளை எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட 1.75 லட்சம் மக்கள் வாழும் பகுதியில் சட்டமன்றத் தேர்தலுக்காக நிற்கும் உறுப்பினர்கள் தொடர்ந்து சென்று வேலை செய்ய வேண்டியிருக்கிறது. பெரும்பகுதி நிலப்பரப்பில் வாழும் பொது மக்களைச் சந்தித்து அவர்களிடம் வாக்குகளைக் கேட்கவேண்டியிருக்கின்றது.

உதாரணமாகச் சொல்லப் போனால், சில நண்பர்களை நான் அண்மையில் ஒரிஸ்ஸா மாநிலத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் சந்தித்தேன். நான் இதைச் சொல்லும்போது, ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்களுக்குக் கோபம் வரக்கூடும். ஆனால் உண்மை நிலையை யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை. இன்றுள்ள நிலையில் ஒரு நபர் தேர்தல் செலவுகளைக் காண்பிக்கும் போது, அவர் காண்பிப்பதில்லை. அவர் சார்ந்துள்ள

(பிற்பகல் 5-20)



கட்சிகள் அந்த நபருக்காகச் செலவிடுவதாக குறிப்பிடப்படுகிறது. அது ஒரு புறம் இருக்க, அந்த மாநிலங்களிலே சொன்னார்கள். அந்த மாநிலங்களில் ஒரு 20, 25 ஆயிரம் ரூபாய் இருந்தால் ஒரு தொகுதியிலே தேர்தல் வேலையை வெற்றிகரமாக நடத்த முடியுமென்று சொன்னார்கள். ஆனால் நம் மாநிலத்தை எடுத்துக்கொண்டால், நிச்சயமாக எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். இந்தத் தொகுதிகள் சின்னதாக ஆக்கப்பட்டாலொழிய, இந்தச் செலவைக் குறைக்க இயலாது. தொகுதி ரொம்பவும் பெரியதாக இருக்கிறபோது ரொம்பவும் பெரிய பணக்காரர்கள், தனிப்பட்டவர்கள் நிற்க முடியுமே தவிர, சாமானியமானவர்கள், தேர்ததலில் பங்கெடுத்துக்கொள்வதில் சங்கடம் இருக்கிறது. தேர்தல் செலவைக் குறைக்க வேண்டும். அதிகரிப்பதன் காரணமாக பொது வாழ்வில் ஊழல் அதிகரித்திருக்கிறது என்று ஏகோபித்துச் சொல்கிற இந்த நேரத்தில் இந்தத் தொகுதிகளை விரிவாகச் செய்வது நல்லதல்ல என்று அபிப்பிராயப்படுகிறேன். கேரளாவில் 7 தொகுதிகள் ஒரு பார்லிமெண்ட் தொகுதிக்கு இருக்கிறது. ஒரிஸ்ஸாவில் இன்னும் பிற மாநிலங்களில் இருப்பது போல, நம் மாநிலத்தில் கூட ஒன்றே முக்கால் லட்சம் என்று இருக்கும் தொகுதியாக இருப்பதைக் குறைக்க வேண்டும். ஒரு பாராளுமன்ற இடத்திற்கு 7 சட்டமன்ற இடங்கள் என்று ஆக்க வேண்டும் என்பது முற்றிலும் நியாயமானது. சரியானது. இது பொது வாழ்வில் இருப்பவர்களின் சங்கடத்தைக் குறைக்கும். ஊழலுக்கான காரியங்களைக் குறைக்க வழியாக இருக்கும். எந்த வகையில் பார்த்தாலும், நம் தமிழ்நாடு சட்ட மன்ற எண்ணிக்கையை கூடுதலாக்குவது நியாயம். ஒரு பாராளுமன்ற இடத்திற்கு 7 இடங்கள் என்று இருக்க வேண்டும். மற்ற மாநிலங்களில் இருக்கிறது என்கிறபடியால் நான் இதை முழு மனதோடு ஆதரித்து வரவேற்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இந்தத் தேர்தல் தொகுதி வரையறைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தில் நம்முடைய மாநிலத்திற்கு இருக்கக்கூடிய 39 இடத்தை 40 இடமாக நமக்குக் கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்டதை அவர்கள் அனுமதிக்காதது குறித்து சிறந்த முறையில் எடுத்துச் சொன்னார்கள். அதுவும் அவர்கள் குறிப்பிட்டது போல, நமக்கு மொத்தத்தில் 39.50 சதவீதம் என்ற அளவிலே கிடைத்தது. 44 என்ற அளவிலே தான் 40 இடங்களுக்குக் குறைகிறது. இதைக் கூட மனதில் எடுத்துக் கொள்ளாமல், நமக்கு இன்னும் ஒரு இடம் கொடுக்காமலிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். 1952 ஆம் ஆண்டில் நம்முடைய மாநிலத்திற்கு 42 இடங்கள் பாராளுமன்றத்தில் இருந்தன. 1952-ல் எடுத்த சென்சஸ் கணக்குப்படி, 1961-ல் 39 இடங்களாகக்

குறைந்துவிட்டது. 1971-ல் எடுத்த சென்சஸ் பிரகாரம் இன்னும் ஒரு இடம் வரவேண்டியது. இதைக் கொடுக்காமலிருப்பது துர்பாக்கியமாகும். அதேபோல நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய பேரவைக்குக் கிட்டத்தட்ட 234 இடங்கள்தான் இருக்கின்றன. நம்முடைய பாராளுமன்றத்தில் இருக்கிற இடங்களுக்கு ஒரு இடத்திற்கு 6 தொகுதிகள் என்ற அடிப்படையில் தான் 234 இடங்களை வைத்திருக்கிறோம். அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல அண்மையில் இருக்கிற மற்ற மாநிலங்களை எடுத்துப் பார்த்தால், சில மாநிலங்களில் ஒரு பாராளுமன்ற இடத்திற்கு 6, 7, 8 தொகுதிகள் என்று வைத்திருக்கிறார்கள். நம்முடைய ரெப்ரெசண்டேஷன் ஆஃப் பீப்பில் ஆக்டிலே ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு 5-லிருந்து 9 தொகுதிகள் வைத்துக்கொள்ளலாம் என்று உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் இருக்கிற ஆந்திராவில் 41 இடங்கள் பாராளுமன்றத்திற்கு என்று கருதுகிறேன், அங்கே 287 இடங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே போல ஒரிசாவில் 20 இடங்கள் பாராளுமன்றத்திற்கு இருக்கின்றன. அந்த 20 இடங்களுக்கு 140 இடங்கள் அசெம்பிளியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ராஜஸ்தானில் பாராளுமன்றத்திற்கு 23 இடங்கள் தான், அங்கே 184 இடங்கள் சட்டசபைக்கு இருக்கின்றன. ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு 8 இடங்கள் வீதம் அங்கே இருக்கிறது. மத்திய அரசு, நாம் ஒரு மாநிலத்திற்குக் கொடுத்து விட்டால், மற்ற மாநிலங்களிலும் கேட்பார்கள், ஆகவே ஒரே மாதிரியாக வைக்கிறோம் என்று சொல்வது தவறான கணக்கு. சில மாநிலங்களில் ஒரு பாராளுமன்ற இடத்திற்கு 5 இடமாகவும், 7 இடமாகவும், 8 இடமாகவும் வைத்திருக்கிறபோது, நமக்கு 6 இடத்தை 7 இடமாக வைத்துக் கொள்வதற்கு ஏன் கொடுக்கக் கூடாது? மைசூரில் 3 இடங்கள் 27 பாராளுமன்ற இடங்களுக்கு 216 சட்ட சபை இடங்கள் இருக்கின்றன. கேரளாவில் 19 பாராளுமன்ற இடங்களுக்கு 133 சட்ட சபை இடங்கள் இருக்கின்றன. ஆகவே நம் மாநிலத்திற்கு 6 இடம் கொடுப்பது என்பது தவறான காரியம் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். சில நண்பர்கள் அதிகப்படியான எம். எல். ஏக்கள் இருந்து யாருக்கு என்ன பயன் என்று கேட்கிறார்கள். மக்களுடைய பிரதிநிதிகள் எவ்வளவுக்கெவ்வளவு குறைவான மக்களுக்கு இருக்கிறார்களோ அவ்வளவு தூரம் நல்ல முறையில் செயல் பட முடியும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு மற்ற மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற நீதி நமக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதை உறுதியாகச் சொல்ல வேண்டுமென்று சொல்கிறேன். ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த டிலிமிடேஷன் ஆக்ட் 81 வது பிரிவின் பிரகாரம் தேர்தல் தொகுதி வரை



யறைச் சட்டம் உருவாக்கப்பட்டது. நம்முடைய உறுப்பினர்கள் யார் யார் அதில் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்று தெரியவில்லை. நம்முடைய பேரவை, பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கக் கூடும். ஒரு ஆண்டு காலமாகவே பேசிக் கொண்டிருக்கிறோம். இந்த மாதம் அவர்கள் நோடிபிகேஷன் என்ற அளவிலே 31—7—1974 அன்று ஜி.ஓ. பிரசுரித்திருக்கிறார்கள். அப்படி ஜி.ஓ. வந்து விட்ட பிறகு, இதை மாற்றுவதற்குள்ள அதிகாரம் நம்முடைய பாராளுமன்றத்திற்கோ சட்ட மன்றத்திற்கோ கிடையாது. பாராளுமன்றத்திற்கும் மாற்றக் கூடிய அதிகாரம் கிடையாது என்ற நிலைமை தான் இருக்கிறது. இதைத் தான் கல்வியமைச்சரவர்களிடத்தில் எடுத்துச் சொன்னேன். ஒரு நோடிபிகேஷன் வந்த பிறகு மாற்றுவதற்கு உரிமை மத்திய அரசுக்குக் கிடையாது. அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், அவர்களே வேண்டுமானால் மாற்றிக்கொள்ளக்கூடிய உரிமை உண்டு என்று சொல்கிறார்கள். நான் சட்டத்தையெல்லாம் துருவி ஆராய்ந்து பார்த்ததில் அவர்களாகவே மாற்ற வேண்டுமென்று அடித்துச் சொன்னாலும், மாற்றக் கூடிய உரிமை இருப்பதாகத் தெரியவில்லை. அசெம்பிளியில் 234 இடங்கள், பாராளு மன்றத்தில் 39 இடங்கள் நமக்கு உள்ளன. அசெம்பிளி கான்ஸ்டிட்யூவன்சியில் ரிசர்வ்ட் கான்ஸ்ட்டியூவன்ஸி வைப்பது என்பதை நாம் மாற்றக் கூடும். இதில் பல குறைபாடுகள் இருக்கின்றன என்று அறிவோம். ஒரு பாராளுமன்றத் தொகுதியை எடுத்துப் பார்க்கிறபோது, அதிலே 2 தொகுதி, 3 தொகுதி ரிசர்வ்ட் என்று வைத்தால் அந்தத் தொகுதி 20, 30 ஆண்டுகள் ரிசர்வ்ட் ஆக இருக்குமானால், வேறு யாரும் போட்டி போட முடியாத நிலைமை இருக்கிறது. ரிசர்வ்ட் கான்ஸ்ட்டிட்யூவன்ஸியை மாற்றக் கூடிய நிலைமையில் பரவலாகச் செய்தால் நல்லது என்று மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. க. து. நடராசன்: துணைத் தலைவரவர்களே, என்னுடைய திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, பெரம்பலூர் பாராளுமன்றத் தொகுதி என்று ஒன்று நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. அது தனித் தொகுதியாக இருந்து வருகிறது. அந்தத் தனித் தொகுதியிலே ஏற்கெனவேயே ஒரு ரிசர்வ்ட் சீட் தான் இருந்தது. புதிதாக ஒரு தாலுகாவையே, இரண்டு அசெம்பிளி சீட்டுகளை, ரிசர்வ்ட் தொகுதிகளைச் சேர்த்து விட்டார்கள். ஜெயங்கொண்டான் கும்பகோணம் பார்லிமெண்ட் தொகுதியிலிருந்தது. அந்த ரிசர்வ்ட் சீட்டையும் கொண்டுவந்து ஒரு பார்லிமெண்ட் தொகுதியில் 6 உள்ள இடத்தில் 3 தொகுதி ரிசர்வ்ட் சீட்டாக இருக்குமானால் இது எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கிற போது, எங்கள் ஜில்லாவிற்கு வடக்கில் இருக்கிற

தொகுதி, தென்னுற்காட்டிலே உள்ளது ரிசர்வ்ட் தொகுதி, மேற்கே இருக்கிற சேலம் ஜில்லாவில் இருக்கிற தொகுதி ரிசர்வ்ட் தொகுதி. ஆக மொத்தம் ஜில்லா பூராவும் ரிசர்வ்ட் சீட்டாக இருக்கிறது. மற்ற மக்களும் பிரதிநிதிகளாக இருக்கிற மாதிரி, அந்தப் பார்லிமெண்ட் தொகுதி அமையவில்லை. அது போக, இந்த லால்குடி தொகுதியை எடுத்துக்கொண்டால், 1 லட்சத்து 94 ஆயிரம் பேராக அந்தத் தொகுதி இருக்கிறது. ஆண்டி மடத்தை எடுத்துக் கொண்டால், 1 லட்சத்து 54 ஆயிரம் பேராக அந்தத் தொகுதி இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கிற போது, எங்கள் தொகுதியைப்பற்றி நினைக்கிற போது எங்களுக்குப் பயமாக இருக்கிறது. எத்தனை பேர்கள் சேர்ந்து வேலை செய்வது என்று பயமாக இருக்கிறது. 4, 5 பேர்கள் சேர்ந்தால் தான் ஒருவருக்கு ஓட்டு கேட்கக் கூடிய நிலைமை இருக்கும். அவ்வளவு பெரிய அளவில் தொகுதிகள் இருக்கின்றன. ஆகவே கல்வியமைச்சரவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திலே 7 தொகுதிகளாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பதை நான் வரவேற்று எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

(பிற்பகல் 5-30)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : துணைத் தலைவரவர்களே, பாராளுமன்றத்தில் தமிழகத்துக்குள்ள 39 தொகுதிகளை 40 ஆக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையையும், ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு 6 சட்டப் பேரவைத் தொகுதிகளாக இருப்பதை 7 ஆக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையையும் வலியுறுத்தும் தீர்மானத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன்.

நமது மாநிலத்திற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு 41 ஸ்தானங்கள் பாராளுமன்றத்தில் இருந்தன. 41 ஆக இருந்தது 39 ஆக மாறி, இன்றைக்கு 40 ஆவது கொடுங்கள் என்று நாம் அவர்களிடத்திலே கோரிக்கை வைக்கின்ற ஒரு பரிதாபகரமான நிலைமையில் நம்முடைய மாநிலம் இன்றைக்கு இருப்பதற்குக் காரணம் குடும்பக் கட்டுப்பாடு தான் என்பது யாவரும் ஒப்புக்கொண்ட ஒன்றாகும். குடும்பக் கட்டுப்பாடு எல்லா மாநிலங்களிலும் அமுல் நடத்தப்பட்டாலும், முன்பு இருந்த பாராளுமன்ற ஸ்தானங்கள் குடும்பக் கட்டுப்பாடு இருந்தும், பஞ்சாப், உத்திரப் பிரதேசம் போன்ற இடங்களில் கூடுதல் ஆகியிருக்கின்றன. பல மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாடு இருந்தும், பழைய அளவுக்கு அப்படியே பாராளுமன்ற ஸ்தானங்கள் நிலைத்திருக்கின்றன. ஆனால் தமிழகத்தில் மட்டும் இரண்டு ஸ்தானங்கள் குறைந்தன, ஒரு சில மாநிலங்களில் மட்டும் குறையக் கூடிய நிலைமை வந்தது என்றால், உண்மையில்



பரிதாபப்படக்கூடிய நிலைமை தான். குடும்பக் கட்டுப்பாடு தீவிரமாகச் செய்கிறார்கள். இந்தத் தீவிரத்தைக் கைவிட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாகும். ஒப்புக்கு நாம் குடும்பக் கட்டுப்பாடு செய்தால், நம்முடைய உறுப்பினர்களுடைய எண்ணிக்கை குறையாது என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே சட்டப் பேரவையில் 234 ஸ்தானங்கள் உள்ளதை 280 ஆக உயர்த்த வேண்டும் என்ற கருத்தையும் சொன்னார்கள். இந்தக் கருத்தை ஆதரிக்கிறேன். மேல் சபையில் 63 ஸ்தானங்கள் இருப்பதற்கு இன்னும் 13 ஸ்தானங்கள் கூடுதலாகக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு அபிப்பிராயம் 2, 3 ஆண்டுகளாகவே நிலவிவருகிறது. அதையும் இந்தத் தீர்மானத்துடன் இணைத்து, இன்னும் 13 ஸ்தானங்கள் மேலவையில் கூடுதலாக உயர்த்துகின்ற நிலையிருந்தால், அது பிரமாதமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, இன்றைக்கு ரிசர்வ் ஸ்தானங்கள் என்று அரிசனங்களுக்காக பல தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன இந்த ரிசர்வ் ஸ்தானங்களை எந்த அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கினார்கள் என்று தெரியவில்லை. எந்தக் 'கிரைட்டீரியா'வை வைத்து இந்த ரிசர்வ் ஸ்தானங்களை நிர்ணயிக்கிறார்கள் என்று தெரியவில்லை. எந்த நியாயத்திற்கும் உட்பட்டு அல்ல; நான் வேறு விதமாகச் சொன்னால், அநியாயமான முறையில் இவைகளைத் தீர்மானித்திருக்கிறார்கள். நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன், இந்த ரிசர்வேஷன் முஸ்லீம் சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கிறது. எந்தெந்தத் தொகுதியில் முஸ்லீம் மக்கள் கணிசமாக இருக்கிறார்களோ அவைகள் எல்லாம் ரிசர்வ் தொகுதிகள் ஆக்கப்பட்டு, நாங்கள், வரமுடியாத நிலைமை செய்யப்பட்டிருக்கிறது. ரிசர்வ் ஸ்தானங்களில் பெரும்பாலான ஸ்தானங்கள் அப்படித் தான் இருக்கின்றன என்ற கருத்தை இந்தச் சபையின் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்த முறை ரிசர்வ் தொகுதிகளை நிர்ணயிக்கின்றபோது, ஒரு பாராளுமன்றத் தொகுதியில் எந்தப் பகுதியில் அரிசன மக்கள் அதிகம் இருக்கிறார்களோ அந்தப் பகுதியை மட்டும் ரிசர்வ் தொகுதியாக்க வேண்டுமென்றும் முஸ்லீம் மக்கள் கூடுதலாக இருக்கின்ற பகுதிகளை ரிசர்வ் தொகுதிகளாக்குவது நியாயம் அல்ல என்றும் கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை தொகுதிகளை மாற்றியமைப்பது நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தில் சொல்லப்பட்ட முறைப்படி நடந்துகொண்டிருக்கிறது. 1951 ஆம் வருஷத்தி...

ஜனகணிதப்படி நிர்ணயிக்கப்பட்ட 40 ஸ்தானங்களைக் குறைக்கக்கூடாது என்ற கருத்தை நாம் பல முறை வற்புறுத்தி வந்திருக்கிறோம். 1951 க்குப் பின்னால் குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் நாடு பூராவும் பலமாக அமுல் நடத்தப் பட வேண்டுமென்று மத்திய அரசு எண்ணி திட்டம் கொண்டு வந்தது. தமிழ் நாடு தான் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதை நல்ல முறையில் அமுல் படுத்தி ஜனத்தொகையைக் கட்டுப்படுத்தியது. அதற்காக பிரதம மந்திரி உள்பட எல்லோரும் பாராட்டும்படியான நிலைமைக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றினோம். அதனுடைய பலன் 1971 ஆம் வருஷத்திய 'டிலிமிட் டேஷனில்', இதற்கு முன்பு 1964 ஆம் வருஷ தொகுதிப் பிரிவினைக் குழு நமக்குப் போதுமான ஜனத்தொகையில்லை என்று சொல்ல ஒரு ஸ்தானத்தைக் குறைத்து விட்டார்கள். அப்போதே 40 ஸ்தானங்களைக் குறைக்கக்கூடாது என்று சொன்னோம். இன்றுள்ள நிலைமை 40 ஸ்தானங்களுக்கான ஜனத் தொகை இருந்தும் கூட .02 சதம் குறைவாக இருக்கிறது என்று காரணம் காட்டி, மீண்டும் 39 தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுவது நியாயம் அல்ல என்று ஏற்கெனவே சொன்னோம். ஏற்கெனவே ஒரு ஸ்தானத்தை எங்கே ஒதுக்குவது என்ற சர்ச்சையாக இருப்பதை, தமிழ் நாட்டுக்கு ஒதுக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டிருக் கிறது. அது மிகவும் சரியானதாகும்.

இரண்டாவதாக, இப்போதுள்ள முறைப்படி ஒரு அசெம்பிளித் தொகுதிக்கு ஏறத்தாழ ஒரு லட்சத்து 76 ஆயிரம் ஜனத்தொகை என்று இருக்கிறது; இது மிகப் பெரிய தொகுதியாக இருக்கிறது. அதைச் சிறிதாக ஆக்க வேண்டு மென்று சொல்லுவது மிகவும் நியாயம். ஆகவே ஒரு பார்லிமெண்ட் தொகுதிக்கு 6 அசெம்பிளித் தொகுதிகள் என்று இருப்பதை 7 தொகுதிகளாக ஆக்க வேண்டுமென்று கோருவது சரியான கோரிக்கை. இதை ஒப்புக்கொள்ள வேண்டும். இரண்டு, மூன்று டிலிமிட்டேஷன் கமிஷன்களில் நான் பங்கு பெற்றிருக்கிறேன். மாநில அரசாங்கம் ஒரு பார்லிமெண்ட் தொகுதிக்கு எத்தனை அசெம்பிளித் தொகுதிகள் வேண்டுமென்று சொல்லுகிறதோ, அதற்கு இதுவரையில் தொகுதி நிர்ணயக் குழு எந்த விதமான அட்டியும் பேசியது கிடையாது. மாநில அரசாங்கம் சொன்னதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னால் ஒரு பார்லிமெண்ட் தொகுதிக்கு 5 அசெம்பிளித் தொகுதிகள் என்று இருந்தது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று ஒரு சமயம் தேர்தல் குழு சொன்னபோது, நாம் கூடாது, 5 என்பது அப்படியே இருக்க வேண்டும் என்று சொல்லி அதேமாதிரி 5 தொகுதிகள் இருந்தன. இப்போது மாநில அரசாங்கம் எப்படிச் சொல்லுகிறதோ அப்படித்தான் அவர்கள் கேட்டு நடக்க வேண்டும். அப்படிக் கூடாது, 7 தொகுதிகள் கூடாது. ஆறு தான் இருக்க



வேண்டும் என்று சொல்லுவது வழக்கமல்ல. அதை 7 ஆக்க வேண்டும் என்று சொல்லுவதில் நாம் பின் வாங்கக் கூடாது. அது மட்டுமல்ல, தொகுதி பிரிவினையை 6 அல்லது 7 என்று நிர்ணயித்து, அதற்கு மாநில அரசாங்கம் 'புரபோசல்' போட வேண்டும். இதற்கு முன்பு காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில், மாநில அரசாங்கம் தான் 'புரபோசல்' போட்டு அனுப்பியது. அதில் ஆங்காங்கே சில மாறுதல்கள் செய்து தேர்தல் குழு 'பப்ளிஷ்' செய்தது. ஆனால், இந்த முறை முதல் அமைச்சரைக் கேட்டபோது, இந்த அரசாங் கத்தைக் கேட்காமல் தேர்தல் குழுவே அங்கேயிருந்து 'புரபோசல்' போட்டு அனுப்பி விட்டார்கள் என்றார்கள். இது தலைகீழ்ப்பாடமாக இருக்கிறது. இந்த மாநிலத்தில் உள்ள தொகுதிகளை எப்படிப் பிரிப்பது என்பது இந்த மாநில அரசுக்குத் தான் தெரியும். அதில் ஆட்சேபணை ஏதாவது எதிர்க் கட்சிகளுக்கு இருந்தால், எதிர்க் கட்சிப் பிரதிநிதிகளைக் கலந்து கொண்டு அவற்றைத் திருத்திக்கொள்வதற்கு இடமிருக்கிறது. அதற்குக் கூட இடமில்லாமல் இங்கேயுள்ள அரசாங்கத்திற்குத் தெரியாமல் அங்கேயிருந்து 'புரபோசல்' போட்டு அனுப்புகிறார்கள் என்று கேள்விப்படும்போது, அது ஆச்சரியமாகவிருக்கிறது.

ஆகவே, ஒரு பார்லிமெண்ட் தொகுதிக்கு 7 அசெம்பிளித் தொகுதிகள் என்று ஆக்க வேண்டும் என்பதில் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், எல்லோரும் மத்திய அரசில் உள்ள கட்சி உட்பட, ஒரேமாதிரியான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடம் கிடையாது. அதோடு ஒரு பார்லிமெண்ட் ஸ்தானத்திற்கு 7 அசெம்பிளி ஸ்தானங்கள் என்றாக்குவதோடு, 39.¾ பார்லிமெண்ட் ஸ்தானங்கள் தான் கணக்குப்படி வருகிறது. .02 அளவு குறைகிறது என்று சொல்லி ஒரு ஸ்தானத்தை எவருக்கும் இல்லாமல் ஆக்குவது நியாயமல்ல. அந்த ஒரு ஸ்தானத்தையும் சேர்த்து, 40 ஆக நமக்குக் கொடுக்கும்படி என்னுடைய கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ரிசர்வ் சீட் சம்பந்தமாகவும் உறுப்பினர்கள் கூறினார்கள். பொதுவாக தொகுதிகளைப் பிரிக்கும்போது, எந்தத் தொகுதியில் அரிசனங்கள் அதிகமாக இருக்கிறார்களோ, அதைத்தான் ரிசர்வ் சீட்டாகப் போடுகிறார்கள். குறைவாக அரிசனங்கள் இருக்கும் தொகுதியை 'ஷெடியூல்ட் காஸ்ட்' தொகுதியாகப் போட முடியாது. அப்படிப் போடுகிறார்கள் என்று யாரும் நினைக்க வேண்டாம். மற்றவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்றால், அத்தகைய கிராமங்களை மாற்றி விட்டு, அரிசனங்கள் அதிகமாக உள்ள கிராமங்களை ரிசர்வ் தொகுதியோடு சேர்த்துவிடலாம் . . .

(பிற்பகல் 5-40)

அப்படி மாற்றினால், ஏற்கெனவே ரிசர்வ் தொகுதியாக இருப்பதை இப்போது பொதுத் தொகுதியாகவும், ஏற்கெனவே பொதுச் தொகுதியாக் இருப்பதை ரிசர்வ் தொகுதியாகவும் மாற்ற இடம் இருக்கிறது. அதைத் தொகுதிகளைப் பிரிக்கும்போதே பார்த்துச் செய்ய வேண்டும். இந்த மாநிலத்திலேயே அந்த புரபோசல்களைப் போட வேண்டும். அரிப்பு எடுத்தவன் தான் இடம் தெரிந்து சொரிந்துகொள்வான். 'எங்கே அரிக்கிறதென்று அவரவர்களுக்குத்தான் தெரியும். இந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்குத்தான்—அவர்களுக்குள்ளே எத்தனை பேதம் இருந்தாலும்—கூடிப் பேசும்போது, இங்கேயுள்ள கஷ்டங்களைப் புரிந்துகொள்ள முடியும். அதை நாம் 'டீ-லிமிடேஷன் கமிஷன்'-க்கு அனுப்ப வேண்டும். முன்னே போட்ட மாதிரி நாம் போட வேண்டும். பழைய அதிகாரிகள்தான் இப்போதும் இருக்கிறார்கள். முன்பு இருந்தவர்தான் இப்போது சீப் எலக்டோரல் ஆபீசராக இருக்கிறார். எனவே மாநில அரசே அந்த ப்ரபோசல் போட வேண்டுமென்பதை நிலைநாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரித்து, முடிக்கிறேன்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் தொகுதி வரையறைபற்றிக் கொண்டு வந்த தீர்மானத்தை எல்லாக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் ஏகமனதாக நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருந்ததற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டது போன்று, அந்த ஆணைக் குழுவை அமைத்ததற்குப் பிறகு தொகுதிகளை எப்படிப் பிரிக்கலாம்; அவைகள் எந்த வகையில் இருக்கலாம் என்று இந்திய அரசு கேட்குமென்று எதிர்பார்த்திருந்தோம். 24-ம் தேதி கூட்டம் கூடுகிறது. நாங்களே தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறோம் என்று அவர்களே பட்டியல் கொடுத்ததால்தான், இந்தச் சங்கடங்கள் ஏற்பட்டன. முன்கூட்டியே நம்மைக் கேட்டிருந்தால், ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் 7 சட்ட மன்றத் தொகுதிகள் வேண்டுமென்றும், நாமே தொகுதிகள் பிரித்துப் போட்டும், அனுப்பியிருக்கலாம். பிறகு அவர்கள் அதிலே இந்தந்த மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று சொன்னால், நன்றாக இருக்கும். ஆனால் தொகுதி பிரித்தவர்கள் அவர்கள்; மாற்றங்கள் சொல்ல வேண்டியது நாம். இப்படி இருக்கிறது. இந்த ஆணைக் குழுவிலே, நாடாளுமன்றத்தில் தமிழக உறுப்பினர்களாக இருக்கின்ற திருவாளர்கள் ஆர். வி. சுவாமிநாதன், எம். கல்யாணசுந்தரம்; சி. டி. தண்டபாணி; இரா. செழியன்;



ஜி. விஸ்வநாதன் ஆகிய 5 பேரும் இடம் பெற்றிருக்கிறார்கள். தமிழக சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிற திரு. எஸ். கந்தப்பன்; எல். கணேசன் ஜெ. எஸ். ராஜு; எம். டென்னிஸ்; எம். ஏ. லத்திப் ஆகிய ஐவரும் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆக 10 பேரும் அந்த ஆணைக் குழுவில் இருக்கிறார்கள்.

இனிமேல் செய்யக்கூடிய திருத்தங்கள் இவர்கள் மூலமாகவும், இவர்களோடு சேர்ந்து அந்த ஆணைக் குழு தமிழகத்திற்கு வரும்போது ஆங்காங்கு சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் சொல்லலாம். முதலில் அவர்கள் எண்ணிக்கையை நிர்ணயிக்கிறார்கள். சட்டசபை இடங்கள் 234 என்று நிர்ணயிக்கிறார்கள். அந்த இடங்களை நிர்ணயித்த பிறகு, அந்தந்த மாவட்ட மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு இடங்களென்று ஒதுக்குகிறார்கள். சென்னைக்கு 12 இடங்கள் என்று இருந்ததை 14 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 15 இடங்கள் என்று இருந்ததை 17 இடங்களாக மாற்றியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில், 22 இடங்களாக இருந்ததை 21 இடங்களாகக் குறைத்திருக்கிறார்கள். அங்கே ஒரு இடம் குறைந்திருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திற்கு, 9 இடங்களாக இருந்ததை 10 இடங்களாக்கியிருக்கிறார்கள். இவ்வாறு தொகுதியின் எண்ணிக்கையை நிர்ணயித்துக் கொண்ட பிறகு, தொகுதிகளை எப்படிப் பிரிக்கலாமென்று பிரிக்கிறார்கள். பிரித்த பிறகு, தனித் தொகுதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில், எங்கே பெர்சன்ட்டேஜ் அதிகமாக வருகிறதோ, அதைத் தேர்ந்தெடுக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். சென்னையைப் பொறுத்த வரையில், தனித் தொகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஒன்று பெரம்பூர்; மற்றொன்று எழும்பூர். அதற்குக் காரணம் இந்த இரண்டு தொகுதிகளிலும் தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. வண்ணாரப்பேட்டையில் 6.13 சதவிகிதமும், துறைமுகத் தொகுதியில் 6.95 சதவிகிதமும், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் 7.75 சதவிகிதமும் பார்க் டவுனில் 12.50 சதவிகிதமும், பெரம்பூரில் 26.66 சதவிகிதமும் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். எனவே பெரம்பூரைத் தனித் தொகுதி என்று சொல்லிவிட்டார்கள். அதைப் போன்று, புரசைவாக்கத்தில் 12 சதவிகிதம், எழும்பூரில் 12.84 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாக இருக்கும் அடுத்த பெரிய தொகுதியாக எழும்பூர் வருவதால், அதையும் தனித் தொகுதியாக வைத்திருக்கிறார்கள். மதுரையில் மூன்று தனித் தொகுதிகள் வைத்திருக்கிறார்கள். அவை பழனி, நிலக்கோட்டை மதுரை வடக்கு ஆகிய தொகுதிகளாகும். 3 இடங்களிலும் சதவிகிதத்தின்

அடிப்படையில்தான் பிரித்திருக்கிறார்கள். பழனியில் 23.52 சதவிகிதம் இருப்பதால் அதைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். முதலில் தொகுதிகளைப் பிரிக்கிறார்கள். பிறகு பர்சன்ட்டேஜ் பார்த்து, தனித் தொகுதிகளைப் பிரிக்கிறார்கள். பழனியில் 23.52 சதவிகிதம், நிலக்கோட்டையில் 22.69 சதவிகிதம்; மதுரை வடக்குத் தொகுதியில் 20.22 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். மற்றைய தொகுதிகளில் குறைவாக இருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்லும்போது, 'டி-லிமிடேஷன் கமிஷன்' வரும்போது, தொகுதிகள் சேர்ந்தாற்போல் அமைய வேண்டும். அதிகமாக எண்ணிக்கை உள்ளதை பக்கத்தில் சேர்த்து, அந்தக் கிராமங்களை மாற்றினால், இப்போதுள்ள தனித் தொகுதிகளை மாற்றி அமைக்கலாம். அதை அந்தக் கமிஷன் வரும்போதுதான் செய்ய வேண்டும். அந்த முறையில் சில இடங்களில் மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கும். தொகுதிகளினுடைய எண்ணிக்கையை மாற்றி அமைக்க வழியில்லை. எண்ணிக்கையை அவர்களாகப் பார்த்து நிர்ணயித்தால் . . .

**திரு. ஒய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, ஸ்ரீரங்கம் தனித் தொகுதியா இல்லையா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, இப்போது கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. ஸ்ரீரங்கம் இப்போது தனித் தொகுதியில்லை. திரு. தீக்ஷிதர் அவர்களுக்கு இப்போது மகிழ்ச்சியாக இருக்கும். அங்கு 17.58 சதவிகிதம்தான் தாழ்த்தப் பட்டவர்கள் இருக்கிறார்கள். 3 வேறு இடங்களுக்கு மாறி இருக்கிறது. ஒரே தாலுகாவில் இரண்டு இடங்களுக்கு போனதற்குக் காரணம், அங்கே அதிகமான பெர்சன்டேஜ் தாழ்த்தப்பட்டவர்கள் இருப்பதால்தான், அந்த டீலிமிடேஷன் கமிஷன் வரும்போது இந்த நிலைமைகளைச் சொல்லலாம். இந்த அடிப்படையிலே உறுப்பினர்களின் உணர்வுகளை நான் மதிக்கிறேன். அந்த உணர்வுகளின்படி, டீலிமிடேஷன் கமிஷன் வரும்போது, அந்த அளவுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் தன்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெற்றதற்காக என்னுடைய மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா ?



**திரு. அ. அய்யணன் அம்பலம் :** துணைத் தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாட்டிற்கு, நாடாளுமன்ற மக்களவையில் தற்போது 39 இடங்களும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 234 இடங்களும் உள்ளன.

1972-ம் ஆண்டு தேர்தல் தொகுதி வரையறைச் சட்டத்தின் கீழ் (மத்திய சட்டம் 76/72) அமைக்கப்பட்ட தொகுதி வரையறை ஆணைக் குழு 30-7-1974 ஆம் நாளிட்ட இந்திய அரசிதழில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்கள் நாடாளுமன்ற மக்களவையில் 39 எனவும் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் இடங்கள் 234 எனவும் நிர்ணயித்துள்ளது.

எனவே, தற்போது, தமிழ்நாட்டிற்கு நாடாளுமன்ற மக்களவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையிலும், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையிலும் மாறுதல் ஏதுமில்லை.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின்கீழ் நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடம் ஒவ்வொன்றுக்கும், தமிழ்நாடு சட்டப் பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாக உயர்த்த வேண்டும் என்றும் தொகுதி வரையறை ஆணைக் குழுவில் உள்ள தமிழ் நாட்டு இணைநிலை உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதே கருத்தினைத் தெரிவித்து தொகுதி வரையறை ஆணைக் குழுவிற்கு, தமிழ்நாடு அரசும் கடிதம் எழுதியுள்ளது.

மேற்சொன்ன கருத்துரையை தொகுதி வரையறை ஆணைக் குழு ஏற்றுக் கொள்ளாமல், மேலே இரண்டாவது பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு, மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவையில் தற்போது உள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாக உயர்த்த வேண்டும் என்ற உறுதியான கருத்து பொதுமக்களிடையே நிலவுகிறது.

எனவே, மேற்சொன்ன காரணங்களை முன்னிட்டு, இவற்றை மறு பரிசீலனை செய்து, நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கையை 40 ஆகவும், மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாகவும், உயர்த்த வேண்டும் என்று இந்திய அரசையும், தொகுதி வரையறை ஆணைக் குழுவையும் கேட்டுக்கொள்வதென இம்மேலவை தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 4. மாநிலத்திலுள்ள உணவு நிலைமை குறித்து விவாதம்.

(பிற்பகல் 5-50)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, உறுப்பினர்கள் எல்லாம் நம்முடைய மாநிலத்தினுடைய உணவு நிலைமையைப் பற்றி இங்கே ஒரு நாள் சிறப்பான விவாதத்தை நடத்தியிருக்கின்றார்கள். அவரவர்கள் அரசியல் கருத்துக்குத் தகுந்த மாதிரியான நிலைமையை உறுப்பினர்கள் மனதில் இருத்திக்கொண்டிருந்தாலும், எங்கள் நிர்வாகத்திலே இந்த அரசு எடுத்திருக்கிற முடிவுகளையும், நிர்வாகத்திலே நான் சொல்லுகின்ற விளக்கங்களையும் ஓரளவுக்குக் கேட்டு, அதன் பிறகு சொன்னவரைப் பற்றிக் கவலைப்படாமல் நமது தமிழ்நாட்டு மக்களைப் பற்றி ஓரளவுக்காவது உறுப்பினர்கள் கவலைப்பட்டு இதற்குக் காரணம் யார் என்ற நிலைமையைப் பற்றி உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

நீங்கள் இங்கே விவாதத்திற்காக ஒன்று சொல்வது, நானும் தப்பித்துக் கொள்வதற்காக ஏதோ ஒரு காரணத்தைக் காட்டுவது என்று இல்லாமல், நாம் மக்களின் நலனைக் கருதி, மக்களுக்கு இப்படி ஒரு கஷ்டம் நீடித்து விடுமே என்ற கவலையை மனதில் வைத்துக்கொண்டு, எங்கள் மேல் கோபம் உள்ளவர்கள் அதை மறந்து எங்களுடைய விளக்கங்களை ஏற்றுக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள்தான் வாதத்தை ஆரம்பித்து வைத்தார்கள். திடீர் திடீரென்று உத்தரவு போடப்படுகிறது, நிமிடத்திற்கு ஒரு உத்தரவு போடப்படுகிறது என்று சொல்லி, கண்டித்துப் பேசியிருக்கின்றார்கள். இப்படி திடீர் உத்தரவு போடும் நிலைமைகள் எப்படி ஏற்படுகின்றன



என்பதைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய பகுதியைப் பொறுத்தவரையில், நம் விவசாயிகள் அறுவடையை ஒரே திங்களிலே செய்வது கிடையாது. அந்தந்த மாவட்டங்களிலே, 2, 3 மாதங்களுக்கு ஒரு முறை நம்முடைய விவசாயத்தில் உற்பத்தியாகின்றது என்ற நிலைமைகள்தான் இருந்துகொண்டிருக்கின்றன. தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களிலே செப்டம்பர் மாதத்திலேயும், தஞ்சையில், திருச்சியில் அக்டோபர் மாதத்திலேயும், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரியில் செப்டம்பர் அக்டோபரிலும் தொடங்குகின்றது. மற்ற மாவட்டங்களில் கிணற்றுப்பாசனம் இருக்கின்றது. அங்கு எப்போது வேண்டுமானாலும் இருக்கும். பொதுவாக பெரும்பாலும் செப்டம்பர்–அக்டோபர் மாதங்களிலேதான் நம்முடைய விவசாயிகளுக்கு அறுவடை வந்து கொண்டிருக்கிறது. பெரும்பாலும் இரண்டே விவசாயக் காலத்தில் தஞ்சை மாவட்டத்திலே குறுவை மகசூலும் சம்பா மகசூலும் ஏற்படுகின்ற காரணத்தினாலே, இந்த லெவியை போடுவதும் எடுப்பதும் ஆகச் செய்து கொண்டு வரவேண்டியிருக்கின்றது. 1974 ஆம் ஆண்டிலே மட்டும்தான் இப்படி நடத்தினோம் என்றும், இந்தச் சட்டங்களையும், கொள்கைகளையும் கடைப்பிடித்தோம் என்றும் உறுப்பினர்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம். 1970 ஆம் ஆண்டிலிருந்தே அந்தக் கொள்கைகளை, முறைகளை நாங்கள் கையாண்டு கொண்டுதான் இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 1970-ம் ஆண்டிலே தஞ்சாவூரிலே 1—1—1970-லே, 16—9—1970-லே இம்மாதிரிச் செய்திருக்கின்றோம். அப்போது 50 சதம் லெவி போடப்பட்டிருக்கிறது. 1971-லே ஜனவரியிலே போடப்பட்ட லெவி 15—8—1971-ம் தேதி வரையிலே 15 சதம் என்ற அளவிலே நிர்ணயித்திருந்தோம். 16—8—1971-ல் மறுபடியும் லெவி போட்டு 6—10—1971-ல் 20 சதமாக அதிகப்படுத்தியிருக்கின்றோம். அது போலவே, 1972-ல் 5—11—1972-ல் லெவி போட ஆரம்பித்து, 14—8—1972-ல் 25 சதமாக இருந்த லெவியை குறைத்திருக்கிறோம். 1973-ல் அதுபோலவே 18—1—1973-ல் லெவியைப் போட்டு 25—5—1973-ல் 20 சதம் போட்ட லெவியை எடுத்திருக்கின்றோம். மறுபடியும் 25—5—1973-லிருந்து 17—8—1973 வரை 25 சதம் என்று இருந்ததை 16—10—1973-ல் 33-1/3 சதமாக மாற்றியிருக்கின்றோம். இப்போது 1974-லே போட்டோம். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சொல்லிக்கொள்ள வேண்டுமானால் அதிக நேரம் ஆகும் என்று சொல்லிக்கொள்கின்றேன். வட ஆற்காடு மாவட்டத்திலே 1970-லே 1 ஆம் மாதம் போட்டு, 8 ஆம் மாதம் வரையிலே லெவி 15 சதம் போட்டு எடுத்திருக்கிறோம். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலேயும், அந்தந்த மாவட்டங்களுக்குத் தகுந்தாற்போல் அந்தந்த மாவட்டங்களிலுள்ள விளைச்சலுக்கு ஏற்றாற்போல், விளைச்சல் சரியாக இருந்தால், லெவி போடுகின்றோம். உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். சில ஆண்டுகளிலே வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் உபரி மாவட்டங்களாக இருந்திருக்கின்றன. சில மாவட்டங்களில் சில ஆண்டுகளில் தண்ணீர் இல்லாமல் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நிலைமைகள் தொடர்ந்து இருந்தால், லெவி போடுவது எடுப்பது என்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆங்காங்கு விலைகள் அதிகமாகிவிட்டால், அதற்கும் தகுந்தாற்போல் கட்டுப்பாடுகளை நாங்கள் துரிதப்படுத்தி, அதன் மூலம் மக்களுக்கு விலையைக் குறைக்க வேண்டும் என்பதற்காக, இந்த லெவியைக் கையாண்டிருக்கின்றோம் என்பதைக் கூறிக்கொள்கின்றேன். உறுப்பினர்கள் எல்லோருமே திடீர் திடீரென்று லெவியைப் போடுவதும், எடுப்பதும், மாற்றுவதும் ஏன் என்று கேட்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டு காலமாக, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே எல்லோரும், ஏன் சென்ற ஆண்டேகூட உறுப்பினர்களிலே பலர் பாராட்டுகின்ற வகையிலே, இந்த மாநிலத்தை சரியான முறையிலே நிர்வகித்து வந்திருக்கின்றோம் என்று கூடச் சொல்லியிருக்கின்றார்கள். அது போல இந்த ஆண்டு 2-ம் மாதத்திலேயே லெவியை நாங்கள் போட்டிருக்கிறோம். அதுவும் தஞ்சை, தென் ஆற்காடு மாவட்டம் உபரியாக உள்ளதால், கொள்முதல் செய்வதற்கு வசதியாக, தனிப் பகுதிகளாக, தென் ஆற்காடு, தஞ்சாவூர் மாவட்டத்தையும் தனியாக வைத்திருந்தோம். சென்னை நகரிலே பற்றாக்குறை இருக்கின்றது என்று வைத்து இங்கே அரிசி வரவேண்டும் என்பதற்காக, சென்னை, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தர்மபுரி, சேலம், திருச்சி மாவட்டத்தையும் காவிரிக்கு வடக்கேயுள்ள பகுதியையும் வைத்து திருச்சி பெரும் பகுதியாக அடங்கியுள்ள ஒரு மண்டலமாக தனியாகப் பண்ணினோம். அதேபோல் 1—1—1973 முதல் திருச்சி மாவட்டத்தில் காவிரிக்குத் தென்புறம் உள்ள மாவட்டங்கள் ராமநாதபுரம், கேரள எல்லையை ஒட்டிய மாவட்டங்கள் தவிர நீலகிரி, கோவை, மதுரை, திருநெல்வேலி அடங்கிய பெரும்பகுதியை ஒரு மண்டலமாக அறிவித்தோம். கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏற்கெனவே உள்ளபடி விலவங்கோடு, கல்குளம் மாவட்டமும் தொடரப்பட்டது. கன்னியாகுமரி தவிர மற்ற அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் 25 சதம் லெவியை நாங்கள் அப்போது நிர்ணயித்தோம். அதன் பிறகு 24—1—1974 அன்று மத்திய அரசு மாநிலங்களுக்கிடையே சிறுதான்யக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் என்றும், உபரி மாநிலங்கள் பற்றாக்குறை மாநிலங்களுக்கு தாராளமாகக் கொடுத்து உதவ வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் தான் நம்முடைய சங்கடம் ஆரம்பித்தது. ஜனவரி மாதம் குவிண்டால் ரூ. 70, ரூ. 80 என்று இருந்த அந்த சிறுதான்யம் அந்த மாதம் கிட்டத்தட்ட ரூ. 100 லிருந்து ரூ. 120 வரைக்கும் விலையேற்றப்பட்டது. இதெல்லாம் பத்திரிகையிலே வந்த செய்திதான். பெப்ரவரி தொடக்கத்திலே வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் நெல், அரிசி மற்ற மாவட்டங்களுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டதால் இந்த மாவட்டங்களில் விலை ஏறிப்போய்விட்டதாக அதிகமான புகார்கள் வந்துகொண்டிருந்தன. இந்நிலையை அரசு பரிசிலனை செய்து, ஏறத்தாழ ஒவ்வொரு மாவட்டத்தையும் பகுதியாக அறிவித்து, உபரி மாவட்டங்களிலிருந்து, பற்றாக்குறை மாவட்டங்



களுக்குக் கொண்டுசெல்லப்பட வேண்டும் என்ற அளவிலே கட்டுப்படுத்தப்பட்டது. இதனாலேயே 13—2—1974 லிருந்து தமிழ் நாட்டை 13 மண்டலங்களாகப் பிரித்தோம். பிப்ரவரி மாதம் அந்த சிறுதான்யக் கட்டுப்பாட்டை எடுத்த பிறகு, எடுக்கப்போகிறோம் என்று செய்தி வந்த உடனேயே, சிறுதான்யத்தை யார் யார் பதுக்க வேண்டுமோ அவர்கள் பதுக்கி வைத்துக்கொண்டு விட்டார்கள். நெல் ரூ. 80 என்று இருந்த விலை ரூ. 100, 120 என்ற அளவுக்கு ஏற்றப்பட்டது. உடனே கட்டுப்பாட்டை நீக்கி 19 மண்டலங்களாகப் பிரித்து அதற்கு லெவி முறைகளை மாற்றிவிட்டு உடனே டெல்லிக்குச் சென்றேன். இந்த சிறுதான்யக் கட்டுப்பாட்டை அவர்கள் பெப்ரவரியிலே போட்டார்கள். 6—3—1974-ல் மறுபடியும் சட்டத்தை அமுல்படுத்திய காரணத்தினாலேயே அப்போது நம்முடைய சட்டமன்றம் நடந்துகொண்டிருந்தது, இந்த லெவியை எடுத்து விட்டோம் என்று சொன்னார்கள். உடனே விலை அதிகமாக ஏறிவிட்டது. உடனே 7-ம் தேதியில் மத்திய அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினோம். எங்களுக்கு சிறுதான்யங்களுக்கு 25 சதம் லெவி போடுவதற்கு நீங்கள் உத்தரவு அளிக்கவேண்டும் என்று கேட்டோம். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், 40 சதம் மக்கள் தான் சிறுதான்யத்தைச் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னார்கள். முன்னாள் நமது முதலமைச்சர் அவர்கள் 7, 8 தேதியில் இங்கே சட்டமன்றத்திலே நம்முடைய மேலவையிலே பேசியிருக்கின்றார்கள். அது 16-ம் தேதியா 17-ம் தேதியா என்று எனக்கு ஞாபகமில்லை. சிறுதான்யக் கட்டுப்பாட்டை எடுத்துவிட்டால், நிச்சயமாக எதிர்காலத்திலே ஆபத்து விளையக்கூடிய நிலைமை வரும் என்பதையும் தெரிவித்திருக்கின்றார்கள். மறுநாள் 'நவசக்தி' பத்திரிகையில் ஒரு தலையங்கத்திலே எழுதியிருந்தார்கள். "தமிழ் நாட்டில் யாரும் கேழ்வரகு, சோளம், கம்பு சாப்பிடுகின்ற மக்களே கிடையாது. முதலமைச்சர் தெரியாத்தனமாக மக்களையே ஏமாற்றுகின்ற நிலைமையிலே சொல்லியிருக்கிறார்" என்று சொல்லியிருந்தார்கள். அதற்குப் பிறகு கடைசியாக நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, என்னுடைய உணவு பட்ஜெட்டிலே பேசுகிறபோது, நம் மாநிலத்திலே எந்தெந்த மாவட்டத்திலே சிறுதான்யம் சாப்பிடுகிறார்கள் என்ற நிலைமையை . . .

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, அதிகமாக சிறுதான்யங்களைச் சாப்பிடுகிறவர்கள் இல்லை என்று சொன்னாரே தவிர, கிடையவே கிடையாது என்று சொல்லவில்லை.

(பிற்பகல் 6-00)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இங்கேயே அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். முப்பது, 40 சதம் இன்னின்ன மாவட்டங்களிலே சாப்பிடுகிறார்கள் என்று. ஆகவே சிறுதான்யக் கட்டுப்பாட்டை எடுப்பது ஆபத்து என்று அவர்களே சொன்னார்கள்.

நான் உடனே இடைமறித்துக் கேட்டிருக்கிறேன். "நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். உங்களுடைய பத்திரிகையிலே முதலமைச்சரின் அறிவிப்பைக் கண்டித்து எழுதியிருக்கிறார்கள்" என்று கேட்டிருக்கிறேன். அவர்கள் வேறு தினுசாகப் பதில் சொன்னார்கள். திரு. நிஜலிங்கப்பா... திரு. நிக்ஷிதர் மாதிரி வக்காலத்து வாங்கவில்லை. அப்படி எழுதியிருந்தால், அது தவறுதான் என்று அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த நேரத்திலே இப்படி ஒரு நிலைமை வந்துவிடும் என்று கருதி, 16-ஆவது நாள், உணவு அமைச்சர்கள் மாநாட்டிற்கு டெல்லி சென்று, அந்த மாநாட்டிலே இந்த லெவியைக் கேட்டிருக்கிறோம். ஆனால் உணவு அமைச்சரவர்கள் மாநாட்டிலே லெவியைக் கொடுக்கவில்லை. "இந்த சிறுதானியக் கட்டுப்பாட்டை நீக்குவீர்களானால், வெளி வியாபாரிகள் புகுந்துவிடுவார்கள். எங்கள் மாநிலத்தைப் பொறுத்த வரையிலே நான்கைந்து ஆண்டுகளாக உணவு தானியங்களின் விலை ஏறாமல் பாதுகாத்து வருகின்ற நிர்வாகத்தை நடத்தி வருகிறோம். ஆகவே, திடீரென்று வெளிமாநிலங்களிலிருந்து வியாபாரிகள் வருவார்களானால் இஷ்டப்படி பணத்தைக் கொடுத்து வாங்கி விடுவார்கள். ஆகவே தயவுசெய்து அந்த விலையேற்றத்தைச் செய்யக்கூடாது" என்றோம். சென்ற ஆண்டு, ஜூன் மாதத்தில் பல பரபரப்பான செய்திகள் எல்லாம் தந்தி மூலம் வந்துகொண்டிருந்தன. திடீரென்று கேழ்வரகு, சோளம் எல்லாம் விலை குறைந்திருக்கிறது. விவசாயிகளுக்கு விலை குறைவு ஏற்பட்ட காரணத்தாலே, அந்த விலை குறையாமல், மேலும் ஏறுவதற்கு பாதுகாப்பு வேண்டும் என்றார்கள். ஆகவே மாநில கூட்டுறவு விற்பனைச் சங்கத்தைக் கூப்பிட்டு, 60 ரூபாய்க்கு வந்து விட்ட சோளத்தையும், கேழ்வரகையும், ரூ. 70, 75-க்கு வாங்க வேண்டும் என்று கேட்டு, எந்தெந்தப் பகுதியில் விலை இறங்கி இருந்ததோ, அந்தப் பகுதிக்குச் சென்று, சிறு தானியங்களையெல்லாம் மீண்டும் அதிக விலைக்கு வாங்கச் சொல்லியிருக்கிறேன். அந்த நிலைமையையும் சொன்னேன். அந்த உணவு அமைச்சர்கள் மாநாட்டிலே நான் கொடுத்த குறிப்பை வாங்கி வைத்துக்கொண்டார்கள். அகில இந்திய அளவிலே எடுத்த ஒரு கொள்கை இது என்றார்கள். நான் மறுநாள், திரு. ஷிண்டே அவர்களைச் சந்திப்பதற்கு நேரம் வாங்கிக்கொண்டு, நானும், நமது தலைமைச் செயலாளர் அவர்களும், உணவுச் செயலாளர் அவர்களும் அவருடைய வீட்டுக்குச் சென்று, அவரோடு ஒரு மணி நேரம் பேசினோம். சிறுதானி





யங்களின் கட்டுப்பாட்டை எடுத்ததாலே ஏற்பட்ட விலையேற்றத்தைக் காண்பித்தேன். ஒரு குவிண்டாலுக்கு 40 ரூபாய், 50 ரூபாய் என்று ஏறிவிட்டது. மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற வியாபாரிகள் மிகக் கொடுமையாக நிரம்பப் பணத்தைக் கொடுத்து வாங்குகிறார்கள். உள்ளூர் மக்களுக்குத் தேவையை மறுக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து இந்தக் கட்டுப்பாட்டை மீண்டும் வைப்பீர்களானால், நாங்கள் சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் லட்சக் கணக்கான டன் பொதுத் தொகுப்புக்குக் கொடுத்ததைப் போல், சிறு தானியங்களை நீங்கள் கேட்கிற அளவுக்குக் கொடுக்கிறோம், கடந்த காலத்திலே எந்த முறையிலே செய்தோமோ, அதைத் தொடர்ந்து செய்கிறோம், ஆகவே தமிழ் நாட்டிற்கு என்று இதிலே விதிவிலக்குத் தரவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டோம். நம்முடைய சீஃப் செக்ரடரி அவர்களும், எந்த அளவுக்கு விளக்கிச் சொல்ல முடியுமோ அந்த அளவுக்குச் சொன்னார்கள். கடைசியிலே அவர் குஜராத்திலே என்ன நடைபெறுகிறது என்று தெரியுமா என்று சொன்னார்கள். "அதற்காக நாங்கள் வருத்தப்படுகிறோம், குஜராத்திலே துப்பாக்கிச் சூடுகள் நடைபெறுகின்றன. அங்கே உணவு இல்லாது, பற்றாக்குறை ஏற்பட்டுவிட்ட காரணத்தால், இந்த நிலைமை" என்றேன். "அந்த ஒரு நிலைமையை உத்தேசித்து, அகில இந்தியாவுக்கும் நாங்கள் எடுத்திருக்கிற கொள்கையை நீங்கள் மறுக்க வேண்டாம். நீங்களும் கஷ்டத்தை ஏற்றுக்கொள்ளுங்கள், அகில இந்தியாவிலே ஒரு மாநிலத்தில் மட்டும் மிகவும் உபரியான நிலைமையும், மற்ற மாநிலங்களிலே மிகக் குறைந்த அளவுக்கு இருக்கும் நிலைமையும் வந்தால், அதை எப்படி நிர்வகிப்பது? ஆகவே இந்தக் கட்டுப்பாட்டை எடுத்தால்தான் அங்கே குறைந்து, இங்கே கொஞ்சம் நிறைவு செய்யும். உங்களுக்குக் கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும், மற்ற மக்களின் கஷ்டத்தையும் நீங்கள் கொஞ்சம் பகிர்ந்து கொள்ளுங்கள்" என்று பச்சையாகவே என்னிடம் சொன்னார்கள். நான் இதை நாங்கள் சரிக்கட்டிக்கொள்ள முடியாது, ஒரு அறிக்கை தருகிறேன் என்று ஒரு மகஜர் கொடுத்து 25 சதவீதம் லெவி போடுவதற்காகிலும் உத்தரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். இவ்வளவு விவாதத்திற்குப் பிறகு, உடனே என்னிடம் மறுக்க முடியாத காரணத்தாலே, இதை நான் பிரதம அமைச்சரிடம் கலந்துகொண்டுதான் செய்ய வேண்டும், பதில் விரைவிலே அனுப்புகிறேன் என்றார். கூடியவிரைவிலே அனுப்புகிறேன், நம்பிக்கையுடன் செல்லலாம் என்றார். அந்த லெவி வைக்க அனுமதி கிடைத்தால், இப்பொழுது ஓரளவுக்கு எப்படி அரிசியை வைத்துக்கொண்டு நிலைமையைச் சமாளிக்க முடிகிறதோ அந்த அளவுக்கு சிறு தானியங்களுக்கும் லெவி போட்டு விட்டோமானால், நிச்சயமாக விலையேற்றம் செய்ய முடியாது. லெவி இருக்கிற போது, தஞ்சை மாவட்டத்திலே என்ன நிலைமை இருந்தது? லெவி எடுத்த பிறகு எவ்வளவு வேகமாக ஏறுகிறது என்பதற்குக் காரணம் சொல்கிறேன். ஆகவே லெவியைக் கொடுத்தால், உங்களுக்குத் தேவையான அளவுக்கு, நீங்கள்

கேட்கிற அளவுக்கு சிறுதானியம் தருகிறேன் என்றேன். ஆனால் 27-ம் தேதி என்று கருதுகின்றேன். லெவி கொடுக்க முடியாது என்று எழுதிவிட்டார்கள். அதற்குப் பிறகு தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் கேழ்வரகு, சோளம் எல்லாம் விலை ஏறியதற்கும், அரிசி விலை ஏறியதற்கும் அவ்வளவு ஒன்றும் வித்தியாசம் இல்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு கேழ்வரகும், சோளமும் ஒரு மூட்டை 200 ரூபாய்க்கு விற்கிறது. 180 ரூபாய்க்கு வந்து நான்கு மாதமாகிறது. சாதாரணமாக எல்லோருக்கும் தெரியும். தை மாதத்திலே, தஞ்சை மாவட்டத்திலே ஒவ்வொரு ஆண்டும் விற்கின்ற விலை, இந்த மாதம் இருக்காது. 60 அல்லது 70 சதவிகிதம் அதிகமாக நெல் விலை இருக்கும் இதை யாராலும் மறுக்க முடியாது. அந்த நிலைமை இந்த நேரத்திலே ஏற்படுகிறது என்றால், இது ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுவதுதான். நாம் நிர்ணயித்த விலையைவிட, ஆடிப்பருவத்தில், ஆவணி நடவு காலத்திலே கட்டுக்கடங்காத அளவிலே விலை ஏறும், 60 சதவிகித விலை ஏறும். சென்ற ஆண்டுகூட ஏறிற்று. சிறு தானியங்களைச் சாப்பிடுகிற மக்கள் அதிகம். உழவு நேரங்களிலே அரிசி சாப்பிடுகிற மக்கள்கூட சிறு தானியங்களைச் சாப்பிட ஆரம்பிப்பார்கள். கூலிக்குக்கூட கேழ்வரகு, சோளம் போன்றவைகளைக் கொடுப்பது வழக்கம். ஆகவே அப்பொழுது வயலிலே வேலை செய்கிற மக்களுக்கு சிறு தானியங்கள் தேவைப்படும். ஆகவே திடீரென்று அந்த விலையை வைத்து இந்த விலை ஏறுகிறது. சாதாரணமாக உங்களுக்குத் தெரியும். கிராமத்திலே பெரிய குடித்தனமாக இருப்பவர்கள் எல்லாம், துவரம் பருப்பிலே சாம்பார் வைப்பார்கள். ஏழை மக்களெல்லாம் பச்சைப்பயற்றிலே சாம்பார் வைப்பார்கள். பெயர் பருப்பு சாம்பார் என்றாலும், துவரம் பருப்பு சாம்பார்தான் வசதி உள்ளவர்கள் எல்லாம் சாப்பிடுவோம். ஒரு ரூபாய்க்கு துவரம் பருப்பு விற்கிறது என்றால், 8 அணாவிற்கு பயற்றம்பருப்பு கிடைக்கும். அதைக் கொஞ்சம் குறைத்துப் போட்டாலும் போதும். அதுவும் தோலோடு போட்டால் 'திக்'காக இருக்கும் என்று ஏழை மக்கள் போடுவார்கள். (குறுக்கீடு: அதன் விலையும் ஏறியிருக்கிறது). ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். அவர்கள் விலை ஏறிவிட்டது என்கிறார்கள். அதையெல்லாம் சொல்கிறேன். பயறு விலை ஏறிவிட்டால் என்ன செய்வார்கள்?

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்:** தலைவர் அவர்களே, எந்த ஆண்டும் இந்தக் காலத்தில் விலை ஏறும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். விலை ஏறுவது உண்மைதான். ஆனால், காலரா, அம்மை, வந்தமாதிரி, எப்பொழுதுமே இப்படி விலை ஏறவில்லையே. இவ்வளவு விலை ஏறியது எங்கேயாவது உண்டா? உங்கள் அனுபவத்திலே ஒரு படி அரிசி 6 ரூபாய்க்கு, 5 ரூபாய்க்கு விற்றிருக்கிறதா?





**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, நான் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டு பதில் சொல்லுங்கள். அதற்குக் காரணம் சொல்கிறேன். விலையேறியதைப்பற்றி எங்களில் அனுதாபப்படாதவர்கள் இல்லை. உங்களைவிட ஈர நெஞ்சம் உடையவர்கள் நாங்கள். பட்டினி கிடந்தவர்கள் நாங்கள். பசி என்றால் என்ன என்பது எங்களுக்குத் தெரியும். பசியாத ஜாதி அல்ல. எங்களைச் சேர்ந்தவர்களெல்லாம் பட்டினியாகக் கிடந்து கஷ்டப்பட்டு முன்னேறியவர்கள்தான். இந்த விலையேற்றத்தாலே ஊரெல்லாம் என்னை சாபம் இடுகின்ற நிலைமைக்கு வந்ததாலே, உங்களைவிட அக்கறை கொண்டவன் நான் என்று சொல்லிக்கொள்கிறேன். ஒரு விளக்கத்திற்காகச் சொல்கிறேன். பயிறு சாப்பிடுகிறவர்கள் எல்லாம், துவரம் பருப்பு விலைக்கும், பச்சைப் பயறு விலைக்கும் 10 பைசாதான் வித்தியாசம் என்று வைத்தால், எதை வாங்குவார்கள்? பருப்பு விலை ஒரு ரூபாய். பச்சைப் பயறு 95 பைசா. ஆகவே எதை வாங்குவார்கள்? ஆகவே பயறு விலையேறியவுடன், பருப்புக்குத்தானே வருவார்கள். அதுபோல, சிறுதானியத்தின் விலை 3 மடங்கு ஏறி, 60 ரூபாய்க்கு இருந்து வந்த சிறு தானியம், 200 ரூபாய்க்கு வந்தால் எல்லோரும் எதை வாங்குவார்கள்? இப்போது நமக்கு உற்பத்தியாகிற நேரமும் இல்லை. பிப்ரவரி, மார்ச் மாதங்கள்தான் சிறுதானியம் உற்பத்தியாகிற நேரம். குஜராத், மகாராஷ்டிரத்திலே இருந்து வியாபாரிகள் இங்கே வந்து கொள்முதல் வேலை செய்கிறார்கள். அதற்கு விலை அதிகம் கிடைத்தவுடனே, விவசாயிகள் மட்டும் என்ன, வியாபாரம் புரியாதவர்களா? எல்லோரும் சொல்கிறார்கள். நாமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட சொன்னார்கள். கேரளத்திலே விலை இறங்கிப் போனதற்குக் காரணம் தஞ்சாவூரில் கட்டுப்பாடு இல்லை என்று. இப்போது விவசாயத்தில் நல்ல பலன் கிடைக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தக் காலத்திலே கிராமத்திலே ஒரு வீட்டைக் கட்ட வேண்டும் என்றால் ஏதாவது பெரிய வியாபாரம் செய்ய வேண்டும். சிங்கப்பூருக்குப் போய் வருகின்றவர்கள்தான் வீட்டைக் கட்டுவார்கள். விவசாயத்தைச் செய்து பெரிதாக வாழ்ந்தவர்கள் இருக்க முடியாது. ஆனால் இப்போது விவசாயத்தில் லாபமில்லை என்று சொல்ல முடியாது. ஐ.ஆர். எட்டு போடுகின்றார்கள் என்றால், ஏக்கருக்கு ஐயாயிரம் ரூபாய் லாபம் கிடைக்கிறது என்று சொல்லுகின்றார்கள். மேலவையிலுள்ள நமது திரு. கணபதி மாதிரி அவ்வளவு திறமையாக யாரும் சாகுபடி செய்திருக்க முடியாது.

(பிற்பகல் 6-10)

**திரு. எம். ஆறுமுகசாமி:** எந்த இடத்தில் சாகுபடி செய்தார்கள்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** உங்கள் நிலமே எங்கே இருக்கின்றது என்று உங்களுக்குத் தெரியாது. அவரைப் போய் எங்கே என்று கேட்டால், நான் என்னத்தைச் சொல்லுவது? இரண்டு பேரையும் எனக்குத்

தெரியும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். அவ்வளவு திறமையாகச் சாகுபடி செய்கின்றார்கள் என்பதற்காக இதைச் சொல்லுகிறேன். இன்று விவசாயத்தில் நல்ல பலன் அவர்களுக்குக் கிடைக்கிறது. முன்பெல்லாம் கெமிகல் உரத்தைப் போட வேண்டும் என்றால் போட மாட்டார்கள். கெமிகல் உரத்தைப் போட்டால், அந்த நிலத்திலிருந்து மண்ணைக்கூட எடுத்து அடுத்த நிலத் நிலத்தில் போட மாட்டார்கள். அவ்வளவு பயம். இப்போது அந்த கெமிகல் உரம் வேண்டும், வேண்டும் என்று கேட்கின்றார்கள். எனவே இப்போது விவசாயிகளுக்கு எப்படி எப்படி லாபகரமாகச் செய்ய வேண்டும் என்று தெரிகின்றது. லாபம் கிடைக்கிறது என்று அறிந்துதான் இருக்கும் தானியத்தையும் நல்ல விலைக்கு விற்று விட்டார்கள். போட்டி போட்டுக் கொண்டு விற்றார்கள். அதன் காரணமாக விலையும் போட்டி போட்டுக்கொண்டு ஏறிக்கொண்டே போய்விட்டது. புள்ளி விவரத்தோடு சொல்ல வேண்டுமென்றால், நேரம் இருக்காது. ஆகவே எந்தெந்த நேரத்தில் எந்த அளவிற்கு விலை ஏறவேண்டுமோ ஏறிவிட்டது. சாதாரணமாக ஏப்ரல் மாதத்தில் சிறு தானியம் ரூ. 125 ஆக இருந்தது ரூ. 155 ஆக உயர்ந்தது. அரிசி விலையும் மார்ச் மாதத்தில் ரூ. 156 என்று இருந்தது ரூ. 183 ஆக மாறியது. ஆனால் அதே நேரத்திலே தஞ்சாவூரிலே மட்டும் ரூ. 134 ஆக இருந்தது அரிசியைப் பொறுத்த வரையில். அந்த நிலையில் அதை மண்டலமாகப் பிரித்து தஞ்சை மாவட்டத்தையும் தென்னாற்காட்டையும் சேர்த்து ஒரு தனி மண்டலமாக மாற்றி 24—4—1974 லிலிருந்து 25 சதவிகிதத்தை 15 சதவிகிதமாகக் குறைத்து, தஞ்சை மாவட்டத்தில் மட்டும் லெவியை அப்படியே வைத்துக் கொண்டு அது தொடர்ந்து வந்தது. பிறகு ஒவ்வொரு மாவட்டத்தையும் தனி மண்டலம் என்ற முறையில் 19 மண்டலமாக ஆக்கிவிட்டோம். இதற்குப் பிறகு விலை ஏற ஆரம்பித்தது. பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். கிட்டத்தட்ட ஒரு குவிண்டால் அரிசி மாவட்டங்களிலே ரூ. 200 என்ற அளவிற்குக்கூட ஏறிவிட்டது. தஞ்சையில் மட்டும் ரூ. 134 என்ற நிலைமையிலேயே இருந்த காரணத்தினால், மற்ற மாவட்டங்களிலே விலையைக் குறைக்க வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தோம். இதிலே நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். அகில இந்திய ரீதியிலே என்ன நடந்தது, அப்போது மத்திய அரசாங்கத்தில் உள்ளவர்கள் என்ன செய்தார்கள் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அன்று சிறு தானியத்தின் விலை ஏறிவிட்டது என்ற காரணத்தினால், அகில இந்திய அளவிலே அவர்களுடைய அதிகாரிகளும் அமைச்சர்களும் உட்கார்ந்து பேசி பிறகு தமிழ்நாட்டிற்கு வந்து எங்களுக்கு இவ்வளவு அரிசி தேவை, சோளம் தேவை என்று கேட்டு அதைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் அதே நேரத்திலே குஜராத் போன்ற மாநிலங்களிலே பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால், சிறு தானியத்தைப் பொறுத்த வரையில், உபரி மாநிலங்களிலே அதன்பேரிலே உள்ள



கட்டுப்பாட்டை எடுத்துவிட்டால், பற்றாக்குறை மாநிலத்திலே விலை இறங்கும்; காரணம் உபரி மாநிலங்களிலேயிருந்து பற்றாக்குறை மாநிலத்திற்கு வந்து குவிந்துவிடும் என்று நினைத்து அந்தக் கட்டுப்பாட்டை எடுத்துவிட்டார்கள். அதே அடிப்படையில்தான், மற்ற மாவட்டங்களிலே இப்படி விலை ஏறியிருக்கின்றதே, இதைக் குறைப்பதற்கு உபரி மண்டலமான, தஞ்சை-தென்னாற்காடு மாவட்டத்தைத் திறந்துவிட்டால் பற்றாக்குறை மாவட்டங்களிலே விலை குறையும் என்று கருதித்தான் அதைத் திறந்துவிட்டோம். வேறு ஒன்றுமில்லை. இது ஒவ்வொரு ஆண்டும் செய்யப்படுவதுதான். ஆண்டுக்கு ஆண்டு எட்டாவது மாதத்தில் திறப்பதற்குப் பதிலாக இந்த ஆண்டு ஆறாவது மாதத்தில் திறந்துவிட்டோம். அதை ஒன்றும் இரகசியமாகச் செய்துவிடவில்லை. ஒரு கொள்கை காரணமாக நன்றாக யோசித்துப் பார்த்துவிட்டு அதைச் செய்தோம். இதை ஏதோ துக்ளக் இராஜ்யம் என்றெல்லாம்கூட சொன்னார்கள். நேரத்திற்கு ஒரு கொள்கை என்றுகூடச் சொன்னார்கள். இதைச் செய்த நேரத்திலே எங்களுக்குச் சென்ற வருஷம் இருந்த அதிகாரம்கூட எங்கள் கையில் இப்போது இல்லை. சென்ற ஆண்டு சிறு தானியத்தின்மீது கட்டுப்பாட்டை விதிப்பதற்கு அதிகாரம் எங்கள் கையில் இருந்தது. இப்போது அது இல்லை. அதே காரணங்களுக்காக கொஞ்சம் சங்கடத்திற்குள்ளானோம்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** குறுவை சாகுபடிக்குப் பிறகு இந்த மாதிரி ஒரு முடிவினை எடுத்திருந்தால், அமைச்சர் அவர்களுடைய யோசனை சரியாக இருந்திருக்கும். ஆனால் குறுவை சாகுபடி தகராறாக இருந்த காரணத்தினால், இதைச் செய்தது சரியா என்று கேட்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** எந்த ஆண்டு ?

**திரு. எம். ஆறுமுகசாமி :** இந்த ஆண்டு.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நாங்கள் மாவட்டங்களிலே அரிசி விலை குறைய வேண்டும் என்றுதான் 6-வது மாதத்தில் இதைச் செய்தோம். அப்போது நீர்த் தேக்கங்களிலும் தண்ணீர் வந்துவிடும் என்று எதிர்பார்த்தோம். அப்போது விஞ்ஞான ரீதியிலும் சரி, மற்ற முறையிலும் சரி, நிச்சயமாக மழை பெய்யும் என்றுதான் சொன்னார்கள். ஜோஸ்யத்தையும் சொன்னார்கள். பஞ்சாங்கத்திலே சொல்லியிருக்கிறார்கள். மழை எப்படியும் வரும் என்று எதிர்பார்த்து இதைச் செய்தோம். ஒரு பக்கத்திலே தஞ்சையிலே உள்ள கட்டுப்பாடு காரணமாக அங்கே விலை ரூ. 134 என்று இருந்துவிட்டது. மற்ற மாவட்டங்களிலே விலை ஏகத்தாறாக ஏறிவிட்டது. அப்போது பத்திரிகைகள்கூட தஞ்சையிலே விலை மிகவும் குறைந்துவிட்டது என்று எழுதின. அதற்குப் பிறகுதான் அகில இந்திய ரீதியில் அவர்கள் எடுத்த கொள்கையைப் போலவேதான் நாங்களும் இந்த முடிவினை எடுத்தோம். அகில இந்திய ரீதியில்

அவர்கள் அந்த முடிவை எடுத்தபோது, அவர்கள் பெரிய மனிதர்கள் என்று பத்திரிகைகள் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. அப்போது கண்டிக்காத பத்திரிகைகள் இப்போது அதே காரியத்தை நாம் செய்தோம் என்பதற்காகக் கண்டித்து எழுதுகின்றன. நாங்கள் இதைச் செய்ததற்கே காரணம் ஒவ்வொரு மாவட்டத்திலும் விலை குறைய வேண்டும் என்பதுதான்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அதே பத்திரிகையில், தினமணிப் பத்திரிகையில் அந்தக் கட்சியின் கொள்கையையும் கண்டித்துத்தான் எழுதியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** என்ன எழுதியிருக்கின்றார்கள் என்று அவரைக் கேட்டுக்கொண்டு சொல்லுங்கள். இது அனுவசியமான பிரச்சினை. திரு. தீக்ஷிதர் வீணாக இடை மறிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உள்ள நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவர்தானே எழுதினார்? பத்திரிகைக் காரரைக் கேட்டுக்கொண்டு.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அப்படியானால் பத்திரிகையில் வருகின்றதையெல்லாம் குறிப்பிடும்போது, அந்தப் பத்திரிகையிடம் உறுதிப் படுத்திக்கொண்டுதான் சொல்லுகின்றார்களா இந்தக் கட்சியிலே உள்ளவர்கள் ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பத்திரிகையில் வருவதெல்லாம் உண்மைக்குப் புறம்பானவை என்றும் சொல்லுவதற்கில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அறிக்கை விட்டிருக்கின்றார்கள். பத்திரிகையில் வந்ததைத்தான் சொல்லுகிறேன். வேறு தவறாக ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. கோ. சு. மணி :** அப்படியானால் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சொல்லுகின்றது அவ்வளவையும் ஏற்றுக்கொள்ளுகின்றாரா திரு. தீக்ஷிதர் அவர்கள் ?

**திரு. கே. ராஜாராம் :** உறுப்பினர் பேசினார். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றார்கள். ஆனால் இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் குறுக்கிட்டுப் பேசினால், அமைச்சர் எப்படிப் பேசுவது? இரண்டு தரப்பிற்கும் சொல்லுகிறேன். இடையிடையே மறித்துச் சொல்லக்கூடாது. சந்தேகமிருந்தால் கடைசியிலே கேட்டுக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இப்போது தஞ்சை மாவட்டத்திலே இந்தக் கட்டுப்பாட்டை எடுத்த பிறகு, பத்திரிகையில் செய்திகள் வந்திருக்கின்றன. மதுரையில் குவிண்டால் ரூ. 30-லிருந்து ரூ. 40 வரையில்



குறைந்திருக்கின்றது. சன்ன ரகத்தின் விலை நேற்று ரூ. 235 ஆக இருந்தது இன்றைக்கு ரூ. 195 ஆகக் குறைந்திருக்கின்றது. மற்றொரு ரக அரிசி விலை ரூ. 225 ஆக இருந்தது இப்போது ரூ. 196 ஆகக் குறைந்திருக்கின்றது. மதுரை இராமனுதபுரம் வர்த்தக சபை அரசு எடுத்த முடிவை வரவேற்கிறது. கோவையில் 70 கிலோ கொண்ட அரிசி மூட்டை ரூ. 5 முதல் ரூ. 10 வரையில் குறைந்திருக்கின்றது. நடுத்தர ரகமும் விலை குறைந்திருக்கின்றது. ஓரிரு தினங்களிலே சன்ன ரக விலையும் குறையும் என்று பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. 15—6—1974-ல் கட்டுப்பாட்டை எடுத்த பிறகு இந்த நிலை.

(பிற்பகல் 6-20)

ஆகையினாலே அப்போது எடுத்த நடவடிக்கை எந்தக் கொள்கைக்காக எடுத்தோமோ அந்தப் பலன் கிட்டியது என்று நான் சொல்ல முடியும். அப்படி விலை குறைந்துகொண்டே வருகிறபோது, தஞ்சை மாவட்டத்தைத் திறந்து விட்டோம். அப்படித் திறந்து விட்ட பிறகு எங்களுக்கு யாரும் சொல்லாத பயங்கரமான ஒரு செய்தியை நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். கேரளாவில் இதன் காரணமாக விலை குறைந்து விட்டது, தஞ்சை மாவட்டத்தில் ஏற்றிய லாரிகள் பூராவிலும் நெல்லை ஏற்றி கேரளாவிற்குக் கொண்டு போயிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதைப்பற்றி எவ்வளவோ பழி வாங்கிக்கொண்டு பொறுத்துக் கொள்வேன். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு பதவி மாறுதலாகிப் போகிறவர்கள் தான் நாங்கள். ஆனால் அந்த அதிகாரிகள் படுகிற பாடு, கஷ்டம் கொஞ்சமல்ல. காலையில் கூட திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சட்டமன்றத்தில் பேசினார்கள். அவர்களை கடத்தல் செய்பவர்கள் துப்பாக்கியால் சுட்டிருக்கிறார்கள். இவ்வளவு சங்கடத்திற்கிடையே மலை மேல் சென்று கள்ளக் கடத்தல்காரர்களை அவர்கள் பிடித்திருக்கிறார்கள். அவர்கள் இந்த அதிகாரிகள் மேல் கல்லை உருட்டியிருக்கிறார்கள். இரண்டு நாட்கள் தண்ணீர் கூடக் கிடைக்காமல் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். நேற்று எதிர்க் கட்சியைச் சேர்ந்த திரு. கோபால் அவர்கள் பேசுகின்றபோது, மதுரைப் பகுதியில் கடத்தல் அநேகமாக நின்று விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, கோவைப் பகுதிக்குச் சென்று பார்த்தால், அங்கேயிருக்கிற அதிகாரிகள் சாதாரண முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை. எந்த மக்கள் கடத்தலில் ஈடுபடுகின்றார்களோ அவர்களைப் பிடித்திருக்கிறார்கள். ரோடு மூவ்மெண்டில் லாரி மோட்டார் வாகனங்களில் செல்வதைத் தடுத்திருக்கிறோம். அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. 7 தினங்களில் அந்த அதிகாரிகள் செய்ததைப் போட்டிருக்கிறது. சர்வ கட்சியினர் கருணை கூர்ந்து பார்க்க வேண்டும். அவ்வளவு செயல்பட்டிருக்கிறார்கள். இது எங்களை பாதிப்பதாக இல்லை. மக்கள் நலன் கருதி, நம் மாநில மக்கள் கஷ்டப்பட அடுத்த மாநிலத்திற்கு அரிசி போகவேண்

டோ என்று அரசியல்காரர்களுக்கு வரவேண்டிய எண்ணத்தை விட அதிகமாக எண்ணம் கொண்டு இரவு பகல் என்று பாராமல் பாடுபடுகிற அதிகாரிகளை ஓரளவு நினைத்துக்கொள்ள வேண்டும். ஏதோ லாரிகளில் ஏற்றியவுடனே நாங்கள் பாஸ் கொடுத்து போகச் சொன்ன மாதிரி கேரளாவில் விலை குறைந்து விட்டதென்று சொன்னார்கள். எல்லாம் கேரளாவிற்குப் போக முடியாது. அதாவது கேரளாவிற்குப் போகிறதென்றால், தலைச் சுமையாகப் போய்க் கொண்டிருந்தது. அடிக்கடி பத்திரிகையில் பார்த்து தலைச் சுமையை நிறுத்தி விட்டோம். கழுதைமேல் ஏற்றிக்கொண்டு போக ஆரம்பித்தார்கள். கழுதைகளைப் பிடித்து வந்த பிறகு, அது குறைந்து விட்டது. ரொம்பத் துணிந்தவர்கள் 5, 10 சதவீதம் என்ற அளவில் தலைச் சுமையில் கொண்டுபோகிறார்கள். கேரளாவில் இருக்கிற அமைச்சர் கூட இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து அரிசி கடத்தி வந்தார்கள், வருவது தடைபட்டு விட்டதால், மத்திய அரசு வேண்டிய உதவி செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு வேண்டுகோள் விட்டதாகத் தொழிலாளர் நல அமைச்சரிடம் அவர்கள் சொன்னதாக அவர் என்னிடம் சொன்னார். அந்த அளவிற்குக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். சென்றது எத்தனையோ லட்சம், ஒரு லட்சமா, இரண்டு லட்சமா என்கிறார்கள். ஏதோ அவ்வளவு அனுப்பி விட்டதாக எண்ணம் இருக்கிறது. எப்போது தஞ்சையைத் திறந்துவிட்டார்களோ அந்த நாளிலேயே கலெக்டர்களுக்கு போன் மூலம், ரிட்டனை அல்ல, உத்தரவு கொடுத்திருக்கிறது அரசு. தஞ்சை மாவட்டத்திலிருந்து இந்த நம்பர் லாரியில் இந்த ஊருக்குப் போகிறது என்று செக் போஸ்டில் எடுக்கவில்லை—செக் போஸ்ட் வைத்திருக்கிறோம், மார்கெட் லெவி கலெக்ட் பண்ணுகிறார்கள், அவர்கள் வாங்குகிற கமிஷனுக்காக அவர்கள் இருக்கிறார்கள்—ஆனால் செக் போஸ்ட் அதிகாரிகளை வீட்டுக்கு வரச் சொல்லவில்லை, லாரிகளை நிறுத்தி எங்கே போகிறது என்று கணக்குகளை எடுத்து எந்தெந்த மாவட்டத்திற்குப் போகிறது என்று கணக்குகளை எடுத்து—எந்த அளவிற்கு எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு எடுக்கச் சொல்லி—அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் அங்கு வந்த அரிசியை, வருகிறதைச் சன்தாணிக்க வேண்டுமென்று உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது, எந்த வியாபாரிகள் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமையைச் சொல்லி, உடனடியாக இதற்கான ஒரு சட்டத்தைப் பின்னே அனுப்பியிருக்கிறது. ஆலை அதிபர்கள் நெல்லாக இருந்தால் 75 டன் வைத்துக் கொள்ளலாம் என்றும், அரிசியாக இருந்தால் 50 டன் வைத்துக்கொள்ளலாம் என்றும், அதற்கு மேல் தேவையானால் விற்ற பிறகு கொள்முதல் செய்ய வேண்டும், இல்லையென்றால் கட்டுப்பாட்டை நீக்கியவுடனே ஒரே தடவையாக விலையை ஏற்றி விடுவார்கள் என்று உத்தரவை பின்னாலே அனுப்பியிருக்கிறோம். மொத்த வியாபாரிகளாக இருந்தால், 15 டன் நெல் வைத்துக் கொள்ளலாம், 10 டன் அரிசி வைத்துக்கொள்ளலாம் என்று தாக்கீது அனுப்பி,



மாநிலம் பூராவும் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் ஆங்காங்கே மற்ற சிவில் சப்ளை அதிகாரிகளும் உடனடியாக ஒவ்வொரு மில்லையும் செக் பண்ணியிருக்கிறார்கள். இதற்கான கணக்கைக் கூட அவ்வப்போது தந்திருக்கிறார்கள். அப்படி அவர்களிடம் இருந்த இருப்பு மொத்தம் மாநிலம் பூராவும் 87,233 டன். மே மாதத்தில் இருந்தது. அப்புறம் ஜூன் மாதம் 76,162 டன் என்ற அளவிலே இருக்கிறது. அந்தந்த மாவட்டத்தில் அந்தந்த மில்காரர்களிடம் அந்தந்த மொத்த வியாபாரிகளிடம் இருக்கிற கணக்குகளைக் கொடுக்க வேண்டுமென்று ஒரு ஆண்டுக் காலமாக உத்திரவிட்டிருக்கிறோம். 15 நாட்களுக்கு ஒரு முறை அவர்களிடத்தில் இருக்கிற இருப்புகளை அறிவித்துவிட வேண்டும். அப்படி அறிவிக்கா விட்டால், அதிகாரிகள் செக் செய்து கேஸ் போடுவார்கள். அப்படிப்பட்ட விவரங்கள் இருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு வியாபாரியும் 15 நாட்களுக்கு ஒரு முறை கணக்கு கொடுக்க வேண்டும். ஸ்டாக் எவ்வளவு என்று எங்களுக்குக் கணக்கு கொடுத்துவிட வேண்டும். சிவில் சப்ளை அதிகாரிகளிடம் கொடுக்காமலிருந்தால், 16-ம் நாளோ அல்லது 17-ம் நாளோ அல்லது நினைத்த நேரத்தில் அவர்கள் மில்களைப் பரிசோதனை செய்து வழக்குகளைப் பிடித்திருக்கிறார்கள். இது ஒரு ஆண்டுக்காலமாக இருக்கிறது. விவசாயிகள் 25 குவிண்டாலுக்கு மேல் அரிசி வைத்திருந்தால், உடனே சிவில் சப்ளை அதிகாரிகளுக்குத் தெரிவித்துவிட வேண்டும். கலெக்டருக்குத் தெரியப்படுத்த வேண்டும். 40 குவிண்டாலுக்கு மேல் நெல் வைத்திருந்தால், தெரிவித்துவிட வேண்டும். எந்த அளவிற்கு நிர்வாகத்தைச் சீர்படுத்திக்கொண்டு போக முடியுமோ, அந்த அளவிற்குப் போய்க் கொண்டிருக்கிறோம். நீங்கள் எவ்வளவு வைத்திருந்தீர்கள், எவ்வளவு விற்றிருக்கிறீர்கள், யாரிடம் விற்றிருக்கிறீர்கள் என்று கேட்கிற அளவிலே 15 நாட்களுக்கு ஒரு முறை கணக்குக் காட்ட வேண்டுமென்ற நிலை வைத்திருக்கிறோம். திருச்சியில் வியாபாரிகள் நம்மை இவ்வளவு கடுமையாகத் தாக்குகிறார்கள் என்றால், ஒரு ஆண்டுக் காலமாக இப்படி நாம் கணக்குக் கேட்பதுதான். காரணம், எந்த அளவிற்குச் சரியாக நிர்வகிக்க முடியுமோ அப்படி நிர்வகித்திருக்கிறோம். ஒரு லட்சம் டன் இரண்டு லட்சம் டன் என்று சொல்வது நியாயமல்ல. அப்படி உள்ளபடியே என்னுடைய கணக்குப்படி 19,382 டன் அரிசி என்ற அளவிலேதான் தஞ்சை மாவட்டத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. அந்த ஒரு வாரத்திற்குள்ளேயே வெளி மாவட்டங்களுக்கு சேலம் மாவட்டத்திற்கு எவ்வளவு போயிருக்கிறது, கோவை மாவட்டத்திற்கு எவ்வளவு போயிருக்கிறது என்ற நிலைமைகளையெல்லாம் நாங்கள் குறித்து கணக்கு வைத்திருக்கிறோம். ஆகையினாலே வியாபாரிகள் வைத்திருந்து முடக்கம் செய்தது மாநிலம் பூராவும் 84 ஆயிரம் டன் என்று சொன்னேன். ஒரு ஆண்டிற்கு எவ்வளவு வேண்டியிருக்கும்? சாதாரணமாக தினம் வாங்கித் தின்பவர்கள் 25 சதவீதம் பேர்கள் இருப்பார்கள், மற்றவர்கள் கொஞ்சம் 4, 5 மாதங்களுக்குத்

தேவைப்பட்டதை வாங்கி வைத்துக்கொள்வார்கள். கிராம விவசாயிகளிடம் இருப்பு இருக்கிறது. நாங்கள் வைத்த விலையை மீறி அங்கே விவசாயிகளிடம் வாங்கியிருக்கிறார்கள். திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னது போல விவசாயிகளுக்குத் தெரியும். 6 மாதத்திற்கு உள்ள நெல்லில் 3 மாதத்திற்கு வேண்டியதை வைத்துக்கொண்டு மிச்சம் உள்ளதை விற்றிருக்கிறார்கள். உர விலை ஏறிப்போய்விட்டது. அதற்கும் இந்த விலையேற்றத்திற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறார்கள். உர விலை முன்னே ஏறவில்லையே என்கிறார்கள். இப்போதுதானே 108 ரூபாய் விற்கிறது என்கிறார்கள். எப்படிச் சொல்ல முடியும்? நல்ல விவசாயிகள் குறுவைக்கு உரம் வாங்க, 10 மூட்டை வாங்க பணம் வைத்திருப்பான். 500 ரூபாய் இருக்கும். காரணம் 50 ரூபாய் மூட்டை என்று வைத்திருப்பான். இப்போது திடீரென்று விலை 10 மூட்டைக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகிவிட்டது. எதை விற்று உரம் வாங்குவான்? 48 ரூபாய்க்குத் தானே உரம் வாங்கி நட்டாய், 60 ரூபாய்க்குக் கொடுக்க வேண்டுமென்றால், கொடுப்பானா? எதை விற்று உரம் வாங்குவான்? என்ன செய்வான் என்று பார்க்க வேண்டும். உரம் விலை ஏறிவிட்டது. விவசாயி என்ன செய்வான்? ஆண்டுதோறும் வருமானம் உண்டா அவனுக்கு? தை பிறந்தால் வழி பிறக்கும் அவனுக்கு. பாக்கி நாள் அவன் கடன்காரன். அந்த நேரத்தில்தான் எல்லா வியாபாரிகளும் எல்லா நிலைமைகளையும் உண்டாக்குவார்கள். விவசாயியிடம் இருக்கிற பணத்தில் 10 மூட்டை உரத்திற்கு பதில் 8 மூட்டைதான் வாங்க முடியும் என்றால், அவன் குறைந்த விலைக்கு நெல்லை விற்கச் சம்மதிப்பானா? வியாபார நோக்கம் விவசாயிக்கு வந்து விட்டது. அதனால் விவசாயிகளைப் பதுக்கல்காரர்கள் என்று நான் சொல்லவில்லை. சாதாரண விவசாயிகளும் நல்ல விலைக்கு

(பிற்பகல் 6-30)

விற்றிருக்கிறார்கள். 70 ரூபாய் விலை அந்த நேரத்தில் இல்லை. ஏதோ விலை ஏறிவிட்டது. அந்த ஒரு வாரத்திற்குள்ளே தஞ்சை மாவட்டத்தில் ரூ. 70, ரூ. 75-க்கு மேல் விலை ஏறவில்லை. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த எம். எல். சி. அவர்கள் சொன்னதுபோல், எல்லாம் கேரளாவுக்குப் போகவில்லை. கடலை வியாபாரிகள் மாநாட்டில் பேசும்போது சொன்னார்கள். நான் வியாபாரியாக இருந்தால், அப்போது கண்டித்திருப்பேன். அவர் அங்கேயிருந்த வியாபாரிகளைக் கண்டிக்கவில்லை. அந்த வியாபாரிகள்தான் நெல்லை வாங்கிக்கொண்டு போனவர்கள். அவர்களை வைத்துக்கொண்டு, தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல்லை வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள், எல்லாம் கேரளாவிற்குப் போய்விட்டது என்று பேசியிருக்கிறார்கள். உள்ளபடியே, அவர்கள் எங்களைச் சாடவில்லை வியாபாரிகளைத்தான் சாடியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்குக் கோபம் வந்தால், அதில் காரணம் இருக்கிறது. அவர்





களைப் பொறுத்தவரையில், அவர்கள் படுகின்ற கஷ்டங்கள் நமக்குத் தெரியாமல் இல்லை. அவர்களுக்கு ஏன் 40 ரூபாய் என்று நெல் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்? 57 கிலோ 40 ரூபாய், 100 கிலோ 70 ரூபாய் என்று விலை நிர்ணயித்துக் கொடுத்திருக்கிறோம். 40 ரூபாயிலிருந்து 70 ரூபாயாக்கிக் கொடுத்திருக்கிறோம். 70 ரூபாய்க்குக் குறைந்து நெல் விற்காத அளவுக்கு வசதி செய்து கொடுத்திருக்கிறோம். உற்பத்திக் காலத்தில் எந்தப் பொருளாக இருந்தாலும், அது வெண்டைக்காயாக இருந்தாலும் சரி, கத்திரிக்காயாக இருந்தாலும் சரி, கேழ்வரகாக இருந்தாலும் சரி, விவசாயி உற்பத்தி பண்ணி விற்கக் கொண்டு வரும்போது, வியாபாரிகள் அங்கே கொள்ளை அடிப்பதற்காக நிற்பார்கள். உற்பத்தி பண்ணி விற்கக் கொண்டுவரும்போது, விலை குறைந்துவிடும். கத்தரிக்காய் அதிகமாக உள்ள சமயத்தில் கூடைக்கு என்று விலை வைப்பார்கள், மற்ற சமயத்தில் விலை அதிகமாகும். எல்லாப் பொருட்களின் விலையும் அப்படித்தான். குறுவைச் சாகுபடி அதிகமாக இருந்தால், இப்போது எனக்கு வேண்டாம், சம்பாவில் வாங்கிக்கொள்கிறேன் என்று அப்போது கொள்முதல் செய்யமாட்டார்கள். அப்போது விலை 40 ரூபாய் அல்ல. நான் பந்தயம் கட்டிச் சொல்ல முடியும். 6 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை விவசாயிகளுக்குத் தெரியும். இந்த சர்க்கார் வந்த பிறகு, நெல் விலையை, 10 ரூபாய், 5 ரூபாய் என்ற அளவுக்கு பல முறை உயர்த்திக் கொடுத்திருக்கிறது. கடைசியில் 40 ரூபாய், 70 ரூபாய் என்ற விகிதத்தில் நெல் விலையை நாம் நிர்ணயித்தோம். குறைந்த விலையில் நெல்லைக் கொண்டுபோய் வியாபாரியின் மண்டியில் போடாமல் காப்பாற்றுவதற்காகத்தான் அப்படி விலையை நிர்ணயித்தோம்.

விலை ஏறுவதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், முழு அதிகாரமும் என்னிடம் இருக்க வேண்டும். அது தற்போது இல்லை. நானோ, உணவுச் செயலாளரோ ஒரு உத்தரவை இங்கேயிருந்து திடீரென்று போடுகிறோம். அங்கே செக் போஸ்டில் உள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு, செக் போஸ்டில் இருக்கிறவர்களுக்கு அரிசியோ சோளமோ, மற்ற உணவு தானியமோ, மண்ணெண்ணெயோ மற்ற பொருட்களோ கடத்தப்பட்டால், தடுத்து நிறுத்துங்கள் என்று. நாங்கள் போட்டு விடுகிறோம் உத்தரவு. திடீரென்று பஞ்சாபில் உள்ளவர்கள், மகாராஷ்டிரத்தில் உள்ளவர்கள் வந்து, இங்கேயிருந்து 10 லாரியில் சோளம், கேழ்வரகு போன்றவற்றை ஏற்றிக்கொண்டு போகிறார்கள். செக் போஸ்டில் நம் அதிகாரிகள் நிறுத்தினால், உனக்கு அதிகாரம் இல்லை, மத்திய சர்க்கார் அந்தக் கட்டுப்பாட்டை எடுத்துவிட்டார்கள் என்று கொண்டுபோய் விடுகிறார்கள். நாம் கடலை கொண்டு போகிறவர்கள் 25 சதவிகிதம் கொடுத்துவிட்டுப் போக வேண்டுமென்று உத்தரவு போட்டோம். இது வரை அதைக் கொடுக்கவேயில்லை. கொண்டுபோகக் கூடாது என்று உத்தரவு போடுவதற்கு நமக்கு அதிகாரம் இல்லை. எங்களுக்கு அந்தச் சக்தியில்லை. ஆகவே, எங்கள் பொறுப்பு,

விவசாயிகள் கஷ்டப்படாமல் அவர்கள் உற்பத்தியைப் பெருக்க உதவி செய்வது
தான். உயர்ந்த ரக விதையைப் போட்டு நிறைய உற்பத்தி செய்யுங்கள். உங்களை
நாங்கள் காப்பாற்றுகிறோம், நீங்கள் உற்பத்தி பண்ணும் நெல்லுக்கு விலை குறை
யாமல் பார்த்துக்கொள்கிற உத்தரவாதம் தருகிறோம் என்று சொல்லுகிறோம்.
விலையை விவசாயிகளுக்கு ஏற்றிக்கொடுப்பதற்கும், அதிகமாகப் போய்விட்டால்
விலையைக் குறைப்பதற்கும் உள்ள அதிகாரம் என் கையில் 6—3—1974 வரையில்
இருந்தது. அதற்குப் பின் அந்த அதிகாரம் என் கையில் இல்லை. என் கையில்
இருந்தது அதற்குப்பின் பிடுங்கப்பட்டு விட்டது. ஆகவே விலை தற்போது ஏறி
விட்டது, எல்லாம் கேரளாவுக்குப் போய் விட்டது என்று சொல்வது சரியல்ல.
திர விசாரித்து விட்டுப் பேசுங்கள். பொதுப் பணியில் இருக்கின்ற காரணத்
தால் யார் தவறு செய்தாலும் கண்டிக்கலாம். நாளைக்கு நம்முடைய திரு.
ஆறுமுகசாமி அவர்கள்—அவர் வேண்டாம்—நம்முடைய திரு. சுவாமிநாதன்
அவர்கள் அமைச்சராக வருகிறார் என்றால், நிதி அமைச்சராக வருகிறார் என்
றால், அவருக்கு அதிகாரம் இருக்க வேண்டாமா? (என் திரு. ஆறுமுகசாமி
வரக்கூடாதா என்ற குரல்கள்) . . அவர் சொந்தக்காரர் என்பதற்காக
திரு. ஆறுமுகசாமியின் பெயரைச் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. ஆறுமுகசாமி அமைச்சராக வரக்
கூடாதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான், வரவேண்டுமென்று
சொல்லக்கூடாது. அவர் என் சொந்தக்காரர். அவர் டி. எஸ். ஓ போடுகிற
கேஸ் ஜாதி அடிப்படையில் பார்த்துப் போடுகிறார் என்று சொன்னார். . .
எல்லோரும் அமைச்சர்களாக வரலாம். அமைச்சர்களாக இருக்கிறவர்கள்
மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். இருக்கிற அதிகாரத்தை நான்
துஷ்பிரயோகம் செய்திருக்கிறேனு, கட்டுப்பாட்டை மீறி ஏதாவது செய்திருந்
தால் என் மீது குற்றம் சாட்டுங்கள், ஏற்றுக்கொள்கிறேன். என்னிடத்தில்
இருந்த அதிகாரம் பிடுங்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இருந்த
கட்டுப்பாட்டை எடுத்த காரணத்தாலே விலையேறிவிட்டது என்கிறார்கள்.
போன வருஷம் கட்டுப்பாட்டை தஞ்சை மாவட்டத்தில் எடுத்தோம். தற்
போது 4 மாதத்திற்கு முன்பு எடுத்திருந்தால், இன்னும் நிலைமை பயங்கரமாகப்
போயிருக்கும். வெளி மாநிலங்களில் பற்றாக்குறை இருக்கிறது. அடிக்கடி பத்
பத்திரிகையிலே செய்தி போட்டார்கள். பத்திரிகை நிருபர்கள் கேட்டார்கள்.
அரிசி மண்டலத்தை ஏற்படுத்தப்போகிறார்கள் என்று டில்லியில் சொல்லுகிறார்
களே என்று கேட்டார்கள். மத்திய உணவுத் துறை அமைச்சர் அதுபற்றி
யோசித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள் என்பதைப்பற்றிக் கேட்
டார்கள். இது வியாபாரிகள் காதில் விழுந்தால் என்ன செய்வார்கள்? விஷயம்
தெரிந்த வியாபாரிகள் நல்ல விலை கிடைக்கும் என்று தானே நினைப்பார்கள்.





தஞ்சை மாவட்டத்தில் கட்டுப்பாட்டை நீக்கிய காரணத்தால் 3, 4 நாட்கள் கஷ்டமாக இருந்தது. அவர்களுக்கு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து வருகிறோம். உழைக்கின்ற மக்களுக்கு எந்த அளவில் உதவி செய்ய முடியுமோ அந்த அளவில் நிச்சயமாகச் செய்துகொண்டுதான் வந்தோம் என்றாலும், எங்களை அறியாமல் நடந்து விட்டது. நாங்கள் ஏமாந்துவிடவில்லை. காலையில் ஒருவர் சட்டசபையில் பேசும்போது இந்த வியாபாரிகளுக்கு இப்படி ஒரு சட்டம் போட்டிருக்கிறது தவறு என்று சொன்னார். அது என்னவென்றால், 75 டன் தான் நெல் வைத்துக்கொள்ளலாம், 50 டன்தான் அரிசி வைத்துக்கொள்ளலாம் என்று அரசு உத்தரவு போட்டது தான் விலை யேற்றத்துக்குக் காரணம் என்றார். சென்ற ஆண்டு 31 பேர் மீது 'மீசா' சட்டப்படி வழக்குப் போட்டிருக்கிறோம். திரு. ஆறுமுகசாமி அவர்களுக்கு இது தெரியும். பாதுகாப்புச் சட்டப்படி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு முன்னால் தமிழ் நாட்டிலே எந்த முதலமைச்சர் காலத்தில் வியாபாரிகள் சிறையில் அடைக்கப்பட்டார்கள் என்று சொல்ல முடியுமா? முற்போக்கு வாதிகளின் கொள்கைப்படி, இந்த நாட்டிலே கைது செய்யப்படக் கூடியவர்கள் யார்? சில பேர் கோஷங்கள் போட்டார்கள், யாரைக் கைது செய்ய வேண்டும்? மக்களை ஏமாற்றுகிறவர்களை, கள்ளமார்க்கெட்காரனைக் கைது செய்ய வேண்டும். இந்தியாவுக்கே வழிகாட்டுகின்ற முறையில் தமிழகத்தில் உள்ள தி.மு.க. சர்க்கார் சென்ற ஆண்டு 31 வியாபாரிகள் மீது வழக்குப் போட்டு சிறைக்குள்ளே போட்டிருக்கிறது. சில பேர் ஓராண்டு காலமாக சிறையில் இருக்கிறார்கள். இந்த ஆண்டு 17 பேரைப் பிடித்துப் போட்டிருக்கிறோம். 'மீசா' சட்டப்படியும் மற்ற சட்டங்களின் அடிப்படையிலும், ஆயிரக்கணக்கானவர் மீது வழக்குகளைப் போட்டிருக்கிறோம். அதற்கான ஒரு அறிக்கையையும் கொடுத்திருக்கிறேன். 6 இடங்களில் போலீஸ் ஸ்பெஷல் கம்பெனிகளை வைத்திருக்கிறோம். மாநில போலீஸ், விசேஷப் போலீஸ், ஆயுதப் போலீஸ் எல்லாம் வைத்திருக்கிறோம். 2, 3 டிப்டி சூப்பிரண்டுகள், மற்ற போலீஸ் அதிகாரிகள், அவர்களுக்கு வேண்டிய வாகனங்கள் எல்லாம் கொடுத்திருக்கிறோம். எல்லைப் பகுதியில் கடத்தல் நடக்காதவாறு தடுத்திருக்கிறோம். யார் யார் குற்றம் செய்திருக்கிறார்கள் என்ற லிஸ்ட் எல்லாம் இருக்கிறது. நாங்கள் நடைமுறையில் எடுத்த கொள்கை எவருக்கும் சார்புடையது அல்ல. 90 சதவிகித கஷ்டப்படுகின்ற மக்களை நினைவில் வைத்துத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கையை எடுத்திருக்கிறார்கள். அந்தக் கொள்கையில் நாங்கள் எந்த விதத்திலும் மாறிவிடவில்லை என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-40)

நேற்று, நம்முடைய உணவு அமைச்சரவர்கள்தான் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளபடியே நான் தான் சொல்லுகிறேன். 'உணவு அமைச்சர் தான் பதில் சொல்ல வேண்டும்' என்று சொல்லி முடித்தார்கள். 'மாநில அமைச்சர்' என்று சொல்லவில்லை. நல்ல அரசியல் தெரிந்த காரணத்தால், அப்படிச் சொல்லவில்லை. இரண்டு உணவு அமைச்சர்கள் இருக்கிறோம். இப்போது மத்தியில் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இருக்கிறார்கள். இங்கே நான் இருக்கிறேன். ஆகையால் இரண்டு பேரையும் கேளுங்கள். இரண்டு பேரையும் கூட்டி வைத்து, விசாரிக்க வேண்டியது இந்த நாட்டு மக்களுடைய கடமை என்பதை யாரும் மறக்கக் கூடாது. எந்த ஒரு சட்டமும் எங்களால் போட முடியாது. இப்போதுதான் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். தேர்தல் சம்பந்தமாகக் கூட இந்த மாநிலத்தைக் கேட்காமல் முடிவு செய்ய மாட்டார்கள் என்று. இப்போது அவர்களே முடிவு செய்திருக்கிறார்கள். அவ்வளவு அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது. அத்தனை அதிகாரங்களையும் அவர்கள் பிடுங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கேயே கிடைக்கின்ற 'ரா மெடீரியல்ஸ்'-ஐக் கொண்டு, இங்கே உற்பத்தி செய்யப் படுகின்ற சிமெண்ட்டை விநியோகிக்கின்ற அதிகாரம் நமது தொழில் அமைச்சரவர்களுக்குக் கிடையாது. அதேபோன்றுதான் சர்க்கரை. நமக்கு 25,000 டன் வேண்டுமென்று பல முறை சொல்லியிருக்கிறோம். 10,800 டன் தான் கொடுத்தார்கள். இப்போது அதையும் குறைத்துவிட்டார்கள். 800 டன் மேலும் குறைந்துவிட்டது. நமக்கு ஒரு அதிகாரம்கூட கிடையாது. எனவே இந்த நிலைமைகளுக்கு யார் யார் காரணம் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். உணவு அமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னால் இத்தனை வேண்டுகோள்களையும் விட்டிருக்கிறேன். டெல்லிக்குப் போய் அவர்களிடமும் நிலைமைகளைச் சொல்லியிருக்கிறேன். எந்த உணவு அமைச்சர் இதற்குப் பொறுப்பு? இது பற்றி திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைக் கேட்கக்கூடாதா? நமக்கு மாநில சுயாட்சி இருந்தால், இப்படிப் பட்ட கஷ்டம் வந்திருக்குமா? இதே நிலைமைகளை வைத்து, சிறப்பான முறையில் கடந்த ஆண்டு ஆட்சி நடத்தவில்லையா? இதையெல்லாம் தயவு செய்து சிந்திக்க வேண்டும். எனக்காகப் பேசவில்லை. இந்த நாட்டு மக்களுக்காகச் சொல்கிறேன். இந்த நாட்டு சுய மரியாதைக்காகச் சொல்கிறேன். கீழ் மட்டத்திலிருந்து மேலே வரை எவ்வளவு பெருமை கிடைத்தாலும், சுய மரியாதையோடு வாழ வேண்டும். இந்தச் செயலற்ற நிலைமை எனக்கு, எங்களுக்கு, இந்த ஆட்சியாளர்களுக்குத்தான் என்று நினைக்கக்கூடாது. மேற்கொண்டு 10 லட்சம் டன் உற்பத்தி பண்ணினாலும், சரியான முறையில் பங்கீடு பண்ண முடியாது என்று சொல்லுகிறார்கள். ஒரு





இடத்தில் கட்டுப்பாட்டை எடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கொண்டு வருகிறார்கள். பத்து லட்சம் டன் மேற்கொண்டு உற்பத்தி செய்தாலும், சரியான பங்கீடு செய்ய விட மாட்டார்களாம். இதை ஆளுங் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் சொல்கிறார். பத்து லட்சம் டன் அதிகமாக உற்பத்தி பண்ணினாலும், சரியான முறையில் விநியோகம் செய்ய விட மாட்டோம் என்று சொல்லுகிறார். ஏழை மக்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய சட்டம் ,உங்கள் கையில் இருந்தால் அல்லவா, நீங்கள் ஏதாவது செய்ய முடியும்; அதைப் பிடுங்கி விட்டோம் என்று . . . '

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்த அவையிலே பேசாத ஒரு பேச்சை வைத்துக்கொண்டு அமைச்சரவர்கள் மேலே மேலே பேசுகிறார்கள். எங்களுக்கு என்ன பேசப்பட்டது என்று தெரியாமல் இருக்கும்போது, அமைச்சரவர்கள் சொல்லுவதை மறுக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாத ஒரு சங்கடத்தை உண்டாக்கிவிட்டார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மத்திய ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவ்வாறு சொன்னார்கள்.

அடுத்து, கொள்முதல் விலையைப்பற்றிச் சொன்னார்கள். நாம் இப்போது ரூ. 1,40-க்குப் போடுகிறோம். சென்னை, கோவை மற்றும் 'பெல்ட் ஏரியா'-வில் போடுகிறோம். அந்த அளவுக்கு 70,000 டன் வேண்டுமென்று, அதை வாங்கியது மட்டுமல்லாமல், இந்த முறை முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்காக மேலும் 50,000 டன் கொள்முதல் செய்திருக்கிறோம். மொத்தமாகப் பார்ப்போமானால், கிட்டத்தட்ட 2 லட்சம் டன்கள் இந்த ஆண்டு கொள்முதல் செய்திருக்கிறோம். அதிலே 50 ஆயிரம் டன் அதிகமாகக் கொள்முதல் செய்திருக்கிற காரணத்தாலே, இன்றைக்கு ஓரளவுக்கு மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தை நிவர்த்தி செய்ய முடிந்திருக்கிறது. திரு. சுவாமிநாதன் அவர்கள்கூட, 'ஏன் டெல்லிக்குப் போனார்கள்; எதற்காக அங்கே கேட்க வேண்டும்?' என்று கேட்டார்கள். நானும், திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் உணவு அமைச்சர்களாக இருக்கிறோம். ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளுவது அல்லது முன்னெச்சரிக்கையாகக் கேட்பது என்பதைக் கெடுதல் என்று சொல்ல முடியாது. ஒரு மாதம் பிந்தி குறுவை சாகுபடி வருகிறது. போன முறை ஜூன் மாதம் 7-ம் தேதி திறந்தோம். ஆனால் இந்த ஆண்டு ஜூலை 20-ம் தேதிக்குப் பிறகு திறந்திருக்கிறோம். சென்ற ஆண்டைவிட 50 ஆயிரம் டன் கொள்முதல் அதிகமாகச் செய்திருக்கிறோம். அந்தப் புள்ளி விவரத்தையும் தர விரும்புகிறேன். 1970-71-ம் ஆண்டு 1,51,767 டன்கள்,

1971-72-ம் ஆண்டு 1,43,553 டன்கள்; 1972-73-ம் ஆண்டு 1,33,543 டன்கள்; 1973-74-ம் ஆண்டு 2,77,000 டன்கள் கொள்முதல் செய்திருக்கிறோம். முன்னெச்சரிக்கையோடு அந்த அளவுக்கு ஜனங்களிடம் போய் வாங்க வேண்டும். நாம் போய் 40 ரூபாய்க்குக் கொடு என்று கேட்கிறோம். அடுத்தபடியாக வரும் வியாபாரி 50 ரூபாய்க்குக் கேட்கிறார். அதைத் தடுக்க சட்டம் வேண்டுமா, வேண்டாமா? நாம் போய் கம்பு இன்ன விலைக்குக் கொடு என்று சொல்லுகிறோம். அதை நாம் வாங்குகின்ற நிலைமைகள் ஏற்பட வேண்டுமா, வேண்டாமா? டி.எஸ்.ஓ. அவர்கள் கேழ்வரகு இந்த விலைக்கு விற்க வேண்டுமென்று சொல்லுகிறார். ஆனால் குஜராத்திலிருந்து வரும் வியாபாரி 10 ரூபாய் கூடுதலாக் அவர்களுக்குக் கொடுக்கிறார். அப்போது நாங்கள் எப்படிக் கொள்முதல் செய்ய முடியும்? அந்த அதிகாரம் எங்களுக்கு வேண்டுமா, வேண்டாமா? அவர்களைத் தடுக்க அதிகாரம் இல்லாமல் எப்படிக் கொள்முதல் செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நிலைமையிலும், லெவியை அதிகமாகப் போட்டு, தஞ்சை மாவட்டத்தில் 25 சதவிகிதம் தான் என்றாலும், மேற்கொண்டு 25 சதவிகிதம் சேர்த்து கிட்டத்தட்ட நான் கொடுத்த கணக்குப்படி 2 லட்சம் டன்களுக்கு மேலாகக் கொள்முதல் செய்திருக்கிறோம். அந்தத் துறையில் முன்னெச்சரிக்கையில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யவில்லை என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திடீரென்று சில சம்பவங்கள் நடந்தன. சில கட்சிகள் தங்களது மாநிலக் கௌன்சில், ஜில்லாக் கௌன்சில்களைக் கூட்டி, தீர்மானங்கள் போட்டு, லாரிகளை நிறுத்தச் செய்து, கடைகளில் புகுந்து தகராறு பண்ணுவது போன்றவற்றைச் செய்தார்கள். என்ன செய்தார்கள் திருவொற்றியூரில்? அரிசி கொடுக்கிறார்கள் என்று மக்களை அங்கே நிற்கச் சொல்லுவது; இவர்கள் போய் கடையை உடைப்பது; தங்களுக்கு வேண்டியதை எடுத்துச் செல்லுவது—இப்படி பல இடங்களில் செய்திருக்கிறார்கள். லாரிப் போக்குவரத்தைத் தடுத்து நிறுத்தி, கடைகளைச் சில இடங்களில் தாக்கி, மக்களை பீதிக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். உபரியாக இருந்த இடங்களிலிருந்து பற்றாக்குறை உள்ள இடங்களுக்கு எடுத்து வர முடியாதபடி செய்தார்கள். (குறுக்கீடு). உங்களுக்குத் தெரிந்த கட்சிதான். நமக்கு ரொம்ப வேண்டிய கட்சிதான். பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். காங்கிரஸ்காரர்கள்கூட அகிம்சா முறையில் செய்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னார்கள், 'எதனாலே எங்களை ஒழித்தீர்களோ, அதனாலேயே நாங்கள் உங்களை ஒழிப்போம்' என்று. நாங்கள் அமைதியான முறையில்தான் பிரச்சினைகளை அணுகிறோம். இல்லாததை உற்பத்தி பண்ணி, எரிகிற கொள்ளியில் நெருப்பு எடுக்கும் முறையில் நாங்கள் பண்ணவில்லை. "சரியான சான்ஸ்தான், அகப்பட்டுக்கொண்டு விட்டார்கள்





(பிற்பகல் 6-50)

ஒன்றும் செய்யவும் முடியவில்லை. நாற்காலியை விட்டு இறக்கிவிடுவோம்" என்று சொல்லுகிறார்கள். ஆரம்பத்தில் எந்த அரிசிப் பிரச்சினையை வைத்து அவர்களை இறக்கினார்களோ, அந்த பிரச்சினையை வைத்தே இறக்குகின்றோம் என்கிறார்கள். அதிலெல்லாம் எனக்கு ஒன்றும் நம்பிக்கையில்லை. ஒரு கட்சி இன்னொரு கட்சியைப்பற்றிப் பேசி, அரசியலை வைத்து ஒரு கட்சியை இறக்குமானால், தமிழ்நாட்டு மக்கள் நிலை என்னவாகும்? தயவுசெய்து மக்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். யார் வேண்டுமானாலும் ஆட்சியில் இருக்கலாம். யாருமே ரொம்ப நாளைக்கு, இவ்வளவு ஆண்டுகளுக்கு என்று இருக்க முடியாது. இறக்குகின்றது என்பது ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் மக்களைப் பாருங்கள். மக்கள் கஷ்டப்படுகின்ற நிலைமைகளைப் பாருங்கள். இதற்கு யார் காரணம் என்பதை நீங்கள் அறிந்து தீர்ப்புக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தாலும், வேறு ஒரு கட்சி ஆட்சியில் இருந்தாலும், இந்தப் பிரச்சினையில் நாம் ஒரே கட்சி என்ற நிலையில் இருக்க வேண்டும். திரு. கணபதி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். பிரச்சினை தமிழ் மக்கள் சம்பந்தப்பட்டது என்ற முறையிலே பார்க்க வேண்டும். நமக்கு எல்லா வளமும் இருந்தும், நாம் பெறவேண்டிய நிலை இருந்தும், அரிசிக்கும் சிமெண்டுக்கும் நமது மக்கள் கஷ்டப்படுகின்ற நிலைமைதான் இருக்கின்றது. இந்த நிலைமைகளை யார் உண்டு பண்ணுகின்றார்கள் என்பதை, தயவுசெய்து, இந்த பிரச்சினையிலே மட்டும், மற்றவைகளை மறந்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடைசியாக இரண்டு வார்த்தை சொல்லிவிடுகிறேன். குற்றம் குறைகள் கூறுவதாக இருந்தால் கேளுங்கள். நீங்கள் ஓரளவுக்காவது நன்றாகத் தெரிந்துகொண்டு சொல்லுங்கள். நாங்கள் தவறு செய்திருந்தால், திருத்திக் கொள்கின்றோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசோ ஊழியர்களோ எந்தத் தவறான காரியத்தையும் செய்திருப்பார்கள் என்று என்னைப் போன்றவர்கள் நிச்சயமாகக் கருதவில்லை என்பதை நான் தீர்மானமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமானால்

We are sure about the honesty of the administration by the Hon. the Food Minister and, therefore, that was not my intention at all. I am very sorry that he has taken it in that light. But what I actually meant was that out of guilty conscience, it was said that that gentleman had given something to some officer in the Headquarters. I have been phoning up people frantically

but I could not get at that gentleman who said that he had given some amount to the officer concerned. I never meant the Minister concerned. That was not my intention at all. I want to clarify the matter so that there may not be misunderstanding about my statement.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அடுத்து இன்னொன்றும் சொன்னார்கள். டி.எஸ்.ஓ. மேலே ஒரு குற்றம் சொன்னார்கள் ; சாதிப் பிரச்சினை வைத்து குற்றம் சாட்டியிருக்கிறார்கள். டி.எஸ்.ஓ; சரியில்லை, சில சாதிக்காரர்களை மாத்திரம் பிடிக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள்.

THIRU G. SWAMINATHAN : Because I have told the Hon. Minister the name of the person who told me,it is not advisible to disclose it. தலைவரவர்களே, அமைச்சர் அவர்களிடத்திலே யார் என்னிடத்திலே சொன்னார்கள், யாருடைய சார்பாகச் சொன்னார்கள் என்ற கருத்தைத்தான் சொன்னேன். அந்த விவரங்களைச் சொல்வது இருவருக்கும் நல்லதல்ல.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, சாதியைச் சொல்வதை விட்டு விஷயத்தைப்பற்றிச் சொல்வது நல்லது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, நான் உறுப்பினர்கள் சொல்லியதை எல்லாம் கேட்டு, எந்த அளவுக்கு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முடியுமோ அவ்வளவும் சொல்லியிருக்கின்றேன்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்களின் நீண்ட விளக்கத்திற்கு நன்றி. ஒரே ஒரு விஷயம் மட்டும் அவர் விளக்கிக் கூறியிருந்தால், மிக நன்றாக இருந்திருக்கும். போனதெல்லாம் போகட்டும். மக்களுக்குத் தேவையான, அத்தியாவசியமான பொருள்களின் விலைகள் எல்லாம் ஏறிக் கொண்டிருக்கின்றன. அதன் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறதா என்றும், அதை எப்படிக் குறைப்பது என்பதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்றும் சொல்லும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளர்களிடம் சொல்லி, நாங்கள் வைத்திருந்த அரிசியையெல்லாம், எங்கெங்கு தேவைப்படுகின்றதோ அந்தப் பகுதிகளுக்கெல்லாம் அனுப்பி நியாய விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்திருக்கின்றோம். இப்படி எல்லா மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சேலம் பகுதியிலிருந்து ஒருவர் 'போன்' பண்ணினார். அங்கு கிட்டத்தட்ட 20 ரூபாய் குவிண்டாலுக்கு விலை குறைந்திருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார். நாங்கள் அடுத்து எடுத்திருக்கின்ற நடவடிக்கை, மாவட்ட ஆட்சித்



தலைவர்கள் மகாநாட்டுக்கு வந்திருந்தபோது இன்று இருக்கின்ற இருப்பிலேயிருந்து தேவைக்குத் தகுந்தவாறு விநியோகிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம். இந்தத் திட்டம் முழுவதையும் படிக்க வேண்டுமென்றால், படிக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, சுருக்கமாகச் சொன்னால் போதும். படிக்கவேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, விலைக் குறைவு ஏற்பட்டிருக்கின்றது. இடையிலே சிலர் விஷமமும் செய்கின்றார்கள். இன்னும் மேற்கொண்டு முயற்சிகள் எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கின்றோம். இந்த முயற்சிகள் நல்ல முறையிலே மக்களுக்குப் பயனளிக்க, உறுப்பினர்களும் அங்கங்கே பார்த்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, நியாய விலையில் கிடைக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நியாய விலைக் கடைகளிலே ஒரு கார்டுக்கு 3 படி அரிசி கொடுக்கின்றார்கள். 10 பேர்கள் இருந்தாலும் 3 படி, 2 பேர் இருந்தாலும் 3 படியாக இல்லாமல் குடும்பத்திலுள்ள நபர்கள் எண்ணிக்கைக்கேற்ப கொடுத்தால், அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். கொஞ்சம் கூடுதலாக அவர்களுக்குச் சேர்த்துக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்தால், உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, சில நேரங்களில் இருக்கின்ற அளவு அதிகப்பட்டது. வெளி மார்க்கெட்டிலே கிடைக்கின்ற அளவுக்குச் செய்திருக்கின்றார்கள். இன்னும் கோதுமை கொடுக்கின்ற பகுதிகளும் இருக்கின்றன. நமக்கு 30,000 டன் தேவை. அந்த 30,000 டன் அளவிலிருந்து 9 ஆயிரம் அளவிற்கு வந்து, பின்னர் 9 ஆயிரத்திலிருந்து, இப்போது 2 ஆயிரம் டன்னாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக டெல்லிக்கும் சென்று கேட்டேன். எல்லா மாநிலங்களின் உணவு அமைச்சர்கள் மகாநாட்டிலே நானும் கேட்டுக்கொண்டேன். எங்களுக்கு 9 ஆயிரம் டன் போதாது, ஒரு 15 ஆயிரம் டன்னாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். சர்க்கரை வியாதிக்காரர்கள் கோதுமை சாப்பிடுவதற்காக டாக்டர்கள் சர்டிபிகேட்டில் அவர்களுக்கு கோதுமையை டயட்டாக எழுதிக் கொடுக்கின்றார்கள். அவர்களுக்குக் கோதுமை கொடுக்க வேண்டும். ஆனால் அவர்களிடமிருந்து வந்த கடிதத்தில் 2 ஆயிரம் டன் கோதுமைதான் கிடைக்கும் என்று வந்திருக்கின்றது. அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று எழுதியிருக்கின்றோம்.

அடுத்து, கடலை எண்ணெய் குறித்துச் சொல்ல விரும்புகின்றேன். கடலை எண்ணெய்க்கு 25 சதம் லெவி போடுவதற்குச் கூட ஒப்புக்கொள்ளவில்லை. விவசாயிகளிடத்தில் நமது உணவுச் செயலாளர் அவர்கள் திறமையாகப் பேசி அவர்கள் கொடுக்கிற அளவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். தனியாக 25 சதம் கொடுப்பதற்கான நடைமுறையைக் கொண்டுவந்தோம். ஆனால் அவர்கள இந்தச் சட்டம் போடுவதற்கு இந்த மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று ஹைக்கோர்ட்டுக்குப் போனார்கள். எங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றன என்பதைக் குறித்து ஹைக்கோர்ட்டுக்குப் போய் வழக்கு போட்டார்கள். 25 சதம் லெவி போட்டதால் கடலை எண்ணெய் விலை ரூ. 8½, ரூ. 9 என்று இருந்ததை, ரூ. 7 அளவுக்குக் குறைத்துக்கொண்டு வந்தோம்.

(பிற்பகல் 7-00)

MR. CHAIRMAN : Time is extended.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இந்த 25 சதவீதம் கடலை எண்ணெய்க்கு லெவி போட்டதனால், இன்றைக்கு கடலை எண்ணெய் விலையைக் குறைத்துக் காண்பித்திருக்கிறோம். ஆகவே இந்த அதிகாரத்தை சிறு தானியத்திற்கும் வைத்திருந்தால், சரியான முறையிலே குறைத்திருப்போம் என்று விளக்கம் சொல்லி முடிக்கின்றேன்.

### 5. 1974-75 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாடு மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும் @, 1973-74-ம் ஆண்டின் துணை நிதிநிலை அறிக்கையும் இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இம்மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 3 மணிக்கு கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-01)

---

@ அமைச்சரின் அச்சடிக்கப்பட்ட உரை இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.



### 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

69. Notification issued with G.O. Ms. No. 154, Labour and Employment, dated the 7th March 1974 in regard to exemption of the factory South India Viscose Limited, Sirumugai, Coimbatore district from section 5 (2) (a) (i) of the Tamil Nadu Industrial Establishments (National and Festival) Holidays Act, 1958. [Laid on the table of the House under section 12 (3) of the Tamil Nadu Industrial Establishments (National and Festival) Holidays Act, 1958 (Tamil Nadu Act XXXIII of 1958).]

70. Notification issued with Memorandum No.37807/AMI/73/4, Agriculture, dated the 6th September 1973 *relating to nomination* of members by Government to the Thanjavur Market Committee. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

71. Notification issued with G.O. Ms. No. 641, Rural Development and Local Administration, dated 16th March 1974 relating to declaration of Villupuram as Local Planning Area under section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

72. Notification issued with G.O. Ms. No. 644, Rural Development and Local Administration, dated the 16th March 1974 relating to declaration of Kovilpatti as Local Planning Area under section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

73. Notification issued with G.O. Ms. No. 1286, Rural Development and Local Administration, dated the 20th May 1974 in regard to extension of the period for arrangements for elections to be conducted by 6 months from the 1st June 1974. [Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

## B. Reports, Notifications and Other Papers

31. Notifications issued with G.O. Ms. No. 1528, Revenue, dated the 4th April 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift deed to be executed by the Trustees of "Willingdon" in favour of the Tamil Nadu Educational Trust, Madras and in respect of the gift deed to be executed by the Trustees of the "Willingdon" in favour of the "Willingdon Charitable" Trust, Madras.

32. Notification issued with G.O. Ms. No. 1616, Revenue, dated the 10th April 1974 in regard to an amendment to the Revenue Department Notification II-2 No. 276 of 1974, dated the 9th January 1974 published at page 26 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette, dated the 9th January, 1974.

*33. The Report of the Committee on Public Undertakings of the Tamil Nadu Legislative Assembly on the Tamil Nadu State Housing Board.

---

* Laid on the table of the House on 14th August 1974.





## இணைப்பு

(..78ம் பக்கத்தில் இனம் 5க்கான அடிக்குறிப்பைக் காண்க)

**தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்தும், 1973-74-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை குறித்தும், தமிழ்நாடு சட்ட மேலவையில் விவாதத்தைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு ஓ. பி. இராமன் அவர்கள் ஆற்றிய உரை.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

1. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும், 1973-74-ம் ஆண்டின் துணை நிதிநிலை அறிக்கையும் இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இம்மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென வேண்டுகிறேன்.

2. 1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின் படி, தமிழ்நாடு மின்சார வாரியக் கருத்துரைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம், இந்த நிதிநிலை அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியது. ஆண்டு நிதி நிலை அறிக்கையும், துணை நிதி நிலை அறிக்கையும் சட்டமன்றத்தினால் விவாதிக்கப்படலாம் என்றாலும், இவை வாக்கெடுப்புக்கு உட்பட்டவையல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்டமன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைகளின் பேரில் நடைபெற்ற விவாதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஒட்டி, மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பப்பட்டுள்ளது.

3. நாடு விடுதலையடைந்த பிறகு, அதுவும் குறிப்பாக கடந்த எழெட்டு ஆண்டுகளில், வேகமான மின் வளர்ச்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ளது. 1,224 மெகாவாட்டுகள் நிறுவனத்திறனுடன் கூடிய 17 நீர் மின் நிலையங்கள், மத்திய அரசின் நிறுவனமான நெய்வேலி அனல் மின் நிலையத்தின் 600 மெகாவாட்டுகளையும் சேர்த்து, 1,030 மெகாவாட்டுகள் நிறுவனத்திறனுடன் கூடிய 3 அனல் மின் நிலையங்கள் தமிழக மின் இணைப்பில் உள்ளன. சுமார் 2·75 இலட்சம் கிலோ மீட்டர்கள் நீளமுள்ள மின் அனுப்பு, பங்கீட்டு கம்பிகள் தமிழ்நாடு மின் அமைப்பில் உள்ளன. மேலும், தமிழ் நாட்டில் மொத்தம் உள்ள 62,487 கிராமங்கள், சிற்றூர்களில், 61,138 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் அதாவது 98 சதவிகிதத்திற்கு மின் வசதி அளிக்கப்பட்டுவிட்டது. 24,799 மொத்த அரிசனக் குடியிருப்புகளில், 23,800 அரிசனக் குடியிருப்புகளுக்கு அதாவது 96 சதவிகிதத்திற்கு மின் தொடர்பு அளிக்கப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டில் இதுவரை சுமார் 7 இலட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது இந்திய நாட்டு விசையேற்றங்களின் எண்ணிக்கையில், மூன்றில் ஒரு பங்காகும்.

4. தமிழகத்தின் இன்றைய மொத்த நிறுவனத்திறன் 2,254 மெகாவாட்டுகளாகும். 1973-74-ல் தமிழகத்தின் மின் உற்பத்தியும் வாங்கப்பட்ட மின் சக்தியும் சேர்ந்து 7,105 மில்லியன் யூனிட்டுகளாகும்,

மின் அனுப்புதல், மின் பங்கீட்டுக் கம்பித்தொடர்களின் நாட்டின் மொத்த நீளத்தில், தமிழ்நாட்டில் மட்டும் 20 சதவிகித அளவு உள்ளது. தமிழ் நாட்டில் 27 இலட்சம் மின் பயனீட்டாளர்களுக்கு (Consumers) மேல் மின்சாரம் வழங்கப்படுகிறது. நிறுவனத் திறனிலும், மின் தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கையிலும், மின் வசதி பெற்றக் கிராமங்களின் எண்ணிக்கையிலும், மின் கம்பித் தொடர்களின் நீளத்தி லும், இந்தியாவிலேயே நமது மாநிலம் முதல் இடத்தினைப் பெற்றுள்ளது.

5. ஆந்திரம், கேரளம், கருநாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் அடங்கிய தென்னகப் பகுதியில், நிறுவனத் திறன், உச்சத் தேவை, மின் உற்பத்தி, மின் சக்தியினை விற்பனை செய்தல், தனி நபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு, கம்பிகளின் நீளம், மின்தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை, மின் வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை ஆகிய எல்லாவற்றிலும் தமிழ்நாடு முதன்மையில் நிற்கிறது.

6. இவ்வளவு வளர்ச்சி இருந்தும், தமிழ்நாட்டில் கடுமையான மின் சாரப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. 1973-74-ஆம் ஆண்டிலும் இந்த நெருக்கடியான நிலைமையே இருந்து வந்துள்ளது.

7. முன்பே திட்டமிட்டபடி, நெய்வேலி அனல் மின் நிலையத்தில் இரண்டு 50 மெகாவாட் இயந்திரங்கள் எண்ணெயினால் எரிக்கப்படுகின்ற முறைக்கு மாற்றப்பட்டது. 1974-75-ம் ஆண்டில் நிலக்கரி மூலமாக வழக்க மாகக் கிடைக்கின்ற 1,700 மில்லியன் யூனிட்டுகளுடன், எண்ணெய் எரிப்பின் மூலம் கூடுதலாக 500 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம், தமிழக மின் அமைப்புக்குக் கிடைக்கும் என்று நெய்வேலி நிலக்கரி கழகத்தினர் முன்பே குறிப்பிட்டுள்ளனர்.

8. நாட்டின் பொருளாதார நலனைக்கருதி, கடந்த ஆண்டில் செய்தது போலவே, அண்டை மாநிலங்களிலிருந்து 1973-74-ம் ஆண்டிலும், அதற்குப் பிறகும், பண்டமாற்ற அடிப்படையில் குறைந்த அளவில் மின்சாரம் பெறப்பட்டது.

9. இவ்வாண்டு சூன், சூலை மாதங்களிலும் தென் மேற்கு பருவ மழை அணைக்கட்டுப் பகுதிகளில் குறைவாகவே இருந்தது. பருவக்காற்று பலவீனமடையவே, நீர்த் தேக்கங்களில் வந்துவிழும் நீரின் அளவு, கடந்த ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இதுநாள் வரை யில் குறைந்த அளவே உள்ளது. 1—8—1974-ல் நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு 685 மில்லியன் யூனிட்டுகள். 1—8—1973-ல் இந்த அளவு 1,465 மில்லியன் யூனிட்டுகள், 1—8—1972-ல் நீர்த் தேக்க அளவு 751 மில்லியன் யூனிட்டுகளுக்குச் சமம் ஆகும்.

10. குறைந்த நீர்த்தேக்கக் கொள்ளளவின் காரணமாக, அண்டை மாநிலங்களான கேரளமும், கருநாடகமும், நமக்கு உதவி செய்கின்ற நிலையில் இல்லை. அதனுடைய நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு குறை யவே, 12—6—1974-க்குப் பிறகு நமக்கு மின்சாரம் வழங்குதலை கேரளம் தொடர்ந்து செய்யமுடியவில்லை. இந்த நிலையில், 60 சதவிகித மின் வெட்டை 5—8—1974 வரை அரசு அமுல் செய்ய வேண்டி வந்தது. இந்த வெட்டு 40 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு, தற்சமயம் 30 சதவிகித மாகக் குறைக்கப்பட்டுள்ளது.



11. நாடு பூராவும் உள்ள மின்சார நிலையினைப் பார்க்கும்பொழுது, மற்ற மாநிலங்களிலும் நிலைமை நெருக்கடியாகத்தான் உள்ளது என்பது புலனாகிறது. மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மேலும் அதிகமான அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதின் அவசியத்தையும் போர்க்கால அடிப்படையில் மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய தின் அவசியத்தையும் இது தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது.

12. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் (அதாவது 1978-79-ல்) நம்முடைய உச்சத் தேவை 3,020 மெகாவாட்டுகளை எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தேவையைச் சமாளிக்க, தேவைப் படும் மின் உற்பத்தித் திறன் சுமார் 3,620 மெகாவாட்டுகளாக இருக்கும். மின் சாரம் குறித்த 5-வது திட்ட வரைவில், கீழ்க்கண்ட முறையில் கூடுதலாக 925 மெகாவாட்டுகள் கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது:—

| வரிசை எண். | திட்டம். | | நிறுவனத் திறன் (மெகா வாட்டுகள்.) | செயல் படத் தொடங்கும் ஆண்டு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| 1 | எண்ணூர் விரிவாக்கம் (1X110) | .. .. | 110 | 1975—76 |
| 2 | குந்தா நான்காவது நிலை (60+50) | .. | 110 | 1976—77 |
| 3 | சுருளியாறு (1X35) | .. .. .. | 35 | 1978—79 |
| 4 | கல்பாக்கம் (2X235) | .. .. .. | 235<br>235 | 1976—77<br>1978—79 |
| 5 | தூத்துக்குடி (2X200) | .. .. .. | 200 | 1978—79 |
| | மொத்தம் | .. | 925 | |

கூடுதல் நிறுவனத் திறன் 925 மெகாவாட்டுகளாக இருந்தாலும், பயனுக்குக் கிடைக்கக்கூடியது 724 மெகா வாட்டுகளாகத்தான் இருக்கும். 5-வது திட்ட இறுதியில், பற்றுக்குறை 1,465 மெகாவாட்டுகளாக இருக் கும். அதேபோல், மின் சக்தித் தேவை 1978-79-ல், 15,490 மில்லியன் யூனிட்டுகள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உருவாகி வரும் திட்டங்களை யும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், மொத்தம் பற்றுக்குறை, 1978-79-ல், 5,183 மில்லியன் யூனிட்டுகளாக இருக்கும்.

13. ஆகவே, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல், இரண் டாவது அணு மின் நிலையம் அமைத்தல், கல்பாக்கம் விரிவாக்கம் போன்ற கூடுதலான மின் திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்பட்டாலன்றி, அடுத்து வரும் பத்தாண்டுகளுக்கு, தமிழ்நாடு, மின்சாரப் பற்றுக்குறையினால் பாதிக்கப்பட்ட நிலையில்தான் இருக்கும். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று மத்திய அரசினை வலியுறுத்தி கடந்த ஆண்டு இந்த மாமன்றத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந் திருக்க மாட்டார்கள். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட

வேண்டியதின் அவசியத்தை நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் நானும் பலதடவை நேரடியாகவே வலியுறுத்தி வந்துள்ளோம். நேரடியாகவும், அதிகார பூர்வமாகவும் இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் இதுவரை எந்தவிதப் பயனும் அளிக்கவில்லை. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட்டதும், இரண்டாவது அனல் மின் நிலையம் அமைவதும், இந்த மாநிலத்தின் தேவைகளோடும், நலன்களோடும் பின்னிப் பிணையப் பட்டுள்ளதால், இது வரையிலும் ஒரு முடிவு எடுக்கப்படாமல் இருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும். தொடர்ந்து மின்சாரப் பற்றாக்குறை நம்மை அச்சுறுத்தும் வகையில் மிகவும் சிரமமான எதிர்காலத்தை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ள இந்த நெருக்கடியான நேரத்திலாவது, தமிழகம் உடனடியாகப் பயன்களைப் பெறும் வகையில் சாத்தியக்கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளதால், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தினை வெட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இனியாவது மத்திய அரசு மேற்கொள்ளும் என எதிர்பார்க்கிறோம்.

14. இந்தச் சந்தர்ப்பத்தில், புது டெல்லியில் அண்மையில் நடைபெற்ற இரண்டு முக்கியமான மாநாடுகளின் நடவடிக்கைகளை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன். மாநில மின் வாரியத் தலைவர்களின் 8-வது மாநாடும், மாநிலங்களின் மின்சாரத் துறை-பாசனத்துறை அமைச்சர்களின் 8-வது மாநாடும் புதுடெல்லியில் அண்மையில் நடைபெற்றன. அந்த மாநாடுகளிலே, மின்சாரத்துறையையும் மின்வாரியங்களையும் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளும், சிக்கல்களும் தீர்க்கமாக விவாதிக்கப்பட்டு, கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:—

(அ) மாநில மின்சார வாரியங்கள் அனைத்தும் இப்பொழுது இயங்கி வரும் அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தியை எவ்வளவு அதிகமாகப் பெருக்க முடியுமோ அந்த அளவுக்குப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) மின் திட்டங்களை உருவாக்கி முடிக்க, கால வரையறை அனல் மின் திட்டங்களுக்கு $3\frac{1}{2}$ ஆண்டுகளும், நீர் மின் திட்டங்களுக்கு 5 ஆண்டுகளுமாகும்.

(இ) படிப்படியாக, நிறைவேற்றப்படும் வேலைத் திட்ட அடிப்படையில், மின்சாரம் அனுப்புதலில் ஏற்படும் இழப்புகளைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

(ஈ) மின் கட்டண வீதங்களை மேலும் உயர்த்தி திருத்தியமைத்தல் மூலமும், வசூலாகாமல் பாக்கியுள்ள தொகைகளை வசூலிக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதின் மூலமும், தங்களுடைய உள் நிதி ஆதாரங்களை மின் வாரியங்கள் திரட்ட வேண்டும்.

(உ) இது வரை வாரியத்திற்குப் பொதுவாகக் கிடைத்து வந்த கடன்களுக்குப் பதிலாக, இனிமேல், குறிப்பிட்ட மின் திட்டங்களுக்கு (specific project) ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினிடமிருந்து கடன் கிடைக்கும்.

15. தமிழ் நாட்டில் மின் கழகம் (Power Corporation) ஒன்றினை அமைப்பது குறித்து ஆராய சிறப்பு அலுவலர் ஒருவரை அரசு நியமித்து,



அவருடைய அறிக்கை பெறப்பட்டு, அந்த அறிக்கையை அரசு பரிசீலித்து மின் கழகம் அமைவதற்கான அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன. இந்த மின் கழகம் அமைவதினால், மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல், விநியோகித்தல் சம்பந்தமான பிரச்சினைகளில் மின்சார வாரியம் தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்த முடியும்.

16. 1974-75-ம் ஆண்டிற்கான முக்கிய மின் திட்டங்களைச் சுருக்கமாக எடுத்துக்கூற விழைகிறேன்.

### மின் உற்பத்தித் திட்டங்கள்.

### தொடர்ந்து உருவாக்கப்பட்டு வரும் திட்டங்கள்.

(அ) எண்ணூரில் மூன்றாவது 110 மெகாவாட் பிரிவு சம்பந்தப்பட்ட பணிகள் நன்கு நிறைவேறி வருகின்றன. 1975-76-ல் இந்தப் பிரிவு செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) குந்தா நீர் மின் திட்டம் நான்காவது நிலைத் திட்டத்தின் கீழ், கனடா நாட்டிலிருந்து கருவிகள் நமக்கு வழங்கப்படுகின்றன. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டத்தில் சேர்க்கப்பட்ட இரண்டு பிரிவுகளும் 1976-77-ல் செயல்படத் தொடங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) பைக்காரா மின் நிலையத்திலும் மோயாறு மின் நிலையத்திலும் கூடுதலாக ஆண்டொன்றுக்கு 69 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி காண வழிவகை செய்யும் நடுவட்டம் நீர்த் திருப்புத் திட்டப் பணிகள் முடிவு பெறும் தருவாயில் உள்ளன. 1975-76-ல் இத்திட்டத்தின் பயன்கள் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய திட்டங்கள்: —

(அ) சுருளியாறு நீர் மின் திட்டத்திற்கான மின் உற்பத்திக் கருவிகள் வழங்க ஆஸ்திரியா நாட்டு நிறுவனம் ஒன்றுடன் பொருள்கள் வாங்குவதற்கான உறுதிக் கடிதம் அண்மையில் தரப்பட்டுள்ளது. அணை தோண்டுதல், குடியிருப்புகள் அமைத்தல் போன்ற தொடக்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்த நிலையம் 1978-79-ல் செயல்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் கீழ், சிறு சிறு வேலைகள் முன்பே தொடங்கப்பட்டுவிட்டன. 200 மெகாவாட் திறன் கொண்ட ஒரு பிரிவு 1978-79-ல் செயல்படத் தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) 400 மெகாவாட் மொத்த நிறுவனத்திறனுடன் கூடிய காடம்பாறை நீரேற்றுச் சேமிப்பு மின் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

(ஈ) ஜூன், ஜூலை 1974-ல், நெல்லித்துறை நீர் மின் திட்டத்திற்கும், சுருளியாறு நீர் மின் திட்டத்திற்கும் இந்திய அரசு அனுமதியினை வழங்கியது. இத் திட்டங்களுக்கான சிறு சிறு வேலைகள் முன்னே தொடங்

கப்பட்டு விட்டன. ஆருவது திட்ட கால ஆரம்பத்தில் இத் திட்டப்பணிகள் முடிவடைந்துவிடுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

(உ) பாண்டியாறு—புன்னப்புழா திட்டத்தைப் பொறுத்த வரையில் அனுமதி அளிக்கப்பட்ட அசல் திட்டப்படியே [Original Scheme] நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

17. 5-வது திட்டத்தில் உருவாக்கப்படும் மேற் சொன்ன இந்தத் திட்டங்கள் தவிர, வளர்ந்து கொண்டே போகும் மின் பற்றுக் குறையைச் சமாளிக்க, கீழ்க் கண்ட அனல், நீர் மின் திட்டங்களுக்கு அனுமதி வழங்கிட வேண்டுமென இந்திய அரசை தமிழக அரசு வலியுறுத்திக்கொண்டே வருகிறது :—

| வரிசை எண். | திட்டம். | நிறுவனத் திறன் (மெகாவாட்). | கிடைக்கும் மின்சாரம் (மில்லியன் யூனிட்டுகளில்). | மதிப்பீட்டுச் செலவு (ரூபாய் கோடியில்). |
|---|---|---|---|---|
| 1 | *சோழாட்டிப்புழா நீர் மின் திட்டம். | 60 | 225 | 7.39 |
| 2 | கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம். | 160 | 643 | 34.14 |
| 3 | பரலையாறு நீர் மின் திட்டம். | 35 | 87 | 5.63 |
| 4 | சண்முகா நதி நீர் மின் திட்டம். | 30 | 131 | 9.02 |
| 5 | மேல் அமராவதி நீர் மின் திட்டம். | 20 | 69 | 5.98 |
| 6 | மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டம் (சேர்வலாறு பிரிவைச் சேர்க்காமல்). | 165 | 557 | 43.93 |
| | துணை மொத்தம் .. | 470 | 1,712 | 106.08 |
| 7 | மேட்டூர் அனல் மின் திட்டம். | 330 | 2,024 | 65.53 |
| | மொத்தம் .. | 800 | 3,736 | 171.61 |

மேற்கண்ட நீர் மின் திட்டங்களில் பல, உச்ச நேரத் தேவைகளைச் சமாளிக்கும் திட்டங்களாக இருந்தாலும், மின் சக்திப் பற்றுக் குறையை கணிசமான அளவில் சமாளிக்கவும் இவை பயன்படும்.

* இரு மாநிலங்களிடையேயான மின் திட்டம்.



18. மின் சக்தி அனுப்புதலும், பங்கீடு செய்தலும்.

மின் சக்தி அனுப்புதல், பங்கிட்டு வழங்குதல் திட்டத்தில் ஒரு மிகப் பெரிய பின்னிப் பிணையப்பட்ட மின் இணைப்புத் தொடரை தமிழ் நாடு மின்சார வாரியம் தன்னகத்தே கொண்டுள்ளது. 31—3—1974-ல் உள்ள நிலவரப்படி, 66,364 கிலோ மீட்டர்கள் கூடுதல் உயர் அழுத்தம் மற்றும் உயர் அழுத்தக் கம்பி தொடரும், 1,89,094 கிலோ மீட்டர் நீளமுள்ள குறைவழுத்தக் கம்பித் தொடரும் உள்ளன. இவற்றில் 3,036 கிலோ மீட்டர் கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளும், 10,489 கிலோ மீட்டர் குறைவு அழுத்தக் கம்பிகளும் 1973-74-ல் சேர்க்கப்பட்டவையாகும். 1973-74-ம் ஆண்டு இறுதியில் தமிழக மின் அமைப்பில் 275 கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தத் துணை மின் நிலையங்கள் உள்ளன.

19. மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல், மின் விநியோகம் ஆகியவற்றிலும வாரியம் தொடர்ந்து கவனம் செலுத்திவருகிறது. 1974-75-ல் 12 கோடி ரூபாய் செலவில் செய்யப்படும் மின் அனுப்புதல், விநியோகித்தல் குறித்த வேலைத் திட்டத்தினுல், மேலும், 600 கிலோ மீட்டர்கள் 230 கே. வி. 110 கே. வி. 66 கே. வி. மின் அனுப்புக் கம்பித் தொடர்களும் 21 துணை மின் நிலையங்களும் மின் விநியோகக் கம்பிகளும் மற்ற மேம்பாட்டுப் பணிகளும் மின் அமைப்புக்களில் அமையும்.

20. கம்பி இழப்புக்களைக் குறைக்கவும் வோல்டேஜ் குறைபாடுகளைப் போக்கி மேம்பாடு காணவும், அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகளையும் வாரியம் மேற்கொண்டு வருகிறது. சேலத்திலும், வட ஆற்காடு மாவட்டத்தில் திருவலத்திலும் இரண்டு இடங்களில் ஒவ்வொரு 25 எம். வி. ஏ. ஆர். கண்டென்சர்களை (Synchronous condensers) நிறுவ வாரியம் முடிவு செய்துள்ளது. அவற்றை அனைத்துலக மேம்பாட்டு நிறுவனக் (I. D. A.) கடன் மூலமாக இறக்குமதி செய்ய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. வேளாண்மை விசையேற்றங்களிலும், குறைவு அழுத்தத் தொழில் நிறுவனங்களிலும் (L. T. Industries) கெபாசிட்டர்களைப் (Capacitors) பொறுத்துவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, புதிய தொடர்புகளைப் (New Connections) பொறுத்த வரையில், அவற்றைக் கட்டாயம் பொருத்தச் செய்யும் வகையில், மின் சாரம் வழங்குவதற்கான நிபந்தனைகளும் விதிகளும் மாற்றப்பட்டுள்ளன.

கிராம மின்வசதித் திட்டம்.

21. 1973-74-ம் ஆண்டில் மேலும் 747 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்சக்தி வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மின்சக்தி அளிக்கப்பட்டுள்ள நகரங்கள், கிராமங்கள் சிற்றூர்களின் மொத்த எண்ணிக்கை 61,072 ஆகும். கிராமங்களை ஒட்டியுள்ள அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி வழங்குவதற்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 418 அரிசனக் குடியிருப்புகளுக்கும், 32,017 வேளாண்மை விசையேற்றங்களுக்கும் 1973-74-ல் மின் வசதி அளிக்கப்பட்டது.

22. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கூற்றுப்படி, ஊரெல்லாம் ஒளிமயம் செய்திடும் கிராம மின் வசதிச் சிறப்புத் திட்டமானது 1969-ல் தொடங்கப்பட்டு செயல் படுத்தப்படுவதன் காரணமாக, கிராமப்புறங்களிலே பல்வேறு கிராமத் தொழில்கள் பல்கிப் பெருகவும், வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் தொடர்புகள் அளிக்கப்படுவதற்கும், மாநிலத்தின் கிராமப் பொருளாதாரம் பெருக இச் சிறப்புத் திட்டம் அடிகோலியுள்ளது. இந்தச் சீரிய திட்டம் மட்டும் இல்லாமலிருந்திருந்தால், இவ்வளவு சீக்கிரத்தில் கிராமப்புற மக்கள் பரவலாக தாங்கள் உள்ள இடத்திலேயே மின்சாரம் கொண்டு வரப்பட்டு, அதன் பயன்களைத் துய்க்கின்ற நல் வாய்ப்பினைப் பெற்றிருக்க முடியாது. எதிர்காலக் கண்ணோட்டத்துடன் தீட்டப்பட்ட இந்தச் சிறப்புத் திட்டம் சமுதாயத்திற்கு சீரிய நற்பயன்களை விளைவிக்கும் என நம்புகிறோம்.

23. மின் விசையேற்றங்களுக்கும் மற்ற மின் இணைப்புகளுக்கும் மின் சக்தியை நீட்டிக்கும் 10 திட்டங்களுக்கும், திட்ட மேம்பாட்டுக்கான 7 திட்டங்களுக்கும், 1973–74-ல் கிராம மின் வசதிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டங்கள் அனைத்துக்கும் ஆகும் செலவு ரூபாய் 539·12 இலட்சம் ஆகும். இதில் ரூ. 249.17 இலட்சத்தினை இக் கழகம் இது வரையில் வழங்கியுள்ளது. ஆரம்பத்திலிருந்து இது வரையில, சுமார் ரூ. 17 கோடி செலவிலான 40 திட்டங்களுக்கு கிராம மின் வசதிக் கழகம் அனுமதி வழங்கி, இது வரையில், ரூ. 8.68 கோடியினை இதற்காக வழங்கியுள்ளது.

24. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு இயக்குநர் அலுவலகம் ஒன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்தி, மின் அனுப்புதல், பங்கீடு செய்தல் ஆகிய துறைகளில் ஏற்படும் பல்வேறு இயக்குதல், பராமரித்தல் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து இந்தப் பிரிவு ஆய்வு செய்யும். இப்பொழுது கடைப்பிடிக்கப்படும் தொழில் நுட்பப் பணிகள் மேலும் மேம்பாடு அடையவும் மின் துறையில் மேலும் புதிய தொழில் நுட்பக் கூறுகள் பெருகவும், இயக்குதல், பராமரிப்புச் சம்பந்தமான சில பிரச்சினைகளுக்கு திருப்திகரமான தீர்வுகாணும் படியான நிலை இதனால் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

25. கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களைக் காட்டிலும், மின் உற்பத்திக்காகும் செலவு தமிழ் நாட்டில் அதிகம். கேரளமும், கருநாடகமும் முழுக்க முழுக்க நீர் மின் திட்டங்களைக் கொண்டவை: நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அருகாமையில் உள்ளமையினால், ஆந்திரப் பிரதேசம் வாய்ப்பான நிலையில் அமைந்துள்ளது. ஆனால், தமிழகமோ தன்னுடைய அனல் மின் நிலையங்களுக்கு வேண்டிய நிலக்கரியினை வெகு தொலைவிலிருந்து கடல் மூலமாகவும், ரயில் மூலமாகவும் கொண்டு வரவேண்டியுள்ளதால், செலவும் மிக அதிக அளவில் ஏற்படுகிறது.

26. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், மற்றொரு தனித் தன்மை வாய்ந்த அம்சம், மிக அதிக அளவில் விசை யேற்றங்கள் இயங்குவதாகும். விசையேற்றங்கள் மிக அதிக அளவில் உள்ளதால் (Peaking and Frequency Problems) உச்ச நேரப் பிரச்சினைகளும் அலைவெண் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. அதனால், இரு



பிரிவுகளாகப் பிரித்து மின்சாரம் வழங்குதல், மின்சாரத்தை நிறுத்தி விடுதல் போன்ற பல்வேறு கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் நேரிடுகிறது. மின் உற்பத்தித் திட்டங்களை உரிய காலத்தில் செயல்படுத்த அதிக நிதி அளிப்பதன் மூலம் மத்திய அரசு நமக்கு உதவி செய்யவில்லையென்றால், இத்தனை ஆண்டுகள் செய்து வருவது போல வருகின்ற ஆண்டுகளிலும் மிகப் பெரிய அளவிலான எண்ணிக்கையில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிப்பது மிகுந்த இடர்ப்பாட்டினையும் சிரமங்களையும் விளைவிக்குமோ என நான் அஞ்சுகிறேன்.

27. 1974–75-ம் ஆண்டுக்கு வருவாய் வரவினம் ரூ. 99.96 கோடி என எதிர்ப்பார்ப்பது, 1974–75-ல் இப்பொழுதுள்ள சிரமமான மின் சாரப் பற்றுக்குறை ஓரளவுக்கு நீங்கி விடும் என்ற கருத்தில் கொள்ளப்பட்டதாகும். இருந்தும், 1974–75-லும் மின்சார நெருக்கடி தொடர்ந்து இருப்பதினாலும், வருவாய் வரவினத்தில் கணிசமான அளவுக்கு குறைவு இருக்கும். மொத்தத்தில் மின் உற்பத்தியின் அளவு குறைந்து போனதினாலும், வெளியிலிருந்து அதிக அளவில் மின்சாரம் வாங்க வேண்டிய நிலை உள்ளதாலும், முன்பு வழிவகை செய்யப்பட்ட ரூ. 99.96 கோடிக்குப் பதிலாக, வருவாய் வரவினம் ரூபாய் 81.30 கோடியாகத் தான் இருக்கும் என இப்பொழுது மதிப்பிடப்படுகிறது.

28 (அ) கடந்த ஐந்து ஆண்டுகளில், அண்டை மாநிலங்களிலிருந்தும் நெய்வேலி நிலக்கரிக் கழகத்திடமிருந்தும் வாங்கப்படுகிற மின்சாரத்தின் விலை உயர்ந்துள்ளது. கேரளத்திலிருந்து வாங்கப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 4.5 காசிலிருந்து எட்டு காசாகவும், நெய்வேலி நிலக்கரிக் கழகத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 5.9 காசிலிருந்து 8.48 காசாகவும், விலை உயர்ந்துள்ளது. மேலும் நிலக்கரியின் விலையும் ஏறிக்கொண்டே போகிறது. கடல் மூலமாக நிலக்கரி கொண்டு வருவதின் செலவும் அதிகமாகியுள்ளது. அத்துடன், நெய்வேலியில் எண்ணெய் எரிய விட்டு மின் உற்பத்தி செய்யும் முறைக்கு மாற்றப்பட்டு, அதன் மூலம் பெறப்படுகிற மின் சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு சுமார் 27 காசு ஆகிறது. இந்த விலை ஏற்றத்தினால், 1974–75-ம் ஆண்டில் கூடுதலாக ஏற்படக்கூடிய செலவு சுமார் ரூ. 9.25 கோடியாகும்.

(ஆ) 1973–74-ம் ஆண்டில் மின்சாரம் வாங்கியதில் செலவு ரூபாய் 18·58 கோடியாக இருந்தது, நடப்பு ஆண்டில், அச்செலவு ரூபாய் 29·51 கோடிக்கு உயரும் எனக் கருதப்படுகிறது. மேலும், மின் வெட்டின் விளைவாக வாரியத்தின் வருவாய் கணிசமான அளவுக்குக் குறைந்து விட்டது. 1973-74ம் ஆண்டில் வருவாய்க் குறைவு ரூபாய் 10·5 கோடி ஆகும். நடப்பாண்டில், இது ரூபாய் 18·66 கோடியாக இருக்கலாம்.

(இ) ஆகவே, கிடைக்கக்கூடிய வருவாயிலிருந்து பணிகளுக்கான நடப்புச் செலவுகளைச் சமாளிக்க இயலாது. தேய்மானச் சேமிப்புகள், அரசுக்கும், வங்கிகளுக்கும், மற்றக் கடன்களுக்குமான வட்டி செலுத்துதலில் சிரமங்கள் ஏற்படும்.

29. ஆகவே, வேறு வழியின்றி, மின் கட்டண விகிதங்களைத் திருத்தியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அப்படி திருத்தி அமைக்கவில்லை என்றால், நிதி வசதியைப் பொறுத்த வரையில், மின்சார வாரியம் அதிக சிரமத்திற்கு உள்ளாகும்.

[1974 ஆகஸ்ட் 16

30. 1974-75-ம் ஆண்டுக்கான வாரிய மூலதன ஒதுக்கீடு ரூபாய் 47·77 கோடிக்கு, தெளிவாகத் தெரிந்த முடிவு காணப்பட்ட நிதி ஆதாரங்கள், அதாவது, பொதுச் சந்தை, ஆயுள்காப்பீட்டுக் கழகம், கிராம மின்வசதிக் கழகம், சேமிப்புகள் ஆகியவைகளிலிருந்து ரூபாய் 22 கோடிதான் வருகிறது. வங்கிகளுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் ரூபாய் 14 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ. 62 கோடி தேவைப்படுகிறது. ரூபாய் 10 கோடிக்கு அரசுக் கடன் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் 30 கோடி ரூபாய்க்கு நிதி வாயில்களைத் தேடியாக வேண்டும்.

31. புது டில்லியில் நடைபெற்ற பாசனம்-மின்சாரத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் அண்மையில் எடுக்கப்பட்ட முடிவின்படி, அனல் மின் நிலையப் பணி துவங்கப் பெற்று நிலையம் செயல்படத் தொடங்க எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய காலம் 3½ ஆண்டுகளும், நீர் மின் திட்டங்களுக்கு 5 ஆண்டுகளும் ஆகும். இந்த இலக்குகள் நடைமுறையில் செயல்படுத்தப்பட வேண்டுமெனில், 1974-75-ம் ஆண்டுக்கு தற்போது ஒதுக்கியுள்ள ரூ. 47·77 கோடிக்கு மேல் 15 கோடி ரூபாய் அதிகமாக உயர்த்தப்பட வேண்டும். ஏனெனில், 1978-79-ல் செயல்பட இலக்கு வகுக்கப்பட்டுள்ள தூத்துக்குடி போன்ற பெரிய மின் திட்டங்களை முன் கூட்டியே செயல்படும்படி பணி தொடங்க வேண்டியுள்ளது. திட்டங்கள் செயல்படத் தொடங்குவதற்கான இலக்குகள் கடைபிடிக்க வேண்டுமெனில், திருத்தப்பட்ட வேலைத் திட்டத்திற்கொப்ப ஏற்படும் பெருத்த செலவினத்தைச் சமாளிக்க நிதி வாயில்கள் எங்குள்ளன, எப்படிச் செய்வது என்பது குறித்தும் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது.

32. நடப்பாண்டில், அதாவது, 1974-75-ம் ஆண்டில் ரூ. 47·77 கோடி மூலதன ஒதுக்கீட்டில் பணிகளை திறைவேற்ற தமிழ்நாடு மின்சார வாரியம் திட்டமிட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, திட்டக் குழுவினிடம் 1974-75-ம் ஆண்டுத் திட்டத்திற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது. மேலும், சமீபத்தில், உருக்கு, மின் கடத்திகள், மின் மாற்றிகளின் விலைகளானது மிகவும் வேகமாக, சுமார் 40 சதவிகித அளவிற்கு மேல் ஏறியுள்ளது. ஆகவே மின் திட்டங்களைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் செயல்படுத்த, மேலும் நிதி உதவி அவசியம் தேவைப்படுகிறது.

33. தன்னுடைய மூலதன வேலைத் திட்டங்களுக்குத் தன்னுடைய சொந்த ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள, வணிக வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், திறந்த வெளிச் சந்தை போன்றவற்றிலிருந்து பெறப்படும் கடன்களையே மின் வாரியம் எதிர் நோக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில், மின் வாரியங்களுக்கு மிகப் பெரிய அளவில் வங்கிகள் மூலமாக பெறப்படும் கடன்களில் முடக்கம் ஏற்படுமென அண்மைச் சம்பவங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

34. தற்போது நிலவும் மின்சாரப் பற்றுக்குறையிலும் உருவாகி வரும் மற்றும் புதிய திட்டப் பணிகளை வேகப்படுத்தவும் வேண்டிய அவசியம் உள்ள இன்றைய நிலையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கோரிக்கைகளை அரசு கனிவுடன் கவனித்து எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அந்தச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.



1974 ஆகஸ்ட் 16]

35. தமிழ்நாடு மின் வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை இப்பொழுது குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன் :—

(அ) 31—12—1972-ல் நான்கு ஆண்டுகள் பணி புரிந்துள்ள தினக்கூலி வேலையாட்களை முறையான பணியில் சேர்த்துக் கொள்வதென சனவரி 1973-ல் எடுத்த முடிவினையொட்டி (இந்த முடிவினால் 9,000 தினக்கூலி வேலையாட்கள் பயன் பெற்றனர்). 30—4—1974-ல் நான்கு ஆண்டுகள் பணிபுரிந்துள்ள தினக்கூலி வேலையாட்களை 1—5—1974-லிருந்து முறையான பணியில் சேர்த்துக்கொள்வதென மின் வாரியம் முடிவு செய்துள்ளது. இரண்டாவது கட்டமாக இப்படி எடுத்துக்கொள்வதின் மூலம், 5,000 பேர் பயன் பெறுவர். இது குறித்து வேண்டிய நடவடிக்கைகளை மின்வாரியம் எடுத்து வருகிறது.

(ஆ) மாநில அரசு ஊழியர்களுக்கு உள்ளது போலவே, வாரியத்தில் மாதாந்திரச் சம்பளம் பெறும் எல்லா ஊழியர்களுக்கும், 21—6—1974-லிருந்து குடும்ப நல நிதித் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(இ) தொழில் சம்பந்தமான வேலையாட்களுக்கான அகில இந்தியப் பயனீட்டாளர்கள் சாராசரி விலைக் குறியீட்டு எண் அடிப்படையில், ஆண்டுக்கொரு முறை என்பதற்குப் பதிலாக, 1—10—1973 முதல், கால் ஆண்டுக்கொரு முறை, மின் வாரிய ஊழியர்களின் அகவிலைப்படியானது திருத்தி அமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஈ) தினக்கூலி வேலையாட்களுக்கும் 1—12—1974-ல் கொடுக்கப்பட வேண்டிய ஊதிய, அகவிலைப்படித் திருத்தங்கள் செய்யப்படும் வரை, 1—10—1973 முதல், மாதம் ரூ. 30 இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

(உ) இப்பொழுது உள்ள ஊதிய ஒப்பந்தம் 1—12—1974-ல் முடிவடைவதால், ஊதியங்கள், படிகள் திருத்தம் குறித்து ஆராய, வாரியத்தில் இரண்டு உறுப்பினர்களும், தலைமைப் பொறியாளர்களும், வாரியத்தின் மூது நிலை அலுவலர்களும் அடங்கிய ஏழு பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் பணியாளர்களுக்கு பணி அமைப்பு முறை குறித்தும் இக்குழு ஆராயும்.

(ஊ) 1—6—1974-லிருந்து, ஓராண்டில் 15 நாளைக்கு குறையாத விடுப்பினை, விடுமுறையிலே போகாமல், அதற்குப் பணம் பெற்றுக்கொள்ளும் வகையில், திருப்பிக் கொடுத்துவிடுகின்ற சலுகை மின் வாரியப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இடையில் விடுப்பு எடுக்காத காலம் 24 மாதங்கள் அல்லது அதற்கு மேலும் இருந்தால், 30 நாட்களுக்கு மேற்படாத வகையில் விடுப்பைத் திருப்பிக் கொடுத்து, பணம் பெற்றுக் கொள்ளலாம்.

(எ) கால் ஆண்டுத் துவக்கத்திலேயே ஆண்டு ஊதிய உயர்வு கணக்கிடப்படும் வகையில், ஆண்டு ஊதிய உயர்வு முன் கூட்டி அனுமதிக்கப்படுகிறது.

(ஏ) தன்னுடைய பணியாளர்களுக்குப் போதிய மனமகிழ் வசதிகளை அளிக்கும் வகையில், மின் அமைப்பு மனமகிழ் மன்றங்களுக்கும் மின் அமைப்பு இடையேயான (inter system) விளையாட்டுகளுக்கும், அனைத்திந்திய மின்வாரிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்

வதற்கும் தொடர் மான்யத் தொகையை வாரியம் அளித்துக்கொண்டு வருகிறது. விளையாட்டு நடவடிக்கைகளைச் செயல்படுத்த விளையாட்டு ஆளுமைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ) தமிழில் சிறந்த முறையில் வரைவுகள், குறிப்புகள் தயாரிக்கும் பணியாளர்கட்கு ரொக்கப் பரிசுகள் வழங்கும் ஒரு திட்டத்தினை வாரியம் அறிவித்துள்ளது. ஆண்டொன்றுக்கு, ஒவ்வொரு நிர்வாகப் பிரிவுக்கும், இத் திட்டத்தின்கீழ், மொத்தம் ரூபாய் 500-க்கு மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

36. மாநிலங்களில் மின்சாரத்தைச் சீரமைப்பு முறையில் விநியோகம் செய்ய வேண்டுமெனில், மின்சாரம் வழங்குவதில் ஈடுபட்டுள்ள தனியார் மின் நிறுவனங்களைக் கையகப்படுத்துவது மிகவும் அவசியம் எனக் கருதப் பட்டது. ஆகவே, அந்தக் கருத்திற்கேற்ப, 1973-ம் ஆண்டு தமிழ் நாடு தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின் விதிமுறைகளின்கீழ், கீழ்க் கண்ட தனியார் மின் நிறுவனங்கள் அரசினால் எடுக்கப்பட்டு, மின் வாரியத்தினிடம் கீழ்க்குறிப்பிட்டுள்ள தேதிகளில் ஒப்படைக்கப்பட்டன :—

| நிறுவனத்தின் பெயர். | ஒப்படைக்கப் பட்ட தேதி. |
|---|---|
| 1. செங்கோட்டை மின் வழங்கு ஏஜென்சியின் செங்கோட்டை மின் நிறுவனம். | 1—12—1973 |
| 2. கும்பகோணம் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் லிமிடெட்டின் கும்பகோணம் மின் நிறுவனம். | 7—1—1974 |
| 3. நாகப்பட்டினம் எலக்ட்ரிக் சப்ளை கம்பெனி லிமிடெட்டின் நாகப்பட்டினம் மின் நிறுவனம். | 7—1—1974 |
| 4. வேலூர் எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் வேலூர் மின் நிறுவனம். | 7—1—1974 |
| 5. சேலம்-ஈரோடு எலக்ட்ரிசிட்டி டிஸ்டிரிபூயூஷன் லிமிடெட்டின் சேலம்-ஈரோடு மின் நிறுவனம். | 1—2—1974 |
| 6. திருநெல்வேலி-தூத்துக்குடி எலக்ட்ரிகல் சப்ளை கம்பெனி லிமிடெட்டின் திருநெல்வேலி-தூத்துக்குடி மின் நிறுவனம். | 1—2—1974 |
| 7. தென் சென்னை எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷனின் திருச்சி-ஸ்ரீரங்கம் மின் நிறுவனம். | 1—2—1974 |

37. மின் வாரியப் பிரச்சினைகளையும் அவற்றைப் போக்கத் தேவைப் படும் ஆதாரங்கள் பற்றியும், நான் இவ்வுரையில் விவரித்துக் காட்டியுள்ளேன். நிதி நிலைப்பற்றி விவாதிக்கும்பொழுது, இம்மாமன்றம் தன்னுடைய அறிவுசால் கருத்துக்களை வழங்குவதன் மூலம், மின் வாரியம் மேலும் பயனுள்ள முறையில் பணியாற்ற உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் அவைத் தலைவர் அவர்கட்கும் மாண்புமிகு உறுப் பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## இணைப்பு 1.

கடந்த திட்டக் காலங்களில் தமிழ் நாட்டின் மின்சக்தி உற்பத்தி.

| எண். | விவரங்கள். | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்). | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). | நான்காவது திட்டத்தின் இறுதியில் (1974 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி) (உத்தேசமாக) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | மின் உற்பத்தி. | | | | | |
| 1 | நிறுவப்பட்ட திறனளவு (மெகாவாட்டில்) .. .. .. | 156 | 256 | 560 | 1,070 +300 (நெய்வேலி). | 1,651 +600 (நெய்வேலி). |
| 2 | மின்சக்தி உச்சத் தேவை (மெகாவாட்டில்) .. .. .. | 110 | 172 | 381 | 717 | 1,287* |
| 3 | உற்பத்தி செய்த மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 | 4,041 | 7,105 |
| | மின் அனுப்புதலும், வழங்குதலும். | | | | | |
| 1 | கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 6,936 | 11 ,479 | 24,194 | 39,806 | 66,361 |
| 2 | குறைந்த அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்) .. | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 1,89,094 |
| | கூடுதல் உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள் .. .. | 31 | 48 | 70 | 98 | 150 |

இணைப்பு 1—தொடர்ச்சி.

கடந்த திட்டக் காலங்களில் தமிழ் நாட்டில் மின்சக்தி உற்பத்தி—தொடர்ச்சி.

| எண். | விவரங்கள். | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்). | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). | நான்மாவது திட்டத்தின் இறுதியில் (1974 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி) (உத்தேசமாக). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | மின் அனுப்புதலும், வழங்குதலும்—தொடர்ச்சி | | | | | |
| 4 | உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள் .. .. .. | 25 | 41 | 73 | 103 | 125 |
| 5 | பங்கிட்டு அளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை .. .. .. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 35,618 |
| 6 | மின்சக்தி பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சக் கணக்கில்) .. | 2·5 | 4·3 | 7·7 | 13·6 | 27·12 |
| 7 | நபர் ஒருவர் பயன்படுத்தும் அளவு (யூனிட்டுகளில்) .. .. | 12 | 21 | 60 | 92 | 133 |
| | கிராமங்களுக்கு மின்சார வசதி. | | | | | |
| 1 | மின்சார வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை. .. .. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | 61,072 † |
| 2 | மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | 1,17,695 | 2,56,594 | 6,81,253 |
| | செலவும் வருவாயும். | | | | | |
| 1 | மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்) .. .. .. | 23·82 | 54·01 | 133·21 | 253·28 | 573·32 |
| 2 | மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்) .. .. | 3·18 | 5·94 | 15·82 | 34·67 | 82·60‡ |

* 15 சதவிகித மின்வெட்டின் விளைவாக நிறுத்தி வைக்கப்பட்ட தேவையின் அளவு.

† தெரு விளக்கு கொண்டு மின்வசதி செய்யப்பட்டது.

‡ (அரசு உதவித் தொகை நீங்கலாக, மத்திய நிதி சரிக்கட்டலையும் சேர்த்து).

இணைப்பு 2.

4-வது திட்டக்காலத்தில் மின் திட்டங்களின் பேரிலான செலவும், 1974-75-ம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடும் (ரூபாய் இலட்சத்தில்).

| எண். | திட்டத்தின் பெயர். | 1969-70-ல் ஏற்பட்ட செலவு. | 1970-71-ல் ஏற்பட்ட செலவு. | 1971-72-ல் ஏற்பட்ட செலவு. | 1972-73-ல் ஏற்பட்ட செலவு. | 1973-74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1973-74-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. | 1973-74-ம் ஆண்டில் எதிர்பார்க்கப் படும் செலவு (இறுதியாக நிர்ணயிக்கப் பட்ட மானியத் தொகை) (உத்தேசமாக). | 4-வது திட்டத்திற்கான மொத்தம் 1969-70 லிருந்து 1973–74 வரை (உத்தேசமாக). | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1974-75. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | I. உற்பத்தித் திட்டங்கள். | | | | | | | | | |
| | அ. தொடர்ந்து வரும் திட்டங்கள். | | | | | | | | | |
| 1 | குந்தா நீர் மின்சாரத் திட்டம் 3-ம் நிலை .. | —35·23 | 7·56 | 25·21 | —3·78 | 13·25 | 2·97 | —7·73 | —13·97 | 20·00 |
| 2 | பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின்சாரத் திட்டம். | 1,41·29 | 1,60·99 | 51·97 | 71·73 | 63·18 | —39·94 | —35·93 | 3,90·05 | 8·64 |
| 3 | கோதையாறு நீர் மின்சாரத் திட்டம் .. | 2,73·98 | 2,03·89 | 78·90 | 32·74 | 81·51 | 79·35 | 44·29 | 633·80 | 77·10 |
| 4 | சென்னை மின்சார நிலையம் விரிவு படுத்துதல் 4-ம் நிலை. | 80·77 | 43·37 | 36·22 | 44·18 | 0·01 | 10·64 | 10·98 | 2,15·52 | 0·01 |
| 5 | எண்ணூர் அனல் மின் நிலையம் .. .. | 17,41·99 | 4,61·01 | 3,31·28 | 4,16·85 | 5,12·67 | 2,59·90 | 2,53·98 | 32,05·11 | 34·55 |
| 6 | எண்ணூர் அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்துதல். | .. | 50·00 | 67·10 | 2,99·10 | 11,65·77 | 11,65·77 | 10,75·77 | 14,91·97 | 5,07·42 |
| 7 | பாண்டியாறு புன்னப்புழா நீர் மின் திட்டம். | 44·29 | 7·02 | —33·09 | —0·96 | 10·00 | —6·50 | —6·54 | 10·72 | 50·01 |
| 8 | குந்தா நீர் மின் திட்டம் 4-ம் நிலை .. | .. | .. | .. | 71·42 | 1,00·00 | 3,40·00 | 3,05·45 | 3,79·87 | 2,75·00 |
| | ஆ. புதிய திட்டங்கள். | | | | | | | | | |
| 1 | நடுவட்டம் நீர் திருப்புத் திட்டம் .. .. | 5·12 | 13·95 | 56·96 | 55·11 | 53·61 | 79·83 | 57·31 | 1,88·45 | 53·08 |
| 2 | சோழாட்டிப்புழா நீர் மின் திட்டம் .. | .. | .. | .. | .. | 0·001 | .. | .. | .. | 0·001 |
| 3 | காடம்பாறை நீர் மின் திட்டம் .. .. | .. | .. | 0.73 | 4·03 | 1,50·00 | 2,25·35 | 2,20·48 | 2,25·24 | 4,40·00 |
| 4 | மேல் தாமிரபரணி நீர் மின் திட்டத்தின் கீழ் சேர்வலாறு மின் நிலையம். | .. | 0·95 | 12.15 | 33·68 | 25·00 | 46·82 | 46·82 | 93·60 | 1,00·00 |
| 5 | நெல்லித்துறை நீர் மின் திட்டம் .. .. | .. | 2·12 | 19·35 | 13·39 | 20·00 | 27·95 | 16·78 | 51·64 | 69·98 |

இணைப்பு 2 தொடர்ச்சி.

4-வது திட்டக்காலத்தில் மின் திட்டங்களின் பேரிலான செலவும் 1974-75-ம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடும் (ரூபாய் இலட்சத்தில்).

| எண். | திட்டத்தின் பெயர். | 1969-70-ல் ஏற்பட்ட செலவு. | 1970-71-ல் ஏற்பட்ட செலவு | 1971-72-ல் ஏற்பட்ட செலவு. | 1972-73-ல் ஏற்பட்ட செலவு. | 1973-74-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1973-74-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. | 1973-74 ஆண்டில் எதிர்பார்க்கப் படும் செலவு. (இறுதியாக நிர்ணயிக்கப் பட்ட மானியத் தொகை) (உத்தேசமாக). | 4-வது திட்டத் திற்கான மொத்தம் 1969-70 லிருந்து 1973-74 வரை. (உத்தேசமாக). | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1974-75. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | ஆ. புதிய திட்டங்கள்—தொடர்ச்சி | | | | | | | | | |
| 6 | பாலையாறு நீர் மின் திட்டம் .. .. | .. | .. | .. | .. | 5·00 | .. | .. | .. | 0·001 |
| 7 | சுருளியாறு நீர் மின் திட்டம் .. .. | .. | 0·80 | 20·04 | 66·91 | 2,00·00 | 2,00·00 | 1,45·34 | 2,33·09 | 2,00·00 |
| 8 | தூத்துக்குடி அனல் மின் நிலையம் .. | .. | .. | .. | .. | 1,00·00 | 4,05·00 | 4,05·00 | 4,05·00 | 5,00·00 |
| 9 | மேல்கொடுமுந்து லோன் பள்ளத்தாக்கு திட்டம். | .. | .. | .. | .. | .. | 0·49 | 0·03 | 0·03 | 16·36 |
| 10 | புதிய திட்டங்கள் பேரில் முன்னேடி நடவடிக்கை. | .. | .. | .. | .. | .. | .. | .. | ... | 33·64 |
| | மொத்தம்—உற்பத்தித் திட்டங்கள் .. | 22,52·21 | 9,51·66 | 6,66·82 | 11,07·40 | 25,00·00 | 27,97·63 | 25,32·03 | 75,10·12 | 23,85·79 |
| இ. | மின்சக்தி அனுப்புதல்—பங்கிட்டு வழங்குதல் திட்டம். | 5,79·07 | 10,98·85 | 7,89·03 | 9,98·08 | 11,00·00 | 11,00·00 | 11,43·44 | 46,08·47 | 12,00·00 |
| ஈ. | கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளித்தல் .. | 8,75·00 | 8,75·00 | 8,75·00 | 14,00·00 | 6,50·00 | 6,50·00 | 6,50·00 | 46,75·00 | 7,00·00 |
| உ. | மின்சார நிறுவனங்களைக் கையகப்படுத்துதல். | —0·10 | 74·01 | 0·28 | 40·90 | 50·00 | 50·00 | 0·001 | 1,15·09 | 1,75·00 |
| ஊ. | புதுத் திட்டங்கள் குறித்து ஆய்வு .. .. | 4·75 | 13·03 | 10·62 | 10·56 | 12·50 | 14·90 | 14·90 | 53·86 | 14·00 |
| எ. | மின்சக்தி குறித்து ஆராய்ச்சிகள் .. .. | 0·33 | 0·48 | 0·56 | 0·43 | 2·00 | 2·00 | 2·00 | 3·80 | 2·00 |
| | மொத்தம்—அ-விலிருந்து எ. வரை .. | 37,11·26 | 30,13·03 | 23,42·31 | 35,57·37 | 43,14·50 | 46,14·53 | 43,42·37 | 1,69,66·34 | 44,76·79 |
| | கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளிக்கும் திட்டத்திற்கு திட்டத்தில் சேர்க்கப்படாது செலவிடப்படும் தொகை. | 4,95·50 | 10,49·09 | 17,72·58 | 7,30·09 | .. | 6,00·00 | 6,00·00 | 46,47·26 | 3,00·00 |
| | பெரு மொத்தம் .. | 42,06·76 | 40,62·12 | 41·14·89 | 2,87·4 | 43,14·50 | 52,14·53 | 49,42·37 | 21,613·60 | 47,76·79 |

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

சனிக்கிழமை, 1974 ஆகஸ்ட் 17

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Pandanainallur Government High School*

* 31. *Q.*—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government that the pupils of the Government High School at Pandanainallur are put to hardship for want of accommodation as the thatched shed of the school is in a state of disrepair; and

(*b*) if so, the action taken thereon?

### பந்தனைநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளி

புலவர் ஓ. அறிவுடை நம்பி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பந்தனைநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளி கூரைக் கொட்டகை பழுதாகி பள்ளி மாணவர்கள் படிக்க இடமில்லாமல் சங்கடப்படுவது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பெற்றதா?

(இ) ஆமெனில், எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பந்தனைநல்லூர் அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளியின் கீற்றுக் கொட்டகைகளை ரூ. 6,500 மதிப்பீட்டில் பள்ளி வசதிக்கட்டண நிதியில் இருந்து பழுது பார்த்திட அரசாணை எண் 1600, கல்வி, 20—7—1973-ல் அனுமதி வழங்கப்பட்டு மேற்படி பணி ஜனவரி 1974-ல் நிறைவேற்றப் பட்டுள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இந்தப் பள்ளி 'ஏ' விங்கைச் சேர்ந்ததா அல்லது 'பி' விங்கைச் சேர்ந்ததா? இதற்கு அரசு முன்னமே அங்கீகாரம் அளித்திருக்கின்றதா? இப்படிப்பட்ட கட்டிட நிலையிலுள்ள பள்ளிக்கூடத்திற்கு அரசு எப்படி அங்கீகாரம் அளித்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது 'பி' விங்கிலுள்ள பள்ளிதான். அரசினர் கழக உயர்நிலைப் பள்ளி இது. கீத்துக் கொட்டகையை பழுது பார்க்க ரூ. 6,500-ஐ பள்ளி வசதிக் கட்டண நிதியிலிருந்து வழங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, தனியார் பள்ளிகளிலே இப்படி ஒரு சிறு குறை இருந்தால்கூட, அங்கீகாரம் மறுக்கப்படுகிறது. அப்படி இருக்கும்போது 'பி' விங் பள்ளி இப்படிப்பட்ட மோசமான நிலையில் இருக்கும்போது, எப்படி அங்கீகாரம் 'ரெகக்னிஷன்' கொடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போதே பல பள்ளிக்கூடங்கள் கூரைக் கட்டிடங்களிலேயே நடைபெறத்தான் செய்கின்றன. அவற்றுக்கு அங்கீகாரம் கொடுப்பதில் குறை ஏதுமில்லை. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பல உயர்நிலைப் பள்ளிகளை கூரைவேயப்பட்ட கட்டிடங்களிலே தான் நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். இப்போது கொடுக்கப்பட்ட அனுமதியானது பழுதுபார்க்க ரூ. 6,500-ஐ பள்ளி வசதிக் கட்டண நிதியிலிருந்து உபயோகித்துக்கொள்ளத்தான்.

திரு. கே. எஸ். கணபதி: நான் சொல்லுவது 'recognition of school itself'.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது பள்ளிக்கூடம் நடைபெற்றுவரும் அந்தக் கீற்றுக் கொட்டகைகளைப் பழுது பார்க்க அந்தக் கழக உயர்நிலைப் பள்ளிக்கு அந்தத் தொகையை அனுமதிக்கத்தான் இப்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, ரெகக்னிஷன் என்பதில் இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று பெர்மனென்ட் ரெகக்னிஷன், மற்றொன்று டெம்பொரரி ரெகக்னிஷன். ஆறு மாதங்களுக்குக்கூட ரெகக்னிஷன் கொடுக்கப்படலாம். உள்ள குறைபாட்டை நீக்கிவிட்டால், மறுபடியும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கலாம். இப்போது கொடுக்கப்பட்டுள்ள ரெகக்னிஷன் நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது நீண்ட நெடுங்காலமாக உள்ள பள்ளிக்கூடம்—பந்தனைநல்லூர் அரசினர் கழக உயர்நிலைப் பள்ளிக்கூடம். அங்கே போதிய இடமில்லாது சங்கடப்படுவது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா என்பதுதான் கேள்வி. கீற்றுக் கொட்டகைக்குப் பணம் ஒதுக்கப்படலாமா என்பது பிரச்சினை. ரூ. 6,500 மதிப்பீட்டில் பள்ளி வசதிக் கட்டண நிதியிலிருந்து பழுது பார்த்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது பதில்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது, கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்காக என்று. இதே போல எய்டட் பள்ளிகளிலே கட்டிடம் இல்லாது பல பள்ளிகள் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளிகளிலே பல கட்டிடங்கள் இடிந்து மீண்டும் கட்டப்படாமலிருக்கின்றன. அப்படிப்பட்ட கட்டிடங்களையும் முறையாகக் கட்டிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பல பள்ளிகளுக்கு நிலையான அங்கீகாரம் அளித்திருக்கிறோம். சில பள்ளிகளுக்கு சில நிபந்தனைகளின் பேரிலே அங்கீகாரம் கொடுத்திருக்கிறோம். நிலையான பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் தேவைப்படுகின்றன. அவற்றை ஈட்டு மானியத் தொகையின் மூலம் கட்டித் தருகிறோம். சில நேரங்களிலே அரசு முழு மானியத்தையும் தருகின்றது. ஆனால் இப்போதுள்ள பிரச்சினை இந்தப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் தேவைப்படுகின்றன. அவற்றை ஈட்டு அதற்கு பள்ளி வசதிக் கட்டண நிதியிலிருந்து செலவழிக்கலாமா என்பது கேள்வி. 6,500 ரூபாய் செலவில் அந்தக் கீற்றுக் கொட்டகையைப் பழுது பார்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது அந்தக் கேள்விக்குப் பதில்.

## *Teachers Provident Fund*

* 32. *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether the Government have issued orders to collect back the portion of management contribution to the Teachers' Provident Fund from the Provident Fund of the teachers appointed in Aided Schools prior to 1st April 1964; and

(*b*) if so, whether the Government will reconsider the original orders?

### ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதிக்கு நிர்வாகத்தினர் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையை, அரசு மானிய உதவி பெறும் பள்ளிகளில் 1—4—1964-ஆம் நாளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆசிரியர் களின் வருங்கால வைப்பு நிதியிலிருந்து திரும்பவும் வசூலிக்குமாறு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவுகளை மறுபரிசீலனை செய்வதற் கில்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, 1—4—1964-க்கு முன்பு ஆசிரியர்களுடைய ஊதியம் மிகக் குறைவாக இருந்தது. மேலும் அவர்கள் தங்கள் சேமிப்பு நிதியில் ஆறு சதவிகிதத்தில் மூன்று சதவிகிதத்தை ஆசிரியர்களும் மிச்சமுள்ள மூன்று சதவிகிதத்தை நிர்வாகத்தினரும் செலுத்த வேண்டும் என்று இருந்தபோதிலும், பெரும்பாலான தனியார் பள்ளிகளில் அந்த மூன்று சதவிகிதத்தையும் ஆசிரியர்கள் தான் செலுத்திவந்திருக் கின்றார்களே தவிர, நிர்வாகத்தினர் செலுத்தவில்லை. எனவே அதுவும் ஆசிரியர்கள் செலுத்திய தொகைதான். எனவே அரசு அதை மறுபரிசீலனை செய்து அவர்களுக்கு உதவியாக உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பல ஆசிரியர்கள் இதுகுறித்து விண்ணப்பித்திருக்கின்றார்கள். அரசும் அதைப் பரிசீலனை செய்து 1972-ஆம் ஆண்டு லிபொலைஸ்டு பென்ஷன் திட்டம் அமுலுக்கு வந்துவிட்டதன் காரணமாக, இதை மறுபரிசீலனை செய்வதற்கில்லை என்று அரசு, ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவுகளை இப்போது மரிபரிசீலனை செய்வதற்கில்லை என்று முடிவெடுத்து ஆணை பிறப்பித்திருக்கின்றது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, வருங்கால வைப்பு நிதியில் சேர்ந்த தேதியிலிருந்துதான் பென்ஷன் கொடுக்கப்படுவதற்கு இப்போது ஏ. ஜி. அலுவலகத்தில் அனுமதிக்கின்றார்கள். பழைய சட்டத்தை வைத்துக் கொண்டு பி.எஃப்-ல் சேர்ந்த தேதியியிலிருந்துதான் கணக்கிலெடுத்துக்



கொள்ள வேண்டும் என்று ஏ.ஜி. அலுவலகத்தில் சொல்லுகின்றார்கள். இப்போது லிபரலைஸ்டு பென்ஷன் ஸ்கீம் வந்துவிட்ட காரணத்தினால், இதை 'ரிலாக்ஸ்' செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. எனவே அந்த நிலைமைகளைப் பற்றித் தனியாக ஆராய வேண்டும். ஏற்கெனவே 1—4—1964-க்கு முன்பு இருந்ததை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டார்கள். அரசு அதை மறு பரிசீலனை செய்து அதைச் செய்வதற்கில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

### *Bifurcation of North Arcot District*

* 33 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to bifurcate North Arcot District;

(*b*) if so, the details thereof; and

(*c*) the reasons therefor?

### வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரித்தல்

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எல். பலராமன் சார்பில்) :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், இதன் விபரம் யாது ?

(உ) இதற்கான காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ), (இ) & (உ) இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தை இரண் டாகப் பிரிக்க வேண்டும் என்பதற்கான செயற்குறிப்புகள் அரசிடம் ஏதேனும் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, நிர்வாக சீர்திருத்தக் குழு சில மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கின்றது. அப்படி ஐந்து அல்லது ஆறு மாவட்டங்களைப்

பிரித்து சிறிய மாவட்டங்களாக ஏற்படுத்தலாம் என்று அவர்கள் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். ஆனால் இப்போதுள்ள நிதி நிலை காரணமாக அது தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, எந்தெந்த மாவட்டங்களை அப்படி இரண்டாகப் பிரிக்கலாம் என்று நிர்வாக சீர்திருத்தக் குழு ஆலோசனை சொல்லியிருக்கின்றது? எந்த அடிப்படையில் அப்படிப் பிரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றது? பிரிப்பதற்கான காரணங்கள்—அதன் அடிப்படை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தைப் பிரிக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்கள் என்று சொல்லும்போது, அவற்றில் தென்னாற்காடு, கோவை, திருச்சி, திருநெல்வேலி போன்றவை இருக்கின்றன. நிர்வாக வசதிக்காக அவற்றைப் பிரிக்கலாம் என்று நிர்வாக சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்திருக்கின்றது.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கின்றதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தைப் பிரிக்கலாம்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்கின்றார்கள் என்ற தகவல் இருந்தது. இப்போது அது என்னவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அரசைப் பொறுத்தவரையில், அந்த சாத்தியக்கூற்றை ஆராய்வது நிதிநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### *Representation from Madras Vedantha Sangam Middle School for Handicrafts*

* 34. *Q.*—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) whether any representation has been received by the Government from the Madras Vedantha Sangam Middle School for handicrafts, requesting sanction of compensation for the loss sustained in the fire accident; and

(b) if so, the action taken thereon?



### சென்னை வேதாந்த சங்கக் கல்வி-கைத்தொழில் நடுநிலைப் பள்ளியிடமிருந்து கோரிக்கை

**புலவர் ஓ. அறிவுடை நம்பி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை வேதாந்த சங்கக் கல்வி-கைத்தொழில் நடுநிலைப் பள்ளியிடமிருந்து தீ விபத்தில் ஏற்பட்ட இழப்புக்கு உதவித் தொகை கேட்டு அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Lift Irrigation Co-operative Societies*

* 35. *Q.*—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether there is any proposal with the Government to expedite the Lift Irrigation Co-operative Societies in East Ramanthapuram District, which is solely dependent on the Ground Water Resources; and

(b) if so, the details thereof?

### இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள்

**புலவர் ஓ. அறிவுடை நம்பி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிலத்து நீரையே நம்பியிருக்கும் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களை விரைந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) ஆம்.

(இ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் இறைவைப்-பாசனக் கூட்டுறவுச் சங்கங்களை விரைந்து இயக்குவதற்கான செயற்குறிப்பு ஒன்று கூட்டுறவு சங்கப் பதிவாளரிடம் உள்ளது. மதுரை மண்டல இணைப்பதிவாளர் செயற்திட்டம் ஒன்றை வகுத்து அதன்படி திட்டங்களை நிறைவேற்ற இராமநாதபுரம், தேவக்கோட்டை மற்றும் சிவகெங்கை துணைப்பதிவாளர்கள் மூலமாக தக்க நடவடிக்கை மேற்கொண்டுவருகிறுர்.

### *Co-operative Development Fund*

* 36 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(*a*) the amount collected under the Co-operative Development Fund during 1972-73;

(*b*) the amount spent from that fund; and

(*c*) the details thereof?

### கூட்டுறவு வளர்ச்சி நிதி

புலவர் ஓ. அறிவுடை நம்பி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கூட்டுறவு வளர்ச்சி நிதியில் 1972-73-ஆம் ஆண்டு எவ்வளவு வசூலாயிற்று?

(இ) அந்நிதியில் செலவானது எவ்வளவு?

(உ) அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ரூ. 30,50,298.03 காசு மேலும் இத்துடன் கலைக்கப்பட்ட நீ மற்றும் பொது காப்பீட்டுக் கூட்டுறவு கழகத்தின் எஞ்சிய தொகையான ரூ. 14,76,000 1972–73 ஆண்டு சேர்க்கப் பட்டது.

(இ) ரூ. 1,79,464.73 காசு.





(உ) செலவான தொகையின் விவரம்:—

| | ரூ. காசு |
|---|---|
| (i) தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவு கூட்டமைப்பு நிறுவனத்திற்கு கடன். | 82,852·70 |
| (ii) அலுவலகச் செலவுகள் .. .. .. | 77,166·97 |
| (iii) எழுதுபொருள்கள் .. .. .. | 1,139·52 |
| (iv) அஞ்சல் செலவுகள் .. .. .. | 900·00 |
| (v) வங்கிச் செலவுகள் .. .. .. | 1,365·95 |
| (vi) பயணப்படி .. .. .. .. | 11,811·91 |
| (vii) எதிர்பாராத செலவுகள் .. .. | 277·68 |
| (viii) மானியம் (தொழிற் கூட்டுறவு முன்ஞேடி திட்டம்). | 4,000·00 |
| | 1,79,464·73 |

மாண்புமிகு மேலவைத் தலைவர்: விஞக்கள் 37-ம் 38-ம் ஒத்திவைக்கப் படுகின்றன.

### *Distribution of House-Sites through Harijan Welfare Department*

* 39 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether lands were acquired for the distribution of house-sites through Harijan Welfare Department in Poigai Village, Vellore Taluk, North Arcot District;

(*b*) if so, whether the amount of compensation was paid to them; and

(*c*) if not, the reasons for the delay in payment?

### அரிசன நலத்துறை மூலம் வீட்டு மனை வழங்கல்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் தாலுக்கா, பொய்கை கிராமத்தில் அரிசன நலத்துறை மூலம் வீட்டு மனை வழங்க நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டதா?

(இ) ஆமெனில், இதற்கான தொகை வழங்கப்பட்டதா?

(உ) இல்லையெனில், கால தாமதத்திற்குக் காரணம் யாது?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) வினாவிற்கு இடமில்லை.

## *Construction of Overhead Tanks*

* 40 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) the amount allotted Panchayat Union-wise by the Harijan Welfare Department in North Arcot District for the construction of overhead tanks during 1969–70, 1970–71 and 1971–72;

(b) whether those amounts have been spent; and

(c) if not, the names of the Panchayat Unions which have not spent the allotment and the amount which remains unspent?

## மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டுதல்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எல். பலராமன் சார்பில்):** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், அரிசன நலத்துறை மூலம் 1969-70, 1970-71, 1971-72 ஆகிய ஆண்டுகளில் மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு ஒதுக்கீடு செய்த தொகை பஞ்சாயத்து ஒன்றியங்கள் வாரியாக எவ்வளவு?

(இ) இத் தொகைகள் செலவழிக்கப்பட்டனவா?

(உ) செலவழிக்கப்படவில்லையெனில், எந்தெந்த ஒன்றியங்களில் எவ்வளவு தொகை செலவழிக்கப்படாமல் உள்ளது?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அ) ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(இ) & (உ) வினாவிற்கு இடமில்லை.

MR. CHAIRMAN: Questions are over.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]



(பிற்பகல் 3-10)

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, I have given notice of an adjournment motion.

MR. CHAIRMAN: The hon. Member has got an opportunity to talk about it during the discussion on the Supplementary Budget.

THIRU G. SWAMINATHAN: Sir, there has been a closure of the theatres throughout Tamil Nadu and I would like to have a reply from the Hon. the Chief Minister on this matter.

## 2. 1974-75-ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையின்மீது விவாதம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** மாண்புமிகு தலைவரவர்களே, 1974-75-ம் ஆண்டு துணை மானிய மதிப்பீட்டின்மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மதிப்பீட்டிலே தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் நலனுக்காக மாவட்ட நல அதிகாரிகள் இரு துறைகளுக்கும் ஒருவராக இருந்ததை மாற்றி ஒவ்வொரு துறைக்கும் தனித் தனியாக மாவட்ட நல அதிகாரிகளை நியமிப்பது குறித்து கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இது நல்ல காரியம் தான். ஆனால் இந்த அதிகாரிகள் சரியான முறையில் செயல்படுகிறார்களா, இதற்குச் செலவழிக்கப்படும் தொகையானது தாழ்த்தப்பட்டோருக்கு, பிற்பட்டோருக்கு நல்ல முறையில் நூற்றுக்கு நூறு பயன்படுகிறதா என்று சந்தேகிக்கும் அளவிலே இருக்கிறது. அதிகமாகச் சொல்லப்போனால் சென்ற வாரத்திலே ஒரு தாழ்த்தப்பட்ட மாணவருக்கு காலேஜ் ஹாஸ்டலிலே இடம் கிடைக்கவில்லை.

**திரு. கே. எஸ். கணபதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாழ்த்தப்பட்டவர் என்கிறார். வகுப்பிலேயா அல்லது எதிலே என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** வகுப்பில் தாழ்ந்தவர்.

**திரு. ஜி. என். ராஜு:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் இந்தத் துணை மானியத்தின்மீது பேசும்போது உத்தியோகஸ்தர்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அலுவலர்களைப் பற்றிப் பேசுவதற்கு எந்த மாண்புமிகு உறுப்பினருக்கும் உரிமை இல்லை. காரணம் அலுவலர்கள் பதில் சொல்வதற்கு எந்த விதமான வசதியும் இல்லை. அரசு செய்த தவறுகளை மாத்திரம் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1974 ஆகஸ்டு 17

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பதில் சொல்கிறேன். அரசு அலுவலர்களும் அரசைச் சேர்ந்தவர்கள் தான். அதில் தவறுதல் இருப்பதாகத் தெரியவில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் என்றால் வகுப்பில் தாழ்த்தப்பட்டவர்கள். நான் சொன்ன தாழ்த்தப்பட்ட மாணவருக்கு காலேஜில் இடம் கிடைத்திருக்கிறது. ஆனால் ஹாஸ்டலில் இடம் கிடைக்கவில்லை. அவர்களுக்காக ஹாஸ்டல் நிறைய கட்டுகிறோம். 50 ஹாஸ்டல் கட்டுகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறபோது, அவருக்கு ஹாஸ்டலில் தங்க வசதி இல்லை. அவர் 50 மைல் தள்ளி வந்து அந்த காலேஜில் படிக்க வேண்டியிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்காக 21 நாட்கள், 23 நாட்கள் கல்லூரிகள் திறப்பது காத்துக்கொண்டிருக்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்தமாதிரி இந்த மாணவனுக்குப் பிறகு இடம் கிடைத்தது. ஆனால் அந்த மாணவனுக்கு தங்க வசதி வேண்டுமே, அது இல்லை. அவன் நிதி வசதி இல்லாத மாணவன், கஷ்டப்படக்கூடிய மாணவன். ஏழை. எத்தனையோ பேர்கள் தனியான முறையில் ஹாஸ்டல் நடத்துகிறார்கள். ஆனால் இவன் பண வசதி இல்லாததால் அதில் சேர முடியவில்லை. அறக்கட்டளைகள் நிறைய இருக்கின்றன. சொத்துக்கு வரம்பு வந்தவுடனே வர வர அறக்கட்டளைகள் ஜாஸ்தியாக ஆகிவிட்டன. ஆனால் இந்த அறக்கட்டளைகளில் போய் இந்த அரிஜன மாணவனுக்கு இடம் கிடைக்குமா என்று ஆராய்ந்து பார்க்கும்போது, இந்த மாணவர் யார் என்று ஆராய ஆரம்பித்து பிறகு சேர்க்க முடியாது என்று வெளிப்படையாகச் சொல்வதில்லை. ஏதோ சாக்குப் போக்கு சொல்லி, கடைசியில் இடம் இல்லை என்று சொல்கிறார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால், தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பாடுபடும்போது, அவர்களுக்காக அதிகாரிகளை நியமிக்கும்போது, இந்த மாதிரி ஓரிரு மாணவர்களுக்கு நியாயமான வசதிகள் கிடைக்கவில்லையென்றால், அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டியது அவர்களின் முதல் பொறுப்பு. இரண்டு இலாகாவையும் ஒருவரே பார்க்கிறதால், முடியுமோ முடியாதோ என்று பிரித்திருக்கிறார்கள். வரவேற்க வேண்டிய ஒன்று. இனிமேல் புகார் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தமாதிரி மாணவர்களை அறக்கட்டளைகளில் சேர்ப்பதில்லை. மற்ற வகுப்பாக இருந்தால், இடம் கிடைக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் இல்லை. இல்லை என்பதற்கு ஏதாவது பேரைக் காட்டி பட்டியல் பூர்த்தியாகி விட்டது என்கிறார்கள். நாட்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இன்னும் கொடுமை இழைக்கப்படுகிறது. இன்னும் அவர்கள் முன்னேற முடியவில்லை. அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். சுதந்திரம் பெற்று இத்தனை வருஷம் ஆகியும் அவர்கள் முன்னேற முடியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு உறுப்பினர் பேசும்போது மற்றவர்கள் பேசினால், பேசுகிற உறுப்பினரின் பேச்சை எப்படிக் கேட்க முடியும்?



1974 ஆகஸ்டு 17]

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தாழ்த்தப்பட்டவர்கள் இன்னமும் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர் சேரிகளில் மாறுபாடு இல்லை. சேரிகள் என்ற வார்த்தை மறையவில்லை. எங்கள் நகராட்சியில் 9 சேரிகள் பரம்பரையாக வரக்கூடியது. அது மாதிரி மற்ற நகராட்சிகளில் இருக்கின்றன. எங்கள் நகராட்சியில் சேரிகளுக்கு வரி கிடையாது. ஆனால் மற்ற நகராட்சிகளில் சேரிகளுக்கு வரி இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. இதை விரிவாக ஆராய வேண்டும். ஜில்லா அளவிலே அதிகாரிகள் இருக்கின்ற காரணத்தினால், அனுகூலமான ஒரு நிலைமையை உண்டு பண்ணுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நிலைமையில் தாழ்த்தப்பட்டோரில் ஓரிருவர்தான் அதிகாரிகளாக இருக்கிறார்கள். 10 சேரிகளில் ஒருவருக்கும் டெரெஸட் கட்டிடம் கட்ட வசதி ஏற்படவில்லை. சுதந்திரம் அடைந்து 27 ஆண்டுகள் ஆகியும் இந்த நிலைமை.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் ஹாஸ்டலில் ஏதோ ஒரு மாணவனுக்கு இடம் கிடைக்கவில்லை, ஜாதித் துவேஷத்தால் இடம் கிடைக்கவில்லை என்று பேசுகிறார்கள். ஒரு கல்லூரியில் 15 மாணவர்களுக்கு மேற்பட்டால் ஆங்காங்கே விடுதி திறக்கப்பட்டு வருகிறது. எந்தக் கல்லூரியிலாவது விடுதி உருவாக்கப்படவில்லை என்றால் அங்கே 15 பேர்கள் வந்து சேரவில்லை என்று பொருள். அந்தக் கல்லூரியில் விடுதி இருந்தும் சேர்க்கப்படவில்லையா, அல்லது விடுதி இல்லாமல் இருக்கிறதா? அப்படி ஓரிருவர் இருந்தால், சேர்க்கப்பட முடியாது, விடுதி ஏற்படுத்த முடியாது, முடியாது என்று கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். பதினைந்து பிள்ளைகளுக்குக் குறைந்து விடுதி திறக்க முடியாது. அப்படிக் குறைந்திருந்தால், ஒன்று செய்யலாம். அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், அரசாங்கம் உத்தரவிடும். அந்த உத்தரவின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட ஹாஸ்டலில், மானியம் கொடுத்து நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஹாஸ்டலில் அவர்கள் சேர்க்கப்படலாம். அந்தத் தொகையை அரசாங்கம் கொடுக்கும். உறுப்பினர் அவர்கள் எதிலே குறை என்று சொன்னால், மேற்கொண்டாவது ஜாக்கிரதையாக இருக்க முடியுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 3-20)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அவர் நேஷனல் கல்லூரியில் படிக்கின்ற மாணவர். அவருக்குச் சிபாரிசு செய்தவர் தாழ்த்தப் பட்டவர்களுக்குத் தலைவராக இருக்கின்ற டாக்டர் ராஜன் அவர்கள். திங்கட்கிழமை அன்று நிச்சயமாக வருவேன் என்று அவர் சொன்னார். அப்போது அந்த மாணவனின் பெயரைக் குறிப்பாகச் சொல்லுகிறேன்.

[திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1974 ஆகஸ்டு 17

அடுத்தபடியாக, மதுவிலக்கு சம்பந்தமாக, சென்ற வருஷமே கள்ளுக்கடைகள் எடுக்கப்பட்டன. இந்த வருஷம் இந்த மாதம் முடிந்த பிறகு, வெளிநாட்டு மதுக்கள், உள்நாட்டுச் சாராயம் எல்லாம் போய்விடும் என்று சொல்லுகிறார்கள். இது நல்ல காரியம். காங்கிரஸ் கட்சி நடத்திய நியாயமான அறப் போராட்டத்திற்குச் செவி சாய்த்ததுபற்றி ரொம்பச் சந்தோஷப்படுகிறேன். இருந்தாலும் மதுவிலக்கை மீண்டும் கொண்டு வருவதாலும், கிண்டி ரேஸ் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதாலும் சர்க்காருக்கு வருவாய் குறைந்து விட்டது, அதை ஈடுகட்டுவதற்கு வரி போட்டுத்தான் ஆக வேண்டுமென்று, ஏற்கெனவே இருந்த வரிப்பளுவோடு மறுபடியும் 'அடிஷனல்' வரிப்பளு விற்பனை வரி மூலமாகப் போட்டிருக்கிறார்கள். ஆதிகாலத்தில் மதுவிலக்கைக் கொண்டுவரும்போது, திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் விற்பனை வரி என்று ரூபாய்க்கு ஒரு பைசா போட்டார்கள். அந்த விற்பனை வரியானது தமிழகத்தில் காமதேனு மாதிரி இருக்கிறது. எப்போது எதைக் கேட்டாலும் கொடுக்கின்ற அளவுக்கு அது இருக்கிறது. ஏழை மக்கள், நடுத்தர மக்கள் மற்றும் பணக்காரர்கள் வரை உபயோகிக்கின்ற எல்லாப் பொருட்களின் விலையும் இப்போது உயர்ந்து வரும் விலைவாசியில் மேலும் உயர்ந்திருக்கிறது. சென்ற வருஷம் எவ்வளவு விற்பனை இருந்ததோ அதைப்போல் பன்மடங்கு விற்பனை இருக்கிறது. அதனால் விற்பனை வரியும் அதிகம் வரும். விலை ஏறும் போது 1,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று விற்பனை அதிகமாகும்போது, விற்பனை வரியும் அதிகம் வருகிறது. மதுவிலக்கை உத்தேசித்து, கள்ளுக் கடைகளை எடுத்தபோது, ஒரு அளவில் வரி போட்டிருக்கிறார்கள். மறுபடியும் சாராயக் கடைகளை, அந்நிய மதுக் கடைகளை, குதிரைப் பந்தயத்தை ஒழிக்கிறோம் என்று புது வரிகளைப் போடுகிறார்கள். மதுவிலக்கை எடுத்து விட்டு, கள்ளுக் கடைகளை, சாராயக் கடைகளைக் கொண்டுவரும்போது, வருமானம் நிறைய வருகிறது என்று வரியைக் குறைக்கவில்லை. ஆகவே இப்போது அதிக வரி போடுவது சரியல்ல.

அடுத்து, கிண்டி ரேசை ஒழிப்பது என்பது அவர்களுடைய கட்சிக் கொள்கை. நாங்கள் அதை தேர்தல் 'மானிபெஸ்டோ'வில் சொல்லியிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருந்தால், 1967 ஆம் வருஷத்திலேயே ஒழித்திருக்கலாம். 1971-ஆம் வருஷம் தேர்தலுக்குப் பிறகாவது ஒழித்திருக்கலாம். கட்சியின் கொள்கை என்றால் முதலில் ஒழித்திருக்கலாம். 7, 8 ஆண்டு அனுபவத்திற்குப் பிறகு, இந்த 8 ஆவது வருஷத்தில் அந்திக்காலத்தில் இதுபற்றி நினைவு வந்ததற்கான காரணம் என்ன? கட்சிக் கொள்கையாக இருந்தால், அதை முதலிலேயே நிறைவேற்றியிருக்கலாம். கிண்டி ரேசை ஒழிக்க வேண்டியது தான், இத்தனை வருஷம் தாமதித்துச் செய்வதற்குக் காரணம் என்ன?



1974 ஆகஸ்டு 17]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேர்தலுக்கு ஒரு வருஷம்தான் இருப்பதால் நல்ல காரியம் எதுவும் செய்யக்கூடாதா?

திரு. ஓய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மக்களுடைய சந்தேகத்திற்கு இடம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1959-ஆம் வருஷம் காங்கிரஸ் அரசு சட்டம் கொண்டு வந்தது. சட்டம் கொண்டு வந்தும் அதை அந்த அரசு நிறைவேற்றவில்லை.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: 8 வருஷத்திற்குப் பிறகு இன்றைக்குத்தான் கட்சிக் கொள்கை நினைவுக்கு வந்ததா? எந்த சர்க்கார் தவறு செய்தாலும். . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: குதிரைகள் எல்லாம் கிழமாகப் போயிருக்கும்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அதற்கு மருந்துகள் எல்லாம் நிறைய இருக்கின்றன. சினிமாவைப் பொறுத்தவரையில், வசதியுள்ளவர்கள், பணம் உள்ளவர்கள் சினிமா பார்க்கலாம். இதற்கு வரி போடுவதால் நகராட்சிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்போதுதான் சினிமா மூலம் அதிக வருமானம் வருகிறது. சினிமா வருமானத்தைப் பார்க்கும்போது, அது நகராட்சிகளுக்கு ஒரு காமதேனு போல் இருக்கிறது. நேற்று எப்படி வருமானம் இருந்தது, இன்று எப்படி இருக்கிறது, நாளை எப்படி இருக்குமோ தெரியவில்லை. 'நேற்று இன்று நாளை' என்று கூட சினிமா போட்டிருக்கிறார்கள். அதுமாதிரி பயங்கரமாக இருக்கிறது. நகராட்சி வருமானத்தைப் பாதிக்காத அளவில் சர்க்கார் உறுதிமொழி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மோட்டார் வரி பற்றி அதிகம் சொல்லுவதற்கில்லை. பாசஞ்சர்களுக்கு பாதகம் ஏற்படாத முறையில் பார்த்துக்கொள்ள வேண்டும். கிராமங்களுக்கு உள்ள ரோடுகளுக்கான வசதிகளை அதிகப்படுத்த உத்தேசம் பண்ணியிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நகராட்சிகளுக்கு ஏற்கெனவே 'டோல் காம்பன்சேஷன்' என்று இருந்தது. கார்கள் இல்லாத இடத்திற்கு அந்தக் காலத்தில் போட்ட திட்டம். இன்று 100-க்கு மேற்பட்ட நகராட்சிகள் இருக்கின்றன. டவுனில் இருந்துதான் டவுன் பஸ் போகிறது. முன்பு ஒரு மணிக்கு ஒரு பஸ் போனது. இப்போது ஒரு

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1974 ஆகஸ்டு 17

செகண்டுக்கு ஒன்று என்ற அளவுக்குப் போகிற நிலைமை இருக்கிறது. ஆகவே நகராட்சிகளுக்கு நியாயமான 'காம்பன்சேஷன்' ஒதுக்க வேண்டும். இனிமேலாவது அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பிரச்சினை பற்றி நாடு முழுவதும் பேச்சு நடக்கிறது. முன்பெல்லாம் நம் நாட்டிலே படியால் அளந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். இனி 100, 200, 500 என்று அரிசியை எண்ணிச் சாப்பிடுகிற அளவுக்குப் போய்விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** படியால் அளந்து சாப்பிடுவதில்லை, கையில் எடுத்துத்தான் சாப்பிட வேண்டும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** முன்பு அளந்துதான் போடுவார்கள், இப்போது நிறுத்துப்போடுகிறார்கள். பிடி அரிசி என்று வந்து விடுமோ என்று அச்சமாக இருக்கிறது. ரூபாய்க்கு 1,000, 500 அரிசி என்று வந்து விட்டால், என்ன செய்வது? சர்க்காரை இதற்குக் குறை கூறவில்லை. நான் கூறியவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*THIRU S. NARAYANASWAMY : Hon. Chairman, I am grateful for the opportunity given to speak on the First Supplementary Estimates presented by the Hon. the Chief Minister. I welcome his effort to mobilise additional revenue in the middle of the year, instead of presenting a huge deficit at the end. Perhaps he still has to present a deficit at the end, even after presenting the Supplementary Budget. But the effort made will make the people aware of the state of Tamil Nadu State's finances. In that sense, I think it is a very realistic effort that he has made and I must also say that it is a fine effort because he is trying to mobilise Rs. 6.06 crores. I would not say it is a drastic effort but it is only a mild effort and, therefore, I appreciate his coming before us with this Supplementary Budget. Furthermore, I should like to say that I am deeply sensible of the several welfare schemes on which funds are supposed to be invested or expected to be invested during the year, particularly those on Harijan Scholarships, Rural Roads and Rural Water-supply. These appear to me to be very important and I am glad they are receiving attention even in the Supplementary Budget. I am further aware that all welfare measures cost money and when they cost money, it is not



1974 ஆகஸ்டு 17] [Thiru S. Narayanaswamy]

enough to appreciate the effort and not to provide the funds; and therefore, I hope, whatever observations I make will be understood in the spirit in which I am making them. I do not want to speak out on a political level about the Budget but I would like to speak on the economic level, because it involves great hardships to certain sections. I would like to make a reference to two points, one the taxation measure and the other the socio-economic measure. The first is the multi-point sales tax which has been increased from 3.5 per cent to 4 per cent. It is obvious that when we want extra revenue, we are bound to touch on the highest source of revenue in the State and obviously resort has been had to the multi-point sales tax. The multi-point sales tax has been the source of continuous and persistent harassment to the people not only because the tax is paid ultimately by the consumers but because of the number of points at which it is collected and of the number of persons harassed. This is what harasses the people rather than the single point tax. I have had to appear before Select Committees, before Taxation Commissions on this question of sales tax and I for one have plumped for single point sales tax, merely because the number of assessments would get reduced and the number of persons that have to appear before the Commercial Tax Officers would get reduced. The increase in multi-point tax is from 3.5 per cent to 4 per cent and it looks quite innocuous. But let us remember that it goes on top of something else and when we levy 4 per cent tax at 3 or 4

(பிற்பகல் 3-30)

points, the aggregate tax becomes 16 per cent. Single point tax has gone very high already, mainly because the mercantile community foolishly exaggerated—I say this very deliberately—not knowing that the articles suffered tax only at 3 points, and said that the articles suffered tax at five points and then the authorities multiplied the multi-point tax by five and levied a very high single point tax. This happened because of the foolishness of the business community in exaggerating the number of points for the purpose of getting a single point tax and thus made a very silly mistake. But I hope advantage will not be taken by the Government for having a swollen single point tax. I do not complain about it now. The ultimate effect of the increase of multi-point tax from 3.5 per cent to 4 per cent will be 16 per cent and this will hit the consumer very hard. I want the Government to remember that

this comes on top of a large number of excise duties that have been levied in the Supplementary Budget which, Thiru Chavan claims, will bring him Rs. 200 crores in a full year and Rs. 160 crores in part of the year and it has caused a very great hardship to the people. This is only a supplementary excise duty called by a different name—Sales Tax. Therefore, I would like the Hon. the Chief Minister to consider this needless hardship caused to the consumer. It is not the merchant who pays the sales tax. He is, after all, a collection agent and the consumer alone pays the sales tax.

Then, there is the most controversial subject on which everybody is eager to show that we are a highly moral people. I come to the question of abolition of races and race courses. I can speak with a certain amount of boldness on this subject. I have never bet in my life; I have never gone to the races for betting. Only once I went there to hand over the Merchants' Cup to the winning horse-owner. I refused to do it the previous year. But pressure was brought on me and I had to go there for that purpose. On principle I never go to the race course. I have no relations employed in the Race Club. I do not own any race horse. I am saying all these because I have to establish my testimonials before I speak on the subject; I do not want to be suspected of having any interest in seeing that the race is not abolished. I know that this has been done with the most sincere objective, an honourable objective, namely, the protection of the poor and the middle class people who desperately resort to betting for the purpose of supplementing their income and who go to Guindy with high expectations. I have to pity them. I see them going in taxis and coming back walking, not being able to return by taxis. All this I know, because I almost live on the road leading to the race course and I have been seeing the pitiable sight. But I would like the Hon. the Chief Minister to give careful consideration to some of the points which have disturbed me deeply, when he has taken, if I may say so, the very courageous step of abolishing race courses and betting. What I want to say is this. Now if we consider this as speculation, if we consider this as gambling from which the poor man and the middle class persons have to be protected, we must start somewhere else. We have to start with



the lotteries. So far as horse race and betting are concerned, a man buys a ticket and goes to the race course. He devotes a lot of time previously, discusses with friends and then goes to the race course, after making calculation about the winner in the race, using much brain and brawn. Let me tell you that all these exercises are helpful to him and after these, he seeks a reward on the race course. But in the case of lotteries, what one has to do is to approach a pavement vendor and purchase a ticket. The poorest man on the road, the petty shop-keeper and the man from the poorest strata buy this ticket without going anywhere. Now the element of gambling or speculation is more involved in a small rotating drum. Once I was one of the judges and what they are doing is to rotate the drum and to ask somebody to pick up the number. The number comes on the board and a person wins the prize for doing nothing. The element of gambling in a lottery system is far greater than the element of gambling in races. I do not deny the element of gambling in races. I am not for a moment suggesting that it is not somewhat of a gamble like our lottery system. What I want to say is that we will have to begin somewhere else.

The second point about the race business is that today the Madras Race Club is employing 500 people directly as whole-time employees and about 1,500 people as part-time employees Out of this 1,500 people employed on a part-time basis, I am told that about 1,000 people have no other job and the other 500 people employed elsewhere are doing part-time job in the race course during the season. Therefore, the aggregate number of persons employed in the race course alone, with no other employment, will be about 2,000. The persons employed in the tertiary sector, viz., persons who are indirectly employed in some jobs by reason of the race course existing there will be about 1,000 according to my estimate. Now, as it is, we have a very colossal unemployment problem in the country and in particular in Tamil Nadu State. I have to state this for one reason. The Committee that was appointed to settle the Ceylon refugees some four years ago, presided over by Thiru Manubhai Shah, came to Madras and I was having a lot of discussion with them. 31,000 people came at that time. We wanted to settle them on Plantations and Thiru Manubhai Shah admitted that they were able to settle only 3,000 persons. Most of them are South Indians.

[Thiru S. Narayanaswamy] [1974 ஆகஸ்டு 17

Therefore, I am coming to my point. I have mentioned this to make my point very clear. I do not want to be misunderstood. There is a lot of unemployment. We are adding every month —this is a demographers' figure—400 thousand persons to the employable pool in the whole country. Nearly 400,000 persons out of 1,200,000 children who are born every month—come of employable age and we have to provide jobs to them. There is no corresponding quantity of jobs available in the country. So between this and the huge unemployment problem which is generally prevailing in the country which we have got to solve, this is not a good thing to do at this particular time. The Race Course does not spend on itself and there are beneficiaries of its income. May I say, Sir, that the Voluntary Health Service Hospital received a Rs. 5 lakhs donation for establishing a hospital to begin with? Besides, the Voluntary Health Service Hospital in Adyar receives Rs. 50,000 to Rs. 75,000 yearly by way of annual grants for maintenance. I am on the Central Committee and I know what the Madras Race Club has done to help very many beneficent causes, apart from running the hospital. The most important thing is that the abolition of racing is not going to transform the race-goer into a monk or drive him into a cave to become a saint. He may go to Poona, Bangalore or Hyderabad and he is going to do all these things.

We have put up three five-star hotels in Madras City and two of them have already received very large sums from the big financial institutions in order to increase their facilities. All these are intended to subserve visiting persons from other States and from other Cities and also to promote tourist traffic. I am all for Prohibition; by revival of Prohibition, the State has undertaken a big sacrifice. The State has taken up a tremendous responsibility and I extend my unqualified support to what has been done. Nevertheless, it is going to shrink some part of the tourist traffic that comes to Tamil Nadu. Over and above that, if we abolish racing, I think tourist traffic will be affected, hoteliering will be affected and the infra-structure facilities will not be availed of and the revenue will go to other States.

The last point which I would like to make is that out of the total tourist traffic that comes to India which is a very small number, only 15 per cent comes to the Southern region. This is a figure given by the Tourism Organisation. I do not want that to



1974 ஆகஸ்டு 17] [Thiru S. Narayanaswamy]

shrink further. So far as we are concerned, some of us are trying very hard to promote this tourist traffic. This race-abolition has the indirect effect of shrinking our tourist traffic further and we will be in some difficulty. Let it not be thought that I want to support racing; I have already stated the reasons. But I do think that the measure is ill-timed and the loss of revenue of Rs. 2 crores may again become the revenue of some other cities or some other States. I hope this point will be considered by the Hon. the Chief Minister.

Otherwise, I welcome this Budget as meaning only to see that we bridge the budgetary gaps. I approach this in a constructive spirit. I hope my remarks and observations will be received and replied to in a constructive spirit. I have done, Mr. Chairman.

*(பிற்பகல் 3-40)*

*திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, இவ்வவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற துணை மதிப்பீட்டினை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இதில் ரூ. 58 கோடி இழப்பினை ஏற்படுத்துகின்ற சமூக பாதுகாப்புத் திட்டங்கள், முக்கியமாக மது விலக்கை, குதிரைப் பந்தயத்தை ஒழிக்கின்ற நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அதற்கு ஈட்டு வகை செய்கின்ற வகையில் 14 கோடி ரூபாய்க்கு ஈடு கட்டும் வேறு சீரமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்தும் நிலையும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் துணை மதிப்பீட்டில் தமிழகத்திலே நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு, கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைப்பதற்கு என்று போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு மாதம் ரூ. 75 நிதியுதவி அளிக்கின்ற, ஓய்வு ஊதியம் அளிக்கின்ற திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது. 3½ லட்சம் ரூபாய் செலவு செய்வதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வருகின்றவர்கள் என்ற நிலையில் அந்தப் போராட்டத்திலே உயிர்நீத்த, துன்பப்பட்ட பல்வேறு தியாகிகளின் சார்பில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது 3 மாதம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவது என்ற விதிமுறை இருக்கின்றது.*

*தேசியப் போராட்டம் அகில இந்திய அளவில் பெரும் போராக நடந்ததால், பல மாதங்கள், பல வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்கின்ற ஒரு சூழ்நிலை இருந்ததனால், அந்த தேசியப் போராட்டத்தில் 3 மாதம் சிறைத் தண்டனை அனுபவித்திருக்க வேண்டும் என்ற விதியை வகுத்துக்கொண்டார்கள். ஆனால் நம் மாநிலத்தில் கன்னியாகுமரி இருக்கவேண்டும் என்பதற்காக நடைபெற்ற*

போராட்டம் 10 அல்லது 12 ஆண்டுகள் அளவில் நடந்தது. போராட்டம் வேகமாகவும் நடந்தது. ஒரு சில ஆண்டுகள் பேச்சுவார்த்தை அளவில் இருந்தது. அந்தப் போராட்டம் வேகமாக நடைபெற்றதால், அந்த போராட்டத்தினுடைய காலம் குறைவான காலம். ஆகவே ஓய்வூதியம் வழங்க 3 மாத கால அளவு என்று இருப்பதை தளர்த்த வேண்டும். அந்நிய ஆட்சியில் அடக்குமுறை கடுமையாக இருந்தாலும், அந்நியர் ஆதிக்கத்தில் ஆங்கிலேயர்கள் இந்திய அதிகாரிகளைத்தான் தேசியப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்களை அடக்கப் பயன்படுத்தினார்கள். ஆனால் கன்னியாகுமரி தமிழகத்தோடு இணைய போராட்டம் நடத்தத் தொடங்கியபோது, அங்கே மலையாளத்தினர் ஆட்சியிலே இருந்தார்கள். மலையாளத்திலேயே அவர்களை எதிர்க்கின்ற சூழ்நிலை ஏற்பட்டபோது, அந்த ஆட்சிக்குச் சாதகமாக இருந்தவர்களுடைய அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டவர்களாக கொடுமைகளை அனுபவிக்க வேண்டியிருந்தது. கொடுமையின் கால கட்டம் குறைவாக இருக்கலாம். ஒரு வாரம், 15 நாட்கள், 25 நாட்கள் என்று அவர்கள் சிறையில் இருந்திருந்தாலும், அவர்கள் 5 ஆண்டுகளுக்கு உரிய கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சூழ்நிலை அன்றிருந்தது. அடக்குகின்றவர்கள் எந்தப் பகுதிகளை இழந்தார்களோ, அந்தப் பகுதியில் இருந்தவர்கள் மலையாள இனத்தவர். ஆகவே மிக்க கொடுமைக்கு ஆளாயினர். அந்தப் போராட்டத்தின் கொடுமையை, எந்த மாதிரியான அடக்குமுறையை, கொடுமையை அதன் உச்ச கட்டத்தில் அனுபவித்திருப்பார்கள் என்பதையெல்லாம் மனதில் வைத்து, இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கு 3 மாதம் என்ற கால அளவினைத் தளர்த்தி, போராட்டம் நடத்தியவர்கள் எத்தனை பேர் என்று அறிந்து, எவ்வளவு பேர் இருந்தாலும், ஓய்வூதியம் அளிக்க வேண்டும். இப்போதும் உயிரோடு அவர்களில் பலர் இருக்கின்றனர். சட்ட மன்றத்தில் அவர்கள் உறுப்பினர்களாக இல்லாமல் இருக்கலாம். அவர்களையெல்லாம் அறிந்து, சேர்த்து ஒரு குழு அமைத்து, யார் யார் சிறையிலே இருந்தார்கள் என்ற பட்டியல் தயார் செய்து, அந்த ஓய்வூதியத்தை வழங்கவேண்டும் என்ற விதிவகையினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமான பல ரெக்கார்டுகள் கேரளா செக்ரடேரியட்டிலே தான் இருக்கின்றன. சிறைச்சாலையிலே இருந்தார்கள் என்பதற்கான ரெக்கார்டுகள்—அவர்கள் கோட்டாறு போலிஸ் ஸ்டேஷனிலே, குலசேகரம் போலீஸ் ஸ்டேஷனிலே, விளவங்கோடு போலீஸ் ஸ்டேஷனிலே சிறைப்பட்டு இருந்திருந்தாலும்—அவை திருவனந்தபுரம் செக்ரடேரியட்டிலே தான் இருக்கின்றன. எடுக்க முடியாத ஒரு சூழ்நிலையிலே இருக்கின்றன. இந்தப் போராட்டத்திலே ஈடுபட்ட, இந்தப் போராட்டத்தை நடத்திய தளபதிகள், அந்தச் சமயத்திலே இருந்தவர்களையெல்லாம் வைத்து நாம் அந்த ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



இந்தமாதிரி கன்னியாகுமரி போராட்டம், திருத்தணி போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் இவைகளையெல்லாம் தமிழ் தேசிய இனப் போராட்டமாகக் கருதி, தமிழ் இனப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு எல்லாம் ஓய்வூதியத்தைக் கொடுக்கும் நிலைமை ஏற்படுத்தியதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகின்றேன்.

அடுத்து, இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின் தங்கிய மக்களுக்கும் எந்தெந்த வசதியெல்லாம் செய்யப்படுகிறது என்று விரிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். இப்போது தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய மக்கள், இளைஞர்கள் முது கலைப் பட்டம் அல்லது பி.ஏ. பட்டம் பெற்றால், அவர்களை ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு தயார் செய்வதற்காக இங்கே கல்லூரிகள் ஏற்படுத்தி, அவர்கள் அதில் வந்து தங்கி பயன் பெறுகின்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அண்மையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்திலே கேள்வி நேரத்தில் கூறியதை செய்தித்தாளில் படித்தேன், இந்த ஆண்டும் சென்ற ஆண்டும் ஐ. ஏ. எஸ் தேர்வில் தமிழ் மாணவர்கள் அதிக அளவிலே வெற்றி பெறமுடியாத ஒரு சூழ்நிலை இருப்பதை எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பின் தங்கிய மக்களுக்கு என்று ஐ. ஏ. எஸ். வகுப்புகள் நடைபெறுகின்றன. சிறந்த ஆசிரியர்கள், நிபுணர்கள் இருந்து பயிற்றுவிக்கிறார்கள். அவர்கள் பயிற்றுவிக்கின்ற பாடங்களை டேப் ரெக்கார்ட் செய்து, வாரத்தில் ஒரு நாளோ இரண்டு நாட்களோ சென்னை, மதுரை எக்டென்சன் ஹால் அல்லது மண்டபங்களில் வைத்து டேப் ரெக்கார்ட் செய்த பாடங்களை ஒலி பரப்பச் செய்ய வேண்டும். அதனால் பயன் பெற விரும்பும் வாலிபர்கள், அதைப் பயன்படுத்த விரும்புபவர்கள், பயன் படுத்திக்கொள்ளலாம் என்ற அளவிலே, வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தினால், தமிழ் நாட்டிலுள்ள மாணவர்கள், முது கலைப் பட்டம் பெற்றவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த விஞ்ஞானக் கருவியின் மூலம் எல்லோருக்கும் அந்தப் பயன் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேனே தவிர, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தான், பின் தங்கிய மக்களுக்குத்தான் கிடைக்க வேண்டும் என்பது அல்ல. அதை விஞ்ஞான ரீதியில் மற்றவர்களும் படிப்பதற்கு வேண்டிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 3-50)

நமது துணை மானியக் கோரிக்கையிலே சிறு பாசன நீர்த் திட்டங்களுக்காக 19.85 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஆலத்துறையாறு திட்டம் வகுக்கப்படுகிறது. அது கன்னியாகுமரி மாவட்டத்திலே ஓடுகிற ஒரு ஆறு. அதில் அணையைக் கட்டி திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ள பனகுடி பகுதிக்கு

தண்ணீர் போகிற திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அதை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். இப்படி எல்லாப் பகுதிகளிலேயும் உள்ள நீர் சக்திகளைத் தேக்கிக் கொண்டுவர வேண்டும். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலே கழிந்த ஆண்டு 8,000 ஏக்கர் தண்ணீர் இல்லாமல் காய்ந்திருக்கிறது. அதைப் போல கன்னியாகுமரி மாவட்டத்தில் சிற்றாறு 1, 2 என்ற இரண்டு அணைகளைக் கட்டி, தற்போது உள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி என்ற இரண்டு அணைகளுக்குத் தண்ணீர் கொடுத்து, அதில் வருகிற எஞ்சிய தண்ணீரை ராதாபுரம் கால்வாயிலே கொண்டுபோகத் திட்டம் வகுத்திருக்கிறோம். ஆனால் கழிந்த மூன்று நான்கு ஆண்டுகளில், 70 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேலாக, ஆண்டு ஒன்றுக்கு நான்காயிரம், ஐந்தாயிரம் ஏக்கர் கடைசியில் உள்ள நிலங்களுக்கு தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, பயிர் அழிந்துகொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஆலத்துறை ஆறு அணை தண்ணீர் கன்னியாகுமரி மாவட்டத்தில் பாய்ந்து, அந்த நீரில் 5,000 ஏக்கர்களுக்கு கால் வசதிகள் செய்து, இரண்டு ஆண்டுகள் பரிசீலனை செய்து, எஞ்சிய தண்ணீரை திருநெல்வேலி பனகுடி வட்டத்திற்குக் கொண்டுபோக திட்டம் வகுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஏன் இதை நான் சொல்கிறேன் என்றால், சிற்றாறு 1, 2 அணை கட்டுவதற்கு முன்னாலேயே காங்கிரஸ் ஆட்சியிலே ராதாபுரம் கால்வாயை வெட்டிவிட்டார்கள். அந்தக் கால்வாய் வெட்டியாகிவிட்டதே என்று தண்ணீர் கொடுத்து, பலவித நீர்த்தேக்கத்தில் இரண்டு மாவட்ட மக்களுக்கும் மனக்கசப்பு ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே ஆலத்துறையாறு அணையைக் கட்டி முடித்து, கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பயன்படுத்தி, எஞ்சிய தண்ணீரை எவ்வளவு என்று கணக்கெடுத்துவிட்டு, அதற்குப் பிறகு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன், கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழத்து அணை, பொய்கை அணை போன்ற திட்டங்களையெல்லாம் கொண்டுவந்தால், திருநெல்வேலி மாவட்டத்திற்கும் அந்தத் தண்ணீர் பயன்படும் என்று சொல்லிக்கொண்டு, நல்ல சிறு பாசன திட்டங்கள், ஓய்வு ஊதியத் திட்டம், குதிரைப் பந்தய ஒழிப்புத் திட்டம், மதுவிலக்குத் திட்டம் போன்ற நல்ல திட்டங்களை அடக்கிய, மக்களுக்குப் பயன் படுகிற இந்தத் துணை மானியக் கோரிக்கையை நம் அவையின் முன் தந்ததற்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அமைச்சரவையையும் பாராட்டி அமருகின்றேன். வணக்கம்.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி**: மேலவைத் தலைவர் அவர்களே, இந்த 1974-75-ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல என்னை அனுமதித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துணை மதிப்பீட்டில் இந்த அரசு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவோ செய்திருக்கிறது. அவர்களுடைய நலன்களில், உயர்வில் கவனம் செலுத்தியிருக்கிறது. எவ்வளவோ பொருளாதார கஷ்டங்களுக்



கும் சிரமங்களுக்கும் இடையில் எந்த அளவுக்கு அதைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்திருக்கிறது. ஏற்கெனவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பின்தங்கிய மக்கள் இலாகா, அரிஜன நல இலாகா ஆகிய இரண்டிற்கும் ஒரே அதிகாரி இருந்ததை இரண்டாகப் பிரித்து, அரிஜன நல இலாகாவிற்கு ஒருவரும், பிற்பட்ட மக்களுக்கு ஒருவரும் ஆக இரண்டு அதிகாரிகளை மாவட்ட ரீதியிலே நியமித்து, அவர்களுடைய முன்னேற்றத்தை எவ்வளவு சீக்கிரம், எவ்வளவு விரைவாகச் செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகிறது என்பதைப் பார்க்கும்போது, அதை நான் மிகவும் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே புதிதுபுதிதாக அரசினர் கல்லூரிகள் எல்லாம் ஏற்படுத்தப் படுகின்றன. குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்திலே, திண்டிவனம், விழுப்புரம், விருத்தாசலம் போன்ற இடங்களிலே கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அப் பகுதிகளுக்குப் பக்கத்திலேயிருந்து வந்து படிக்கின்ற மாணவர்களுக்கு அவர்கள் தங்கிப் படிக்க வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. பல மைல் நடந்துவந்து அக் கல்லூரிகளில் படிக்கின்ற நிலை அங்கே இருக்கிறது. இதையெல்லாம் கொஞ்சம் கவனித்து, பின்தங்கிய மக்கள் இருக்கின்ற பகுதிகளிலே ஹாஸ்டல், உணவு விடுதி ஆகியவற்றைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துக்கு ஏதோ வளர்ச்சி நிதி என்று ஒரு நிதியை ஏற்படுத்தி, அதற்கு பல லட்ச ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். அதை எந்த நோக்கத்திற்காகச் செய்கிறார்கள் என்பதை விளக்கமாகச் சொல்லவில்லை. பஸ்களுக்கு ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் என்று கடன் கொடுக்கிறார்களே, அந்த ரீதியிலே இதைச் செய்கின்றார்களா, அப்படியிருந்தால், அரசாங்கம் நடத்துகிற போக்குவரத்து பஸ்களுக்குத்தான் அந்த நிதி வசதி செய்து தரப்படுமா, அல்லது தனியார் நடத்துகின்ற பஸ்களுக்கும் கடன் வசதிகளைச் செய்து கொடுக்க முடியுமா என்பதை இதில் விளக்கமாகச் சொல்லவில்லை. தனியார் நடத்துகிற பஸ்களையெல்லாம் தேசியமயமாக்குகின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதை எந்தக் காலவரையறையிலே முடிக்கப் போகிறார்கள் என்றும் தெரியவில்லை. முதலிலே அரசாங்கம் நடத்துகிற பஸ் போக்குவரத்துக்குத்தான் அந்த நிதி வசதி அளிக்குமா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நீண்டதூர பஸ் நிலையங்களிலே வசதிகள் எல்லாம் சரியாக இல்லாமல் நிலைமை மோசமாக இருக்கிறது. சென்னை அரசாங்க பஸ் நிலையத்திலே உள்ள லெட்ரின்கள் எல்லாம் ரொம்பவும் பயங்கரமாக இருக்கின்றன. அங்கே போதுமான தண்ணீர் வசதி இல்லை. உள்ளே நுழைந்து

திரும்பிவரக்கூட பயங்கரமாக இருக்கின்றது. அந்த நிலைமையைத்தான் நான் திண்டிவனத்திலும் பார்த்தேன். இதையெல்லாம் நிருத்தி, பொது மக்களுக்குச் சவுகரியமாக வைக்க வேண்டும் என்று மிகவும் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது மதுவிலக்கைத் திரும்பவும் கொண்டுவந்துவிட்டோம். அதனால் 56 கோடி ரூபாய் நமக்கு நட்டம் என்று அரசு அறிவித்திருக்கின்றது. அந்த மதுவிலக்கைக் கொண்டுவந்தது மிகவும் பாராட்டக்கூடிய விஷயம்தான். அது மக்களுக்கு மிகவும் நன்மையை உண்டாக்கும். ஆனால் அதை ஒரு முறை கொண்டு வந்து சரியாக நிறைவேற்ற முடியாது, அதனால் குற்றங்கள் பெருகி, பல ஆயிரக்கணக்கானவர்களை ஜெயில்களுக்கு அனுப்பிவைத்து, அந்தத் திட்டம் தோற்றுவிட்டது என்ற நிலையிலே அது எடுக்கப்பட்டு, இப்பொழுது மீண்டும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பொதுமக்களும், பல அரசியல் கட்சிகளும் மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டும் என்றார்கள். அதற்கெல்லாம் அரசு மரியாதை கொடுத்து, மீண்டும் மதுவிலக்கைக் கொண்டுவருகிறார்கள். அதுவும் பூரண மதுவிலக்கு என்று சொல்கிறார்கள். முதலிலே கள்ளுக்கடைகளை மூடியாகிவிட்டது. செப்டம்பரிலேயிருந்து சாராயக் கடைகளும் எடுக்கப்பட்டுவிடும் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு 'இண்டியன் மேடு ஃபாரின் லிக்கர்ஸ்' என்று சொல்லப்படுகிற பிராந்தி, ஒயின், விஸ்கி போன்றவைகளின் நிலை என்ன? ஏற்கெனவே பெர்மிட் கொடுத்து குடிப்பதற்கு அனுமதி கொடுத்தார்களே, அது மாதிரி செய்யப் போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, பூரண மதுவிலக்குதான் கொண்டுவருகிறோம், செப்டம்பர் முதல் தேதியிலே இருந்து. ஏற்கெனவே விற்றதுபோல் ஹெல்த் ரீசன்களுக்குப் பெர்மிட் வாங்கியவர்களுக்கு மட்டும் கொடுக்கலாம் என்று இருக்கிறோம்.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** ஏற்கெனவே ஹெல்த் ரீசன்களுக்கு 100 ரூபாய் கட்டணம் கட்டி பெர்மிட் கொடுக்கப்பட்டது, இப்பொழுது எவ்வளவு வைக்கப்போகிறார்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, கட்டணம் எவ்வளவு என்பது தெரியவில்லை. அரசாங்கம் பூரண மதுவிலக்கு கொண்டுவருகிறது. மதுவிலக்கை ஒத்திவைக்கும்போது என்ன நிலைமை இருந்ததோ, அந்த நிலைமைக்குக் கொண்டுபோகிறோம். எனவே ஹெல்த் ரீசன்ஸ்க்குக் கொடுக்கப்படுகிற பெர்மிட்டுக்கு மட்டும் கொடுக்கப்படும்.



**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** இப்பொழுதும் ஹெல்த் ரீசன்களுக்குத்தான் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஃபீஸ் எவ்வளவு?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முதலமைச்சர் பதில் சொல்லும்போது சொல்வார்.

(பிற்பகல் 4-00)

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** நல்லது. ஆனால் நாம் மட்டும் அதை எடுத்துவிட்டால், நமது மாநிலத்தைச் சுற்றிலும் இருப்பதைப் பார்க்க வேண்டும். கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு அண்டையிலே கேரளம் இருக்கின்றது. கோவை, சேலம் மாவட்டங்களுக்குப் பக்கத்திலே மைசூர் மாநிலமும், ஆந்திரமும் இருக்கின்றன. இன்னும் வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அண்டையிலே ஆந்திரம் இருக்கின்றது. தென்னாற்காடு, தஞ்சை மாவட்டங்களுக்கு அருகிலே பாண்டிச்சேரி மாநிலம் இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலையில் இங்கே மட்டும் நாம் வைத்துக்கொண்டிருந்தால், அது எந்த அளவிற்கு வெற்றிகரமாக இருக்கும் என்று பார்க்க வேண்டும். வெற்றி பெறச் செய்ய வேண்டும், அதுதான் அரசின் கடமை. அதற்காக தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நிலையில் நமக்கு ரூ. 56 கோடி வருமானம் நஷ்டம், அதைப் பாதுகாப்பதற்காக எவ்வளவோ கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும். அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தமாதிரிக் கொள்கை, திட்டம் அகில இந்திய ரீதியில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் அது நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். ஏதோ நமக்கு வேண்டுமானால், இங்கே மதுவை ஒழித்துவிட்டோம் என்று சொல்லிக்கொள்ளலாமே தவிர, இதனால் இன்னும் அதிகத் தொல்லைகள் தான் வரும் என்று அரசாங்கத்துக்கு எச்சரிக்கையாகக் கூறிக்கொண்டு அதை நல்ல முறையில் அமுல்படுத்துவதற்காக தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நண்பர் திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் குதிரைப் பந்தயம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நானும் சொல்ல ஆசைப்படுகிறேன். குதிரைப் பந்தயத்தை அறவே ஒழித்துவிட்டோம் என்று சொல்லுகின்றார்கள். இதனால் அரசுக்கு இரண்டு கோடி ரூபாய் நஷ்டம். ரூ. 500 கோடிக்கு வருமானம் வரும் ஒரு அரசுக்கு 2 கோடி இழப்பு பெரிய நஷ்டமில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இரண்டு கோடியில்லை. பதினான்கு கோடி ரூபாய் நஷ்டம். வரியால் ரூ. 2 கோடி. பந்தயத்தில் ரூ. 14 கோடி.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** ரூபாய் 2 கோடிதான். நாங்கள்தான் அதிலேயே இருக்கிறோமே? இரண்டு கோடி ரூபாய் என்பதை பெரிய வருவாய் என்று சொல்லி, அது போய்விட்டது என்று சொல்லவில்லை. ஆனால் 100 ஆண்டுகளுக்கு மேலே தமிழ் நாட்டிலே இருந்து வரும் இதை எடுத்துவிடுவதால் ஒரு பெருமை போய் விட்டதாகவே எண்ண வேண்டியிருக்கிறது. இதை நிறுத்திவிட்டதால் ஏதோ பெரிய நன்மை மக்களுக்கு வந்துவிட்டது என்று அரசும் மற்றவர்களும் எண்ணுகின்றார்கள். அங்கத்தினர்களும் பேசுகின்றார்கள். ஆனால் அந்தக் குதிரைப் பந்தயத்திற்கு எவ்வளவு பேர் போகின்றார்கள், எவ்வளவு பேர் பந்தயம் கட்டுகின்றார்கள் என்றும், அதனால் எவ்வளவு பேர் நட்டப்படுகின்றார்கள் என்றும் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது இந்தப் பிரச்சினை வந்தது. அப்போது ஏழை மக்கள்தான் அவதிப்படுகின்றார்கள் என்று சொன்ன நேரத்தில் மூன்றாவது என்க்ளோசர் • 2 ரூபாய் என்று இருந்தது. அதை எடுத்துவிட்டார்கள். மெம்பர்கள் ரூ. 10, 5 என்று வைத்தார்கள். ஒரு ரேஸ் என்றால் 4,000, 5,000 பேர்தான் வருகின்றார்கள். இந்த எண்ணிக்கை ஒரு பெரிய எண்ணிக்கை என்றும் சொல்லிவிட முடியாது. மற்றபடி திரு. நாராயணசாமி அவர்கள், எவ்வளவோ ஓட்டல்கள் பாதிக்கப்படும், நகரம் வளருவதற்கான வாய்ப்புகள் வசதிகள் பாதிக்கப்படும், ஒழிந்து போய்விடும் என்று சொன்னார்கள். இதையெல்லாம் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்றுதான் அரசை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதிலே ஏதோ ஒரு பெரிய சூதாட்டம் நடைபெறுகிறது, அதனால் மாநிலத்திலுள்ள மக்களெல்லாம் பாழாகப் போய்விடுகிறார்கள் என்ற தவறான எண்ணம் எப்படியோ அரசாங்கத்திற்கு உருவாகியிருக்கின்றது. எப்போதும் சமுதாயத்தில் ஒரு சிறு சதவிகிதத்தினர் இப்படிப்பட்ட சபலங்களுக்கு ஆளாகத்தான் ஆவார்கள். அவர்கள் அவ்வளவு பேரையும் ஒன்று திரட்டிக்கொண்டு வர முடியாது. அவர்களுக்கு அது இங்கே இல்லை என்று சொன்னால், வேறு இடத்தைத் தேடிக்கொண்டு போகத்தான் போவார்கள். இப்போதே மைசூர் ரேஸுக்கும் ஐதராபாத் ரேஸுக்கும் இங்கே பந்தயம் கட்டுகின்றார்கள் என்றால், மக்களுடைய மனப்பான்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்போதும் இதைத் தவிர எவ்வளவோவிதமான 'கேம்ப்ளிங்' நடைபெறுகின்றது. இன்றைக்கும் சென்னையில் ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு கிளப் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. அவற்றையெல்லாம் எந்தச் சட்டத்தாலும் முழுக்க முழுக்கக் கட்டுப்படுத்த முடியாது. சொல்லிக்கொள்ளலாம், ஒழித்துவிட்டோம் என்று, பெருமை கொள்ளலாம். ஆனால் அவ்வளவு பேரையும் நாம் காப்பாற்றி விட முடியும் என்று நினைத்தால், அது நம்முடைய தவறான முயற்சி என்றுதான் சொல்லிக் கொள்ளுகிறேன். போலீஸை வைத்துக்கொண்டு செக் பண்ணலாம்.



அடிக்கடி. பிடித்தால் ஏதோ அபராதத்தைக் கட்டிவிட்டு, மறுபடியும் வந்து துண்டை விரித்துப் போட்டுக்கொண்டு ஆடத்தான் ஆடுவார்கள். ஒரு பெர்ஸெண்ட்டேஜ் ஜனங்கள் எப்போதும் இப்படி இருக்கத்தான் இருப்பார்கள். அவர்களைக் கேட்டால், எங்களுக்குப் பொழுது போக வேண்டாமா என்று சொல்லுவார்கள். சென்னையில் இரண்டாயிரம் கிளப்கள் இருக்கின்றன என்று இன்றைக்கு ஒரு நண்பர் சொன்னார். இருக்கக்கூடாதுதான். ஆனால் சட்டத்தின்மூலம், போலீசின் மூலம் கட்டுப்படுத்தி விட முடியும் என்று எண்ணிவிடக் கூடாது. கெட்டுப் போகிறவனை யாராலும் காப்பாற்றிவிட முடியாது. அவர்களையெல்லாம் காப்பாற்றித்தான் தீர வேண்டும் என்று அதற்காக முழு சக்தியையும் பயன்படுத்தி, போலீஸை முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொண்டிருந்தால், மற்ற காரியங்கள் அடியோடு கெட்டுவிடும். மாநிலத்திலுள்ள நாலரை கோடி, ஐந்து கோடி மக்கள் தொகையில் ஒரு 5 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் பேரைக் காப்பாற்றுவதற்காக நமது கவனம், நமது வருமானம் முழுவதையும் செலவிட்டுக் கொண்டிருப்பது அவ்வளவு சரியில்லை என்றுதான் சொல்லுகிறேன்.

குறிப்பாக, ரேஸ் கிளப்பற்றிப் பரிசீலனை செய்து அதிலே எந்தமாதிரி மக்கள் போகின்றார்கள் என்று பார்க்க வேண்டும். பொதுவாக வசதி படைத்தவர்கள்தான் அதிகம் பேர் போகின்றார்கள். அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால், அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஒரு சிலர் உள்ள இரண்டு ரூபாயையும் அதிலே செலவிட்டு விட்டு, திரும்புவதற்கு ரயில் கட்டணம் கூட இல்லாமல் திருட்டுத்தனமாக ரயிலில் ஏறிப்போனால், ஜெயிலுக்குப் போகட்டும். அதைப்பற்றி யாரும் கவலைப்பட முடியாது. எனவே 100 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்துக்குப் பெருமையாக இருந்த ரேஸ் கிளப்பை அறவே எடுத்து விட்டால், அதனால் ஏற்படும் நஷ்டங்கள்பற்றி மதிப்பிற்குரிய திரு. நாராயணசாமி அவர்கள் நன்றாக எடுத்துச்சொன்னார்கள். மேலும் நமக்குக் கிடைக்கும் அந்த வருமானம் மற்ற மாநிலங்களுக்குப் போய்விடும். ரேஸுக்குப் போக வேண்டும் என்பவர்கள் தனியாக ஸ்பெஷல் பஸ், கார், பிளேன் என்று வைத்துக்கொண்டு போய்விடுவார்கள். எனவே அதனால் நட்டம்தான் ஏற்படும். அதே சமயத்திலே யாரையும் அதனால் நாம் காப்பாற்றி விட முடியாது. ஜன சமுதாயத்தில் ஒரு சிறு சதவீதம் அப்படித்தான் இருப்பார்கள். அவர்களை தண்டனை மூலமோ அல்லது இவற்றை எடுத்து விடுவதாலோ காப்பாற்றிவிட முடியாது. எனவே அதை அறவே எடுத்து விட்டோம் என்று இல்லாமல் இன்னும் சில சீர்திருத்தத்தோடு அதை இருக்கச் செய்ய வேண்டும் என்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களைக் குறிப்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் பல வருஷமாக 50 வருஷமாக அந்தக் கிளப்பின் மெம்பர்தான்,

எப்போதோ ஒரு முறை போவேன். கமிட்டி மெம்பர் கொடுப்பான். அவன் சொல்லும் குதிரையின்மேலே கட்டுவேன். கடைசியாகவும் வரும். வந்தால் சரி, வராவிட்டால் பத்து ரூபாய் போய்விட்டது என்று போய்விடுவேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* திரு. படையாச்சி அவர்கள் பத்து ரூபாய் கட்டி விட்டு 'கமிட்டி மெம்பர் கொடுப்பான், அவன் சொல்லும் குதிரை தான் ஓடிவரும்' என்று சொல்லுகின்றார்கள். அந்த ஆபத்திலிருந்து மற்றவர்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் இதைச் செய்கிறோம்.

*திரு. எஸ். ராமசாமி படையாச்சி :* பத்து ரூபாய் போவதால் அதைச் சொல்லவில்லை. சில செக்ஷன்தான் கட்டுகின்றார்கள். சிலர்தான் நஷ்டப்படுகின்றார்கள். முன்பு காங்கிரஸ் அரசாங்கத்தின்போது எப்படி 2 ரூபாய் என்க்ளோஷரை எடுத்துவிட்டார்களோ அதேபோல ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவந்து இதை நீடிக்கலாம். பணம் உள்ளவர்கள் எப்படி எப்படியோ செய்கின்றார்கள். பெங்களூர் ரேஸ் என்றும் ஐதராபாத் ரேஸ் என்றும் போய் விடுவார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தி விட முடியாது. இப்போதே ரேஸ் கிளப்பிற்கு வெளியே இருந்துகொண்டு பணத்தைக் கட்டுகின்றார்கள். சில பெர்ஸெண்ட்டேஜ் மக்கள் இப்படித்தான் இருப்பார்கள். அவர்களைச் சட்டத்தால் திருத்திவிட முடியாது என்று திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே மீண்டும் ரேஸ் கிளப் விஷயம்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4-10)

அடுத்து, சினிமா கொட்டகைகள் மீது அதிகமாக வரி போட்டுவிட்டார்கள். ஆகவே நாங்கள் நிறுத்திவிட்டோம் என்று சொல்லுகின்றார்கள். இந்த நிலைமை ஒரு ஊரிலே அல்லது இரண்டு ஊரிலே இல்லை. மாநிலம் முழுவதும் இந்த நிலைமை இருக்கின்றது. முதலமைச்சர் அவர்களை அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள அதிபர்கள் பார்க்க முயற்சித்ததாகவும் முதலமைச்சர் அவர்கள் சினிமா கொட்டகையைத் திறந்து விட்டு வாருங்கள், பிறகு சந்திக்கிறேன் என்று சொன்னதாகவும் பத்திரிகையில் பார்த்தேன். அது பிரச்சினை இல்லை. ஆனால் அந்தத் தொழில் நடக்க வேண்டும். அதற்குப் போட்ட வரி விகிதங்கள் அதிகம் தானா, சரிதானா, ஏதாவது கொஞ்சம் தளர்த்திக் கொடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். மீண்டும் அந்தத் தொழிலை தமிழகத்தில் நடத்த முடியுமா வென்று தான் நான் கேட்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஆனால் இதைப் பொறுத்த வரை, பல்வேறு கருத்துக்களை பல்வேறு விதமாகச் சொல்கிறார்கள். அரசியலைப் புகுத்துகிறார்கள். அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் இந்தத் தொழில் தமிழகத்திலே நடக்க வேண்டும். எவ்வளவோ கொட்டகைகள் தமிழகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன. கிராமப் பகுதிகளில் இருக்கின்றன.



ஏழை மக்களுக்கு இது பொழுதுபோக்காக இருக்கிறது. இதற்கு இவ்வளவு பெரிய வரிகளைப் போட்டு இவைகளையெல்லாம் நிறுத்துகிற நிர்ப்பந்தத்தில் கொண்டுவந்துவிட்டது பரிதாபத்திற்குரிய விஷயம். இதை முதல்வரவர்களும் அரசும் பெருந்தன்மையோடு அவர்கள் ஏதோ கொட்டகைகளை மூடி விட்டார்கள் என்ற கோபமில்லாமல், பழி வாங்குகின்ற, சேலன்ஜ் பண்ணுகிற நிலைமை இல்லாமல் அவர்களுடன் கூடிப் பேசி, அழைத்துப் பேசி, உண்மை நிலைமையைப் பரிசீலனை செய்ய வேண்டும். மாநிலத்தில் சினிமா கொட்டகைக் கணக்கை எடுத்து விடலாம். கஷ்டமில்லை. அந்த அளவிற்கு போட்டிருக்கிற வரிகள் கொட்டகைக்காரர்களைப் பாதித்திருக்கின்றன என்று பார்த்து, அரசு பெருந்தன்மையாகவே சலுகைகளையும், உதவிகளையும் அளித்து, இதையெல்லாம் கவனிக்க வேண்டும். அவர் செய்து விட்டார், அதற்காகச் செய்கிறேன் என்று நாம் சேலஞ்சாக எடுத்துக்கொள்ளாமல் பெருந்தன்மையுடன் செய்ய வேண்டும். மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். மீண்டும் சினிமா தியேட்டர்கள் நடத்தும்படி செய்ய வேண்டும். எனக்கும் ஒரு கொட்டகை இருக்கிறது. அதனால் இதைச் சொல்ல வில்லை. பொதுப்படையாகச் சொல்கிறேன். எம்.ஜி.ஆர். படம் போட்டால் கல்லால் அடிக்கிறார்கள் என்று. என் கொட்டகை முன்னாலேயே மூடப்பட்டு விட்டது. நிறுத்தி விட்டார்கள். சினிமா என்பது ஒரு தொழில். எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழில் ஸ்டுடியோவிலிருந்து, வேஷம் போடுவதிலிருந்து நடக்கிறது. இதை எல்லாம் கொஞ்சம் காபந்து செய்ய வேண்டும். முதலமைச்சரவர்களுக்கு இந்தத் தொழிலைப்பற்றி நன்றாகத் தெரியும். இதிலுள்ள இடர்ப்பாடுகள், உயர்வுகள், தாழ்வுகள் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதிலே அவர்கள் இருந்தவர்கள். அவர்களே கதை எழுதியவர்கள், பல படங்களை எடுத்தவர்கள். அவர்களே படங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இல்லையென்றால் வேறு யார் பேரிலோ இருந்து விட்டுப் போகிறது. ஆகவே இந்தப் பெரிய ஒரு தொழில் பாதிக்கப்படாமலிருக்க உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தலைவரவர்களே, எனக்கு இந்த அளவிற்கு அனுமதி தந்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* *திரு. ம. பொ. சிவஞானம் :* மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழக முதல்வரவர்கள் இந்த அவை முன் வைத்துள்ள 1974–75-ம் ஆண்டினுடைய துணை மானியக் கோரிக்கையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

பொதுவாக நான் பேரவையிலிருந்த போதும், இந்த மேலவைக்கு வந்த பின்னரும் துணை மானியங்கள் மீது நான் பேசுகிற வழக்கமில்லையென்றாலும், மதுவிலக்கும், குதிரைப் பந்தய ஒழிப்பும் இந்தத் துணை மானியத்தில்

சேர்க்கப்பட்டிருப்பதால், அவற்றைப் பாராட்டி, அவைபற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டியது கடமை என்று நினைத்துத்தான் நான் பேச முன் வந்தேன்.

மது விலக்கு தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டபோது நான் அதைப் பற்றிக் கடுமையாக விமர்சித்தது எனக்கு நினைவு இருக்கிறது. உண்மையில் அந்த நாளில் நான் பேரவையிலோ, மேலவையிலோ இருந்து மதுவிலக்கு ஒத்தி வைக்கப்படுவதை எதிர்த்தும் பேசியிருந்தால், ஒரு வேளை தமிழரசுக் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருக்கும் தோழமை உறவு பாதிக்கக்கூடும். அந்த அளவிற்கு என் மனத்தை இது பெரிதும் பாதித்தது. என்னை நன்கு தெரிந்தவர்களுக்கு இது தெரியும். காங்கிரஸ் நண்பர்களைவிட நான் மதுவிலக்கில் அதிகம் பற்றுதல் கொண்டவன். வேறு எந்தத் தமிழனையும்விட என் சொந்த நலமும், குடும்ப நலமும், சாதி நலமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவன். மதுவிலக்கால் அழிந்துபோன வட்டாரத்தினரில் ஒருவன் என்றாலும், இந்த மதுவிலக்கை நான் உறுதியாக ஆதரித்து வருகிறேன். இப்படிப்பட்ட ஒரு நிலையில், மதுவிலக்கு இடைக் காலத்தில் எடுபட்டபோது, நான் உண்மையிலேயே உடம்பெல்லாம் வாயாகக் கொண்டு அழ வேண்டுமென்ற உணர்வைக் கூடப் பெற்றேன். ஆனால், முதலமைச்சரவர்கள் அப்போதே தற்காலிகமாகத்தான் ஒத்தி வைக்கப்படுகிறது என்று சொன்னார்கள். மத்திய அரசின் உதவி பெறுவதற்கான வற்புறுத்தலை உருவாக்க இந்த நிலை பின்பற்றப்படுகிறதென்ற உறுதிமொழியும் தந்தார்கள். பிற மாநிலங்களில் மதுவிலக்கை அமுல் நடத்தத் தூண்டுவதற்காக நாம் இதை நிறுத்தி வைக்கிறோம் என்றும் சொன்னார்கள். அவர்கள் சொன்ன விளக்கத்தைக் கேட்டு ஓரளவிற்கு ஆறுதல் அடைந்தேன், மௌனமாக இருந்தேன். உரிய நேரத்தில், 'கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே' என்பது போல இப்போது மதுவிலக்கை திரும்பவும் அமுல் நடத்த முன் வந்திருக்கிறார்கள். தமிழன் தவறு செய்ய மாட்டான்; செய்தாலும் நீடித்துச் செய்ய மாட்டான். அதுபோல, தமிழக அரசு—திராவிட முன்னேற்றக் கழக அரசு, இடைக் காலத்தில் இரண்டு ஆண்டுகள் ஒத்தி வைத்த நிலையைக் கைவிட்டு மீண்டும் பூரண மதுவிலக்கு கொண்டு வந்ததை நான் மனமாரப் பாராட்டுகிறேன். நான் அன்றே சொன்னேன், "கலைஞர் ஒருவர் முதல்வராக இருக்கிற நேரத்திலே மக்களுக்கு மதுக் கொடுமை மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகிறதே" என்று. இது கலை உலகத்திற்கே ஏற்படுகிற களங்கம் என்று நான் சொன்னதும் எனது நினைவில் இருக்கிறது. முதல்வர் கலைஞராக இருப்பதால் தானோ என்னவோ மீண்டும் மது விலக்கை முழுசாக அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்.



என்னுடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள், "இது நாங்கள் நடத்திய போராட்டத்திற்குக் கிடைத்த பெரிய வெற்றி" என்று சொன்னார்கள். அவரது கட்சியானது தமிழரசுக் கழகத்தைப் போலவோ, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போலவோ ஒரு மாநிலக் கட்சி அல்ல. அவர் அகில இந்தியக் கட்சியின் உறுப்பினர். அவர்கள் தலைவர், பெரும் தலைவர்; இந்தியாவிற்கே பெருந்தலைவராக இருந்தவர், அந்த அந்தஸ்தில் இன்னும் நீடிப்பவர். அப்படிப்பட்டவர்கள் மற்ற மாநிலங்களில் இந்தப் போராட்டத்தைத் துவக்கி இருக்கிறார்களா? தி.மு.க. அரசு காட்டிய இந்த நல்ல சமிக்ஞையை முன் மாதிரியாகக் கொண்டு மற்ற மாநிலங்களில் போராட்டம் துவக்குவதற்கு இனியேனும் அவர்களுடைய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி முன்வருமா? மதுவிலக்கை அமுல் நடத்த வற்புறுத்தும் தீர்மானத்தை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் கொண்டு செல்ல திராவிட முன்னேற்றக் கழக அரசின் இந்த நடவடிக்கையை ஒரு முன் உதாரணமாகக் கொள்வார்களென்று நம்புகிறேன்.

இதிலேயும் ஒரு சிறு குறை இருப்பதை முதல்வரவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 'நோய் காரணமாக தனி நபர்களுக்கு பர்மிட் வழங்கப்படும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது, கள்ளாக, இருக்காது; சாராயமாக இருக்காது என்பதும் உறுதியாகத் தெரிகிறது. ஏழை மக்கள் அருந்தும் போதை வஸ்து கள்ளும் சாராயமும்தான். படித்தவர்களில் அல்லது உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு குடிப் பழக்கம் இருக்கலாம். அவர்களுக்கு மட்டும் ஏன்—குரோட்டன் செடிகளை வளர்ப்பதுபோல—இந்த போதைப் பழக்கத்தைத் தொடர்ந்து அனுமதித்துக் கொண்டிருக்கிறோமென்று புரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். இதையும் எடுத்துவிடலாம் என்று அரசு கருதினாலும் கூட, ஏற்கெனவே இது சுப்ரீம் கோர்ட் வரை போய் இப்படிப்பட்ட உரிமை நமக்கு இல்லை, டாக்டர் சர்டிபிகேட் வாங்குகிறவர்களுக்கு பெர்மிட் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ம. பொ. சிவஞானம்:** அப்படியானால் அப்படி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளிக்கக் காரணமாக இருந்த அரசியல் சட்டத்தைத் திருத்தத் தீர்மானம் நாம் கொண்டுவர வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, சட்டத்தைத் திருத்துவதென்றால் பாராளுமன்றத்தில் திருத்த வேண்டும். பாராளுமன்றத்தில் திருத்த முற்பட்டால், இந்தியா முழுமையும் மது விலக்கு நிச்சயமாக வந்து விடும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, பணம் கொடுத்து பெர்மிட் வாங்கலாம் என்று சொல்கிறார்கள். 500 ரூபாய் என்று சொல்கிறார்கள், சில பேர்கள் 250 ரூபாய் என்று சொல்கிறார்கள். ஏழைகளுக்குக் கூட உடல் நலக் கெடுதல் ஏற்படக் கூடும். 500 ரூபாய், 250 ரூபாய் என்று வசதி இருப்பவர்கள் தான் இந்தப் பணத்தைக் கொடுத்து பெர்மிட் வாங்க முடியும். பணம் கொடுக்க முடியாத, பரம ஏழையாக இருப்பவர்களுக்கு பெர்மிட் வழங்குவதைப் பற்றி அரசு என்ன ஆலோசனை வைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஏழைகள், கடுமையாக உழைப்பதால் அவர்கள் உடல் நலிவிற்கு ஆளாகாமல் இருக்கிறார்கள். பணக்காரர்கள்தான் இருதய நோய்க்கு ஆளாகிறார்கள். இது இருதய நோய்க்குப் பயன்படுவதாக டாக்டர்கள் சொல்வதாக பெர்மிட் கேட்பவர்கள் கூறுகிறார்கள். அந்த அடிப்படையில்தான் பெர்மிட் கொடுக்கப்படுகிறது. ஏழைகளுக்கும் குறிப்பிட்ட நோய் வந்து டாக்டர்கள் பரீட்சித்து அவர்கள் இவ்வளவு சாப்பிட வேண்டுமென்று மருந்தாக குறிப்பு எழுதுவது போல எழுதினால், கடைகளில் அவர்கள் பெற்றுக்கொள்ள இயலும்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, மனிதனுக்குக் கட்டாயம் ஆல்கஹால் இருக்க வேண்டுமென்று மனிதக் கூறு சாத்திரம் சொல்கிறது. மனிதன் பிழைத்து வாழ ஆல்கஹால் தேவை என்று உடல் சாத்திரத்தில் தேர்ச்சி பெற்றவர்களெல்லாம் கூறுகிறார்கள். அப்படி ஆல்கஹால் உடம்பிலே உள்ள ரத்தத்தில் கலந்திருக்கிறது என்ற காரணத்திற்காக கொஞ்சம் தளர்த்தக் கூடாதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இதே கருத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்கள் அண்ணா அவர்களிடத்தில் சொன்னார்கள். எல்லோருடைய வயிற்றிலும் ஆல்கஹால் இருக்கிறதே, அதை ஏன் சாப்பிடக் கூடாது என்று திரு. ராஜகோபால் கேட்டார்கள். அப்போது வயிற்றில் இருப்பதையெல்லாம் சாப்பிடக் கூடாது என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

(பிற்பகல் 4-20)

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவரவர்களே, நண்பர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் நான் எடுத்துக் காட்டியதைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு ஏழைகளுக்கும் பெர்மிட் சலுகை வழங்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். நான் சொல்வது அதற்காக அல்ல. பர்மிட் வழங்குவதிலுள்ள பாரபட்சத்தைத்தான் எடுத்துச் சொன்னேன். 250 ரூபாய் கொடுத்து 500 ரூபாய் கொடுத்து நோய் காரணமாக பர்மிட் வாங்கலாம் என்றால் அது ஏழைக்குச் சாத்தியமில்லை, போதைப் பொருளின் விலையை





நோக்குகிறபோதும் அதை வாங்கிக் குடிப்பது ஏழைக்குச் சாத்தியமில்லை. சோஷியல் ரிபார்ம் என்று சொல்லக்கூடிய தத்துவ அடிப்படையில் மதுவிலக்கு அமுல் நடத்துகிறபோது மேட்டுக் குடி மக்களுக்கு மட்டும் விலக்கு அளிப்பது நல்லதல்ல என்பது என்னுடைய கருத்து.

முதல்வர் அவர்கள், அவர்களுக்குரிய திறமையோடு, உழைக்காமல் இருப்பவர்களுக்குத்தான் இருதய நோய் வருகிறது என்று சமாதானம் சொன்னார்கள். 'எனக்குத் தெரிந்தவரையில் உழைக்கிறவர்களுக்கும் இருதய நோய் வருகிறது. என்ன காரணமோ தெரியவில்லை ஏழையைப் போய்க் கேட்டால் 'அதிக உழைப்பால் ஏற்படும் சோர்வுக்குக் குடி பரிகாரமாக இருக்கிறது' என்று சொல்லுகிறார். ஆகவே, சோர்வுக்குப் பரிகாரமாக ஏழைக்கும் குடிப்பதற்கு பெர்மிட் பெறுவதற்கு உரிமை உண்டு. இத்தகைய விதிவிலக்குக்கூட கிடையாது என்று ஒரு பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் உறுதிமொழி கொடுத்தது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. அந்த உறுதி மொழிப்படி இத்தகைய விதிவிலக்கை சிலருக்கு மட்டும் அளிப்பதைத் தவிர்த்து விட வேண்டும் என்பது என்னுடைய பிரார்த்தனை.

மத்திய அரசாங்கத்திடமிருந்து மதுவிலக்குக் கொண்டுவருவதால் ஏற்படும் பொருள் இழப்பை ஈடுகட்டுவதற்கான உதவித் தொகையைப் பெறுவதற்கும், மற்ற மாநிலங்களிலும் இதை அமுலுக்குக் கொண்டு வருவதற்கும் ஒரு கிளர்ச்சியை ஆளுங்கட்சியுடன் எதிர்க்கட்சிகளும் சேர்ந்து நடத்த வேண்டும் என்பது என்னுடைய பிரார்த்தனை.

மதுவிலக்கு அமுலில் இருந்த காலத்தில் ஒரு பயங்கரமான அனுபவத்தை, கசப்பான அனுபவத்தை நாம் பெற்றிருக்கிறோம். அது, மதுவிலக்குச் சட்டம் ஒழுங்காக அமுல் நடத்தப்படவில்லை என்பதுதான். எல்லைப் போராட்ட காலத்தில் சிறைப்பட்ட தமிழரசுக் கழகத் தோழர்களைப் பார்க்க சப்-ஜெயில்களுக்குச் சென்றேன். அப்போது, அங்கே கள்ளச்சாராய வழக்கில் சம்பந்தப்பட்டு அடைக்கப்பட்டிருந்த ஏழைகளைப் பார்த்து மனம் உருகிப் போனேன். திருத்தணி சப் ஜெயிலில் கள்ளச்சாராயக் குற்றம் புரிந்த கைதிகளோடு ஒரு வாரம் இருந்த அனுபவமும் எனக்கு உண்டு. அவர்களெல்லாம் கோர்ட்டுக்குப் போகிற வசதி படைத்தவர்களாக இருந்திருந்தால் அவர்களில் 100-க்கு 90 பேர் விடுதலை ஆகி வீட்டுக்கு வந்திருப்பார்கள். பெரும்பாலும் ஏழைகளைத்தான் மதுவிலக்கு வழக்குகளில் பிடித்துக்கொண்டு போகிற நிலை இருக்கிறது. அதுதான் திரும்பவும் நடக்கும் என்றால் அது கசப்பான ஒன்றாகத்தான் இருக்கும், வருந்தத்தக்க ஒன்றாகத்தான் இருக்கும். மறியல் நடத்தினோம், போராட்டம் நடத்தினோம், அத்தகைய பாரம்பரியத்திற்கு, கொள்கைக்கு வாரிசுகள் நாங்கள்தான் என்று சொல்லுகிற காங்கிரஸ் நண்பர்களும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும்

திராவிட முன்னேற்றக் கழக அரசோடு கலந்து பேசி, இந்த மதுவிலக்குப் பிரச்சாரத்தை எப்படி உறுதியாக நடத்தலாம், கள்ளச் சாராயம் காய்ச்சுவது போன்ற தவறான காரியங்கள் நடப்பதை எப்படித் தடுப்பது என்பதற்குத் திட்டமிடவேண்டும். குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் போன்று, மதுவிலக்குக்கும் ஒரு தீவிரப் பிரச்சாரம் செய்தால் தவறான முறையில், சட்ட விரோதமாக மது உற்பத்தி செய்வதோ, அதை வாங்கிக் குடிப்பதோ பெருமளவில் தவிர்க்கப்பட முடியும் என்று நான் நினைக்கிறேன். மதுவிலக்குச் சட்டம் இந்த முறையில் வெற்றிகரமாக அமுல் நடத்தப்படுவதற்கு அரசும் மற்ற கட்சிகளும் ஒத்துழைத்து வேலை செய்ய வேண்டும். இதற்காக விதிக்கப்பட்ட வரிபற்றி பலர் பல அபிப்பிராயம் சொன்னார்கள். எந்த வரி விதித்தாலும், வரி என்பது, இழந்த தொகையை ஈடுகட்ட ஒருசிறு தொகைக்குத்தான் என்றாலும், அது விரும்பத்தகாத ஒன்றாகத்தான் இருக்கிறது. அது இயற்கை. இந்த அளவு வரி கூட இல்லாமல், அந்தத் தொகையை ஈடுகட்டுவதற்கு வழி செய்திருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஆனால், முதல்வர் அவர்களும், ஆட்சியும் முயற்சி எடுத்து ஓரளவுக்குத்தான் இப்போது இந்த வரி உயர்வைச் செய்திருப்பதால், அதை வருத்தத்தோடு ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அதிலேயும் சினிமாவுக்கு வரி போட்டிருப்பதைப்பற்றிச் சொல்லும்போது, அந்த வரி போட்ட செய்தி வந்த சில மணி நேரத்திற்குள்ளேயே, முன்னலேயே தயாராக இருந்ததுபோன்று, எல்லா தியேட்டர்களையும் மூடிவிட்டார்கள். என் வாழ்நாளில் இவ்வாறு எல்லாத் தியேட்டர்களும் மூடப்பட்ட ஒரு தர்மமான காரியத்தை என் கண்களால் பார்க்க முடிந்ததற்கு ரொம்ப மகிழ்ச்சியடைகிறேன். ஆகவே, அது வருத்தப்படக்கூடிய ஒன்றல்ல. நான் பல சாதாரண மக்கள் கூடிப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன்; இப்படியே மூடிவிட்டால் ரொம்ப நல்லது என்று அவர்கள் சொன்னார்கள். நம்முடைய படையாச்சியார் அவர்கள் சொன்னதுபோல், குதிரைப் பந்தயம் இருப்பதால்தானே போகிறார்கள், அது போல் சினிமா இருப்பதால்தானே போகின்ற உணர்ச்சி ஏற்படுகிறது. ஆகவே, அந்த விஷயத்தில் அரசு வரி விதித்திருப்பதை தியேட்டர் உரிமையாளர்கள் இவ்வளவு கடுமையாக எதிர்க்க முன்வந்திருப்பது எனக்கு வியப்பைத் தருகிறது. அவர்கள் கொஞ்சம் பொறுத்திருக்கலாம். முதல்வரோடு பேசியிருக்கலாம். பேச்சுவார்த்தையில் தீர்வு ஏற்படவில்லையென்றால், சாவி அவர்கள் கையில்தான் இருக்கிறது, நம் கையிலா இருக்கிறது—தியேட்டரைப் பூட்டிக்கொண்டு போய்விடலாம். ஆனால், இவ்வாறு உடனடியாகப் பூட்டி இவ்வளவு தூரம் போர்க்கோலம் தொடுத்தது, பல நாட்கள் பட்டினி கிடப்பவன் ஆத்திரப்பட்டு போராட்டத்திற்கு வருவது மாதிரி இருக்கிறது. இன்று காலையில்கூட ஒரு திரைப்பட அரங்கின் அதிபர் வந்து, சில புள்ளி விவரங்களைக் கொடுத்து, இந்த வரி மிகவும் அதிகமானது, அதைத்



தாங்கிக்கொள்ள முடியாது என்று சொன்னார்கள். எனக்கு அதிலே அனுபவம் இல்லை. அதுபற்றி உண்மையிலேயே எனக்குத் தெரியாது. இந்த வரி தாங்க முடியாதது என்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ராஜதந்திரத்தோடு முயற்சி செய்து அவர்களைத் திருப்தி செய்தால், அதிலே எனக்கு மகிழ்ச்சிதான்; வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. சினிமா வேண்டாம் என்று சொல்லுகின்ற மனோபாவம் உடையவன் என்றாலும், நினைத்த நேரத்தில் அதை ஒழிப்பதற்குள்ள அளவிலா அது இருக்கிறது, அது அகோரமாக வளர்ந்திருக்கிற ஒரு பெரிய தொழில். நாளைக்கே அது ஒழிந்துவிடப்போவதில்லை. கலைஞர் அவர்கள் இதை விரும்பாதவராகக்கூட இருக்கலாம், அதற்கு நான் உத்தரவாதம் சொல்வதற்கில்லை. எல்லாத் தியேட்டர்களும் மூடப்படுவதை அவர் விரும்புபவர் அல்ல; ஏனென்றால் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள். இந்த விஷயத்தில் அரசு கொஞ்சமும் நாள் தள்ளாமல் சீக்கிரம் பேச வேண்டும். தியேட்டர் சொந்தக்காரர்களும் தங்கள் பிடிவாதத்தை விட்டு, தியேட்டரைத் திறந்துவிட்டு அரசோடு பேசுவதற்கு முன்வர வேண்டும். இதில் அரசாங்கத்திற்கு 'பிரஸ்டிஜ்' இருக்கிறதா, சினிமாத் தியேட்டர்காரர்களுக்குப் 'பிரஸ்டிஜ்' இருக்கிறதா என்று பார்க்கிறபோது, அரசாங்கத்தின் 'பிரஸ்டிஜ்', ஐந்து கோடி மக்களின் 'பிரஸ்டிஜ்', அதற்கு மதிப்பளித்து, சினிமாத் தியேட்டர்காரர்கள்தான் முன்வர வேண்டும். அவர்களுடைய தனிப்பட்ட மரியாதையைப் பாதிப்பது அரசின் நோக்கம் அல்ல. அரசின் சார்பில் முதலமைச்சர் ஒரு கருத்தைச் சொல்லிவிட்ட பிறகு—தியேட்டரைத் திறந்து விட்டுப்பாருங்கள் என்று சொல்லிவிட்ட பிறகு—அதற்குப் பிறகு ஒரு கணமும் தாமதம் செய்யாமல், தியேட்டர்களைத் திறந்துவிட்டு அவர்கள் முதல்வரைச் சந்திக்க வேண்டும்.

இந்தத் துணை நிதி நிலை அறிக்கையில், புது வரி வருவதற்குக் காரணமாக இருந்ததில் இங்கே எல்லைப் போராட்ட வீரர்களுக்கு, வடக்கு தெற்கு எல்லைப் போராட்ட வீரர்களுக்கு, மான்யம் கொடுப்பதற்கு அரசு திட்டம் வகுத்திருக்கிறதை எண்ணிப் பார்த்து அதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த இரண்டு போராட்டங்களையுமே நடத்துவதிலே முன் நின்றவர்களில் நான் ஒருவன்—அது முதலமைச்சருக்கும் தெரியும், இந்த அவைக்கும் தெரியும்—என்ற முறையில் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். முன்பு இருந்த காங்கிரஸ் அரசில், தியாகிகள் மாநாட்டிலே கலந்துகொண்டு பேசும்போது குறிப்பிட்டேன். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பாராட்டிக் கொடுக்கிறீர்களா, அல்லது வாழ்க்கை இழந்து விட்டார்கள் என்ற பரிதாபத்தின் பேரில் ஜீவனாம்சம் கொடுக்கிறீர்களா என்று தெரியவில்லை. காங்கிரஸ் ஆட்சி விடுதலைப் போராட்ட வீரர்கள், தன்னலத்தை விட்டு, குடும்ப நலத்தை விட்டு, உயிருக்குக் கவலைப் படாமல், நாட்டின் நலத்திற்காகப் போராட்டத்தில் குதித்ததற்கு, அவர்களின்

தியாக உணர்வுக்குக் காட்டுகின்ற மரியாதை, பாராட்டு என்பதாகத்தான் இருக்க வேண்டும். அப்படியில்லாமல் ஏதோ ஜீவனத்திற்கு வழியில்லாமல் இருக்கிருனே, நாங்கள் தருகிரேம் என்று சொல்வது, அந்தப் போராட்டத்தை மதிப்பது அல்ல. முன்பும் இந்தக் குறை இருந்தது. அது, இந்திப் போராட்டத்திலும் எல்லைப் போராட்டத்திலும் சேர்ந்தவர்களுக்கும் இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இம்மாதிரிச் செய்கிருர்களோ இல்லையோ, இங்கேயுள்ள அரசு அதைச் செய்ய வேண்டும். அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பாராட்டுகின்ற அம்சமாக இருக்க வேண்டும். அதில் படித்தரம் வேண்டுமாஞல் வைத்துக்கொள்ளுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. எப்படியேனும் அதில் ஈடுபட்ட ஒவ்வொருவருக்கும் மரியாதை, கௌரவம், நற்சான்று கொடுக்கின்ற முறையில் ஒரு திட்டத்தை முதல்வர் அவர்கள் வகுக்க வேண்டும். என்னைக் கேட்டால் அதை நான் தயாரித்துக் கொடுக்கிறேன். நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தெற்கு எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டவர், அதில் அவர் காட்டிய உணர்வை நான் அறிவேன். இரண்டு போராட்டங்களிலும் முன் நின்றவன் என்பதால் பலரின் பழிக்கு ஆளாகின்ற நிலையில், இத்தகைய ஒரு திட்டத்தை முதல்வர் கொண்டுவந்த பிறகு, மகிழ்ச்சியடைந்தேன். இதற்காக வருகின்ற கடிதங்களைப் பார்க்கிறபோது, இப்படி ஒரு அவமானமா, போலீஸ், சிறை கொடுக்கிற மரியாதையை வைத்துத்தாஞ, இந்தப் போராட்ட வீரர்களின் தியாகத்தை மதிப்பது? முதல்வர் அவர்களிடமிருந்து அண்மையில் தாமிரப் பட்டயத்தைப் பெற்றபோது, நான் எண்ணினேன், தாமிரப் பட்டயத்தைப் பெறும்போது மகிழ்ச்சிதான். ஆஞல் அதை வாங்கும்போது, இறந்து போனவர்களின் நினைவு வந்தது. இதை வாங்குவதற்குப் பாக்கியம் இல்லாமல் எவ்வளவோ பேர் காலமாகிவிட்டார்கள். 25 ஆண்டுகள், கால் நூற்ருண்டு ஆகிறது தியாகிகளுக்கு ஒரு செப்புப் பட்டயம் கொடுப்பதற்கு. ஆண்டவன் ஆயுள் அளித்ததால் அதை வாங்குகின்ற பாக்கியம் கிடைத்தது. இம்மாதிரி ஒரு போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பாராட்டுவது, கௌரவிப்பது என்ருல், சரியாகக் கௌரவிக்க வேண்டும், இல்லையென்ருல் அடியோடு விட்டுவிட வேண்டும். 'டிவைட் அண்ட் ரூல்' என்பது போல் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பிரித்து, பிரித்து, மேல், கீழ், தாழ்வு, உயர்வு என்று பிரிக்கின்ற மனப்பான்மையை விட்டு விடுவது நல்லது என்றுகூடச் சொல்லத் தோன்றுகிறது.

என்னைப் பொறுத்தவரையில், சிறைக்குப் போனதற்கு பிரதியுபகாரத்தை எதிர்பார்ப்பவன் அல்ல. விடுதலைப் போராட்டத்தில் ஆறு முறை சிறை சென்றதற்கு தியாகி மான்யம் கொடுக்க வேண்டும் என்று சொன்ஞர்கள். ஒரு முறை தலைவர் காமராஜ் அவர்கள்கூட, நீங்கள் விண்ணப்பம் போட்டீர்களா



என்று கேட்டார்கள். கலெக்டருக்கு விண்ணப்பம் போட வேண்டுமென்று வைத்திருப்பது உதைத்தவனிடமே உதவி கேட்பது போன்று இருக்கிறது என்பதால், நான் போடவில்லை என்று சொன்னேன். அப்போது ஆதம்பாக்கம் ராமகிருஷ்ண ஐயர் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு இத்தகைய பொறுப்பில் இருந்தார். அவர் வற்புறுத்தி, ஒரு முறை ஜெயிலுக்குப் போன விவரங்களைக் கொடுங்கள், நான் வாங்கித் தருகிறேன் என்று சொன்ஞர். ஏழு ஏக்கர் நிலம் செங்கற்பட்டு மாவட்டத்தில் வாங்கிக் கொடுத்தார். 1952-ல் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக வந்தபோது, " தியாகிகள் மான்யம் வாங்குவது எல்லாம் தப்பு, வாங்கியவர்கள் எல்லாம் திரும்பக் கொடுத்தால் நான் மகிழ்ச்சியடைவேன் " என்று சொன்ஞர்கள். மறுநாளே நான் அதைத் திருப்பிக் கொடுத்து விட்டேன். விளையாத நிலம் அல்ல, நன்ருக விளைகின்ற நிலம்தான் கொடுத்தார்கள். அதை உடனேயே திருப்பிக் கொடுத்து விட்டேன். அவர் சொன்னதைக் கேட்டுக் கடைப்பிடித்ததற்காக எத்தனையோ ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானவன் நான். மூன்று மாதத்திற்குப் பிறகு கலெக்டர் திரும்ப அந்த நிலத்திற்கு வரி கட்டுங்கள், இல்லையென்ருல் வேண்டாம் என்பதை உறுதிப்படுத்துங்கள் என்ருர். நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். அது என்னுடைய தனி அபிப்பிராயம். விடுதலைப் போராட்ட வீரர்களை கௌரவிக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. தமிழக முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக அரசும், அமைச்சரவையும் நான், வடக்கு தெற்கு எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டவன், அதில் மற்றவர்கள் ஈடுபட வேண்டும் என்று தூண்டியவன் என்ற முறையில், மிகப் பணிவோடு விடுக்கும் கோரிக்கையை, அதாவது அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட அவ்வளவு பேருக்கும் பெருமையும் கௌரவமும் கிடைக்கின்ற வகையில் சிறப்பான ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் துணை மதிப்பீடுகளைப் பொருத்து சில வார்த்தைகள் பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான பண வசதிகளை அதிக அளவிலே அந்தந்த மாநிலங்களே பெருக்கிக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு கடந்த 4 அல்லது 5 மாதங்களாக பல முறை மாநிலங்களுக்குத் தாக்கீது அனுப்பியிருப்பதையெல்லாம் பத்திரிகைகளில் பார்த்தோம். மேலும் மத்திய அளவிலும் சரி, மாநில அளவிலும் சரி பற்ருக்குறை பட்ஜெட் போடுகிருர்கள். மத்தியிலே அதிகமான அளவிலே பற்ருக்குறை பட்ஜெட் போடுவதால் நோட்டுக்களை நிறைய அடித்து, விலைவாசி மிகவும் அதிகரித்துவிட்டது. அதை மத்திய அளவிலே கட்டுப்படுத்த வேண்டுமென்ற கருத்து இப்போது பல ஆண்டுகளாகப் பேசப்

பட்டு, கடந்த ஓராண்டுக் காலமாக மிகவும் அதிகமாக நம்முடைய மத்திய அமைச்சர்களாலும், குறிப்பாக நிதி அமைச்சரவர்களாலும் பேசப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். மாநில அளவிலேயும்கூட, இனிமேல் ரிசர்வ் வங்கி மூலம் கொடுக்கும் ஓவர்டிராப்டை அனுமதிப்பதில்லை என்று அவர்கள் அடிக்கடி சொல்லி வருவதையும், அதனால் சில மாநிலங்கள் பெருமளவுக்குப் பாதிக்கப்படுவதையும் பார்த்தோம். அண்மையில் கேரள மாநிலத்தில் அவர்கள் வாங்கியிருந்த பற்றாக்குறையை, நாங்கள் ஈடு செய்ய முடியாது; அனுமதிக்க முடியாது என்று சொன்னதால், கேரள மாநில அமைச்சரவர்கள் மத்திக்குச் சென்று அதற்கு ஏதேனும் வழி வகுக்க வேண்டுமென்று அவர்களோடு பேசியதையும், கர்நாடக அமைச்சரவர்களும் அங்கே பேசியதையும் பார்த்தோம். அந்த அடிப்படையிலே மாநிலங்களினுடைய நிதி நிலைமையை ஒப்பு நோக்கும்போது, இந்த முறை பற்றாக்குறை அளவிலே நம்முடைய நிதி நிலை அறிக்கையைத் தயார் செய்ய வேண்டிய அவசியம் மாநிலத்திற்கு ஏற்பட்டது. அந்த நிதிநிலை அறிக்கை பற்றாக்குறையாக இருக்கலாமா, வேண்டாமா என்பதற்கான விளக்கங்கள் பல தடவை சொல்லப்பட்டன. இதற்கு முன்னாலே எல்லாம் பற்றாக்குறை அடிப்படையிலே தங்கள் பட்ஜெட்டை வெளியிட்ட மாநிலங்களுக்கெல்லாம் மத்திய அரசு கூடுமான அளவுக்கு பண ஒதுக்கீடுகளையும், வழிவகைகளையும் செய்து வந்தது. அப்போது நாம் நல்ல முறையில் வருமானத்தையும், செலவையும் சரிக்கட்டி வந்தோம். நாம் பற்றாக்குறை பட்ஜெட் போடலாமென்ற நிலைமைக்கு வந்தபோது, மத்திய அரசு இனிமேல் உங்களுக்கு எந்தவிதமான உதவியும் அளிக்கத் தயாராக இல்லை என்று சொல்லுகிறது. கடந்த ஓரிரு மாதங்களாக மாநில அரசுகளின் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும், இந்த ஆண்டுத் திட்டங்களுக்கும் தேவையான நிதிக்காக, அதிகப்படியான வரிகளையெல்லாம் விதிக்க வேண்டுமென்ற கருத்துப்பட, இங்கே வந்த மத்திய அமைச்சர் திரு. தார் அவர்கள் முதலமைச்சரவர்களைக் கண்டு பேசி, இந்தந்த இனங்களில் வரியை அதிகப்படுத்த வேண்டுமென்று பேசியதைப் பார்த்தோம். குறிப்பாக அவர்கள் சிலவற்றைச் சொன்னார்கள். இப்போது 'அக்ரிகல்சுரல் செக்டார்' என்று சொல்லக்கூடிய வேளாண்மை செய்பவர்களிடம் அதிகப்படியான பணம் குவிந்து கிடப்பதாகவும், அக்ரிகல்சுரல் செக்டாரில் இருக்கும் பணத்தையெல்லாம் வரி விகிதமாகப் போட வேண்டுமென்றும் அவர்கள் எல்லா மாநிலங்களுக்கும் தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். 'இர்ரிகேஷன் டாக்ஸ்' என்று சொல்லும் பாசனத் தீர்வைகள் அடிப்படையிலே வரிகள் போட வேண்டுமென்ற கருத்துப்படவும் சொன்னார்கள். எலக்ட்ரிசிடி போர்ட் என்று சொல்லக்கூடிய நம்முடைய மின்சார வாரியம் எல்லா இடங்களிலேயும் நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதிகப்படியான அளவில் மின்சாரத்திற்குக் கட்டணம் வசூல் செய்ய வேண்டுமென்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே நேற்றையதினம் நம்முடைய மின்சாரத்



துறை அமைச்சரவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையைப் பார்த்து பத்திரிகையில், 'யூனிட் கட்டணம் அதிகமாக்கப்படலாம்' என்ற கருத்து இருக்கிறதென்று எழுதியிருக்கிறார்கள். இங்கே தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்று. மாநில அரசுகள் சிக்கன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், பற்றாக்குறை பட்ஜெட் போடக் கூடாதென்றும் நிலைமை ஏற்படுகிறது. அதே சமயத்தில் மாநிலங்களுக்கு உள்ள அதிகாரத்திற்கு உட்பட்டு, எதிர் வரி போட வேண்டுமென்று அவர்கள் சொல்வதையொட்டி நடப்பதனால், அப்போது நமக்குள்ள உரிமைகளை இழக்கும் நிலைமை ஏற்படும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் குறிப்பாக இன்னும் ஒன்றைச் சொல்வேன். இந்தத் துணை மதிப்பீடுகளில் சில வரி இனங்களை அதிகப்படுத்தியிருக்கிறோம். உதாரணமாக மது விலக்குக் காரணமாகவும், குதிரைப் பந்தயத்தை ஒழித்ததன் காரணமாகவும் நமது மாநிலத்திற்கு நிதி அதிகமாகத் தேவைப்படுகிறதென்று சில வரி இனங்களை அதிகப்படுத்துகிறார்கள். இந்தச் சமயத்தில் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னே என்று நினைக்கிறேன். நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையில் 'நான்-பிளான் எக்ஸ்பெண்டிசர்' என்ற அளவிலே எப்படி சிக்கனத்தைக் கையாள வேண்டுமென்பதற்காக ஒரு கமிட்டியை நமது மாநில அரசு நியமித்ததாக என்னுடைய ஞாபகம். மத்திய அரசிலும் சிக்கன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்து ஏற்பட்டு, 'ஆசியன் டிரேட் பேர்' ஐக்கூட நிறுத்த வேண்டுமென்று அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். நமது மாநில அரசு தற்போதுள்ள நிலைமையிலே என்னென்ன சிக்கன நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்துள்ளது என்பதை இந்த அவை தெரிந்துகொள்ள விரும்புகிறது. வரி இனங்களைப் போடுவதற்கு முன்பு, 'நான் பிளான் எக்ஸ்பெண்டிசர்'—திட்டச் செலவு இல்லாத விஷயங்களுக்கு எவ்வளவு அதிகப்படியான பணத்தை மிச்சப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு வரி போட வேண்டிய அவசியம் ஏற்படாது. நம்முடைய முதலமைச்சரவர்கள்கூட அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று சொன்னார்கள். ஆனால் அதற்காக என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கப் போகிறது. அந்தக் கமிட்டியின் அறிக்கை என்ன என்பவற்றைத் தெரிந்துகொள்ள விருப்பமாக இருக்கிறோமென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்க அளவிலேயும், தனிப்பட்ட அளவிலேயும் தொழில்களை ஆரம்பித்திருக்கிறார்கள். பஸ் போக்குவரத்து நடத்துகிறார்கள்; மின்சார வாரியம் நடத்துகிறார்கள். அதுபோல பல தொழில்களையும் நடத்தி வருகிறோம். நேற்றைய தினம் திரு. தாமோதரன் அவர்கள் கேட்டார்கள். சிமெண்ட் பேக்டரியைப் பொறுத்தவரையில் அதன் இன்ஸ்டால்ட் கெபாசிடி என்ன, எந்த அளவுக்குத் தயாரிக்க வேண்டும், எந்த அளவுக்குத் தயாரிக்கிறார்கள் என்று கேட்டார்கள். நம்முடைய தொழிலமைச்சரவர்கள் பல்வேறு காரணங்களினால், இன்ஸ்டால்ட் கெபாசிடியில் 50 சதவிகிதம்தான் இயங்குகிறதென்று சொன்னார்கள். நம்முடைய நாட்டிலே வரி போட

வேண்டாமென்ற கருத்து இருக்குமானால், அதற்குத் தகுந்தவாறு அரசாங்கத்தினுடைய வாரியங்கள், அரசாங்கம் நடத்துகின்ற தொழில்கள் எல்லாம் லாபகரமாக நடத்தப்படுவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் தொழில் செய்ய வேண்டுமென்ற ஒரு காரணத்திற்காக ஒரு தொழிலை எடுத்து, பின்னால் நஷ்டம் வந்தால், அதைத் தாங்கிக்கொள்ளும் அளவுக்கு நிதி நிலைமைகள் இல்லாததால், எந்தத் தொழிலை எடுத்தால், அது சரிவர நடக்கும் என்பதைக் கவனித்து எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூன்றாவதாக, பொது நலத் திட்டங்கள் என்ற பெயரால் நாம் பொது மக்களுக்குச் செய்ய வேண்டிய திட்டங்களை அவ்வப்போது வருகிற நம்முடைய பட்ஜெட்டிலே போட்டு வருகிறோம். ஆனால், அதில் ஒன்றைப் பார்க்க வேண்டும். நம்முடைய நாட்டிலே வசதி குறைந்தவர்கள் மிகவும் அதிகம். அவர்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட காரியங்களை பொது மக்களுக்குச் செய்துகொண்டு வரும்போது, அந்த அளவுக்குச் செலவு செய்ய பணம் இருக்கிறதா என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். தனிப்பட்ட ஒரு மனிதனை வைத்துப் பார்த்தால் வியாபாரி என்று வைத்துப் பார்த்தால், அவனுக்கு இருக்கக்கூடிய முதல், லாபம் இவற்றைக் கணக்கு எடுத்து, எந்த அளவுக்கு சொந்தச் செலவைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்பதைப் பார்த்து, அதைக் குறைத்துக்கொண்டு, அவன் வியாபாரத்தைப் பெருக்குவதில் கண்ணும் கருத்துமாக இருப்பதைப் பார்க்கிறோம். லாபம் வந்தால் அதை முதலீடு செய்ய முடியும். முதலீடு செய்தால் மேலும் லாபம் வரும். எனவே அரசாங்கம்கூட அந்தக் கண்ணோட்டத்தில் முதலீடு

(பிற்பகல் 4.40)

செய்து, அதில் வரும் உபரி லாபம் கொண்டு வாரியங்களை வளர்ச்சி அடையச் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றும் நான் சொல்லிக்கொள்வேன். இப்போது பற்றாக்குறை வந்திருக்கிறது. ஆகவே இதற்கெல்லாம் வரிகள் போடத்தானே வேண்டும் என்ற கருத்துக்களைச் சொன்னார்கள். நமக்கு மத்திய அரசாங்கத்திலிருந்து இன்கம்-டாக்ஸ், எக்சைஸ் டியூடி இவைகளிலிருந்து வரக்கூடிய பணமெல்லாம் கொஞ்சம் அட்வான்சாக, முன்னாலேயே கிடைக்கக்கூடிய நிலை இருந்து, கிட்டத்தட்ட 75 கோடி ரூபாய் அளவில் முன்னதாகப் பெறமுடியும் என்றால், ஓரளவுக்கு நம்முடைய செலவைக் கூட ஈடு செய்ய முடியும் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து, எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் பலர் சில முக்கியமான கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே திரைப்படக் காட்சி வரியைப் பற்றிச் சொன்னார்கள். இந்தத் திரைப்படக் காட்சி தியேட்டர்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் துணைத் தலைவர் அவர்களைப் போய் பார்த்ததைப்போல என்னையும் வந்து பார்த்தார்கள். அவர்கள் குறிப்பிட்டுப் பேசியதிலே ஒன்று நியாயமாகப் படுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதிலே, ஷோ டாக்ஸ் என்று தற்போது சொல்லக்கூடிய, காட்சி வரியை விதித்திருப்பது ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாத மாதிரித் தெரிகிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னையிலே ஏ.ஸி. தியேட்டர்களிலே முன்னாலே வாங்கிக் கொண்டிருந்த வரி ஒரு காட்சிக்கு 12½ ரூபாய். தற்சமயத்தில் 150 ரூபாய் கேட்கிறார்கள். முன்னாலே ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13,500 அரசுக்குக் கட்ட வேண்டியதாக இருந்தது. தற்சமயம், ரூ. 1,62,000 வரையிலே அவர்கள் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு நிகரமாக வரக்கூடிய நஷ்டம் அந்த வகையிலே மட்டும் ரூ. 1,48,000 என்ற அளவுக்கு இருக்கிறது. அதுபோலவே, 'நான் ஏ.ஸி.' தியேட்டர்களைப் பொறுத்த அளவிலே பழைய நிலையில் ரூ. 12½ கட்டவேண்டியிருந்தது. இப்போது ரூ. 100 என்று இருக்கிறது. அதைப் பார்க்கிறபோது, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 96,500 கூடுதல் செலவு ஆகிறது என்று சொல்லுகின்றார்கள். அதுபோலவே மதுரையில் 'நான் ஏ.ஸி.க்கு' ஆண்டுக்கு 67,500 ரூபாய் வரி. தஞ்சை போன்ற முனிசிபல் இடங்களில் ரூ. 45 ஆயிரம், கிராமத்தில் இருக்கக்கூடிய டூரிங் டாக்கீசுகளுக்கு ரூ. 14,000 ஆகிறது. ஒரே சமயத்தில் இவ்வளவு அதிகமான வரி கட்ட வேண்டுமென்று நிர்ணயித்திருப்பது சரியானதா என்பதை அரசு ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். 'ஏ.ஸி.' தியேட்டருக்கும் ஒரே வரி, 'நான்-ஏ.ஸி.' தியேட்டருக்கும் ஒரேவிதமான வரி என்று வசூலிக்கின்றார்கள்.

அது மாத்திரமல்லாமல், ஒரு 'ஏ.ஸி.' தியேட்டரில் எவ்வளவு பேர்கள் உட்காரக்கூடிய இடம் இருக்கிறது என்று பார்த்தால், சில தியேட்டர்களில் கிட்டத்தட்ட 200 அல்லது 400 என்ற அளவிலே இருக்கின்றது. இந்த 'ஏ.ஸி.' தியேட்டர்கள் சென்னையில் இருக்கின்றன. எமரால்ட் தியேட்டரில் 200 பேர்கள் உட்காரலாம். தேவி பாலா தியேட்டரில் 500 பேர்கள், அண்ணா தியேட்டரில் 400 பேர்கள் உட்காரலாம். இப்படி வித்தியாசம் இருக்கிறது. பெரிய தியேட்டர்கள் என்று எடுத்துப் பார்த்தால், தேவி பாரடைஸ், சாந்தி தியேட்டர், ஆனந்த் தியேட்டர் இவைகளில் ஆயிரம் பேர்கள் உட்காரக்கூடிய அளவுக்கு இருக்கின்றன. ஆனால் ஏ.ஸி. தியேட்டர் என்ற ஒரே காரணத்தை வைத்துக்கொண்டு அவர்களுக்கும் ஒரேவிதமான கட்டணத்தை வசூலிக்கின்றனர். மேலும் 400 பேர்கள் அக்காமொடேஷன் உள்ள தியேட்டருக்கும்,

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1974 ஆகஸ்ட் 17

ஆயிரம் பேர்கள் உட்காரக்கூடிய தியேட்டருக்கும் ஒரே விதமான 'ஷோ டாக்ஸ்' என்று சொன்னால், அது எவ்வளவு தூரத்திற்கு நியாயம் என்பதை அரசுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

இன்னொன்றும் சொல்வேன். 'ஏ.ஸி. தியேட்டர்', 'நான்-ஏ.ஸி. தியேட்டர்' ஆகிய இரண்டைப் பொறுத்தும்கூட ஒரே மாதிரியான கட்டணத்தை வசூலிக்கின்றார்கள். 'ஏ.ஸி.' தியேட்டர்களுக்கு மாதம் கிட்டத்தட்ட ரூ. 8 ஆயிரம் வசூலிக்கின்றார்கள். மற்ற தியேட்டர்களில் பெரியதாக இருந்தால், ரூ. 8 ஆயிரம், சிறியதாக இருந்தால், ரூ. 4 ஆயிரம் கட்டணம் கரண்ட் சார்ஜூக்குக் கட்ட வேண்டியதாக இருக்கின்றது. 'நான்-ஏ.ஸி.' தியேட்டர்களாக இருந்தால் ரூ. 500 முதல் ரூ. 1,000 வரையில் கரண்ட் கட்டணம் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே இந்தக் கூடுதல் வரியைக் குறைப்பதற்கு அரசு ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மூன்று நாட்களுக்கு முன்னர் ஆளுநர் பெருமான் அவர்கள் கொடுத்த சுதந்திர தின விருந்திலே கலந்து கொள்ளும்போது சில நண்பர்களைப் பார்த்தேன். அதிலே ஒரு நண்பர் நம்முடைய அரசு செய்திருக்கக்கூடிய காரியங்களைப் பாராட்டிப் பேசி, மதுவையும் ஒழித்துவிட்டார்கள், அதே சமயத்தில் குதிரைப் பந்தயத்தையும் நிறுத்தி வைத்திருக்கின்றார்கள், அதே சமயத்தில் நாடு முழுவதும் உள்ள சினிமாக்களையும் மூடிவிட்டார்கள் என்ற பாராட்டைத் தெரிவித்தார். இன்னொரு நண்பர் அதிலே பெரிய ஆபத்தும் இருக்கிறது என்று சொன்னார். நான் என்ன ஆபத்து என்று கேட்டேன். அமெரிக்க நாட்டிலே ஒரு நாள் திடீரென்று ஒரு மணி நேரம் விளக்கு அணைந்திருந்தது. அதனுடைய காரணமாக பல லட்சக்கணக்கான குழந்தைகள் பிறந்ததாகச் சொல்லுகின்றார்கள். மக்களுக்காக இருக்கின்ற பொழுது போக்குகளையும் எடுத்து விட்டால், நம்முடைய நாட்டிலே பாப்புலேஷன் அதிகமாக, அதனாலே அரசாங்கத்திற்கு....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இப்போது வெளி வருகின்ற படங்களைப் பார்த்தால்தான் அப்படி வரும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அரசு இதைப் பொறுத்தவரையிலே, படக்காட்சியாளர்களை அழைத்து வைத்துப் பேச வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே சமயத்தில், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நம்முடைய முதலமைச்சர் அவர்களை இரண்டு நாட்களாக காட்சியாளர்கள் பார்க்க முயற்சித்ததாகவும், பார்க்க முடியாத நிலை இருந்தது என்றும், தற்போது நிறுத்தி வைத்திருக்கின்ற படக்காட்சிகளை நடக்கவிட்டு அதற்குமேல் பேசலாம் என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாகவும் குறிப்பிட்டார்கள். அவர்கள் என்னையும் பார்த்துச் சொல்லி



1974 ஆகஸ்ட் 17] [திரு. ஜி. சுவாமிநாதன்]

யிருக்கின்றார்கள். முதலமைச்சர் அவர்கள் சொல்லியுள்ளபடி, மறுபடியும் அந்தத் தியேட்டர்களைத் திறந்து நடத்திவிட்டு அவர்களைப் பார்க்க வந்தீர்களானால், பார்ப்பதற்கு நிச்சயமாக அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று குறிப்பிட்டேன். ஏனென்றால் இவ்வளவு அதிகமாக வரி இருக்கின்றது. நான் சொல்லி முதலமைச்சருக்கு இது தெரிய வேண்டியதில்லை. அவருக்கே தெரியும் என்ற கருத்தையும் சொன்னேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள். ஒரு நாள், இரண்டு நாட்கள் என்று இப்படி ஒவ்வொரு நாளும் ரூ. 400, ரூ. 500 என்று போகும் என்று சொல்லி குறைபட்டுக்கொண்டார்கள். நீங்கள் தொடர்ந்து மூடிக்கொண்டிருந்தால், ஆயிரக்கணக்கான ரூபாய்கள் போகும் என்றும், உடனடியாகத் திறக்க ஏற்பாடு செய்தால் நல்லதாக இருக்கும் என்றும் அவர்களிடத்திலே நான் சொன்னேன். அந்த அடிப்படையிலேயே உடனடியாக இந்தத் திரைப்படக் காட்சிகள் எல்லாம் தமிழ்நாட்டிலே நடக்கக்கூடிய அளவுக்கு வழிமுறைகளை நமது முதல்வர் அவர்களும் இந்த ஆட்சியும் வகுக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, விற்பனை வரியைப்பற்றி இங்கே பல நண்பர்கள் பேசினார்கள். அண்டை மாநிலங்களைப் பார்க்கின்றபோது, அமைச்சர் அவர்கள் சொன்னது போல், இங்கே 4 சதம்தான், அங்கே 8 சதம் என்று இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் 3.57 சதமாக வைத்திருக்கின்றோம். இருந்தாலும்கூட அண்டை மாநிலங்களிலே இருப்பதை விடக் குறைவாக இருக்கின்றது. இப்போது நம்முடைய விற்பனை வரியை அதிகமாக்கினால், பொருள்களுடைய விலையும் அதிகமாகப் போகலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பொருளுடைய விற்பனை வரி 3.5 சதம், அது 3 தடவை, 4 தடவை, 8 தடவை என்று சுற்றுமானால், பொருள்களின் விலை கிட்டத்தட்ட ஒரு ரூபாய்க்கு 24 பைசா அளவுக்கு ஏறக்கூடிய நிலைமை இருக்கின்றது. விலைவாசிகளைக் குறைக்க வேண்டுமென்று சொல்கின்ற அதே நேரத்திலே, விற்பனை வரியை அதிகப்படுத்துவதன் காரணமாக விலைவாசி ஏறுமே என்று அச்சமும் ஏற்பட்டிருக்கின்றது.

அதைப் போலவே பெட்ரோலுக்கும் லிட்டருக்கு 6 பைசா அதிகப்படுத்தியிருக்கின்றோம். பணம் வைத்துக்கொண்டிருப்பவர்கள், வசதியாக இருப்பவர்கள்தான் காரிலே போகிறார்கள் என்று சொல்லுகின்றார்கள். சாதாரணமாக இருப்பவர்களும், உத்தியோகம் புரிபவர்களும், அலுவல் புரிபவர்களும் அலுவலகத்திற்குப் போக வேண்டுமென்றுகூட கார் வைத்திருக்கின்றார்கள். கார் வைத்திருப்பவர்களில் பெரும்பான்மையினர் பணம் வைத்திருப்பவர்கள் என்று சொல்ல முடியாது. அவ்வளவு பேரும் பஸ்ஸிலே போக ஏதுவாக அவர்களுக்கு என்று அதிகமாகப் பேருந்துகளை விடவும் அரசின் நிலைமை இல்லை. இந்த

விலையேற்றம் காரணமாக மாதம் 200 ரூபாய், 250 ரூபாய் என்று பெட்ரோலுக்காக ஆகி வந்த செலவு, இப்போது 500 ரூபாய் அளவுக்கு ஏறியிருக்கிறது. ஒரு நண்பர், ரிசர்வ் பாங்கியிலே ரூபாய் 1,500 வரையிலே சம்பளம் வாங்குகின்றவர்கள்கூட தங்களுடைய காரை ஓட்டிக்கொண்டு செல்ல முடியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார். இதையெல்லாம் கருத்திலே கொண்டு, பெட்ரோலுக்கு இப்போது இருக்கக்கூடிய வரியைக் குறைக்க வேண்டும். நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதைப் போல, மற்ற மாநிலங்களில் அதிகமாக இருந்தாலும்கூட, நம்முடைய மாநிலம் ஒரு வழிகாட்டியாக இருக்கலாம். போட்டிருக்கக்கூடிய அந்த 6 பைசாவைக் குறைக்கும்படியாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கடைசியாக, ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் பேச விரும்புகின்றேன். முக்கியமான விஷயம். உணவுப் பொருட்கள் மீதான தீர்மானத்தின்போது என்னுடைய ஒரு கருத்தைச் சொல்ல முடியவில்லை. இப்போது அதைச் சொல்ல விரும்புகின்றேன். காலம் அதிகம் ஆகிவிட்டதால், நம்முடைய மேலவைத் தலைவர் அவர்கள் வருத்தப்படுவார்கள். இந்த ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உணவுக் கொள்முதலைப் பொறுத்த வரையில், கொள்முதல் செய்கின்ற முறை, அது மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, சரியில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அதைப்பற்றி அரசு ஆலோசனை செய்ய வேண்டும். இப்போது பொதுவாக உணவுப் பற்றாக்குறை நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கிறது. நாட்டிலே 39 லட்சம் டன் பற்றாக்குறை உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே மட்டும் உணவு தான்யங்கள் கொஞ்சம் உபரியாக இருந்திருக்கின்றன. நாடு முழுவதுமே பற்றாக்குறை இருக்கும்போது, ஒரு பற்றாக்குறை மாநிலத்திற்கு இன்னொரு உபரி மாநிலத்திலிருந்து தான்யங்கள் போவதை யாரும் தவிர்க்க முடியாது என்ற நிலைமை தான் ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றபோது, மத்திய அரசு 'எப்.ஸி.ஐ.' மூலமும், நம்முடைய அரசு சிவில் சப்ளைஸ் மூலமும் அரசாங்கத்தினுடைய கொள்முதல் மூலம் அந்த அரிசியை எடுத்துக் கொள்கின்றது. அரசாங்கம் எதைக் கொள்முதல் செய்து எடுத்துக்கொள்கின்றது? இந்த மாநிலத்தில் இருக்கின்ற அரிசியை, நெல்லைத்தான் கொள்முதல் மூலம் எடுத்துக் கொள்கிறது. விளைச்சல் நேரத்தில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் டன், இரண்டு லட்சம் டன் என்று அரசாங்கமே கொள்முதல் செய்கின்றதால் என்ன நிலைமை ஏற்படுகின்றது என்றால், தனிப்பட்ட வியாபாரிகள் அந்த நெல்லை எடுத்துக்கொள்ள முடியாது. அவர்கள் அதை எடுத்து வியாபாரம் செய்வதற்குப் பதிலாக, அரசாங்கமே அதை எடுத்து வைத்துக் கொள்வதால், விலை ஏறக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது என்பதை நாம்



பார்க்க வேண்டும். 1952-லே ராஜாஜி அவர்கள் லெவியை எடுத்தபோது, "ஒரு மனிதனுக்கு அனிமியா என்று சொல்லக்கூடிய ரத்த சோகை வியாதி ஏற்படுமானால், அவனுடைய இடது கையிலே இருக்கின்ற ரத்தத்தை எடுத்து அவனது வலது கையிலே போடுவதன் காரணமாக ரத்த சோகை வியாதி தீராது. உண்மையாகவே ரத்த சோகை வியாதி தீர வேண்டுமென்று சொன்னால், வெளியிலே இருந்து ரத்தத்தை எடுத்து அந்த நோயாளிக்குக் கொடுக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அதைப்போல நமக்குள்ள நிலை

(பிற்பகல் 4.50)

என்னவென்றால், அரசாங்கமே வாங்கி வைத்துக்கொண்டாலும், தனிப்பட்ட வியாபாரிகள் வாங்கிச் சேர்த்து வைத்துக்கொண்டாலும், யார் வாங்கிச் சேர்த்தாலும், வாங்கிய நெல் ஒரு பக்கமாகத்தான் குவிந்துவிடுகின்றது. ஆகவே நாம் வாங்குகின்ற அளவுக்கு விலையும் ஏறுவதைப் பார்க்கின்றோம். வியாபாரிகள் வாங்குவதற்கும், அரசு வாங்குவதற்கும் உள்ள ஒரே வித்தியாசம், நான்கு மாதங்கள் கழித்து விலை ஏறுகிறபோது, அரசாங்க ஸ்டாக்கிலே இருந்து கொடுக்கலாம். அப்படித்தான் செய்ய முடியும். ஆனால் நாம் செய்ய வேண்டியதும், மத்திய அரசு செய்ய வேண்டியதும், வெளிநாட்டிலேயிருந்து வரவழைப்பதுதான். அமெரிக்காவிலேயிருந்து 40 லட்சம் டன் வாங்கிக் கொண்டிருந்ததை, 1972-லே மத்திய அரசு நிறுத்தினார்கள். அதன் காரணமாக நாட்டிலே பற்றாக்குறை வந்தது. அதை நிறுத்தியதோடு, அரசு கொள்முதல், அரசு வாணிபம் என்று இவர்களே செய்து, அந்தப் பற்றாக்குறையை எந்த வகையிலும் நிவர்த்தி செய்ய முடியாத நிலையில், நமது திரு. சி. சுப்பிரமணியம் அவர்களே, வெளிநாட்டிலேயிருந்து உணவுப் பொருள் வரவழைத்துத்தான் ஆகவேண்டும், வெளிநாட்டிலிருந்து வராவிட்டால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும்போது, மாநிலத்திலேயிருந்து மத்தியத்திற்கு அரிசி கொடுங்கள் என்பார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், இங்கே உள்ள அரிசியை ஒரு லட்சம் டன், இரண்டு லட்சம் டன் என்று கொடுத்துவிட்டால், இங்கே பற்றாக்குறை ஏற்படுகிறது. அங்கே பற்றாக்குறை இல்லாவிட்டால், இந்த நிலைமை இங்கே ஏற்படாது என்ற கருத்தைச் சொல்லி, அரசு கொள்முதல் செய்கிற ஒரே காரணத்தாலே எந்தவிதப் பலனும் ஏற்படாது என்பதை இராஜாஜி அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள். அதையும் அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதையும் சொல்லி, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். டி. ஆதித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கொஞ்ச காலமாகவே மத்திய சர்க்கார் அடிக்கடி சொல்லி வருகிறது. விவசாயிகளிடத்திலே பணம் அதிகமாகக் குவிந்து விட்டது, அவர்கள் பொருளாதாரம் கூடியிருக்கிறது, இந்த நிலையில் அவர்கள் கொழுத்துப் போய்விட்டனர் ; ஆகவே அவர்கள்

கொழுப்பைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்க, அதிகமான தீர்வை விதிக்க வேண்டும். அப்படிச் செய்து பொருளாதாரத்தைச் சீர்படுத்த வேண்டுமென்று மத்திய சர்க்கார் பேசிவருகிறது. ஆகவே நம்முடைய துணை மதிப்பீட்டிலே கூட இந்தத் தீர்வை வரக் காத்துக்கொண்டிருக்கிறது என்று பலர் எதிர்பார்த்தனர். நமது மாநிலத்தில் மட்டுமல்லாமல், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில்கூட இந்த எதிர்பார்ப்பு இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு விவசாயிகளுக்கு பெரிய சுமை வரப்போகிறது என்று காத்துக்கொண்டிருக்கிற நிலை இருந்தாலும், நல்ல வேளையாக, இந்தத் துணை மதிப்பீட்டில், விவசாயிகள் மேல் வரி விழவில்லை. அவர்கள் மேல் வரி விழுந்தால், அவர்களால் தாங்கமுடியாது என்பதுடன், பல சிக்கல்கள் ஏற்படும். அதனால் உணவு நிலைமைகூட மிகவும் மோசமாக ஆகியிருக்கும். எனவே மிகவும் ராஜதந்திரமாக விவசாயிகளுக்கு ஆறுதலாக இருக்கக்கூடிய நிலையிலே, அவர்கள்மீது வரி விதிக்காமல் இருப்பது பற்றி நாம் எல்லோரும் அரசுக்கு நன்றி செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தலைவர் அவர்களே, இந்தக் குதிரைப் பந்தயத்தைப்பற்றி இரண்டொருவர் சொன்னார்கள். இதே மேலவையிலே முன்பு ஒருமுறை நடந்த சம்பவம் என் ஞாபகத்திற்கு வருகிறது. அப்பொழுது எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவர், "இதற்கு என்று சட்டம் இருக்கிறதே, அதைப் பிரயோகிக்கலாமே என்றார்". அப்பொழுது முதலமைச்சராக இருந்த காலஞ்சென்ற பேறிஞர் அண்ணா அவர்கள், "இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மனிதர் ஒருவர் குதிரைகள் நன்றாக வளர, அவற்றைப் பழக்க, கூடுமானவரையிலும் குதிரைப்பந்தயத்தை ஒழித்துவிடவேண்டாம், இந்தக் குதிரைப் பந்தயம் இருக்கின்ற வரைதான் குதிரைகள் பேணப்படும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இப்போது திடீரென்று அதை அமல்படுத்தவில்லை" என்றார்கள். அப்பொழுது எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், "அவர் பெயரைத்தான் சொல்லிவிடுங்களேன்" என்றார். 'பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்தான் அவ்விதமாக எழுதியிருக்கிறார்கள்' என்று காலஞ்சென்ற பேறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதுபற்றி பலவித ஆட்சேபணைகள் இருக்கின்றன. அதில் பலவிதக் கொள்கைகள் இருக்கின்றன. அதிலே சந்தேகம் இல்லை. குதிரைப் பந்தயத்தை நிறுத்தக்கூடாது என்று சொல்பவர்கள் பலர் இருக்கிறார்கள். நண்பர் திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் பேசுகிறபோது, குதிரைப் பந்தயம் நீடிக்க வேண்டியதைப்பற்றிச் சொல்லி, அதை நிறுத்த வேண்டிய காரணத்தையும் சொன்னார்கள். இங்கிருந்து கிண்டிக்கு டிக்கட் எடுத்துக்கொண்டு ரயிலிலே போகிறான், காரிலே போகிறான், வருகிறபோது நடையிலே திரும்புகிறான் என்று அவர்கள் சொன்னார்கள். அவர்களே



மேலும் சொன்னார்கள், பலவித 'கேம்ப்லிங்' (சூதாட்டம்) இருக்கத்தான் செய்கிறது, அது எல்லாம் இருக்கிறவரையிலே இதுவும் இருக்க வேண்டியதுதானே என்றார்கள். நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன், எங்கேயாவது லாட்டரி டிக்கட் வாங்குகிறவன் காரிலே போய் நடையிலே திரும்புகிறானா? குதிரைப் பந்தயத்திலே 'கேம்பிலிங்' மாத்திரமல்ல. அதிலே ஒரு மோகமே, போதையே இருக்கிறது. அதனால் எத்தனையோ குடும்பங்கள் கெட்டுப்போனதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

நான் சிறு பையனாக இருந்தபோது, எட்டாம் எட்வர்டு இங்கே வந்திருந்தார். அப்பொழுது குதிரைப் பந்தயம் நடந்துகொண்டிருந்தது. நான் போயிருந்தேன். அரை நூற்றாண்டு ஆகிவிட்டது. அப்பொழுது குதிரைப் பந்தயம் எப்படி இருக்கிறது என்று பார்த்தேன். அன்றைக்குக்கூட குதிரைப் பந்தயம் ஒரு சூதாட்டம் என்பது தெரியாது. ஆனால் சூதாட்டம் புகுந்துவிடுகிறது. லண்டனில் பார்த்திருக்கிறேன். ஃபுட்பாலுக்கு வருகிற கூட்டம் கிரிக்கட்டுக்கு வருவதில்லை. ஏன் ஃபுட்பாலுக்கு அதிகக் கூட்டம்? அதிலே பந்தயம் இருக்கிறது. பூல் இருக்கிறது. ஆகவே ஃபுட்பாலுக்குக் கூட்டம். அதில் பணம் புழங்குகிறமாதிரி வேறு எந்த விளையாட்டிலும் இல்லை. ஆகவே தான் அங்கே கூட்டம். அதற்கு ஆட்சேபணை இல்லை.

ஆனால் நாம் தமிழ் நாட்டைப் பார்த்தால், எத்தனையோ குடும்பங்கள் அழிகின்றன. பல குடும்பங்கள் கெட்டுப்போகின்றன. அதையெல்லாம் பார்க்கும்போது, இந்தக் குதிரைப் பந்தயத்தை நடத்த வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதுதான் கேள்வி. பல குடும்பங்கள் அழிந்துபோகின்றன. ஆகவே அதை நிறுத்திவிடுவது மிகவும் விசேஷம். அந்தப் பணம் எங்கேயும் போய்விடவில்லை. ஏழை மக்கள் கையிலேதான் இருக்கிறது.

தலைவர் அவர்களே, இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்கு பற்றி துணைத் தலைவர் அவர்கள் உருக்கமாகச் சொன்னதை அதே விதமாக உணர்ந்தவன் நான். நீண்டகாலமாக இந்த மதுவிலக்குபற்றி திட்டவட்டமான கொள்கை உடையவன் நான். அமெரிக்காவில் இதைக் கொண்டுவந்து, அங்கு சரியாக நடக்கவில்லை என்றால், அந்த வாதம் சரியல்ல. இந்த உலகத்திலே வேறு எங்கேயும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் மாத்திரம்தான், மதுவிலக்குப் பிரசாரம், மதுவுக்கு எதிரான பிரசாரம் இரண்டாயிரம் ஆண்டுகளாக நடந்து வருகிறது. திருக்குறள் எழுதப்பட்ட காலத்திலேயிருந்தே, இந்த மதுவிலக்குப்பற்றி, கள் குடித்தலைப்பற்றி, வெகு காரசாரமாக எழுதப்பட்டிருக்கிறது. அதே காலத்திலே உள்ள சமஸ்கிருத இலக்கியங்களில் மதுவின் கொள்கைகளைப்பற்றி எதிர்த்துச் சொல்லவே இல்லை. கள் குடிப்பதை அனுபவித்துப் பாடியவர்களாகத்தான் இருக்கிறார்களே தவிர, வேறு எதுவும் கிடை

யாது. ஆகவே தமிழ் நாடு சம்பந்தப்பட்ட மட்டிலே, காந்திய இயக்கம் வந்ததற்குப் பிறகுதான் மதுவிலக்கு வந்தது என்பது சரியல்ல. காந்திய இயக்கத்திற்கு வெகுகாலத்திற்கு முன்பே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, மதுவிலக்குப் பிரசாரம் தமிழ்நாட்டிலே தொடர்ச்சியாக இருந்துவந்திருக்கிறது. தமிழ் இலக்கியங்களிலே ஐம்பெரும் பாதகங்களிலே ஒன்றாக இதைச் சொல்லிவந்திருக்கிறார்கள். குறளிலே மாத்திரமல்ல. இன்னும் பல இலக்கியங்களிலேகூட தொடர்ச்சியாக மதுவினுடைய கெடுதலைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மது உடம்புக்குக் கெடுதல், மனதிற்குக் கெடுதல் என்பது மட்டுமல்ல, ஐம்பெரும் பாவங்களில் ஒன்று என்றுகூடச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே வேறு எந்த நாட்டிலும் வந்தாலும், வராவிட்டாலும், தமிழ் நாட்டிலே வெற்றிபெற போதுமான காரணம் இருக்கிறது. தமிழ்நாட்டிலே வெற்றிபெறவில்லையென்றால், உலகத்திலே வேறு எந்த இடத்திலேயும் வெற்றிபெற அணுவளவேனும் சாத்தியம் கிடையாது.

வெளிநாட்டிலே எல்லாம் பார்க்கிறோம். தாய் இருந்து மகனுக்கு சாராயம் ஊற்றிக் கொடுக்கிறாள். இரவு விருந்து சாப்பிடுகிறார்கள். 10 மணிக்கு பெண்கள் உள்ளே போய்விடுகிறார்கள். அம்மா இருந்து மகனுக்கு சாராயம் வார்க்கிறாள். சகோதரி இருந்து சகோதரனுக்குக் கொஞ்சம் ஊற்றிக் கொடுக்கிறாள். இது வெளிநாடுகளிலெல்லாம் நடக்கிற சம்பவம். ஆனால் தமிழ்நாட்டிலே எந்தத் தாய் இதற்குச் சம்மதிப்பாள் ? இப்படிச் சம்மதிக்கும் எந்தத் தமிழச்சியாவது இருக்கிறாளா ? ஆந்திராவிலே பெண்கள் சாராயம் குடிப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆனால் தமிழ் நாடு சம்பந்தப்பட்டவரை, ஆயிரத்திற்கு ஒரு பெண்கூட தான் குடிப்பாள் என்றோ, தன் மகனுக்கு ஊற்றிக் கொடுப்பாள் என்றோ நாம் நினைக்கவே முடியாது. நமது முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, நாம் இதைக் கவனிக்க வேண்டும். சுற்றிலும் தீப்பந்தத்திற்கு நடுவிலே கற்பூரமாக் இருப்பது எவ்வளவு தூரத்திற்கு சாத்தியம் என்ற மனவேதனையோடு மதுவிலக்கை நிறுத்திவைத்தோம். அது மாத்திரம் இல்லை, இதிலேகூடச் சொல்லியிருக்கின்றார்கள், 'அதைக் கொஞ்ச காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டது' என்று அவர்களுடைய பிரசங்கத்தில்கூடச் சொல்லியிருக்கின்றார்கள்.

தலைவரவர்களே, இன்னும் ஒரு சிறு விஷயம். இப்போது எங்கேயும் பேசப்படுவது விலைவாசிப் பிரச்சினைதான். இந்த விலைவாசிக்கு முக்கியமான காரணம் விலைகளை நிர்ணயம் செய்வதில் முறைகேடுகள் பல இருக்கின்றன. அவற்றால் பண வீக்கம் ஏற்படுகிறது. அந்தப் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு பொறுப்பு, அல்லது அதிகாரம் நம் கையில் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. திட்டவட்டமாக இதை எல்லோரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.



தமிழ்நாட்டிலே நமக்கு மாநில சுயாட்சி வரும் வரையிலும் தமிழ்நாட்டிலே விலையைக் கட்டுப்படுத்த முடியும் என்பது பகல்கனவுதான். நமது நாட்டிலே பார்க்கிறோம், ஏதோ ஒரு திட்டத்தை இரண்டு கோடிக்குப் போட்டால், மூன்று கோடியில்தான் நிற்கின்றது. அந்த அளவிற்கு அதை முடிப்பதற்குள் விலைகள் ஏறி, அந்தத் திட்டத்தின் மதிப்பீட்டையும் திருத்த வேண்டியிருக்கிறது. எந்த விஷயமும் பிளானுக்குள் முடிவதில்லை. நேற்று இருந்த விலை இன்றைக்கு இல்லை. இந்த விரும்பத்தகாத தொல்லைகளுக்கெல்லாம் ஒரே காரணம், மாநிலங்கள் கவனிக்கப்படாமல், மாநிலங்களைக் கலந்துகொள்ளாமல், மத்திய அரசு நாஸிக் அச்சகத்தில் நோட்டுகளை அச்சடித்துத் தள்ளுவதுதான். நான் ஏற்கெனவே சொல்லியபடி அந்தப் பணம் இந்த நாடு முழுவதும் சுற்றிச் சுற்றி வருகின்றது. ரூபாய் மெலிந்து விட்டது. ரூபாயிலுள்ள இரத்தத்தில் கோளாறு ஏற்பட்டுவிட்டது. கரென்ஸியில் கோளாறு ஏற்பட்டுவிட்டது. மத்திய அரசு மாநிலங்களைக் கலந்துகொள்ளாமலேயே இப்படி நோட்டுக்களை அச்சடித்துத் தள்ளுகின்றார்கள். அதனால் ஏற்படும் கோளாறு இது. மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுத்து விடுகின்றார்கள். இப்படி நோட்டை அச்சடித்து. அப்படிப்பட்ட உயர்வை நமது சர்க்கார் ஊழியர்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கின்றது. அவர்கள் நோட்டை அச்சடித்துக் கொடுத்து விடுகின்றார்கள். நாம் என்ன பண்ணுவது ?

தலைவரவர்களே, திரு. சங்கரலிங்கம் அவர்கள் மாணவர்களுக்கு இங்கே கோச்சிங் வைக்க வேண்டும் என்றார்கள். நான் ஏற்கெனவே இதைப் பல முறை வற்புறுத்தி வந்திருக்கிறேன். எனவே அதை முழு மனதாக ஒப்புக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவப்படுவதைப் பற்றி ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். இதிலே திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவப்பட இருக்கின்றது. அதிலே ஒரு அபிப்பிராயம் இருந்து வருகின்றது. அதாவது கடற்கரையோரமாக உள்ள நிலங்களிலே பயிராகும் கரும்பில் சர்க்கரை கண்டெண்ட் அதிகமாக இல்லை. ஆகவே கடற்கரையில் வைப்பதை விட்டுவிட்டு, ஆற்றங்கரைப் பகுதியில் வைக்க வேண்டும் என்றார்கள். ஆனால் ஆற்றங்கரையில் பயிராகும் கரும்பில் அதிகத் தண்ணீர்தான் இருக்கின்றது. ஆகவே அது அவ்வளவு விசேஷமாக இல்லை என்று சொல்லுகின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் தென்காசி, சங்கரன்கோயில் பகுதியில் ஆலையை வைத்தால் நல்லதாக இருக்கும். அந்தப் பகுதியில் சோன்மாதேவியில் ஒரு காகித ஆலை இருக்கின்றது. அது பெரும்பாலும் கரும்பின் சக்கை (பகாஸ்) இருக்கிறதே, அதை உபயோகித்து

தயார் செய்கின்றார்கள். எனவே கூடுமான வரையில் இந்தச் சர்க்கரை ஆலையையும் அதன் பக்கத்திலேயே வைத்தால், அது இரண்டுக்குமே நன்மையுடையதாக இருக்கும். அது அந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கும் நன்மையுடையதாக இருக்கும், அந்தக் காகித ஆலைக்கும் பயனுடையதாக இருக்கும். எனவே அந்த மாதிரி முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்

(பிற்பகல் 5-00)

* THIRU A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, I have tried very hard, Sir, to place myself in the position of the Hon. the Chief Minister and Finance Minister in judging the various demands that have been put forward in the First Supplementary Estimates and I think the word itself is misleading, Sir, because what the Hon. the Finance Minister has produced is actually a mini-Budget on a macro-scale, because even the Budget proposals in March 1974 did not envisage a extra revenue collection of Rs. 14 crores which I think the Hon. the Chief Minister expects to collect from this Supplementary Budget that he has been pleased to place before this body.

Sir, in the Budget of March, the Hon. the Chief Minister, in his very clever way, was able to mobilise almost Rs. 10 crores by rationalisation of various taxes and in this Budget, Sir, he has had recourse to certain budgetary proposals. Before I deal with them, I should first like to ask of the Hon. the Chief Minister where this figure of Rs. 56 crores has been floated as being the excise income of the Government of Tamil Nadu. I wish to state, Sir, that over the past four or five years the excise revenue of the Government of Tamil Nadu has never exceeded Rs. 45 crores. When the Hon. the Chief Minister placed his Budget in March 1974, he knew very well that arrack shops were going to be closed on 1st September 1974 and taking into account the five months' income that would result from arrack shops as well as from the excise on wines and liquors, he has taken a credit of only Rs. 17 crores in the Budget Estimate for the year 1974–75. I wish to state this because I think this House as well as the Lower House is entitled to know what exactly our State is likely to lose by giving up the arrack shops as well as the wine shops that we have at present. I will not take into account the loss on account of toddy shops because that has already been abolished during the previous year. Therefore, Sir, while Government have taken into account a revenue of Rs. 17 crores, my estimate is, Sir, that since they knew very well in March



that arrack shops were going to be closed, the estimated loss in revenue will only be of the order of 7 to 8 crores of rupees because the decision to close wine-shops has been taken recently. Therefore, while I am prepared to agree with the Hon. the Chief Minister and Finance Minister that new items of service have come into being and new expenditure will have to be undertaken either by way of payment of salaries or dearness allowance to their staff, etc. and while I am prepared to concede that more revenue would be required because our expenditure has mounted, I would like to state that it is very difficult for us to accept the fact that the re-introduction of prohibition necessitates the new taxes that are sought to be levied in this Supplementary Budget.

Sir, I readily concede that this year is a most difficult year, not only for the Central Government but also for all State Governments, because with the raging fires of inflation all our estimates have gone awry and none of the estimates of expenditure is likely to be fulfilled because inflation would contribute to increase in expenditure. Therefore, from that point of view, perhaps, the new levies that have been suggested by the Hon. the Chief Minister may be explained away. But I should like to place before him one aspect and that is the decision to increase the multi-point sales tax from 3½ per cent to 4 per cent. Sir, I am not one of those who will make the rash allegation that this is a very inflationary tax because, as most of us know, the Hon. the Chief Minister was good enough in March 1974 to remove 59 items from the multi-point levy and to tag them on to the single-point levy. I have tried very hard to find out from the excellent statistical tables that have been given to us by the Government what are the items on which the multi-point levy is at present made. I have asked for this information on many occasions, Sir, but I am afraid I have not been able to gather the information as to the exact impact of this increase from 3½ per cent to 4 per cent, what effect it will have on the cost of living and how much it will affect the common man. Therefore, Sir, I can only make a very vague estimate that it is likely to increase the cost not only of certain essential commodities but also of certain industrial raw materials that are used in the manufacturing industries.

(பிற்பகல் 5-10)

Sir, here again, I must point out that because of the tremendous increase in prices, our State sales tax which was estimated to yield approximately Rs. 140 crores, according to the Budget

[Thiru A. R. Damodaran] [1974 ஆகஸ்டு 17

Estimates, will, without this increase from 3.5 per cent to 4 per cent, be giving the Government of Tamil Nadu a minimum revenue of at least Rs. 150 crores and from that point of view also, I would like the Hon. the Chief Minister to consider whether in the present inflationary situation, in view of the fact that because of the rise in prices our sales tax revenue will automatically improve and because it is an ad valorem tax, he could not defer the decision to increase the multi-point tax from 3.5 per cent to 4 per cent till 1975, when he may be in a better position to judge what actually our deficit is likely to be. I am not pleading on behalf of the traders, although the traders are likely to be seriously upset, as the increase of sales tax will hit the commonman who to-day is finding it extremely difficult with his limited family budget to buy essential articles of daily life. Therefore, Sir, I wish to make the plea that this proposal be deferred in view of the fact that there is a tremendous buoyancy in the receipt of sales tax and that the sales tax revenue will also automatically increase on a pro rata basis, because of the 25 per cent increase in prices that has occurred. Having mentioned this, may I make a plea that in view of the fact that he has introduced single point tax on 59 items in addition to what has been existing in the past,—I hope he will forgive me for reiterating a long-standing demand—he should consider whether it would not be possible to repeal the additional sur-tax that he has always put on the sales tax revenue. This additional sales tax, Sir, is a very dangerous concept, because we have ourselves seen that initially it was only 5 per cent and now it has been increased to 10 per cent. I have a feeling that if we allow this tax to remain on our Statute Book, successive Governments may look upon this as a very good Kamadhenu and keep on increasing the same. It is actually a sur-tax on profits and while I fully support the Government in its demand that we require a larger amount of share in income-tax, I should still like to state that it can become a deterrent to good and honest trading. I request him, in view of the rationalisation he has undertaken in various forms of taxation, like Entertainment Tax and Motor Vehicles Tax, to consider whether it would not be possible for him to merge this with the sales tax rates and see that we have a well known direct levy as far as sales tax is concerned.



1974 ஆகஸ்ட் 17] [Thiru A. R. Damodaran]

My hon. Friend Thiru Swaminathan referred to Petrol tax and H.S.D. tax. I must confess, although I am in the trade and my friends, the dealers might find fault with me, that I cannot find fault with the Hon. the Chief Minister regarding this tax that he has levied, excepting, of course, that it may increase the cost of petrol in Tamil Nadu. In fact, I have been anticipating this tax for the past nine months because I know very well that in Karnataka the rate of tax is 10 or 11 per cent and in Andhra it is 12 per cent. Reduced in terms of paise, it means that the tax in Karnataka is about 30 paise, in Kerala it is 60 paise and in Andhra it is 30 paise. Even with this small increase of Rs. 60, the prices in Tamil Nadu will still be cheaper and, therefore, Sir, in view of the fact that he feels it necessary. I do not think we can quarrel with this tax at all, considering the fact that the Union Finance Minister had the temerity to increase Excise Duties by Rs. 1.05 per litre on one day during the last year. I, therefore, do not think we can quarrel with our State Finance Minister for this small levy.

Sir, I would like to refer to the show tax that has been levied. I occasionally go to the cinema, Sir, when I come to Madras and even occasionally while at home. I think it is a good from of entertainment for our people. I do not agree with some who state that we should not drink, that we should not do gambling, that we should not go to cinemas, and that we should not do so many other things. Nor do I say that we should do all these things. I have an open mind in this matter. We belong to a generation that considers many more vicious things as ordinary things to-day. If anybody goes abroad to-day, Sir, they will find that drug addiction has become the greatest evil in some of the most modern of modern societies and in this permissive age, while I realise that we have to protect our poor people from making it a habit to indulge in all these evils, I still feel that a certain amount of free thinking is necessary on this subject. Generally speaking, Sir, artistic people will always be free thinkers and, therefore, I was a little surprised that our Hon. Chief Minister who is a highly artistic and cultured person resorted to these taxes on cinema shows, etc. If you have gone through history you will find that great painters like Vangogh and others could do excellent painting only under the inspiration of alcohol. I am not for a moment suggesting that it should be encouraged. In fact, another person... I forgot his name.

AN HON. MEMBER: Omar Khayyam.

THIRU A. R. DAMODARAN: *Not Omar Khayyam.*

He is Lord Byron. Lord Byron, for example, was a man of strange habits and he was inspired by them to write some of the finest poetry. Even in our State, Poet Subramania Bharathi was addicted to drugs. One cannot soy how a man is inspired in these matters. Some are inspired by the crowds that they see when they have public meetings. The late Pandit Jawaharlal Nehru had said that seeing a crowd of 2 lakhs of people before him, in front of him everyday, acted like a tonic to him and that was why he was able to keep up his health. I, therefore, wish to say that I have no desire to express any opinion on Prohibition, its withdrawal or its re-introduction. I would still like to see some generosity in thinking on that. Regarding horse race, I do not go to the race course. But that does not mean that I disapprove of people going to horse races. If a man can enjoy himself by seeing the rump of a horse, why should I object? I may find pleasure in having a library book and securing some other things which seem attractive to me. But, at the same time, I would make a plea that so far as horse racing is concerned, a certain amount of generosity is required because I have a feeling that people from our State will spend even more money to run by Brindhavan Express to go and see Bangalore Races. We may restrict betting and we may try to minimise the evils of betting. In fact, I was almost afraid that the Hon. the Chief Minister would bring a tax on rummy because that is one of the games I play at home. I hope I have not given a hint to the Hon. the Chief Minister to introduce a new tax in March 1975. Secondly, Sir, no other State in India has abolished horse racing and betting is going on in those places. While I have no special plea on this and while I do not speak on political level, I feel, at the same time, that certain compulsion has been brought on the Hon. the Chief Minister to introduce all these socio-economic measures. I would only like to say, Sir, that this Government need not feel ashamed of its record for the past eight years. If there are a few who keep on insisting that because they have not introduced the socio-economic measures, they are likely to lose favour with the people, I would like to tell this House that these measures are not likely, Sir, to gain public opinion but more important,





Sir, is the manner in which legislators of all parties are able to behave in their respective Constituencies and this, by far, is the most important thing that will have to be borne in mind. While I have no desire to state that these measures have been brought out of political compulsion, nevertheless, Sir, I feel that it is unfortunate that the Government should have been brought to such a pass that much against their financial will, they have found it necessary to embark on these measures, which not only affect the revenues of the Government, but which will affect our tourist traffic and so many other avenues and, therefore, I would plead that this matter be reconsidered.

Only one word more, Sir, and I have done. I was listening to a part of the debate on show tax that was going on in the Assembly this morning, and I understood from the Hon. the Chief Minister that this tax had been brought forward because cinema-owners were demanding large deposits from distributors or producers for the display of films in Madras City. Sir, even if it is so, I do not think this is a general practice that extends to other parts of the State and the tremendous increase that has been brought about in the levy of show tax will really hit the cinema-owners. Either they will have to increase the value of their tickets or they will have to adopt certain other methods which would not be desirable and which would only cut into the entertainment tax prospects of the Government of Tamil Nadu. I would, therefore, request that a fresh dialogue be started with the cinema-owners to find out how far the Government of Tamil Nadu can protect their revenue without, at the same time, causing them so much financial stress in the sense that—as my hon. Friend Thiru Swaminathan pointed out—the cinema-owner would have to pay so many tens of thousands of rupees as against a few hundreds he is paying at the present moment. I have not been able to gauge why that has become so necessary. The evils of black money are well-known in the cinema-world. But I do not think that this step is likely to tackle that problem and if at all the Government desire to tackle the problem of black money in the cinema-world, well, I am afraid only the Central Government have the powers at present to do that. In this matter, I would like the cinema-owners, as has been suggested by the Hon. the Chief Minister, to withdraw their closure and to meet the Hon. the Chief Minister because I am sure he will show them the necessary consideration provided political parties do not get up and say, at

[Thiru A. R. Damodaran] [1974 ஆகஸ்டு 17

the same time, that something under-hand has been done and, therefore, the Chief Minister has withdrawn it. This is one of the frequent accusations. We ourselves criticise them for bringing certain levies and when there is a willing relaxation, the counter made is that something extremely dirty and evil has taken place. I hope that political parties will also realise their responsibilities and refrain from making such irresponsible accusations, which is vitiating the very atmosphere in our land. If the Hon. the Chief Minister comes forth with some tax proposal and if we argue with him and try to reduce the incidence of such taxes, immediately allegations are made and this probably is one of the reasons why he has sought to take such a very determined stand on matters on which he would not have been so determined if he had not anticipated a dirty campaign. Thank you, Sir.

***மாண்புமிகு மேலவைத் தலைவர் :*** திரு. முத்துசாமி, உங்களுக்கு 5 நிமிஷங்கள். கட்சித் தலைவர்கள்கூட சொன்னால் கேட்டுக்கொள்கிறார்கள், நீங்கள் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். ஆல் ரைட், 5 நிமிஷம் . . . .

***திரு. செ. முத்துசாமி :*** மாண்புமிகு தலைவர் அவர்களே, இவ்வாறு பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்துவிட்டு, எதிர்க் கட்சித் தலைவர்கள்கூட ஒப்புக்கொள்கிறார்கள், நான் ஒப்புக்கொள்ளவில்லை என்று ஒரு குற்றச்சாட்டாக நீங்கள் கூறுவதானால், பிரச்சினையை எடுத்துக் கூறுவதற்கே அப்படி நீங்கள் கருதினால், பேசுவதற்கு மறுத்துவிட்டு வெளியே செல்கிறேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர் அவையை விட்டு வெளியேறினார்.)*

***மாண்புமிகு மேலவைத் தலைவர் :*** இருக்கிற நேரத்தை அனுசரித்துப் போக வேண்டும் என்றுதான் சொன்னேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் . . .

**** திரு. கே. ராஜாராம் :*** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வரி போட வேண்டுமென்று மத்திய அரசிலிருந்து தாக்கீது வந்ததென்றும், வேறு பல இடங்களில் பேசப்படுவ்தாகவும் வரும் செய்திகள் மிகவும் வருந்தத்தக்கவையாகும். எந்த வரி போட்டாலும், அந்த வரியின் மூலம் அரசுக்குக் கிடைக்கக்கூடிய மொத்த வருமானத்தில் 100-க்கு 80 பங்கு விவசாயிகள்தான் கொடுக்கிறார்கள். இது சாதாரண விஷயம். இதற்கு எங்கேயும் போய் புள்ளி விவரங்களைப் படித்துக்கொண்டு வரவேண்டியதில்லை. விற்பனை வரியை எடுத்துக்கொண்டால், அது உபயோகிக்கும் சாமான்களின் மேல் வசூலிக்கப்படுகிறது. அந்த விற்பனை வரி நமது மாநிலத்தில் நடப்பு ஆண்டில் கிட்டத்தட்ட ரூபாய் 150 கோடி வரும் என்று தெரிகிறது. இந்த 150 கோடி ரூபாயில்,



*1974 ஆகஸ்ட் 17] [திரு. கே. ராஜாராம்]*

குறைந்தபட்சம் 120 கோடி ரூபாயை கிராமங்களில் உள்ள விவசாயிகள் கொடுக்கிறார்கள். அவர்கள்தான் மொத்தச் சரக்குகளில் 80 சதவிகிதம் 'கன்ஸ்யூம்' பண்ணுகிறார்கள் அல்லது வாங்கி உபயோகிக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆகவே விற்பனை வரியில் பெரும் பகுதியை விவசாயிகள்தான் கட்டுகிறார்கள். இது மாதிரி எந்த வரியை எடுத்துக்கொண்டாலும், விவசாயிகளிடத்தில்தான் கடைசியில் போய்ச் சேருகிறது. அவர்கள்தான் கொடுக்கிறார்கள். விவசாயத்திற்கு தனி வரி போட வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல.

அடுத்தபடியாக, உண்மையில் இவர்கள் நினைக்கிறமாதிரி, விவசாயிகளிடத்தில் நிறையப் பணம் இருக்கிறது, அவர்களுக்கு வரி போடுவதற்கு தகுதி இருக்கிறது என்றால், அதுவும் சரியல்ல. அப்படியிருந்தால், இப்படி ஏன் வருஷத்திற்கு இத்தனை கோடி ரூபாய், விவசாயிகள் அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்க வேண்டும்? நிலவள வங்கியிலிருந்தும், அரசாங்கத்திடமிருந்து 'தக்காவி'க் கடனாகவும், எத்தனையோ வகையில் கோடிக்கணக்கான ரூபாய் கடன் வாங்குகிறார்கள். இத்தனையும் வாங்கித்தான் அவர்கள் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கு இனி புதிதாக வரி போடுவது என்றால், அது சரியல்ல, அந்த எண்ணம் தவறானது என்று நமது மாநிலம் மத்திய அரசுக்கு வரி போடுவது குறித்து எழுதியதற்கு முதலில் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவும் சொல்லிவிட்டு, அடுத்தபடியாக என்ன வரி போடலாம் என்று மட்டும் நமது மாநில அரசு யோசிக்காது என்று எண்ணுகிறேன். பொதுவாக, ஏற்கெனவே போட்டிருக்கும் பல வரிகளையும் அவர்கள்தான் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற அந்த வாதத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெரிய காரியம், இவ்வளவு துரிதமாக இந்த அரசு மதுவிலக்கை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரும் என்று நான் நினைக்கவில்லை. அவ்வளவு தடபுடலாக மதுவிலக்கை ரத்து செய்தார்கள். மதுவிலக்கை ரத்து செய்யக் கூடாது என்று எவ்வளவோ வாதித்தோம். ஒத்தி வைப்பது என்ற பெயரால் மதுவிலக்கை அடியோடு ரத்து செய்தார்கள். அதன் மூலமாக வருஷத்திற்கு முதலில் வருவாய் 30, 35 கோடி என்று இருந்து கடைசி ஆண்டில் 40 கோடி ரூபாய் வரையில் வந்தது. அது ஒரு சாபமாக வந்து வாய்த்தது. அந்த வருவாய் வரவில்லை என்றால், அரசாங்கத்தின் செலவினம் இவ்வளவு கூடியிருக்காது. இப்போது அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற கஷ்டத்தை நான் உணர்கிறேன். செலவினத்தைக் குறைக்க முடியவில்லை. மதுவிலக்கை ரத்து செய்ததன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு அகலக்கால் வைத்தது இப்போது கஷ்டமாகப் போய் விட்டது. இப்போது செலவைக் குறைக்க

முடியாது. எப்படி இதைச் சரிக்கட்ட முடியும் என்று பார்க்கிறுர்கள். எந்தச் செலவைக் குறைக்க வழி இருக்கிறது என்று பார்க்கிறுர்கள். செலவை அவர்களால் குறைக்க முடியவில்லை. அடுத்து எந்த வரி போட்டால் சமாளிக்க முடியும் என்று யோசிக்கலாம். அடுத்த மார்ச் மாத பட்ஜெட்டில் என்ன செய்யப் போகிறுர்களோ தெரியவில்லை. இப்போது போட்டிருக்கின்ற இந்த வரிகளும் மக்கள் மேல் சுமையாகத்தான் போய்ச் சேரும். மதுவிலக்கை ரத்து செய்ததற்காக விற்பனை வரியில் ஓரளவு கூட்டப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 5-30)

அடுத்து, குதிரைப் பந்தயத்தை ஒழித்ததை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அது நீண்ட நாள் கோரிக்கை. பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் ஒவ்வொரு வருஷமும் அழிந்து, ஒழிந்து போய்க் கொண்டிருக்கின்றன. நன்றாக வாழ்ந்த குடும்பங்கள் மறு வருஷம் பிச்சை எடுக்கும் நிலைமையில் இருக்கின்றன. அந்தக் குடும்பங்களை அரசுதான் காப்பாற்ற முடியும். அந்தக் காரியத்தைச் செய்ததற்காகவும் அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த அரசு இரண்டு பெரிய காரியங்களைச் செய்திருக்கிறது. பொதுவாக மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று நான் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சி இந்த மாநிலத்தில் பெரிய இயக்கத்தை நடத்தியது. சுமார் 35 ஆயிரம் பேர்கள் போன வருஷம் அக்டோபர் மாதம் சிறைக்குச் சென்றுர்கள். எங்கள் உணர்ச்சி எப்படி இருந்திருக்கும் என்பதை அரசினர் அறிவார்கள். உண்மையில் மதுவிலக்கைக் கொண்டு வருவது எவ்வளவு தூரம் எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பதையும் நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். சிறைக்குச் செல்லும் அளவுக்கு மதுவிலக்கு வேண்டுமென்று கேட்டவர்கள் நாங்கள். எனவே இதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நஷ்டத்தை ஈடு கட்ட வரி போடுவது சரியல்ல. செலவினங்களைக் குறைக்க வேண்டும். மத்திய அரசிடமிருந்து, வருமான வரி, எக்ஸைஸ் டியூடி ஆகியவற்றில் நமது பங்கை அதிகம் கோரிப் பெற வேண்டும். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அவர்கள் மதுவிலக்கைக் கொண்டு வந்துள்ள நமக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும். அதை வற்புறுத்தி வாங்க வேண்டும். இங்கே வரிகளைக் கூட்டுவது சரியல்ல என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மதுவிலக்கினுல் நமக்கு ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட வசூலிக்கும் வரி விற்பனை வரி. என்று மதுவிலக்கு அமுலுக்கு வந்ததோ அன்றே விற்பனை வரி விதிக்கப்பட்டது. அந்த இழப்பைச் சரிக் கட்டத்தான் விற்பனை வரி என்று 1937-ல் ராஜாஜி அவர்கள் சொன்னதை, இந்த அவையில் முன்பொருமுறை நான் படித்துக் காட்டினேன். மதுவிலக்கை ரத்து செய்யும்போது அந்த விற்பனை



வரியை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னேன். இப்போது விற்பனை வரி மூலம் 150 கோடி ரூபாய் வந்து கொண்டிருக்கும்போது, மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவரும்போது, வேறு வரிகள் போடுவது சரியல்ல. எப்படியாவது வேறு வகையில் சரிக்கட்ட முயற்சிக்க வேண்டும். எப்படி சரிக்கட்டுவது என்று என்னைக் கேட்பதில் பிரயோசனம் இல்லை. அதை அரசுதான் எப்படியாவது சரிக்கட்ட முயற்சிக்க வேண்டும். புதிய வரிகளைப் போட்டு, மக்களைக் கஷ்டப்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் மதச் சார்பற்ற அரசு என்று சொல்லுகிறோம். பொதுவாக கோவில்கள், மாதா கோவில்கள், பள்ளி வாசல்கள் போன்றவற்றை மராமத்து செய்வதற்கும், பழுது பார்ப்பதற்கும் இந்து அறநிலைய ஆட்சித் துறை, வக்ஃப் போர்ட் ஆகியவற்றின் நிதியிலிருந்தும் செலவு செய்ய வேண்டுமேயொழிய, நமது அரசு நிதியிலிருந்து—அரசு பொது ஜனங்களிடமிருந்து வாங்கும் நிதியிலிருந்து—கொடுப்பது நியாயமா என்பதை அரசு புனராலோசனை பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது பள்ளி வாசல்கள், மசூதிகள் ஆகியவற்றை ரிப்பேர் செய்வதற்காக 3 லட்சம் ரூபாய் இந்தத் துணை மானியக் கோரிக்கையில் வந்திருக்கிறது. இதே மாதிரி போன ஆண்டு இந்துக் கோவில்களுக்கும் கொடுத்திருக்கிறுர்களென்று நினைக்கிறேன். இரண்டும் சரியா என்பதைப் புனராலோசனை செய்ய வேண்டும். வேறு காரியங்களுக்காக—பள்ளிக்கூடம் கட்டுதல், ஆஸ்பத்திரி கட்டுதல், ரோடு போடுதல் ஆகிய காரியங்களுக்காக வசூலிக்கும் பணத்தை மதச் சின்னங்களைப் பராமரிப்பதற்காகக் கொடுப்பது சரியா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, பூம்புகாரில் பல அபிவிருத்திகளைச் செய்வதற்காக 6 லட்சம் ரூபாய் இப்போது ஒதுக்கப்படுகிறது. முதலமைச்சரவர்கள், நான் குறை சொல்லப் போகிறேன் என்று கவனிக்கிறுர்கள். நான் குறை சொல்லவில்லை. அந்தத் தலைப்பு தவறு. இப்போது விளம்பரம் என்ற தலைப்பில்—'இன்பர்மேஷன் அன்ட் பப்ளிஸிடி' என்ற தலைப்பில் இந்தப் பணம் ஒதுக்குவது சரியா என்று பார்க்க வேண்டும். ஏற்கெனவே கல்வி மானியத்தில் ஒரு தலைப்பு இருக்கிறது. கலை, பண்பாடு என்ற அந்தத் தலைப்பில் இதைக் கொடுக்கலாமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** செய்தித் துறை இலாக்கா இந்தப் பூம்புகார் உருவாகின்ற அந்த அமைப்புகளைக் கவனித்து வருகிறது. ஆகவே, செய்தித் துறை இலாக்கா என்ற தலைப்பில் வந்திருக்கிறது.

**திரு. கே. ராஜாராம் :** அந்த இலாக்கா செலவு செய்யலாம். ஆனால் 'கலாசாரம், பண்பாட்டைக் காப்பாற்றுதல்' என்ற தலைப்பு இருக்கிறது. அந்தத் தலைப்பில்தான் இது வரும். அந்தத் தலைப்பில் பணத்தை ஒதுக்கி, செய்தித்

துறைக்குக் கொடுத்து செலவு செய்யச் சொல்லலாம். 'செய்தி, விளம்பரம்' என்ற தலைப்பில் இதைக் காட்டுவது சரியா என்பதை யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தலைப்பை மாற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். பெரும் தொகைகள்—30 லட்சம், 20 லட்சம், 6 லட்சம், 5 லட்சம்—ஒதுக்குவதையெல்லாம் மெயின் பட்ஜெட்டிலேயே செய்தால் நன்றாக இருக்கும். கல்லூரிகளுக்கு மானியம் வழங்குவதற்காக 30 லட்சம் ரூபாய் துணை மானியக் கோரிக்கையில் ஒதுக்குவது அவசியமில்லை. மெயின் பட்ஜெட்டிலேயே ஒதுக்கியிருக்கலாம். இப்படிப்பட்ட விஷயங்களை நிதி இலாக்கா கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரும் தொகைகளை துணை மானியக் கோரிக்கையில் ஏன் ஒதுக்க வேண்டும்? இந்த வருஷம் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பதை மெயின் பட்ஜெட்டிலேயே ஒதுக்கியிருக்க வேண்டும். இப்போது இவ்வளவு பெரிய தொகையைக் காண்பிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேமாதிரிதான் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு 1½ வருஷத்திற்கு முன்பு முடிவு செய்யப்பட்ட விஷயம். போன பட்ஜெட்டிலேயே இந்த 50 லட்சத்தைக் காண்பித்திருக்கலாம். அதை இப்போது காண்பித்திருக்கிறார்கள்.

பொதுவாக நேரம் அதிகமாக இல்லாததால், இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மன்றத்தில் வைக்கப்பட்ட துணை நிதி மதிப்பீடுகள் மீது எதிர்க் கட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் கூறிய பல்வேறு கருத்துக்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். துணை மதிப்பீடுகள் பற்றிய கருத்துக்கள் அன்னியில் அவைகளை ஒட்டி இந்த அரசு செயல்படுத்துகின்ற சமூக நலத் திட்டங்கள் பற்றிய விவரங்களையும், அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிற காரணத்தால் அரசுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்புக்களை ஈடு செய்வதற்குச் செய்யப்பட்டுள்ள வரி வகை வருமான முயற்சிகளையும் நான் எடுத்துக் காட்டியதற்கேற்ப, தங்களுடைய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் மது விலக்கால் 56 கோடி ரூபாய் இழப்பு என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டார்கள். நான் மிகுந்த ஜாக்கிரதையாக துணை மதிப்பீட்டிலே குறிப்பிட்டிருக்கிறேன்.



"Due to the closure of toddy shops of the first phase and on account of the re-introduction of total prohibition of the second and final phase, the Government will have to bear a loss of Revenue of Rs. 56 crores."

ஆக, முழுமையான மதுவிலக்கு காரணமாக ஆண்டு ஒன்றுக்கு 56 கோடி
ரூபாய் நமக்கு இழப்பு ஏற்படுகிறதென்று குறிப்பிட்டிருக்கிறேன். முதல்

(பிற்பகல் 5-40)

கட்டமாக கள்ளுக் கடைகளை மூடிவிட்ட பிறகு, நான் இந்த ஆண்டு இரண்டா
வது கட்டமாக சாராயக் கடைகளை மட்டும் மூடலாமா என்று யோசித்த
பிறகு முழுமையான மது விலக்கைக் கொண்டு வருவதென்ற முடிவுக்கு வந்
தோம். 1973-74-ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டின்படி, மது வகைகளின்
மீதான வரிகள் மூலம் வருமானம், மற்ற வரிகள் மூலமாக வருமானம் என்று
ரூ. 45 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக, 1973–74 ஆம்
ஆண்டில் வசூலான வருமானம் 56 கோடி ரூபாயாக இருந்தது. இந்த ஆண்
டின் இடையிலே கள்ளுக்கடைகளை மூடிய பிறகும் அந்த வருமானம் நமக்குக்
கிடைத்தது என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். இந்த ஆண்டு
நிதிநிலை அறிக்கையின்போது ரூ. 12.42 கோடி கையிருப்பு பற்றாக்குறையோடு
இந்த ஆண்டு முடிவுறும் என்று நாம் எதிர்பார்த்தோமென்றாலும், மேலும்
மது விலக்கைப் பரிபூரணமாக அமுல்படுத்துவதால் ரூ. 4½ கோடி முதல் ரூ. 5
கோடி வரை வருமானம் குறைந்துவிடும்; குதிரைப் பந்தயத்தை ஒழிக்கின்ற
காரணத்தால் ரூ. 2 கோடி வருமான இழப்பு ஏற்படும். இந்த ஆண்டு துணை
மதிப்பீட்டிலே கூடுதல் செலவுகளுக்காக ரூ. 6 கோடிக்கான ஒப்புதலை வைத்தி
ருக்கின்றோம். இதையெல்லாம் இணைத்துத்தான் சுமார் 14 கோடி ரூபாய்க்கு
கூடுதலான வருமானத்தைப் பெற முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன
என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முதல் நிதிநிலை அறிக்கையி
லேயே 30 லட்சம் ரூபாய் போன்ற பெரிய செலவினங்களை எல்லாம் கல்லூரி
களுக்கு அளிக்கின்ற செலவினங்களை எல்லாம் சேர்த்திருக்கக்கூடாதா என்று
கேட்டார்கள். முதல் நிதி நிலை அறிக்கையிலே கல்லூரிகளுக்காக எவ்வளவு
செலவு செய்வது என்ற திட்டத்தில் எப்படி உறுதியாக இருந்தோமோ, அப்
படியே உறுதியாக இருந்திருந்தால், நாளையதினம் நானும் நாவலர் நெடுஞ்செழி
யனும் வந்து மதுரையிலே திருமலை நாய்க்கன் கல்லூரியை திறக்க முடியாது
என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். முதல் நிதி நிலை அறிக்கையில்
இரண்டு கல்லூரிகள்தான் திறக்க அனுமதி அளிப்பது, ஒப்புதல் அளிப்பது
என்று அரசு முடிவு செய்திருந்தது. இன்றைக்கு 6 கல்லூரிகள் திறக்க ஒப்புதல்
வழங்குவது என்ற முடிவு எடுத்திருக்கிறோம். இன்றைக்கு அவைகளில் ஒன்று
தான் திருமலை நாய்க்கன் கல்லூரியும் இருக்கின்றது. ஒரு நல்ல காரியத்திற்

காக பொது மக்களுடைய முறையீடுகளை, அந்தந்தப் பகுதியினுடைய தேவைகளை நிறைவேற்றுவதில், அரசு சம்பிரதாயங்கள் என்று பார்க்காமல், சொன்னால் சொன்னதுதான் என்ற பிடிவாதங்களுக்கு இடம் கொடுக்காமல், சிறிது விட்டுக் கொடுக்கின்ற வகையிலே, இது போன்ற துணை மதிப்பீட்டிலே அதற்கான ஒப்புதலை இந்த மன்றத்திலே பெறுவது தவறு ஆகாது என்பதையும், இந்த விளக்கத்திற்குப் பிறகு நம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய உழைப்பாளர் கட்சியினுடைய தலைவர் திரு. ராமசாமி படையாச்சி அவர்கள் 'போக்குவரத்து நிதி உதவிக் கழகம்' யாருக்கு உதவி செய்யும், தனியார் துறைக்கும் சேர்த்தா அல்லது அரசுத் துறைக்கு மாத்திரமா என்ற கேள்வியை எழுப்பினார்கள். முதலிலே நம்முடைய உதவிகள் அரசுத் துறைக்கு மாத்திரம் இருக்கும். தனியார் துறைக்குத் தேவைப்பட்டால், இதை விரிவுபடுத்துவோம் என்பதையும் நான் இங்கே அவர்களுடைய சந்தேகத்திற்குப் பதிலாக வழங்க விரும்புகிறேன்.

மற்றொரு சந்தேகத்தையும் கிளப்பினார்கள். உடல் நிலை காரணமாக மது அருந்துவதற்கு பெர்மிட் வழங்குவதற்கு என்ன கட்டணம் விதிக்கப்படும் என்ற பிரச்சினையை எழுப்பினார்கள். அதைப்பற்றி அரசு இன்னும் ஒரு முழுமையான முடிவுக்கு வரவில்லை என்று இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவரவர்களும், நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்களும் வரிகளை மாநில அளவிலே மேலும் பெருக்கிக்கொண்டே போவதைவிட, மத்திய அரசிடமிருந்து வருமான வரியிலேயும் எக்ஸைஸ் டியூட்டி போன்றவைகளிலேயும் அதிகமான பங்குத் தொகையைப் பெறுவதிலே மாநில அரசுகள் முனைப்பாக இருந்திட வேண்டுமென்ற ஒரு கருத்தினை எடுத்துச் சொன்னார்கள். இதில் குறிப்பாக தமிழக அரசு முனைப்பாக இருந்திட வேண்டுமென்று சொன்னார்கள். அந்த வருமான வரி, எக்ஸைஸ் டியூட்டி போன்றவைகளிலே, நம்முடைய மாநிலத்திற்குக் கொடுக்கக்கூடிய பங்கினை முதலிலேயே முன் பணமாகக்கூட நாம் வாங்கிக்கொள்ளலாம் என்ற கருத்தினை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அப்படி நாம் முன்பணமாக வாங்குவதைக் கூட அந்த ஆண்டுக் கணக்கிலேதான் சரி செய்துகொள்ள முடியும். எனவே ஆண்டு முழுமையும் எடுத்துப் பார்த்தால், அந்த ஆண்டில் நிகரமாக நிதி நிலைமைக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வருமான வரி, எக்ஸைஸ் டியூட்டி போன்றவைகளில் மாத்திரமல்ல, நாம் மதுவிலக்கு போன்ற இழப்புகளைச் சரிக் கட்டுகின்ற அளவுக்கு மத்திய அரசு தாராளமாக உதவி செய்ய வேண்டுமென்று, இன்று



நேற்றல்ல, நீண்ட நெடுநாட்களாக வலியுறுத்திக்கொண்டு வருகின்றோம். ஆனால் மத்தியிலே இருக்கின்ற மிகப் பெரியவர்கள் எல்லாம், நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்களும், திரு. ராமசாமி படையாச்சி அவர்களும் பேசியதுபோல, உங்களை யார் மது விலக்கை மீண்டும் அமுல்படுத்தச் சொன்னது என்ற கேள்விகளைக் கூட கேட்கிறார்கள். நமது தமிழ் நாட்டிலே மாத்திரம்தான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல, இப்படிப்பட்ட போராட்டங்களை நடத்தி மதுவிலக்கைக் கொண்டுவருகிற மாதிரி பேசப்படுகிறது. இங்கு இருக்கின்ற சர்க்கார் மது விலக்கை ஒத்தி வைக்கின்ற நேரத்திலே மிகுந்த மன வேதனையோடு இதைச் செய்கிறோம் என்றும் கூறி, என்றைக்காவது ஒருநாள் மீண்டும் அந்த மதுவிலக்குக் கொள்கைகளைக் கொண்டு வருவோம் என்று சொல்லியது. அதிலே உறுதியாக இருந்தோம். அதுவும் முதல் கட்டமாக, கள்ளுக்கடைகளை எல்லாம் மூடிய பிறகுதான் 30 ஆயிரம் பேர் சிறை செல்லும் போராட்டம் நடைபெற்றது என்பதையும் நாம் மறந்துவிடவில்லை. அதிலே அவர்களுக்கு ஒரு நம்பிக்கை. கள்ளுக்கடையை மூடிவிட்டார்கள். இரண்டாவது கட்டம், மூன்றாவது கட்டம் நடைபெறும் நிச்சயமாக என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை. ஆகவே நாம் எறிந்த கல்லில் மாங்காய் விழுந்ததாக இருக்கட்டும் என்று அவர்களும் போராடினார்கள். அந்தப் பெரும் உணர்ச்சிகளை மதிக்கிறோம். அந்த வகையிலே கேட்கக்கூடிய ஒரு சர்க்கார், குறையிருந்தால் திருத்திக்கொள்கின்ற சர்க்கார் இருக்கின்ற காரணத்தால்தான் இங்கே போராட முடிகிறது. ஆனால் மத்திய அரசிலே, மாநில அரசுகளிலே இருக்கின்ற அமைச்சர்கள் பெருமக்களோடு நாங்கள் கலந்துரையாடுகின்ற நேரத்திலே, எங்களுக்கு அதிகமான உதவித் தொகையினை திட்டக் குழுவிலே, நிதிக் குழுவிலே நாங்கள் கேட்கின்ற நேரத்திலே, அவர்கள் தருகின்ற அறிவுரைகளைப் பார்த்தால், 'அண்ணல் காந்தி அடிகள்தான் இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கினாரா? அவர்கள்தான் இதுபோன்ற மதுவிலக்குக் கொள்கை போன்ற புனிதமான கொள்கைகளை எல்லாம் எடுத்துச் சொன்னாரா?' என்று தோன்றுகிறது. அவர்களுடைய வழியிலேதான் நம்முடைய இந்திய மாநில அரசுகள் எல்லாம் நடைபெற்று வருகின்றனவா என்ற சந்தேகம் எழுகின்றது. நாங்கள் காந்தி அடிகள் சொன்ன கொள்கைகளை நிறைவேற்றுவதற்குக் காரணம், நாங்கள் எல்லாம் காந்தி அடிகளின் கொள்கைகளை முழுமையாகப் பின்பற்றிய பேறிஞர் அண்ணா அவர்களால் ஆளாக்கப்பட்டவர்கள். ஆகவே நாங்கள் இவைகளை நிறைவேற்றுவதில் முனைப்புக் காட்டுகின்றோம்.

அந்த வகையிலேதான் 1952-ஆம் ஆண்டிலே குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும் என்று ஒரு சட்டம் வந்துகூட அது அவ்வப்போது ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் மூன்று ஆண்டுகள் என்று அடிக்கடி ஒத்தி வைக்கப்பட்டு,

ஒத்தி வைக்கப்பட்டு, இனிமேல் ஒத்திவைப்பதற்கு அனுமதி கூடாது என்ற அளவுக்கு குதிரைப் பந்தயத்தையே அறவே ஒழிக்கின்ற ஒரு திடமான தீர்மானத்திற்கு இந்த அரசு வந்திருக்கிறது.

திரு. நாராயணசாமி அவர்கள் சொன்னார்கள். லாட்டரி சீட்டுகள், பரிசுச் சீட்டுகள் இவைகளும் ஒரு பந்தய மனப்பான்மையை, சூதாட்ட மனப்பான்மையை ஏற்படுத்தவில்லையா என்று கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆதித்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், யாரும் அந்தப் பரிசுச் சீட்டுகளை வாங்க ரயிலிலோ காரிலோ சென்று வாங்கிய பிறகு திரும்பி வரும்போது, கால்நடையாக வருகின்ற அளவுக்கு பரிதாபமான சூழ்நிலை ஏற்படுவதில்லை என்ற பொருத்தமான பதிலை அவர்கள் சொன்னார்கள். அது மாத்திரமல்ல. இந்த ஒரு ரூபாய் கொடுத்து வாங்குகின்ற பரிசுச் சீட்டின் மூலமாக வரும் பணம் அரசு சார்பில் மகத்தான நல்ல காரியங்களுக்கெல்லாம் போய்ச் சேர்கிறது. ஒரு லட்சம் ரூபாய், 2 லட்சம் ரூபாய் பரிசு, சில பேருக்கு விழாவிட்டாலும், அவர்கள் எதிர்பார்க்கின்ற ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குக் கிடைக்காவிட்டாலும்கூட, அவர்கள் தருகின்ற பணம் நல்ல காரியத்திற்குப் போய்ச் சேர்கிறது. ஆனால் குதிரைப் பந்தயத்திலிருந்து வரும் வரி அரசின் காரியத்திற்குப் பயன்படாதா என்று கேட்கக்கூடும். அப்படி இன்றைக்கு குதிரைப் பந்தயத்திலிருந்து அரசுக்கு வருகின்ற வருமானம் மிகமிகக் குறைவான அளவுக்குத்தான் இருக்கிறது. அது மாத்திரம் அல்ல, குதிரைப் பந்தயத்தின் மூலமாக பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் இன்றைக்கு வீழ்ந்துவிடவில்லை என்றாலும்கூட, அவர்களுக்கு எந்தக் குதிரை வெற்றி பெறும் என்கின்ற ஆரூடம் தெரிந்திருக்கின்றது. எந்தக் குதிரையை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்ற நுணுக்கங்கள் தெரிந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆரூடத்திற்கும் அதி அற்புதமான நுணுக்கங்களுக்கும் இடையே குதிரைப் பந்தய மைதானம் செல்கின்ற 10 ஆயிரக்கணக்கான நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள் இன்றைக்கு சிக்கித் தவிக்கிறார்கள். நான் முதலமைச்சர் கோப்பையை வழங்குவதற்கு ஒரு முறை அந்தப் பந்தய மைதானத்திற்கு

(பிற்பகல் 5-50)

அழைக்கப்பட்டதுண்டு. அந்த நேரத்திலே குதிரைகளைப் பார்க்கத் தருகின்ற தொலைநோக்கிக் கண்ணாடி வழியாக நான் குதிரைகள் ஓடுவதை மட்டும் பார்க்காமல், எப்படிப் பட்டவர்களெல்லாம் வந்திருக்கிறார்கள் பந்தய மைதானத்திற்கு என்று திரும்பிப் பார்க்கிற நேரத்தில், நான் உண்மையிலேயே சொல்கிறேன், சென்னை நகரத்திலே இருக்கிற நகர சுத்தித் தொழிலாளர்கள்கூட அங்கே வருகின்ற காட்சியினை என்னால் காண முடிந்தது. அப்படிப்பட்டவர்களுடைய குடும்பங்களில் உள்ளபடியே மகிழ்ச்சி ஏற்படுகின்ற ஒரு நல்ல காரியமாகத்தான் இதை நாம் செய்திருக்கின்றோம். திரு. படையாச்சி அவர்கள்



200 ஆண்டுக் காலமாக இருந்ததை ஒழிக்கலாமா என்று கேட்டார்கள். 200 ஆண்டுக் காலமாக இருந்ததற்காக பிரிட்டிஷ் அரசை ஒழிக்காமலா இருந்தோம்?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, வேறு மாநிலம் ஏதாவது குதிரைப் பந்தயம் இருந்து ஒழித்திருக்கிறதா? தமிழ் நாடுதான் வழி காட்டுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வேறு எங்கேயும் குதிரைப் பந்தயத்தை ஒழித்ததாகத் தெரியவில்லை. தமிழ் நாடுதான் பல விஷயங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. அதைப் போலவே இந்த நல்ல விஷயத்திலும் தமிழ் நாடுதான் வழிகாட்டுகின்ற வகையிலே அமைந்திருக்கிறது என்பதை நான் நம்முடைய முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பலமுனை விற்பனை வரி வியாபாரிகளுக்குத் தொல்லை தருவதாக இருக்கிறது, ஒரு முனை விற்பனை வரி அந்த முறையில் தொல்லை தருவதில்லை என்று குறிப்பிட்டு, இப்போது அதிலே ஏற்றியிருக்கிற சதவிகிதம்கூட அதிகமானது என்கின்ற கருத்தையும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். நான் இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். எழுப்பக் கூடிய பிரச்சினைகளுக்கு முன்கூட்டியே சில விளக்கங்கள் அளித்துவிடுவது நல்லது. நம்முடைய அண்டை மாநிலங்களிலே இன்றைக்கு இருக்கிற வரி 4 சதவிகிதம்தான். இப்பொழுது 3½ சதவிகிதம், 4 சதவிகிதம் உயர்த்தியிருக்கிற சதவிகிதத்தோடு ஒப்புநோக்கும்போது, மற்ற மாநிலங்களிலே இருக்கிற 4 சதவிகிதம்தான், இங்கேயும் ஆக்கியிருக்கிறோம். ஆகவே இதுவொன்றும் அதிகமான அளவுக்கு உயர்த்தப்பட்டது அல்ல என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

சினிமா காட்சி வரியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசினார்கள். நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள், திரு. ராமசாமி படையாச்சி அவர்கள், திரு. தாமோதரன் அவர்கள் பேசினார்கள். சிலம்புச் செல்வர் அவர்களும் இங்கே எடுத்துக்கூறினார்கள். அத்தனை பேரும் இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள், இதிலே நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கொஞ்சம் அதிகமாகவே உள் நுழைந்து எந்த அளவுக்கு வரி இதிலே உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் எடுத்துக் காட்டினார்கள். இது திரு. சுவாமிநாதன் அவர்கள் ஆராய்ந்து, தேடிக் கண்டுபிடித்ததல்ல் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் திரைப்பட சங்கத்தின் மூலமாக எல்லா உறுப்பினர்களுக்கும் இந்த விவரங்களையெல்லாம் அனுப்பி வைத்திருக்கின்றார்கள். அது பத்திரிகைகளிலே

இன்றைக்குப் போடப்பட்டிருப்பதை நானும் பார்த்தேன். இன்றைக்கு இந்த கேளிக்கை வரி என்று சொல்லப்படுகிற, தமாஷா வரி, என்டெர்டெயின் மென்ட் டாக்ஸ் இருக்கிறதே, அது அரசாங்கத்திற்கு தற்போது கிடைப்பது ஏறத்தாழ 13 கோடி ரூபாய்தான். இந்த வரி எவ்வளவு கிடைக்க வேண்டும், எவ்வளவு வரி ஏய்ப்பு செய்யப்படுகிறது என்பதையெல்லாம் ஆராயும்போது, இந்த கேளிக்கை வரியின் மூலமாக 25 கோடி ரூபாய் அளவுக்கு அரசுக்குக் கிடைக்க வேண்டும், இப்பொழுது இருக்கின்ற விகிதத்திலேயே. இதைச் சொன்னால், உடனே அதை ஒழுங்காக வசூலிப்பதுதானே, இதற்கு ஏன் புதுவரிகள் போடுகிறீர்கள் என்று கேட்கத் தோன்றும். அது நல்ல வாதமாகக்கூட இருக்கும். ஆனால் உண்மையாகவே, எவ்வளவுதான் அசகாய சூரர்களான அதிகாரிகளையும் அலுவலர்களையும் போட்டாலும், இந்த வரி ஏய்ப்பை நம்மால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் சினிமா தியேட்டர்காரர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். எனக்கு இந்தத் துறையிலே எவ்வளவு நீண்டநாள் பழக்கம் உண்டு என்பதை நான் சொல்லி இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. மன்னிக்க வேண்டும். சினிமாவிலே இன்றைக்கு கறுப்புப் பணம் என்கின்ற பேச்சு அடிபடுகிறது. கறுப்புப் பணம் சினிமாவிலே புழங்குகிறது என்றால், இதனுடைய ஆரம்பம் ஏதோ இங்கே தலைமை இடத்திலேயிருந்து, படம் எடுக்கின்ற, தயாரிக்கின்ற இடத்திலேயிருந்து ஆரம்பமாவதாக யாரும் எண்ணிக்கொள்ளக் கூடாது. இந்தக் கறுப்புப் பணமே கிராமத்திலே இருக்கிற டூரிங் டாக்கீஸ், கீற்றுக் கொட்டகை அல்லது நகரங்களிலே இருக்கிற சாதாரண தியேட்டர்கள் ஆகியவற்றிலிருந்து ஆரம்பமாகிறது. ஒரு படத்தினுடைய விநியோகஸ்தர் ஒரு படத்தை ஒரு தியேட்டருக்குக் கொடுக்கிற நேரத்தில் 'பிக்சட் டெபாசிட்' என்கின்ற முறையிலே வாங்குகிறார்கள். நான் ஒரு படம் எடுப்பதாக வைத்துக் கொண்டால், நான் திருச்சி மாவட்டத்திலோ, தஞ்சை மாவட்டத்திலோ இந்தப் படத்தை ஒரு விநியோகஸ்தருக்கு விற்றிருந்தால், அந்த விநியோகஸ்தர் அங்கே இருக்கின்ற ஒரு தியேட்டர்காரரிடம் ஒரு கிராமத்தில் 'பிக்சட் டெபாசிட்'க்கு கொடுக்கிறார். ஒரு வாரத்திற்கு ஓட்டுவது, அதற்கு 2,000 ரூபாய் கொடுத்து விடுவது என்று எழுதிக்கொண்டு அதைப் படத் தயாரிப்பாளர்களுக்கு அனுப்புகிறார்கள். உங்களுடைய படத்தை விநியோகஸ்தர் என்ற முறையில் திருச்சி மாவட்டத்தில் குளித்தலையில் இருக்கிற இன்ன தியேட்டருக்கு 2,000 ரூபாய்க்கு பிக்செட் டெப்பாசிட்டுக்குக் கொடுத்திருக்கிறேன் என்று எழுத்தில் தெரிவித்துவிட்டு, விநியோகஸ்தரும் தியேட்டர்காரரும் பேசி, அவர்கள் பெற்றுக்கொள்வது கிட்டத்தட்ட 4000 ரூபாய் அல்லது 5000 ரூபாய் இருக்கும். படத் தயாரிப்பாளருக்கு அங்கேயே நஷ்டம் ஆரம்பமாகிவிடுகிறது. இப்படி தியேட்டர்காரர்களிடத்திலே விநியோகஸ்தர்கள் பெறுகிற பணம், பிறகு அவர்கள் படத் தயாரிப்பாளர்களிடத்திலே வாங்குகிற நேரத்தில், மூன்று இடங்களுக்கு,



மூன்று பகுதிகளுக்கு ஒரு படத்தைப் பேசினால், ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் என்று பேசிக்கொண்டு, எழுதுகிற நேரத்தில் ஒரு லட்சம் என்று போட்டு, 50,000 ரூபாய் கறுப்புப்பணம் அங்கே வருகிறது. அந்த ஐம்பதாயிரம் ஒரு ஐந்தாறு ஐம்பதாயிரங்களாகப் பெருகி, பிறகு பெரிய நடிகர்களுக்குக் கொடுக்கிற நேரத்தில், எழுத்திலே ஒரு லட்சமாக, ஒன்றரை லட்சமாகப் போட்டுக்கொண்டு, மிச்சமெல்லாம் அந்தத் தலைசிறந்த நடிகர்களுக்கு, நான் கைந்து லட்சம் ரூபாய் கறுப்புப் பணமாகப் போய்ச் சேருகிறது. ஆகவே இது மிக அழகான முறையில், எதுவும் கீழேயிருந்துதான் ஆரம்பமாக வேண்டும் என்கிறார்களே, அதுபோல் கீழேயிருந்து ஆரம்பமாகி இந்தக் கறுப்புப்பணம் சினிமாத் துறையிலே வெகு வேகமாகச் செயல்பட்டு வருகிறது.

இவை மாத்திரமல்லாமல், நமது கேளிக்கை வரியிலே பலகோடி ரூபாய்க் கான வரி ஏய்ப்பையும் சாமர்த்தியமாகச் செய்துவருகிறார்கள். இதையெல்லாம் கண்டுபிடிக்கவில்லையா என்று கேட்காதீர்கள். கண்டுபிடித்துத்தான் சொல்கிறேன். பலவிடங்களிலே சில் போடுவதையே நல்ல சிறு கத்திரிப் பிஞ்சுகளை எடுத்து, அதை அறுத்து, அதை மையிலே தோய்த்து, அதை டிக்கட்டுகளில் குத்தி, சில்போட்ட டிக்கட்டுகளாக விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் அந்தத் துறை அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியின் காரணமாக இந்த வரி ஏய்ப்புகள் கூடுமான வரையில் இன்று தவிர்க்கப்பட்டு, அதிலே ஓரளவு நாம் வசூலிக்கக்கூடிய முன்னேற்றத்தைப் பெற்றிருக்கின்றோம்.

இவைகளுக்கிடையில் நாம் இந்த வரி ஏய்ப்புக்கு வேறு ஏதாவது ஒரு மார்க் கத்தைத் தேடி, இந்த வரி ஏய்ப்பிலேயிருந்து நம்முடைய அரசுக்கு வருகின்ற வருமானத்தை எப்படியும் திரட்ட வேண்டுமென்று எண்ணியதன் காரண மாகத்தான் காட்சி வரி என்று போட்டால், அவர்கள் ஏய்க்கின்ற வரி இருக் கிறதே, அந்த வரி இதிலே சரிசமமாக ஆகிவிடும் என்பதற்காகத்தான்—அதை ஈடுகட்டத்தான்—இந்த வரியை நாம் இன்றைக்குப் போட்டிருக்கின்றோம். இதிலே 150 ரூபாய் 'ஏ.சி.' தியேட்டர்களுக்குப் போடப்பட்டதாக திரு. சுவாமிநாதன் அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார். மற்ற தியேட்டர் களுக்குப் போடப்பட்டதையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஏ.சி. தியேட்டர்களுக்கு சென்னையிலே 150 ரூபாய் எதற்கு, எல்லா தியேட்டர் களிலும் ஒரேவகையான கட்டணம்தானே என்றார். சென்னையிலே இருக்கிற ஏ.சி. தியேட்டர்களுக்கு, அவற்றில் ஓடுகின்ற படம் நன்றாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், பிற்பகல் நேரத்தில் ஏ.சி. தியேட்டர்களிலே உட்காரலாம் என்று பல பேர் போகிறார்கள். ஆகவே ஏ.சி. தியேட்டர்களிலே வசூல் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இவை அத்தனைக்கும் மேலாக,

இந்த வரி அதிகம் என்று சினிமா தியேட்டர்காரர்கள் கருது வார்களானால், காலையிலே நான் அறிவித்ததும், மாலையில் என்னைச் சந்தித்திருக்கலாம். சினிமாவிலே, என்னைவிட திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு வேண்டியவர்களா? திரு. சுவாமிநாதனைப் பார்க்க முடிந்தது. ஆனால் என்னைப் பார்த்து அவர்களால் பேச முடியவில்லை. நாங்கள் தியேட்டர்களையெல்லாம் மூடுகிறோம் என்று உடனடியாக அறிக்கை கொடுத்து, மறுநாள் காலையிலே எல்லாப் பத்திரிகையிலேயும் அறிக்கை வந்து, ஆகஸ்ட் 15-ம் தேதி எல்லாத் தியேட்டர்களையும் மூடினார்கள். 15-ம் தேதி விடுமுறை நாள். பலரும் மாலை நேரத்தில் சென்று படக் காட்சிகளைப் பார்க்க விரும்புகிற அந்த விடுமுறை நாளில் தியேட்டர்களையெல்லாம் மூடினார்கள். மூடிவிட்டு என்னைச் சந்திப்பதற்காக சில நண்பர்கள் வந்தார்கள். நான் அவர்களிடத்திலே உறுதியாகச் சொன்னேன். "என்னைக் கேட்டு நீங்கள் தியேட்டர்களை மூடவில்லை. ஆகவே என்னைச் சந்திப்பதாக இருந்தால், தியேட்டர்களைத் திறந்துவிட்டு சந்தியுங்கள்" என்றேன். சந்தியுங்கள் என்றால் அந்த நேரத்திலே பிரச்சினையைப் பற்றிப் பேசுவோம் என்பதும் தொக்கி நிற்கிறது; அடங்கியிருக்கிறது. அதை அவர்கள் புரிந்துகொண்டு தியேட்டர்களை மீண்டும் திறப்பார்களேயானால், நான் அவர்களைச் சந்தித்துப் பேசத் தயாராக இருக்கிறேன் என்பதை மீண்டும் இந்த மன்றத்தில் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டதன் காரணமாக நான் அவர்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே போடப்பட்டிருக்கிற இந்த வரிகளில் இருக்கிற கஷ்டங்களை அந்தந்த துறையிலே' இருக்கிறவர்கள் எடுத்துச் சொல்கின்ற நேரத்தில், நாம் எப்பொழுதுமே பிடிவாதமாக இருக்கின்ற ஒரு முறையைக் கடைப்பிடிப்பவர்கள் அல்ல, அதிலே எந்த அளவுக்கு விட்டுக்கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு விட்டுக்கொடுக்கின்ற ஒரு தன்மையையும், நம்முடைய இந்த அரசைப் பொறுத்தவரையிலே தொடர்ந்து இந்த ஆறு, ஏழு ஆண்டுக் காலமாகக் கடைப்பிடித்து வருகின்றோம். ஆகவே இதிலே நாங்கள் பிடிவாதமாக இருப்போம் என்பதல்ல. இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து அதற்கேற்றவாறு பிரச்னைகளைப் பேசித் தீர்ப்பதற்கு என்றைக்கும் தயாரா இருக்கின்றது இந்த அரசு. ஆகவே யாரும் பேசித் தீர்ப்பதற்கு முன் வரலாம். அதற்கு முன்பு எல்லாவற்றிலும் மிரட்டுவதைப்போல இப்படிப்பட்ட காரியங்களில் யார் ஈடுபட்டாலும் எவ்வளவு நாளைக்கு தியேட்டர்களை மூடி வைப்பது. யோசித்துப் பார்க்க வேண்டும். தியேட்டர்களை பல நாட்களுக்கு மூடி வைத்திருந்தால், மூடிவைத்திருந்த காரணத்திற்காக தியேட்டர்களுடைய உரிமங்களை ரத்து செய்யலாம். அல்லது 'ஐயோ பாவம்! உங்களால் நடத்த முடியவில்லையா? நடத்துவதற்கு ரொம்பக் கஷ்டப்படுகிறீர்களா?" என்று நீங்கள் அவற்றை ஓட்டாவிட்டாலும் அவற்றை நாங்களேகூட எடுத்து நடத்த முன்வரலாம். ஆகவே இதற்கு இடையிலே அவர்கள் புத்திசாலித்தனமாக, மூடிவிட்ட தியேட்டர்களைத் திறந்துவிட்டு பிறகு என்னிடம் பேசுவதற்கு



வரலாம். அவர்களுக்காக வாதாடும் திரு. சுவாமிநாதன் போன்றவர்கள் அவர்களிடத்தில் இதை எடுத்துச் சொல்லுவார்கள் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் அவர் நல்ல ரசிகர் என்று நான் கருதுகிறேன். படம் பார்க்காமல் அவர் ரொம்பவும் கஷ்டப்படுகின்றார் என்று தெரிகிறது. எனவே அந்த முறையில் அவர்கள் முன் வருவார்களானால், அரசு அவர்களிடம் பேசத் தயாராக இருக்கின்றது.

எதிர்க் கட்சித் தலைவரவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் அரசு எடுத்துள்ள நல்ல பல முடிவுகளை வரவேற்றமைக்காக, பாராட்டியமைக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் அவ்வளவும் புறக்கணிக்கப்படுபவை அல்ல, அவற்றிலுள்ள நல்ல அம்சங்களை அரசு நிச்சயமாக எடுத்துக்கொள்ளும். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். சொல்லி இப்போது எந்தெந்தத் துறையில் அரசு சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிறது என்றும் கேட்டார்கள். கேட்பதோடு நின்றுவிடக்கூடாது. நிதி ஒதுக்கீடு மசோதாவில் எந்தெந்த முறையில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அந்த அம்சங்களை அரசுக்கு எடுத்துச் சொன்னால் அவற்றைப் பரிசீலிப்போம் என்று கூறி நல்ல பல கருத்துக்களை எடுத்துச் அனைவருக்கும் நன்றி கூறி இந்த அளவில் அமருகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 1974-ம் வருடம் ஆகஸ்ட் 19-ம் தேதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 6-00)

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

### 3. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

74. Notification issued with G.O. Ms. No. 310, Co-operation, dated the 3rd September 1973 in regard to amendment to Schedule III of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119(4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

### *B. Reports, Notifications and Other Papers.*

34. Errata to the Notification issued with Memorandum No. 54736/ME/74-1, Rural Development and Local Administration, dated the 30th April 1974 to the schedule appended to Rural

Development and Local Administration Department Notification No. II (2)/RUL/877(ai)/74, dated the 8th February 1974, published at pages 44 to 47 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 9th February 1974.

35. Errata to the Notification issued with Memorandum No. 9085/ME/74-1, Rural Development and Local Administration, dated the 4th March 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/100(h)/74, dated the 2nd January 1974, published at pages 11 to 14 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

36. Errata to the Notification issued with Memorandum No. 42601/ME/74-1, Rural Development and Local Administration, dated the 27th March 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/1124(P)/74, dated the 22nd February 1974, published at pages 16 to 19 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974.

37. Errata to the Notification issued with Memorandum No. 59352/ME/74-1, Rural Development and Local Administration, dated the 29th April 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/1003(K)/74, dated the 14th February 1974, published at pages 19 to 21 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 16th February 1974.

38. Errata to the Notification issued with Memorandum No. 29731/ME/74-1, Rural Development and Local Administration, dated the 7th March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/877(ag)/74, dated the 8th February 1974, published at pages 40 to 44 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 9th February 1974.

39. Errata to the Notification issued with Memorandum No. 8392/ME/74-1, Rural Development and Local Administration dated the 1st March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration.



Department Notification No. II(2)/RUL/100(r)/74, dated the 3rd January 1974, published at pages 33 to 37 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

40. Errata to the Notifications issued with Memorandum No. 39479/ME/74-1, Rural Development and Local Administration, dated the 23rd March 1974 to the Schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/283(aak)/74, dated the 18th January 1974, published at pages 14 to 16 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974.

41. Errata to the Notifications issued with Memorandum No. 40130/ME/74-1, Rural Development and Local Administration, dated the 4th April 1974, to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/1124(n)/74, dated the 22nd February 1974, published at pages 14 and 15 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974.

42. Errata to the Notifications issued wtih Memorandum No.12289/ME/74-1, Rural Development and Local Administration, dated the 1st March 1974 to the schedule appended to the Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/100(o)/74, dated the 3rd January 1974, published at pages 29 to 32 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

43. Errata to the Notification issued with Memorandum No. 32643/ME/74-1, Rural Development and Local Administration, dated the 18th April 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/877(y)/74, dated the 8th February 1974, published at pages 25 to 30 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 9th February 1974.

44. Errata to the Notification issued with Memorandum No. 38361/ME/74-3, Rural Development and Local Administration, dated the 11th June 1974, to the notification relating to division of Karur Municipality into wards, published on page 1 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 2nd April 1974..

45. Errata to the Notification issued with Memorandum No. 42168/ME/74-1, Rural Development and Local Administration, dated the 27th March 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/1124(j)/74, dated the 22nd February 1974, published at pages 6 to 11 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974.

46. Errata to the Notification issued with Memorandum No. 23679/ME/74-1, Rural Development and Local Administration, dated the 5th April 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. II(2)/RUL/877(e)/74, dated the 7th February 1974, published at pages 3 to 5 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 8th February 1974.

47. Further particulars collected in pursuance of the answer given to Legislative Council Starred Question No. 87, tabled by Thiru L. Balaraman, M.L.C., and answered on 28th January 1974, regarding smuggling of liquor from other States to North Arcot District during 1971–73.

* 48. Speech of Hon. Thiru O. P. Raman, Minister for Electricity, initiating the discussion on the Annual Financial Statement for 1974–75 and the Supplementary Financial Statement for 1973–74 of the Tamil Nadu Electricity Board. (English and Tamil).

* Laid on the table of the House on 16th August 1974.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1974 ஆகஸ்ட் 19

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 41-ம், 42-ம் ஒத்திவைக்கப் படுகின்றன.

#### *Selection Grade to Higher Grade Teachers*

* 43 Q.—Thiru S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state the number of Higher Grade Teachers not given Selection Grade (1) with more than 20 years and (2) with 15 years of service?

#### இளநிலை ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை அளித்தல்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இளநிலை ஆசிரியர்களில், செலக்ஷன் கிரேடு பதவி பெறாமல் (1) 20 ஆண்டுகளுக்கு மேல் உள்ளவர்கள், (2) 15 ஆண்டுகளுக்கு மேல் ஊழிய காலம் உள்ளவர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பத்தாண்டு காலம் பணி புரிந்த அனைத்து இளநிலை ஆசிரியர்களுக்கும் 1—4—1974 முதல் தேர்வுநிலை அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, ஆசிரியர் பணியில் ஈடுபட்டவர்களுக்கு தேர்வு நிலை வழங்கப்படாமல் ஏதாவது வகுப்பினர் இருக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எனக்குத் தெரிந்த வரையில் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி யாராவது விடுபட்டிருப்பார்களானால், கவனத்திற்குக் கொண்டு வந்தால், ஆராயலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இளநிலை ஆசிரியர்களுக்கு 10 ஆண்டுக் காலத்திலே தேர்வு நிலை வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இதனால் அவர்களுக்கு பொருளாதாரப் பயன் ஏற்பட்டிருக்கிறதா, கொஞ்சமாவது அவர்களுக்கு உயர்வு கிடைக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்கான விதி, திட்டங்கள், மற்றவைகளெல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன. விதி முறைப்படி சிலருக்குக் குறைவாக வருகிறதென்ற சூழ்நிலை ஏற்பட்டு, இந்தத் தன்மை வந்தது. இதை ஆராய்ந்து இழப்பு ஏற்படுவதைச் சரிக்கட்ட என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து கடைசியாக இன்க்ரிமெண்ட் வாங்கினதைக் கொண்டு கணக்கிடலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, "First Grade Physical Education Teachers, Physical Directors முன்னாள் மொழி ஆசிரியர்கள் ஆகியவர்களுக்குத்தேர்வு நிலை வழங்கப்படவில்லை. அவர்களுக்கு வழங்கத்தாவிடப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இள நிலை ஆசிரியர்கள் விஷயத்தில் ஜி.ஓ. அடிப்படையில் அவர்களுக்கு எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை என்கிறார்கள். 'செலக்ஷன் கிரேடு' வழங்குவதன் நோக்கமே அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்பதுதான் என்று ஜி.ஓ.வில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஊக்கப்படுத்துவதற்கான முறையில் அவர்களுக்கு ஒரு பைசா அதிகம் இல்லை என்பதை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த ஆசிரியர்களுக்கு, நீண்ட காலமாக உழைத்த இள நிலை ஆசிரியர்களுக்கு, பொருளாதாரப் பயன் உருவாக்கத் தக்க முறையில் அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உடனடியாக அவர்களுக்கு ஊதியத்தில் அதிகம் கிடைக்காவிட்டாலும், நீண்ட காலத்திலே ஊதியம் கிடைக்கும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்



கிறது. இப்போது செலக்ஷன் கிரேடு என்பது ப்ரமோஷன் ஆகிவிட்டது. ஏற்கெனவே மூன்றில் ஒரு பகுதியினர் அதாவது 33 சதவீதத்தினரை எடுப்பது என்பது செலக்ஷன் கிரேடு ஆகும். இப்போது 10 ஆண்டுக் காலம் முடிந்த பிறகு எல்லோருக்கும் செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படுகிறது. 15 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் வேலை பார்த்தவர்களுக்கும் புதிதாக 9 ஆண்டுகளுக்கு வேலை பார்த்தவர்களுக்கும் ஒரு நிலை தான் வரும். ஆகவே உடனடியாக சில பேர்களுக்கு பொருளாதாரப் பயன் ஏற்படாமல் இருக்கும். இழப்பு ஏற்பட்ட இடங்களில் நிறைவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நீண்ட காலத்தில் தான் பலன் ஏற்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, நீண்ட கால அடிப்படையில், எதிர்காலத்தில் பயன் ஏற்படுமென்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். உண்மையாகப் பார்க்கும்போது, இந்தப் பயன் கல்வியமைச்சரவர்கள் கூறுகிற அடிப்படையில் கிடைக்கவில்லை. சாதாரண நிலையில் இன்க்ரிமெண்ட் ரூ. 5, செலக்ஷன் கிரேடிலும் இன்கிரிமெண்ட் ரூ. 5 ஆகத் தான் இருக்கிறது. ஆகவே செலக்ஷன் கிரேடில் வரும்போது கடைசியாக ஒரு 10 ரூபாய் மட்டும் கொடுக்கப்படுகிறது. இதற்கு மேலே எந்த நன்மையுமில்லாமல் பல பேர்கள் ரிடையராகிவிட்டார்கள். ஆகவே இது ஒரு விளம்பரமே தவிர, வேறு பயன் இல்லையென்று தெரிவித்துக்கொண்டு, பொருளாதாரப் பயன் கொடுக்க அரசு முன்வந்து இந்த இள நிலை ஆசிரியர்களுக்கு வகை செய்ய வேண்டும், வகை செய்யுமா என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது விளம்பரத்திற்காகச் செய்யப்பட்டது என்று உறுப்பினர் கூறுகிறார். உள்ளபடியே அவர் அப்படிக் கூறியதற்காக வருத்தப்படுகிறேன். ஏதாவது பலன் ஏற்பட்டதா என்று கேட்கிறார்கள். பயன் ஏற்பட்டிருக்கிறது. இதில் என்ன விளம்பரம் இருக்கிறது? செலக்ஷன் கிரேடு என்பதை 10 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்களுக்குத் தருகிறோம். இது பலன் தருகிற ஒன்று தான். உடனடியாக பயன்வர வேண்டுமானால் வேறு ஊதிய நிலை, அதிக நிலையில் வர வேண்டும். அரசாங்கம் இதை ஆராய்ந்ததற்குப் பிறகு, மாற்றம் ஏதும் செய்வதற்கில்லை என்று சொல்லியிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, சட்டப் பேரவையில் கல்வியமைச்சரவர்கள் சில கோடி ரூபாய் இந்த செலக்ஷன் கிரேடு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு, பெரும்பான்மை எண்ணிக்கையில் இருப்பவர்களுக்கு ஒரு பைசா

[1974 ஆகஸ்ட் 19

பயன் ஏற்படவில்லை. மற்ற ஆசிரியர்களுக்கு ஒரு கோடி ரூபாய்க்குக் கீழே வருவதற்கு நிலை இருக்கிறது. ஹையர் கிரேடு ஆசிரியர்களைப் பற்றி பரிசீலிக்கும் போது விடப்பட்டிருக்கிறது என்பதை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். செகண்டரி கிரேடு, பட்டதாரி ஆசிரியர்கள் பொருளாதார உயர்வு பெற்றிருக்கிறார்கள். ஆனால் இள நிலை ஆசிரியர்களுக்கு விடப்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலித்து, கொடுப்பதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால், எவ்வளவு தொகை செலவாகிறது என்பதைக் கூறலாம்.

### *Pension to Retired Teachers*

* 44 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether teachers who retired from service in the month of April, 1971, from the Government Girls High School (B) Tirukoilur, South Arcot district, have been paid their pensions; and

(*b*) if not, the reasons therefor?

### ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியங்கள்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தென் ஆற்காடு மாவட்டம், திருக்கோயிலூரிலுள்ள அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ('பி' பிரிவு) பணி புரிந்து, 1971-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்களில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு, அவர்களது ஓய்வூதியங்கள் வழங்கப்பட்டு விட்டனவா ?

(இ) இல்லையெனில், அதன் காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, may I know from the Hon. the Minister for Education, how many teachers there are in the list, who have not got pension till 1st April 1973?



1974 ஆகஸ்ட் 19]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதுபற்றி விவரக்குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

THIRU G. VASANTHA PAI : Sir, may I request the Hon. the Education Minister to see that all these teachers who have retired after serving the Government are given pension in some form or other, in some quantum or other, till 1st April 1973?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கேள்வி திருக்கோயிலூரில் உள்ள ஒரு பள்ளி குறித்து இருக்கிறது. இதுபற்றித்தான் விவரக் குறிப்புகள் இருக்கின்றன. அங்கே ஒரு ஆசிரியருக்கு பென்ஷன் கொடுக்கப்படாமல் இருந்தது. அந்த ஆசிரியரும் பெற்று விட்டார் என்பது பதில். மாண்புமிகு உறுப்பினர் பொதுவாகக் கேட்பதன் காரணமாக, விவரம் இல்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, this question was asked in June 1972. So, purely as a matter of information, may I know when this one teacher who had written to me about this, received the pension—whether it was in 1972, 1973 or 1974?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டம், திருக்கோயிலூரிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் திரு. எம். நடேசன் என்பவர் முதல் நிலை ஆசிரியராக இருந்தார். அவர் தமிழ் மொழி ஆசிரியர். 1974 ஏப்ரலிலிருந்து ஓய்வு பெற்றார். 136 ரூபாய் பென்ஷன், ரூ. 2,595-06 கிராசுவிடி வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தேதியிலிருந்துதான் என்று நினைக்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, 1-6-1970 முதல் 31-12-1973 வரை பல ஆசிரியர்கள் ஓய்வு பெற்றிருந்தும் அவர்களில் பெரும்பான்மையோருக்கு இன்னும் ஓய்வூதியம் வரையறுக்கப்படவில்லை. முன்பே கூறியது போல் மறைந்த உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படாமல் இருந்தது. இந்த நிலைக்குப் பிறகு அனைத்து ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெறும் நாளன்றே ஓய்வூதியம் பெறும் நிலை ஏற்படுத்தப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப் பெறாமல் இருப்பார்களானால், விரைவில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும். ஓய்வூதியத்தில் ஒரு பெரும் பகுதியைக் கொடுத்து விட்டு, மீதிப்

பகுதியைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று கூட உத்தரவு வெளியிடப்பட்டிருக்கிறது. இப்படி கொடுக்கப்படாமல் வழக்குகள் இருக்கின்றன என்றால், விரைவிலே கொடுக்க அரசு முயற்சி செய்யும்.

*திரு. கே. எஸ். கணபதி :* தலைவரவர்களே, அரசின் தெளிவான உத்தரவுகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் செயல்படுத்தப்படுவதில்லை. ஆகவே தவறுகிற அதிகாரிகளைத் தண்டிப்பதற்கு அரசு உத்தரவிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, நிலைமையை அறிந்து தவறு யாருடையது என்று அறிந்து, குறிப்பிட்ட அதிகாரிகள் தவறு செய்திருந்தால், நடவடிக்கை எடுக்கப்படும். நிலைமைகளை அறிந்து பார்த்த பின்புதான் நடவடிக்கை எடுப்பதுபற்றி யோசிக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN : Sir, if a Government servant, including a teacher has put in a service of 30 years and if no fault has been found with that gentleman while he had been in service, why should not the Government consider the desirability of setting a time-limit of three months by which the pension must be settled? May I ask why the Government will not pass an order of this kind because there is unnecessary delay causing a great deal of hardship to all Government servants in this regard?

(பிற்பகல் 4.10)

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, அந்தக் கஷ்டங்களை ஓரளவுக்குக் குறைப்பதற்குத்தான், ஓய்வு பெற்றுச் செல்லுகின்ற போது ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்க வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அதிலே ஏதாவது தகராறு இருந்தால், மொத்தத் தொகையைப் பார்த்து, அதில் ஓரளவு தொகை கொடுக்கலாம். ஏற்கெனவே பழைய வழக்குகள் சில தீர்க்கப்படாமல் இருந்தால், அவற்றைத் தீர்க்க அரசு முயற்சி செய்யும்.

*திரு. செ. முத்துசாமி :* இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்ற காரணத்தால், அரசு நன்றாக ஆலோசித்து, ரிட்டயர் ஆகின்ற தேதியிலேயே முழு பென்ஷனையும், 80 சதவிகித கிராஜுவிடியையும் தர வேண்டுமென்று தெளிவாக உத்தரவு போட்டிருக்கிறது. அரசின் உத்தரவு தெளிவாக இருந்தும், அதிகாரிகள் அதை நிறைவேற்றுவதில்லை. அதனால்தான் இத்தகைய நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. ஆதலால், அரசின் உத்தரவிட்ட நோக்கத்துக்குத் தகுந்தபடி செயல்படாமல் இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின்





கவனத்திற்குக் கொண்டு வந்து, அப்படி ரிட்டயர் ஆகிற தேதியில் பணம் கொடுக்கப்படாமல் இருப்பதற்கு, அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவாதத்தை இந்த அவையில் அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. கொடுக்கப்படாமலிருப்பதற்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும். அதை அவர்கள் தான் விளக்க வேண்டும். கொடுக்கப்படாமலிருப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

*திரு. எம். சங்கரலிங்கம் :* தலைவர் அவர்களே, ஓய்வு பெறுவதற்கு ஆறு மாதத்திற்கு முன்னாலேயே பென்ஷன் பேப்பர்களைப் போடுவதற்கும், 'பிக்சேஷன்' செய்வதற்கும் வகைசெய்வதாக ஒரு விதிமுறை வைத்தால், இது தடுக்கப்படலாம். அந்த விதிமுறை இப்போது இருக்கிறது. அந்த விதிமுறை இருந்தும். பல ஸ்கேல்கள் இருப்பதாலும், இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை ரீபிக்சேஷன் என்பன போன்ற காரணங்களாலும், இவ்வளவு அதிகமான எண்ணிக்கை இருக்கிறது. அதை விரைவில் கொடுப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, இந்த யோசனையை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள இயலும் என்று பார்க்க வேண்டும். முன்கூட்டியே தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது. ஆனால் சிலரைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு பென்ஷன் கொடுப்பதற்குக் கேட்கின்ற விவரங்கள் சரியாக வராததன் காரணமாக, அது சம்பந்தமான கடிதப் போக்குவரத்து வளர்ந்து காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. சில சமயங்களில் விவரங்கள் கிடைக்காமல், காலத்தாழ்வு ஏற்பட்டுவிடுகிறது. அவற்றையெல்லாம் குறைப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று அரசு முயற்சித்துக்கொண்டிருக்கிறது.

*Ousting of Secondary Grade Teachers*

* 45 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that seven Secondary Grade Teachers promoted as B.T. Teachers in Government 'B' Wing High Schools in Ramanathapuram district were ousted from service; and

(b) if so, whether the Government will issue necessary orders to absorb the affected teachers?

இடைநிலை ஆசிரியர்களின் பணி நீக்கம்.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அரசினர் 'பி' பிரிவு உயர் நிலைப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்ட ஏழு இடைநிலை ஆசிரியர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை ஈர்த்துக் கொள்ளத் தேவையான ஆணைகளை அரசு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பணியில் சேர்ந்தனர். ஆகையால், பட்டதாரி ஆசிரியர்களாக தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த எட்டு ஆசிரியர்களில் மூவர் இடைநிலை ஆசிரியர்களாக பணியிறக்கம் செய்யப்பட்டனர். அவ்வாறு பணியிறக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் விடுப்பு பணியிடங்களில் பட்டதாரி ஆசிரியர் களாக தற்காலிகமாக நியமிக்கப்பட்டு, தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். மீதமுள்ள ஐந்து ஆசிரியர்களும் தேர்வாணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பணியில் சேரும்போது இடைநிலை ஆசிரியர்களாக பணியிறக்கம் செய்யப்படுவர்.

(இ) 'பி' பிரிவில் நிரந்தரமான பணியிடங்கள் ஏற்படும் போது மேற்கண்ட இடைநிலை ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெறுவர்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, இவர்கள் எல்லாம் முன்னாள் கழக உயர்நிலைப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தார்கள். இந்தப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்ட காரணத்தால், அவர்கள் தங்கள் கல்வித் திறனை அதிகரித்துக்கொண்டு பி.டி. பட்டம் பெற்று வந்ததும், காலியான இடங்களில் அவர்கள் ஆசிரியர்களாக அமர்ந்தார்கள். ஆனால், அவர்களுடைய முன்னாள் பணிக்காலத்தை கணக்கில் எடுத்துக்கொள் ளாமல் அவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் பிறகு பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள். இது முறையாகாது. அரசாங்க அலுவலகங்களில்கூட, ஒருவருக்குப் புரமோஷன் கொடுத்தால், அவருடைய முன்னாள் சர்வீஸைக் கணக்கில் எடுத்துத்தான் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆனால் இடைநிலை ஆசிரியர்கள் விஷயத்தில், அவர்களுடைய



இடைநிலை ஆசிரியர் பணிக்காலத்தை மனதில் கொள்ளாமல், அவர்கள் பி.டி. ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலத்தைமட்டும் மனதில் கொண்டு பணி நீக்கம் செய்து வருகிறார்கள். இதுபோல் எதிர்காலத்தில் ஒரு நிலைமை ஏற்படாமல் அரசு பார்த்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தேர்வு ஆணைக்குழுவின் சார்பில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஆசிரியர்களை நியமிக்கும் போது, தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள் பதவி இறக்கம் செய்யப் படுகிறார்கள். 'பி' பிரிவு பட்டதாரி ஆசிரியர்கள் வருங்காலத்தில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதிலோ அல்லது பணியை ராஜினாமா செய்வதிலோ ஏற்படும் நிரந்தரப் பணி இடங்களில், மேற்கண்ட இடைநிலை ஆசிரியர் பதவி உயர்வு மூலம் நியமனம் செய்யப்படுகிறார் என்று கூறப்படுகிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே கீழே இருக்கின்ற பொறுப்பிலிருந்து தேர்வு எழுதி பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிற வர்களுக்கு சர்வீஸ் கமிஷன் இல்லை. தற்போதைய அரசின் ஆணைப்படி புரமோஷனில் வருகிறவர்களுக்கு சர்வீஸ் கமிஷன் தேவையில்லை. அப்படி யிருக்கும்போது, அவர்களைத் தற்காலிக ஆசிரியர்களாகக் கருதி, சர்வீஸ் கமிஷனிலிருந்து வருகிறவர்களைப் போட்டு, இவர்களை ஏன் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப் பள்ளிகளில், 1-4-1970-க்குப் பிறகு ஏற்படும் பணியிடங்களுக்கு 'ஏ' பிரிவினைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால், தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வு ஆணைக்குழு மூலமாகவே நிறைவு செய்யப்பட வேண்டு மென்று கல்வித் துறையின் ஆணையிருக்கிறது. ஆகவே தான் 'பி' பிரிவில், ராஜினாமா செய்வதாலோ, நிரந்தரப் பணிகள் ஏற்படும்போதோ கிடைக்கும் இடங்களில்தான் நிரந்தரமாக நியமனம் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, அரசு முன்னாள் கழகப் பள்ளிகளை எடுத்துக் கொண்டதன் விளைவுதான் இது. அதன் காரணமாக ஒரே பள்ளியில் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என்று இரண்டு பிரிவையும் சேர்ந்த ஆசிரி யர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தகுதியை உயர்த்திக்கொண்டு மேல் நிலைக்கு வரும்போது, அந்த மாதிரிச் சட்டம் இல்லாமல் அது தளர்த்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதை தனியாகத் தான் ஆராய வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, 'பி' விங் பிரச்சினை 1-4-1970 முதல் இன்று வரை இருக்கிறது. பி-விங் அரசு பிரிவு என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதற்குரிய சலுகைகள் எல்லாம் கிடைப்பதில்லை. பி-விங்கில் இருப்பவர்கள்பற்றி அரசு ஒரு முடிவெடுத்து, அதை வெளியிட வேண்டும். அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள், அவர்களுடைய பணிக்காலம் எப்படி கணக்கிடப் படுகிறது; 'ஏ' விங், 'பி' விங் இரண்டும் எப்படி ஒன்றாக்கப்படும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதற்குப் பல்வேறு முயற்சிகள் செய்து, இருவரும் ஒன்றாக இணைகின்ற முயற்சியில் இரு சாராரும் ஒத்துவராததால், இரண்டையும் தனித்தனியாக வைத்திருக்கிறார்கள். 'பி' விங்கில் உள்ள அத்தனை பேரும் தேர்வு பெற்று, மேல் நிலை பெற்று வருகின்ற காலம் வரை, இரண்டு பிரிவுகள் வைத்திருப்பதைத் தவிர, வேறு வழியில்லை. ஆகவே தான் ஒன்று சேர்க்கின்ற முயற்சி வெற்றி பெறவில்லை. தனித்தனியாக வைத்துக் கண்காணிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்ட பி-விங் பள்ளிகளிலே இன்னும் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. பிறகு அரசாங்கம், முனிசிபாலிட்டியைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ஏற்கெனவே என்ன சம்பளம் கொடுத்தார்களோ, அந்த நிலையிலேயே வைத்திருக்கிறார்கள். 'இன்கிரிமெண்ட்', 'பி.எப்.' முதலியவை கொடுக்கப்படவில்லை. அவர்கள் என்ன சர்வீஸ் என்று முடிவெடுக்கப்படாமல், அரசுத் துறைக்கு வந்த பின்னும் எந்தவிதமான பெனிபிட்டும் இல்லாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 'சி' விங்கிற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், அது பற்றிய விவரங்களை அறிந்து சொல்லலாம்.

## *Lump-sum Maintenance Grant to Elementary Schools*

* 46 *Q.*—THIRU *K.* S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal with the Government for granting a lump-sum maintenance grant to the Elementary Schools on the basis of the number of classes in the Schools?



## ஆரம்பப் பள்ளிகளுக்கு மொத்த பராமரிப்பு மானியம்.

**திரு. கே. எஸ். கணபதி** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஆரம்பப் பள்ளிகளில் இருக்கும் வகுப்புகளின் எண்ணிக்கையின் அடிப் படையில் ஒரு மொத்த பராமரிப்பு மானியம் அவற்றிற்கு வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, இரண்டாவது ஊதியக்குழு சிபாரிசுகளை நிறைவேற்றுவதற்கு முன்னால், மொத்தச் செலவில் 12 சதவிகிதத்தை எடுத்து இந்தப் பள்ளிகளுக்குக் கொடுத்தார்கள். பிறகு அது 6 சதவிகிதமாக மாறியது. ஆனால், ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டரையோ, சீனியர் டெபுடி இன்ஸ்பெக்டரையோ, எவ்விதம் அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகள் கவனிக்கிறார்களோ, அதைப் பொறுத்துத்தான் இந்த சதவிகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. அது மாதிரி காரியங்கள் தவிர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எப்படி மாற்ற முடியும் என்று யோசனை சொன்னால், அதுபற்றி அரசு ஆராயலாம்.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவர் அவர்களே, இந்த எண்ணிக்கை மாணவர்கள் அடிப்படையிலா, அல்லது மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொல்லியது போல், டெபுடி இன்ஸ்பெக்டர்களைக் கவனிக்கின்ற முறையிலா என்று தெரியவில்லை. அப்படி இருந்தால், அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தில் பஞ்சப்படி நீங்கலான தொகையில், 6 விழுக்காடுக்குச் சமமான தொகை நிர்வாக மானியமாக அளிக்கின்ற முறை இருந்து வருகிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் டெபுடி இன்ஸ்பெக்டர் போன்ற அதிகாரிகளைக் கவனிப்பதன் மூலம் தான் 'பெர்சென்டேஜ்' நிர்ணயிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு பதில் அளிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த நிலை எனக்குத் தெரியாது. தனிக் கேள்வி போட்டால், அந்த நிலை உண்டா இல்லையா என்று ஆராயலாம்.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவர் அவர்களே, இது தனியார் பள்ளிகளுக்குப் பொருந்துமா, அல்லது ஊராட்சி, நகராட்சிப் பள்ளிகளுக்குப் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது தனியார் பள்ளிகளுக்குத்தான் என்று கருதுகிறேன். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், அவைகளைக் கண்காணிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்குத்தான் இருக்கிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, 6 சதவிகிதம் என்று தரப் பட்டால், பிரச்சினை இல்லாமல் இருக்கும். அதிகபட்சம் 6 சதவிகிதம் கொடுக் கலாம் என்று உத்தரவு இருக்கிறது. அந்த அடிப்படையில் மாறுபாடு இருக்கிறது. ஆறு சதவிகிதம்தான் என்று குறிப்பாக அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாவட்டக் கல்வி அலுவலருக்கு ஏதாவது அதில் குறைபாடு தென்பட்டால், அந்தத் தொகையைக் குறைக்கவோ, மறுக்கவோ அதிகாரம் இருக்கிறது. அது பற்றி இன்னும் தெளிவாகவும், நியாயமாகவும் அமையும் முறையில் யோசனை கூறப்படுமானால், அதுபற்றி ஆராயலாம்.

### *Kulachal Harbour Development Scheme.*

* 47 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Kulachal Harbour Development Scheme, Kanyakumari district, is at the stage of implementation; and

(*b*) if so, the estimated amount for which this Scheme will be undertaken?

### குளச்சல் துறைமுகம் அபிவிருத்தித் திட்டம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் துறைமுகம் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும் நிலையிலுள்ளதா ?



(இ) ஆமெனில், எவ்வளவு தொகையில் இத்திட்டம் மேற்கொள்ளப் படும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை;

(இ) வினாவிற்கு இடமில்லை.

(பிற்பகல் 4-20)

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், குளச்சல் துறைமுக அபிவிருத்தி, சிறு துறைமுக அபிவிருத்தித் திட்டத்தில் இணைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. மாண்புமிகு அமைச் சரவர்கள் பதிலிலிருந்து ' இல்லை ' என்று தெரிய வருகிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, மத்திய அரசு துறைமுகங்கள் அபிவிருத் திக்கு ஒதுக்கும் தொகையிலிருந்து கூடுதலாகப் பெற்றேனும் இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசு திட்டமிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 16 லட்சம் ரூபாய் அளவுக்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மத்திய அரசு, தமிழ்நாட்டில் ஒரே ஒரு திட்டத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னதால், கடலூரை மட்டும் எடுத்துக்கொண்டு விரிவு செய்யப்பட்டது. இருந்தாலும் 1973-ம் ஆண்டு 20,000 ரூபாய்க்கு 'போர்ட் ஆபீஸ்' கட்டுவதற்கு அரசாங்கம் திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. நிதிநிலையைப் பார்த்து, அது மேற்கொள்ளப் படும்.

### *Licensing of Architecture Industry.*

* 48 *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THAVA-THIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any representation to implement the system of issuing licenses to architecture in Tamil Nadu; and

(*b*) if so, the action taken by the Government?

### சிலை வடிக்கும் சிற்பத் தொழிலுக்கு உரிமம் வழங்குதல்.

**திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் சிலை வடிக்கும் சிற்பத் தொழிலுக்கு உரிமம் வழங்கும் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU G. SWAMINATHAN: Sir, this question in English says "whether there is any representation to implement the system of issuing licences to architecture in Tamil Nadu". But, in Tamil, தமிழகத்திலே சிலை வடிக்கும் சிற்பத் தொழில்' என்று போடப்பட்டிருக்கிறது. எதற்கு உண்டு, எதற்கு இல்லை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, அவர்களுடைய கேள்வியினுடைய நோக்கம், சாதாரணமாக சிற்பங்கள் செய்கிற கலைப் பள்ளிகளை வைக்கும்போது, அதற்கு 'லைசன்சிங் சிஸ்டம்' கொண்டுவர முடியுமா என்பது தான்.

*Post of Assistant Superintendent (Administration) in the Tamil Nadu Approved Schools and Vigilance Service.*

*49 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether any representation has been received stating that the allocation of the post of Assistant Superintendent (Administration) in the Tamil Nadu Approved Schools and Vigilance Service to the Ministerial Services is inconsistent with the practice followed up to 1971 and Rule 43 (A) of the Children's Act and that this post should be given only to the teachers; and

(b) if so, the action taken thereon?



**தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளித் துறையில் உதவிக் கண்காணிப்பாளர் (நிர்வாகம்) பதவி.**

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு சீர்திருத்தப்பள்ளித் துறையில் (Government Approved Schools and Vigilance Service) உதவிக் கண்காணிப்பாளர் (நிர்வாகம்) பதவி, அமைச்சுப் பணியாளருக்கு வழங்கப்படுவது, 1971-ஆம் ஆண்டு வரை இருந்த நடைமுறைக்கும் சிறுவர்கள் சட்டம் 43 (A) விதிகளுக்கும் மாறுபட்டது என்று விளக்கி, ஆசிரியர்களுக்கே கொடுக்கப்பட வேண்டுமென்ற முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (அ) அரசினர் சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களிடமிருந்தோ அல்லது சீர்திருத்தப்பள்ளி மற்றும் விழிப்புப்பணித் துறை ஊழியச் சங்கத்திடமிருந்தோ அவர்களுக்கு உதவிக் கண்காணிப்பாளராக (நிர்வாகம்) பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று எவ்விதக் கோரிக்கையும் பெறப்படவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவரவர்களே, சீர்திருத்தப் பள்ளிகளில் நிர்வாகப் பொறுப்பைப் பார்த்து வருகிற கண்காணிப்பாளர்கள், ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களாகவும், அங்கே பணியாற்றுகிற உதவிக் கண்காணிப்பாளர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களாகவும் 1971-வரை இருந்தார்கள். சிறுவர் பாதுகாப்புச் சட்டம் 43-ஏ-ல் அவ்வாறு சொல்லப்பட்டது. 1971-க்குப் பிறகு உதவிக் கண்காணிப்பாளர் பதவிகளுக்கு, பொதுத் துறையிலிருந்து ஆட்கள் எடுக்கப்பட்டு, ஆசிரியப் பயிற்சி இல்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தூத்துக்குடிக்குப் பக்கத்திலுள்ள பள்ளியில் அவ்வாறு கொடுக்கப்பட்டதாக அங்குள்ள ஆசிரியர்கள் என்னிடம் முறையீடு தந்திருக்கிறார்கள். அது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற நடைமுறை 1953-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டுவரை இருந்ததென்பது உண்மை. அது நிர்வாக சௌகரியத்திற்குச் சரியாக இல்லாததால், 1970-ல் நடைபெற்ற சீர்திருத்தப் பள்ளிகளின் கண்காணிப்பாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானப்படியும், மற்றும்

அனுபவமிக்க கண்காணிப்பாளர்களின் பரிந்துரைகளின்படியும் இப்பதவி மீண்டும் அமைச்சுப் பணியாளர்களுக்குத் தரப்பட்டு, பதவிகள் பெயர் 'அலுவலக மேலாளர்' என்றும் மாற்றப்பட்டது. காரணம், ஆசிரியர்கள் உதவிக் கண்காணிப்பாளர் பதவி ஏற்பதற்கு 'அகவுன்ட் டெஸ்ட்' தேர்ச்சியும், அலுவலக நடைமுறையில் முன்அனுபவமும் இல்லாததே யாகும். இதனால் அவர்கள் தங்கள் கீழுள்ள இதர அமைச்சுப் பணியாளர்களின் வேலையைச் சரிவர கண்காணிக்கவில்லை என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். சங்கரலிங்கம்* : தலைவரவர்களே, சீர்திருத்தப் பள்ளிகளில் இளம் குற்றவாளிகளுக்குக் கல்வி பயிற்றுவித்து, அவர்கள் சமூகத்தில் நல்லதொரு முன்னேற்றத்தைக் காணவேண்டுமானால், ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள்தான், மன இயல் தெரிந்தவர்கள்தான்—சைகாலஜி தெரிந்தவர்கள்தான்—அவர்களைச் சரிவரத் திருத்த முடியும். அவர்களே அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகவும், உதவிக் கண்காணிப்பாளர்களாகவும் இருந்தார்கள். சிறுவர் சட்டம் 43-(ஏ)-வில் அது வற்புறுத்தப்பட்டது. 1973-க்குப் பின்னால் அமைச்சுப் பணியைச் சேர்ந்தவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று அந்த விதி மாற்றப்பட்டது. நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் 'அக்கவுன்ட் டெஸ்ட்', 'டிபார்ட்மென்டல் டெஸ்ட்', 'அட்மினிஸ்டிரேடிவ் டெஸ்ட்' ஆகியவற்றைப் பாஸ் செய்ய வேண்டுமென்றால், ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களை இதையெல்லாம் பாஸ் பண்ண வைத்து அவர்களுக்கே அந்தப் பணியைக் கொடுப்பதுபற்றி அரசு பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை* : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும் கருத்து ஆய்வு செய்யப்படும்.

*Silk Sarees of Arulmigu Meenakshi Amman Temple, Madurai*

* 50 *Q*.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether silk sarees worth about Rs. 4 lakhs belonging to the Madurai Arulmigu Meenakshi Amman Temple were sold in public auction; and

(*b*) if so, the amount derived from the auction?





*மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் பட்டுப் புடவைகள்.*

*திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்* : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரை, அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான ரூ. 4 லட்சம் மதிப்புள்ள பட்டுப்புடவைகள் ஏலம் விடப்பட்டதா?

(இ) ஆமெனில், ஏலத்தின் மூலம் கிடைத்த தொகை எவ்வளவு?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்* : (அ) 8-10-1973 முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் 9 மணி வரை திருக்கோயில் அலுவலகத்தில் தக்க விளம்பரங்களுடன் பட்டு, நூல், செயற்கை பட்டு ஆகிய வகையறு வேட்டி, புடவை, துணி ஆகியவை ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

(இ) 8-10-1973 முதல் 21-5-1974 வரை ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்ட பட்டு, நூல், செயற்கை பட்டு ஆகிய இனங்களின் விற்பனைத் தொகை ரூ. 52,765.05 ஆகும்.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## 2. அறிவிப்பு.

### ஒத்திவைக்கப்பட்ட வினா 28 குறித்து

MR. CHAIRMAN : I have to announce to the House that the Legislative Council Starred Question No. 28, given notice of by Thiru G. Swaminathan, M.L.C., which was included in the List of Starred Questions for oral answers on 16th August 1974, was taken up and postponed for further answers. It will be included in the List of Starred Questions for further answers on Saturday, the 24th August, 1974.

*திரு. கே. ராஜாராம்* : தலைவரவர்களே, அந்தக் கேள்வியை 24-ம் தேதி சேர்த்துக்கொள்ளுவது என்றால், 16-ம் தேதி நடந்த நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் ஒன்று கொடுத்தால்தான், அமைச்சரவர்கள் அன்று சொன்ன பதிலைப் பொறுத்து, கேள்விகள் கேட்க வசதியாக இருக்கும். அந்தக் கேள்வி சம்பந்தமான அன்றைய நடவடிக்கைக் குறிப்பினைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Copies of the proceedings will be distributed day after tomorrow.

**3. தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1974-75 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1973-74 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றின் மீது விவாதம்.**

* திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தினுடைய வருவாய் மிகக் குறைவாக இருக்கிறது. மேலும் எதிர்பார்த்த அளவு இல்லை என்பது நாம் எல்லோரும் உணரக்கூடிய ஒன்று. இந்த வருவாயை அதிகரிக்க அரசு பல முறைகளைக் கையாண்டு வருகிறது. அதே நேரத்தில் வருவாய் இழப்புக்கான பல நடவடிக்கைகள் இந்த வாரியத்திலே நடந்து கொண்டிருக்கும் காரணத்தாலேதான், இந்த இழப்பு ஏற்படுகிறது என்பது உண்மை என்று கூறி, சிலவற்றை இங்கே கூற விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

முக்கியமாக பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தை அளக்கக்கூடிய மீட்டர்கள் தரக் குறைவானதாக இருப்பதுதான் முதல் காரணமாகும். தரக்குறைவான மீட்டர்கள் 30 சதவிகிதம் புழக்கத்தில் இருக்கும் காரணத்தால்தான், இந்த நஷ்டம் நமது மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. மேலும் தரக் குறைவான மீட்டர்களை உடனுக்குடன் அகற்றும் பொறுப்பு அந்த வாரியத்திடம் இருந்தபோதிலும், மீட்டர்களை அகற்றும்போது, அந்த இடத்தைப் பூர்த்தி செய்ய புதிய மீட்டர்கள் பொருத்தப்படுவதில்லை. முன்காலத்தில் இதற்காக செக்ஷன் ஆபீசரிடம் ஒரு 'ரோலிங் ஸ்டாக் ஆப் மீட்டர்ஸ்'-என்று சில மீட்டர்கள் உண்டு. ஒரு மீட்டர் பழுதுபட்டால், அது குறித்து வாரியத்திற்குத் தெரியப்படுத்தினால், புதிய மீட்டரைப் பொருத்தி, பழைய மீட்டரை அகற்றுவது வழக்கம். அந்த முறை கையாளப்படாத காரணத்தாலே, 4 மாதங்கள் அல்லது 5 மாதங்கள் பயன்படுத்திய மின்சாரத்தைக் கணக்கிட்டு, அதில் சராசரி இவ்வளவு பயன்படுத்தி இருப்பார்கள் என்று கூறி, அந்த அளவிலே கணக்கிடப்படுகிறது. அந்த சராசரிக் கணக்கிற்காக, முதல் 3 அல்லது 4 மாதங்களுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரம் மிகவும் குறைவாக இருக்கும். பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்காக நமக்குக் கிடைக்க வேண்டிய கட்டணம் கிடைப்பதில்லை. அது மாத்திரமல்ல. மீட்டர் டெஸ்டிங் டிபார்ட்மென்ட் சரியாக ஒத்துழைப்பதில்லை. ஒரு மீட்டர் குறையுள்ளதாக இருக்கின்றது என்று மீட்டர் டெஸ்டிங் பண்ணுவதற்கு அனுப்பப்பட்டால், அதைச் சரிபார்த்து அனுப்புவதற்கு குறைந்தது 6 மாதங்கள் ஆகின்றன. அந்த இடைக்காலத்திலே அவர்கள் பயன்படுத்தக்கூடிய மின்சாரம், அவர்கள் சாதாரணமாகப் பயன்படுத்துகின்ற சராசரி மின்சாரம்—இவைகளில்



பெருத்த வேறுபாடு உள்ளதா என்று பார்க்க வேண்டும். எனவே குறையுள்ள மீட்டர்களுக்குப் பதிலாக புதிய மீட்டர்களைப் பொருத்த வேண்டும். அதே சமயத்தில் தரமான மீட்டர்களைப் பயன்படுத்த முற்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல. மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் எனக்கு ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நாம் பயன்படுத்தும் அனைத்து மின்சார மீட்டர்களும் 'ஆன்டி-மேக்னடிக்' ஆக உள்ளதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன். முற்காலத்தில் நம்முடைய கைக்கடிகாரத்திலே ஒரு காந்தத்தைக் காட்டினால், அது அப்படியே நின்று விடும். இப்போது கடிகாரங்களிலே 'ஆன்டி-மேக்னடிக்' என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அது போலவே மீட்டர்களிலும் 'ஆன்டி மேக்னடிக்' என்று குறிப்பிடலாம். உண்மையிலேயே இந்த மீட்டர்கள் 'ஆன்டி-மேக்னடிக்'-ஆக இருக்கின்றனவா இல்லையா அல்லது காந்தத்தை வைத்தால் நின்று விடுவதாக இருக்கின்றதா என்று சரிபார்க்கப்படுகிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இதைச் சொல்லும்போது சற்று அச்சத்துடனே இதைக் குறிப்பிடுகிறேன். Line Staff லுடைய எண்ணிக்கை எனக்கு ஏதோ அதிகமாகத்தான் தோன்றுகிறது. ஏனென்றால் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், வாரியத்திற்காக அவர்கள் ஒத்துழைப்பதைக் காட்டிலும், மின்சாரம் பயன்படுத்துபவர்களுக்கே அவர்கள் ஒத்துழைப்பதைக் கடமையாகக் கொண்டு பல்வேறு வகைகளில். ஒத்துழைப்பைத் தருகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே 'லைன் ஸ்டாப்' எண்ணிக்கை பற்றி அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இப்படியெல்லாம் தவறுகள் ஏற்படுகின்றதா, மின்சார வாரியம் சரியாகப் பார்க்காததாலா என்றெல்லாம் சந்தேகம் எழலாம். உள்ளபடியே Board Manual-ல் டிவிஷனல் இன்ஜினியர் வந்து அவ்வப்போது 'செக் டெஸ்ட்' செய்ய வேண்டுமென்று உத்தரவாதம் இருக்கிறது. ஆனால் அப்படிச் செய்கிறார்களா என்பதைப்பற்றி எனக்கு ஐயப்பாடு. ஆங்கிலத்திலே சொல்வதென்றால் 'it is more honoured in its breach than in its observance'. என்று சொல்வார்கள். அது போல இது போன்ற 'டெஸ்ட்' செய்யப்படுவது குறிக்கோளாக வைத்துச் செய்யப்படுவதில்லை. மான்யூவலில் தான் உள்ளது. இப்போது ஒவ்வொரு "ஸிஸ்டம் லெவலில்" ஒரு அஸிஸ்டெண்ட் இன்ஜினியர், இரண்டு டெஸ்டர்கள் இருக்கின்றார்கள். இவர்களைக் கொண்டு இதுபோன்ற தவறுகள் ஏற்படாமல் செய்ய வழிவகை இருக்கின்றது. அது செவ்வனே நடைபெறுகிறதா என்றால் இல்லை என்றுதான்

கூறுவேன். இதைத் தவிர, இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்டிலே இருப்பதைப் போல "சிஸ்டம் லெவலிலே" இருக்கக்கூடாது, "போர்ட் லெவ"-விலே, ஒரு "விஜிலன்ஸ் ஸ்குவாட்" என்று சொல்லலாம், ஒன்றை வைத்து தவறுகளைக் கண்டுபிடிக்கக் கூடிய அளவில், 'போர்ட்' லெவலில், ஸ்டேட் லெவலிலே ஒன்று அமைக்கலாம். அவர்களுக்கு ஒரு ரோஸ்டர் போட்டுக்கொடுத்து, அந்த ஸ்குவாடைச் சேர்ந்தவர்கள் எங்கே எப்போது செல்வார்கள் என்பது சிஸ்டத்தில் இருப்பவர்களுக்குத் தெரியாமல் 'செக்' செய்தோமானால், நிச்சயமாக நமக்கு அது பயனளிக்கும்.

மற்றும் வாரியத்திற்கு ஏற்படும் பெரும் நஷ்டம் "லைன் லாஸ்" என்பதன் காரணமாக என்று சொல்வார்கள். மின்சாரம் கடத்தப்படுவதிலே ஏற்படுகின்ற நஷ்டம் என்று சொல்வார்கள். ஆனால் அதில் எனக்கு ஐயப்பாடு இருக்கின்றது. மின்சாரம் வேறு எங்கோ கடத்தப்படுவதால் நமக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. மின் கடத்தலினால் நஷ்டம் என்றுதான் நான் சொல்வேன். அரசே ஏற்றுக்கொள்ளும். 'தெப்ட் ஆப் எனர்ஜி' என்று சொல்லலாம்.

ஆங்காங்கு இவைகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. நம்முடைய Line Staff கூட உதவியாக இருக்கின்றார்கள் என்று சொன்னேன். 'தெப்ட் ஆப் 'எனர்ஜியை' தடுப்பதற்கு என்ன முறை என்று கேட்டால், எஸ். எம். ஈ. எஸ். சி. போன்ற தனியார் நிறுவனங்கள் இருந்தபோது அவர்களுக்கு நாம் எவ்வளவு மின்சாரம் வழங்கினோம் என்பதற்குக் கணக்கு இருக்கிறது. அதே போல் அவர்கள் வெளியே அனுப்பும்போது அளந்து அனுப்பிக்கொண்டிருந்தார்கள். தனியார் நிறுவனமாக இருந்தால், அதைச் செய்ய முடிந்தது. அரசு அதைத் தடுக்க வேண்டுமானால், ஒவ்வொரு "டிஸ்ட்ரிப்யூட்டிங் பாயிண்டி"-லும் உள்ளே வரும் மின்சாரம் எவ்வளவு என்று கணக்கு எடுத்துக்கொண்டு வெளியே அனுப்பும் போதும் மின்சாரத்தைக் கணக்கெடுக்க வேண்டும். அது இயலாத காரியம் என்று சொல்லலாம். ஆனால் ஒவ்வொரு "டிஸ்ட்ரிபுயூட்டிங் பாயிண்டிலே"-யும் ஒரு நாளைக்கு மின்சாரம் வழங்காமல் பகல் நேரத்திலே நிறுத்தி அத்தனை உதவியாளர்களைக் கொண்டு பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தினை அளந்து, உள்ளே வந்த மின்சாரத்தின் அளவை அளந்தால், தெளிவாக "லைன் லாஸா" அல்லது "தெப்ட் ஆப் எனர்ஜியா" என்பது அரசுக்கு விளங்கும். அதற்குப்பின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். அந்த அளவிலே அரசு ஒரு நல்ல முறையை வகுத்து "டிஸ்ட்டிரிபுயூட்டிங் பாயின்டி"லே உள்ளே வரக்கூடிய மின்சாரத்தை அளக்க ஒரு மீட்டர் பொருத்த வேண்டும். பயன்படுத்தப்படும் அளவும் கணக்கிடப்பட வேண்டும்.



அதைவிட முக்கியமான ஒன்று, இந்த வாரியத்திலே உள்ளவர்களை இரு பிரிவினராகப் பிரிக்க வேண்டும். 'டெக்னிக்கல்' 'நான்-டெக்னிக்கல்' ஆகப் பிரிக்க வேண்டும். வெவ்வேறு அதிகாரிகளால் கண்காணிக்கப்பட வேண்டும். ஏனென்றால் இந்த டெக்னிக்கல் அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர் தவறு இழைத்தாரானால், கணக்கு அலுவலகத்தில் உள்ளவர்கள் தவறு நடந்து விட்டது என்று இந்த அதிகாரிகளுக்கு எடுத்துச் சொன்னால், அவர்களும் டெக்னிக்கல் ஸ்டாப்பாக இருப்பதனாலே, அந்தத் தவறை நிரூபிக்காமல் அத்துடனே விட்டு விடுவார்கள். எனவே இவர்களை "டெக்னிக்கல்", "நான்-டெக்னிக்கல்" என்று இரு பிரிவினராகப் பிரித்துவிட்டால், சரியான முறையிலே ஒருவர்மேல் ஒருவர் கண்காணிப்பாக இருப்பார்கள் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

அது மாத்திரமல்ல, இந்த "ஓர்க்ஸ் அக்கவுண்ட்ஸ்" எல்லாம் "எஸ்டிமேட்டு"க்கும் "போல் செட்யூலு"க்கும் கணக்குச் சரி பார்க்காமலேயே கணக்கு முடிக்கப்படுகிறது. அந்த "போல் செட்யூல்"களையும் "ஓர்க்ஸ் அக்கவுண்டை"யும் வெரிபை செய்து ஓர்க்ஸ் அக்கவுண்டை முடித்தால், நிச்சயமாகத் தவறுகள் இல்லாமல் கணக்ிடலாம். எனவே இவை இரண்டையும் முடித்துக்கொண்டுதான் எப்போதுமே "ஓர்க்ஸ் அக்கவுண்டை" முடிக்க வேண்டும்.

அடுத்து, 'ஸ்கீம் எக்ஸ்பெண்டிச்சர்' பற்றியது. நான் உதாரணத்திற்குச் சொல்லுகின்றேன். 1962-65-லே குந்தா தேர்ட் ஸ்டேஜ் லைன் அண்டு சப்-ஸ்டேஷன் நிறுவனத்தை மாத்திரம் எடுத்துக்கொள்கிறேன். அந்த ஸ்கீம் எக்ஸ்பெண்டிச்சரிலே ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 65.28 இலட்சம் என்று இருந்தாலும், அது முடிவடைந்தபோது ரூ. 100 இலட்சம் ஆகிவிட்டது. இதைச் சரியான வழியிலே கண்காணித்திருந்தால், அதிகச் செலவைத் தவிர்த்திருக்கலாம். இதை இரண்டு வகையாகச் சொல்லலாம். ஒன்று தவறு நடந்தது என்று சொல்லலாம் அல்லது சரியான "பிளானிங்" இல்லை என்று சொல்லலாம். எப்படி இருந்தாலும், செலவு ஏற்பட்டதென்னவோ உண்மை. எனவே இனிமேல் ஸ்கீம் எக்ஸ்பெண்டிச்சருக்கு உடனுக்குடன் சரிபார்த்து தீர்வு காண வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

மேலும் "மெடீரியல்ஸ்" பர்சேஸ் செய்வது, அதாவது சாமான்கள், சிமெண்ட், ட்ரான்ஸ்பார்மர் வாங்குகின்றோமே அது பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இவைகள் எல்லாம் இந்த வாரியத்தினாலே வாங்கப்படுகின்றன. அப்போதைக்கப்போது தேவைப்படும் மின் விளக்குகளை, ஒயர்களை "சிஸ்டம் லெவலி"-லேயே வாங்குகின்றார்கள். இப்போது 15, 16 சிஸ்டம்களே வாங்குகின்றன. ஒவ்வொரு சிஸ்டமும் அவரவர்களுக்குத் தேவையான பொருள்களை

வாங்குகிறார்கள். உதாரணத்திற்கு சென்னை, செங்கற்பட்டு சிஸ்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கு டியூப் லைட்கள் லட்சக்கணக்கில் தேங்கி நிற்கும். ஆனால் திருநெல்வேலி, திருச்சி சிஸ்டத்தை எடுத்துக்கொண்டால், டியூப் லைட்டுகள் இல்லை என்று ஓபன் மார்க்கெட்டில் பர்சேசிங்குக்குப் போவார்கள். இது பணம் முடக்குவது மட்டுமல்ல, தவறுகள் நிகழவும் வாய்ப்பாக இருக்கின்றது. எனவே எல்லாப் பொருள்களையுமே "செண்டரலைஸ்ட் பர்சேசிங்" என்ற முறையில், போர்டிலேயே இன்னின்ன தேவை என்று இன்டெண்ட் செய்து, அவர்களே மொத்தமாகக் கொள்முதல் செய்ய வேண்டும். பின் அவரவர்கள் தேவைக்கேற்ப ஆண்டுக்கு ஆண்டு பூர்த்திசெய்துகொண்டால், இந்த மாதிரியான தவறுகள் ஏற்படுவதைக் குறைத்துக் கொள்ளலாம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் நாம் அடிக்கடி பத்திரிகைகளிலே பார்க்கிறோம். வாரியத்திற்கு வரவேண்டிய தொகை வசூலிக்கப்படாமல் இருக்கின்றது என்று நாம் பார்க்கிறோம். குறிப்பாக பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இருந்தால், என்னை அவர்கள் மன்னிக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன், "எச். டி. கன்சுயுமர்ஸ்" இவர்களிடத்திலிருந்து வாரியத்திற்கு வரவேண்டிய தொகை மிகமிக அதிகம். ஏன் அதிலே தயக்கம், ஏன் கொடுபடவில்லை, ஏன் வசூலிக்கப்படவில்லை என்பது எனக்கு வியப்பாக இருக்கின்றது. வசூலிப்பதற்கு சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. சரியான முறையில் வசூலிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமானால், இவைகளை உடனடியாக வசூலிக்க முடியும். பஞ்சாயத்து யூனியன், "எச். டி. கன்சுயுமர்"களிடமிருந்தும் ஏன் வசூலிக்கப்படவில்லை ? எனவே வசூலிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

(பிற்பகல் 4-40)

அது மட்டுமல்ல, பஞ்சாயத்து யூனியனிலே ஸ்ட்ரீட் லைட்ஸ் எல்லாம் போடுகிறார்கள். அதை வந்து அணைப்பது, போடுவது எல்லாம் இந்த லைன் ஸ்டாப் தான் பார்த்துக்கொள்கிறார்கள். இதற்குப் பணம் எப்படி வசூலிக்கப்படுகிறது, கணக்கிடப்படுகிறது என்றால், ஒரு சாதாரண விளக்குக்கு 40 வாட்ஸ் என்று வைத்துக்கொள்வோமானால் அதற்கு ஒரு மாதத்திற்கு 200 மணி நேரத்திற்குப் பணம் வசூலிக்கிறார்கள். ஆனால் சாதாரணமாக நமக்குத் தெரியும் மாலை 7 மணிக்கு மின் விளக்கு எரியவிடப்பட்டால் , மறுநாள் காலை 6 மணிக்குத்தான் அணைக்கப்படுகிறது. பலவிடங்களில் பகல் முழுவதும் எரிகிறது நமக்குத் தெரியும். இருந்தாலும், 11 மணிநேரம் ஒரு நாளைக்கு எரிந்தால் ஒரு மாதத்திற்கு 330 மணி நேரம் விளக்குகள் எரிகின்றன. ஆனால் நாம் கணக்கிடுவது,



200 மணி நேரத்திற்கு மட்டும்தான். அதற்கு ஒரு விளக்கிற்கு 2½ ரூபாய் வீதம் வசூலிக்கின்றோம். டியூப் லைட்டாக இருந்தால், 5 ரூபாய் வீதம் வசூலிக்கிறோம். ஆனால் பயன்படுத்தப்படும் நேரமோ 330 மணி. ஆகவே இந்த 330 மணி நேரத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு வசூலிக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தில் உள்ள பொறியியல் வல்லுநர்களின் எண்ணிக்கையை நான் கணக்கிட்டுப் பார்க்கும்போது, வியப்பாகவே இருந்தது. அதிலே பணியாற்றுகிறவர்கள் 5 சீப் இன்ஜினியர்கள், 23 சூப்பரின்டென்டிங் இன்ஜினியர்கள், 29 எக்சிகூடிவ் இன்ஜினியர்கள், 710 அசிஸ்டென்ட் இன்ஜினியர்கள், 1,770 ஜூனியர் இன்ஜினியர்கள். அதைத் தவிர, கிரேடு இரண்டு சூப்பர்வைசர்கள். இவர்களெல்லாம் என்ன செய்கிறார்களென்று பார்ப்போமானால், பல அதிகாரிகள் கையெழுத்துப் போடுவதற்கு மட்டுமே உள்ளார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சரையோ அல்லது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரையோ கேட்டால், ஒரு பொறியியல் வல்லுநரையோ அல்லது ஒரு மருத்துவரையோ தயாரிக்க அரசு எவ்வளவு செலவிடுகிறது என்று கணக்குச் சொல்வார்கள். அவ்வளவு வரிப்பணத்தை நாம் அவர்களுக்குச் செலவிட்டு தயாரிக்கப்பட்ட அந்த அதிகாரிகள் கையெழுத்துப் போடுவதற்கு மட்டுமே அதிகமான ஊதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறிவு பயன்படுத்தப்படாமலிருப்பது வருந்தத் தக்கது. எனவே அவர்களுடைய ஆற்றல் பயன்படும் அளவுக்கு, நாட்டுக்கு நல்லவை செய்யும் அளவுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மின்சார உற்பத்தி குறைந்திருக்கிறது. அதை அதிகரிப்பதற்கு நாம் முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் நாம் இங்கே பேசினோம். மதிப்புக்குரிய உறுப்பினர் திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள்கூட சென்ற கூட்டத் தொடரிலே சுவிட்சர்லாந்தை எடுத்துக்காட்டாக காட்டி அங்கே மின்சாரம் தயாரிக்கும் முறையெல்லாம் சொன்னார்கள். நான்கூட மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் லோயர் பவானி பிராஜக்டைப் பற்றிய குறிப்பைக் கொடுத்தேன். அங்கே 10,000 கிலோவாட் மின்சாரம் தயாரிக்க ஏற்பாடுகள் அந்த அணைக்கட்டு கட்டப்பட்டபோதே செய்யப்பட்டிருக்கின்றன. ஏன் இங்கே மின்சாரம் தயாரிக்கப்படவில்லை என்றால், அது சாதகமான சூழ்நிலையாக இருக்காது, ஒரு சில நாட்கள் மட்டுமே அங்கே நீர் இருக்கிறது; எனவே மற்றக் காலங்களில் பயன்படுத்த முடியாது என்றார்கள். ஆனால், எப்படி இருந்தால் என்ன ? இவ்வளவு நிபுணர்களை அங்கே நாம் வைத்துக் கொண்டு, அப்போதைக்கப்போது மின்சாரத்தை நாம் தயாரித்து அந்தச்

சுற்றுப்புறத்திற்காவது பயன்படுத்துவோமேயானால், மின்சாரத் தட்டுப்பாட்டை ஓரளவுக்கு ஈடு செய்ய முடியும் என்று சொல்லி, இந்த வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மின்சார பட்ஜெட் விவாதத்திலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லி தமிழகத்திலே இன்று வறுமைப் புரட்சியை ஏற்படுத்தி விட்டது. இதற்கு ஒரு காரணம் மின்சாரத் துறை என்று சொன்னால் அது மிகையாகாது. மின்சாரத் தட்டுப்பாட்டினால் சென்ற ஆண்டு குறிப்பாக சேலம் மாவட்டம், தருமபுரி மாவட்டம் ஆகிய பகுதிகளிலே உள்ள கிணற்றுப்பாசன இடங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. அங்கு அப்பொழுது பகல் காலத்திலே பாசனத்திற்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை. இரவு நேரத்தில்தான் கொடுக்கப்பட்டது. அப்படிக் கொடுக்கின்றபோதும், ஒரு நாளைக்கு மூன்று நான்கு மணி நேரம் என்று கொடுத்து வந்தபோது, விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அப்பொழுது விவசாயிகளுக்கு பொருளாதாரச் சேதமும், வீழ்ச்சியும் ஏற்பட்டது. இதற்குக் காரணம் என்னவென்றால், மின்சாரம் வந்துகொண்டிருக்கும்போதே திடீரென்று அவர்கள் 'டிம் சப்ளை' செய்துவிடுவதால், நாமக்கல் தாலுகாவிலே மட்டும் 50 மோட்டார் காயில்கள் எரிந்துபோயின. அதற்கு யார் காரணம் என்று தெரியவில்லை. இதனால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அது மட்டுமின்றி, நாமக்கல் பகுதியிலே டிசம்பர் மாதத்திலே மின்சாரத் தட்டுப்பாடு மிகவும் அதிகமாக இருந்துகொண்டிருந்தது. அந்தப் பகுதியிலே கடைகள் எல்லாம்கூட, சில ஹோட்டல்கள், மருந்துக் கடைகள் தவிர, விளக்குகளை அணைக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அதே டிசம்பர் மாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே வந்தபோது ஏறக்குறைய மூன்று மைல் நீளத்திற்கு மின்சார விளக்குகள் அலங்காரத்திற்காக எரிந்துகொண்டிருந்தன. அங்கே உள்ள மக்கள் எல்லாம்கூட பேசிக்கொண்டிருந்தார்கள். நம் ஊருக்கு மந்திரி வந்தால்தான் மின்சாரம் வருகிறது, கிணற்றிலே தண்ணீர் இறைக்க மோட்டாருக்கு மின்சாரம் இல்லை, ஆனால் இப்பொழுது இரண்டு மூன்று நாட்களாக விளக்குகள் மூன்று மைல் நீளத்திற்கு எரிகின்றன, இது மட்டும் எப்படி என்று பேசிக்கொண்டிருந்தார்கள். ஆகவே உரிய காலத்திலே மக்களுக்கு, குறிப்பாக விவசாயப்பெருங்குடி மக்களுக்கு, மின்சாரம் தருவதற்கு இந்த அரசு தவறிவிட்டது. அதுதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய உணவு நெருக்கடிக்கு ஒரு காரணமாக இருக்கின்றது.



அடுத்து, இன்றைக்கு வரி உயர்வு ஏற்பட்டு, வரி ஏறிக்கொண்டே போகிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய பட்ஜெட்டிலே நமக்கு ஒரு தெம்பே இல்லை. அபாயச் சங்கை ஊதியிருக்கிறார். இன்னும் 10 ஆண்டு காலத்திற்குக்கூட மின்சாரத் தட்டுப்பாடு இருந்துகொண்டுதான் இருக்கும் என்கிறார். 'நேச்சுரல் ரிசோர்சஸ்' என்பார்களே, இயற்கையாக ஏற்படக்கூடிய சாதகமான சில அருவிகள் எல்லாம் இருக்கின்றன. ஒகனேக்கல் பகுதியிலே அணையைக் கட்டி மின்சாரம் எடுக்கலாம் என்கிறார்கள். அது மட்டுமில்லாமல் மதிப்பிற்குரிய திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இருந்தபோது, நாமக்கல் தாலுகாவிலே சேந்தமங்கலம் பகுதியிலே உள்ள கொள்ளி மலையில் பெரியாறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. அதில் வருஷம் முழுவதும் தண்ணீர் வருகிறது. அதிலே மின்சாரம் எடுக்கலாம் என்ற குறிப்பு இருந்தது. இதையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்திருந்தால், மைசூரிலிருந்தும், கேரளாவிலிருந்தும் மின்சாரம் வாங்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. மின்சாரம் என்பது இப்பொழுது அத்தியாவசியப் பொருளாகிவிட்டது. நாகரிக உலகத்திற்கு அது மிகவும் தேவையாகிவிட்டது. சமுதாயத்திற்கு அது மிக மிக அவசியமாகிவிட்டது. எனவே மின்சாரத்தை உற்பத்திசெய்ய முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். வீணாகும் தண்ணீரை அணைக்கட்டுகளில் தேக்கியிருக்க வேண்டும். அதற்கு பல இடங்கள் தமிழகத்திலே இருக்கின்றன; இதையெல்லாம் மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, இந்த விஷயத்தைப்பற்றிப் பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கருத்தை எடுத்துச் சொன்னார்கள். மின்சார வாரியத்தைப் பொறுத்த அளவில் அல்லது அரசைப் பொறுத்த அளவில் நல்ல திட்டங்களையெல்லாம் ஏற்கெனவே கட்டிமுடித்திருந்தால், மின்சாரப் பற்றுக்குறை வந்திருக்காது என்று சொன்னார்கள். இந்தத் திட்டங்களைக் கட்டி முடிக்க, தயார் செய்ய மத்திய சர்க்காரின் ஒத்துழைப்பு வேண்டும். அவர்கள் அனுமதி பெற்றுத்தான் அந்தத் திட்டங்களை எடுக்க முடியும் என்பது அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும் என்று நான் கருதுகின்றேன். நல்ல நல்ல திட்டங்களையெல்லாம் கட்டி முடிக்கலாம் என்று கேள்விப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அந்தத் திட்டங்களையெல்லாம் சொன்னால், அதிலே விட்டுப்போயிருக்கிற திட்டங்கள் இருந்தால், அதற்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றோம். பொதுவாக நாடு முழுவதுமே மின்சாரம் பற்றுக்குறையாக இருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற நிலையிலே திட்டத்தைக் கொடுத்துவிட்டு, பிறகு கட்டிமுடிக்கவேண்டிய பொறுப்புதான் நம்மிடத்திலே இருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு, 20 ஆண்டு

களுக்கு மின்சாரப் பற்றுக்குறையைப் போக்குவதற்கு உரிய காலத்திலே இங்கே ஆளுகின்ற அரசு திட்டங்களை எடுத்துச் சொல்கிறதா என்று கேட்டால் அதற்குப் பதில் சொல்ல முடியும். மொத்தமாகச் செய்ய வேண்டும் என்பது சரியல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-50)

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதுபோல இயற்கையாக அமைந்துள்ள சாதனங்களை நமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கங்கள் எல்லாம், இதுபோன்ற பயனுள்ள திட்டங்கள் பற்றி மத்திய அரசுக்கு எழுதி அனுப்பியும் அதற்கான அனுமதி காலத்தில் கிடைக்காமல் பல திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன, அனுமதி கிடைத்த ஓரிரு திட்டங்களைத்தான் நிறைவேற்றியுள்ளோம் என்பதுதான். மத்திய அரசின் அனுமதி இல்லாமல் இப்படிப்பட்ட பெரிய திட்டங்களை எடுத்துக் கொள்ள அரசுக்கு இடமில்லை.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம் :** தலைவரவர்களே, அடுத்து மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில், விவசாயத்திற்கெனக் கொடுக்கப்படும் மின்சாரத்தின்மீது மேலும் கட்டண உயர்வினை ஏற்படுத்தாமல், சலுகைகளைத் தொடர்ந்து தர வேண்டும். இப்போது பரவலாகச் சொல்லுகின்றார்கள், பெரிய பெரிய ஆலைகளிலும் நிறுவனங்களிலும் மின்சாரக் கட்டண பாக்கி பல லட்சக்கணக்கில் இருக்கின்றது என்று. ஆனால் அவர்களிடத்தில் அதை கெடுபிடி செய்து வசூலிக்காமல், விவசாயிகளிடம் சிறு பாக்கி இருந்தாலும்கூட மாதத்தில் 20 அல்லது 21 தேதிகளில் கட்டணத்தைக் கட்டவில்லை என்றால், மறுநாளே ப்யூசைக் கழற்றிக்கொண்டு போய் விடுகின்றார்கள். இப்படி விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கின்றது.

அத்துடன் இன்னும் ஒரு விஷயம்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கோழிப் பண்ணையை மிக்ஸெட் ஃபார்ம் என்று சொல்லுகின்றார்கள், அக்ரிகல்சுரல் இண்டஸ்ட்ரி என்றும் சொல்லுகின்றார்கள். எனவே கோழிப் பண்ணைக்கு வேண்டிய மின்சாரத்தை அதிகக் கட்டணத்துக்குள்ளாக்காமல் விவசாயத்திற்குக் கொடுப்பதைப் போல சலுகை தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



இன்னும் ஒன்று, சேலத்திலே ஈரோடு எலெக்ட்ரிகல்ஸ் என்று இருக்கிறது. இதன் பகுதிக்கு உட்பட்ட இடத்திலே எங்கேயாவது ஃப்யூஸ் போய்விட்டது என்று அவர்களுக்குப் போன் பண்ணினால், அது உடனடியாகக் கவனிக்கப்படும் நிலைமை இருக்கின்றது. ஆனால் மற்ற இடங்களிலே உண்மையிலேயே ஒரு வீட்டிலே 3, 4 நாட்கள் ஃப்யூஸ் போயிருந்து அவர்களுக்குத் தகவல் கொடுத்தும் வரவேயில்லை. அவர்கள் உரிய நேரத்திலே செயல்படுவதில்லை. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், அது இன்றைக்கு விவ்சாயத்திற்கு மிக மிகத் தேவையானதாகப் போய்விட்டது. முன்பெல்லாம் ஆயில் என்ஜின்களை வைத்து விவசாயம் செய்தார்கள். இன்றைக்கு அந்த நிலைமை பெரிதும் மாறி விட்டது. மின்சாரத்தைத்தான் பெரும்பாலான விவசாய வேலைகளுக்குப் பயன் படுத்துகின்றார்கள். எனவே இவ்வளவு அத்தியாவசியமான மின்சக்தியை எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லாமல் அதிகமான அளவிற்கு விவசாயத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையினை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* THIRU S. NARAYANASWAMY : I am grateful, Hon. Chairman, for the opportunity afforded to me.

MR. CHAIRMAN : Is the hon. Member going to wind up quickly? If he has no other engagement, he may take more time.

THIRU S. NARAYANASWAMY : Sir, I think some of us would like to go in detail on this Budget and I hope we will have the opportunity of doing so. No engagement can be more important than discharging a duty as Member of the Legislative Council. I am, therefore, happy that I have an opportunity of discharging my duty in the way I want to. Thank you very much, Mr. Chairman.

The Budget which the Hon. the Minister for Electricity has placed before us contains some very important features. First and foremost, I find that there is a supplementary Budget. A great deal of statistical information has been given which is very welcome and it can be used by anybody who wants statistics about generation and distribution of electricity in Tamil Nadu State. I hope this will be repeated in every document in the future.

One of the statements with which the Budget Speech starts is that in the southern region, Tamil Nadu stands first in installed capacity, peak demand, power generation, energy sales, per capita consumption, length of lines, pumpsets connected and villages electrified. May I draw the attention of the Hon. Minister to the fact that while he has every right to feel proud of the achievement, I hope and trust that he will also realise that this has placed on the Tamil Nadu Electricity Board as well as on the Tamil

(மாற்றுத் தலைவர் திரு. எம். ஆறுமுகசாமி தலைமை.)

Nadu Government the tremendous responsibility of maintaining this system in proper condition and to see that the consumer of electricity gets his requirements, which is very important? I entirely agree that this State generates and distributes more electricity than the other three States in the southern region put together. But we have to realise that this places tremendous responsibility on us. With this general statement, I want to start on my points relating to the Budget.

Sir, the most disturbing features of the situation regarding electric power today are two facts which have been stated in the Budget Speech. One is that this power shortage is expected to continue in the next decade unless additional power schemes such as Neyveli second mine cut, second nuclear station and Kalpakkam extension are taken up quickly. Now, this is a melancholy statement to make particularly to the consumer and especially to the agricultural consumer to which my hon. friend Thiru Balasubramaniam made very thoughtful reference and to which my hon. friend Thiru Ganapathi made some extensive reference. What is important is that people should get what they want in terms of power. What alarms me today is that a number of new industrial licences have been issued. Those industries will consume very much larger power when they get installed than today. I know of at least two new caustic soda units which will consume such a quantum of energy as I wonder if the Tamil Nadu Electricity Board will, at least by the time these units are commissioned, be in a position to supply the needed electric power.

The second fact which makes me very nervous is the very frank statement of financial affairs set out in this Budget. Nothing can be more powerful, more difficult and more perilous than the



statement of financial affairs set out in the Budget. First and foremost, a capital programme has been referred to, which is very remarkable in this way—it is said that as a result of the efforts that are being made to put up thermal stations and extension of hydel stations, it is expected to have an additional 925 M.W. at the end of the Fifth Plan. And against this what is being said? It is said that at the end of the period the deficit is expected to be of the order of 1465 M.W. That means that the more we generate the more would be the deficit. That is the present position. It means that there will be more consumers—more industrial consumers and more agricultural consumers. Our job should be to rise to the occasion and instead of increasing the deficit, we should go along and our job must be to extinguish the deficit. I am not making this statement in ignorance of the tremendous responsibility which the Electricity Board and the Tamil Nadu Government have shouldered, but I speak with some sense of responsibility. Now, I would like this deficit to be extinguished over a short period of years. It is very important because without doing that our industrialisation programmes as well as our agricultural pumpset programmes would be very, very crippled.

We were looking forward with interest to two recent Delhi Conferences of Ministers of Electricity and the Chairmen of the Electricity Boards. I hoped to look forward to some very realistic, very successful and very drastic decisions. But, alas, as in many other matters, I stood to be disappointed. I do not know how many practical decisions were taken at those conferences because I do not have any detailed report as to what transpired there. But, I hope and trust that some degree of consciousness of the seriousness of the industrial situation and the agricultural situation would have been borne upon those who plan these things. This is a three-tier organisation and I want to commend my hon. friend Thiru Ganapathi very rightly on his statement accusing the Tamil Nadu Electricity Board of suffering from elephantiasis of staffing. But, I wish to say that it is there at the very top level—the cell of the Planning Commission in charge of power development, the Central Water and Power Commission, the Central Electrical Authority and then the State Electricity Boards. All these people, top people and top engineers talk high things but when we go and meet them, they tell us nothing about this. Obviously, I know a

good deal about electric power generation. I am in the administration of some company and I know what the problems are. Therefore, when they come and tell us this, we are greatly disappointed, both as citizens and as people involved in high consumption of electric power. I only hope that the short-term, medium-term and long-term solutions that have been suggested will be implemented. What is more, I hope that the Central Government and the State Governments concerned will have the necessary resources to implement them. If this is not done, all the paper work done would have gone to waste, even as the plans of the Central Water and Power Commission went haywire and nothing much has happened. Now I think it is unfair to ask the consumer, the bulk consumer, the individual domestic consumer

(பிற்பகல் 5.00)

and the agricultural consumer to put up with, and accustom himself to, the prospect of a continuous shortage, pumps being switched off, loads dropping and tripping and all these many features which are plaguing the entire electricity system for the last three years. The cost of winding wires has become incredibly high. I think the poor man must not be victimised because his motor is put out of order for no fault of his.

Now what disturbs me most are the financial constraints spelt out in this Budget. A very novel statement has been made here—a frank statement and I admire the frankness of the Electricity Board for being so disarmingly frank. It says that the Budget Estimate for capital works is Rs. 47.77 crores for which the known resources come only to Rs. 22 crores. It is stated that they expect Rs. 10 crores as loan from the Government. There is a gap of Rs. 30 crores for which at present they do not know where the money is comin gfrom. There is hardly any budgeting here. When I say, my expenditure is Rs. 2,000 per month my income is Rs. 700 per month and I have Rs. 1,300 as deficit and I do not know where the money will come from, it is not budgeting; but it may be something else. We cannot have capital schemes beyond the known resources. We have no Nasik Press to issue currency to cover the deficit, as the Central Government have the liberty of doing. In these circumstances, what is important is that you



should ascertain the resources, particularly in the light of having to reply large sums by way of amortisation of loans to banks which you have spelt out here. If your capital schemes are totally out of proportion to your known resoutces, how do you expect the man in the street to take you seriously?

Secondly, I come to the Revenue Budget which is in an appalling condition. It is stated that the anticipated revenue receipts were expected to be Rs. 99.96 crores for the year 1974–75. The revenue receipts are now estimated at Rs. 81.30 crores, meaning a shortfall of about Rs. 19 crores. The Board has to bridge this gap and I realise that the Board is working under terrible financial constraints. I know it for a fact and I know the inside story that the deficit is mounting. The only remedy is that the Board should generate more power and distribute more power in the quickest possible way and in the quickest possible time. If the Board does not do this, it will run into serious deficits and difficulties. The State Electricity Board has a habit of presenting annual reports which show that the gaps are filled up by the State Government and the tax-payers. This is not the proper way to do it. The State Electricity Board was formed only for the purpose of running it as a commercial venture, showing an account of profit or loss and being free from political or other interference. I do not think it is free from political interference. I do not think it is free from deficits; and it is only run like any other department of Government in total disregard of responsibility to pay its way. Therefore, this is something of which care must be taken to rectify matters at the earliest.

Now, Sir, the main thing is about the projects. Now the State Electricity Boards are suffering from a tremendous number of difficulties. I lay the blame entirely or almost in a major way at the door of the Central Government, for they did not utilise the existing facilities in the proper way. I can give an illustration. I had a long discussion with Dr. K. L. Rao, former Union Minister for Electricity, and I remember, the B.H.E.L. manufactures 110 M.W. Boilers—Boiler Sets and it has the capacity to manufacture any number of such Boilers at a time. But the Government of India said "No, this has become obsolete. Therefore, we will go in for 500 M.W. boilers". To create the capacity to manufacture 500 M.W. boilers, it takes five years

[Thiru S. Narayanaswamy] [1974 ஆகஸ்ட் 19

time. In the meantime there is dire need for electricity in the country. What is the harm in having five 110 M.W. boilers in the place of 500 M.W. boilers, I cannot see. In every country they use serialised small boilers and keep them, so that when something goes wrong with any boiler, they can insulate the afflicted boiler and repair it quickly and in the meantime run the others on proper trim, instead of having one 500 M.W. boiler. But this is what has happened. I think such ambitions must be curbed. We must generate maximum power with the existing tools by creating more Thermal Stations. If this is not done, there are going to be difficulties.

Sir, a reference has been made to credit squeeze here. I think if the Electricity Board is to assure the general public that they will have electricity shortage for the next five or ten years, I want to assure the Electricity Board that it will have to live with bank squeeze, credit squeeze and financial constraints in the foreseeable future. As I see the manner in which the Reserve Bank is administering the available funds, I am afraid, this is what we are all in for. Therefore, we will have to fashion our budget to suit the available funds without getting into undue difficulties.

Now, Sir the point I am coming to at the end is: The Electricity Board has acquired a number of Electricity Undertakings. I was myself giving evidence before the Select Committee and I impressed on the Government, not once, but through numerous memoranda from the Chamber, personally as a Member of the Electricity Board Advisory Committee and otherwise, on the Ministry here that it was absolutely essential that the small share-holders of these undertakings which had been taken over must be paid back their capital in quick time. But nothing has happened. No information is forthcoming. Even the Fixed Deposits made by them which have matured with the former Companies which are now vested with the Electricity Board take time to be paid. I think it is very wrong, at a time when interest rates have gone up, to hold up the money indefinitely which is due to people who are depending on income from their investments for their sustenance. This is a responsibility far too pressing and should be discharged quickly. I make pointed reference to this because this is very, very important. I have hundreds of letters—when I say 'hundreds', you should not



1974 ஆகஸ்ட் 19] [Thiru S. Narayanaswamy]

think I am exaggerating—as a Stock Broker, as one who made them invest in stocks and shares of the Electricity Companies and as a Director of two Electricity Companies which have been taken over, I have received many letters saying "When do you think we are likely to get our money back?" There is no reply from anybody. It is just because a time-limit is not stated in the Acquisition Bill. We insisted that a time-limit should be spelt out but the Government said: "Don't bother. We will pay them in quick time." We took them at their word. The Government should not commit a breach of faith. I appeal to the Government not to commit breach of faith but pay them early, in order that they may be enabled to invest small sums somewhere to get some interest, at a time of extremely high living costs. I wanted to make this appeal because otherwise, nothing much happens.

Now, Sir, about the general problems. I will deal with them only for two minutes. My Friend referred to line-loss and pilferage. I have been discussing this problem for the last four years.

(பிற்பகல் 5-10)

Now, not much improvement has occurred because the systems losses are sought to be contained. I think pilferage is now under some type of management, as I hear it from the officials of the Electricity Department. But I hope stringent steps will be taken against pilferage by having what is called corner-meters and that arrangements will be made to reduce line-loss by having sub-stations wherever possible. If that is not done, we are going to be in serious trouble. I know there is shortage of transformers, shortage of line-materials and all those things. But, nevertheless, it should be possible to do this and there should be no difficulty about this. As for meters, I can assure my hon. Friend Thiru Ganapathi through you, Mr. Chairman, that if he wants 120,000 metres within three months from now, I will supply them at his door at Tiruchirappalli, I have a factory there whose business is to manufacture meters and it is the only company in India which has got the I.S.I. mark for energy meters. There is no shortage of energy meters and I can supply them, provided the Electricity Department will pay the economic price. I am not manufacturing them because it is not economic but the capacity

is still there. There is no shortage of meters and meter companies are not manufacturing them because economic prices are not available for them.

Lastly, I would like to refer to the consumer of electric power in Madras City. I do not know why a ceiling of 150 units has been fixed for domestic consumption just because some civil servant in Government says that 150 units is enough. They are very big people and they can manage with 150 units. But the whole City cannot be content with 150 units and people cannot also pay a penalty rate for higher quantum of energy consumed by them. Let us remember that in this State, if not outside, we have created companies which manufacture geysers for making hot-water and which manufacture refrigerators. They are manufacturing a large number of electrical gadgets in the small-scale sector and all of them are depending on domestic consumption. Moreover, we cannot make these content with 150 units as a permanent way of life. Now that the power-cut is being lifted, I think the first thing to be done is to give the domestic consumer a higher quantum of normal power to consume. He should not be made to get used to the idea that he should permanently be in a state of shortage because it is not at all good for the country which has got a big plan to raise the standard of living and the quality of life of the people. We talk of all these things on the platform and we ask the common man to practise austerity for an indefinite period. I cannot understand what the policy of Government in this regard can be. I want a minimum increase in the ceiling of 150 units to at least 250 or 300 units; the penalty rate, of course, we cannot entirely abolish. I think something must be done very quickly about this because hundreds of people are coming and telling me that this is a mistake.

Sir, there are many more problems but I do not think it is fair on my part to take the time of the House. I think we have to set about very quickly on the long-term problems, medium-term problems and short-term problems in connection with creating fresh generating and distribution capacity. If we do not do this and merely make speeches on various panels or prepare reports and appoint committees and feel that by appointing committees the work is finished, I think we are seriously mistaken. This has





occurred in the past and elsewhere at the same time. It should not happen now. The situation is serious. I estimate the loss, last year, in terms of commodities which could not be manufactured in the State for want of electric power at Rs. 150 to Rs. 175 crores. It is a loss of production which has created inflation. It is a loss of revenue to the Central Government by way of excise duties and such like. It is a loss of revenue to the State in terms of sales tax not collected. It is a loss of revenue to the Railways in terms of goods not carried because they have not been manufactured. All these are very sad items of shrinkage in the economic activity which we should not be responsible for. All these depend upon electricity. I want to say this because a great responsibility has been thrust on the Electricity Board and as a result of the very fact that they have become big-sized, they have taken on a lot of responsibility. I am aware of the tremendous hard work which is being put in by the Tamil Nadu State Electricity Board officials to do everything possible to augment electric power generation and I think a very big effort is now being made. What is needed today is a bigger effort than what they are putting in already in order that the industrial, agricultural and domestic consumer may receive reasonable satisfaction in the coming years. I am grateful to you, Mr. Chairman.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் ஸ்டேட்மெண்டை, மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதன் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு ஒரு பெரும் வாய்ப்பைத் தந்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாலே, மின்சார உற்பத்தி அளவில் பற்றாக்குறை இருப்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். என்னைப் பொறுத்த வரையில், மின்சார உற்பத்தி நம்முடைய நாட்டுக்குத் தேவையான அளவில் இருக்கிறதா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். நம்முடைய அரசு, மிக மிக வேகமாக பட்டி தொட்டிகள் எல்லாம் மின்சாரம் போய்ச் சேருவதற்கு, பெரும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னால் இருந்ததை விட, தற்போது 80, 90 சதவிகித அளவுக்கு குக்கிராமங்களுக்கு எல்லாம் மின்சாரத்தை வாரி வாரி வழங்கியிருக்கிறார்கள். அதை யாருமே, இந்த அவையில் இருக்கிறவர்கள் மறுக்க முடியாது, மறுத்துப் பேசவில்லை.

உறுப்பினர்கள் பல்வேறு விஷயங்களை விளக்கிப் பேசினார்கள். இப்படி இப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்று உறுப்பினர் திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் கூறினார்கள். மேல்நாடுகளில் எந்த மாதிரி மின்சார உற்பத்தி செய்கிறார்கள் என்று விளக்கினார்கள். ஆஸ்திரேலியாவில் இப்படி இருக்கிறது, அந்த நாட்டில் இப்படி இருக்கிறது என்று சொன்னார்கள். நம் நாட்டில், ஹைட்ரோ தெர்மல் ஆகிய இரண்டு வகைகளில் கரண்ட் உற்பத்தி செய்யப்படுகிறது. புது முறைகளைக் கையாண்டு மேலும் அதிகமாக கரண்ட் உற்பத்தி செய்து, இன்னும் மலிவான விலைக்கு மக்களுக்குக் கொடுக்க வேண்டும். புதுப் புது முறைகளைக் கண்டுபிடிக்கின்ற அளவுக்கு நம்முடைய மின்சார போர்டில் பணியாற்றுகின்ற இஞ்சினியர்கள், எக்ஸ்பெர்ட்டுகள், டெக்னிக்கல் துறையில் உள்ளவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். அதில் ஊக்கம் காட்டாமல், நிர்வாகம் அப்படி இருக்கிறது, அது சரியில்லை, இது சரியில்லை என்று போகக்கூடாது. அவர்கள் மீது நான் குறைகூறுவதாக நினைக்க வேண்டாம். அங்கே கலவரம், இங்கே சிக்கல். அங்கே குறை என்ற அளவில் தான் காலம் வீணாகிக்கொண்டிருக்கிறது. கல்பாக்கத்தில் 'அட்டாமிக் எனர்ஜி' கொண்டு மின்சாரம் தயாரிக்கிறார்கள். அங்கு அதிக அளவில் மின்சாரம் உற்பத்தி செய்து கொடுத்தால், மிகவும் சிக்கனமாக இருக்கும். அதிகமாகச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏராளமான பணம் செலவு செய்தும் நமக்கு வேண்டிய அளவு மின்சாரம் கிடைப்பதில்லை. மின்சார இலாகா ஒரு பூதாகாரமான துறையாக இருப்பதால், அதிலே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. 400 மைலுக்கு அப்பால் ஒரு சங்கடம் ஏற்பட்டால், இங்கேயிருந்து கொண்டு அதைக் கவனிக்க முடியவில்லை. அப்போது மின்சார உற்பத்தியும், விநியோகமும் நல்ல முறையில் நடக்க வசதியாக இருக்கும். ஜெனரேஷன் ஒரு பக்கம் இருக்க வேண்டும், டிஸ்ட்ரிபியூஷன் ஒரு பக்கம் இருக்க வேண்டும். It wil' create so much confusion இவ்வளவு கரண்ட் உற்பத்தி செய்வதற்கு இவ்வளவு செலவாகிறது என்று கணக்குப்பார்க்க வேண்டும். அதற்கு ஜெனரேஷன் ஒரு பக்கம் டிஸ்ட்ரிபியூஷன் ஒரு பக்கம் என்று இருந்தால்தான், கணக்குப் போட்டு பார்க்க வசதியாக இருக்கும். மிகச் சாதாரணமானவர்கள் கூட இம்மாதிரிக் காரியங்களைத் தெரிந்துகொள்வதற்கு அப்போதுதான் வழி ஏற்படும். ஏதோ பெரிய அறிவாளிகள் மட்டும் இம்மாதிரிக் காரியங்களைத் தெரிந்துகொண்டால், போதாது. சாதாரண குடிமகன் கூட எவ்வளவு உற்பத்தியாகிறது, எவ்வளவு செலவாகிறது மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு என்று தெரிந்துகொள்ள வேண்டும். ஜனநாயகம் அந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இவ்வளவு பெரிய



(பிற்பகல் 5-20)

கணக்குகள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன. திரு. சித்ரா நாராயணசாமி அவர்களுக்கு மட்டும் பல விஷயங்கள் தெரிந்து விட்டால் போதாது. பல விஷயங்கள் தங்களுக்குத் தெரிய வேண்டுமென்று அடித் தளத்திலுள்ள மக்கள் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்தக் கணக்குகளைத் தெரிவிக்க வேண்டும். சில கணக்குகளைப் பரிபூரணமாகச் சொல்லிவிட முடியாது. இவ்வளவு யூனிட் கரண்ட் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது; அதற்காக இவ்வளவு செலவு; அதற்கு வரவு இவ்வளவு; அதில் இவ்வளவு லாபம் வந்திருக்கிறது என்ற கணக்குகளையாவது அந்த மக்கள் தெரிந்துகொள்வதற்கு மின் வாரியம் வழி செய்திட வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். நாராயணசாமி: தலைவரவர்களே, ரொம்ப அழகாகக் கணக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். தமிழில், புரியும்படியாக எலக்டிரிசிடி போர்ட் வரவு-செலவுக் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்த்து நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு அதைப் பார்க்க 'டைம்' இல்லையென்று தெரிகிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: என்னுடைய தாழ்மையான அபிப்ராயம் என்னவென்றால், நாட்டிலே பிறந்திருப்பவர்கள் அனைவருக்கும், திரு. நாராயணசாமி அவர்களுக்கு இருக்கும் 'இன்டலிஜன்ஸ்' இருக்குமென்று எண்ணிவிட முடியாது. என்னை மாதிரி 'இன்டலிஜன்ஸ்' குறைவாக இருக்கிறவர்களுக்கு அந்தக் கணக்கு தேவை. நாட்டிலே உள்ளவர்களில் பலர் மிகச் சாதாரண ஜீரண சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்கள். இந்தச் சாதாரண ஜீரண சக்தி படைத்தவர்களால் அந்தக் கணக்குகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, லைன் லாஸ்பற்றிச் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதைப் பற்றி ஆண்டுக்காண்டு கருத்துக்களைச் சொல்லி வருகிறோம். அவ்வாறு நாம் ஆண்டுக்காண்டு பேசிய பிறகாவது, ஏதாவது ஒரு சதவிகிதம் குறைந்திருக்கிறதா என்றால், இல்லை. எந்தக் காரணத்தால் லைன் லாஸ் ஏற்படுகிறது, அதை ஏன் குறைக்க முடியவில்லை என்பதும் தெரியவில்லை. போன ஆண்டு இவ்வளவு லைன் லாஸ் இருந்தது, இந்த ஆண்டு இவ்வளவு இருக்கிறது, இவ்வளவு குறைத்திருக்கிறோம் என்ற கணக்கையாவது எதிர்காலத்தில் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் போன ஆண்டு இருந்த லைன் லாஸ் குறைக்கப்பட்டதால், இவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது என்பதையும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

அடுத்தபடியாக, மின்சார வாரியத்திலே வேலை செய்பவர்கள் எவ்வளவு பெரிய தகராறு செய்கிறார்கள் என்பதை மறைத்துப் பயன் இல்லை. தகராறு வளர, வளர பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. இன்று நாட்டிலே மின்சாரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், அவசியமானதாகவும் இருக்கிறது. மனிதனுக்கு 'இருதயம்' நின்று விட்டால் எப்படி ஆபத்து ஏற்படுமோ, அந்த அளவுக்கு மின்சாரம் நின்றுவிட்டால், நாட்டிலே நெருக்கடி நிலை ஏற்படும். மின்சாரத்தினால் பல பொருள்களின் உற்பத்தியைக் கூட்டியிருக்கிறோம்; உற்பத்தியை வேகமாக உண்டாக்கியிருக்கிறோம். மின்சார வாரியத்திலே பணியாற்றுகிறவர்களிலே சிலர் இன்று தகராறு செய்கிறார்கள். எனக்கு, கணக்குபற்றிய புள்ளி விவரங்களைச் சொல்ல முடியாவிட்டாலும், நடைமுறையிலே சிலவற்றைப் பார்த்த காரணத்தாலே, அவற்றைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தவறுகள் என்ன காரணத்தால் ஏற்படுகின்றன என்று சொல்லத் தெரியாது. காரணங்கள் எதுவானாலும் இருக்கட்டும். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம். ஒரு இடத்தில் ஒரு பம்ப்செட் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள் வேலை செய்யாவிட்டால், அங்கே இருக்கிற செப்புக் கம்பிகளை அறுத்துவிடுகிறார்கள். அந்தக் கம்பிகள் சொல்லொணாத அளவுக்குத் திருடு போய்க்கொண்டிருக்கின்றன. அப்படித் திருடு போவது போர்டுக்குத் தெரியாததல்ல ; நாட்டு மக்கள் அறியாததல்ல. நாட்டு மக்கள் அறிந்திருந்தும், போர்டு அறிந்திருந்தும் அப்படி நடக்காமலிருக்க தக்க ஏற்பாடுகளைச் செய்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். ஏறக்குறைய 40 அல்லது 50 சதவிகிதம் அளவுக்காவது அவர்களைப் பிடித்துத் தண்டித்திருக்க வேண்டும். கம்பி திருடுகிறவர்களும், சாமான்கள் திருடுகிறவர்களும் நிறைய இருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய திரு. கணபதி அவர்கள் அழகாகச் சொன்னார்கள். சாமான்கள் வாங்க வேண்டுமென்றால், அவரவர்கள் வாங்குகிறார்கள். ஒரு இடத்தில் ஆயிரக் கணக்கில் பல்புகள் கொட்டிக் கிடக்கின்றன. சில இடங்களில் பல்புகளே இல்லை. எனவே, சாமான்களை இப்படித்தான் வாங்க வேண்டும் ; ஒரே இடத்திலிருந்துதான் டிஸ்டிரிபியூஷன் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த முறையையும் நம்முடைய மின்சார வாரியம் பின்பற்ற வேண்டும். அங்கே வேலை செய்பவர்கள் நிறையக் கம்பிகளைத் திருடுகிறார்கள். செப்புக் கம்பிகளை ஏராளமாகத் திருடுகிறார்கள். இப்போது அலுமினியக் கம்பிகளைப் போடுகிறார்கள். செப்புக் கம்பிகளை எடுத்துவிட்டு, அங்கெல்லாம் அலுமினியக் கம்பிகளைப் போடுகிறார்கள். தமிழ்நாடு பூராவும் மின்சாரம் செல்வதற்கு இப்போது அலுமினியக் கம்பிகளைப் போடுவதால், அந்த இடத்திலிருந்த செப்புக் கம்பிகள் இருக்க வேண்டுமல்லவா ? செப்புக் கம்பிகளை எடுத்த உடன் அது கணக்குக்கு வருகிறதா என்றால், அது வருவதில்லை. அந்த



செப்புக் கம்பிகள் என்னவாயிற்று ? அதற்குக் கணக்கு இருக்கிறதா ? அதற்குக் கணக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அந்தச் செப்புக் கம்பிகள் கொஞ்சம் குறைந்தாலும், மீதியுள்ளவையாவது கணக்குக்கு வருகிறதா என்றால் இல்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, செப்புக் கம்பிகளை உடனடியாக எடுத்துவிடுவது என்பதல்ல. புதிதாகப் போடும் அளவுக்கு செப்புக் கம்பிகள் அதிகமாக இல்லாததால், நாடு முழுவதும் அலுமினியக் கம்பிகளைப் பயன்படுத்துவது நல்லதென்ற காரணத்தால் அலுமினியக் கம்பிகள் போடப்படுகின்றன. அலுமினியக் கம்பிகளைப் போட வேண்டுமென்பதற்காக, செப்புக் கம்பிகளை எடுப்பதில்லை. பழுது அடைந்த இடமாக இருந்தால், அங்கே மாற்றும் சூழ்நிலை இருக்கிறது. பொதுவாக செப்புக் கம்பிகளை எடுத்துவிட்டு, அலுமினியத்தைப் போடுகிறார்கள் என்பதல்ல. அந்தச் செப்புக் கம்பிகளையெல்லாம் விற்பது நடைமுறையில் இருந்து வந்தது. இப்போது அந்த செப்புக் கம்பிகளையெல்லாம் விற்கக்கூடாது ; அதை வாரியத்திற்கே பயன படுத்த வேண்டும் என்ற காரணத்தால் அதை உருக்கி வைத்திருக்கிறோம். அது கண்டக்டர்கள், டிரான்ஸ்பார்மர்கள் ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது அந்தக் கம்பிகளை இப்போது விற்பதுகூடக் கிடையாது.

**திரு. சி. வி. ராஜகோபால் :** அடுத்தபடியாக, அக்ரிகல்சுரல் பம்ப்செட்டுகளுக்கு கரண்ட் இல்லாமல் இருக்கிறது. அவைகளுக்கு சில மணி நேரமே மின்சாரம் தருகிறார்கள். கரண்ட் பற்றுக்குறை இருப்பதால் நாம் அட்ஜஸ்ட்மென்ட் செய்து தருகிறோம். எங்களுடைய காஞ்சிபுரம் எனக்கு மிகப் பெருமையை அளிக்கக்கூடிய நகரமாகும். அங்கே 7, 8 ஆண்டுகளுக்கு முன் 40 வாட்ஸ், 60 வாட்ஸ் பல்புகள்தான் ரோடுகளில் எரிந்துகொண்டிருந்தன. ஆனால் இவ்வளவு பற்றுக்குறை இருக்கும் நேரத்தில் 350 வாட்ஸ் பல்பு, 30 அடிக்கு ஒன்று, மிகவும் 'பிரைட்' ஆக எரிந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு) மெர்குரி விளக்குகளை சாலைகளில் போட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு கரண்ட் கொடுக்க முடியாமல் இருக்கும் நேரத்தில், இப்படிப்பட்ட விளக்குகளை, ஏராளமான வெளிச்சம் தரும் வகையில் போட்டிருக்கிறார்கள். ஆகவே இவ்வளவு மின்சாரப் பற்றுக்குறை இருக்கின்ற இந்த நேரத்திலாவது, காஞ்சிபுரம் முனிசிபாலிட்டி அல்லது மற்ற முனிசிபாலிடிகளில் 250 வாட்ஸ், 350 வாட்ஸ் என்று போட்டு, மின்சாரத்தை வீணாக்குவதைத் தவிர்க்க வேண்டும். ஜனங்கள் இரவில் ஒரு மணிக்கு மேல் நடமாடுவதே இல்லை. ஒரு மணியிலிருந்து ஆறு மணி வரை வீணாக எரிந்துகொண்டிருக்கின்றது. 250 வாட்ஸ் விளக்குகள் பல நூற்றுக்கணக்கான கம்பங்களிலே எரிகின்றன. பட்டப் பகலில் உள்ள வெளிச்சத்தைவிட, இரவில் இந்த விளக்குகளால் கிடைக்கின்ற

வெளிச்சம் அதிகமாக இருக்கின்றது. அப்படி அதிகமாகச் செலவாகின்ற கரண்டை மிச்சப்படுத்தி, விவசாயத்திற்குத் தரவேண்டும். ஏதோ எங்கள் ஊருக்கு விளக்குகள் அதிகமாக இருப்பதாகவும், அவைகளைக் குறைக்க வேண்டும் என்றும் நான் சொன்னதாக எடுத்துக்கொண்டால், காஞ்சிபுரத்திலே மாற்றுக் கட்சித் தலைவர்கள் அடித்து விடுவார்கள். விளக்கை வேண்டாமென்று சொல்லிவிட்டு வந்தேன் என்று சொல்லிவிடுவார்கள். விளக்குகள் வேண்டும். ஆனால் இந்தப் பற்றுக்குறை இருக்கின்ற நேரத்தில், இப்படி 250 வாட்ஸ் விளக்குகள் தேவையா என்பதற்காகத்தான் கேட்டேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்களை அடிப்பதற்கும் ஆள் இருக்கிறாரா என்ன?

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, பற்றுக்குறை இருக்கின்ற காலங்களிலே இருக்கின்ற சில நிலைமைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி நான் கூறினேன்.

(பிற்பகல் 5-30)

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இதுபற்றி ஒரு விளக்கம் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இரவு நேரங்களிலே சில சமயங்களில் உபரியாக இருக்கின்றது. இப்போதுகூட உபரியாக இருக்கின்றது. ஆனால் மின்சாரத்தைக் கம்பங்களிலே தேக்கி வைத்துக்கொள்ள முடியாது. இருக்கின்ற போது தான் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆகவே பகல் நேரத்திலே மின்சாரம் நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்குக் கிடைக்கவில்லை. இரவு நேரத்திலே அதிகமாக இருக்கின்றது. அதை நாம் எப்படியாவது செலவழித்துத்தான் ஆகவேண்டும். மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே, கம்பங்களிலே தேக்கி வைத்துக்கொள்ள முடியாது. அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே வருகின்ற வருவாய்க்குத் தகுந்தாற்போல் அவர்கள் இத்தனை இத்தனை விளக்குகள் தேவை, அவைகளுக்கான மின்சாரக் கட்டணத்தைக் கட்ட உத்தரவாதம் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கேட்கிறார்கள். அந்த அளவிலே வேண்டிக் கேட்டுக்கொள்வதால் கொடுக்கிறோம். அதையெல்லாம் அவர்களைக் கேட்காமல் வாரியத்தைச் சேர்ந்தவர்களாகவே விளக்குகளைப் போடுவது என்ற முறை இல்லை. அப்படிப் போடுவதும் கிடையாது. அங்கங்கே எவ்வளவு விளக்குகள் வேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்றனவோ, அந்த அளவுக்குத்தான் போடப்படுகின்றது. சமீபத்திலேகூட இரவு நேரத்திலே மின்சார வெட்டு இருந்த காரணத்தினாலே, ரெஸ்ட்டிரிக்ஷன் போட்டிருக்கின்றோம். மின் வெட்டுக் காலங்களில், ஆல்டர்நேட் லைட்ஸ், ஒன்று விட்டு



ஒன்று என்ற முறையில் விளக்குகள் எரிகின்ற அளவுக்குச் செய்கின்றோம். இரண்டு ஆண்டுகளாக இப்படி வைத்திருந்தோம். இந்த நிலைமை சற்று சீரடைந்திருக்கின்றது. காஞ்சிபுரத்தில் அதிகமாக விளக்குகள் இருக்கின்றன என்று சொன்னால், குறைத்துக் கொள்வதற்கு ஆட்சேபணை ஒன்றுமில்லை.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே இரவு நேரத்தில் மட்டும் மின்சாரம் எப்படி அதிகமாகக் கிடைக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, மொத்தம் 100 பர்சென்ட் என்று சொன்னால். அதில் 50 சதம் தொழிற்சாலைகளுக்கும், 25 சதம் வேளாண்மைக்கும் பொதுவாகப் பயன்படுகிறது. பாக்கி 25 சதம் அது வல்லாத மற்ற இனங்களுக்கு கொடுக்கப்படுகிறது. பகல் நேரத்தில் இந்த 75 சதம் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். இரவு நேரங்களில் சில தொழிற்சாலைகளும் வேலை செய்கின்றன. சாதாரணமாக நூற்பாலைகள் வேலை செய்கின்றன. தொழிற்சாலைகளுக்கு நூற்றுக்கு 75 சதம் கம்பிகளில் பகலில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் எனர்ஜியைத் தேக்கி வைத்துக்கொள்ள முடியும். குறைந்த அளவுக்கு இருக்கின்றபோது அங்காங்கே டிரான்ஸ்பார்மர் எரிந்து விடுமே என்பதற்காக, பம்பு செட்டுகள் கெட்டுவிடும் என்பதற்காக, staggering ஆக மின்சாரத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட நேரத்திலேயே அதிக மின்சாரம் வரக்கூடிய தன்மை அந்தக் கம்பிகளிலே இல்லாத காரணத்தினால், 6 மணி நேரம் தேக்கி வைத்திருக்கிறோம். இருக்கின்ற லைன் அளவுகளில் அந்த அளவுக்குத்தான் கொடுக்கலாம் முடியுமென்றால் இன்னும் அதிக நேரம் கூட கொடுக்கலாம். இப்போதே இந்தியாவிலேயே ரொம்ப அதிகமாகப் போட்டுவிட்டோம் என்ற குறையும் வந்துகொண்டிருக்கிறது. இரவு நேரங்களில் உற்பத்திக்காக நல்ல முறையிலே பயன்படுத்தி வருகிறார்கள். அதற்காக புதிதாக ஒரு திட்டம் கூட போட்டிருக்கிறார்கள். சென்ற அன்று கூட சொன்னேன். அந்தத் திட்டத்திலே காடம்பாறையிலே ஒரு ஸ்கீம் போட்டிருக்கிறோம். 400 மெகாவாட் திட்டம். இரவு நேரத்திலே உபரியாக இருக்கின்ற மின்சாரத்தைப் பயன்படுத்தி மீண்டும் தண்ணீரை ஏற வைத்து அணையிலே தேக்கி வைத்து பகல் நேரத்திலே, தேவைப்படுகிற நேரத்திலே, உற்பத்தி செய்ய வேண்டும் என்று திட்டத்தட்ட ரூ. 50 கோடி அளவிலே அனுமதி செய்யப்பட்டது. அந்தத் திட்டம் விலையேற்றம் காரணமாக 80 கோடி ரூபாய்க்குப் போய்விட்டது. இருந்தாலும் அந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அது நிறைவேற்றப் பட்டால், பகல் நேரங்களில் அதிகமாகக் கிடைக்கக்கூடிய அளவுக்கு வாய்ப்பு ஏற்படும்.

திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் : தலைவரவர்களே, பகலிலே மின்சாரம் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுவதனால் குறைந்துவிடுகிறது என்றும், இரவிலே மின்சாரம் அதிகமாகக் கிடைக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயத்திற்கு மின்சாரம் இரவிலே கொடுக்கப் படுவதால் விவசாயம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்றுதான் நான் நினைக்கிறேன். ஆகவே விவசாயத் திற்கு பகலிலே மின்சாரம் முழு அளவுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே குறைந்தது 6 மணி நேரம் பகலிலே கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று தான் இருக்கிறது. 24 மணி நேரம் அல்லது பகலிலே 12 மணி நேரம் கொடுப்பதற்கு வழி வகுக்க வேண்டும் என்று சொன்னால், அப்படிக் கொடுக்க முடியாது என்றுதான் சொல்கின்றேன். நடைமுறையிலே கொடுக்க முடியாது. பகலிலே அத்தியா வசியத் தேவைகளுக்கெல்லாம், அதாவது ஆஸ்பத்திரிகளுக்கு, இரவு பகலாகக் கொடுக்க வேண்டும். ரெயில்வே ஸ்டேஷன், ரேடியோ ஸ்டேஷன் இவைகள் எல்லாம் எஸன்சியல் சர்வீஸ் கீழ் வருகின்றன. ஒரு சில தொழிற்சாலைகள் 'கண்டினியூயஸ் புராஸஸ்' என்ற அளவிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. இதைப் பார்க்கிறபோது, பகல் நேரத்திலே 'லோட்' அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாகத்தான் பிரித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறதே தவிர, பகலிலே கொடுக்கக்கூடிய நிலைமை இருக்குமானால், அதிகமாகக் கொடுக்கலாம். அதைப்பற்றிப் பிரச்சினை இல்லை. விவசாயத்திற்குக் குறைந்தது 6 மணி நேரம் கொடுக்க வேண்டும் என்பதுதான் இப்போதுள்ள நிலை. ஓரளவுக்குப் பிரச்சினையைச் சமாளித்து வருகிறோம். அதிகமாகக் கொடுக்க முடியுமா கொடுக்க முடியாதா என்று கேட்டால், முடியாத நிலைதான் இருக்கிறது. கொடுக்க முடியுமானால் நிச்சயமாகக் கொடுப்போம்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, கடைசியிலே ஒன்றே ஒன்று மட்டும் கூறி நான் முடித்துக்கொள்கிறேன். இந்த மின்சார வாரியத்தில் சில பணியாளர்கள், கணக்காயர்கள் இப்படி பல்வேறு அலுவலர்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். கூடுமான வரையில் ஜே.ஈ.க்கு மேற்பட்டவர்கள் எலலாம் அக்கறையோடு ஒழுங்காக நாட்டு மக்களுடைய கஷ்டங்களை மனதிலே கொண்டு தங்கள் பணியை ஆற்றி வருகின்றார்கள். கணக்காயர்களுக்கு என்று ஒரு சங்கம் இருக்கிறது. பற்பல மாதிரியான வேலை செய்பவர்கள் மின்சார வாரியத்தில் பணியாற்றுகிறார்கள். அவரவர்களுக்கு என்று ஒவ்வொரு யூனியன் வைத்துக்கொள்வது மட்டும் அல்ல, எஸ்.ஈ.-ஐப் பார்க்க வேண்டும் என்றால்,



ஒவ்வொரு யூனியன்காரர்கள் 10 பேர்கள் அவர்களை வேலை வாங்குகின்றார்கள். ஒரு எஸ்.ஈ. காலை பத்து மணிக்கு வந்து அலுவலகத்தில் அமர்ந்தபின் அவர் வேலையை அவர் செய்ய முடியுமா என்றால் முடியவில்லை. இந்த யூனியன் காரர்கள், முன்னேற்ற யூனியன், பின்னேற்ற யூனியன் என்று சொல்லிக் கொண்டு இப்படி பல பேர்களாக வந்து அவரைச் சுற்றி அமர்ந்துவிடுகிறார்கள். இங்கே சி.ஈ. அவர்கள் அலுவலகத்திற்கு காலை 10-30 மணிக்கு வந்தால், அவர் 12-30 மணி வரையில் அந்த யூனியன்காரர்களோடு பேசிவிட்டுப் பிறகுதான் வருகிறார்கள். அதன் பின் தான் வெளியே விவகாரங்களைக் கவனிக்க வருவோம் என்கிறார்கள். இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. வேண்டு மானால் யூனியன்காரர்கள் பேசுவதற்கு என்று ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். எந்த நேரம் வேண்டுமானாலும் பேசுவது என்று யூனியன் நுழைந்துவிட்டால், நிலைமை என்ன ஆவது? நாட்டு மக்களுடைய நிலைமையைக் கவனிக்க வேண்டும் என்பதற்காக அதிகாரிகள் இருக்கின்றார்களா அல்லது யூனியன் ஒன்றுக்குத்தான் இருக்கிறார்களா? இந்த அளவுக்குத்தான் யூனியன்கள் வளர்ந்திருக்கின்றனவா? எனக்குத் தெரிந்து 4, 5 பேர்கள் செப்புக் கம்பி திருடி விட்டார்கள். திருடி விட்டு உடனே அமைச்சர்கள் பக்கத்திலே வந்து நிற்கிறார்கள். பிறகு வெளியே வருகிறார்கள். போலீ சாருக்குச் சிபாரிசு கேட்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனிலே அவர்கள் சொல்லு கின்றார்கள். "செப்புக் கம்பி ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது, அதைத் தொட்டுத் திருத்தச் சென்றால் உடனே திருடி விட்டான் என்று போலீஸ் ஸ்டேஷனிலே கம்ப்ளெயிண்ட் கொடுக்கிறார்கள்" என்று சமாதானம் சொல்லு கிறார்கள். பொருத்தமான சமாதானமோ இல்லையோ அதற்குச் சிபாரிசுகள் இருக்கின்றன. இதிலெல்லாம் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இதை நான் கூறிக்கொள்கின்றேன். யூனியன்கள் கவனிக்கப்பட வேண்டும். யூனியன்களை நான் பாராட்டுகிறேன். பெருந்தன்மையான யூனியன் களுக்கு நான் தலை வணங்குகிறேன். ஆனால் மாதாமாதம் ஒரு தொகை வாங்கிக்கொண்டு, பணியாளர்கள் உழைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் வைத்திருக்கின்றபோது, அந்த எண்ணத்திற்கு மாறாக, 'உன்னை யார் 400 பில் போடச் சொன்னார்கள், 200 பில்லுக்கு மேலே எழுதாதே' என்று சொல்லுபவர்கள் இருக்கின்றார்கள். இதற்கென்று ஒரு சி.ஐ.டி. யூனிட் வைத்து அவர்களைத் திருத்துவதற்கு ஏதாவது செய்ய வேண்டும். காரணம் எமெர்ஜென்ஸி நேரங்கள் வருகின்றன. கரண்ட் நின்றுவிட்டால், மனிதனுடைய இதயம் நின்று விட்ட மாதிரிதான். கரண்ட் இல்லையென்றால், நாம் சாப்பிடுகிறோமே உணவு, நெல் உற்பத்திக்குக் கூட ஆபத்து வந்துவிடும். எந்தமாதிரி சாமான்களை உற்பத்தி செய்வதாக இருந்தாலும், அதற்கு கரண்ட்

முக்கியமாகத் தேவைப்படுகிறது என்ற காரணத்தால், அதற்கு இடையூறு செய்பவர்களைத் தயவு தாட்சண்யமின்றி தண்டிக்க வேண்டும். அவர்களையே கூப்பிட்டு வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கின்றார்கள். நாட்டிலே கரண்ட் இல்லையென்றால், எதிர்காலம் எதிர்காலம்தான். இந்த நாட்டைக் காப்பாற்ற இவைகளைக் கண்டிப்பாகத் தடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இப்போது சிரித்துச் சிரித்துப் பேசுகின்ற காரணத்தாலும், அவர்களுக்கு இருக்கின்ற சாமர்த்தியம் காரணத்தாலும், ஒரு விதமாகச் சமாளித்துக்கொண்டிருக்கின்றார்கள். இல்லாவிட்டால் இந்த யூனியன்காரர்கள் ஏறத்தாழ இந்நேரம் தீர்த்துவிட்டிருப்பார்கள். ஒரு வருடத்திலே அல்லது இரண்டு வருடங்களிலே மூடி விடுவார்களோ என்ற அச்சமும் வந்து கொண்டிருக்கிறது. நல்ல அலுவலர்களை வளர்க்க வேண்டும். காஞ்சிபுரத்திலே இருப்பவர்களைக் காஞ்சிபுரத்திலே நியமித்து அவர்களை அங்கேயே வைக்கக் கூடாது. இன்னொரு ஊரிலே வைக்க வேண்டும். அந்த ஊரிலேயே இருந்தால், அந்தச் செல்வாக்கை உபயோகப்படுத்திக்கொள்கின்றார்கள்.

(பிற்பகல் 5-40)

* THIRU D. V. D'MONTE: Hon. Chairman, Sir, from the report of the Hon. the Minister for Electricity, it is clear that power shortage has come to stay in our State. Although our State has many firsts to its credit like installed capacity and power generation, we can certainly expect the power crisis to carry on for some more time. The Hon. Minister has suggested more power generation schemes to be executed on a war footing. I feel, Sir, that if we are to give high priority to power projects, this process should be next only to Defence in the matter of allocation of scarce materials inputs and in the matter of finance. Sir, this cannot be achieved in our present management set-up. As I see it, the Electricity Board is now essentially an extension of the bureaucracy. File-pushing is being given a pride of place in administration and efficiency will naturally suffer. Little wonder, Sir, that a modern system of management has ever been applied. So, if operational professionalism is to be admitted, we must have better expertise on technical know-how, production and personnel management.

The Electricity Board employs a large number of people, but labour productivity has to be improved. Labour-management relations can and must be bettered. All these constraints, Sir, will cast a reflection on the operational efficiency of the Board and



the cost of electricity generated and distributed. It is clear, therefore, that the management of the State Electricity Board requires to be professionalised. We need a band of qualified managers knowledgeable in the science of management, production, finance, personnel and technical aspects.

The employees must have a sense of belonging particularly in the top echelons. Under-utilisation of capacity as a result of inadequate estimates of requirements can certainly play havoc. The Draft Five-Year Plan has recognised the need for inducting the necessary expertise. We must improve the utilisation of existing installed capacity and ensure that new projects are completed on cost and in time.

In regard to the financial position of the Electricity Board, it is seen that a sum of Rs. 30 crores is required to finance capital works during the coming year. In addition, due to fall in revenue receipts and increased cost of power projects, the Hon. Minister makes out a strong case for revising the power tariff. Certainly, this is a very depressing picture, Sir. May I ask what steps are being taken by the Electricity Board to reduce transmission losses which, I understand, account for 20 per cent to 27 per cent of power generation, as against only 15 per cent or so which is the normal figure ? A saving of even one per cent in transmission losses has been stated to mean an additional revenue of the order of Rs. 8.5 crores per annum at the present level of generating power. Specific calculations of these savings have not been given in the report. This question has to be faced squarely. The importance of electricity for the economic development of our State has been amply demonstrated when the wheels of the running industries grind to a halt and power-rationing takes a heavy toll of productivity.

Sir, I would like to say a few words about the small-scale industry about which I have certain knowledge. If any sector has suffered as a result of power cut, it is certainly the small-scale industry. In Tamil Nadu, there are over 45,000 industries, 32,000 of which are registered, employing about 3 lakhs of workers. With the credit squeeze and lack of resources to buy generators, this power cut has certainly hit the small-scale sector.

In a Welfare State such as ours, special consideration should be given to the power needs of the small-scale industry. In fact, I would take this occasion to appeal to the Hon. Minister to exempt the small-scale sector completely from any type of power cut. After all, the small-scale sector consumes barely 8 per cent of the total consumption of power. This measure would ensure that the entire potential in terms of productivity and employment potential in this vital sector is fully mobilised. These are the few general remarks which I take this opportunity to offer. The industry has assumed gargantuan proportions and we cannot afford indifferent diagnosis and wrong medicine. I repeat that scientific managemnt of resources is the need of the day.

Thank you.

* திரு. எஸ். டி. ஆதித்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சக்தியானது உணவு உற்பத்தியோடு மிக நெருங்கிய தொடர்பு உள்ளதாக இருக்கிறது. அது மாத்திரமல்ல. தொழில் துறையிலே உயர்ந்த உற்பத்தியும் மின்சக்தியோடு மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக இருக்கிறது. ஆகவே மின் சக்தியைப் பற்றிய இரண்டு துறைகள் இருக்கின்றன. ஒன்று, தொழில் துறை. மற்றொன்று, உணவு உற்பத்தித் துறை. உணவு உற்பத்தித் துறையிலே மின்சக்தி முழுக்க முழுக்க அவ்வாறு இல்லாதிருந்தபோதிலும், தொழில் துறையிலே முழுக்க முழுக்க நாம் மின்சாரத்தை நம்பி வாழவேண்டியிருக்கிறது. இந்த நிலையிலே மின்சாரத் துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இவ்வளவு அக்கறை காட்டுவதில் ஆச்சரியம் ஒன்றுமே இல்லை.

நம்முடைய தமிழ் நாடு சம்பந்தப்பட்ட மட்டிலே, மின்சார உற்பத்தியைப் பற்றி, இதுவரையில் என்ன என்ன விதமான மூலங்கள் இருந்தன. இப்பொழுது என்ன என்ன இருக்கின்றன, இனிமேல் என்ன என்ன வரக்கூடும் என்பதை யோசிக்கும்போது, இவ்விடத்திலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் "இன்னும் எத்தனையோ நீர்வீழ்ச்சிகள் இருக்கின்றன இயற்கை அனுகூலங்கள் இருக்கின்றன, இவற்றைப் பூரணமாகப் பயன்படுத்தவில்லை" என்று சொன்னார். நீர்வீழ்ச்சிகள் இருக்கின்றன என்று சொன்னால் மட்டும் போதாது. அந்த நீர்வீழ்ச்சியைப் பயன்படுத்துவதற்கு எவ்வளவு செலவாகும், அந்தச் செலவினாலே எவ்வளவு மெகா வாட் மின்சக்தி உற்பத்தியாகும் என்பதையும் சேர்த்துத்தான் கணக்கிட வேண்டும். அப்படிக் கணக்கிட்ட பிறகுதான் மத்திய அரசிடத்திலேயிருந்து இதற்காக மனுச் செய்து உத்தரவு வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் இரண்டு நீர்வீழ்ச்சிகள்



இருக்கின்றன என்றார்கள். அதில் எத்தனை மெகாவாட் மின்சக்தி கிடைக்கும் என்பது எனக்குத் தெரியாது. ஒரு வேளை, சுண்டைக்காய் கால் பணம், சுமைக் கூலி முக்கால் பணம் என்ற அளவில் வருமோ என்னவோ? அதாவது, அதில் ஒரு கமர்ஷியல் பாசிபிலிடி இருக்கிறதா என்பதைப் பார்த்துத்தான் மத்திய அரசு அனுமதி அளிக்கும். இல்லாவிட்டால் அனுமதி கொடுப்பதில்லை.

இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் நமக்கு ஆற்றிய உரையிலேகூட, ஏழு இடங்களிலே உள்ள உற்பத்தி ஸ்தானங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவற்றுக்கான குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீர்மின் நிலையங்களுக்கு 5 வருஷமும் அனல் மின் நிலையங்களுக்கு 3½ வருஷமும் ஆகும் என்று இருக்கிறது. அவற்றைக் கவனிக்கிறபோது, இன்னும் இரண்டொரு வருஷத்திற்கு அவை பூரணமாகப் பயன்தரக்கூடிய நிலைமைக்கு வருவதாக இல்லை. நீர்மின் நிலையங்களைப்பற்றிப் பொதுப்படையாகச் சொல்லப்படுவது ஒன்று உண்டு. தமிழ் நாடு சம்பந்தப்பட்ட வரையிலே கிட்டத்தட்ட எல்லா பயனுள்ள நீர்வீழ்ச்சிகளையும் உபயோகப்படுத்தியாகிவிட்டது. இனிமேல் அதிகப் பயனில்லாத நீர்வீழ்ச்சிகள் ஏதேனும் இரண்டொன்று இருந்தால், அவற்றைப் பயன்படுத்துவதற்கு எவ்வளவு செலவாகும், செலவு செய்வதற்கு ஈடான வரவு உண்டா என்பதைக் கவனிக்க வேண்டிய நிலையிலே இருக்

(பிற்பகல் 5-50)

கிறோம். அடுத்தாற்போல் நிலக்கரியைப்பற்றிச் சொல்லப்போனால் நம்மிடம் நிலக்கரி இல்லை என்றாலும்கூட வடக்கேயிருந்து அதைக் கொண்டுவருவதற்கு கப்பல்களை வாங்குவதாக இருக்கிறோம். அந்த நிலையில் நிலக்கரியைக் கொண்டுவரும் பிரச்சினை ஒருவாறு நீங்கலாம். அதாவது இப்போது இருப்பதைப் போல நிலக்கரி விஷயம் அவ்வளவு மோசமாக இராது என்று நினைக்கலாம்.

அடுத்து, ஃபர்னெஸ் ஆயில். இது சம்பந்தமாக மத்திய அரசிலே அடிக்கடி உத்தரவுகளைப் பிறப்பித்துக்கொண்டும் மாற்றிக்கொண்டும் இருக்கின்றார்கள். முதலில் கொச்சியிலிருந்து இதைக் கொண்டுவரவேண்டியிருப்பதால் கடற்கரையோரமாக உள்ள இடங்களிலே நிலக்கரியைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஃபர்னேஸ் ஆயிலைப் பயன்படுத்தலாம் என்றார்கள். பிறகு அதன் சப்ளை நிலைமை சரியில்லை என்று மீண்டும் நிலக்கரியையே உபயோகிக்கவேண்டும் என்றார்கள். இப்படியாக மீண்டும் மீண்டும் உத்தரவுகள் மாறி மாறி வருகின்றன. நிலக்கரி, ஃபர்னேஸ் ஆயில் விஷயத்திலே மத்திய அரசின் திட்டவட்டமான கொள்கை என்ன என்றே தெரியவில்லை.

அடுத்து, டைடல் வே வ்பற்றிச் சொல்வார்கள். நாம் பூமத்திய ரேகைக்குப் பக்கத்தில் இருப்பதால், அது நமக்குப் பயன்படாது. வடக்கே உள்ளவர்களுக்குப் பயன்படலாம் அது.

அடுத்து, அணு சக்தியைப்பற்றிச் சொல்லப்போனால், தலைவரவர்களே, இது மிகமிகச் செலவாகும் திட்டம் என்பது ஒன்று. இரண்டாவதாக முதலில் அணு சக்தியால் உஷ்ணத்தை உண்டாக்கி, தண்ணீரை நீராவியாக்கி அதன் மூலம் இயந்திரத்தை ஓட்டி மின்சக்தியைப் பெற வேண்டியிருக்கிறது. இப்படி 3 4 விதத்தில் படிப்படியாக அணு சக்தியால் மின்சக்தியை உண்டு பண்ண வேண்டியிருக்கின்ற காரணத்தினால், அது மிகவும் செலவாகக் கூடிய திட்டம். அது மத்திய அரசைச் சேர்ந்தது. அதிலே நாம் ஒன்றும் அதிகமாகச் சொல்லுவதற்கில்லை.

அடுத்து, பவர் ஆல்கஹால் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. எரி சாராயத்தை உபயோகப்படுத்தி இயந்திரங்களை ஓட்ட முடியுமா என்பதை நமது அரசாங்கம் மிகத் தீவிரமாக யோசித்து வருகின்றது. காரணம், மின் சக்திப் பற்றாக்குறை இருப்பதால், நாம் பல விதத்திலும் இப்படியெல்லாம் யோசிக்க வேண்டியிருக்கிறது. சுருக்கமாகச் சொல்லப் போனால் நமக்கு மின் சக்தியைப் பொறுத்தவரையில் இங்கே பஞ்சம் என்று சொன்னால், அது சிறிதும் மிகையாகாது. எனவே பக்கத்து மாநிலங்களிலிருந்து அதை வாங்கி உபயோகிப்பதுபற்றி ஆராயப்பட்டு வருகின்றது என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

> "கடந்த ஐந்து ஆண்டுகளிலே அண்டை மாநிலங்களிலிருந்தும் நெய்வேலி நிலக்கரிக் கழகத்தினிடமிருந்தும் வாங்கப்படுகிற மின்சாரத்தின் விலை உயர்ந்துள்ளது. கேரளத்திலிருந்து வாங்கப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 4.5 காசிலிருந்து 8 காசாகவும் நெய்வேலி நிலக்கரிக் கழகத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 5.9 காசிலிருந்து 8.48 காசாகவும் விலை உயர்ந்துள்ளது. மேலும் நிலக்கரியின் விலையும் ஏறிக்கொண்டே போகிறது. . . ."

ஆகவே இது கவனிக்க வேண்டிய விஷயம். மத்திய அரசின் கையிலுள்ள நெய்வேலிச் சுரங்கத்திலிருந்து வரும் மின் சக்தியைக்கூட எவ்வளவு தூரம் விலை ஏற்றலாமோ ஏற்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விலையேற்றத்தால் பொருள்களின் விலையும் ஏறிக்கொண்டே போகின்றது.



தலைவரவர்களே, இந்த நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர்கள் சில விஷயங்களை எடுத்துச் சொன்னார்கள். மின் சக்தியை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுவதில் ஏற்படும் நட்டம்பற்றிச் சொன்னார்கள். 17 சதவிகிதம் நட்டம் ஏற்படுவதாக எனக்கு நினைவு. நட்டத்தைவிட அதிகமாகக் களவுதான் போகிறது என்றும் சொன்னார்கள். சில இடங்களிலே லூப் செய்து எடுத்து விடுகின்றார்கள் என்று பிரஸ்தாபம் இருக்கிறது. ஆனால் அதெல்லாம் அவ்வளவு சுலபமில்லை. ஒரு மாதத்திலே ஒரு கம்பெனியில் எவ்வளவு மின் சக்தியை உபயோகிக்கின்றார்கள் என்று கணக்கெடுக்கிறார்கள். அடுத்த மாதம் எவ்வளவு உபயோகிக்கின்றார்கள், குறைந்தால் அதற்குக் காரணம் என்ன என்று பார்ப்பதற்கு, கண்காணிப்பதற்கு நிறைய வழிகள் இருக்கின்றன. அது மட்டுமில்லை. கூடுமானவரையில் தவறு நடக்கும்போது, கண்டுபிடித்துவிடுகின்றார்கள். களவே போகவில்லை என்று சொல்வதற்கில்லை. ஏதோ இரண்டொரு இடங்களிலே போகலாம். சீல் பண்ணுவதிலே சரியில்லாமற் போனால் இரண்டொரு இடங்களிலே, சிறு சிறு தொழிற்சாலைகள் விஷயத்தில் அப்படி நடக்கலாம். ஆனால் பெரிய தொழிற்சாலைகளிலே அப்படி ஏற்படுவதில்லை. 'நான்-மேக்னடிக்' ஆக மாற்றி வைத்தால் நல்லது என்று சொல்லுகின்றார்கள். அதுவும் கவனிக்க வேண்டிய விஷயம். மேலும் அதிக எஞ்சினியர்கள் இருக்கின்றார்கள் என்று சொல்லப்பட்டது. அரசு நடத்தும் எந்தத் தொழிலிலும் வேண்டிய அதிகாரிகளுக்கு மேலேயே இருந்துதான் தீர வேண்டியிருக்கின்றது. அடுத்து உபயோகிக்கும் மின் சக்தியை அளந்து எவ்வளவு மின் சக்தி பயன்படுத்தப்பட்டிருக்கின்றது, என்று பார்க்கும் கருவிகள் போதுமான அளவில் இல்லை என்று சொன்னார்கள். அதுவும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். கவனித்து வருகின்றார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இன்னும் ஒன்று மின் சக்தியின் அழுத்தம் அடிக்கடி குறைந்து போகின்றது, அதன் காரணமாக மின்சார மோட்டார்கள் அடிக்கடி எரிந்து போய்விடுகின்றன தீய்ந்து போய்விடுகின்றன, ஒரே நாளில் கிட்டத்தட்ட 50 மோட்டார்களின் சுருள்கம்பிகள் தீய்ந்து போய்விட்டன என்றெல்லாம் சொன்னார்கள். அதற்குள்ள ஒரே மாற்று கெபேசிடர் போடுவது. அதுவும் கவனிக்கப்பட்டு வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

அடுத்து, நெய்வேலி அனல் மின்சாரத்திட்டம்பற்றிக் குறிப்பிட்டார்கள் அது மத்திய அரசினிடம் இருக்கின்றது. நாம் இதைப் பற்றிப் பல முறை எடுத்துச்சொல்லியிருக்கிறோம். ஆனால் மத்திய சர்க்கார் அதைப்பற்றி கொஞ்சமும் கவனித்ததாகத் தெரியவில்லை. இந்த அறிக்கையிலும் அதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

"நெய்வேலியில் 2-வது சுரங்கம் வெட்டுதல், 2-வது அனு மின் நிலையம் அமைத்தல், கல்பாக்கம் விரிவாக்கம் போன்ற கூடுதலான மின் திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்பட்டாலன்றி, அடுத்து வரும் 10 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு மின்சாரப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்ட நிலையில்தான் இருக்கும். நெய்வேலியில் 2-வது சுரங்கம் வெட்டுவதை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசினை வலியுறுத்தி கடந்த ஆண்டு இந்த மா மன்றத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள். நெய்வேலியில் 2-வது சுரங்கம் வெட்ட வேண்டியதன் அவசியத்தை நமது மாண்புமிகு முதல அமைச்சர் அவர்களும் நானும் பல தடவை நேரடியாகவே வலியுறுத்தி வந்துள்ளோம். நேரடியாகவும், அதிகார பூர்வமாகவும் இது சம்மந்தமாக எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும இது வரை எந்தவிதப் பயனும் அளிக்கவில்லை"

என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆக அந்தத் திட்டம் அவர்கள் கையில் இருக்கின்றது. 2-வது சுரங்கம் வெட்ட வேண்டிய அவசியம்பற்றி நாம் இப்படி பல முறை அவர்களுக்கு எடுத்துச்சொல்லி வந்திருக்கிறோம். இதிலே இரண்டு விஷயம் பற்றிக் கவனிக்க வேண்டும். ஒன்று, இரண்டாவது சுரங்கம் வெட்டும் விஷயம் இப்போது இரண்டாவது சுரங்கத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கும்போதே மூன்றாவது சுரங்கம் வெட்டுவதன் அவசியம்பற்றியும் நாம் பேச வேண்டும். அப்போதுதான் ஐந்து அல்லது ஆறு வருஷம் கழித்தாவது அவர்களிடமிருந்து பதில் வரலாம். அடுத்து. அதிலே நட்டம் வந்தாலும் பரவாயில்லை என்று நேரடியாக நாங்களே எடுத்து நடத்திக்கொள்ளுகிறோம், எங்களிடம் விட்டு விடுங்கள் என்று மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

நெய்வேலியில் ஏராளமான பழுப்பு நிலக்கரி இருக்கின்றது. அதன் விஸ்தீரணம் ஆழ் கடலுக்குள்ளும் செல்லுகின்றது என்று திட்டவட்டமாகத் தெரிகின்றது. இப்படிப்பட்ட நிலையில் இன்னொரு நாடாக இருந்தால் அதை எவ்வளவோ விருத்திக்குக் கொண்டு வந்திருப்பார்கள். மிக முன்னேற்றம் அடைந்துள்ள ஜெர்மனி நாட்டிலே அவர்கள் மிக ரொக்கியமாக நம்பிக்கை வைத்திருப்பது அவர்களுக்கு அங்கே ஏராளமாகக் கிடைக்கும் இந்த லிக்னைட் என்று சொல்லப்படும் பழுப்பு நிலக்கரியில்தான். ஆனால் நாம் இவ்வளவையும் வைத்துக்கொண்டு கரண்ட் இல்லை, கரண்ட் இல்லை என்று சொல்லிக்கொண்டி



ருப்பது, கையிலே வெண்ணெயை வைத்துக்கொண்டு "நெய் இருக்கிறதா, நெய் இருக்கிறதா," என்று ஊர் ஊராகக் கேட்டு வந்தாளாம் அதைப் போல இருக்கிறது. நட்டப்பட்டாலும் பரவாயில்லை, நாங்களே எடுத்துக்கொள்ளுகிறோம் என்று மத்திய அரசிடம் திட்டவட்டமாகக் கேட்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதைப் போலத்தான் சேலம் உருக்காலையைப்பற்றிக் கேட்டோம். ஆட்சேபணை வந்தது. "விட்டு விடுங்கள்' என்று கேட்டோம். அதே போல இன்றைக்கு நெய்வேலி திட்டம்பற்றிக் கேட்க வேண்டிய நிலைமை வந்துவிட்டது. இப்போது 2-வது மைன் கட் மட்டுமில்லை, மூன்றாவது மைன் கட் பற்றியும் கேட்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

தலைவரவர்களே, கடைசியாக இன்னும் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன், மின்சாரப் பஞ்சம் வந்தால், தொழில்கள் பெரிதும் பாதிக்கப்படும் என்று. விவசாயம் பாதிக்கப்படும் என்று சொன்னேன். குறிப்பாக தூத்துக்குடிப் பகுதியில் இன்று ஏராளமான தொழிற்சாலைகள் தோன்றி வருகின்றன. தூத்துக்குடி பெரிய துறைமுகமாகக் கூடிய நிலைமையில் அந்த நகரைச் சுற்றி பல பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டு வருகின்றன. உதாரணமாக ஸ்பிக் என்று சொல்லப்படும் சதர்ன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்ட்ரீஸ், பேப்பர் மில் என்று இப்படி ஏராளமான பெரிய நிறுவனங்கள் அங்கே தோன்றி வருகின்றன. அதற்கெல்லாம் மின்சாரம் மிகமிக அதிக அளவில் அவசியம் தேவைப்படுகிறது. அது இல்லை என்றால், இப்போது வளர்ந்து வரும் தொழில்கள் எல்லாம் தடைப்பட்டு விடக்கூடும்.

**திரு. கே. ராஜாராம்:** அதற்குத்தான் தூத்துக்குடி தெர்மல் ஸ்டேஷன் சாங்ஷன் ஆகிவிட்டதே?

**திரு. எஸ். டி. ஆதித்தன்:** செய்திருக்கின்றார்கள். ஆனால் அதுகூடப் போதாது என்றே சொல்ல வேண்டும். அதையே இன்னும் பெரிதாக ஆக்க வேண்டி யிருக்கும்.

(பிற்பகல் 6-00)

பல விதமான காரணங்களைக் கொண்டு தெற்குக்கரை ஓரத்தில் தான் தொழில்களை அதிகப்படுத்தவேண்டியிருக்கிறது. இதற்குரிய காரணங்களை விஸ்தரிக்க நேரமில்லை. விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை. தெற்குக் கடற்கரை ஓரத்தில் தொழில்களை ஆரம்பிப்பது மிலிடரி காரணமாகவும் அவசியமான ஒன்று. எப்பொழுது தென் பக்கத்தில் தொழில்களை விஸ்தரிக்க வேண்டு

மென்று ஏற்றுக்கொண்டோமோ, அதனால் தென் பக்கத்தில் இருக்கிற மின்சார நிலையத்தை வெகு சீக்கிரமாக ஆரம்பிக்க மத்திய சர்க்காரோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி ஆரம்பித்துத் தீரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரவிலே ஏன் தொழிற்சாலைகளுக்கு கரண்ட் கொடுக்கக் கூடாது என்கிறார்கள். பகலில் கொடுப்பதை விட இரவில் கொடுக்கலாமே என்கிறார்கள். நான் தொழிலில் ஒரு சிறிது சம்பந்தம் உள்ளவன் என்ற நிலையில் சொல்லிக்கொள்வேன். தொழில்கள் இப்போது பகல் வெளிச்சத்தில் நடந்து வருகின்றன. தொழிற்சாலைகளுக்கு இரவில் மின்சாரம் கொடுக்கிறதென்றால், ஆயிரம் ஆயிரம் அளவில் அவர்கள் லைட் போட்டுக்கொள்வதற்கு மின் சக்தி கொடுக்க வேண்டியிருக்கும். பகல் தொழில்களை இரவுத் தொழில்களாக ஆக்கும் பட்சத்தில் பல கஷ்டங்கள் உண்டு. அந்தக் கஷ்டங்களில் ஒன்று, அவர்களுக்கு மின் சக்தி அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கும். ஆகவே ஏற்கனவே இருக்கின்ற முறை சரியான முறை என்று சொல்லத் தோன்றுகிறது.

இனி வருங்காலத்தில் உண்டாகும் கஷ்டங்களைப்பற்றி விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். பண நெருக்கடிபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 30 கோடி ரூபாய் உடனடித் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் மனதில் கொண்டு தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற மின்சாரப் பஞ்சத்தை என்ன விதமாகப் போக்குவது என்று பார்த்து அரசு ஆவன செய்வதற்கு எப்போதும் காத்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. அந்த முயற்சி வெற்றி பெறுவதாக என்று சொல்லி விடைபெறுகிறேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : மாண்புமிகு தலைவரவர்களே, மின்சாரத்தைப்பற்றி அமைச்சரவர்கள் விரிவான ஒரு அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அதைப் படித்து அதிலுள்ள வரவு-செலவுகளைப் பரிசீலனை செய்து சாதாரணமானவர்கள் இதைக் கண்டுபிடித்துச் சொல்வதற்கே முடியாத நிலைமையில் இருக்கிறது. அனுபவரீதியாகப் பார்ப்போமானால், நீர்த்தேக்கங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சிலர் சொன்னார்கள். ஏற்கனவே இருந்த மின்சார உற்பத்திச் சாலையை விலைக்குக் கொடுத்து விட்டோம். சமயநல்லூரில் பெரிய மின்சார உற்பத்திச் சாலை இருந்தது. அதை விற்று விட்டோம்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : அதைப் பெரிய மின்சார உற்பத்திச் சாலை என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. மிகச் சிறியதாக இருந்தது. அதுவும் என்ன காரணத்தினால் விற்பனை செய்யப்பட்டது என்பதுபற்றி இந்த அவையில் விளக்கப்பட்டிருக்கிறது. அது மிகச் சிறியது.



திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : அதை மிகச் சிறியது என்று சொல்கிறார்கள். உருவம் சிறியதாக இருக்கலாம். ஆனால் எத்தனை கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்டது, அதில் எவ்வளவு உற்பத்தியாகியது என்பது நண்பர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். இப்போது அதைப்பற்றிச் சர்ச்சை இல்லை. எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம், அவர்கள் அனுமதி கொடுக்கவில்லை என்கிறார்கள். அதனால் சுணங்கி விடுகிறது என்பதை நாங்களும் உணர்கிறோம். சாதாரணமாக பஞ்சாயத்து யூனியனிலிருந்து நாம் மாநில அரசைக் கேட்கிற போது, ஒரு வருஷம் ஆனாலும்கூட பதில் வருவதில்லை. மாநிலங்கள் உள்ளூராட்சியை வைத்திருக்கும் நிலையைப் பார்க்க வேண்டும் உடனடியாக பதில் வராததினால் காரியம் கெட்டுப் போகிறது என்பதை நான் உணர்கிறேன். அவர்கள் உடனே காரியங்களைக் கவனிக்கத் தான் வேண்டும். உங்கள் கீழே இருக்கிற பஞ்சாயத்து யூனியன், தாலுகா, ஜில்லா கேட்கின்ற காரியங்களில் நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து பரிசீலனை செய்வீர்களானால், இன்னும் சுபிட்சமான நிலைமை இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் நண்பர் திரு. கணபதி அவர்கள் மின்சாரத்தைக் களவாடிக்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பகுதியில் களவாடிக் கொள்கிறார்கள் போல் இருக்கிறது. நான் பஞ்சாயத்து யூனியன் சேர்மன். என் அனுபவத்தை நான் சொல்கிறேன். பஞ்சாயத்து யூனியன் அளவிலே மின்சாரத்திற்குக் கட்டணம் கொடுக்கப்படுகிறது. அதை எப்படிச் செய்திருக்கிறோம் என்றால், பஞ்சாயத்து யூனியனிலிருந்து பணம் கட்டக் கூடாது பஞ்சாயத்து அமைதி பெற்றுத் தான் கட்ட வேண்டுமென்று செய்திருக்கிறோம். ஏன் இப்படிச் செய்திருக்கிறோம் என்றால், பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய தெரு விளக்குகள் எரிவதில்லை. பத்து லைட்களில் ஒரு லைட்தான் எரிகிறது இதற்கு ஆதாரமாக எந்த ஊரைப்பற்றிக் கேட்டாலும் சொல்லத் தயாராக இருக்கிறேன். இப்படி எரியவே இல்லையென்றால், மொத்தம் இவ்வளவு டியூப் பல்ப் எரிகிறது என்று கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்த மாதிரிப் புகார் வந்ததன் காரணமாக மீட்டர் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். இதை உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : டிஸ்ட்ரிக்ட் கவுன்சில் கூட்டத்திலேயே மீட்டர் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். கண்டக்ஷன் கட்டவேண்டியிருக்கிறதே அதனால் மீட்டர் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிற படி மீட்டர் வைத்துக் கொடுக்க வேண்டு

என்பது நல்ல யோசனை தான். மீட்டர் வைத்துக் கொடுத்தாலும், விளக்குகள் எரியாமல் இருந்தால் சார்ஜ் வேண்டுமானால் வராமல் இருக்கலாம். ஆனால் விளக்கு இல்லாமல் என்ன பிரயோசனம்? மக்கள் சாப்பிடுகிறபோது, விளக்கு நின்று போல் சாப்பிட மாட்டார்கள். அந்த மாதிரிக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இன்னொன்று, காலையில் 6 மணிக்குக் கூட லைட்டுகளை ஆஃப் செய்வதில்லை. மாலை 4 மணிக்கு சுவிச் போட்டால் கரண்ட் வந்து உடனே டியூப் எரியாது. வோல்டேஜ் உடனே வருவதில்லை. எங்கள் ஊரில் நடக்கிற நிலைமையைச் சொல்கிறேன். 5 மணிக்கு முன்னால் போட்டால் தான் மாலைக்குப் பிறகு எரியும். 6 மணிக்குப் போட்டால் இரவு 12 மணிக்கு மேல் தான் கரண்ட் வரும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாலை 5 மணிக்கு சுவிட்ச் போட்டால் கரண்ட் 6 மணிக்கு வந்தால், 6 மணிக்குப் போட்டால் 7 மணிக்கு வரவேண்டியதுதானே!

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : ஆறு மணிக்குப் போட்டால் இரவு 12 மணிக்குத் தான் கரண்ட் வருகிறது. பல்புகள் 4 அடி பல்புகள் வாங்கிப் போடுவதாகச் சொன்னார்கள். 2 அடி பல்பு வாங்கிப் போட்டார்கள். அந்த டியூப்கள் இன்றைக்குப் போட்டால் நாளைக்கு இல்லாமல் போய்விடுகின்றன. இந்த அலுமினியக் கம்பியினால் தான் இப்படி குறைச்சலாக கரண்ட் வருகிறது, செம்புக் கம்பியாக இருந்தால் வோல்டேஜ் அதிகமாக எடுக்கும் என்கிறுகள். மேலும் விளக்குகள் சரியாக எரியாமல் இருப்பதற்குக் காரணம் டிரான்ஸ்ஃபார்மர் இல்லை, அதை வைக்கவில்லை என்கிறார்கள். இப்படி லைட் இல்லாததினால் நாங்கள் கஷ்டப்படுகிறோம். எங்கள் ஊரில் 10 லைட் போடப்பட்டிருக்கிறது. லைட்கள் எரிவதில்லை. எஸ். ஓ. வைக் கேட்டால் டி. இக்கு எழுதியிருக்கிறது என்கிறார்கள். ஹெல்பர்கள் பார்ப்பதில்லை. ஆனால் அவர்கள் கணக்கைத் தயார் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் தான் கணக்கைத் தயார் பண்ணிக்கொண்டு வரவேண்டிய நிலை இருக்கிறதென்கிறார்கள். இப்படி நிலைமை சீர்கெட்டிருக்கிறது. நல்லது செய்தால் சொல்கிறோம். இப்படி நிலைமை இருந்தால், குற்றம் சொல்கிறபோது இப்படிச் சொல்லி எந்த வித நன்மைகள் அடைய வேண்டுமென்று சொல்லவில்லை. நீங்கள் குற்றம் குறைகளைக் கண்டு பிடிக்க வேண்டுமென்பது தான் எங்கள் நோக்கம். மத்திய சர்க்கார் தவறு செய்தாலும் நாங்கள் சொல்கிறோம். ஏராளமான ஊர்களில் லைட் போட்டு விட்டார்கள். ஆனால் பல்பு மாட்டவில்லை. எங்கள் ஊரில் மாரியம்மன் திருவிழா. போன ஆண்டு திருவிழா. இந்த ஆண்டு ஆவணியில் வருகிறது திருவிழா. இன்றைய தேதி வரைக்கும் கரண்ட் கொடுக்கவில்லை. பல்பு மாட்டவில்லை.



குறை, நிறைகளைச் சொல்கிறோம். குறைகளை நிறைவு செய்யுங்கள் என்கிறோம். நீங்கள் தவறு செய்கிறீர்கள் என்று சொல்லவில்லை. எங்கோ செய்கிறான், ஆனால் அது இங்கே வருகிறது, கோட்டைக்கு வருகிறது, சுற்றிக் கொண்டு. நாங்கள் உங்களிடம் தானே சொல்ல முடியும். அவர்களைக் கேட்டால், ஈயக்கம்பியில் வோல்டேஜ் வரவில்லை, நாங்கள் என்ன செய்ய முடியும் என்கிறார்கள். உங்களிடம் தானே சொல்ல முடியும். மாற்று வழியைக் கண்டு பிடியுங்கள், வழி பண்ணுங்கள். அவர்கள் சொன்ன மாதிரி நிர்வாகத்தைச் சரியான முறையில் வைக்க வேண்டும். ஒரு ஹெல்பரை ஒரு ஏரியாவிற்குப் போட்டிருக்கிறோம். இருபது நாட்களுக்குத் தான் ரெகுலராக வருகிறார்கள். அவர்களைப் பார்க்க வேண்டுமானால், தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸுக்கு எழுதி அவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும்.

(பிற்பகல் 6-10)

இன்னொன்று சொல்லலாம். கேட்க அசிங்கமாக இருக்கும். 'ஹெல்ப்பர்கள்' எங்காவது பியூஸ் போய் விட்டால், பெண்களிடம் போய் அதைப் பார்ப்பதற்கு ஒரு படி அரிசி கொடு என்று கிராமங்களில் கேட்கிறார்கள். பார்க்கிறபோது ரொம்ப அசிங்கமாக இருக்கிறது, ஆனால் அது நடைமுறையில் இருக்கிறது. அமைச்சரிடம் சொல்லி அந்தக் குறைபாடுகளைத் தீர்க்க வேண்டும் என்று தான் எங்களால் சொல்ல முடியும். ஏதோ ஒரு அளவுக்குச் சொல்லலாம். எல்லாவற்றிற்கும் மத்திய அரசைப்பற்றிக் குறைகூறிப் பயன் இல்லை. மேலிடத்தோடு நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். எங்களுக்குள்ள கஷ்டத்தை நீக்கிக் கொடுங்கள் என்று தான் கேட்கிறோம். வேறு உங்களைப்பற்றிக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. கவலை அதிகமாக இருக்கும் போது, நோய் வரும்போது அதைப்பற்றிச் சொல்லித்தான் ஆகவேண்டும். இந்தச் சிரமத்தை நீங்கள் நீக்கிக் கொடுத்தால் உங்களைக் குறை சொல்ல மாட்டோம், பழிக்க மாட்டோம். கண் இரண்டும் தெரியாதவனை கங்காதரன் என்று எப்படி நாங்கள் கூப்பிட்டுக்கொண்டிருப்போம்? கண் தெரியாதவனை கண் தெரிகிறவன் என்று எப்படி நாங்கள் சொல்ல முடியும்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கண் தெரியாதவனை கண்ணாயிரம் என்று எப்படிச் சொல்ல முடியும் என்று தான் கூறுவார்கள்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தாலிக்குக் கூட தங்கம் இல்லாதவளை தங்கம்மா என்று கூப்பிடுவது போல் இருக்கிறது என்று சொல்லுவார்கள். அது போகட்டும். மின்சார அமைச்சரிடம் நாங்கள் கேட்டுக்கொள்வது : இரவு நேரத்தில் அதிக கரண்ட் வருகிறது என்று சொல்லுகிறார்கள். அப்படியானால்

ஏன் விளக்கு எரியமாட்டேன் என்கிறது. ஒரு ஊரில் 7 லைட் இருக்கிறது என்றால், ஒன்று தான் எரிகிறது, ஆறு எரியாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று அதிகாரிகளுக்கு நான் எழுதினேன். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் எழுதினார். சூப்பிரண்டிங் இஞ்சினியரைப் பார்த்துக் கேட்டேன். டெவலப்மெண்ட் கவுன்சிலில் கேட்டால் எங்களிடம் சொன்னால் செய்திருக்க மாட்டோமா என்கிறார்கள். அங்கே ராஜபார்ட்க்காரன் மாதிரி வந்து இருந்து கொண்டு இந்த மாதிரிக் கேட்கிறார்கள். எங்களுக்கு வேண்டியதெல்லாம், நீங்கள் நல்லது பண்ண வேண்டும். தெரு விளக்கு பற்றி பஞ்சாயத்து யூனியனுக்குப் பொறுப்பில்லை. பஞ்சாயத்து தான் பணம் கட்ட வேண்டும். விளக்கு எரியாமல் இருக்கிற ஊருக்கு 25 ரூபாய், 30 ரூபாய் என்று கேட்கிறான்? அவன் எப்படிக் கொடுப்பான்? பஞ்சாயத்து யூனியனில் என்ன முடிவு பண்ணியிருக்கிறோம் என்றால், பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடம் பணம் கொடுக்காதே. எங்களைக் கேட்காமல் கொடுக்காதே என்று சொல்லிவிட்டோம். எத்தனை லைட் எரிந்தது, எத்தனை எரியவில்லை என்று பார்ப்பதில்லை. போன மாதம் 25 ரூபாய் என்றால் இந்த மாதமும் அவ்வளவுதானே எரிந்திருக்கும் என்று இந்த மாதத்திற்கும் 25 ரூபாய் போட்டுவிடுகிறான். எங்களிடம் பணம் கேட்டால் நாங்கள் கேட்டுவிடுவோம். ஐந்து லைட் தானே எரிந்தது 10 லைட் எரிந்தது போல் பணம் கேட்கிறாயே என்று சொல்வோம். ஆகவேதான் பஞ்சாயத்து யூனியனைக் கேட்டுத்தான் பணம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறோம். நீங்கள் நல்லதை செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. இரவு நேரத்தில் கரண்ட் வருகிறது என்றால், நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. எங்கள் ஊரில் 4 மணிக்கு லைட் போட்டால் 6 மணிக்குத்தான் எரியும். நேரம் கழித்துப் போட்டால் 10 மணிக்குத்தான் எரியும். இக்கதைய சீர்கேடு இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நீங்கள் கொடுத்திருக்கிற காகிதங்களைப் படித்து அதில் என்ன தவறு இருக்கிறது. எங்கே பிசகு இருக்கிறது என்று சொல்லுவதென்றால், சாதாரணமல்ல. அதற்கென்று பெரிய நிர்வாகம் இருக்கிறது. நிபுணர்கள் இருக்கிறார்கள், அவர்கள் தயாரித்துக் கொடுத்த கணக்கு. இந்தக் கணக்கைச் சரி என்று ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அதை மறுப்பது என்றால், புள்ளி விவரம் தெரிந்திருக்க வேண்டும். அது சாதாரணமா? பெரிய பெரிய நிபுணர்கள் இருந்து போட்ட புத்தகம். இந்தப் புத்தகத்தைப்பற்றி நாங்கள் குறை சொல்ல முடியாது. நடைமுறையில் இருக்கிற தவறுகளைத்தான் சொல்ல முடியும். சில ஊர்களில் சரியான டிரான்ஸ்பரர்மர்கள் கிடையாது. அவைகளை



வைத்து ஒழுங்கான முறையில் கரண்ட் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு மீட்டர் சீக்கிரம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சீக்கிரத்தில் எங்கே குறையிருக்கிறது என்று கண்டுபிடித்து அவற்றை நிவர்த்திக்க வேண்டும்.

ராமநாதபுரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அந்தப் பகுதியில் உள்ள பஞ்சாயத்துக்களை எல்லாம் போய்ப் பார்த்தேன். உறுப்பினர் ஒருவர் முனிசிபாலிட்டியில் மெர்க்குரி லைட் எரிகிறது என்று சொன்னார்கள். காஞ்சீபுரத்தில் எரிகிறதோ என்னவோ, காஞ்சீபுரத்திற்கும் காரைக்குடிக்கும் என்ன சம்பந்தம்? எல்லா இடத்திலும்தான் பிள்ளையார் இருக்கிறது. ஒரு இடத்தில் இருக்கிற பிள்ளையார் பாட்டன் காலத்தில்தான் எண்ணெயைப் பார்த்திருக்கும். அந்தப் பிள்ளையாருக்கும் இன்னொரு பிள்ளையாருக்கும் தோது சொல்ல முடியுமா? நான்கு அடி டியூப் லைட்டுக்குப் பணம் கட்டினால் இரண்டு அடி டியூப் லைட் கொண்டுவந்து போடுகிறார்கள். யாருக்குத் தெரியும் கிராமத்தில், அது இரண்டு அடியா, நான்கு அடியா என்று? 'ஊமையன் ஊரில் உளறுவாயன் சண்டப் பிரசண்டம் செய்வது மாதிரிதான் இருக்கிறது'. ஆகவே உங்களைத்தான் நம்புகிறோம். நீங்கள்தான் கண்கண்ட தெய்வம் மாதிரி இருக்கிறீர்கள், நல்ல காரியங்களைப் பண்ணுங்கள், சமாதானம் சொல்லாதீர்கள். அவரிடம் சொன்னோம். கேட்கவில்லை, அதனாலே இப்படிப்போய்விட்டது என்று சொல்லிப் பிரயோஜனம் இல்லை. பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஒரு கடிதம் போனால், 8 மாதம் கழித்துப் பதில் எழுதுகிறார்கள். எங்களுக்கு 8 மாதம் என்றால், உங்களுக்குப் பதினாறு மாதம், 32 மாதம் சென்றுதான் பதில் எழுதுவார்கள்.

சில பகுதிகளில் ஆற்றுப்பாசனம் இருக்கிறது, சில இடங்களில் பம்ப்செட் இருக்கிறது. இரண்டும் கிடைக்காமல் இருக்கிற பகுதி கிழக்கு ராமநாதபுரம் பகுதி. ஒரு பம்ப்செட்கூட இல்லாத ஏரியா. மழை பெய்தால்தான் உண்டு, இல்லையென்றால் இல்லை. கிடந்து சாவதைத் தவிர வேறு வழியில்லை; தஞ்சாவூர் ஜில்லாவை நாடுவது தவிர வேறு வழியில்லை. இந்த நிலையில் இருக்கிறவர்களை மற்றவர்களோடு ஒப்பிடுவது சரியல்ல. அவர்களுக்கு உள்ளதுதான் எங்களுக்கு என்பது சரியல்ல. மரைக்காயர் என்றால் எல்லோரும் மரைக்காயர்தானா? (நண்பர் நான் சொல்லுகிறேன் என்று வருத்தப்படக்கூடாது. மரைக்காயரிலும் பக்கிரி மரைக்காயர் என்று சொல்லுகிறார்கள்.) ஆட்சியில் உள்ளவர்கள் தமிழ் நாட்டிலே பிறந்தவர்கள்தானே, வேறு எங்கேயிருந்தும் இறக்குமதி செய்யப்

பட்டவர்கள் அல்ல: உங்களுக்கு ராமநாதபுரத்திற்கு என்ன செய்ய வேண்டும், மதுரைக்கு என்ன செய்ய வேண்டும், தென் ஆற்காடு, வட ஆற்காடுக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியாதா? தஞ்சாவூர் ஜில்லா செழிப்பான பகுதி தான். அங்கே அறந்தாங்கித் தாலுகாவில் ஏம்பல் என்ற ஊர் இருக்கிறது. எங்கள் கிழக்கு ராமநாதபுரத்திற்கு தம்பி போன்றதுதான் அந்தப் பகுதி. இதையெல்லாம் பார்த்து அப்பகுதிகளுக்குத் தகுந்த நன்மை செய்ய வேண்டும். எங்கள் பகுதி கேட்பாரற்ற பகுதியாக இருக்கிறது. அரசு பார்த்து ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வளவு நேரம் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்த தலைவர் அவர்களுக்கு வணக்கம் கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை, மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6.20)

# Index to Tamil Nadu Legislative Council Debates

FORTY-EIGHTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

13*th*, 14*th*, 16*th*, 17*th and* 19*th August* 1974.

VOLUME CXXIII (Nos. 1 to 5).

## A

PAGES.

ABDUL WAHAB, THIRU K. S.—

Food situation in the State, discussion on ... 241

Resolution *re* House of the People, increase of seats for Tamil Nadu in—and in Legislative Assembly ... ... ... ... 210–211

Statement of Supplementary Expenditure for 1974–75 (First), discussion on ... ... ... 331

ADITANAR, THE HON. THIRU Si. Pa.—

Food situation in the State, discussion on ... 114, 136, 155

ADITYAN, THIRU S. T.—

Resolution *re* Private Medical Colleges, empowering Parliament to legislate on banning and regulation of ... ... ... ... ... 53–55

State Electricity Board Budget for 1974–75, discussion on ... ... ... ... ... 384–390

Statement of Supplementary Expenditure for 1974–75 (Frst), discussion of ... ... ... 311–318

PAGES

A—*cont.*

ADJOURNMENT MOTION—
Information *re* notice of ... ... ... 275

ADJOURNMENT MOTION *re*—
Food situation in Tamil Nadu ... ... ... 26

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—
Amendment to Agricultural Department Notification II-1 No. 3468 of 1968, dated 14th June 1968, notification laid on the table ... ... ... 74
Amendment to late Food and Agriculture Department Notification II-1 No. 2305 of 1964, dated 30th March 1964, notification laid on the table ... 74
Declaration of notified market area for Ammapet Market in respect of paddy, notification laid on the table ... ... ... ... ... ... 74
Declaration of notified market area for Manachanallur Market in respect of paddy and groundnut, notification laid on the table ... ... ... 65
Establishment of regulated market at Ambur, Sholingur, Thandarampattu and Pernamallur in North Arcot district in respect of paddy, groundnut, gingelly and sugarcane jaggery, notification laid on the table ... ... ... ... ... 70
Establishment of regulated market at Malaiadipalayam for purchase and sale of cotton, groundnut, tobacco, turmeric, maize, sugarcane, jaggery and arecanut, notification laid on the table ... 67
Establishment of regulated market at Pudupalayam for purchase and sale of paddy, groundnut, gingelly and sugarcane jaggery, notification laid on the table ... ... ... ... ... 68
Establishment of regulated markets at five places in Dharmapuri district for purchase and sale of groundnut, tamarind, gingelly, sugarcane jaggery and cotton, notification laid on the table ... 69



PAGES.

A—*cont.*

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—*cont.*
Establishment of regulated markets at Kaveripakkam and Takkolam for purchase and sale of gingelly and sugarcane jaggery in all forms in North Arcot district, notification laid on the table 70
Market area for Kancheepuram, Tiruvellore, Tiruthani, Red Hills and Nasarathpettai in respect of paddy and gingelly, notified, notification laid on the table ... ... ... ... ... 67
Nomination of members to Thanjavur Market Committee by Government, notification laid on the table ... ... ... ... ... 243
Regulation of trade in cholam, cumbu, coconut, ragi and coriander in Tiruchirappalli district, notification laid on the table ... ... 70
Regulation of trade in groundnut in Kanyakumari district, notification laid on the table ... ... 68
Regulation of trade in korra or tenai, varagu, horsegram and onions in Chingleput district, notification laid on the table ... ... ... 68

ALCOHOL—
Question *re* distilleries producing industrial/potable —, Installed capacity and actual production in 1973 ... ... ... ... ... 17–20

ANBAZHAGAN, THE HON. THIRU K.—
Food situation in the State, discussion on ... 122, 126, 129, 132
Resolution *re* Private Medical Colleges, empowering Parliament to legislate on banning and regulation of ... ... ... ... ... 29–30, 31, 32–34, 48, 52, 56 62
State Electricity Board Budget for 1974-75, discussion on ... ... ... ... ... ... 364

PAGES.

A—*cont.*


ANNA TRANSPORT CORPORATION LIMITED SALEM—

*See* Transport

APPROVED SCHOOLS AND VIGILANCE SERVICE—

Question *re* Assistant Superintendent (Administration) in Government—, allocation of post to Ministerial Services ... ... ... 352–354

ARCHITECTURE—

Question *re* implementation of system of issuing licences to— ... ... ... ... ... 351–352

ARULMIGU MEENAKSHI AMMAN TEMPLE, MADURAI—

*See* Temples

ARUMUGASWAMI, THIRU M.—

Food situation in the State, discussion on ... 120–127, 145, 146, 225, 227, 237

Resolution *re* House of the People, increase of seats for Tamil Nadu in—and in Legislative Assembly . 206–207

ASSIGNMENT OF LANDS—

Question *re* wet lands for cultivation, assignment to fishermen of Manamelpatti village, Thirupathur taluk, Ramanathapuram district ... ... 16

AYYANAN AMBALAM, THIRU A.—

Resolution *re* House of the People, increase of seats for Tamil Nadu in—and in Legislative Assembly. 199, 204–205, 217

...tricity Board Budget for 1974-75, discus- ... ... ... ... ... 379




B


BALARAMAN, THIRU L.—

Food situation in the State, discussion on ... 152–154

BALASUBRAMANIAM, THIRU A.—

State Electricity Board Budget for 1974-75, discussion on ... ... ... ... ... 362–365

BILLS—

Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973—
Message from the Governor *re* ... ... 26

BRIDGES—

Question *re* naming of roads and—in Madras City after important men ... ... ... ... 20–21

BUS TICKETS—

Question *re* licensing of canvassers for sale of ... 94–95

BUSINESS ADVISORY COMMITTEE—

*See* Committees

BUSINESS OF THE HOUSE—

Announcement *re*—

Change in programme ... ... ... 161

Revised programme of ... ... 194–195

Change in the order of ... ... ... 196


C


CASHEW—

Question *re* area under cultivation in Karaikudi taluk ... ... ... ... ... 24

CAUSTIC SODA—

Question *re* rise in price of—for washermen ... 89–90

PAGES.

C—*cont.*


CEMENT DISTRIBUTION (LICENSING AND REGULATION) ORDER, 1973—

Amendments to—, notification laid on the table ... 79

CEMENT FACTORIES—

Question *re* number, capacity and actual production in— in private, joint and public sectors in 1973 ... 90–93

CHAIRMAN, MR.—

Adjournment motion, information *re* notice of ... 275

Adjournment motion *re* food situation in Tamil Nadu ... ... ... ... ... 26

Announcement *re*—

Business Advisory Committee's decision ... 27–28

Business of the House, change in programme ... 161

Message from the Governor *re* Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973 ... ... ... ... 26

Panel of Vice-Chairmen ... ... ... 28

Postponed Question No. 28, taking up of ... 355

Revised programme of business ... ... 194–195

Food situation in the State, discussion on ... ... 110, 114, 117, 120, 122, 150, 161, 228, 234

Obituary Reference *re*—

Demise of Mohanlal Mehta, Thiru M., former Member of the Council ... ... ... 1–2

Demise of Ranga Reddi, Thiru N., former Minister of Composite Madras State ... ... 1–2

Resolution *re* Private Medical Colleges, empowering Parliament to legislate on banning and regulation of ... ... ... ... ... ... 31–35




PAGES.

C—*cont.*


CHAIRMAN, MR.—

State Electricity Board Budget for 1974-75, discussion on ... ... ... ... ... 365, 392

Statement of Supplementary Expenditure for 1974-75 (First), discussion on ... ... ... 276, 279, 280, 291, 322

COLLEGES—

Question *re* Training Colleges, starting of part-time M.Ed. Courses in ... ... ... 165

Resolution *re* Private Medical—, empowering Parliament to legislate on banning and regulation of ... ... ... ... ... 29–62

COMMITTEES—

Business Advisory Committee, decision of ... 27–28

Public Undertakings Committee, Report of—on Tamil Nadu Housing Board, laid on the table .. 244

COMPOUNDERS—

Question *re* Diploma-holders with less than S.S.L.C. qualification not treated on a par with Chemists and Druggists ... ... ... ... 166–169

CO-OPERATIVE APEX SOCIETIES (MANAGEMENT AND CONDUCT OF ELECTIONS) RULES, 1974—

Making of—, notification laid on the table ... 72

CO-OPERATIVE DEVELOPMENT FUND—

Question *re* amount collected and spent ... 272–273

CO-OPERATIVE SOCIETIES—

Question *re* Lift Irrigation—in East Ramanathapuram District, expendtion of ... ... 271–272

PAGES

C—*cont.*

CO-OPERATIVE SOCIETIES RULES, 1963—
Amendments to—, notifications laid on the table ... 64, 69
Amendment to Schedule III of..., notification laid on the table ... ... ... ... ... 335

COTTAGE INDUSTRIES CONSTRUCTION AND ESTABLISHMENT (RESTRICTIONS, LIMITATIONS AND CONDITIONS) RULES, 1960—
Amendments to—, notification laid on the table ... 80

COURT(S)—
Question *re* shifting of—, Fort, Vellore ... ... 93–94

CULTIVATING TENANTS (RIGHT TO PURCHASE LANDOWNERS' RIGHTS) BILL, 1974—
*See* **Bills**

D

D'MONTE, THIRU D. V.—
State Electricity Board Budget for 1974–75, discussion on ... ... ... ... ... 382–384

DAMODARAN, THIRU A. R.—
Food situation in the State, discussion on ... 147–151
Resolution *re* Private Medical Colleges, empowering Parliament to legislate on banning and regulation of ... ... ... ... ... 42–4(
Statement of Supplementary Expenditure for 1974–75 (First), discussion on ... ... ... 316–322

DEPUTY CHAIRMAN, MR.—
Food situation in the State, discussion on ... 129, 130, 131, 132, 144, 145, 146
Resolution *re* House of the People, increase of seats for Tamil Nadu in—and in Legislative Assembly ... ... ... ... ... ... 216



PAGES

D.—*cont.*

DIESEL OIL—
Question *re* spirit from molasses as substitute for ... 172–175

DISTRICT ADMINISTRATION—
Question *re* North Arcot district, bifurcation of ... 269–270

DISTRICT MUNICIPALITIES ACT, 1920—
Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Alandur Municipality, Chingleput district, notification laid on the table ... ... ... ... ... ... 66
Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Attur Municipality, Salem district, notification laid on the table ... ... ... ... ... ... 64
Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Dharmapuri Municipality, notification laid on the table ... 64
Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Dindigul Municipality, Madurai district, notification laid on the table ... ... ... ... ... ... 69
Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Kancheepuram Municipality, notification laid on the table ... 72
Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Kovilpatti Municipality, notification laid on the table ... 73
Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Melapalayam Municipality, Tirunelveli district, notification laid on the table ... ... ... ... ... 69
Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Nellikuppam Municipality, notification laid on the table ... 63

D—*cont.*


| | PAGES |
|---|---|
| DISTRICT MUNICIPALITIES ACT, 1920—*cont.* | |
| Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Pudukottai Municipality, Tiruchirappalli district, notification laid on the table ... ... ... ... ... | 66 |
| Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Srivilliputhur Municipality, Ramanathapuram district, notification laid on the table ... ... ... ... | 68 |
| Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Tambaram Municipality, notification laid on the table ... | 72 |
| Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Vellore Municipality, North Arcot district, notification laid on the table ... ... ... ... ... ... | 66 |
| DOCTORS— | |
| Question *re* Siddha—, honouring certificates issued by ... ... ... ... ... ... ... | 15 |


E.


| | |
|---|---|
| EDUCATION DEPARTMENT— | |
| Question *re* One Unit System for personnel in Ministerial Service in Education Department ... | 166 |
| ELECTRICITY BOARD, TAMIL NADU— | |
| Annual Financial Statement for 1974–75 and Supplementary Financial Statement for 1973–74, laid on the table ... ... ... ... ... | 162 |
| Budget for 1974–75, discussion on ... ... ... | 242, 356–396 |
| Speech of Thiru O. P. Raman, Minister for Electricity initiating discussion on Budget for 1974–75 and Supplementary Budget for 1973–74 of—, laid on the table ... ... ... ... ... | 338 |
| Statement of action on suggestions made by Legislators during discussion on Budget of—, laid on the table ... ... ... ... | 162 |


E.—*cont.*


| | PAGES |
|---|---|
| ENCROACHMENT— | |
| Question *re* Government Vigilance Home and Stri Sadana, Mylapore, Madras, unauthorised construction on Compound Walls of ... ... ... | 25 |
| ENTERTAINMENTS TAX— | |
| Exemption of film show by Director, Indian Institute of Technology, Madras on 13th April 1974 at open Air Theatre, Indian Institute of Technology Campus from—, show tax and additional surcharge, notification laid on the table ... | 71 |
| Exemption of two film shows by Shastrinagar Welfare Association on 10th February and 10th March 1974 at Jayanthi Theatre, Thiruvanmiyur, Madras from—, show tax and additional surcharge, notification laid on the table ... ... | 75 |


F.


| | |
|---|---|
| FAMILY PLANNING— | |
| Question *re*— | |
| Persons who underwent operations during 1971, religionwise number of—and their percentage... | 9–15 |
| FERTILIZER— | |
| Question *re*— | |
| Distribution of—by Panchayat Unions and Taluk Co-operative Societies, statement of Minister Thiru Aditanar *re* black-marketing in ... | 181–191 |
| Value of—supplied to farmers of West Arni Panchayat Union, North Arcot in 1970–71 and private agencies ... ... ... ... | 171–172 |
| FISHERMEN— | |
| Question *re* assignment of wet lands for cultivation to—of Manamelpatti village, Thirupathur taluk, Ramanathapuram district ... ... ... | 16 |
| FOOD— | |
| Adjournment motion *re* situation in Tamil Nadu | 26 |

PAGES.

F—*cont.*

FOOD SITUATION IN THE STATE—
Discussion on ... ... ... ... 105-161, 218, 242

G

GANAPATHI, THIRU K.—
Food situaton in the State, discussion on ... 113-117, 123, 124
State Electricity Board Budget for 1974-75, discussion on ... ... ... ... ... 356-362
Statement of Supplementary Expenditure for 1974-75 (First), discussion on ... ... ... 275

GASTRO ENTERITIS—
Question *re* fatal cases reported from Thanjavur and Tiruchirappalli districts in January 1974 ... 88-89

GENERAL SALES TAX ACT, 1959—
Setting up of check-post at Palladam, Coimbatore district, notification laid on the table ... ... 69

GOVERNMENT SERVANTS—
Question *re* Health staff of Melagaram Panchayat, Tenkasi Panchayat Union, Tirunelveli district, non-receipt of salary since November last by ... 21-22

GOVERNMENT VIGILANCE HOME AND STRI SADANA, MYLAPORE—
Question *re* unauthorised constructions on compound walls of ... ... ... ... ... 25

H

HAIRCUTTING SALOONS—
Question *re* cancellation of licence fee for ... 23

HANDLOOM WEAVERS' CO-OPERATIVE SOCIETIES RULES, 1973—
Making of—, notification laid on the table ... 65



PAGES

H—*cont.*

HOSPITALS (AND DISPENSARIES)—
Question *re*—
Number of cases of Rabies treated in—in Madras City during last three years and number dead 23
Pharmacists in Government Hospitals, demands of— and resort to direct action ... ... 169-171

HOUSE OF THE PEOPLE—
Resolution *re* increase of seats for Tamil Nadu in—and in Legislative Assembly ... ... ... 197-218

HOUSE-SITES—
Question *re* land for—in Poigai village, Vellore taluk, North Arcot district, acquisition by Harijan Welfare Department ... ... ... 273-274

HOUSING BOARD, TAMIL NADU—
Annual Accounts of—for 1966-67 and Audit Report for 1966-67, laid on the table ... ... 162

I

INDIAN STAMP ACT, 1899—
Remission of stamp duty on gift deed executed by Trustees of ' Willingdon ' to Tamil Nadu Educational Trust, Madras and " Willingdon Charitable " Trust, Madras ... ... ... ... 244
Remission of stamp duty on mortgage deed to be executed by Tamil Nadu Housing Board in favour of Housing and Urban Development Finance Corporation (Private) Limited, New Delhi, notification laid on the table ... ... ... 76
Remission of stamp duty on reconveyance deed conveying an extent of 2.30 acres of lands in R.S. Nos. 82-B and 82-2 of Annakudi Thirunageswaram village, Kumbakonam taluk, Thanjavur district, notification laid on the table ... 78

PAGES

I—*cont.*

INDIAN STAMP ACT, 1899—*cont.*

Remission of stamp duty on sale deed executed by Dr. N. Sitaraman and his brothers in favour of Roman Catholic Diocese of Kottar represented by Rt. Rev. T. R. Agniswami, Bishop of Kottar, notification laid on the table ... ... ... 76

Remission of stamp duty on sale deed executed by Mrs. Rangammal Krishnamachari, widow of late Thiru V. T. Krishnamachari, in favour of Khadi Gramodyog Sangh, Madras, notification laid on the table ... ... ... ... ... ... 77

INDUSTRIAL ESTABLISHMENTS (NATIONAL AND FESTIVAL) HOLIDAYS ACT, 1958—

Exemption of Factory, South India Viscose Limited, Sirumugai, Coimbatore from section 52 (*a*) (i), notification laid on the table ... ... 243

K

KARUNANIDHI, THE HON. DR. M.—

Resolution *re* Private Medical Colleges, empowering Parliament to legislate on banning and regulation of ... ... ... ... ... ... ... 35

Statement of Supplementary Expenditure for 1974–75 (First)—

Discussion on ... ... ... ... ... 279, 294, 297, 298, 308, 325, 326–335,

Presentation of ... ... ... ... ... 99–105

KATCHA THIVU—

Resolution *re* postponement to a later date ... 196

KEROSENE—

Question *re* alleged instructions to authorities in Thanjavur district not to issue retail licences for sale of ... ... ... ... ... ... 193–194



PAGES

K—*cont.*

KEROSENE CONTROL ORDER, 1968—

Question *re* amendment to—*re* security deposits for wholesalers and retailers and licence renewal fee ... ... ... ... ... ... ... 192–193

KULACHAL HARBOUR DEVELOPMENT SCHEME—

Question *re* implementation of ... ... ... 350–351

L

LAND—

Question *re* acquisition of—by Harijan Welfare Department for house-sites in Poigai village, Vellore taluk, North Arcot district ... ... 273–274

LAND IMPROVEMENT SCHEMES ACT, 1959—

Soil conservation of certain villages in Madurai district, notifications laid on the table ... ... 73

LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) RULES, 1962—

Amendment to—, notification laid on the table ... 72

LANDS—

Question *re* assignment of wet—for cultivation to fishermen of Manamelpatti villages, Thirupattur taluk, Ramanathapuram district ... ... 16

LEGISLATIVE ASSEMBLY—

Resolution *re* increase in seats in—and in House of the People for Tamil Nadu ... ... ... 197–218

LIFT IRRIGATION CO-OPERATIVE SOCIETIES—

*See* Co-operative Societies

LIQUOR—

Further particulars regarding smuggling of—from other States to North Arcot district during 1971-73, laid on the table ... ... ... 338

PAGES

L—*cont.*


LIQUOR (LICENCE AND PERMIT) RULES, 1960—
Amendment to—, notification laid on the table ... 75

LIVESTOCK DEVELOPMENT COMMITTEE REPORT, 1970—
Booklet containing recommendations made in—and action taken by Government, laid on the table ... ... ... ... ... ... 77


M.


MADRAS CITY MUNICIPAL CORPORATION ACT, 1919—
Extension of period for arrangements for elections by six months from 1st June 1974, notification laid on the table ... ... ... ... ... 243

MADRAS CITY MUNICIPAL CORPORATION AND TAMIL NADU DISTRICT MUNICIPALITIES (AMENDMENT AND EXTENSION OF TERM OF OFFICE) THIRD AMENDMENT ORDINANCE, 1974—
Laid on the table ... ... ... ... ... 76

MADRAS VEDANTA SANGAM MIDDLE SCHOOL FOR HANDICRAFTS—
*See* Schools.

MADURAI CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT AND EXTENSION OF TERM OF OFFICE) SECOND AMENDMENT ORDINANCE, 1974—
Laid on the table ... ... ... ... ... 76

MANI, THIRU K. S.—
Food situation in the State, discussion on ... ... 109–113, 114, 144, 228

MESSAGES FROM THE GOVERNOR—
*See* Bills

MOHANLAL MEHTA, THIRU M.—
Obituary Reference *re* demise of—, former Member of the Council ... ... ... ... ... 1–2




PAGES.

M—*cont.*


MOTOR VEHICLES RULES, 1940—
Amendments to—, notifications laid on the table 65, 74, 75

MOTOR VEHICLES TAXATION ACT, 1974—
Fixation of 1st April 1974 as date of coming into force of—, notification laid on the table ... 63

MULBERRY—
Question *re* promotion of—cultivation in Hosur, Dharmapuri district ... ... ... ... 24

MULTI-STOREYED AND PUBLIC BUILDINGS RULES, 1973—
Making of—, notification laid on the table ... 65

MUNICIPAL COUNCILS (ELECTION OF CHAIRMAN AND VICE-CHAIRMAN) RULES, 1969—
Amendments to—, notification laid on the table ... 69–70

MUNICIPALITIES—
Question *re* names of—not communicated with G.O. Ms. No. 519, Education, dated 31st March 1973 ... ... ... ... ... 5–9

MUTHUSWAMY, THIRU S.—
Food situation in the State, discussion on ... 127–133
Statement of Supplementary Expenditure for 1974–75 (First), discussion on ... ... ... 322


N.


NARAYANASAMI, THE HON. THIRU MANNAI P.—
Food situation in the State, discussion on ... 105, 122, 124–126, 130, 131, 143, 144, 148, 159, 160, 161, 218–242

PAGES.

N.—*cont.*


NARAYANASWAMY, THIRU S.—
Food situation in the State, discussion on ... 154–156
Resolution *re* private Medical Colleges, empowering Parliament to legislate on banning and regulation of ... ... ... ... ... ... 48–53
State Electricity Board Budget for 1974–75, discussion on ... ... ... ... ... ... 365–373, 375
Statement of Supplementary Expenditure for 1974–75 (First), discussion on ... ... ... ... 280–285

NATARAJAN, THIRU M. K. D.—
Resolution *re* House of the People, increase of seats for Tamil Nadu in—and in Legislative Assembly 209–210

NEDUNCHEZHIYAN, THE HON. DR. V. R.—
Business of the House, change in the order of ... 196
Resolution *re* House of the People, increase of seats for Tamil Nadu in—and in Legislative Assembly ... ... ... ... ... 197–198, 200–204, 214–216
Resolution *re* "Katcha Thivu", postponement to a later date ... ... ... ... ... 196
Private Medical Colleges, empowering Parliament to legislate on banning and regulation of ... 35–36

NORTH ARCOT DISTRICT—
Question *re* bifurcation of ... ... ... 269–270

NOTIFICATION ISSUED WITH MEMORANDUM NO. 8398/ME/74-1, RURAL DEVELOPMENT AND LOCAL ADMINISTRATION, DATED 1ST MARCH 1974—
Errata to—, laid on the table ... ... ... 79

NOTIFICATION ISSUED WITH MEMORANDUM NO. 9080/ME/74-1, RURAL DEVELOPMENT AND LOCAL ADMINSTRATION, DATED 1ST MARCH 1974—
Errata to—, laid on the table ... ... ... 78




PAGES.

N—*cont.*


NOTIFICATION ISSUED WITH MEMORANDUM NO. 12326/ME/74-1, RURAL DEVELOPMENT AND LOCAL ADMINISTRAATION, DATED 4TH MARCH 1974—
Errata to—, laid on the table ... ... ... 78

NOTIFICATION ISSUED WITH MEMORANDUM NO. 15496/MA/74-1, RURAL DEVELOPMENT AND LOCAL ADMINISTRATION, DATED 5TH MARCH 1974
Errata to—, laid on the table ... ... ... 78

NOTIFICATION ISSUED WITH MEMORANDUM NO. 15512/ME/74-1, RURAL DEVELOPMENT AND LOCAL ADMINISTRATION, DATED 19TH MARCH 1974—
